2786

# T. N. L. A. Debates

Official Report

Vol. LXIV   No 2 and 3

March 29 and 30. 1984

Ⓒ

V211,31 'N84
N84.64.2 f;1
136250

வெளியீடு 5-2-85 [Issued 5-2-85

2786

தமிழ்நாடு ... - 6 MAR 1985 ... தமிழ்நாடு

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மார்ச் 29, 1984 - தொகுதி LXIV எண் 2

Thursday the 29th March 1984 - Volume LXIV No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 paise

V811,31 N84
N84.64.2 ஆ3.1
136250

# உள்ளடக்கம்.

29—3—1984.


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள் : உடுக்குறியிட்ட வினாக்கள். | 179—206 |
| 2. தகவல் கோரல் : | |
| (அ) பேரவைமுன் வைக்கப்பெற்ற நஞ்சப்பன் கமிஷன் அறிக்கை. | 206—208 |
| (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள். | 208—209 |
| (இ) விவசாயக் கல்லூரி மாணவர்கள் தொடர் உண்ணாவிரதம் இருப்பது. | 209—210 |
| (ஈ) ராமபிரசாத்ராவ் கமிஷன் அறிக்கைமீது விவாதம் குறித்து. | 210 |
| 3. ஒழுங்குப் பிரச்சினை : அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர் அவையில் இல்லாதபோது அவர் கொடுத்துள்ள கவன ஈர்ப்பை எடுத்துக் கொள்வது. | 210—212 |
| 4. அரசினர் சட்டமுன்வடிவு : கடன் நிவாரண (திருத்த) சட்டமுன்வடிவு 1984. | 212—213 |
| 5. வரவு—செலவுத் திட்டம் 1984-85 வாக்கெடுப்பு: | |
| (அ) கோரிக்கை எண். 15—காவல்துறை. | |
| (ஆ) கோரிக்கை எண். 16—நீயணைப்புப் பணிகள். | 213—292 |
| (இ) கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வைத் துறை. | |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். | 213,214,215 |
| | 215—223 |
| திரு. ஜெ. எஸ். இராசு. | 223—234 |
| திரு. எல். இளையபெருமாள். | 234—241 |
| டாக்டர் கே. சமரசம். | 241—262 |
| திரு. கு. ரமணி. | 262—270 |
| திரு. பி. எச். பாண்டியன். | 270—278 |
| திரு. என். ஏ. பூங்காவனம். | 253,278,284 |
| டாக்டர் கே. பி. இராமலிங்கம். | 284—288 |
| திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன். | 288—292 |
| திரு. மா. சின்னராசு. | |
| 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். | 292 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

1984 மார்ச் 29 வியாழக்கிழமை.

பங்குனி 16, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

அழிவின்று அறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை.

அழிவு இல்லர்ததாய், பகைவருடைய வஞ்சனைக்கு இரையாகாததாய், தொன்றுதொட்டு வந்த அஞ்சாமை உடையதே படையாகும்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

#### காட்டுமன்னார்குடி வட்டத்தில் வாழும் நரிக்குறவர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை.

*390*—(*வினா எண். 18875) திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் காட்டுமன்னார்குடி வட்டம் விராணூர் எல்லையில் வீடுகட்டி வாழும் நரிக்குறவர்கள் மேற்படி இடத்தை தங்களுக்குப் பட்டா வழங்கக் கோரி அரசுக்குக் கோரிக்கை அனுப்பினார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தென்னார்க்காடு மாவட்டம் காட்டுமன்னார்குடி கோயில் வருவாய் வட்டத்தில் 14 நரிக்குறவர் குடும்பங்கள் குடியிருக்கிறார்கள். அவ்வாறு அவர்கள் குடியிருக்கும் இடம் பொதுப்பணித்துறைக்குச் சொந்தமானது. பொதுப்பணித்துறையின் மூலமாக, அந்த நிலத்தை, அவர்களுடைய அனுமதியைப் பெற்று அதற்குப் பிறகு நரிக்குறவர்களுக்குக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

[1984 மார்ச் 29

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, நரிக்குற வர்களைப் பொறுத்தவரையிலே அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தாலும் அவர்கள் இருக்கக்கூடிய ஜாதியைப் பொறுத்த வரையிலே மிகவும் பின்தங்கியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே அவர்களை ஷெட்யூல்ட் ட்ரைபிலே சேர்ப்பதற்கு அரசு நட வடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர் களே, இந்தக் கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் தொடர்பு இல்லை.

நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் எடுக்கப்பட்ட உபரி நிலம்.

391—(*வினா எண் 21490) திரு. இ. கணேசன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் அரசு எடுத்த உபரி நிலம் எத்தனை ஏக்கர் ?

(ஆ) அவைகளில் ஆதிதிராவிடர் மற்றும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் எத்தனை ஏக்கர் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) சேலம் மாவட்டத்தில் நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நிலம் 614 ஏக்கர்.

(ஆ) மேற்படி உபரி நிலத்தில் ஆதிதிராவிடர்கள் 16 பேர் களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

திரு. இ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, எந்த அடிப்படையில் நிலங்கள் பிரித்துக் கொடுக்கப்படு கின்றன? மீதியுள்ள நிலங்களை இன்னும் பிரித்துக் கொடுக்காமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர் களே, நில உச்ச வரம்புச் சட்டத்தின் மூலமாக நிலங்களை எடுக்கின்றபோது அந்த நிலங்களை இதற்கு முன்னால் குத்தகை தாரர்கள் பயன்படுத்திக் கொண்டிருந்தால் அந்தக் குத்தகை தாரர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. அதற்குப் பிறகு ஆதி திராவிட மக்கள், அதிலே நேரடியாக விவசாயம் செய்கின்ற ஆதி திராவிட மக்கள் ஆகியோருக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. அதற்குப் பிறகு முப்படையைச் சேர்ந்த பணியாளர்கள், முப்படைகளில் வேலை செய்கின்றபோது இறந் தவர்கள், அதற்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களின் குடும்பத்தினர் ஆகியோருக்குக் கொடுக்கப்படுகின்றது.



1984 மார்ச் 29]

அடுத்தபடியாக, பர்மா, இலங்கை ஆகிய இடங்களிலிருந்து வருகின்ற மக்கள், 10 ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாகப் பணம் கொண்டு வந்தால், அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றது. இந்த விகிதத்தில் கொடுக்கப்படுகிறது. எடுக்கப்பட்ட நிலம் இன்னும் சில கொடுக்கப்படாமல் இருப்பதற்கான காரணம் உச்ச நீதி மன்றத்திற்குச் சென்று தடை உத்தரவு வாங்கி இருப்பதுதான்.

திரு. இ. கணேசன் : தலைவர் அவர்களே, இந்தமாதிரி வினியோகிக்கப்பட்ட நிலங்களை அவர்கள் விற்றுவிடும்போது அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர் களே, நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலமாக எடுக்கப்பட்ட நிலத்தை யாரும் விற்க முடியாது. அப்படி விற்றால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். யாருக்குக் கொடுக்கப்படு கிறதோ அவர்களும் 10 ஆண்டு காலத்திற்குள்ளாக அதை விற்கக் கூடாது என்று விதிமுறை சொல்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் உபரி நிலமாக சுமார் 600 ஏக்கர் எடுக்கப்பட்ட தாகவும் சுமார் 16 பேருக்கு வினியோகம் செய்யப்பட்டதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு நபருக்கு எத்தனை ஏக்கர் வழங்கப்பட்டது ? சேலம் மாவட்டத்தில் இன்னும் உபரியாக இருக்கக்கூடிய நிலம் எவ்வளவு? எவ்வளவு காலத்திற்குள் அவை ஆர்ஜிதம் செய்யப்பட்டு வினியோகிக்கப் படும் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொருவருக்கும் 3 ஏக்க கர் புஞ்செய் நிலம் அல்லது $1\frac{1}{2}$ ஏக்கர் நஞ்செய் நிலம் இப்போது கொடுக்கப்படுகிறது. சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை யில், சில நிலங்கள் சம்பந்தப்பட்டவரை உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். ஆகையால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருப்புவனம் புதூரிலுள்ள பிரமனூர் ஊரணியை ஆக்கிரமிப்பு செய்துள்ள தனி நபர்கள்.

392—(*வினா எண். 22478) திரு. க. பாரமலை : மாண்பு மிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை தொகுதி திருப்புவனம் புதூரில் மாரியம்மன் கோவிலுக்குப் பின்புறம் பிர மனூர் செல்லும் கால்வாயை ஒட்டி உள்ள ஊரணியைத் தனி நபர்கள் ஆக்கிரமித்து விவசாயம் செய்துவருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த ஆக்கிரமிப்பை அகற்ற அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ): திருப்புவனம் புதூர் கிராம புல எண். 92/2 ஊரணி புறம்போக்கு என வகை செய்யப்பட்டுள்ளது. இதன் பரப்பளவு 1.73 ஹெக்டேர். இந்நிலம் திருவாளர்கள் பாலகுரு, சோகர், அய்யனார், ஆதி, நாராயணம், முத்து மற்றும் பாண்டி ஆகிய ஏழு பேருடைய ஆக்கிரமிப்பில் உள்ளது. ஆக்கிரமிப்பை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தற்போது நெல் பயிரிடப்பட்டிருக்கிறது.. அறுவடை முடிந்த பிறகு, ஆக்கிரமிப்புகள் வெளியேற்றப்படும்.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஆக்கிரமிப்புகளை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். அந்த இடம் புறம்போக்கு என்று வகை செய்யப்பட்டிருந்தாலும், பொது மக்கள் எல்லாம் குளிப்பதற்கு உபயோகப்படுத்துகிறார்கள். இந்த அளவிற்கு வருவாய்த்துறை விட்டு விட்டார்களா ? 1979 ஆம் ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிகளுக்குச் சென்றபோது, அங்கே இருக்கிற கிராம மக்கள் சொன்ன வேண்டுகோளை ஏற்று, உடனடியாக வெளியேற்றப்பட வேண்டுமென்ற ஆணையைப் பிறப்பித்திருந்தார்கள். இப்போது 4 ஆண்டுகள் ஆகியும் கூட, இன்னும் அவர்கள் வெளியேற்றப்படாமல் இருப்பதற்கு ஏதாவது விசேஷ காரணம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விசேஷமான காரணம் என்று என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. அப்படி விசேஷமான காரணம் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிந்தால், அந்த விசேஷமான காரணம் நல்ல காரணமாக இருந்தால், விட்டுவிடலாம். அப்படி இல்லையென்றால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. பாரமலை : தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் தகவல் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் ஆக்கிரமிப்பாளர்கள் நிலத்தை விட்டு வெளியேற்றுவதை நீதிமன்றத்திலே வழக்குப் போட்டிருந்தார்கள். ஆனாலும் அதை எதிர்த்து, வருவாய்த்துறை அதிகாரிகள் ஒரு கவுண்டர் அபிடவிட் போட்டு, அந்த நிறுத்த உத்தரவை, ஸ்டே வெகேட் செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. அதைப் பல நிலைகளில் நாங்கள் எடுத்துச் சொல்லியும், அவர்கள் செயல்படாத காரணத்தால், அது தாமதமாகப் போய்விட்டது. நம்முடைய ஹரிஜன நல அமைச்சர் அவர்கள் கூட அந்த இடத்திற்கு வந்திருந்தார்கள். நான் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்வது, ஒவ்வொரு 6 மாதமும்,





உடனடியாக வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையென்றால் பயிரிட்டுவிடுவார்கள். இது நிச்சயமாக அவர்களை வெளியேற்றுவதற்கு உதவியாக இராது. ஆகவே இந்த பயிர் முடிந்தவுடன் வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, அந்த 7 பேர்களில் 5 பேர் நிலமற்ற ஏழைகள். 2 பேர் வசதி படைத்தவர்கள். நீதிமன்றத்திற்குப் போனார்கள் என்று சொன்னார்கள். ஆனால் போகவில்லை. அறுவடை முடிந்தவுடன் வெளியேற்றப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இப்படி, ஊரணிகள், கண்மாய்கள், குளங்கள் போன்றவைகளை 'ஆக்கிரமிப்பு செய்தவர்கள்' மீது நடவடிக்கை எடுத்தால், கோர்ட்டிலே போய் ஸ்டே வாங்கிவிடுகிறார்கள். ஆக்கிரமிப்புகளை அகற்ற முடிவதில்லை. எனவே இப்படிப் பொதுவான இடங்களில் ஆக்கிரமிப்பு செய்தவர்கள் கோர்ட்டுக்குப் போகாமல் தடுப்பதற்கு சட்டம் கொண்டுவரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நல்ல யோசனை. இது சட்டத்துறையுடன் ஆராய்ந்து செயல்பட வேண்டிய யோசனை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி மாநிலம் முழுவதும் குளங்கள், ஊரணிகள் போன்றவைகள் ஆக்கிரமிக்கப்படுவது ஆயிரக்கணக்கான அளவில் இருக்கின்றன. எனவே சமுதாயத் தூய்மை கெட்டுவிடுகிறது. வருவாய்த்துறையால் இதை அப்புறப்படுத்த முடியாத நிலை இருக்கிறது. இந்த ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கு, அதை மாற்றுவதில், ஏதாவது சட்டம் கொண்டு வரப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதைப்பற்றி யோசிக்கும்.

**1982-83 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மாம்பழத்தின் அளவு.**

498—(*வினா எண். 21171) திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1982-83 ஆம் ஆண்டில் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மாம்பழத்தின் அளவு எவ்வளவு ?

[1984 மார்ச் 29

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : 1982-83ஆம் ஆண்டில் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மாம்பழத்தின் அளவு சுமார் 6.28 லட்சம் டன்கள் ஆகும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் மாம்பழ உற்பத்தி கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு கூடுதல் ஆகி உள்ளதா ? அப்படியானால் அதன் விவரங்கள் என்ன ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1981-82-ல் 36 ஆயிரம் ஹெக்டேரில் பயிர் செய்யப்பட்டு, 5.52 லட்சம் டன் உற்பத்தியாகியது. 1982-83-ல் 38,983 ஹெக்டேரில் உற்பத்தி செய்யப்பட்டு 6.28 லட்சம் டன்கள் உற்பத்தியாகியுள்ளன.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாம்பழங்களுக்கு வெளி நாடுகளில் அதிக கிராக்கி இருப்பதாகச் சொல்லுகிறார்களே. வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு மாநில அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இப்பொழுதும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஏற்றுமதி செய்யும் பொறுப்பு மத்திய அரசிடம் இருக்கிறது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு தமிழகத்தில் மாம்பழ மகசூல் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அதன் விளைவாக விலையும் உயரும் என்று சொல்லப்படுகிறதே, அத்தோடு லாரி போன்ற வாகனங்களுக்கும் இதனால் வருமானக் குறைவு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறதே, இவைகளுக்கு ஏதாவது அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா ? அத்தோடு அவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய முயற்சிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, சில நோய்த் தாக்குதல்கள் ஏற்பட்டன. அவைகளை ஆராய்ந்து உரிய வகையிலே பாதுகாப்பு நடவடிக்கைகள் தோட்டக் கலைத் துறை மூலம் எடுக்கப்பட்டு விட்டது.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் எவ்வளவு மாம்பழங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன? வட ஆற்காடு மாவட்டத்தில் அதிக அளவில் மாம்பழங்கள் உற்பத்தியிருக்கிற காரணத்தால், அங்கே ஒரு பழ ரச தொழிற்சாலையை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?



1984 மார்ச் 29]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தனித்தனியாக மாவட்டங்களைப் பற்றிய விவரங்கள் இல்லை. வட ஆற்காடு மாவட்டத்தில் உற்பத்தியாகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்பொழுது நாம் ஏற்றுமதி செய்வதற்கும், அப்படியே சாப்பிடுவதற்கும் போதுமான அளவு கிராக்கி இருக்கிறது. ஆகவே பழ ரசத் தொழிற்சாலையைப் புதிதாக ஏற்படுத்தத் தேவையில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பல வகையான மாம்பழங்கள் இருக்கின்றன. சேலம் மாம்பழம், ராஜபாளையம், சப்பட்டை, பஞ்சவர்ணம் போன்ற பல மாம்பழ வகைகள் இருக்கின்றன. எந்த மாம்பழம் அதிக ருசியாக இருக்கிறது? வெளி நாடுகளுக்குத் தனியார்கள் ஏற்றுமதி செய்து, அதிகமாக சம்பாதிக்கிறார்களே. ஆகவே, வெளி நாடுகளுக்குத் தனியார்கள் ஏற்றுமதி செய்து தடை செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, திரு. தாமரைக்கனியைப் பொறுத்த வரையில் ராஜபாளையம், சப்பட்டை தான் ருசியாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏற்றுமதி செய்வதைத் தடை செய்வது என்பது-தனியார்கள் மூலமாகச் செய்தாலும் சரி, அதைத் தடை செய்வது என்பது—நம்மால் முடியாது.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாம்பழ உற்பத்தி மற்றும் ஏற்றுமதி சம்பந்தமான விவரங்களை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மாம்பழ உற்பத்திக்காக வேண்டி தனியாக பண்ணையைத் துவங்கி அவற்றை மாநிலத்தில் எங்கெங்கெல்லாம் நல்ல முறையில் மாம்பழம் விளைகிறதோ, அந்த இடங்களில் விஸ்தரிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இப்பொழுதே நம்முடைய தோட்டக் கலை பண்ணையின் மூலமாக அத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டில் அயல் நாடுகளுக்கு மாம்பழம் ஏற்றுமதி செய்ததில், நமக்குக் கிடைத்த அன்னியச் செலாவணி எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஏற்றுமதி என்பது மத்திய அரசின் பொறுப்பைச் சார்ந்தது. அதைப் பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டிற்கு, இந்த மாம்பழங்கள் மொத்த டென்டரில் விடப்பட்டதா? டென்டர் மூலமாக நமக்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நான் குறிப்பிடுவது மாம்பழ உற்பத்தி பற்றி. டென்டர் பற்றிய விவரங்கள் என்னிடத்தில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனியார் தோட்டங்களில் எதற்கு டென்டர் ?

**மாநில அரசின் வேளாண்மை உயர்மட்டக்குழு மேற்கொண்ட சுற்றுப்பயணம்.**

*499—(*வினா எண் 22316) :* **திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சமீபத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட மழை, புயலினால் நிகழ்ந்த சேதங்களைப் பார்வையிட மாநில அரசின் வேளாண்மை உயர் மட்டக்குழு சுற்றுப்பயணம் மேற் கொண்டதா?

(ஆ) ஆம் எனில் எங்கெங்கு சென்றது?

(இ) அக்குழுவிடமிருந்து அறிக்கை ஏதும் அரசுக்கு வந்ததா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) தஞ்சை மாவட்டத்தில் செங்கிப்பட்டி, பூதலூர், ஆச்சாம்பட்டி, கனம்பட்டி, மன்னார்குடி, நீடாமங்கலம், முத்துப்பேட்டை, இடையூர், அம்மலூர்; பாண்டி, திருத்துறைப் பூண்டி, தலைஞாயிறு, மேலமருதூர், வேதாரண்யம், கோடிக்கரை, நாகப்பட்டினம், திருவாரூர், திருக்கடையூர் ஆகிய பகுதிகளில் 2—2—84 முதல் 5—2—84 வரை சுற்றுப் பயணம் செய்து, வெள்ளச் சேதம் பற்றிய விவசாயிகளின் குறைகளைக் குழு கேட்டது.

(இ) அது பற்றிய விரிவான பரிந்துரைகள் அரசுக்கு வந்துள்ளன.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சமீபத்தில் ஏற்பட்ட பெரும் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட இந்த வேளாண்மை உயர்மட்டக்குழு சுற்றுப்பயணம் மேற் கொண்டதில், தஞ்சை மாவட்டத்தை மட்டும் பார்வையிட்டதாகத் தெரிகிறதே. ஆனால்



அந்தக் குழு சுற்றிவிட்டு, பரிந்துரைகளாக கொடுத்திருக்கக்கூடிய கோரிக்கைகள் என்னென்ன? அது சம்பந்தமாக அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அதாவது அறிக்கைக்கு மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழு தந்துள்ள பரிந்துரைகள் மொத்தம் 14. அது நீண்ட பட்டியல். அவைகளை அப்படியே இங்கே தெரிவிக்க இயலாது. அறிக்கையை வேண்டுமானால் அவையில் வைக்கிறேன். அந்தப் பரிந்துரைகள் பல்வேறு துறைகளைச் சார்ந்தவை. ஒவ்வொரு துறையும் அதைப் பற்றி ஆராய்ந்து பரிசீலனையை மேற்கொண்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட தஞ்சை மாவட்டம் பகுதியில் உள்ளதை மட்டும் பார்வையிட்டு வந்த அந்தக் குழு செய்த சிபாரிசு பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 14 என்று சொன்னார்கள். அதிலே முக்கியமானது எல்லா வரிகளையும் ரத்து செய்து விட்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்குக் குறைந்த பட்சம் 500 ரூபாய் கட்டாயமாக நஷ்ட ஈடாகக் கொடுக்க வேண்டும் என்று சிபாரிசு செய்து இருக்கிறது. அது சம்பந்தமாக அரசு அந்த சிபாரிசை ஏற்று நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்? மேலும் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற மாவட்டங்கள் சமீபத்தில் ஏற்பட்ட மழையின் காரணமாக மிகவும் சேதம் அடைந்திருக்கிறது. அங்கும் இந்தக் குழு சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குழுவை கேட்டுக் கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதிகளையும் சுற்றிப் பார்க்க வேண்டும். அது பற்றிய நிலைமைகளைக் கண்டு அறிய வேண்டும் என்று குழு விரும்பினால் குழு தாராளமாக அதை மேற்கொள்ளலாம். அதற்கு அந்த உரிமை இருக்கிறது. அவர்கள் கொடுத்துள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் அதை எப்படி செயல்படுத்துவது, அதை எப்படி நிறைவேற்றுவது என்பது அரசினுடைய நிதி நிலை, மத்திய அரசு வெள்ள நிவாரணத்திற்குத் தந்துள்ள பணம் இவைகளை வைத்து கணக்கு பார்த்து தான் நடவடிக்கை எடுக்க முடியும்.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை உச்ச மட்டக் குழு செய்து இருக்கக் கூடிய சிபாரிசுகளை அமுல்படுத்துவது அரசின் நிதிநிலையைப்

பொறுத்துதான் முடிவு செய்யப்படும் என்று மாண்புமிகு அமைசர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படி என்று சொன்னால் இந்த மாதிரி உச்ச மட்டக் குழு எதற்கு? குழு சிபாரிசு இல்லாமலேயே அரசு இஷ்டத்திற்குச் செய்யலாம். ஆகவே மீண்டும் பரிசீலனைச் செய்து அந்தக் குழுவின் சிபாரிசுகளை உடனடியாக அமுல் செய்வதற்கு அரசு முயற்சியை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழுவால் தரப்படக்கூடிய பரிந்துரைகள் முழுவதையும் அப்படியே அரசு தள்ளிவிடுவதும் இல்லை. முழுவதையும் அப்படியே ஏற்றுக்கொள்ளத் தக்க அளவுக்கு அரசினுடைய நிதிநிலையும் இல்லை. வேளாண் பெருமக்களுடைய நலத்திற்காக வெள்ளத்தினால் அவர்கள் பாதிக்கப்படக் கூடிய நேரத்தில் அவர்களுடைய விளை நிலங்கள் பாதிக்கப்படக் கூடிய நேரத்தில் இது போன்ற பல்வேறு விவசாயப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழு சென்று கண்டு அறிந்து அரசுக்குச் சில கருத்துக்களை எடுத்துக் கூறுவது நிச்சயமாக துணை புரியும் என்ற வகையில் அந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கடந்த காலங்களில் சொல்லிய பல பரிந்துரைகள் அரசால் நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.. ஆக இதையும் உரிய அளவில் எந்த அளவுக்கு நடவடிக்கைகள் அரசால் தீவிரமாக எடுக்க முடியுமோ அத்தகைய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகள் ஏராளமாக பாதிக்கப்பட்டதாக அரசின் அறிக்கையில் இருக்கிறது. அதோடு விவசாயம் பாதிக்கப்பட்டு நஷ்டம் ஏற்பட்டதாக இருக்கிறது. நான் கூற விரும்புவது அந்தக் குழுவின் சிபாரிசில் சுத்தமாக விவசாயம் பாதிக்கப்பட்டது, கால்நடைகள் பாதிக்கப்பட்டன என்று இருக்கக் கூடிய நிலையில் மீண்டும் விவசாயம் செய்வதற்கு எந்தவிதமான ஒரு மூலதனமும் இல்லாத நிலையில் அவர்களுக்கு இந்தக் கால்நடைகள் நஷ்டமான விஷயத்திலும், விவசாயம் நஷ்டமான விஷயத்திலும் அந்த விவசாயிகள் மீண்டும் மூலதனத்திற்கு ஏதாவது ஏற்பாடு செய்வதற்கு சிபாரிசு இருக்கிறதா? அப்படியானால் அது என்ன? அதன் மீது அரசு என்ன நடவ்டிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளை இழந்து தனிக்கக் கூடிய விவசாயப் பெருமக்களுக்கு ஒரு ஜதை உழவு மாடுகள் மானிய விலையில் வழங்கப்பட வேண்டும், அதைப் போலவே பசு போன்றவைகள் மானிய விலையில் வழங்கப்படவேண்டும். அதைப் போலவே ஆடுகளை இழந்து தவிக்கக்கூடியவர்களுக்கு





சில ஆடுகள் 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட வேண்டும் என்பது போன்ற பரிந்துரைகள் அந்தக் குழுவால் தரப் பட்டிருக்கின்றன. அரசு அது பற்றி ஆராயும்.

திரு: எம். அண்ணாதாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தினால் திருச்சி மாவட்டத்திலுள்ள திருவரும்பூர் தொகுதி மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால் உய்யக் கொண்டான் வாய்க்காலிலும், மேட்டுக் கட்டளை வாய்க்காலிலும் விவசாயம் அதிகமான அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகள் அல்லல் படுகிறார்கள். அதை ●டுகட்டுகின்ற வகையில் கோடை சாகுபடிக்குக் காத்து இருக்கின்ற விவசாயிகளுக்கு விவசாயம் செய்வதற்கு சிறப்பாகத் தண்ணீர் சப்ளை செய்யப்படுமா? அதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

(முற்பகல் 9–20)

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் அதாவது இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் சுமார் 10 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்கள் மண்ணால் மூடப்பட்டு விட்டன. அங்கே அரசாங்கத்திலிருந்து அந்த மண்ணை எடுப்பதற்கு—இலவசமாக எடுப்பதற்கு புல்டோசர், ரூபாய் எல்லாம் சேங்ஷன் செய்திருக்கிறது. ஆனால் அரசு அதிகாரிகள் காலதாமதம் செய்கிறார்கள். எனவே, அவசரமாகச் செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டு, அந்த வேலைகளைத் துரிதப்படுத்த முடியுமா? எல்லா நிலங்களிலேயும் இலவசமாக மண் எடுக்கப்படுமா!

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, சிறு விவசாயிகளின் நிலங்களுக்கு இலவசமாகச் செய்து கொடுக்கின்ற வகையிலும், மற்றவர்களுக்குச் சில மானிய அடிப்படையிலே செய்து கொடுக்கின்ற வகையிலேயும் செயல் திட்டம் இருக்கிறது. காலதாமதத்தை எந்த அளவிற்குக் களைய முடியுமோ அந்த அளவிற்குக் களைவதற்கான ஏற்பாட்டைச் செய்யும்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் முதலிலே விடை சொல்லும் பொழுது தஞ்சை மாவட்டத்திலே உள்ள சில பகுதிகளை வேளாண்மை உயர்மட்டக் குழு சுற்றுப் பயணம் செய்து கணக்கெடுத்ததாகச் சொன்னார்கள். சீர்காழி, மயிலாடுதுறை, தரங்கம்பாடி, நன்னிலம், நாகப்பட்டினம் போன்ற தாலுக்காக்கள் பற்றிய விவரங்களை அமைச்ச

ரவர்கள் தெரிவிக்கவில்லை. அந்தப் பகுதிகள் அதிகமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகள் ; அரசாங்கத்தின் நிவாரணத்தைப் பெற்ற பகுதிகள்தான். அந்தப் பகுதிகளை இந்த உயர் மட்டக் குழு பார்வையிட்டதாகத் தெரியவில்லை. அவர்கள் செல்லவில்லை என்றாலும் அரசின் வேளாண்மை அதிகாரிகள் எடுத்த கணக்குகளை வைத்துக்கொண்டு அந்தப் பகுதிகளைச் சரிபார்த்து, அங்கு நிவாரணம் அளிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவரவர்களே, அலுவலர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் எல்லாப் பகுதிகளையும் சுற்றிப் பார்த்து முழு விவரங்களையும் தெரிவித்திருக்கிறார்கள். உயர்மட்டக் குழு என்பது, அந்தக் குழுவின் எண்ணத்தின்படி சில பகுதிகளைக் கண்டறிந்திருக்கிறார்கள். ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியாகக் கருத்துரு அனுப்பப்படவில்லை ; ஒட்டு மொத்தமாகத்தான் பரிந்துரைகளைத், தந்திருக்கிறார்கள். அவைகளையெல்லாம் அரசு ஆராய்கிறது.

**திரு. இரா. கருப்பையா :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த வேளாண்மை உயர்மட்டக் குழுவானது பல்வேறு இடங்களுக்குச் சென்று பார்த்து, விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பயிர்ச் சேதங்களை ஈடு செய்யும் வகையில்—நிவாரணம் கொடுக்கும் வகையில், அவர்களுக்கு ஏதாவது நஷ்டயீடு அளிக்க வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறதா? அப்படியென்றால் எந்த அளவுக்கு ஈடு செய்ய வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவரவர்களே, முழுக்க முழுக்க அந்தப் பரிந்துரைகள் விவசாயிகளுக்கு நஷ்டயீடு நிவாரணம் கொடுப்பது பற்றியது. மொத்தம் 14 பரிந்துரைகள்.

### சிவகாசி மற்றும் திருத்தங்கல் நகரங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்.

500—(*வினா எண். 18627) **திரு. வி. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சிவகாசி மற்றும் திருத்தங்கல் நகரங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?



(ஆ) விரைவில் அத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா ?

(இ) அத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) மற்றும் (ஆ) சிவகாசி நகர் மற்றும் திருத்தங்கல் பேரூராட்சிகளுக்கான குடிநீர் திட்டத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகக் கடன் உதவி பெற அரசு இடைக்கால (Adhoc) அனுமதி அளித்துள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அவை அரசின் ஒப்புதல் பெற்றவுடன் செயல்படுத்தப்படும்.

(இ) சிவகாசி நகரக் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 454 லட்சம் எனவும் திருத்தங்கல் பேரூராட்சிக் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 109.48 லட்சம் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

**திரு. வி. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புதிதாகத் திட்டங்களை அறிவித்திருப்பதற்காக மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவரவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஏற்கனவே, விருதுநகரில் ரெகுலர் டிவிஷன் இருக்கிறது. புதிதாக ஒரு டிவிஷனை அமைத்து இந்த வேலைகளைத் துவங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புதிதாக டிவிஷன் அமைப்பது என்பதெல்லாம் பரிசீலனை செய்யப்பட வேண்டிய ஒன்று. அது அவ்வளவு சுலபமாக ஆகக் கூடியது அல்ல. ஆனால், இந்தக் காரியங்களை எவ்வளவு விரைவிலே செய்ய முடியுமோ அவ்வளவு விரைவிலே செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

### கடம்பூர் பேரூராட்சிக்குக் குடிநீர் வழங்க வேண்டி வந்துள்ள கோரிக்கை.

501—(*வினா எண். 19266) **திரு. மு. அப்பாதுரை :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடம்பூர் பேரூராட்சிக்கு சீவலப்பேரி கோவில்பட்டிக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க வேண்டும் என அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) சோவில்பட்டி குடிநீர்த் திட்டத்திலிருந்து கடம்பூர் பேரூராட்சிக்குக் குடிநீர் விஸ்தரிப்பு செய்வதற்கான செயற்குறிப்பு தமிழ் நாடு குடிநீர் வடிசால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடம்பூர் பேரூராட்சிக்குக் குடிநீர் வழங்குவதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். இந்தப் பரிசீலனை எப்பொழுது முடிவு பெற்று இந்தத் திட்டம் அமலுக்கு வரும்? எங்கள் மாவட்டம் வெள்ளத்தினால் பெரும் சேதாரங்களுக்கு உட்பட்டிருந்தாலும் கூட, கடம்பூர், கயத்தாறு போன்ற இடங்கள் இன்றைக்கும் நிரந்தரமாகக் குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கின்ற பகுதிகளாகும். அதுமட்டுமல்லாமல், பல்வேறு காலகட்டங்களில் போடப்பட்ட ஆழ்குழாய்க் கிணறுகள் பழுதடைந்து தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. அவைகளுக்குச் செலவு செய்யும் பணத்தை விரயம் செய்யாமல் இந்த நல்ல திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இந்த ஆழ்குழாய்கள் பழுதடைந்து சில கிணறுகளில் வருகிற தண்ணீர் உப்பாகிவிட்டது. எனவே அந்தப் பகுதியில் குடிதண்ணீர் கொடுக்க வேண்டியது மிக அவசியம் என்று அரசாங்கம் கருதுகிறது. திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. திட்ட அறிக்கை தயாரித்த பின் கடம்பூர் பேரூராட்சியிடமிருந்து தீர்மானம் பெற்று அரசாங்கத்தின் அங்கீகாரத்திற்கான திட்ட அறிக்கை வாரியத்திடமிருந்து பெறப்பட்டு உரிய நடவடிக்கைகள் உரிய காலத்தில் விரைவில் எடுக்கப்படும்.

திரு. மு. அப்பாதுரை : தலைவர் அவர்களே, பேரூராட்சி தீர்மானத்தை நானும் துறைக்கு அனுப்பி வைத்திருக்கிறேன், தனி அதிகாரி மூலம். கடம்பூர், கயத்தாறு இரண்டும் இத்திட்டத்தின் கீழ் வரவேண்டும். இந்தத் திட்டத்தை மிகச் சீக்கிரமாக நிறைவேற்ற — அரசாங்கத்திடமிருந்து பைல்ஸ் வர காலவகாசம் இல்லை — சமீபத்தில்கூட ஒரு தூதுக்குழு வந்து அமைச்சர் அவர்களையும் சந்தித்தார்கள். எனவே இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கைகள் எடுப்பார்களா?



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, தீர்மானத்தை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் எனக்கு நேராக அனுப்பினால் அதைப் பரிசீலனை செய்வதற்குச் சிரமம் ஏற்பட்டுவிடும். அந்தப் பேரூராட்சி மூலமே, ப்ராப்பர் சானல் வழி அனுப்ப வேண்டும். அதைப் பெற்று தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### ஈ. எஸ். ஐ. மருத்துவ வசதியைக் கட்டிடத் தொழிலாளர்களுக்கும் ஏற்படுத்தும் திட்டம்.

502—(* வினா எண். 19762)—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஈ.எஸ்.ஐ. மருத்துவ வசதியைக் கட்டிட நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தொழிலாளர்களுக்கும் ஏற்படுத்தித் தரும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இல்லை. ஆனால் 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டட கட்டுமானப் பணியாளர்கள் (பணி நிலைமைகள்-பல்வகை விதித்துறைகள்) மசோதாவின் பிரிவு 40(8) இன்படி அரசு அறிக்கை ஒன்றை வெளியிடுவதன் மூலம் 1948 ஆம் ஆண்டு தொழிலாளர் அரசு காப்புறுதிச் சட்டம் (மத்திய சட்டம் 34/1948) கட்டட கட்டுமானப் பணியாளர்களுக்குப் பொருந்தச் செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது 'இல்லை' என்று சொன்னார்கள். பிறகு வகை செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் இந்த வகை எப்போது செய்யப்படும்? அது எப்போது எந்த வகையில் முடியும்? எந்த மாநிலத்திலாவது இந்த வகை இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, கேள்வி, 'ஈ.எஸ்.ஐ. மருத்துவ வசதியைக் கட்டட நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தொழிலாளர்களுக்கும் ஏற்படுத்தித் தரும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?' என்பதாகும். அப்படி இல்லை. ஆனால் இந்த அரசாங்கம் ஒரு சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்தியிருக்கிறது, கட்டட கட்டுமானத் தொழிலாளர்களுக்காக. அது இந்தச் சட்டமன்றத் தொடர் கூட்டத்தில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதில் இந்த ஈ.எஸ்.ஐ. வசதியை எக்ஸ்டெண்ட் செய்வதற்கு வேண்டிய

அதிகாரம் பெறுவதற்கு இந்தச் சட்ட முன்வடிவில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டமுன்வடிவு நிறைவேறிய பின், சட்டம் அமலுக்கு வந்தபின் எந்தெந்தப் பகுதிக்கு இதைச் செயல்படுத்த வேண்டும் என்ற முறையில், நிதி ஆதாரம் இதையெல்லாம் கருத்தில் கொண்டு செயல்படுத்தப்படும். இப்படி ஒரு சட்ட முன்வடிவு — இந்தியாவிலே கட்டட கட்டுமானப் பணியாளர்கள் பல்வகை விதித்துறைகள் சட்ட முன்வடிவு இந்தியாவிலேயே முதன் முதலாக புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில்தான் தமிழ் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது ; நிறைவேற்றப்படவும் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவர் அவர்களே, கட்டட நிர்மாணப் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தொழிலாளர்களுக்கும் இந்த மருத்துவ வசதி செய்து கொடுப்பதுபோல் தினந்தோறும் காலையிலிருந்து மாலை வரை வேலைபார்க்கிற உழைக்கும் வர்க்கமான மூட்டை தூக்குவோர், சென்னை கடற்கரையில் காலையிலிருந்து மாலை வரை சுண்டல் விற்போர், செருப்புத் தைக்கும் தொழிலாளிகள், கைவண்டி இழுப்போர், ஜவுளிக் கடைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் போன்றவர்களுக்கும் இந்தச் சட்டமுன்வடிவில் வழிவகை செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, இதற்கு என்று சென்ட்ரலில் ஒரு கமிட்டி இருக்கிறது. தமிழ் நாட்டிலும் ஒரு கமிட்டி இருக்கிறது. சில செலவுகளை ஈ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன் ஏற்றுக் கொள்கிறது. சில செலவுகள் 1 : 7 என்ற வகையில் பகிர்ந்து கொடுக்கப்படுகிறது. எனவே எந்தெந்தத் துறைகளில் செயல்படுத்த முடியும் என்று பரிசீலனை செய்து தமிழக அரசினுடைய நிதி ஆதாரத்தை மனதில் கொண்டு அவ்வப்போது விரிவாக்கப்படுகிறது. அது தொடர்ந்து விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-30)

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடங்கள் கட்டும் தொழிலாளர்கள் ஏராளமான பேர்கள், லட்சக்கணக்கான பேர்கள் தனியார் துறையில் மட்டுமல்லாமல், அரசுத் துறையிலும் கூட இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் கான்ட்ராக்டர்களுக்குக் கீழ் கட்டுப்பட்ட ஊழியர்களாக இருக்கின்றார்கள். இந்த ஈ. எஸ். ஐ. ஸ்கீமை விஸ்தரிப்பது என்பது புதியதாக கொண்டுவரக்கூடிய சட்டம் என்று சொன்னாலும் கூட, குறிப்பிட்ட ஏரியாக்களுக்கு என்று இருக்க முடியுமே தவிர, சகல இடங்களிலும் உள்ள கட்டிடத் தொழிலாளர்களுக்கு விஸ்தரிக்க முடியாது. ஆகவே, அடிமட்டத்திலே இருக்கக்கூடிய லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு ஒரு மெடிகல் ஸ்கீம், ஒரு மருத்துவ வசதி பிரத்தியேகமாக கொடுப்பதற்கு ஏதாவது ஒரு திட்டத்தை அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் பதில் சொன்னேன். எனக்குத் தெரிந்தவரையில் இந்தியாவில் தமிழக அரசுதான் முதன்முதலாக இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறது. வேறு மாநிலத்தில், நான் விசாரித்த வரையில் இல்லை. எங்காவது இருக்குமா என்பது எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்த வரையில் தமிழகத்திலேதான் கொண்டு வருகிறோம். ஈ. எஸ். ஐ. திட்டத்தை விரிவுபடுத்துவது, ஆர்கனைஸ்ட் லேபரர்களுக்குகூட விரிவாக்குவது என்பது ஏரியா ஏரியாவாகத் தான் நாம் விரிவாக்திக் கொண்டு வருகிறோம். அதைப்போல இந்தத் தொழிலாளர்களுக்கும் விரிவாக்குவதற்கு வேண்டிய 'எனேபிளிங் மெஷர்ஸ்' அந்த அதிகாரத்தைப் பெறக்கூடிய அளவிலே இந்தச் சட்டத்திலே வகை செய்திருக்கிறோம். அதைப் பெற்ற பிறகு, எங்கெங்கே எப்போது விரிவாக்கலாம் என்பதைப் பார்த்து செயல்படுத்தப்படும். இந்தச் சட்ட முன்வடிவு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் போது, அதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசயிருக்கிறார்கள். அப்போது நாம் இதைப்பற்றி விரிவாகப் பேசலாம்.

## கோவையில் காலியாக உள்ள தொழிலாளர் நல அதிகாரிகளின் பதவிகள்.

503.—(*வினா எண் 21481)—**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் 6 மாத காலமாகத் தொழிலாளர் நல அதிகாரிகள் மூன்று பேர் இல்லாமல் வழக்குகள் தேங்கிக் கிடப்பது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், காலியாக உள்ள இடங்களைப் பூர்த்தி செய்ய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) கோவையில், 3 பதவிகள், ஆறு மாதங்களுக்கு மேலாக காலியாக இருந்தன என்பதும், தொழிற் தகராறு வழக்குகள் குவிந்து விட்டன என்பதும் அவ்வளவு சரியில்லை. இம்மூன்று பதவிகளும், 4-லிருந்து 5 மாதங்கள் வரையில் மட்டுமே அலுவலர்களது பதவி ஓய்வு மற்றும் பதவி மாற்றம் காரணமாக காலியாக இருந்தன. இப்பதவிகளை மற்ற அலுவலர்கள் முழுக்கூடுதல் பொறுப்பு வகித்து பணியாற்றி வந்தும், தொழிற் தகராறு வழக்குகள் நிலுவை கணிசமாக அதிகரிக்கவில்லை.

(ஆ) இப் பணியிடங்கள் யாவும் தற்போது நிரப்பப்பட்டு விட்டன.

**திரு. எம். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியே, கோவையிலே 6 மாத காலமாக தொழிலாளர்கள் நல அதிகாரிகள் 3 பேர்கள் இல்லை என்பது தான். தாங்கள் சொல்லக் கூடிய பதிலில், 6 மாதங்கள் இல்லை, 5 மாதங்கள் இருந்ததாகச் சொல்வது அவ்வளவு சரியல்ல. பதவிகள் காலியாக இருந்தன என்பது உண்மை. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் 5 மாதங்களாக இல்லாத காரணத்தினால், கோவை மாவட்டத்தில் பல்வேறு தொழில் தகராறுகள் சம்பந்தமான வழக்குகள் தேங்கியிருந்த காரணத்தாலும், பல்வேறு தொழிற்சாலைகள் மூடப்பட வேண்டியதற்கு அடிப்படைக் காரணமாக இருந்துகொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையைப் போக்குவதற்கு, சூப்பர் ஆனுவேஷனிலே அவர்கள் சென்றிருந்தாலும், உடனடியாக இப்படிப்பட்ட அதிகாரிகளைப் போடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது முழுமையாக சரியல்ல என்று நான் சொல்லவில்லை. 6 மாதங்கள் என்று கணக்குச் சொன்னார், 4 லிருந்து 5 மாதங்கள் தான் என்று நான் சொன்னேன். காலதாமதம் ஆனது உண்மை. அது தவிர்க்கப்பட வேண்டியது உண்மை. இப்படி 4, 5 மாதங்கள் ஆகக்கூடாது, அதைத் தவிர்க்க வேண்டுமென்று அரசு கருதுகிறது. அதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும். இப்போது எல்லா இடங்களிலும் பூர்த்தி செய்யப்பட்டு விட்டது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல, வழக்குகள் தேங்கவில்லை; கம்மியாகி இருக்கிறது. அடிஷனல் சார்ஜ் கொடுத்து, கூடுமானவரையில் முக்கியப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், 4, 5 மாதங்கள் கூட காலியாக இல்லாமல் உடனடியாக காலியாக உள்ள இடங்களை எல்லாம் பூர்த்தி செய்வதற்கு இனிமேல் அரசு எல்லா நடவடிக்கைகளையும், சகல முயற்சிகளையும் எடுத்துக் கொள்ளும்.

**திரு. எம். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் இருக்கக்கூடிய தொழிலாளர் நல இலாக்காவின் டி. சி. எல். என்று சொல்லக்கூடியவர்கள் 5 மாவட்டங்களுக்கும் ஒரு டி. சி. எல். என்று இருப்பதன் காரணத்தால், 5 மாவட்டங்களிலும் தொழிலாளர்கள் குவிந்திருப்பதால் அப்போதைக்கப்போது வரக்கூடிய தொழில் தகராறுகளைத் தீர்க்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது. மேலும் அவர்களுக்கு அடிஷனலாக ஓர்க்மேன்ஸ் காம்பன்சேஷன் என்ற பணியும் கொடுக்கப்பட்டு வேலைப் பளு அதிகமாக இருக்கின்றது. ஆகவே அந்த 5 மாவட்டங்களுக்கு என்று இருப்பதை இரண்டு பிரிவுகளாக பிரித்து, கோவை, நீலகிரி, பெரியார் போன்ற மாவட்டங்களுக்கு





தனியாக ஒரு டி. சி. எல். போடப்படுமா ? இந்த வழக்குகளை எல்லாம் உடனடியாகத் தீர்ப்பதற்காக அவ்வாறு தனியாக ஒரு டி. சி. எல். போடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், இதற்கும் தொடர்பு இல்லை. இருந்தாலும் சொல்கிறேன். கோவையில் ஒரு டி. சி. எல். இருக்கிறார். சேலத்திலே ஒரு டி. சி. எல். இருக்கின்றார். ஆகவே சிரமம் அதிகமாக இல்லை என்றுதான் தகவல் எங்களுக்குக் கிடைத்திருக்கின்றது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை ஏற்றுக் கொள்வதற்கு இல்லை என்பதை வருத்தத்தோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, கோவையில் இருக்கும்படியான தொழிலாளர் இலாக்காப் பிரிவில் ஏற்கனவே இருந்து வந்ததைவிட இப்போது வேலைப் பளு மிகவும் அதிகமாகிவிட்டது. எண்ணற்ற வழக்குகள் காலாகாலத்தில் டிஸ்போஸ் ஆகாமல் இருக்கின்றது என்பது உண்மை. அமைச்சர் அவர்கள் வேண்டுமானால் அங்கே வந்து இன்ஸ்பெக்ட் செய்தால் அதைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியும். மேலும் கோவை மாதிரி இருக்கக்கூடிய ஒரு மையத்தில் ஒரு அடிஷனல் லேபர் கமிஷனர் இருப்பது அவ்சியம். அத்தோடு குறைந்த பட்சம் 2 டி. சி. ல். (D. C. L.) களும், 6 பேர்கள் லேபர் ஆஃபீஸர்களும் இந்த இடத்தில் இருந்தால்தான் அங்கே வேலையைச் சமாளிக்க முடியும். ஆனால் இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது கோவையிலே சிலர் லீவிலே போனதன் காரணத்தால்தான் தாமதம் என்று சொன்னார்கள். அப்படி லீவிலே போனதன் காரணத்தால் மற்றவர்களுக்கு அடிஷனல் சார்ஜ் கொடுக்கப்பட்டாலும்கூட அதன் காரணத்தாலும் கேஸ்கள் தேங்கும். நான் சொன்ன மாதிரி அந்த அடிப்படையில் ஒரு அடிஷனல் கமிஷனர் நியமித்துத் தனியாக ஒரு சென்டர் வைக்கக் கூடிய முயற்சியினை அரசு எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, காலதாமதம் இல்லாமல் காலி இடங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதில் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்தை இந்த அரசு முழுமையாக ஏற்றுக் கொண்டு காலதாமதத்தைத் தவிர்க்கும் என்று நான் சொன்னேன். இன்னும் அதிகமாக அங்கே கன்சிலியேஷன் ஆஃபீஸர் போடவேண்டுமா என்பதைப் பற்றிப் பரிசீலனை செய்யலாம். எனக்குத் தெரிந்த அளவில் இப்போது இருக்கக்கூடிய அதிகாரிகள் போதும் என்பதுதான். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த ஊரைச் சேர்ந்த நல்ல தொழிற்சங்கவாதி. அவர் சொன்ன காரணத்தால் அவருக்கு மதிப்புக் கொடுத்து, கமிஷனர் அவர்களிடத்திலே சொல்லி அங்கே அதிகமாக அதிகாரிகள் போட வேண்டிய சூழ்நிலை இருக்கின்றதா என்பதைப் பற்றி பரிசீலனை செய்யச் சொல்கிறேன்.

[1984 மார்ச் 29

### நிலமற்ற விவசாயிகளுக்கும் நிலவளவங்கிகள் மூலம் கடன் வழங்கும் திட்டம்.

504—(*வினா எண். 17101)—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு நிலமற்ற விவசாயிகளுக்கும் நிலவள வங்கிகளின் மூலம் கடன் கொடுக்கின்ற திட்டத்தைச் செயல் படுத்த உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) நிலவள வங்கிகள் நிலமற்ற விவசாயிகள் தாங்கள் பயிர் செய்யும் நிலத்தையோ அல்லது புதிதாக நிலங்கள் வாங்கிப் பயிர் செய்ய விரும்பும் நிலத்தையோ விலைக்கு வாங்க உயர்ந்த பட்சக் கடனாக ரூ. 7,500-ம் அந்நில அபிவிருத்திக்காக, தேவை யானால் மேற்கொண்டு கடனும் அளிக்கப்படுகின்றன. அரசு உத்திரவாதத்தின்பேரில் கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு போன்ற இதர பல்வேறு காரியங்களுக்கு திட்ட அடிப்படையில் அரசின் உத்திரவாதத்தின்பேரில் மத்திய காலக்கடனும் வழங்கு கின்றன.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு இப்போது நிலவள வங்கிகளிலிருந்து கடன் வழங்கப்படுவதில்லை. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு அரசு சிபாரிசு செய்தால் அங்கே பல நிபந்தனைகளைப் போட்டு அங்கேயும் கடன் கிடைக்கவில்லை. ஆகவே அதைப்பற்றி அரசு பரிசீலித்து நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு, கிராமப் புறங்களில் இருக்கக்கூடியவர்களுக்கு நிலவள வங்கிகளின் மூல மாக கடன் கொடுக்க அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். பெரிய அளவிலே 153 பிரதம நிலவள வங்கிகளின் சார்பிலே உயர்ந்தபட்சம் 7,500 ரூபாய் வரை கடன் வழங்கப்படுகின்றது. சொந்தமாக நிலம் இல்லாமல் இருந்தாலும் அவர்கள் உழுகின்ற நிலங்களைச் சீர்செய்யவோ அல்லது சொந்தமாக நிலங்களை வாங்கிக்கொள்ள வோ இந்த வகையில் 7,500 ரூபாய் வரை கடன் வழங்கப்படுகின் கின்றது.



1984 மார்ச் 29]

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படு கின்ற கடனில் மானியம் உண்டா? மானியம் ஏதும் இருக்கின்றது என்றால் இந்த 7,500 ரூபாய் வரை கொடுக்கப்படுகின்ற கடனில் எவ்வளவு தொகை மானியமாகக் கொடுக்கப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இந்தக் கடனில் மானியம் இல்லை.

(முற்பகல் 9-40)

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் புறத்திலுள்ள நிலமற்ற ஏழை, எளிய விவசாயிகள் தாங்கள் பயிர் செய்த நிலங்களை அபிவிருத்தி செய்ய நிலவள வங்கிகள் கடன் கொடுப்பதாகச் சொன்னார்கள். அந்த நிலவள வங்கிகளை, பயிர் செய்கிற நிலமற்ற விவசாயிகள் அணுகு கிற நேரத்தில், அந்த நிலத்தை அவர்கள்தான் பயிர் செய்கிறார் கள் என்று சொல்லி குத்தகைப் பதிவு செய்திருந்ததற்கு அத் தாட்சி கேட்கப்படுகிறது. அத்தகைய அத்தாட்சி பெற முடி யாத நிலைமையில், அந்த வசதியைப் பெற முடியாத நிலைமை யில் இருக்கிறார்களே, அரசு அதற்குண்டான முறையில் வருவாய் துறை அதிகாரியின் அத்தாட்சியை வைத்து, அந்த நிலத்தைப் பயிர் செய்கிறார்ா என்று கண்டறிந்து அவர்களுக்கு உதவி செய் வதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தவிதமான சான்றிதழும் இல்லாமல் கடன் வழங்குவது இயலாத ஒன்றாகும். அதிகாரி களிடத்தில் வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் ஆகி யோர்களிடத்திலே சான்றிதழ் அல்லது அவர்கள் சம்பந்தப்பட்ட வி. ஏ. ஓ.க்களிடத்தில் சான்றிதழ் பெற்றுக் கொடுத்தப் பின்னால் தான், அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் நிலத்தை உழுபவர் கள் என்கிற சான்றிதழ் பெற்றால்தான் கடன் வழங்க முடியும். அந்த முறைதான் நடைமுறையிலே இருக்கிறது.

### சத்துணவு திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் எடுத்துக் கொள்ளப் பட்டுள்ள கிராமங்களின் எண்ணிக்கை.

505 —(*வினா எண் 13850) —திரு. செ. செம்மலை: மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சத்துணவுத் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் எத்தனை கிராமங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன ?

(ஆ) அதற்காகச் செலவிடப்படும் தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :**

(அ) சிறப்புச் சத்துணவுத் திட்டம் மற்றும் திருத்தப்பட்ட சத்துணவுத் திட்டம் ஆகிய திட்டங்கள் நிறுத்தப்பட்டு அவைகள் முதலமைச்சரின் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்துடன் 15-9-1982-லிருந்து இணைக்கப்பட்டுவிட்டன. சேலம் மாவட்டத்தில் 1,616 கிராமங்கள் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு 1,616 மையங்கள் இயங்கி வருகின்றன. இது தவிர சேலம் மாவட்டத்தில் நகர்ப் புறங்களில் 247 சத்துணவு மையங்களும் இயங்கி வருகின்றன.

(ஆ) இதற்கென ஆகும் செலவு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,12,36,827 ஆகும்.

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் கூடுதலான சத்துணவு மையங்கள் வருகிற ஆண்டில் தேவைப்படும் என்கிற கோரிக்கை வந்திருக்கிறதா ? அப்படி அதைப் பரிசீலித்துக் கூடுதலாகச் சத்துணவு மையங்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 70 குழந்தைகளுக்குக் குறையாத அளவுக்கு இருக்கிற இடங்களில் இதற்கு முன் சத்துணவு மையங்கள் வைக்கப்படவில்லை என்பது அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால் நமது சத்துணவு மையக் கூடங்கள் நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**சத்துணவு திட்டத்திற்கு தினசரி செலவாகும் அரிசி மற்றும் பருப்பின் அளவு.**

506 —(*வினா எண். 16535) —**திரு. ரா. கிருஷ்ணன் :** மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்திற்குத். தினசரி ஆகும் அரிசி, பருப்பு அளவு எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :** முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு தோராயமாக ஒரு நாளைக்கு 607 டன் அரிசியும், 84 டன் பருப்பும் செலவாகிற.

**திரு. ரா. கிருஷ்ணன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது ஒதுக்கப்படுகின்ற இந்த அரிசி, பருப்பு, முழுமையாகக் குழந்தைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்கு இருக்கக் கூடிய அமைப்பு என்ன ? இப்பொழுது கண்காணிப்பதற்கு அதிகாரிகளை மட்டும் நம்பி இராமல் அங்கே இருக்கக்கூடிய அரசியல் கட்சிகளுடைய பிர





முகர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்துக் கணக்குப் பார்ப்பது அல்லது —ஸ்டாக் வெரிபிகேஷன் —இருப்பைச் சரி பார்ப்பது போன்ற அதிகாரங்களையும் உள்ளிட்டு அந்தக் குழுவை அமைக்க அரசு தயாராக இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ஆங்காங்கு ஆலோசனைக் குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றன. அந்த ஆலோசனைக் குழுக்கள் இன்னும் செம்மையாக நடைபெற வேண்டுமென்று அரசு அதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் தன்னுடைய கருத்துக்களை தருவாரானால் அதையும் அரசு பரிசீலிக்கும்.

**திரு. ரா. கிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது சத்துணவு சமைப்பதற்குச்சில இடங்களில் போதுமான விறகு கிடைப்பதில்லை, ஒப்படைக்கின்ற தொகையும் போதாது. அரசு அதை அறியுமா ? இதை ஒழுங்குபடுத்த எடுக்கப்படுகின்ற நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விறகு போதுமானது என்று அதற்குரியவர்களால் பரிசீலனை செய்யப்பட்டு தான் விறகு வழங்கப்பட்டிருக்கிறது. விறகு மட்டுமல்லாமல் சமைக்கப்பட்ட உணவு .வைக்கோல் அடுப்பின் மூலமாக வைப்பதன் காரணமாக மேலும் பெற வேண்டிய அளவுக்கு அவ்வளவு வேக்காட்டைப் பெற்று விடுகிறது. ஆகவே, இந்த வகையில் குழந்தைகளுக்கு உணவு வழங்கப்படுகிறது.

**திரு. மி. வின்சென்ட் :** பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்திற்குப் பிரிவு வாரியாக காப்பகங்கள், பள்ளிகள், முதியோர்கள் ஆகியோருக்கு ஆகும் அரிசி, பருப்பு அளவு என்ன ? 6 மாதக் குழந்தையிலிருந்து 6 வயது குழந்தைகளுக்கும், கர்ப்பிணிப் பெண்களுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் சத்துணவு, ரொட்டி போன்றவை மத்திய மாநில அரசு இணைந்து வழங்கி வந்தன. மத்திய அரசு உதவி இல்லாமல் தற்போது சத்துணவு வழங்குவதால், அது நிறுத்தப்பட்டது என்பது உண்மையா ?

**மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பாலர் பள்ளி மையங்களில் தினசரி சுமார் 22 லட்சத்து 98 ஆயிரம் குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கப்படுகிறது. இதற்காக ஒரு நாளைக்கு 184 டன் அரிசியும், 23 டன் பருப்பும் செலவாகிறது. பள்ளி மையங்களில் தினசரி 39 லட்சத்து 19 ஆயிரம் குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கப்படுகிறது. இதற்கு 392 டன் அரிசியும், 59 டன் பருப்

பும் செலவாகிறது. இதைத்தவிர இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு லட்சத்து 54 ஆயிரம் முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுக்கும் பாலர் பள்ளி மையங்களில் சத்துணவு அளிக்கப்படுகிறது. இதற்கு 31 டன் அரிசியும் 2 டன் பருப்பும் ஒரு நாளைக்கு செலவாகிறது. மற்றொரு கேள்விக்கு பதில், ரொட்டியினுடைய விலை ஏறிய காரணத்தாலும், மத்திய அரசு தன்னுடைய நிதியை நிறுத்திய காரணத்தாலும் அதை சிறப்புத் திட்டமாக மாற்றி தமிழக அரசே அதை செயல்படுத்தி வந்தது. தற்போது அந்தத் திட்டமும் முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டு விட்டது.

**திரு. கே. தனுக்கோடித்தேவர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சத்துணவு மையங்களில் காய்கறி, கீரை போன்றவைகளை ஒரு குறிப்பிட்ட இடத்திலே தான் வாங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதைப்போல அந்த காய்கறி, கீரை விற்கிற இடத்திலேயே விறகும் அவர்களுக்கு கொடுத்தால் அது மிகவும் சாலச்சிறந்ததாக இருக்கும். அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காய்கறி, கீரை போன்றவைகளை கூடுமான வரையில் கூட்டுறவு நிறுவனங்களில் தான் வாங்க வேண்டுமென்று ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. விறகு, கூட்டுறவு நிறுவனங்களில் விற்பதில்லை. அப்படி விற்கப்படுகிற இடத்தில் கூட்டுறவு நிறுவனங்களிலே வாங்கிக் கொள்ளலாம். பெரும்பான்மையான கிராமங்களில் விறகு வாங்குவதில் எந்தவிதமான சிரமும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே அப்படிப்பட்ட பிரச்னைகள் எழவில்லை.

**திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரிசி, பருப்பு, எண்ணெய் முதலியவற்றின் அளவு என்ன என்பதைப் பற்றிய விவரங்களைச் சொன்னார்கள். ஆனால் சமைக்கப்பட்டதற்குப் பிறகு, உணவு வழங்கப்படுகிற போது சமைக்கப்பட்ட உணவு இவ்வளவு அளவு, எடை இருக்கவேண்டுமென்று ஏதாவது குறிப்பு இருக்கிறதா? அந்த அளவோடு, சுவையும் தரமும் இருக்கவேண்டும். நம்முடைய வீடுகளில் மஞ்சள் பொடியை உபயோகப்படுத்துகிறார்கள். ஆனால் அரசினுடைய குறிப்பின்படி மஞ்சள்பொடி உபயோகிக்கக் கூடாது என்று இருப்பதாகத் தெரிகிறது. அதற்கு என்ன காரணம் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் இப்படி உபயோகிக்கக் கூடாது என்று எதையும் சொல்லவில்லை. மஞ்





சளையும், உப்பையும் குறைவாக உபயோகப்படுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது உடல் நலத்திற்காக சொல்லப்பட்டிருக்கிற ஒன்று. ஆகவே பயன்படுத்துவதில் எந்தக் கட்டுப்பாடும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**களிமங்கலத்தில் கால்நடை மருந்தகம் அமைக்கும் திட்டம்.**

507 —(*வினா எண். 19875)—**திரு ஏ. பாலுச்சாமி :** மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை கிழக்கு ஒன்றியத்தில் உள்ள களிமங்கலத்தில் கால்நடை மருந்தகம் அமைக்கும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

**திரு. ஏ. பாலுச்சாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தப் பகுதி அதிகமான விவசாயிகள் இருக்கிற ஒரு பகுதியாக இருக்கிறது. அங்கே அதிகமான கால்நடைகள் இருப்பதால் கால்நடை மருந்தகம் அமைக்க அமைச்சர் அவர்கள் ஆலோசிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுரை கிழக்கு ஒன்றியத்திலுள்ள களிமங்கலத்தில் ஒரு செயற்கை முறை இனவிருத்தி நிலையம் இயங்கி வருவதாலும், களிமங்கலத்திற்கு அருகில் உள்ள வரிச்சூர், ஒத்தக்கடை முதலிய இடங்களில் கால்நடை மருந்தகங்கள் இயங்கி வருவதாலும் களிமங்கலத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்திய கூறுகள் இல்லை. களிமங்கலத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள கால்நடைகளின் மொத்த எண்ணிக்கை 4,450 தான். ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டுமென்றால் சுமார் 20 ஆயிரம் கால்நடைகள் அதைச் சுற்றியுள்ள பகுதியிலே இருக்கவேண்டும். அப்போதுதான் கால்நடை மருந்தகத்தை அங்கே அமைக்கமுடியும். இந்தக் களிமங்கலத்தைச் சுற்றி இருக்கிற கிராமங்களில் 4,450 கால்நடைகள்தான் இருக்கின்றன. ஆகவே இங்கே அதை அமைப்பதற்கான உத்தேசம் இப்போது இல்லை.

[1984 மார்ச் 29

(முற்பகல் 9-50)

**எல். எண்டத்தூர் கிராமத்தில் கட்டப்படும் கால்நடை மருத்துவ மனைக் கட்டிடம்.**

508 – (*வினா எண் 20489) —**திரு. சி. கணேசன் :** மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அச்சிறுபாக்கம் தொகுதி எல். எண்டத்தூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனைக் கட்டிடம் முடிவுபெறாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** அச்சிறுபாக்கம் தொகுதி எல். எண்டத்தூர் கிராமத்தில் கால்நடை மருத்துவ மனை கட்டிடம் முடிவு பெறாமல் இருப்பதை அரசு அறியும்.

எல். எண்டத்தூர் கால்நடை மருத்துவமனைக் கட்டிட வேலைகள், அச்சிறுபாக்கம் ஊராட்சி ஒன்றிய ஆணையரால் கட்டிட ஒப்பந்தக்காரர் மூலம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சரியான ஒப்பந்தக்காரர் அமையாததாலும், பழைய விகிதத்திற்கே (Rate) செய்ய வேண்டியிருப்பதாலும் காலதாமதப்பட்டு வந்தது எனவும் தற்போது மேற்படி வேலையை துரிதமாக முடிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அச்சிறுபாக்கம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் தெரிவித்துள்ளார்.

**திரு. சி. கணேசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் எல். எண்டத்தூர் கால்நடை மருத்துவ மனை கட்டுவது காலதாமதம் ஆகிறது என்று சொன்னார்கள். ஆண்டுக்கணக்கில் அந்தப் பணி முடிவுறாமல் இருக்கிறது. அதற்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதோடு மட்டுமல்லாமல், கால்நடைகளின் சுகாதாரத்தைக் கருதி அந்த மருத்துவமனை அத்தியாவசியமானது என்று கருதி அது ஆரம்பிக்கப்பட்டதால், அதை உடனடியாகக் கட்டி முடிக்க வேண்டும் என்று அவசர உத்தரவு பிறப்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அது கட்டி முடிக்கப்படாமல் இருப்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. அச்சிறுபாக்கம் தொகுதி எல். எண்டத்தூர் கிராமத்தில் கால்நடை மருத்துவ மனைக் கட்டிடம் கட்டுவதற்காக சர்வே எண். 44/2-ல் 2.86 ஏக்கா நிலம் ஒதுக்கப்பட்டு, 1973-74-ல் அதற்காக நிதி ஒதுக்கப்



1984 மார்ச் 29]

பட்டது. அந்தப் பணியும் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் எல். எண்டத்தூரில் உள்ள உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்த காரணத்தால், அந்தக் கட்டிட வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டது. பின்னர் அரசு உத்தரவின் பேரில் 1 ஏக்கர் நிலம் எல். எண்டத்தூர் கால்நடை மருத்துவ மனைக்காக ஒதுக்கக்கப்பட்டது. கட்டிடம் கட்டுவதற்காக அடித்தளப் பணிகள் முடிக்கப்பட்டது. திரும்பவும் எல். எண்டத்தூர் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் எதிர்ப்பு தெரிவித்த காரணத்தால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதற்காக தேவையான நடவடிக்கை எடுத்து, மறுபடியும் அந்த மருத்துவ மனைக்காக 25 சென்ட் நிலம் ஒதுக்கப்பட்டது. மருத்துவ மனை கட்டுவதற்கு 25 சென்ட் நிலம் போதுமானதாக இல்லை. அதற்காக ஒரு ஏக்கர் நிலம் கண்டிப்பாக வேண்டும். இதன் காரணமாகத்தான் அங்கே கட்டிட வேலைகள் கட்டப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டன.

மேலும், பல வேலைகள அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. கதவுகள், ஜன்னல்கள், பொருத்துவது போன்ற வேலைகள் நடைபெறவில்லை. அறுவை சிகிச்சைக் கூடம், சுவருக்கு சிமெண்ட் பூசும் வேலை, மற்றும் பல வேலைகள் நடைபெறாமல் இருக்கிறது. நிர்வாக காரணங்களாலும் வேலைகள் நடைபெறாமல் இருக்கின்றன. ஒப்பந்தக்காரர்களும் வேலையை முடிக்காமல் நிறுத்தி வைத்திருக்கின்றனர். அந்த வேலை துரிதமாக செய்ய வேண்டும் என்றும், அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் ஒப்பந்தக்காரர்களிடம் மறுபடியும் தெரிவித்துள்ளதாக, அந்த ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள்.

**மேலூரில் இயங்கி வரும் கால்நடை மருந்தகத்தை மருத்துவ மனையாக்கும் திட்டம்.**

509 —(*வினா எண். 21455) **திரு க. வெ. விராணம்பலம் :** மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி, மேலூரில் தற்போது இயங்கிவரும் கால்நடை மருந்தகத்தைக் கால்நடை மருத்துவ மனையாக்க (Hospital) அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும் ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** (அ) மற்றும் (ஆ) மேலூருக்கு அருகாமையில் தல்லாகுளம், பள்ளப்பட்டி மற்றும் திலக்கோட்டை ஆகிய இடங்களில் கால்நடை மருத்துவ மனைகள்

இயங்கி வருவதால், மேலூர் சட்டமன்றத் தொகுதி மேலூரில் தற்போது இயங்கிவரும் கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவ மனையாக தரம் உயர்த்தும் கருத்துரு அரசின் ஆய்வில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 9-50)

## 2. தகவல் கோரல்.*

### அ. பேரவையின் முன் வைக்கப்பெற்ற நஞ்சப்பன் கமிஷன் அறிக்கை.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, சேலம் கிச்சிப்பாளையம் லாக்-அப் மரணம் சம்பந்தமாக என்கொயுரி ரிப்போர்ட் இன்றைக்கு அவை முன் வைக்கப்பட்டு இருக்கிறது. செப்டம்பர் 30-ஆம் தேதியே அந்த அறிக்கை அரசுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதைப் பரிசீலித்து அரசு ஒரு ஜி. ஓ. வை 18 பிப்ரவரி 1984-ல் போட்டு இருக்கிறது. அதற்குப் பிறகு இந்த அவையில் வைப்பதற்கு 1½ மாதகாலம் தாமதமாகியிருக்கிறது. அறிக்கை கிடைத்த 6 மாத காலத்திற்குள் அந்த அறிக்கை மீதான ஆணையை அரசு வெளியிடவேண்டும் என்ற அடிப்படையில் பிப்ரவரியில் அரசு ஆணையிட்ட பின்பும் 1½ மாதம் கழித்து இந்த அவையில் வைப்பதற்கான காரணம் என்ன? இராமபிரசாத் ராவ் கமிஷன் அறிக்கை வெளிவந்த ஒரு சில மணி நேரத்திற்குள்ளேயே அரசு அதன் ரெகமென்டேஷனை அவையில் அறிவித்தது. அதேமாதிரி இதற்கும் செய்து இருக்கலாம் அல்லவா? ஏன் இப்படி காலதாமதமானது என்பதைக்குறித்து அரசு விளக்கம் அளிக்குமா? நாடு பூராவையும் ஒரு பரபரப்பில் ஆழ்த்திய ஒரு சம்பவம் பற்றிய அறிக்கையை இங்கே காலதாமதமாக வைக்கக் காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் கிளப்பியிருக்கிற பிரச்சனை பற்றிய முழு விவரமும் சொல்லுகிற நிலைமையில் நான் தற்போது இல்லை. அது பற்றி விசாரித்து என்ன நிலைமை என்று கண்டறிந்து, தக்க நேரத்தில் விளக்கம் தருகிறேன்.





திரு. ரா. உமாநாத் : சபாநாயகர் அவர்களே, I am not casting aspersion. What I am saying is the Government must be ready to face anything ரிப்போர்ட் வைத்திருக்கிறபோது the Leader of the House says that he is not in a position to reply. Then who is responsible to the House. It is not fair also.

சில சந்தர்ப்பங்களில் ஒரு அமைச்சருக்குப் பதிலாக வேறு அமைச்சர் பதில் சொல்கிறார். கேட்டால் கலெக்டிங் ரெஸ்பான்சிபிலிட்டி இருக்கிறது என்கிறார்கள். அதைப்போல, இப்போது ஏன் பதில் சொல்லக்கூடாது? நீங்கள் கொஞ்சம் ப்ரொடக்ஷன் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விசாரித்துச் சொல்கிறேன் என்று அவை முன்னவர் சொல்லியிருக்கிறாரே.

திரு. ரா. உமாநாத் : அரசாங்கம் ரிப்போர்ட் வைத்திருக்கிறது. கவர்ன்மென்ட் வைத்த ரிப்போர்ட்டுக்கே கவர்ன்மென்ட் பதில் சொல்ல முடியவில்லை என்றால் வேறு யார் சொல்வார்? If it is done by somebody else, then I can accept the explanation given by the 'Avai Munnavar,

வேறு யாராவது செய்திருந்தால் விசாரிக்கலாம். இது அரசாங்கம் செய்தது. அரசாங்கம் வைத்த ரிப்போர்ட்டுக்கு அரசாங்கம்தான் பதில் சொல்ல வேண்டும். அவை முன்னவர் சொல்ல முடியவில்லை என்றால் சீஃப்மினிஸ்டர் வந்து சொல்லட்டும். Let the Chief Minister come and explain the position. He is here.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவை முன்பு நாள்தோறும் ஏராளமான அறிக்கைகள் வைக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு ஐயப்பாட்டைக் கிளப்பியதன் காரணத்தால் நான் அதுபற்றி விசாரித்து விவரங்களை அறியவேண்டியிருக்கிறது என்று சொன்னேன். ரிப்போர்ட் எப்போது வந்தது, தாமதம் ஏற்பட்டிருக்கிறதா? ஏற்பட்டிருக்கிறது என்றால் அதற்கான காரணம் என்ன? அதிலே நியாயம் இருக்கிறதா இல்லையா என்ற விவரங்களை எல்லாம் அறிந்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. பதில் கிடைத்தால் உடனே சொல்லிவிடலாம். அதனால்தான் விசாரித்து, சொல்கிறேன் என்று குறிப்பிட்டேன்.

திரு. ரா. உமாநாத்: பதில் கிடைத்தால் என்று சொல்வது சரியல்ல. பதில் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பதில் கிடைத்தால் என்று அல்ல். சரியான நிலைமை தெரியவேண்டும். எப்போது ரிப்போர்ட் வந்தது? எப்போது அச்சடிக்கப்பட்டது? தாமதம் ஆகியிருந்தால் அதற்கு என்ன காரணம்? சட்டப்படி இதிலே தவறு நடந்திருக்கிறதா என்பதை எல்லாம் முதலில் நான்

தெரிந்துக் கொள்ள வேண்டும். நான் ' எக்விப்டாக ' இருந்தால் தான் கேள்விகள் கேட்கும்போது மறுபடியும் நான் பதில் சொல்ல முடியும். ஆகையால் தான் இப்போது பதில் சொல்லக் கூடிய நிலைமையில் இல்லை என்று சொன்னேன்.

திரு. ரா. உமாநாத் : நீங்கள் ' எக்விப்டாக ' இருந்தால் தான் ரிப்போர்ட் வைக்கலாம். நீங்கள் தயாராக இல்லை என்றால் சீஃப்மினிஸ்டர் வந்து 'எக்ஸ்பிளைன் பண்ணட்டும். சபா நாயகர் அவர்களே, இந்த அவையை இப்படி ட்ரீட் பண்ணக் கூடாது ; நீங்கள்தான் அவைக்கு கஸ்டோடியன், அவை இந்த 31-ந் தேதியோடு கலையப்போகிறது. அதன் பிறகு எப்போது சொல்வார்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 31-ந்தேதியோடு கலைந்து விடவில்லை. 31-ந்தேதி ஒத்திவைத்து, மீண்டும் 9-ந்தேதி கூடுகிறது. ஏறத்தாழ மே 15-ந்தேதி வரையில் அவை நடக்க இருக்கிறது. உங்களுக்குப் பதில் கிடைக்கும்.

திரு. ரா. உமாநாத் : நான் ஒரு நியாயமான கேள்வியை எழுப்பியிருக்கிறேன். ஏற்கெனவே டிலே ஆகியிருக்கிறது. நம்முடைய சீஃப் மினிஸ்டர் இங்கே இருக்கிறார். அவர் விளக்கம் சொல்லட்டும். இந்த மாதம் 31-ந் தேதிக்குள்ளாவது பதில் அளிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆறு மாதத்திற்குள் ரிப்போர்ட் வைக்க வேண்டுமென்று நினைக்கிறேன். அதை சட்டப்படி செய்திருக்கிறார்கள் என்றும் கருதுகிறேன். இருந்தாலும் விளக்கத்தைக் கேட்டு, அவைக்குச் சொல்லச்சொல்கிறேன்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. ப. நெடுமாறன் : தலைவரவர்களே, இந்த அவையிலுள்ள அனைத்துக் கட்சி உறுப்பினர்களும், அவைக்கு வெளியே இருக்கிற தமிழக மக்கள் அத்தனை பேர்களும் அதிர்ச்சியடைகின்ற வகையில் இலங்கையிலிருந்து செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றி பலர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். மற்ற உறுப்பினர்களுக்கு இருக்கிற உரிமையை நீங்கள் பறிக்கக்கூடாது. நாளை மறுநாள் அந்த ஒத்திவைப்புத்தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது அப்போது உங்களுடைய கருத்துக்களைச் சொல்லலாம்.





திரு. கு. பா. பழனியப்பன்: தலைவர் அவர்களே, பெரும்பாலான உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். செங்கற்பட்டு மாவட்டத்தில் பரனூரில் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள். ........ (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஒவ்வொன்றாகத்தான் எடுத்துக்கொள்ளமுடியும். நீங்கள் முன்னிலைப் படுத்திக்கொண்டு, உங்களைப் பற்றிச் சொல்வது சரியல்ல. அவ்வாறு சொல்வதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. எல்லோரும் கொடுத்திருக்கும் பொழுது, நீங்கள் ' நான் தான் முக்கியம் ' என்று காட்டுவது சரியல்ல. இது எல்லோருடைய உரிமையையும் பாதிப்பதுபோல் ஆகும். இதை முன்மாதிரியாக செய்வது முறையல்ல.

(இ) விவசாயக் கல்லூரி மாணவர்கள் தொடர் உண்ணா விரதம் இருப்பது.

திரு. கு. ரமணி: கனம் சபாநாயகர் அவர்களே, நேற்றைய தினம்தான் விவசாயக் கல்லூரி மாணவர்கள் 2,000 பேர் உண்ணா விரதம் இருந்ததுபற்றிப் பேசினோம். ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்து அது பற்றி பேசினோம். அப்போது மாண்புமிகு அமைச்சரவர்கள் இதமான பதிலைச் சொன்னார்கள். அவர்களைக் கூப்பிட்டுப் பேசுவோம் என்று பதில் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு செய்தி மிகவும் மோசமாக வந்திருக்கிறது..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று அரை மணி நேரம் பேசியிருக்கிறீர்கள், கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கள்.

(முற்பகல் 10-00)

திரு. கு. ரமணி : இன்றைக்கு இரண்டு கல்லூரிகளும் மூடப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று எல்லாக் கட்சிக் காரர்களும் கேட்டார்கள். காங்கிரஸ் கட்சி கேட்டார்கள், திராவிட முன்னேற்றக் கழகக் கட்சி கேட்டார்கள். இப்படி எல்லோரும் கேட்டார்கள். (குறுக்கீடுகள்) அதைக் கேட்டுச் சொல்கிறேன்.

திரு. கு. ரமணி : நான் கட்சிகள் கேட்டதைச் சொல்லவில்லை. நேற்றைக்கு அமைச்சர் அவர்கள் சொன்னதை அமல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனவே விரைவில் பேச்சுவார்த்தை நடத்தி, சுமூகமான சூழ்நிலையை ஏற்படுத்துவார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கேட்டுச் சொல்கிறேன்

[1984 மார்ச் 29

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயக் கல்லூரி மாணவர்கள் தொடர்ந்து சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கக்கூடிய நிலைமைகள் பற்றி நேற்று இங்கே ஒத்திவைப்புத் தீர்மானத்தில் கூட, மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இருந்தாலும், தங்கள் கருத்துக்களை வலியுறுத்துகின்ற வகையில் மேற்கொண்டு உண்ணாவிரதம் இருக்கப்போவதாக சொல்லியிருக்கிறார்கள். கோவையிலும், மதுரையிலும், என்னுடைய குழந்தையும் கூட சாகும் வரை மற்றவர்களோடு சேர்ந்து உண்ணாவிரதம் இருப்பதாகத் த வல் அந்த மாணவர்கள் எல்லோரும் இப்போது மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டிருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. எனவே சம்பந்தப்பட்ட மாணவர் பிரதிநிதிகளை அழைத்துப் பேசமுடியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேளாண்மைத் துறை அமைச்சரைக் கேட்டுக் சொல்கிறேன்.

(ஈ) ராமபிரசாத் ராவ் கமிஷன் அறிக்கை மீது விவாதம் குறித்து.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, நிகழ்ச்சி நிரலை 30 நாட்களுக்கு தாங்கள் கொடுத்திருக்கிறீர்கள், பிறகு தேவைப்பட்டால், எடுத்துக்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ராம்பிரசாத் ராவ் கமிஷன் அறிக்கையின் மீதான விவாதத்திற்கு ஒரு நாள் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லிவிட்டு............(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கட்சித் தலைவரிடம் சொல்லி, அலுவல் ஆய்வுக் குழுவில் இதைப்பற்றி பேசச் சொல்லுங்கள். அப்போது அதைப்பற்றிப் பேசி, முடிவு எடுக்கலாம்.

## 3. ஒழுங்குப் பிரச்சினை.

அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர் அவையில் இல்லாதபோது அவர் கொடுத்துள்ள கவன ஈர்ப்பை எடுத்துக்கொள்வது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது கவன ஈர்ப்புத் தீர்மானம். டாக்டர் சமரசம் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவையில் இல்லை. என்றாலும், அதற்கான பதிலை அமைச்சர் அவர்கள் சொல்லலாம்.



1984 மார்ச் 29]

Thiru R. UMANATH: சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். The member has to call the attention of the Minister.. .. ஏற்கனவே நீங்கள் இதுபற்றி ஒரு ரூலிங் கொடுத்திருக்கிறீர்கள்.

MR. SPEAKER: "Provided further that the Speaker *suo motu* may direct that the statements on the matter may be made if the importance of the subject so warrants" என்று போட்டிருக்கிறது. எனவே அதற்கான பதிலைக் கொடுக்கும்படி நான் அமைச்சரிடம் சொல்லவாம்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, நான் என்ன சொல்கிறேன் என்றால், அறிவிப்பு கொடுத்த உறுப்பினர் வராதபோது, பிரச்னை முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கருதி தாங்களே அதற்கான பதிலை அளிக்கும்படி அமைச்சருக்குச் சொல்கிறேன் என்றால், நாளைக்கு இதே மாதிரி நிலைமை இந்த பக்கத்தில் வந்தால், நீங்கள் அனுமதிக்க வேண்டும்.

If you allow now, you will have to allow from this side also. That is my point.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 54-வது விதியிலே என்ன சொல்லியிருக்கிறது என்றால், "Provided that if the member who has given notice is unavoidably absent, any other member with the permission of the Speaker may call the attention of the Minister on his behalf" என்று இருக்கிறது. அந்த வகையில், திரு. மாணிக்கம் அவர்கள் படித்ததாக நினைத்துக் கொண்டு வேண்டுமானாலும், அமைச்சர் பதில் சொல்லலாம். (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சமரசத்திற்குப் பதிலாக, உறுப்பினர் மாணிக்கம் அவர்கள் படித்ததற்குப் பின்னால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லலாம்.

திரு எம். எஸ். மாணிக்கம் : தலைவர் அவர்களே, "தர்மபுரி மாவட்டம் காவேரிப்பட்டினம் பகுதியில் பாசனக் கால்வாயில் கழிவு நீர் கலப்பதால், மக்கள் படும் இன்னல் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவர அறிக்கை அவை முன்னால் வைக்கப்படவில்லை (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவை முன் வைக்கப்படாத நிலை இருக்குமானால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம்மிடம் உள்ள அறிக்கையை முழுவதும் படித்துவிடலாம். (குறுக்கீடு).

திரு. ரா உமாநாத்: பிரியர் பெர்மிஷன் என்று சொல்லி இருந்தால், பிரச்சினை வந்திருக்காது. இப்போது நிலைமை என்ன என்றால், Paper is not laid on the table of the House. அவையினுடைய மரியாதையைக் காப்பாற்றுவதற்கு, அவையில் அறிக்கை வைக்கப் பெறாததால், இதை ஒத்திவைத்தால்தான் நல்லது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறிக்கை சிறியதாக இருந்தால் அமைச்சர் அவர்கள் படித்துவிடலாம். (குறுக்கீடு).

(முற்பகல் 10-10)

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, லோக் சபாவிலே உங்களுக்குத் தெரியும். கால் அட்டென்ஷனுக்கான ஸ்டேட்மெண்ட்டை ½ மணி முன்னதாக ஹவுசிலே வைக்க வேண்டும் என்று இருக்கிறது. நம்முடைய அவையிலே பிராக்டீஸிலே இருப்பது என்னவென்றால், சபை கூடுவதற்கு முன்னாலேயே, நாங்கள் இங்கே வரும்போதே அந்த அறிக்கை ரெடியாக இருக்கும். நாங்கள் அவை ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே அதை படித்து விடுவோம். ஆகவே, இது மாதிரி ஒரு பிராக்டீஸ் நல்லதல்ல......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நமது விதிமுறைகளில் அவ்வாறு இல்லை. அறிக்கை ஒரு பக்கத்திற்கு மேல் இருந்தால் தான் அவையில் வைப்பது வழக்கம். அதற்கு மேல் போகவில்லையென்றால், படிப்பதுதான் வழக்கம். அவையில் வைப்பது இல்லை. ஆயினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை சனிக்கிழமையன்று எடுத்துக் கொள்ளலாம்.

4. அரசினர் சட்டமுன்வடிவு.

கடன் நிவாரண (திருத்த) சட்டமுன் வடிவு 1984.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

5. வரவு-செலவுத் திட்டம், 1984-85 வாக்கெடுப்பு.

[அ] கோரிக்கை எண் 15-காவல்துறை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 15 காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 86,35,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, தற்போதுள்ள சென்னை காவல், தொலைபேசி இணைப்பகம் எண். 83011 ஏற்படுத்தியது பழமையாதலால் சில சமயங்களில் சரிவர இயங்காததால் அதனை புதிய அமைப்பாக மாற்றியும், ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் தனி நம்பர் உள்ள தொலைபேசி அமைக்க நடவடிக்கை எடுக்காதது'' என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 86,35,48;000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, காவல் நிலையலாக்கப்பில் மரணங்கள் சம்பவிப்பதைத் தடுக்காமலிருப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 86,35,48,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. பொ. உத்திராபதி: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டம், எடையூர் சங்கந்தி காவல் துறையில் பணியாற்றக்கூடிய பெரும்பகுதிபேர் சாதி பிரச்சினையை உருவாக்கி வருவதை தடுத்து நிறுத்த வேண்டும் என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 86,35,48,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

[ஆ] கோரிக்கை எண். 16–தீயணைப்புப் பணிகள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,48,99,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

திரு. கெ. சொக்கலிங்கம்: தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டம், திருப்போரூர் தொகுதியில் முறைமலை நகர். கோவளம் போன்ற பகுதிகளில் அரசு அறிவித்தும் தீயணைப்பு நிலையம் அமைக்கப்படாமல் இருப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,48,99,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. டி. மணி: தலைவர் அவர்களே, குழித்துறையிலுள்ள தீயணைப்பு நிலையத்திற்கு புதிய தீயணைப்பு வண்டி அளிக்கக் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,48,99,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவர் அவர்களே, பெருந்துறையில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,48,99,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

[இ] கோரிக்கை எண் 2 மாநில ஆய்த் தீர்வைத் துறை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 2 —மாநில ஆயத் தீர்வைத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,79,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''



திரு. எம். செல்லமுத்து : தலைவர் அவர்களே, மது மரத் தொழிலாளிகளுக்கு சட்டத்திலுள்ள அனைத்து உரிமைகளும் கிடைப்பதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டுவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வைத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,79,18,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, மருத்துவ மனை, பள்ளிக்கூடங்கள் அருகாமையில் மதுக் கடைகளை விற்பனை செய்வது கூடாது என விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத்தீர்வைத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,79,18,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தல்லவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகள் பற்றிய செயற்குறிப்புகள், கருத்துரைகள், குறிப்புரைகள் ஆகியவை **இங்கே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்கிற கருத்துக்களின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இறுதியில் விடை அளிப்பார்கள் என்பதைச் சொல்லி, இந்தக் குறிப்புரைகளையெல்லாம் இங்கே பேசப்பட்டதாக ஏற்று, அவைகளை அவைக்குறிப்பில் ஏற்றிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிற காவல்துறை மானியத்தின் மீதும் தீயணைப்புத் துறையின் மீதும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க நான் விழைகிறேன். காவல் துறையைப் பற்றிய அறிக்கைகளில் வருகிற ஒவ்வொரு ஆண்டிலும் காவல் துறையினுடைய கடமைப்பற்றியும், மேன்மைப்பற்றியும் பல்வேறு வகைகளிலே புகழப்பட்டு இருக்கிறது. குறிப்பாக தடம் மாறாது விழிப்புணர்வை எப்போதும் தன்னகத்தே காவல் துறை கொண்டிருக்க வேண்டும் என்று முன்னுரையோடு ஒவ்வொரு ஆண்டும் இந்த அறிக்கை இங்கே தரப்படுகிறது.

---

** 293—410 ம் பக்கங்களில் இணைப்பு I, II, III ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

[திரு. ஜே. எஸ். இராசு] [1984 மார்ச் 29

காவல் துறையைப்பற்றி இந்த மன்றத்திலே 1982 ஆம்
ஆண்டு பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலை
வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு கருத்தினைத் தெரிவித்
தார்கள். காவல் துறையிலே பல நல்லவர்கள் இருக்கலாம்.
தீயவர்களும் இருக்கலாம். அது மாறிவிடக்கூடாது. தீயவர்
களின் எண்ணிக்கை அதிகரித்தால் நாட்டுக்கு நல்லதல்ல,
சோற்றில் கல் இருந்தால் எடுத்துவிடலாம். ஆனால் கற்களுக்கு
மத்தியில் சோற்றைத் தேடும் நிலை ஏற்பட்டுவிடக் . கூடாது
என்று இந்த மன்றத்திலே தெரிவித்தார்கள்.

அதைப்போலவே டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வராக
இருந்த காலத்திலே, கடுமையான விமர்சனம் போலீஸ் துறை
யில் எதிர்க்கட்சியினால் செய்யப்பட்ட அந்தக் காலத்திலே
வேறு ஒரு கருத்தைச் சொன்னார்கள். நிலவிலே களங்கம்
இருக்கலாம், ஆனால் களங்கமே நிலவாக ஆகிவிடக்கூடாது
என்று தெரிவித்தார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பையேற்ற
அந்த 1967, 1968 ஆம் ஆண்டுகளிலே அந்தக் கருத்தைத்
தெரிவித்தார்கள். சமுதாயத்திலே நம்முடைய இயல்புகளிலே
பல போலீஸ் துறையில் இருப்பவர்களுக்கு படிந்திருக்கும்.
காரணம் நம்முடைய அண்ணன் தம்பிகள்தான் காவல் துறை
யிலே இருக்கிறார்கள். என்றாலும்கூட மற்றவர்களுக்கு எடுத்
துக்காட்டாக காவல் துறையினர் இருக்க வேண்டு
மென்பதை அறிவுரையாக காவல் துறைக்கு எடுத்துச்
சொன்னார்கள். சொல்லிவிட்டுச் சொன்னார்கள். காவல்
துறையினுடைய குறைகளைச் சொல்கிற நேரத்திலே
அவர்களுக்கு வசதிகளைப் பெருக்கித் தரவேண்டுமென்ற
கருத்தையும் சொல்லி அதற்குப் பிறகு பொறுப்பேற்ற
கலைஞர் அவர்களும் போலீஸ் துறையினுடைய குறைகளைத்
தீர்ப்பதற்காக கலைஞர் காலத்திலே ஒரு குழு அமைக்கப்பட்டு
அந்தக் குழுவினுடைய பரிந்துரைகள் மிக விரைவிலே பெரும்
பாலான பரிந்துரைகள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்
காலத்திலே நிறைவேற்றி வைக்கப்பட்டதையும் இந்த மன்றம்
அறியும்.

ஆகவே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போலீஸ்
துறையைப்பற்றி நாங்கள் பேசுகின்ற நேரத்திலே நாங்கள்
நல்ல விமர்சகர்களாக காவல்துறையைப்பற்றித் தெளிவான
கருத்துக்களை இந்த மன்றத்திற்குச் சொல்கிறோம். மற்றபடி
காவல் துறையில் இருக்கிற அனைத்துப் பேர்களையும்
நாங்கள் எதிரிகளாகக் கருதவில்லை என்ற கருத்தையும் நான்
தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல் துறையைப்பற்றிப் பேசுகின்றபோது நான் ஒரு
முக்கியமான செய்தியை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்,
தலைவர் அவர்களுடைய அனுமதியோடு. வேறு ஒன்று



1984 மார்ச் 29] [திரு. ஜே. எஸ். இராசு]

மில்லை. தமிழ் நாட்டிலே இருக்கிற அத்தனை கோடி மக்
களையும் காப்பாற்றுகிற பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்
கிறது. காவல் துறைக்கு இருக்கிறது. ஆனால் நம்முடைய
மாண்புமிகு அமைச்சர் திரு. கோவேந்தன் அவர்கள் திருச்சி
யிலே பேசிய போது ஒரு கருத்தைத் தெரிவித்தார் அதைப்
படித்தபோது நானே பதறிப்போய்விட்டேன். அவர் தெரிவித்த
கருத்து, என்னைக் கொலை செய்ய முயற்சி க்கிறார்கள்.
சொந்த ஊருக்குப் போனால் கூட நான் திரும்பி வருவேனா
என்ற சந்தேகம் எனக்கு வருகிறது. மாலை போட்டு மரியாதை
செய்கிறவர்களே கொலை செய்யவும் முயற்சிக்கிறார்கள்.
என்னை கொலை செய்கிற முயற்சி முதல்வர் எம். ஜி. ஆர்
அவர்களையே கேவலப்படுத்துவதாகும் என்று திருச்சியிலே
24—10—1983 அன்று பேசி இருப்பதைப் பார்த்து நாம் மக்க
ளுக்குப் பாதுகாப்புத் தருவதைவிட போலீஸ் துறையினர்
திரு. கோவேந்தன் போன்ற அமைச்சர்களுக்கு நல்ல பாது
காப்பைத் தர வேண்டுமென்று நான் ஆரம்பத்திலேயே கேட்டுக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-20)

போலீஸ் துறையினர் ஒரவஞ்சனையாக நடந்துக்கொள்ளக்
கூடாது என்பது இந்த அறிக்கையிலே இருக்கிறது. அந்த
நடைமுறை நீண்டகாலமாக இருந்துவருகிறது. அப்படி யாரா
வது தவறினால் அதைக் கண்டிக்கக்கூடிய பொறுப்பு அனை
வருக்கும் இருக்கிறது. அண்மையிலே ஒரு செய்தி. மதுரை
மாவட்டம் சின்னமனூர் காவல் நிலையத்தில் தங்கபாண்டியன்
என்பவரை காவல் துறையினர் இழுத்துச் சென்று அடித்தனர்.
அவர் எந்தக் குற்றமும் செய்ய வில்லை. சின்னமனூரிலே
அவர் பெண் கட்டியிருக்கிறார். மாமனார் வீட்டிற்கு பொங்கல்
விருந்துக்கு வந்திருக்கிறார். வந்த நேரத்திலே சின்னமனூரில்
உள்ள சிலர் ஒரு கால் அவர்கள் ஆளும் கட்சி உறுப்பினர்கள்
என்று எங்களுக்கு தகவல் தரப்பட்டிருக்கிறது. ஆளும் கட்சி
யைச் சார்ந்த சின்னமனூர் செயலாளர் தங்கபாண்டியனை
காவல்துறையில் சொல்லி அடியுங்கள் என்று சொல்லி அவ
ருடைய பேச்சை கேட்டுக் கொண்டு தங்கபாண்டியனை காவல்
துறையினர் அடித்து துன்புறுத்தி இருக்கிறார்கள். இதற்கு
என்ன காரணம் என்றால், தங்கபாண்டியனின் அப்பா தம்பி
துரை என்பவர் வேறு ஒரு ஊரில் தி.மு.க. செயலாளர். அவர்
சின்னமனூர் அ.இ.அ.தி.மு.க. செயலாளர் காண்டிராக்ட்
எடுத்து அதிலே தவறுகள் நடைபெற்றதை கூட்டங்களில்
பேசினார். ஆகவே தி.மு.க. செயலாளர் கூட்டங்களில்
அ.இ.அ.தி.மு.க. செயலாளரைப் பற்றி பேசியதற்காக
தி.மு.க. செயலாளரின் மகன் தங்கபாண்டியனை மாமனார்
வீட்டுக்கு போன இடத்திலே அவர் அடிக்கப்பட்டு இருக்கிறார்.
இதைப்பற்றி புகார் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த புகார்
எடுத்துக்கொள்ளப்படாத காரணத்தால். தங்கபாண்டியனும்
அவர் அப்பாவும் உத்தமபாளையம் டி.எஸ்.பி. இடம் புகார்

கொடுத்திருக்கிறார்கள். இது நடந்து 4, 5 மாதங்கள் அல்லது 6 மாதங்கள் ஆகியிருக்கின்றன. இன்று வரை எந்த நடவடிக்கையும் இல்லை. யாராவது தவறு செய்தால் சமுதாய நலன் கருதி அதை கூட்டத்தில் எடுத்துச் சொன்னால் எடுத்து சொன்னவருடைய மகனைக்கூட அடிக்கக் கூடிய அளவுக்கு இன்றைக்கு போலீஸ் துறை கீழே இறங்கி வந்திருக்கிறது என்று எனக்கு நிச்சயமாக தெரியவில்லை.

அடுத்து இன்னும் ஒன்று, 31—8—1983-ல் போலீஸ் துறையைப் பற்றி மிக உயர்வாக ஒரு காலத்தில் கருதப்பட்ட போலீஸ் துறையைப் பற்றி—இப்போது அல்ல—நீதி மன்றம் என்ன கருத்து தெரிவித்து இருக்கிறது என்பதை கவனிக்க வேண்டுகிறேன். 31—8—1983-ல் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது.

"Police indifference to Subordinate Courts" நீதி மன்றங்களுக்கு கூட போலீஸ்காரர்கள் ஒத்துழைப்பது இல்லை என்ற பொருளில் வருகிறது.

"...Noting that this was not the first occasion the Court has come across the indifferent attitude of the middle ranking Police Officers"—not the higher ranking officers—but the middle ranking officers—"to the proceedings in a Subordinate Court," His Lordship remarked, "Basking in the warmth of power hey seem to think that their appearance in Court is beneath their dignity...."

நீதி மன்றத்திற்கு வந்து நீதி மன்றத்தோடு ஒத்துழைப்பதற்கு கூட அது தங்களுடைய தகுதிக்கு குறைவானது என்று மிடில் ரேங்க் போலீஸ் ஆபீஸர்கள் கருதுகிறார்கள் என்று கடுமையான கண்டனத்தை தெரிவித்து இருக்கிறார்கள் His Lordship ஆக நீதி மன்றங்களுக்கு ஒத்துழைக்காத ஒரு நிலை போலீஸ் துறையில் எவ்வாறு ஏற்பட்டது என்பதை அரசு கவனித்து அதை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் மிக முக்கியமாக கவனிக்க வேண்டியது தவறு செய்பவர்களை நியாயமாக போலீஸ்காரர்கள் பிடித்தால்—போலீஸ்காரர்கள் தவறு செய்வதை கண்டுப்பிடிப்பது என்பது வேறு—அவர்களுடைய போக்கில் விட்டுவிட வேண்டுமே தவிர ஆளும் கட்சி, எதிர்க்கட்சி அதில் குறுக்கிட்டு அந்தப் பிரச்சினையை கெடுத்து விடக் கூடாது என்பது முக்கியமான விஷயம். ஆனால் அண்மையில் வந்த வேறு ஒரு செய்தியை நான் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெற்றச் செய்தி. எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் தான் வந்திருக்கிறது. கோபால் என்ற போலீஸ் அதிகாரி பொலிட்டிகல் காரணமாக மாற்றப்பட்டிருக்





கிறார். அதற்கு காரணம் வேறு ஒன்றும் இல்லை. திருநெல்வேலியில் இருக்கின்ற ஆளும் கட்சியைச் சார்ந்த மிக முக்கியமான பிரமுகர் சூதாட்டமோ, சீட்டாட்டமோ ஆடியதாக அதை கண்டுபிடித்து அது தவறு என்று கண்டித்த போலீஸ் அதிகாரியை அங்கே வைத்து இருக்கக்கூடாது என்று அந்த வட்டாரத்தில் இருக்கிற பெரும் புள்ளி முயற்சித்ததாகவும் அதன் காரணமாகத்தான் மிக உயர்ந்த போலீஸ் அதிகாரி வேறு இடத்திற்கு அவரும் வேறு சிலரும் மாற்றப்பட்டு இருக்கிறார்கள் என்று சொல்லி அதற்கு எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் தலைப்பு தந்திருக்கிறார்கள்.

"Political touts make it difficult for officials". எந்த டிரான்ஸ்பர் போட்டாலும் எந்த கேஸ் எடுத்தாலும் எந்த கொலையை கண்டுபிடிக்கப் போனாலும் எந்த ஒரு நியாயமான காரியங்களை செய்யப்போனாலும், சமுதாயத்திற்காக தங்களிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிற காரியங்களை காவல்துறை செய்ய ஆரம்பித்தாலோ இதற்கு எந்த அதிகாரியின் குறுக்கீடு வருமோ? எந்த அரசியல் தலைவர் குறுக்கீடு வருமோ? எந்த ஆளும்கட்சி பிரமுகர் குறுக்கீடு வருமோ? என்று அச்சப்பட்டுக்கொண்டு திருநெல்வேலி மாவட்டம் முழுவதும் போலீஸ் துறை இருப்பதாக இன்றைக்கு தகவல் தருகிறார்கள். இதை முழுவதையும் நாம் நம்பாமல் இருக்க முடியாது. இதிலே கொஞ்சம் வித்தியாசம் கூட இருக்கலாம். அது எனக்குத் தெரியும். ஆனால் இதை முழுக்க ஒதுக்கிவிட்டு அவர் அரசாங்கத்தை நடத்த முடியாது. விமர்சிப்பதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும். நாங்கள் இதை வைத்துக் கொண்டு தான் பேச முடியும். அதோடு மட்டும் அல்ல, எந்த ஒரு நிர்வாகமாக இருந்தாலும் நீதித் துறையை நாம் மதிக்க வேண்டும். வழக்கறிஞர்களை நாம மதிக்க வேண்டும். திருச்சியில் 8—7—1983-ல் இதுவும் இந்தியன் எக்ஸ்பிரசில் வந்தது தான்—பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணுக்காக வழக்காடிய வழக்கறிஞரை நீதிமன்ற வளாகத்திலேயே தாக்கிய கதை தமிழ்நாடு அறியும். என்னைக் கேட்டால் இந்தியாவே அறியும். எல்லா பத்திரிகையிலும் வந்திருக்கிறது. அதைப் பற்றி ரெவ்யூ எல்லாம் எழுதிவிட்டார்கள். வழக்கறிஞர்கள் எப்படிக் கோர்ட்டுக்குப் போக முடியும்? வழக்கறிஞர்களைத் தாக்குகிறீர்களே என்று நீதிபதியே சப்தம் போட்டு வழக்கறிஞரைக் காப்பாற்ற வேண்டிய ஒரு இழிநிலை, ஒரு கேவலம் தமிழ்நாட்டிலே உருவாவதற்குக் காரணம் என்ன என்பதை அரசாங்கம் சிந்திக்க வேண்டும். இத்தகைய போக்கு மக்களுக்கும், ஆட்சிக்கும், ஆளுங்கட்சிக்கும் நல்லதல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, பொதுவாகக் காவல்துறையிலே இருக்கின்ற சிலர்-கலைஞர் குறிப்பிட்டதைப்போல, சிலர்-இரவு நேரங்களிலே காவல் நிலையங்களிலே பெண்களை ஹெல்ட் அப் செய்திருக்கி

றார்கள். அப்படிச் செய்யக் கூடாது என்று இருக்கிறது. பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இதுபற்றி அடிக்கடி வலியுறுத்தி வருகிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன ; அவை தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. பழைய விஷயங்களைப்பற்றியெல்லாம் 1977 ஆம் ஆண்டிலேயிருந்து இன்று வரை சொல்ல ஆரம்பித்தால் ரொம்ப நேரம் ஆகும். எனவே, குறிப்பாகச் சொல்கிறேன்.

காரைக்குடி பாலாம்பாள் முதல் கிச்சிலிப்பாளையம் தெய்வமணி வரையில் எத்தனை இளம் பெண்கள், தாய்மார்கள், அனாதைகள் காவல் துறையினரால் கற்பழிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசாங்கத்தின் கணக்கின்படி. ஒருவேளை நீங்கள் கேட்கலாம், காங்கிரஸ் ஆட்சியில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறவில்லையா, திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறவில்லையா என்று. ஒன்றிரண்டு நிகழ்ச்சிகள் அப்படி நடந்திருக்கலாம். ஆனால் போலீஸ் துறையிலே அண்மைக் காலத்தில் ஏழெட்டு ஆண்டுக் காலத்தில் இத்தகைய ஒரு தடித்த உள்ளம், திமிரான போக்கு எப்படி உருவானது. அவர்கள் சிலராகக்கூட இருக்கலாம் ; அது வேறு விஷயம். ஆனால் அவர்கள்தான் காவலர்கள்.

They are the custodi ıns of our society நம்முடைய சமுதாயத்தைப் பாதுகாக்க வேண்டிய பாதுகாவலர்கள், அவர்களே துணிந்து போலீஸ் ஸ்டேஷனிலேயே இரவிலேயும், பகலிலேயும் கற்பழிக்கின்ற சம்பவங்கள் நடக்கின்றன என்றால் இதைப்பற்றியெல்லாம் அரசாங்கம் சிந்தித்திருக்கிறதா ? அந்தத் தடித்த உணர்வு அவர்களுக்கு எப்படி வந்தது ?

அரசாங்கம் இருக்கிறது, சட்டமன்றம் இருக்கிறது, சட்டசபை உறுப்பினர்கள் இருக்கிறார்கள், அமைச்சரவை இருக்கிறது, முதல்வர் இருக்கிறார். தாய்க்குலத்தைக் காப்பாற்றவே அவதாரம் எடுத்து வந்தவர் நம்முடைய முதல்வர். அதைப்போலவே போலீஸ் துறையிலே உயர்ந்த அதிகாரிகள் இருக்கிறார்கள். இவர்களெல்லாம் கேட்பார்களே என்ற அச்சவுணர்வு எப்படி போலீஸ் துறையிலே உள்ளவர்களுக்கு இல்லாமற் போய்விட்டது என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒத்தி வைப்புத் தீர்மானங்களைக் கொண்டு வந்து விளக்கம் கேட்டால் நம்முடைய நாவலர் அவர்கள் ஒரு அறிக்கையைக் கொடுப்பார்கள். எங்களுடைய கலைஞர் அவர்களும் முதல்வராக இருந்தவர்கள்தான். எனவே, அறிக்கை கொடுப்பது என்பது தெரிந்துதான் ; இப்பொழுதும் தெரியும். ஹார்ட் ஃபெயிலியரில் போய்விட்டார் என்று சொல்கிறார்கள். போலீஸ் லாக்கப்பில்தான் ஹார்ட் ஃபெயிலியர் வரும் என்பது அல்ல.



ஒருகாலத்தில் எனக்கும் ஹார்ட் ஃபெயிலியர் வரலாம். அறிக்கையிலே, 'லாக்கப்பிலே ஹார்ட் ஃபெயிலியர் என்று சொல்லுகின்ற நம்முடைய நாவலர் அவர்களுக்கும் வரலாம். உலகத்தில் எல்லோருக்கும் ஹார்ட் ஃபெயிலியர் வரலாம். ஆனால் அது வேறு விஷயம். எனவே, இவ்வளவு மோசமான காரியங்கள் நடந்திருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் போலீஸ் துறையிலே இருப்பவர்கள் கவனிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் இங்கே சொல்ல வருவது என்னவென்றால், அரசாங்கத்திடம் பயமிருந்தால், முதலமைச்சரிடம் பயமிருந்தால், போலீஸ் துறையிலே உள்ள மேல் அதிகாரிகளிடம் பயம் இருந்தால் இப்படிப்பட்ட உணர்வு தோன்றுமா ? பெரிய அதிகாரிகள் கேட்பார்களே, நாம் தண்டிக்கப்படுவோமே என்ற அச்ச உணர்வு ஏன் இல்லாமற் போய்விட்டது என்பதைப் பற்றி போலீஸ் துறையும் சிந்திக்க வேண்டும் ; அரசாங்கமும் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒவ்வொன்றாகச் சொன்னால் வேதனையாக இருக்கும். தஞ்சாவூர் பக்கத்திலே, பேராவூரணி பஸ் ஸ்டாண்டிலே 1981 ஆம் ஆண்டு ஒரு பெண் பஸ் கிடைக்காமல் படுத்திருந்திருக்கிறார். Her name is Malliga அந்த ஊர் சப்-இன்ஸ்பெக்டர் சென்று, உன் மீது சந்தேகமாக இருக்கிறது, ஒரு கையெழுத்து போட வா என்று சொல்லி மல்லிகா என்ற அந்தப் பெண்ணை அழைத்துச் சென்று கற்பழித்திருக்கிறார். அந்த சப்-இன்ஸ்பெக்டரின் பெயர் பாரி வள்ளல். அவர் பெயருக்குத் தகுந்தாற்போல அவர் வாரி வழங்கி விட்டார் மல்லிகாவுக்கு. சப்தம் வெளியே வருகிறது ; கூப்பாடு போடப்படுகிறது. ஒன்றும் பயனில்லை.

1978-79 ஆம் ஆண்டில் காரைக்குடியிலே பாலாம்பாள் என்ற பெண் கற்பழிக்கப்பட்டிருக்கிறார். கற்பழிக்கப்பட்டது சம்பந்தமாகச் சாட்சி சொல்ல வேண்டியவர் காரைக்குடி குளத்திலே பிணமாக மிதக்கிறார். போலீஸ்காரர் சங்கரனுடைய ஆடைகள் பரிசோதனை செய்யப்பட்டன. அடையாளம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். மெடிகல் எக்சாமினேஷன் செய்தார்கள். ஆனால் அதை ப்ராப்பர் டைமிலே பண்ணாததாலே, Th re was no videnc . எனவே, அங்கேயும் எவிடென்ஸ் இல்லை. போலீஸ்காரரின் டிரஸ்ஸிலேயும் எவிடென்ஸ் இல்லை ; சாட்சி சொல்ல வேண்டிய பாதிக்கப்பட்ட பாலாம்பாள் பரிதாபகரமான முறையிலே குளத்திலே பிணமாக மிதக்கிறார். முடிவு என்ன ? தவறு செய்தார் என்று கருதப்பட்ட போலீஸ்காரர் சங்கரன் ஜாம் ஜாம் என்று இன்றைக்கு வேலை பார்க்கிறார்.

எல்லோரும் சங்கரன்கள் அல்ல. எல்லாக் காவலர்களும் தவறாக நடப்பார்கள் என்று சொல்லவில்லை. நம்மிலேயும் மனித மிருகங்கள் இல்லையா? அதைப்போல அங்கேயும் இருக்கக்கூடும். அதை நான் மறுக்கவில்லை. ஆனால் போலீஸ் துறையிலே இருப்பவர்களுக்கு இப்படிப்பட்ட எண்ணம் வளரக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-30).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 20 நிமிடங்கள் ஆகி விட்டன. எனவே சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ஜே. எஸ். இராசு : தலைவர் அவர்களே, ஜனநாயகத்தில் இன்று ஒரு கட்சி ஆளலாம் ; நாளை ஒரு கட்சி ஆட்சிக்கு வரலாம். ஆகவே போலீஸ் டிப்பார்ட்மென்டைக் கையிலே வைத்திருப்பவர்கள் கட்சி வேறுபாடு இல்லாமல் பொதுக்கூட்டங்களுக்கு அனுமதிப்பது, ஊர்வலங்களை அனுமதிப்பது என்ற வகையிலே நடந்துகொள்ள வேண்டும்.

மதுரையிலே இருந்து ஒரு தகவல் வந்திருக்கின்றது. அம்பேத்கார் விழா நடத்துவதற்காகப் பெர்மிஷன் வாங்கி அவர்கள் ஊர்வலம் வந்திருக்கிறார்கள். அங்கே அவர்கள் லாரிகளிலே வந்திருக்கிறார்கள். அவ்வாறு லாரிகளிலே வந்தவர்கள் எல்லாம் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால் லாரிகளில் ஆட்கள் வருவது என்பது எத்தனையோ காரியங்களுக்காக நடைபெறுகின்றது. எல்லா கட்சிகளையும் சேர்ந்தவர்கள் வருகின்ற நிலைமைகள் இருக்கின்றன. உதாரணமாக மாண்புமிகு அமைச்சர் பண்ருட்டியார் அவர்கள் வெளிநாட்டிலிருந்து வந்தபோது கூட லாரிகளிலே ஆட்கள் வந்திருக்கிறார்கள். அவரை வரவேற்பதற்காக அவ்வாறு வந்திருக்கிறார்கள். அதைப்போல தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுடைய தலைவனாகக் கருதிக் கொண்டிருக்கின்ற அம்பேத்கார் அவர்களுக்காக விழா நடக்கின்றபோது அவர்களைத் தடுக்கக்கூடாது.

திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் ஒரு கூட்டத்திற்காக அனுமதி கேட்டபோது அங்கே நிறையக் கூட்டம் கூடும், ஆகவே அந்த இடம் வேண்டாம் என்று சொல்லி அனுமதி மறுத்திருக்கிறார்கள். ஆனால் அதற்கு முன்பு அங்கே ஏ.டி.எம். கே. கூட்டம் நடந்திருக்கின்றது. வேறு பலர் கூட்டங்களை நடத்தி இருக்கிறார்கள். அப்போதே தடுத்திருக்கலாமே. அப்போதெல்லாம் தடுக்காமல் இப்போது ஏன் தடுக்கிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது சொன்னார்கள், எனக்கு அறிவுத் தெளிவு உள்ள வரை பொய் வழக்கு நிச்சயமாகப் போட மாட்டேன் என்று. நான் முழுக்க நம்புகிறேன் * * *

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய வழக்கு, வழக்கு மன்றத்திலே இருக்கின்றது. ஆகவே இதைப்பற்றி இங்கே பேசுவது அல்லது விவாதிப்பது நிச்சயமாகச் சரியில்லை. எனவே இதை அவைக்குறிப்பிலே இருந்து எடுத்துவிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வழக்கு மன்றத்திலே இருப்பது பற்றிப் பேசக் கூடாது என்ற காரணத்தால் அது அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகின்றது.

திரு. ஜே. எஸ். இராசு : தலைவர் அவர்களே, பொதுவாக ஆட்சியிலே இருப்பவர்கள் அமைதியை உருவாக்கத்தக்க அளவுக்கு தங்களுடைய உரைகளை பொதுக் கூட்டங்களிலே நிகழ்த்த வேண்டும். அமைச்சராக இருந்தாலும், யாராக இருந்தாலும் அவ்வாறு அமைதியை உருவாக்கக்கூடிய அளவிலே பேச வேண்டும். ஆனால் நம்முடைய நாவலர் அவர்கள் போராட்டம் செய்தால் கைது செய்வோம் என்று போராட்டத்துக்கு முன்பாகவே அறிவிக்கிறார்கள். அதே போன்று நமது முதலமைச்சர் அவர்களும் என்.ஜி. ஓ. போராட்டம் நடத்தினால் நானே பதவியைத் துறந்து விட்டு மக்களைச் சந்திப்பேன் என்று சொன்னார். போராடுவது என்பது இயற்கை. அது ஜனநாயக உரிமை............

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் இப்போதும் சொல்கிறேன், சட்டத்தைக் கையிலே வைத்துக் கொண்டு அதிகாரத்தை பயன்படுத்துவதற்கு முன்னால் மக்களைச் சந்திப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். அந்த முறையைக் கடைப்பிடிப்பேன் என்று அண்ணா அவர்கள் சொன்னது போல் நான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. எல். இளையபெருமாள்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அரசு மூலம் கொண்டு வரப்பட்ட காவல் துறையின் மானியத்தின் மீது நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தமிழகத்தின் போலீஸ் இந்தியாவிலேயே எப்பொழுதும் மூதன்மையான பெயர் பெற்று நல்லெண்ணத்தோடு காரியங்களை, கடமைகளைச் செய்கிறவர்கள் என்ற சிறந்த பெயரைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால், கடந்த காலங்களிலே எப்படியோ கீழ் நிலையிலே உள்ள சிப்பந்திகள் சரியாகக் கடமைகளைச் செய்யத் தவறுவதால் தமக்கு இருக்கிற நல்ல பெயரைக் காவல் துறையினர் இழந்து விடாமல் கண்காணித்துக் கொள்ள வேண்டுமென்று இந்தச் சமயத்திலே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

[திரு. எல். இளையபெருமாள்] [1984 மார்ச் 29

நான் 3 விஷயங்களை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்பு
கிறேன். முதலில் போலீஸ் டிபார்ட்மென்டில் வேலை செய்
கின்ற போலீஸ்காரர்களுக்குப் போதிய வாய்ப்பு வசதி கிடைக்க
வில்லை. நாம் கொடுத்திருக்கிறோம். இந்தக் குறிப்பிலே,
3,000 வீடுகள் கட்டினோம், 5,000 வீடுகள் கட்டினோம் என்று
சொல்லப்பட்டிருக்கிறது. நகரப் பகுதியாக இருந்தாலும்,
கிராமப் பகுதியாக இருந்தாலும், சமூக விரோதிகள் என்று
சொல்கின்றவர்கள் அல்லது, கிராமங்களில் இன்னும் காட்டு தர்
பார் ஆட்சி செய்பவர்களுக்குத்தான் வீடுகள் அதிகமாக இருக்
கின்றன். கிராமங்களிலே, அவர்களுடைய வீடுகளிலே நம்
முடைய போலீஸ்காரர்கள் குடியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சென்னை, மதுரை, திருச்சி பற்றி சொல்லவில்லை. ஒவ்
வொரு மாவட்டத்திலும் கிராமப் பகுதிகளிலே காட்டு தர்பார்
செய்கின்றவர்களுடைய வீடுகளிலே நம்முடைய போலீஸ்காரர்
கள் குடியிருக்கிறார்கள். அவர்களும் மனிதர்கள் ; அவர்
களுக்கும் மனைவி, குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு
இந்தக் காட்டு தர்பார் செய்கின்றவர்களைப் பற்றி ரிப்போர்ட்
வருகின்றபொழுது, தங்களுடைய கடமையைச் செய்ய முடி
யாமல் தவிக்கிறார்கள். தாங்கள் அந்த வீட்டிலே குடியிருப்ப
தால், தங்களுடைய குழந்தைகள் அங்கே தனியாக இருப்பதால்,
இந்தத் தவறுகளை யார் செய்தார்களோ, அவர்களுடைய
வீட்டிலே தாங்கள் குடியிருப்பதால், நீதியை நிலை நாட்டுவதற்கு
நம்முடைய பணியாளர்களுக்குச் சட்ட ரீதியாகக் குற்றம் என்று
தெரிந்தாலும் கூட, தங்களுடைய குடும்ப நிலையை நினைத்து,
அவர்களுடைய கடமையைச் செய்ய முடியாமல் தவறி இருக்
கிறார்கள். ஆகவே, அரசாங்கம் இதில் செய்ய வேண்டியது,
நகர்ப் பகுதியைத் தவிர, கிராமப் பகுதியிலே வாழ்கின்ற சிப்
பந்திகளுக்கு அரசாங்கம் ஸ்பெஷல் ஸ்கீமாவது கொண்டு வந்து,
கூடுதலாகத் தொகையை ஒதுக்கி, 10 ஆண்டுகளுக்குள் அல்லது
5 ஆண்டுகளுக்குள் வீடளிக்கும் நிலைமையை உருவாக்கினா
லொழிய போலீஸ்காரர்களிடம், கீழ்த்தர சிப்பந்திகளிடம் நீங்கள்
நியாயத்தை எதிர்பார்க்க முடியாது.

இரண்டாவது, அரசியல்வாதிகளாக இருப்பவர்களும், ஆளுங்
கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும், அர
சியல்வாதிகள் அத்து மீறி போலீஸ்காரர்களை மாற்றுவதோ
அல்லது போலீஸ்காரர்களை மிரட்டுவதோ அல்லது எஸ்.ஐ.க்களை
மாற்றுவதோ, அல்லது மிரட்டுவதோ, அவர்கள் எல்லாம்
எம்.எல்.ஏ.க்களாக இருந்தாலும், எம்.பி.க்களாக இருந்தாலும்,
அரசியல் செல்வாக்கு பெற்றவர்களாக இருந்தாலும், அவர்கள்
சொல்வதைக் கேட்டு விசாரிக்காமல் உடனே மாற்றுவது என்ற
நிலைமை இருக்கும்போது, எந்த எஸ்.ஐ.யும் உங்களுக்கு நியாயம்
வழங்குவதற்கு முன் வரமாட்டார். உதாரணமாகச் சொன்



1984 மார்ச் 29] [திரு. எல். இளையபெருமாள்]

னால், தென்னாற்காடு மாவட்டத்திலே சங்கராபுரம் போலீஸ்
நிலையத்திலே, போலீஸ் மேலதிகாரிகளுடைய நல்லெண்ணத்
திற்கு உடந்தையாக இருந்து சிலைகளைத் திருடுகிறவர்களைக்
கண்டுபிடித்து, அவர்களுடைய மேலதிகாரிகள் எண்ணங்களோடு
நல்ல கேஸ்கள் பதிவு செய்தார்கள்.

ஆனால், அரசியல்வாதிகளுடைய தலையீட்டால் ஒரு தவறும்
செய்யாத, ஒரு எஸ்.ஐ., அங்கே இருந்த கான்ஸ்டபிள், ஹெட்
கான்ஸ்டபிள், அவ்வளவு பேரும் கூண்டோடு கைலாசம் என்று
கிராமத்தில் பழமொழி சொல்வது போல், எல்லோரையும்
மாற்றினார்கள். சிலைகள் திருடப்பட்டது உண்மை. சிலை
களைத் திருடுவதற்கு உடந்தையாக இருந்த அரசியல்வாதிகள்,
எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, அதில் ஒரு கண்டிப்பான
நிலைமை வராத வரையிலும் உங்களால் குற்றவாளியையும்
கண்டுபிடிக்க முடியாது ; திருட்டையும் தடுக்க முடியாது.
அதிகாரிகள் நினைக்கிறார்கள், நமக்கு ஏன் அப்பா தொல்லை,
30 ஆம் தேதி சம்பளம் வந்தால் போதும். இந்த வழ்பிலே
ஈடுபட வேண்டாம் என்ற நிலைமை உருவாகியிருக்கிறது. அதை
விசாரித்துப் பாருங்கள். ஏதோ சட்டமன்ற உறுப்பினர்கள்
பேசியதும், அமைச்சர்கள் பேசியதும், இந்தச் சடங்கு முடிந்து
விட்டதான நிலையிருக்கிறதே தவிர, ஒரு சட்டமன்ற உறுப்பினர்
பேசுவது உண்மைதானா ? அல்லது தவறான கருத்தா எனறு
பார்க்க வேண்டும். நான் ஒவ்வொரு தடவையும் பார்த்
திருக்கிறேன். ஆகவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள்
நிச்சயமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற அக்கறையில்
சொல்கிறேன். நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கை எனக்கு
இருக்கிறது. நான் நம்முடைய போலீஸ் இலாகா திறமையைக்
குறை சொல்லவில்லை. போலீஸ் நிலைமை நன்றாக இருக்கிறது.
ஆனால் அரசியல்வாதிகளும், அரசியல் செல்வாக்குள்ளவர்களும்
முதலாளிகளும் தங்களுக்கு ஏதோ ஒன்று செய்ய வேண்டுமென்று
ஒரு காரியத்தை அவர்கள் செய்யத் தூண்டுகிறபொழுது அவர்கள்
தாங்களாகவே மறு காரியத்தைத் தங்கள் இஷ்டப்படி கீழ்த்தர
சிப்பந்திகள், மேலதிகாரிகள் துணையோடு செய்கிற ஒரு தவறான
நிலைமை உருவாகியிருக்கிறது.

(முற்பகல் 10-40)

அதைப் போலவே தென்னாற்காடு மாவட்டத்திலே கள்ளக்
குறிச்சியிலே 28—3—1984 அன்று ஒரு பையன் கொலை செய்யப்
பட்டிருக்கிறான். அவன் கள்ளக்குறிச்சித் தாலுகாவைச் சேர்ந்
தவன்தான். டி.ஜி. அவர்களுக்கு அது பற்றி தகவல்
அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமையை
விளக்கிச் சொல்லியும் விசாரணையின்றி இறந்தவர்
களுக்கு நிலை கெட்ட நிலைமை இன்று இருக்கிறது.
அதைப் போலவே இறந்தவர் பெயர் எலிகுஞ்சுகாளை
என்ற விஜயன், வயது 18 ; உலகநத்தம் என்ற கிராமம்,

அவர்கள் சீட்டு விளையாடுவதில் ஏதோ தகராறு ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தகராறு 15—1—1984-ல் நடந்திருக்கிறது. இன்று வரையில் நடவடிக்கை இல்லை.

அதைப் போலவே வரதட்சணை கொடுமையால் ஒரு முஸ்லீம் பெண்மணி கொலை செய்யப்பட்டிருக்கிறார். அந்த கேஸ் கொடுக்கப்பட்டும் அங்கே தானே ஊற்றிக் கொண்டு விட்டதாக அந்தப் பெண்ணிடம் வற்புறுத்தி கையெழுத்து வாங்கி இருக்கிறார்கள். ரமிதாபி என்று பெயர் ; அவருடைய கணவர் பெயர் அமீர் ; சங்கராபுரம் சப்-ரெஜிஸ்ட்ரார் ஆபீசில் வேலை செய்கிறார். தியாகதுர்க்கம் காவல் நிலையம் ; அவருடைய தகப்பனார் சேலத்தைச் சேர்ந்தவர் ; ஆத்தூரில் வந்து புகார் கொடுத்திருக்கிறார். இன்று வரையில் விசாரிக்கப்படவில்லை. இதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வருவதற்காக இந்தத் தகவல்களை துணைத் தலைவர் அவர்களே உங்கள் மூலமாகக் கொடுக்கிறேன்.

அதே போல தஞ்சை ஜில்லாவில், கும்பகோணம் தாலுக்காவில் வேட்டமங்கலம் என்ற கிராமம் ; அங்கே அரசாங்கத்தின் மூலம் பாலம் கட்டப்பட்டிருக்கிறது ; அந்தப் பாலத்திலே ஆதி திராவிட மக்கள் பிணம் தூக்கிக் கொண்டு செல்லக் கூடாது என்று தடுத்து இருக்கிறார்கள். சப்-கலெக்டர் அவர்கள் நேரில் சென்று பிணத்தை எடுத்துச் செல்ல வழி செய்திருக்கிறார்கள். பிறகு அங்கே மறு பிணம் வருகிறது; செத்த உடனே ஊரார்கள் அத்தனைபேரும் அதைத் தடுக்கிறார்கள் ; அரசாங்க பாலம் திருப்பானந்தாள் பஞ்சாயத்து யூனியனில் உள்ள அந்த பாலத்தில் இதுபோன்று நடந்திருக்கிறது. அவர்கள் வேறொரு பாலம், மரப்பாலத்தை போட்டு, அரசாங்கப் பாலத்திலே போகக்கூடாது; நீங்கள் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பதால் மரப் பாலத்தில் தான்போக வேண்டும் என்று சொல்லி, போலீஸ் காரர்களை வைத்து மிரட்டி இருக்கிறார்கள். இதற்கு பயந்து கொண்டு அவர்கள் வீட்டிலேயே பிணத்தை புதைத்துக் கொண்டார்கள். கீழ்அளவில் நடந்திருக்கிற இது சம்பந்தமாக அரசுக்குத் தெரிவித்து இருக்கிறோம்.

இதைப்போல தஞ்சை ஜில்லாவில் கும்பகோணம் தாலுகாவில் கும்பகோணம் நகரில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அலமேலு, வைப் ஆப் ராமமூர்த்தி அய்யர்—அந்தப் பெண் பலவந்தமாக பல்லவன் டிரான்ஸ்போர்ட்டில் பணி செய்கிற ஒரு கண்டக்டராக இருக்கிறவர் இராத்திரி 8 மணி வேளையில் கட்டாயப்படுத்தி அவரை இம்சை செய்தார். இதைப் பற்றி கேஸ் கொடுத்தோம். ஆனால் இன்று வரையில் அந்த கேஸ் எடுக்கப்படவில்லை. அந்த அம்மாவின் புருஷன் பைத்தியக்காரனைப் போல இருக்கிற நிலைமை இருக்கிறது. அந்த ராமமூர்த்தி அய்யருடைய கேசை 160-ல் சார்ஜ் பண்ணி இருக்கிறார்கள். இது என்ன தர்மம் என்று தெரியவில்லை.





நானே நேரில் சென்றேன். சப்-இன்ஸ்பெக்டரிடம் சொன்னேன் ; சர்க்களிடம் சொன்னேன் ; டெபுடி சூப்பிரென்டென்ட், சூப்பிரென்டென்ட் மற்றும் டி.ஐ.ஜி.—யிடம் சொன்னேன், நியாயம் கிடைக்கும் என்று சொன்னார்கள். கிட்டத்தட்ட 22 மாதங்கள் ஆகிறது. 160, 175 மற்றும் 143 என்ற முறையில் அவர்கள் கேஸ் எடுத்திருக்கிறார்கள். இவைகளை எதற்காகச் சொல்கிறேன் என்றால் போலீசிற்கு நல்ல பெயர் இருந்தாலும் கூட நம்முடைய அதிகாரிகள் நல்ல எண்ணத்தோடு, ஐ.ஜி அவர்களும், டைரக்டர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் கருணையாக இருக்கவேண்டுமென்று எண்ணினாலும் இதுபோன்ற கேஸ்களில் அதிகாரிகளை உடனடியாக கண்டிக்காத காரணத்தால், தவறு செய்கிற அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை தக்க காலத்தில் எடுக்காத காரணத்தால் இந்த மாதிரி அவப் பெயர் நம்முடைய அரசாங்கத்திற்கு வருகிறது.

மத்திய அரசு, வீடு கட்டும் திட்டத்திற்கு 6.75 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறது. மாநில அரசு 13.30 கோடி ரூபாய் செலவிட்டு இருக்கிறது என்று வீடு கட்டும் திட்டத்தைப் பற்றி இதில் சொல்கிறார்கள். ஆனால் இந்தத் தொகை போதாது. இதை கூடுதலாகச் செய்யவேண்டும். அதைப்போல இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்புவனம் போலீஸ் ஸ்டேஷன் வட்டாரத்தில் பூவந்தி என்ற கிராமத்தில் இராமகிருஷ்ணன் என்ற பி.காம். படித்த ஒருவர் சத்துணவுத் திட்டத்தில் ஆர்கனைசராக இருக்கிறார். அந்தப் பையன் நாற்காலியில் உட்கார்ந்த காரணத்திற்காக அடித்து விட்டார்கள். அதனால் அவர் போலீசில் புகார் செய்திருக்கிறார். அங்கே இருந்த நல்ல போலீஸ் அதிகாரி அதன் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்தார். ஆனால் ஒரு பாவமான சம்பவம் என்னவென்றால், அந்த நடவடிக்கை எடுத்த சப்-இன்ஸ்பெக்டரை உடனே ஊரை விட்டு மாற்றி விட்டார்கள். அந்தப் பையனையும் வேலையிலிருந்து நீக்கி விட்டார்கள். அந்த சத்துணவு போடுகிற பள்ளியின் தலைமை ஆசிரியர் இரண்டு நாட்களாக அந்தப் பையன் வேலைக்கு வரவில்லை என்று சொல்கிறார். அந்தப் பையனுக்கு வேலையும் போயிற்று ; அடிபட்டு அவமானமும் பட்டான். நடவடிக்கை எடுத்த சப்-இன்ஸ்பெக்டரை எல்லா கட்சிக்காரர்களும் சேர்ந்து அந்த ஊரை விட்டு மாற்றி விட்டார்கள். கேஸ் என்னவாயிற்று என்று தெரியவில்லை.

அதைப்போல சேலத்தில் கிச்சிப்பாளையத்தில் ஒரு அரிசனப் பெண் கொலை செய்யப்பட்டாள். நம்முடைய முதலமைச்சர் கடுமையான நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார்கள். இன்று வரையில் நிலைமை என்னவென்று எனக்குத் தெரியவில்லை. இந்த அறிக்கை இப்போது வந்திருக்கிறது. அறிக்கையில் என்ன இருக்கிறது என்று சொல்கிறார்கள் ; என்பது தெரியாது. ஆனால் எப்படியிருந்தாலும் நம்முடைய அதிகாரிகளும், அமைச்சர்களும் ஏதோ நல்ல எண்ணத்தோடு

த்தான் சொல்கிறார்கள். ஆனால் செய்ய வேண்டிய வேலையை செய்ய வேண்டிய நேரத்தில் செய்யத் தவறியவர்களை கண்டிக்காமல் பணியாற்றுகிறார்கள். அதே நேரத்தில் அரசியல் வாதிகளும் போலீசிலே தலையிட்டுவிடுகிறார்கள். மேலும் இப்படி எல்லோரும் சேர்ந்து அந்த இடத்தில் உள்ள சப்-இன்ஸ்பெக்டருக்கு அல்லது மற்றவர்களுக்கு தொல்லை கொடுத்தால் அந்த சப்-இன்ஸ்பெக்டர் எப்படி தீண்டாமையை ஒழிப்பதற்கு சட்டப்படி நடவடிக்கை எடுப்பார்? நமக்கு ஏன் தொல்லை என்று விட்டு விடுவார்கள்.

அதைப்போலவே, தஞ்சாவூர் பையன் பற்றிய விஷயம். வேட்டமங்கலம் கிராமம், கும்பகோணம் தாலுக்கா, அதே போல், வலங்கைமான் தாலுக்காவிலே ஆலப்பாடி பகுதியிலே, ராஜேந்திரநல்லூர் என்ற இடத்தில் கோபால் என்ற பையனை வெட்டிக்கொலை செய்துள்ளார்கள். அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தில் சேர இருக்கிறேன் என்று அறிவித்த ஓரிரு நாட்களில் பட்டப்பகலில் தொலை செய்யப்பட்டார். இதை நான் அந்த சப்-இன்ஸ்பெக்டரிடம் சொன்னேன். அந்தக் கொலையைச் செய்தவர் அந்த ஊரிலேயே இருக்கிறார். அவரைக் கைது செய்யவில்லை. சப்-இன்ஸ்பெக்டரைக் கேட்டேன். நாளைக்கு கைது செய்கிறேன் என்றார். ஆனால் அதற்குள் அவர் போய்விட்டார்.

இங்கே அவைமுன் சேலம் நகர கிச்சிப்பாளையம் காவல் நிலையத்தில் ஏற்பட்ட சம்பவம் குறித்து அறிக்கை வைத்து இருக்கிறார்கள். அதிலே 13-ம் பக்கத்தில் அந்த நீதிபதி தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறார். அதை நான் இங்கே வாசிக்கிறேன்.

"தெய்வமணி சா. பொ. 2 வரிசை புகைப்படங்களில் கண்டுள்ளபடி சா. பொ. 3 புடைவையை கழுத்தில் சுற்றி தூக்கிலிட்டு உயிரை மாய்த்துக்கொண்டாள் என்று சொல்வது, தெய்வமணிக்கு கிச்சிப்பாளையம் காவல் நிலையத்தில் காவலர்களால் ஏற்பட்ட மரணத்தை மறைக்க பொய்யாக நடிக்கப்பட்டுள்ள நாடகம் என்றே கருதுகிறேன். இது சம்பந்தமாக பொறுப்புள்ள காவல் துறை உயர்மட்ட அதிகாரி ஒருவரை நியமித்து புலன் விசாரணை செய்து தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று தமிழ் நாடு அரசுக்கு நான் பரிந்துரை செய்கிறேன். தமிழ் நாடு அரசு இனிமேல் இத்தகைய சம்பவம் காவல் நிலையத்தில் நடவாமல் இருக்க மேற்சொல்லியபடி வேண்டிய மேலான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மனிதாபிமானமுள்ள நீதிபதி அவர்கள் உண்மையைச் சொல்லியிருக்கிறார்கள்.



என்னுடைய அதிருஷ்டம்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இங்கே நேரடியாக இன்றைக்கு இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்களிடத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட அறிக்கை கொடுத்தபிறகு அதிலே என்ன செய்யவேண்டுமோ, அதைச் செய்யவேண்டும். அப்படிச் செய்யத்தவறினால், நீதி செத்துப்போகிறது என்பது மட்டுமல்ல, நீதிக்கே யாரும் தலைவணங்கமாட்டார்கள். வருங்காலத்தில் அரசியல் வாதிகள் எதுவும் செய்யலாம், எப்படியும் தப்பித்துக்கொள்ளலாம். ஏனென்றால், அந்தப் பாவ காரியமான ஓட்டு, ஓட்டு என்று கெஞ்சிக் கேட்கிறோமே, அந்த ஓட்டு, மக்கள் போடாவிட்டால், என்ன செய்வது என்று அரசியல்வாதிகள் பயந்தாங்குளிகளாக இந்த நாட்டிலே இருக்கிறவரையில், ஏழைகளுக்கு நீதியளிக்கப்போவதில்லை. இந்த நாட்டிலே ஏழைகள் வாழமுடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி, மக்களுக்கு நீதி கிடைக்கவேண்டுமென்ற வகையில், ஆளுங்கட்சியாக இருந்தாலும்சரி, அமைச்சர் அவர்களாக இருந்தாலும் சரி, நடவடிக்கைகள் எடுத்தாலொழிய, இந்த நாட்டிலே நீதி கிடைக்காது என்ற சந்தேகம், மக்களுக்கு உருவாகக்கூடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் பணிக்கு ஆளெடுப்பது என்பதற்காக சர்டிபிகேட் எல்லாம் வாங்கினார்கள். அதை விரைவில் திருப்பிக்கொடுத்து விடுகிறேன் என்று முதலமைச்சர் கூட உறுதிசொன்னார்கள். ஆனால், அந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே ஆள் எத்தனை பேர் எடுத்தார்கள் என்பதைப்பற்றி ஒன்றுமே இல்லை. இந்த இன்டர்யூவிற்கு எத்தனை பேர்கள் வந்தார்கள். எத் தனை பேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்கிற விவரம் தெரிவிக்க வேண்டும். பலபேருக்கு இன்னும் சர்பிகேட் திரும்பி வரவில்லை. இந்த வேலையாவது கிடைத்துவிட்டால் எப்படி யாவது முன்னேறிக்கொள்ளலாம் என்ற எண்ணத்தில், எம்.ஏ. படித்தவர்கள், பி.எஸ்.சி. படித்தவர்கள், பி.ஏ. படித்தவர்கள் இந்த கான்ஸ்டபிள் வேலைக்கு மனு போட்டார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதைக் கண்காணித்து, அவர் களுக்கு வேலை கொடுக்கவேண்டும். வேலை கொடுக்க முடியாதவர்களுக்கு சர்டிபிகேட்டையாவது உடனடியாக திருப்பி அனுப்பிவைக்கவேண்டும். அவர்கள் உடனடியாக இதைச் செய்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்த நம்பிக்கையை நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறேன்.

பாபநாசம் நகரில் சப்-ஜெயிலில் கண்ணன் என்பவன் கைது செய்யப்பட்டு இறந்துவிட்டான். அது குறித்து, நீதி விசாரணை வேண்டுமென்ற சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், அனைத்துக்கட்சியைச் சார்ந்த வர்களும் கையெழுத்து போட்டு. ஐ.ஜி. அவர்களுக்கும்,

டி.ஜி.பி. அவர்களுக்கும் வேண்டுகோள் வைத்திருக்கிறார்கள். இதுவரையிலும் அது குறித்து தகவல் கிடைக்கவில்லை. ஆகவே, அதைச்செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

ஆதி திராவிட மக்கள், பழங்குடி மகக்ளுக்கு இட ஒதுக்கீடு இருப்பது போல பின்தங்கிய மக்களுக்கும் இருக்கிறது. 31 சதவீதம் இருந்ததை அவர்கள் கேட்காமலேயே 50 சதவீதமாக உயர்த்திக் கொடுத்திருக்கிறீர்கள். பின்தங்கிய மக்களுக்கு நிவாரணமாக, மண்டல் கமிஷன் சொல்லியிருப்பதைப் போன்று அவர்கள் கொடுக்காவிட்டாலும், இந்த அரசு கொடுக்கும் என்று சொல்லி, 50 சதவீதம் ஒதுக்கினீர்கள். ஆனால் அது முழுமையாகச் செயலில் இல்லை. ஆதிதிராவிட மக்கள், மலை வாழ் மக்களுக்கு 18 சதவீதம் இருந்தும் அதை முழுமையாகச் எப்படி செயல்படுத்தவில்லையோ அதைப்போன்று பின்தங்கிய மக்களுக்கும் செயல்படுத்தவில்லை.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், தென்னாற்காடு மாவட்டத்தில் கடலூர் பகுதியில் பின்தங்கிய சமுதாயமான வன்னியர் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர், பி.காம். படித்தவர். அவர் ஹெட் கான்ஸ்டபிளாக ரிசர்வ் போலீசில் 7 ஆண்டுகாலமாக இருக்கிறார். உத்தியோக உயர்வு கிடைக்கவில்லை. பின்தங்கிய மக்களுக்கு உத்தியோகத்தில் முன்னுரிமை கொடுப்போம், பதவி உயர்வு கொடுப்போம் என்று இந்த அரசு சொன்னாலும், 50 சதவீதம் ஒதுக்கீடு செய்தாலும் சரியாக கிடைக்கவில்லை; காலதாமதம் ஏற்படுகிறது. ஏன் இந்த காலதாமதம் என்று தெரியவில்லை.

அதைப்போன்று அரிசனங்களுக்கு 18 சதவீதம் ஒதுக்கீடு இருந்தாலும் சரியாக கிடைக்கவில்லை. பி.காம்., பி.எல். படித்தவர்கள் எல்லாம் சப்-இன்ஸ்பெக்டர்களாக இருக்கிறார்கள். நான் படித்தவர்களுக்கு எல்லாம் கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. குற்றவாளிகளுக்கு கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. நியாயமாகச் செயல்படுபவர்களுக்கு, உங்களுடைய சட்டத் திட்டங்களுக்கு உட்பட்டு நடக்கிறவர்களுக்கு ஏன் கொடுக்கக் கூடாது? ரிக்கார்டுகளைப் பார்த்துத்தான் ப்ரோமோஷன் கொடுப்பார்கள். தகுதி உடையவர்களுக்குக்கூட நியாயமான முறையில் ப்ரமோஷன் கிடைக்கவில்லை.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் தான் ஹை பவர் கமிட்டிக்குத் தலைவர். சீஃப் செக்ரட்டரி அதற்குச் செயலாளர். டைரக்டர் ஆஃப் ஹரிசன் வெல்பேர் அதில் உறுப்பினர். இந்தக் கமிட்டி கூடி, உத்தியோக உயர்வு மற்ற விஷயங்கள் பற்றி பரிசீலனை செய்யும் என்று சொல்லி, 32 ஆண்டுகள் ஆகியும் நடைபெறவில்லை. உங்கள் காலத்தில்தான் நடக்கவில்லை என்று நான் சொல்லவில்லை. 32



ஆண்டுகளாக செயல்படாமல் இருந்துவிட்டது. அரசாங்கத்திலே ரிக்கார்டு இருக்கிறது. இந்த மக்களிலே தகுதி படைத்தவர்கள் இருக்கிறார்கள்; படித்தவர்கள் இருக்கிறார்கள் என்று இந்தத் துறையில் சொல்கிறார்கள். உத்தியோகம் ஏன் கொடுக்கவில்லை என்று கேட்டால் 'Qualified Candidtes are not available among the Scheduled Castes' என்று சொல்கிறார்கள். இரண்டு துறையினரும் சர்க்கார் நிர்வாகத்தில் இருப்பவர்கள் தான். ஒருவர் தகுதி படைத்தவர்கள் இல்லை என்று சொல்கிறார். இன்னொருவர் இருக்கிறார் என்று சொல்கிறார். இதற்கு முதலமைச்சர்தான் தீர்ப்பு சொல்ல வேண்டும். ஏனென்றால் இதற்கு கோர்ட்டுக்குப் போக முடியாது.

ஐ.சி.எஃப் இருக்கிறது. அங்கே நடந்தது என்ன? 4, 5 நாட்களுக்கு முன்னால் பாலகிருஷ்ணன் என்ற பிள்ளையை அடித்து, அவமானப்படுத்தினார்கள். அவர் பெங்களூரில் வாழ்ந்தவர். இங்கே வந்து வேலை செய்கிறார். மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்காக இதை நான் சொல்கிறேன். அந்த பாலகிருஷ்ணனை இன்னொரு பாலகிருஷ்ணன் அடிக்கிறார். ஏதோ விழா நடத்தினார்கள். அதற்குப் பணம் கேட்டார்கள். இரண்டு ரூபாய் கொடுத்து விட்டார். அதற்குப் பின்னாலே அறிவாளி யார் என்று கேட்கிறார்கள். அடிக்கிறார்கள். இன்றைக்கு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த இளையபெருமாள் எக்மோர் தொகுதியிலிருந்து வந்திருக்கிறார் என்றால், நான் காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சொல்கிறேன், அண்ணல் காந்தியடிகளும், டாக்டர் அம்பேத்காரும் தான் அதற்குக் காரணம், இல்லை என்றால் நான் வந்திருக்க முடியாது. ஆகவே, என் ஜீவன் உள்ளவரை அவர்களை நான் மறக்க முடியாது. அந்த பிள்ளையும் அம்பேத்கார்தான் இந்த உத்தியோகம் கிடைக்கக் காரணம் என்று சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மகாத்மா காந்தி அவர்கள் எப்போது தனித் தொகுதி கேட்டார் என்று நான் யோசிக்கிறேன். அதற்குப் பதில் சொன்னால் பரவாயில்லை.

திரு. எல். இளையபெருமாள் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னைவிட வயதிலும் திறமையிலும் கெட்டிக்காரர். இருந்தாலும் கேட்டதற்கு பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நாடு விடுதலை பெற வேண்டுமென்று கிளர்ச்சிகள் நடைபெற்ற நேரத்தில் 1930-ல் முதல் வட்டமேசை மாநாடு நடந்தது. அந்த மாநாட்டிற்கு மகாதேவ் தேசாய் சென்றார். ஜின்னா அவர்கள் முஸ்லீம் சமுதாயத்திற்காகச் சென்றார். இரட்டமலை சீனிவாசன் அவர்கள் தமிழ் நாட்டிலிருந்து ஷெட்யூல்டு காஸ்ட் சார்பில் சென்றார்கள். இப்போதுகூட மாண்புமிகு இராமச்சந்திரன் அவர்கள் ஐ.நா.வுக்குச் சென்று பெருமை தேடி தமிழகத்திலிருந்து வந்தாரே அதைப்போல சீனிவாசன் இந்த சமுதாயத்தின் சார்பில்

இலண்டனுக்குப் போனார். (குறுக்கீடு) தனித் தொகுதி பற்றிச் சொல்கிறேன். அதை அறிவதிலே ஆர்வமாக இருக்கிறார்கள். இரண்டாவது வட்டமேசை மாநாடு 1932-ல் நடந்தது. அப்போது காந்தி மகான் சொல்கிறார். அரிசன மக்களும் இந்துக்கள் தான். இந்துக்களுக்கு உள்ள எல்லா உரிமைகளும் அவர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும். இதை நம்பிக்கையோடு கொடுப்போம் என்று சொன்னார்கள். அப்போது டாக்டர் அம்பேத்கார் அவர்கள் சொல்கிறார்கள்....

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவரவர்களே, ஒரு விளக்கம். மகாத்மா காந்தி அவர்கள் ஆதிதிராவிட மக்களுக்கு என்று தனித் தொகுதி எங்கேயும் கேட்கவில்லை. அம்பேத்கார் தான் சிறுபான்மைக்காக வாதாடினார். இஸ்லாமிய சிறுபான்மையினருக்காக ஜின்னா கேட்க, அதிலே பிரச்னை வந்தது. காந்தியடிகள் 'அன்டச்சபிலிட்டி' யை எதிர்த்துப் போராடினார்கள். ஆனால் அம்பேத்காருக்கும் காந்தியடிகளுக்கும் இதில் கருத்து வேறுபாடு உண்டு.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் கேள்விக்கு சகோதரர் ரகுமான்கான் சரியாக பதில் சொல்லவில்லை. முதலமைச்சர் கேட்டது எப்போது கேட்டார் என்பது. நான் சொல்வது தீண்டாமை ஒழிப்பு என்பது வேறு. காந்திஜி அவர்கள் சுதந்திரம் வந்த பிறகு இந்த மக்களுக்காக அனைத்தும் செய்வேன். நான் இந்து என்று சொன்னார். ஆனால் அம்பேத்கார் சொன்னது, இந்து என்று ஒத்துக்கொள்ள முடியாது. ஏனென்றால், ராமாயணத்தைப் படிக்க நாசிக் நகரத்தில், இந்த சமுதாயத்தைச்சேர்ந்த ஒரு மகன், தலையிலே சுமந்து சென்றான். ராமாயணத்தைப் படிப்பதற்காக நாசிக் நகரத்திற்கு சுமந்துகொண்டுசென்ற அந்தப் பாவத்திற்கு, எப்படி அந்த பிரபந்தத்தை—ராமாயணத்தைத் தலையில் வைத்துச் செல்லலாம் என்று கேட்டு, அடித்து ரத்தம் கொட்டியது. இதைப்பற்றி, மெயில், இந்துப் பத்திரிகைகளில் வந்தது. அதை ரவுண்டு டேபில் கான்பரென்சில், 1932 ஆம் ஆண்டில் காந்திஜி அவர்கள் சொன்னது கூட, நான் இந்து என்று சொன்னார்கள். 1932-ல் என்ன நடந்தது என்று சொன்ன போது தான் இவ்வளவு கொடுமைகள் இருக்கின்ற என்று சொல்லி, உத்தமர் காந்தி அவர்கள் இங்கே வந்தவுடன் இந்தக் கொடுமைகளைத் தீர்ப்பதற்காக நானே முயற்சி செய்வேன் என்று கூறி, இரண்டாவது வட்ட-மேசை மாநாட்டிற்குப் போய் வெற்றி பெறாமல் வந்தார். உத்தமர் காந்தி உண்ணாவிரதம் மேற்கொண்டார்கள். அந்த உரிமைப்படி ஆதிதிராவிடர் ஒதுக்கீடு மட்டுமல்ல, 'உத்தியோக உயர்வும் கொடுக்க வேண்டுமென்று சட்டத்தை மத்திய சர்க்கார் போட்டிருந்தார்கள். நீங்கள் மத்திய சர்க்கார் போட்ட சட்டத்தின்படி 1952 முதல் அவர்களுக்கு உத்தியோக உயர்வையும் கொடுக்கவில்லை. மத்திய





அரசு போட்ட உத்தரவையும் கௌரவிக்கவில்லை. மத்திய அரசாங்கம் உத்தியோக உயர்வைக் கொடுக்கிறது. தமிழக சர்க்கார் கொடுக்கவில்லை என்பது தான் என்னுடைய குறை.

ஆகவே இந்த நிலைமையிலே போலீஸ் மான்யத்திலே நான் சொல்ல விரும்புவதெல்லாம், இந்த சமுதாய மக்களுக்கு, அவர்கள் படித்திருந்தும், அனுபவம் இருந்தும், அவர்களுக்கு நியாயம் வழங்கப் படவில்லை. ஐ.சி.எப்-லே நான் சொன்ன விஷயத்தைக் கவனிக்க வேண்டும். அந்தப் பையன் தண்டிக்கப்பட்டிருக்கின்றான். போலீசில் புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். சாதியின் பெயரைச் சொன்னதால், அங்கே நடவடிக்கை எடுக்க வேண்டும். நேற்று சாயங்காலம் 4½ மணி வரையில், ஐ.சி.எப்-ல் அந்த தீண்டாமை ஒழிப்புச் சட்டப்படி, கேசை பதிவு செய்யவில்லை. மத்திய சர்க்கார் கொடுத்த உத்தரவுப்படி மாநில அரசாங்கம் தன்னுடைய கடமையைச் செய்யவேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

இந்த மான்யத்தில் கடைசியாகச் சொல்ல விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்கள் செல்லும் இடங்களிலெல்லாம் இந்தச் சட்டம் இருக்கிறது. இதை அரசாங்க அதிகாரிகள் ஒழுங்காகக் கடைபிடிக்க வேண்டும் என்று சொல்லாத காரணத்தால், ஆதிதிராவிடர்களை எதைச் செய்தாலும் கேட்கமாட்டார்கள் என்ற எண்ணம் இருக்கிறது. அவர்களுக்கு நீங்கள் அதிகமாகக் கூட செய்திருக்கலாம். அது வேறு விஷயம்....(குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாளைக்கு என்னுடைய பதில் விவரமாகக் கிடைக்கும் என்றாலும், ஒரு விஷயத்தை இங்கே சொல்வது தேவை என்று கருதுகிறேன். இந்த உத்தரவை பலமுறை சொன்னது மட்டுமல்ல, அதிகாரிகளைக் கொண்டே, அங்கே சென்று மேல் நடவடிக்கைகளை எடுக்கச் செய்திருக்கிறோம்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தைச் சொன்னதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி முதலமைச்சரும், மற்ற அமைச்சர்களும், அவர்கள் போகின்ற இடங்களில், இந்தச் சட்டங்கள் இருப்பதைப்பற்றி, சொல்ல வேண்டும். ஆதிதிராவிடர் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம், தீண்டாமை ஒழிப்புச் சட்டம், இவைகளைப்பற்றி, சொல்லாத காரணத்தினால், ஆதிதிராவிடர்களை எதைச் செய்தாலும் கேட்பாரில்லை என்ற நிலைமை வந்துவிட்டது. ஜஸ்டிஸ் முன்னாள் நீதிபதி நஞ்சப்பன் கொடுக்கின்ற நிலைமைகளில்,

அரசாங்கம் உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்காக நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

(முற்பகல் 11-00)

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழகத்தில் வாழ்ந்த தலைசிறந்த வள்ளல்கள் எத்தனை பேரப்பா ? என என் மகன் கேட்டால், தயங்காமல் தானுரைப்பேன், ''செத்துக்கொண்டிருந்த பிஞ்சு வயிறுகளுக்கு சத்துணவு தந்து, சாகாத சரித்திரம் படைத்த சத்யாவின் புதல்வன் எங்கள் தங்கம் எம்.ஜி.ஆருடன் சேர்த்து எட்டுப் பேரப்பா—என்பேன்.'' அப்படிப்பட்ட வணக்கத்திற்குரிய இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்களால் இன்றையதினம் இந்த மன்றத்திலே வைத்திருக்கக்கூடிய கோரிக்கை எண் 15 காவல்துறை ; கோரிக்கை எண் 16—தீயணைப்பு ; கோரிக்கை எண் 2—மாநில ஆயத்தீர்வைத்துறைப் பற்றியும் என்னுடைய கருத்துக்களை, மக்களின் உணர்வுகளை, தமிழகத்தின் நிலைகளை நான் இந்தச் சட்டமன்றத்திலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காவல்துறை என்று சொன்னாலே, ஒரு நாட்டினுடைய அரசாங்கத்திற்கு நல்ல பெயரை வாங்கிக் கொடுப்பதும், கெட்ட பெயரை வாங்கிக்கொடுப்பதும், காவல்துறையும், கிராம அலுவலர்களும் தான். இதைப் பட்டிக்காட்டிலே சொல்வார்கள். ஒரு அரசாங்கத்தினுடைய ஜீவநாடி எங்கே இருக்கிறது என்று சொன்னால், அது கிராம அலுவலர்களிடத்திலேயும், கர்ணம், முன்சீப்புகள் இடத்திலேயும், போலீஸ் இடத்திலேயும் தான் இருக்கும். நடுத்தர மக்கள், கீழ்த்தட்டிலே இருக்கக்கூடியவர்கள், உழைக்கக்கூடிய சமுதாயம், இப்படிப்பட்டவர்களிடத்தில் எல்லாம் மிக அதிக அளவிலே தொடர்பு கொண்டு இருக்கக்கூடிய ஒரு அம்சமாக, ஒரு இயக்கமாக, ஒரு பகுதியாக ஒரு டிபார்ட்மென்டாக இது இருக்கிறது என்று காரணத்தால், ஒரு அரசாங்கத்தின் ஜீவநாடியிலே பல்சைப் பார்க்க வேண்டிய அவசியம் இந்த திட்டங்களிலே, இந்த இலாக்காக்களிலே இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதுமட்டுமல்ல, மற்ற வளர்ச்சித் திட்டங்களைப் போல் இது இதை இவ்வப்போது செய்யப்போகிறோம், இதற்காக இவ்வளவு பணத்தை ஒதுக்கப்போகிறோம், இந்தந்த முன்னேற்றங்கள் இருக்கப் போகிறது, இவ்வளவு மதிப்பீடு செய்கிறோம், இவ்வளவு வருவாய் வருகிறது, இவ்வளவு வளர்ச்சிப் பெறுகிறது என்றெல்லாம் பல்வேறு திட்டங்களுக்கு தனித்தனியாக தொகையை ஒதுக்கமுடியும். அதை நடைமுறைப்படுத்த முடியும். ஆனால் போலீஸ் துறையைப் பொறுத்த வரையில் அப்படி முடியாது. காரணம், சிலை திருடக்கூடியவன் சொல்லிவிட்டுத் திருடுவதில்லை ; கொலை செய்யக்கூடியவன் சொல்லி





விட்டு செய்வதில்லை. கொள்ளை அடிப்பவன் சொல்லிவிட்டுச் செய்வதில்லை. கற்பழிக்கக்கூடியவன் சொல்லிவிட்டுச் செய்வதில்லை. சமுதாய விரோதிகள் அரசியல்வாதிகளுக்கு பின்னால், பல்வேறு நேரங்களில், சந்தர்ப்பங்களில் ஊடுருவல் செய்து, அவர்களுக்கும் கெட்ட பெயர் வாங்கக்கூடிய நிலையை உருவாக்கக்கூடியவர்கள் எல்லாம், சொல்லிவிட்டு செய்யக்கூடிய நிகழ்ச்சி அல்ல. ஆகவே இப்படிப்பட்டவர்கள் எல்லாம், எந்தெந்தக் காலத்தில், எந்தெந்த வேகத்தில், எந்தெந்த ரூபத்தில் எப்படி எப்படி வருகிறார்களோ, அவர்களை எல்லாம் கண்டு, அடையாளம் கொண்டு, கண்டுபிடித்து வரக்கூடியது, வராமல் தடுக்கவும், வந்ததை எதிர்த்துப் போராடி முறியடிக்கவும் கூடிய, இந்த நாட்டைப் பாதுகாக்கக்கூடிய மிகப் பெரிய பொறுப்பினை, இந்தக் காவல்துறை வகிக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட மிகப் பெரிய பிரச்சினை இங்கே இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அப்படிப்பட்ட இந்தக் காவல்துறையில் இன்றைய தினம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் இந்தப் பொறுப்பை ஏற்ற பிறகு பல்வேறு நிர்வாகச் சீர்திருத்தங்களை செய்தது. இந்த நிர்வாகச் சீர்திருத்தங்களைச் செய்த காரணத்தால், வெகுவாக, மிக எளிதாக, இவைகளைக் கண்டுபிடிக்கவும், தெரிந்துகொள்கிற வகையிலேயும் இருப்பதை மிக விரைவில், அதற்கு ஒரு தீர்வு காணக்கூடிய முடிவுகளைக் கொண்டுவருவதற்கு, அவைகள் எல்லாம் மிகவும் ஏற்றதாக அமைந்திருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. காவல்துறையில் நிர்வாக சீரமைப்பு, மிகப் பெரிய தேவையான ஒன்றாக இருந்தது.

அதுமட்டுமல்ல. இன்றைய தினம் ஆவடியில் உள்ள தமிழ் நாடு சிறப்புக் காவல் படை இரண்டாம் அணி 25-8-1980 முதல் மத்திய அரசின் கீழ் பிற மாநிலங்களில் செயல்பட அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த அளவிற்கு இந்திய துணைக்கண்டத்திலேயே தேவையான, தகுதி வாய்ந்த, சிறந்த, என்று சொல்லக்கூடிய ஒரு அமைப்பு தமிழகத்திலே இருப்பதாக, இன்றையதினம் இந்தியத் துணைக்கண்டமே சொல்கிறது.

அதுமட்டுமல்ல. தமிழகத்தில் இருக்கிற குதிரைப் படை ; நாய்ப்படை; பெண் காவலர் பிரிவு, ஊர்க்காவல் படை, புலனாய்வுத் துறை, செய்தித் தொடர்பு நவீன அமைப்புகள், இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில்தான் மிக நல்லமுறையிலே கம்ப்யூட்டர் முறையிலே, இருக்கக்கூடிய வகையில் மிக நல்லமுறையில் செயல்படுகிறது. மாவட்டங்களோடு, அதிக அளவில் தொடர்பு கொள்ளக்கூடிய அளவில், இந்த கம்ப்யூட்டர் சிஸ்டங்கள் எல்லாம், இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் மிகச் சிறப்பாக இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

அதுமட்டுமல்ல, இந்த விரல் ரேகை பதிவுக்கூடம் இருக்கிறதே, அது இந்திய துணைக் கண்டத்திலேயே மிகவும் நவீனமான முறையிலே 'மிராகோடு' என்ற வகையில், அற்புத

சாதனைகளை நிகழ்த்தக்கூடிய வகையிலே, ஒருவன் குற்றவாளி என்று சொன்னால், அவனைப் பிடித்து, அவன் கை ரேகையை எடுத்து, ஏற்கெனவே இருக்கின்ற சந்தேக கேஸ்களை எல்லாம் ஒத்திட்டுப் பார்த்து, மிக எளிதாக இன்னார்தான் செய்திருக்க முடியும் என்று சொல்லக்கூடிய அளவிற்கு ஒரு தேவையான நவீன சாதனங்களைப் பெற்றிருக்கக்கூடிய வகையில் தமிழ்நாடு இன்றையதினம், இந்தியத் துணைக் கண்டத்திலேயே குற்றங்களைக் கண்டுபிடிப்பதில், முதலிடம் வகிக்கிறது. 65 சதவீதம் இருக்கிறது. இந்தியாவினுடைய மொத்த சதவீதத்தைப் பார்த்தால், குற்றங்களைக் கண்டு பிடிக்கக்கூடிய வாய்ப்பு, மற்ற மாநிலங்களோடு, எந்த மாநிலமாக இருந்தாலும்கூட, பொதுவாக ஒரு கணக்கு 40 சதவீதத்திற்கு மேல் இல்லை. ஆனால் தமிழகத்தில் 65 சதவீதம் உடனடியாக கண்டுபிடிக்கக்கூடிய வகையில், அது ஏற்பாடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டு, நவீனப் படுத்தப்பட்டு, மிக நல்லமுறையில் இந்தத் துறை இயங்கி வருகிறது என்பதற்கு, இலக்கணங்கள், அடையாளங்கள், சான்றுகள் ஏராளமாகச் சொல்ல முடியும்.

அதுமட்டுமல்ல. இந்திய துணைக் கண்டத்திலே எத்தனையோ பிரச்னைகள் இருக்கின்றன. தமிழ்நாட்டிலும் பல பிரச்னைகள் இருக்கின்றன. ஆனால் தமிழக போலீஸ் அந்தந்த நேரத்தில் எப்படி எப்படி நடவடிக்கைகளில் ஈடுபட்டு செயல்பட வேண்டுமோ அந்த வகையிலே திறமையாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று சொன்னால், அதைப்பற்றி மணிக் கணக்கில் சொல்லலாம். ஆனாலும், சுருக்கமாக ஒன்றிரண்டை மட்டும் இந்த சட்டமன்றத்திலே வைக்க விரும்புகிறேன்.

21-5-1983ஆம் தேதியன்று சென்னையிலே உள்ள தம்புச் செட்டித் தெருவில் இருக்கும் கர்நாடகா வங்கி ஊழியர், தன்னுடைய மேலாளரை கொலை செய்துவிட்டு, 13 லட்சத்து 57 ஆயிரத்து, 900 ரூபாயை திருடிக் கொண்டு போய்விட்டார்கள். ஆனால், 29, 30 தேதிகளிலேயே அவர் கைது செய்யப்பட்டு, அவருடைய கையில் இருந்த 12 லட்சத்து 31 ஆயிரம் ரூபாயை கைப்பற்றிய பெருமை தமிழ்நாடு போலீசாருக்கு உண்டு என்பதை மறுக்க முடியாது.

அது மட்டுமல்ல, 4-12-1983 அன்று நெல்லை மாவட்டத்திலே அகிலாண்டபுரம் என்னும் இடத்தில் ஒரு கேஸ். கணவன், மனைவி, வளர்ப்பு மகன், ஆகியோர் கைது செய்யப்பட்டு, ரூ. 2 லட்சம் மதிப்புள்ள நகை, பணம் ஆகியவை கொள்ளையடிக்கப்பட்டன. இதை விரைவாக கண்டுபிடிப்பதற்கு வேண்டிய நடைமுறைகளை எடுத்து அவைகள் அனைத்தையும் மீட்ட ஒரு சரித்திரமே தமிழ்நாடு போலீசாருக்கு உண்டு.

அத்தோடு, 19-12-1983 அன்று மதுரையிலே, கமலாத் தோப்பு பகுதியைச் சார்ந்த காவேரி அம்மாள் கொலை வழக்கு. இது பற்றி மிகப் பெரிய விவகாரமாக பத்திரிகையிலே சொல்லப்





பட்டது. கிட்டத்தட்ட 1 லட்சத்து 50 ஆயிரம் திருடுப்போன பொருள்களும் மீட்கப்பட்டு, கொலைவழக்கு கண்டுபிடிக்கப் பட்டு, அவர்களுக்கு தண்டனை வழங்குவதற்குரிய வகையில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்ட பெருமை தமிழ்நாடு போலீசாருக்கு உண்டு.

அதேபோல 4-3-1983 அன்று முகவை மாவட்டத்தில் சரோஜினி ஆச்சி கொலை. கொலை நடந்தது 4-3-1983. 27-3-1983லேயே கொலையாளியை கைது செய்திருக்கிறார்கள் என்பது மட்டுமல்லாமல், கொள்ளைப்போன ஒரு லட்சம் சொத்துக்களும் மீட்கப்பட்டு, வழக்குத் தொடரப்பட்ட பெருமை தமிழ்நாடு போலீசாருக்கு உண்டு.

அதேபோல திருப்பத்தூர் பகுதியில், வட ஆற்காடு மாவட்டத்தில் 21-11-1983 அன்று கண்ணப்ப செட்டியார் என்பவர் கொலை. 26-11-1983 அன்று சம்பந்தப்பட்டவர் கைது செய்யப் பட்டு, எல்லாச் சொத்துக்களும் அவர்களிடமிருந்து கைப்பற்றப் பட்டன. அந்த அளவிற்கு நாட்டிலே எந்த ரூபத்திலே யார் யார் எப்படி எப்படியோ வந்து இந்த கொலைகளையும், கொள்ளை திருட்டுகளையெல்லாம் செய்வதிலே ஈடுபட்டாலும், அவைகளை வெகு வேகமாகக் கண்டுபிடித்து, உரியவர்களிடத்திலே சேர்ப்பிக்கக்கூடிய முறையிலே, சம்பந்தப்பட்டர்களுக்கு உரிய தண்டனையை அளிக்கின்ற முறையிலே, தீவிரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு, இந்த நல்ல காரியத்தை செய்து வரும் போலீஸ் துறை, இந்திய துணைக் கண்டத்திலேயே தமிழ்நாடு போலீஸ் துறை தான் என்று சிறப்பான பெயரை பெற்றிருக்கிறது.

அது மட்டுமல்ல, சென்னை, ஷெனாய் நகர் பகுதியிலே சரஸ்வதி அம்மாள் கொலை. கொலை நடந்தது 21-12-1983 அன்று, கைது செய்யப்பட்டது 22-12-1983ஆம் தேதியன்று. அது மட்டுமல்ல 20 ஆயிரம் ரூபாய் பெறுமான சொத்து முழுவதும் இதில் மீட்கப்பட்டிருக்கிறது.

அதேபோல தமிழ்நாட்டில் கோயம்புத்தூரில் 12-6-1983-ல் அடையாளம் தெரியாதவர்களால் கொலை நடைபெற்று இருக்கிறது. யாரால் புது டெல்லியைச் சார்ந்தவர்களால், புது டெல்லியிலிருந்து தமிழகத்திற்கு வந்து கொலை செய்திருக்கிறார்கள். ஆனால் அந்த அடையாளம் தெரியாதவர்களை கண்டுபிடித்து, பகதூர் சிங் என்கிற மோகன்லால், பில்லு மற்றும் 9 பேர்களை கது செய்து, பறிபோன சொத்துக்கள் எல்லாம் மீட்கப்பட்டு உரியவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற அந்தப் பெருமையும் தமிழக போலீசாருக்கு உண்டு.

அதுமட்டுமல்ல, தாம்பரம் பகுதியில், இரும்புலியூர் கிராமம், பம்மல், சங்கர் நகர் போன்ற பல பகுதிகளில் கொள்ளை நடைபெற்றது. கொள்ளையடித்த அவர்கள் எங்கேயிருந்து வந்தவர்

கள். ராஜஸ்தான் மாநிலத்திலிருந்து தமிழகம் வந்த மினா கோஷ்டியைச் சார்ந்த சுரேந்திரசிங் மற்றும் ராம்சிங் ஆகியவர்களையெல்லாம் கைது செய்து, அவர்கள் கொள்ளையடித்த சொத்துக்களை மீட்டுக் கொடுத்த பெருமை தமிழக போலீசாருக்கு உண்டு.

அது மட்டுமல்ல, செங்கல்பட்டு, சென்னை, கிண்டிப்பகுதி மற்றும் திருநெல்வேலி பகுதிகளில் நடைபெற்ற பல வழிப்பறிகளை தமிழக போலீசார் பிடித்துள்ளனர்.

அது மட்டுமல்லாமல், 29—10—1983 அன்று அடையாளம் தெரியாத குற்றவாளிகள் சிலர், பாமாயில் லாரியை கத்தியைக் காட்டி வழிப்பறி செய்து, 2 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள எண்ணெயை எடுத்துச் சென்றிருக்கின்றனர். ஆனால் 21—11—1983-ஆம் தேதியன்றே அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களிடமிருந்து 1 இலட்சத்து 22 ஆயிரம் மதிப்புள்ள பாமாயில் எண்ணெய் கைப்பற்றப்பட்டிருக்கிறது என்கிற பெருமையும் தமிழக போலீசாருக்கு உண்டு. அத்தோடு எத்தனையோ வழிப்பறிகள், வீடுபுகுந்து கொள்ளை என்று பல திருட்டுக்களை கண்டு பிடித்தாலும், பல்வேறு நபர்கள் இந்தியத் துணை கண்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்துபோகக் கூடிய சூழ்நிலை ஏற்படுவதாலும், அவரவர்கள் அவரவர்களுக்குரிய சில கைங்கர்யங்களைச் செய்துவிட்டுப் போகிறபோது, அவைகளையெல்லாம் கண்டு பிடித்து நடவடிக்கை எடுப்பது என்பது சாதாரணமானது அல்ல. ஏனென்று சொன்னால், அவைகளைப்பற்றி போலீசாருக்கு ஏற்கெனவே தெரிந்திருக்காது. ஒரு திட்டம் போடுவது என்று சொன்னால், பாலம் கட்ட இவ்வளவு இலட்சம் ரூபாய், பள்ளிக்கூடம் கட்ட இவ்வளவு

(முற்பகல் 11-10)

இலட்சம் ரூபாய், இதை உற்பத்தி செய்ய இத்தனை இலட்ச ரூபாய் என்று முன்கூட்டியே திட்டமிட்டு விடலாம். திட்டமிட்டு செய்யப்படுகிற நிலைமை, ஏனென்றால் நம்மையும் மீறி எதிரிகள் கொலையாளிகள், குண்டர்கள், கள்ளர்கள் இவர்கள் எல்லாம் திட்டமிட்டு செய்யக்கூடிய சதியை முறியடிக்கக்கூடிய முறையில் நவீன சாதனங்களைப் பெற்று அவர்களை அடையாளம் தெரிந்துக் கொள்ளக்கூடிய அளவுக்கு பல்வேறு வகைகளிலே புலனாய்வு செய்து அவர்களை பிடித்து வழக்குப் போட்டு மீட்டுத் தர வேண்டிய சொத்துக்களைப் பறிமுதல் செய்து மீட்டுத்தர வேண்டிய கடமை அவர்களுக்கு இருக்கிறது.

அயல்நாட்டிலே வேலைவாங்கித் தருவதாக கன்னியாகுமரியிலே முன்னாள் பாதிரியாக இருந்த கே. ஜி. வர்கீஸ் உங்களுக்கு அயல்நாட்டிற்குச் சென்று வேலை வாங்கித் தருகிறேன் என்று சொல்லி 2 இலட்ச ரூபாய் மோசடி செய்துவிட்டார். அதைக் கண்டுபிடித்து தண்டனை வாங்கிக் கொடுத்ததும் இந்தக் காவல் துறைதான்.



அது மட்டுமல்ல, பாங்கியிலே போய் பணம் கட்டும்போதும் பணத்தை வாங்கிக்கொண்டு வருகின்றபோதும் அதைப் பார்த்து பிக்பாக்கெட் செய்ய வழிப்பறி செய்ய ஒரு கம்பெனியே இருக்கிறது. அதைப் பார்த்து அவர்கள் எங்கெங்கே நடமாடுகிறார்கள், சந்தேகத்திற்குரியவர்கள் எந்த எந்தப் பகுதிகளிலே இருக்கிறார்கள், பண நடமாட்டம் எங்கு இருக்கிறது அதனால் அந்த இடத்தில் வழிப்பறி நடக்குமோ பிக்பாக்கெட் இருக்குமோ, கொலை செய்து விடுவானோ, கொள்ளை அடித்துவிடுவானோ, என்ற நிலையில் ரோந்து சுற்றி அவர்களையெல்லாம் அடையாளம் காணவேண்டிய அளவுக்கு ஏற்கெனவே எச்சரிக்கையாக இருந்து அப்படி நடந்துவிட்ட நிலையில் வெகு வேகமாக மீட்டுத்தருகிற பொறுப்பையும் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். பணம் வங்கியில் கட்டும்போது அப்படிச் செய்த நாடு தழுவிய ஒரு கும்பலையே கைதுசெய்தது நம்முடைய காவல் துறைதான்.

கணவனே மனைவிமீது மண்ணெண்ணெய் ஊற்றி—இது குடும்பத் தகராறு, போலீஸ் துறைக்கு எப்படி எப்படி விவகாரங்கள் எல்லாம் வருகின்றன என்பதைப் பாருங்கள்—நெருப்பை வைத்துவிட்டு போலீஸிலே வந்து அவன் புகாரும் கொடுத்துவிடுகிறான். அவளே தற்கொலை செய்து கொண்டுவிட்டாள் அல்லது வேறு யாரோ செய்து விட்டார்கள் என்று சொல்லுகிறபோது அதைப்பற்றி புலனாய்வு செய்து விசாரித்து யார் மண்ணெண்ணெய் ஊற்றி நெருப்பு வைத்தார்களோ அவர்களைக் கண்டிபிடித்து தண்டனை வாங்கிக்கொடுக்கிற பொறுப்பும் இந்தக் காவல்துறைக்கு உண்டு.

அது மட்டுமல்ல, பேராசைக்காரர்கள், கள்ள நூறு ரூபாய் புழக்கம் நோட்டு மாற்றுகிற வகையறாக்கள், வெளிநாட்டு தங்கம் குறைந்த விலையில் கொடுக்கப்படும் என்று அதிகாரிகள் போல் வேஷம்போட்டு அவர்களை கைது செய்வதைப்போல் நடந்துகொண்டு அவர்களிடமிருந்து எடுத்துக் கொண்டு போனவர்களையும் அவர்களுக்கு உடந்தையாக இருந்த போலீஸ் அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுத்தார்கள். அந்தக் கும்பலையே கைதுசெய்து நடவடிக்கை எடுத்த பெருமை இந்த இலாகாவிற்குதான் உண்டு. அது மட்டுமல்ல, ரஷ் என்கிற பாபு, அண்ணா நகரைச் சேர்ந்தவர்கள் எல்லாம் மிகப் பெரிய அளவிலே உள்ள அந்த கொள்ளை கோஷ்டியை காவல் துறை கைது செய்திருக்கிறது. இப்படி எத்தனையோ விவகாரங்களைச் சொல்லலாம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

அதுமட்டுமல்ல, ஜாதிக் கலவரங்கள் 1978-இல் விழுப்புரத்தில் ஆதி திராவிடர்கள் இந்துக்கள் போன்ற கலவரங்கள் நடந்தன. மருதூரிலே, குளத்திலே 9 சடலங்கள் எதிர்பாராமல்,

[டாக்டர் கே. சமரசம்] [1984 மார்ச் 29

அதிலே குற்றவாளிகள் கைது செய்யப்பட்டவர்கள் 41 பேர்கள். 27 பேர்களுக்கு ஆயுள் தண்டனை வாங்கிக் கொடுத்து இருக்கிறார்கள். 'திருடராய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது' என்று சொல்வார்கள். ஆனால் அவர்கள் 'திட்டம் போட்டுத் திருடுகிற கூட்டம் திருடிக்கொண்டே இருக்கிறது' என்பதைப் போல் அவர்கள் எல்லாம் திட்டம் போட்டு திருடுகிற நிலைமைகளையெல்லாம் கண்டுபிடித்து உள்ளே தள்ள வேண்டிய பொறுப்பு இந்தக் காவல் துறைக்கு இருக்கிறது. அது மட்டுமல்ல.

தஞ்சாவூரிலே உள்ள நடராசர் சிலை 1978 ஆம் ஆண்டிலே களவு போனது. 1982-இல் புலனாய்வுத் துறை கண்டுபிடித்தது. அமெரிக்காவில் டல்லாசில் உள்ள கிம்வெல் கலைப் பொருள் அருங்காட்சியகத்தில் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு, மத்திய அரசு மூலம் இலவசமாக எவ்வித நிபந்தனையுமில்லாமல் திருப்பிப் பெற வழிவகை செய்துள்ளது நம்முடைய காவல் துறை.

அது மட்டுமல்ல, தமிழ்நாட்டு குற்றப் புலனாய்வுத் துறை கொடுத்த தகவலின் பேரில் ஸ்காட்லாந்து காவல் துறையினர் லண்டனிலுள்ள இந்திய கடத்தல்காரன் எல். பி. கொரோரியா வீடு சோதனை போடப்பட்டு 40-க்கும் மேற்பட்ட கலைப் பொருட்கள் சிக்கின. இதேந்திர ராவல் என்பவரிடம் 207-க்கும் மேற்பட்ட கலைப் பொருட்கள் இங்கே இருக்கக்கூடிய குருக்கள், அர்ச்சகர்கள் இவர்களை அழைத்துப் போய் அடையாளம் சொல்லச் சொல்லி இங்கிலாந்திலே அவைகளைக் கைப்பற்றியிருக்கின்ற பெருமை இந்தத் துறைக்கு உண்டு.

மின்சாரக் கம்பிகளைத் திருடுவது, இப்படிப்பல்வேறு வகைகளிலே நடைபெறுகின்ற குற்றங்களைக் கண்டுபிடிக்கிறார்கள். ஒரே குடும்பத்தில் 9 பேர்கள் கொலை செய்யப்பட்டார்கள், அந்த ஜெயப்பிரகாசை 24 மணி நேரத்திற்குள்ளாக கண்டுபிடித்த பெருமை நம்முடைய காவல் துறைக்கு உண்டு. இப்படிக் காவல் துறை எந்த எந்த வகையிலே எந்த எந்த ரூபத்திலே குற்றங்கள் செய்யப்பட்டாலும் அவற்றையெல்லாம் நல்லமுறையில் கண்டுபிடிக்கிறது.

இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் போலீசை தவறான காரியத்திற்காகப் பயன்படுத்துவது இல்லை. மப்டியிலே வந்து உட்காருங்கள் என்று சொல்வதில்லை. தவறான செயலுக்கு அவர்களைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்வது கிடையாது. அவசரகால சட்டமோ வேறு ஒரு சட்டமோ சொன்னால் அதை ஏற்றுக்கொண்டு வேறு ஏதாவது ஒரு சட்டம் மிசாச் சட்டம் என்று சொன்னால் மிசாவிலே கைதுசெய்ய போலீசைப் பயன்படுத்துவது கிடையாது. இப்படி சொல் ஒன்றும் செயல் ஒன்றும் ஆக நடந்துகொண்டதாக சரித்திரமே இல்லை. எந்த அளவுக்கு முடியுமோ, எந்த அளவுக்குத் தேவையோ அந்த



1984 மார்ச் 29] [டாக்டர் கே. சமரசம்].

அளவுக்கு காவல் துறையைப் பயன்படுத்தி நாட்டு மக்களுடைய நலிவைப் போக்குவதற்காக, பாதுகாப்புக் கொடுப்பதற்காக, நியாயமான உரிமைகளைப் பெறுவதற்காக வழிவகைகளைச் செய்கிறது. எந்த ரூபத்தில் எந்த நிலையிலே வந்தாலும்கூட சமாளிக்கக்கூடிய வகையிலே இந்தக் காவல் துறை இயங்கிக் கொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் காவல் துறையை நல்ல முறையிலே செயல்படுத்தக்கூடிய புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் இதிலே எடுத்த ஒரு சிறப்பான நடவடிக்கையாகும். ஆகாயத்தில் ஒரு பட்சி பறந்து கொண்டிருக்கும். அது பறந்துகொண்டிருக்கிற போதே முட்டையிடும், அந்த முட்டை கீழே வருவதற்குள் கொஞ்சதூரம் அது வந்தவுடன் அது வெடித்து அதிலிருந்து குஞ்சு பொறிக்கும், குஞ்சு மேலே போகும், தாயும் குஞ்சும் சேர்ந்து போகும். அப்படிப்பட்ட சக்திவாய்ந்த சக்கரவாகப் பட்சிபோல் நிர்வாகத்திலே இருக்கிற காரணத்தினால் தனித் தன்மையோடு தமிழகத்தைக் கட்டிக்காத்து இந்தியத் துணைக் கண்டத்திலேயே தலைநிமிர்ந்து இருக்கக்கூடிய காவல் துறையைக் கையில் வைத்துக் கொண்டு நல்ல முறையில் இயங்கும் அமைப்பாக நடத்தி வருகிறார்கள்.

போல்ஸைப் பார்த்தவுடனே நாகப்பாம்பு என்று சொல்வார் கள். நாகப்பாம்புக்கு விசேஷ குணம் உண்டு. நாம் நம் வேலை யைச் செய்தால் அது வழியே அதுபோகும். நம்மைக் கடிக்காது. சும்மா பதம் பார்த்துவிட்டால் சுரம் வைத்துக் கொன்றுவிடும். அவர்களும் அப்படித்தான். நாகப்பாம்பை எதற்காகப் பயன் படுத்தவேண்டுமோ அதற்காகப் பயன்படுத்தவேண்டும். நாகப் பாம்பின் விஷத்தை எடுத்து நாகா என்ற மருந்து தயாரிக்க முடியும். இருதயப் படபடப்பு, இருதய வால்வு நோய்களுக்கு அதைப் பயன்படுத்த முடியும் என்பது மருத்துவர்களுக்குத் தெரியும். காவல் துறை என்கிற இந்த நாகப் பாம்பினுடைய படம் என்கிற விஷம் இந்த நாட்டிலே உள்ள நலிந்த சமுதாயத் திற்காக சமுதாயத்திலே இருக்கின்ற பலவிதமான நோய்களை அகற்றுவதற்காக மருந்தாகப் பயன்படுத்தக்கூடிய வகையிலே இருப்பதாகும். அந்த வகையிலே காவல் துறை மேலும் விரிவாக் கப்பட்டு முனைப்பாக பல திட்டங்களை அறிமுகப்படுத்தியிருக் கிறது. ஆகவே, இந்த சிறப்பான மானியக் கோரிக்கைகளை நான் வரவேற்று அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இந்த அரசினுடைய போலீஸ் கொள்கைபற்றி எங்களுடைய மார்க்கிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் சில முக்கியமான கருத்துக்களை நான் முன் வைக்க விரும்பு கிறேன். எங்களுடைய கட்சியில் நான் தான் பேசுகிறேன். இந்த நிலையில் எனக்கு அதிகமான நேரத்தை ஒதுக்கி தர வேண்டும் என்று நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கொடுக்கிறேன்.

But time is not transferable.

[1984 மார்ச் 29

திரு. கு. ரமணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜனங்களுக்கும், ஜனநாயகத்திற்கும் இந்த அரசினுடைய போலீஸ் கொள்கை நியாயத்தை வழங்கவில்லை. இது ஜனநாயக விரோதமான பாதையில் சென்று கொண்டிருக்கிறது என்பதை பல புள்ளி விவரங்களோடும் அனுபவங்களோடும் இந்த அவையில் நான் எடுத்துக் கூறி இருக்கிறேன் விவாதத்தில். கடந்த 4 ஆண்டு கால அனுபவம் இதை விவரிக்கிறது. போலீஸ் மானியத்தில் அளித்து இருக்கக்கூடிய ஆய்வுரையை, குறிப்பைப் பார்த்தால் இது உங்களுக்குத் தெரியும். 1982 ஆம் ஆண்டை விட 1983 ஆம் ஆண்டில் ஒட்டு மொத்த அளவில் குற்றங்கள் அதிகரித்துள்ளன என்று அளித்துள்ள அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அப்படி என்றால் அதன் அர்த்தம் என்ன ? சென்ற 4 ஆண்டுகளில் அதாவது 1980 லிருந்து நீங்கள் எடுத்துக் கணக்குப் பார்த்தால் என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பது தெரியும். குற்றங்களை தாராளமாக பதிவு செய்ய வேண்டும் என்ற முறையில் அதிகமான குற்றங்கள் பதிவு செய்வதற்கு காரணமாக அமைந்துள்ளது என்று ஒரு காரணத்தை சொல்லியிருக்கிறார்கள். அப்படி என்றால் குற்றங்களை தாராளமாக பதிவது என்பது ரொம்ப சந்தோஷமான இனிமையான காரியத்தை செய்கிற மாதிரி தான் குற்றங்கள் இன்று நாட்டில் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறதா? பயங்கரமான அளவுக்கு ஏழை எளிய மக்கள், அடி மட்டத்தில் உள்ள மக்கள் கடுமையான அளவுக்கு தாக்கப்படுவதும் அந்த விஷயங்களை எல்லாம், குற்றங்களை எல்லாம் போய் போலீஸ் இலாகாவில் சொன்னால் அதை எடுத்துக்கொண்டு பரிசீலிப்பதும், பதிவு செய்வதும், நடவடிக்கை எடுப்பதற்கும் எத்தனை ஆட்கள், எத்தனை போலீஸ்காரர்கள், எத்தனை நிலையங்கள் என்பது அல்ல பிரச்சினை. இது அந்த மக்களுக்கு தேவைக்கு கிடைப்பது இல்லை, என்று சொன்னால் அப்படி நாம் அதிக குற்றங்களை பதிவு செய்வதால்தான் அந்த மாதிரி வந்தது என்று சொன்னால் நீங்கள் பதியாத குற்றங்கள் எத்தனை ஆயிரம் கணக்கில் இருக்கிறது என்பதை உங்கள் அறிக்கையில் இருக்கிறது. அப்படி என்றால் குற்றங்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. நீங்கள் அத்தனையையும் பதிவதில்லை ; பதிந்ததை பூராவும் உங்களால் ஆராய்ச்சி செய்ய முடிவது இல்லை. ஆயிரக்கணக்கான குற்றங்கள் எடுக்கப்படாமல், முடிக்கப்படாமல் போகின்றன என்பது தான் உண்மை.

(முற்பகல் 11-20)

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், உழைப்பாளி மக்களைப் பொறுத்தவரையில் உங்கள் கொள்கை, போலீசின் பலத்தைக் கொண்டு உழைப்பாளி மக்களின் போராட்டங்களையும், ஜனநாயகப் போராட்டங்களையும் அடக்குவது என்ற தன்மையில் போய்க்கொண்டிருக்கிறது. இதைப் பல சந்தர்ப்பங்களில் எடுத்துக் காட்டியிருக்கிறோம்.



1984 மார்ச் 29] [திரு. கு. ரமணி]

உதாரணத்திற்கு ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு மோசமான விஷயம்; 1982 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் தேதி இந்திய நாடு முழுவதும் ஒன்றேகால் கோடிக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் முதன்முதலாக நாடு தழுவிய நிலையில் ஒன்று பட்டு தங்கள் எதிர்ப்பு வேலை நிறுத்த இயக்கத்தை ஒரு நாள் காட்டினார்கள். நீங்கள் அந்த வேலை நிறுத்தத்தை அனுமதித்தீர்களா? கடைசிவரையில் எதிர்த்து பிரச்சாரம் செய்தது மட்டுமல்ல; போலீஸ் படையின் பெரும் சக்தியைத் திரட்டித் தாக்கியிருக்கிறீர்கள். அதனால் தஞ்சை மாவட்டத்திலே துப்பாக்கிச் சூட்டில் ஏழை எளிய விவசாயிகள்தான் மூன்று பேர்கள் இறந்தார்கள். அதற்குப்பிறகும் கூட அந்தக் கேசை வாபஸ் வாங்குவதற்கு விரும்பவில்லை. இப்படி ஆட்களும் இறந்து போய், கேசும் போடப்பட்டு, நூற்றுக்கணக்கில் கைது செய்யப்பட்டு இருக்கின்ற நேரத்திலேயும் அந்தக் கேஸ் முழுவதையும் நீதிமன்றத்திற்குச் சென்று வழக்காடியே தீர்க்க வேண்டியிருந்ததே தவிர வாபஸ் வாங்கவில்லை.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இப்படித் தொழிலாளர்கள், விவசாயிகள், பொதுமக்கள் ஆகியவர்களின் போராட்டங்கள் நடந்து முடிந்தால் பிறகு வழக்குகளை வாபஸ் வாங்குவது என்பது நல்லது என்ற பழக்கத்தைக் கையாள வேண்டாமா? பெரும் கொலைக் குற்றங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளைப் பற்றி நான் சொல்லவில்லை. சாதாரணமாக தொழிற் சங்கப் போராட்டங்கள், விவசாயிகள் போராட்டங்கள், பொது ஜனப் போராட்டங்கள், மாணவர் போராட்டங்கள் போன்ற இப்படிப்பட்ட போராட்டங்களில் ஏற்படும் வழக்குகளில், அந்தப் போராட்டங்கள் முடிந்து சுமுகமான சூழ்நிலை ஏற்படுகின்றபொழுது அதை வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டியதுதான் நியாயமான ஜனநாயகக் கடமையாகும். அப்படியொரு கொள்கை இந்த அரசுக்கு இருக்கிறதா என்று கேட்டால் இல்லை என்பதுதான் எங்கள் அனுபவம். வழக்குகள் முழுவதையும் கடைசிவரைக்கும் நடத்தி, கிட்டத்தட்ட ஒரு சாதாரண நியாயத்தைக் கூட ஏற்காமல் பழி தீர்க்கும் கண்ணோட்டத்தோடு போலீஸ் படையின் நடவடிக்கைகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் சொல்ல வேண்டியிருக்கிறது.

அண்மையில் நடந்து முடிந்ததும் இப்பொழுது தொடர்ந்து கொண்டிருக்கும் சில விஷயங்களைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையில் நடந்த போராட்டம். தமிழ்நாடு முழுவதும் தெரிந்த உண்மை இது. ஒரு பெரிய முதலாளி அந்தத் தொழிற்சாலையின் நிர்வாகத்தை எடுத்துக்கொண்டதாலே பாதிக்கும் மேற்பட்ட தொழிலாளர்களை வெளியேற்றி, பாதிக்கப்பட்டவர்களான — அங்கேயிருக்கின்ற உழைப்பாளி மக்கள் இருக்கிறார்களே அவர்கள் போராட்டம்

நடத்துகிறார்கள். வெளியே அனுப்பாதே, அங்கேயே வேலையில் இருக்கவேண்டுமென்று நடக்கின்ற அந்தப் போராட்டத்தில் நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்?

நெல்லிக்குப்பம் மெயின் ரோட்டிலிருந்து தொழிற்சாலையின் வாசற்படி வரையில் ஒரு இஞ்சு இடம்கூட விடாமல் இரண்டு பக்கங்களிலேயும் போலீசாரைக் கொண்டு சுவர்வைத்து விட்டார்கள். எதற்காக? கருங்காலிகளை உள்ளே அனுப்பி வைக்க —முதலாளிகள் தேடிப்பிடித்துக் கொண்டுவருகின்ற கைக்கூலிகளையும், கையாட்களையும் தொழிற்சாலைக்குக் கொண்டு போக இவ்வாறு செய்யப்படுகிறது. இது என்ன ஜனநாயகம்? இப்படிப்பட்ட நிலைமை உங்களுக்கு வந்தால் என்ன நிலையை எடுப்பீர்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், அங்கேயிருக்கின்ற பல்லாயிரக்கணக்கான சர்க்கரை மூட்டைகள் வேகன்களில் ஏற்றப்படுகின்றன. ஏற்கனவே அவ்வாறு ஏற்றுகின்ற வேலையைச் செய்து வந்த தொழிலாளர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பதிலாக வேறு ஆட்களைக் கொண்டு வந்ததை அந்தத் தொழிலாளிகள் ஒத்துக்கொள்ளவில்லை. ஆகவே, சர்க்கரை மூட்டைகளை வேகன்களில் ஏற்றுகின்ற வேலைகளையும், அந்த வேகன்களைத் தண்டவாளத்தில் தள்ளிக்கொண்டுபோய் கோடவுனுக்குப் பின்னால் சேர்க்கின்ற வேலையையும் போலீசாரே செய்தார்கள். அங்கே ஒரு சப்-இன்ஸ்பெக்டர்கூட அந்த வேகனைத் தள்ளுகின்ற வேலைக்குப் போனார்கள் என்றால் எவ்வளவு பரிதாபமான நிலைமைக்கு அவர்கள் வந்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படி ஒரு தொழிற்சாலை முதலாளிக்குச் சர்வீஸ் செய்யும் நிலைமைக்கு நீங்கள் கொண்டு வந்துவிட்ட பிறகு ஜனநாயகத்தைப் பற்றி பேசிப் பயன் என்ன?

ஆகவே நீங்கள் இங்கே நியாயம் பேசிப் பயன் என்ன என்பதைச் சிந்திக்க வேண்டும். அதேமாதிரிதான் இப்போது கரூர் மில்லிலே போராட்டம் நடந்து கொண்டிருக்கின்றது. அதை நிர்வகிப்பவர் ஒரு பெரிய பஸ் முதலாளி. அவர் ஒரு பெரிய ரவுடிக் கூட்டத்தையே திரட்டி வைத்து மோட்டார் தொழிலாளிகளைத் தாக்கிக் கொண்டிருந்த ஒரு மிகப்பெரிய மனிதர். அவர் இப்போது இந்த மில்லின் நிர்வாகத்திலே இருக்கிறார். எந்த அளவுக்கு கொள்ளை சுரண்டல் ஆகியவற்றைச் செய்ய வேண்டுமோ அவை அத்தனையும் செய்தவர். 7 வருஷம் சர்வீஸ் ஆன தொழிலாளர்களை எல்லாம் கத்துக்குட்டி தொழிலாளர்கள் என்று பெயர் கொடுத்து வைத்திருந்தார். அதன் காரணமாக அங்கே சர்வ கட்சிகளைச் சேர்ந்தவர்களும் போராட்டம் நடத்தினார்கள். சர்வ கட்சித் தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்களும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் உட்பட பலரும் போராட்டத்திலே பங்கெடுத்தார்கள். அந்த முதலாளி எப்படிப்பட்டவர் தெரி





யுமா? அங்கே சர்க்கார் ஒப்பந்தம் பண்ணவில்லை; அந்த முதலாளியே ரவுடிகளை உள்ளே வரவழைத்து தானே ஒரு ஒப்பந்தத்தைத் தயார் பண்ணி, தொழிலாளர்களை மிரட்ட ரவுடிகளுக்குச் சாராயத்தை வாங்கி கொடுத்து தாக்கச் செய்து தொழிலாளர்களிடத்திலே இருந்து அந்த ஒப்பந்தத்திலே கையெழுத்து வாங்கியவர் அவர்.

இப்படிப்பட்ட நிலைமைகளிலே போலீஸ் யாருக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும்? ஏழை மக்களுக்காகச் செயல்படக்கூடிய குணம் அவர்களுக்கு இருந்தால் அந்தப் போலீஸார் தொழிலாளர்களுக்காகத்தான், அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்காகத்தான் செயல்பட வேண்டும். அப்படி அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கவில்லை. என்ன நடந்தது? முதலாளிகளுக்குத்தான் பாதுகாப்பு கொடுத்தார்கள். கருங்காலிகளைத் தடுத்தார்கள் என்ற காரணத்திற்காக 100 பேர்களைக் கைது செய்தார்கள். அவர்களில் 50 பேர்கள் மீது 307 செக்ஷன்படி கேஸ் போடப்பட்டது. அந்த 307 செக்ஷன் என்பதை ஒரு சர்வரோகநிவாரணியாகத்தான் அவர்கள் பயன்படுத்துகிறார்கள். ஏன் அந்த செக்ஷனைப் பயன்படுத்துகிறார்கள் என்ற ரகசியம் அனைவருக்கும் தெரிந்ததுதான். அந்தத் தொழிலாளர்கள் ஜாமீனிலே வரக்கூடாது என்பதற்காகத்தான் அவ்வாறு செய்யப்பட்டது. அவ்வாறு 50 பேர் மீது 307 செக்ஷன்படி வழக்கு தொடரப்பட்டு அவர்கள் நிபந்தனையுடன் திருச்சிராப்பள்ளியிலே கொண்டுபோய் அடைக்கப்பட்டார்கள்.

சி.ஐ.டி.யு. சங்கச் செயலாளர் முத்தப்பன் என்பவரைக் கொலை செய்வதற்காக அங்கே முதலாளி குண்டர்களை ஏவிவிட்டு பணமும் கொடுத்திருக்கிறார். அந்தப் பணத்தை அவர்கள் வைத்திருந்தபோது வீட்டிலே இருந்த பெண்கள் பார்த்துத் தெரிந்துக் கொண்டு அந்த விஷயத்தைச் சங்கத்திலே வந்து சொன்னதன் காரணத்தால் அந்தத் தொழிலாளி பாதுகாக்கப்பட்டார். கொலை செய்யப்படுவதற்காகச் சிக்காமல் பாதுகாக்கப்பட்டார். இப்படிப்பட்ட நிலைமைதான் இருந்து கொண்டிருக்கின்றது. இது எல்லாம் அரசாங்கத்திற்குத் தெரியாதா? நன்றாகத் தெரியும். ஆளும் கட்சியிலே உள்ள பல தலைவர்களுக்கும் இது தெரியும்.

மதுரை மருத்துவக் கல்லூரியிலே என்ன நடந்தது? அந்த மாணவர்களை எல்லாம் பிடித்துக் கொண்டு போய் போலீஸ் இலாக்காவினர் குடியிருக்கக்கூடிய வட்டாரத்தில் உள்ள மைதானத்தில் நிறுத்தி, சுற்றி நூற்றுக்கணக்கான போலீஸ்காரர்களை நிறுத்தி அடித்து அவர்களைத் தூளாக்கியிருக்கிறார்கள். அதனால் தான் அந்த மாணவர்களும், மதுரை நகர மக்களும் ஆத்திரம் கொண்டு அதை எதிர்த்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நடவடிக்கை மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கே வருகின்றது என்று சொன்னால் போலீஸ் எதற்கு காவலர்கள்?

[திரு. கு. ரமணி] [1984 மார்ச் 29

அவர்கள் ஜனநாயகத்திற்குக் காவலர்களா ? யாருக்கு அவர்கள் காவலர்கள் ? எனவே இதைப்பற்றி அரசு சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

போன ஆண்டு, 1983 ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் தேதி சர்வ கட்சியின் சார்பிலே மறியல் நடந்தது. அப்போது போலீஸ் என்ன நடவடிக்கை எடுத்தது ? அந்த மறியல் போராட்டம் நடக்காமல் இருப்பதற்காக முன்னதாகவே தி.மு.க. கட்சியைச் சேர்ந்தவர்களையும், எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களையும், மற்ற கட்சிகளைச் சேர்ந்தவர்களையும் கைது செய்தார்கள். அந்தப் போராட்டம் என்ன போராட்டம் தெரியுமா ? விலைவாசியை எதிர்த்துப் போராட்டம். ஜனங்களுக்குச் சில சலுகைகள் வேண்டும் என்று கேட்கின்ற சர்வ சாதாரணமான ஒரு பிரச்சினை. இந்திய நாடு முழுவதும் இருக்கக் கூடிய அப்படிப்பட்ட ஒரு. பிரச்சினையின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை. அப்படிப்பட்ட காரணத்தால் மறியல் போராட்டம் நடத்த இருந்தவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அப்படி என்றால் ஜனநாயகத்தை நசுக்குவதற்கும், ஜனநாயக இயக்கங்களை நசுக்குவதற்கும் அடக்கு முறையைக் கையாண்டு கைது செய்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. அப்படி எல்லா இடங்களிலும் கைது செய்யாமல் சில இடங்களிலே அடித்தே விரட்டினார்கள். கைது செய்யப்பட்டவர்களையும் சிறைக்குக் கொண்டு போகவில்லை. சில பூங்காக்களுக்கும், சில காலி இடங்களுக்கும் கொண்டு போய் சாயங்காலம் 5 மணிக்கு மேலே சர்க்கார் உத்தரவின் பேரிலே, அவர்களை வெளியிலே விட்டுவிட்டார்கள். இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(முற்பகல் 11-30)

அப்படியானால் மக்களுடைய ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அந்தப் போலீசுடைய நடவடிக்கை எப்படி உதவும் என்பது நீங்கள் சிந்திக்க வேண்டிய விஷயம்.

அதே மாதிரி விவசாயத் தொழிலாளிகளைப் பற்றி மிகவும் பிரமாதமாக இங்கே பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பலரும் இந்த பட்ஜெட்டிலே கூட அவர்களுக்கு இன்ஷூரன்ஸ் ஸ்கீமைக் கொண்டுவரப் போகிறோம், காப்பாற்றப் போகிறோம் என்று சொன்னார்கள். ரூ 10 கோடிக்கு வேஷ்டி, சேலைகளைக் கொடுத்தோம். கொடுப்பதைப் பற்றித் தவறு சொல்லவில்லை. ஆனால் நிலைமை என்ன ? அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச அடிப்படைக் கூலியைப் பெறுவதற்கு உத்தரவாதம் இருக்கிறதா? ஆனால் போராட்டம் நடந்தால் அந்தப் போராட்டத்தை உடைப்பதற்கு வேறு ஊர்களிலிருந்து ஆட்களைக் கொண்டு வருவதற்கு, சப்போர்ட் கொடுப்பது யார் ? போலீஸ் படைதான். அதிகாரிகளும் சேர்ந்து சப்போர்ட் கொடுக்கிறார்கள். அதனால் ரெவின்யூ இலாகாவில் இருக்கிற தாசில்தார்கள் அந்தப்



1984 மார்ச் 29] [திரு. கு. ரமணி]

போராட்டங்களுக்குப் பேச்சு வார்த்தை நடத்த பொறுப்பு அளிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள். அவர்கள் பேச்சு வார்த்தைகள் நடத்தி பேசக் கூடிய காலத்திலே இங்கே போராட்டங்கள் உடைக்கப்படும். ஒரு பக்கம் ரெவினியூ அதிகாரிகள் பேசிக் கொண்டிருப்பார்கள், மற்றொரு பக்கம் போலீஸ் இலாகாவில் அந்தப் போராட்டத்தை உடைத்துக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட நடவடிக்கை ஏன் ? இது ஜனநாயகம் அல்ல. பிரிட்டிஷ்காரன் இந்த நாட்டை விட்டுப்போன காலத்திலிருந்து இந்த நாட்டை ஆண்ட காங்கிரஸ்காரர்கள் எப்படி, பிரிட்டிஷார் விட்டுப் போன அடக்கு முறைகள் முழுவதையும் பயன்படுத்தினார்களோ, அதே பாதை தான். இது ஒன்றும் வேறு பாதையல்ல என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். குற்றமற்றவர்களைக் கைது செய்து பிணைக் கைதிகள் மாதிரி வைக்கிற நிலைமைகள் இருக்கின்றன. உதாரணமாக, கன்னியாகுமரியிலே 20-2-1984 அன்று அருமனை போலீஸ் ஸ்டேஷனைச் சேர்ந்த எஸ். ஐ. அங்கே இருந்த அருமனை போலீஸ் சரகத்திற்கு அரியமாதா என்பவரைக் கைது செய்ய வேண்டுமென்று வந்தார். ஆள் கிடைக்கவில்லை. அந்த அரியமாதாவினுடைய மகளைக் கைது செய்தார். நன்றாகத் தெருவிலே தலைமுடியைப் பிடித்து இழுத்து அடித்தார். அந்த அம்மாளுடைய பெண் ஒரு பள்ளியிலே படிக்கிற பெண். அந்தப் பெண் சாப்பிடுவதற்கு வீட்டிற்கு வரும் போது முன்னாலே, ரோட்டிலே தனது தாயாரை அடிப்பதைப் பார்த்து, கத்தி அழுதாள். என் தாயாரை அடிக்காதீர்கள், அவர் ஆஸ்பத்திரியில் ஆப்பரேஷன் செய்து வந்துள்ளார் என்று சொன்னாள். அந்தப் பெண்ணின் தலைமுடியையும் பிடித்து இழுத்து கீழே தள்ளி சக்கையாக அடித்தார்கள். இரண்டு பேரையும் கூடவே இன்னொருவரையும் கொண்டு போய் எங்கே வைத்தார்களோ தெரியாது. மறு நாள் மாணவர்களும், மக்களும் கிளர்ச்சி செய்ததற்குப் பிறகு அந்தப் பெண்ணை கொண்டு போய் அங்கே பள்ளிக்கூடத்திலே விட்டுவிட்டிருக்கிறார்கள். ஆனால் கைது செய்துள்ளார்கள். மற்றொருவர் பேரிலே குற்றம் இல்லை. புகாருக்கு உரிய ஆளான அரியமாதாவைப் பிடிக்க முடியாமல் மகளையும் இன்னொருவரையும் கைது செய்து சிறையில் அடைக்கிறார்கள். இது ஒரு மாதிரி பிணைக் கைதிகள் போன்ற ஏற்பாடு. அவர்களைக் கொண்டு போய் வைத்தால் மற்றவர்கள் வருவார்கள் என்ற முறை. இந்த முறை என்ன முறை ? இந்த முறைக்கு நீங்கள் பதில் சொல்ல முடியுமா என்று நான் கேட்கிறேன்.

அதே மாதிரி 1983 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் எபனேஸ்வர் என்ற ஸ்பெஷல் தாசில்தார் அரிசி கடத்தலைத் தடுத்திருக்கிறார். அவர் குமரி மாவட்டத்திலே கொடுவெட்டி என்ற ஊரிலே லாரியைப் பிடித்தார். அந்தக் காரணத்திற்காக அந்த தாசில்தாருடைய மகனைக் கொலை செய்த விஷயம் இதே மன்றத்தில் போன வருஷம் நவம்பர் மாதம் 8 ஆம் தேதி மாண்புமிகு உறுப்பினர்

திரு. உமாநாத் அவர்களால் எடுத்துச் சொல்லப்பட்டது. இன்று வரைக்கும் எந்தக் குற்றவாளியையும் பிடிக்கவில்லை, நடவடிக்கை எடுக்கவில்லை. நீங்கள் திறமை பற்றிப் பேசுகிறீர்கள், நாங்கள் திறமை உள்ளதை இல்லையென்று சொல்லக்கூடியவர்கள் அல்ல. ஆனால் நடப்பது இப்படி இருக்கிறது.

அடுத்தது உங்களுக்குத் தெரியும், இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் இங்கே பேசி இருக்கிறோம். கன்னியாகுமரி மாவட்டத்திலே ஆர். எஸ். எஸ். காரர்களுடைய பலாத்கார நடவடிக்கைகள் எவ்வளவு மோசமாகப் போய்க் கொண்டிருக்கின்றன என்பதை. இன்றைக்கு நிலைமை என்ன? 17-3-1983 அன்று அருமனை காவல் நிலைய எல்லையில் மார்க்சீய கம்யூனிஸ்ட் ஊழியர்களுக்கும் ஆர். எஸ். எஸ். காரர்களுக்கும் வாய்ப் பேச்சு வந்தது. அந்த ஆர். எஸ். எஸ். காரர்கள் உடனே போய் காவல் நிலையத்தில் ரிப்போர்ட் கொடுத்து, உடனே 23 மார்க்ஸிஸ்ட் ஊழியர்களைப் பிடிக்கிறார்கள். அடிதடியோ, கலகமோ, சண்டையோ நடக்கவில்லை. பிடித்துப் போய் காவல் நிலையத்திலே அவர்களை அடைத்து விட்டார்கள். அன்றைக்கு இந்த ஆர். எஸ். எஸ். காரர்கள் அந்த குறிப்பிட்ட ஊருக்குச் சென்று மஞ்சால்முட்டு என்ற ஊருக்குப் போய் வீடுகளைத் தாக்குவதற்கு முயற்சித்தார்கள். அந்த முயற்சியை அந்த ஊர் மக்கள் தடுக்க வேண்டி வந்தது. போலீஸ் அதைத் தடுத்ததா? இப்படி கம்யூனிஸ்ட் கட்சி ஊழியர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஊழியர்கள் என்று சொன்னாலே விரோத எண்ணத்தோடு அந்த அருமனை போலீஸ் ஸ்டேஷன் இன்றைக்குச் செயல்படுகிறது. கிட்டத்தட்ட ஆர். எஸ். எஸ். காரர்கள் முகாமாக அது இருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. இது பற்றிய ரிப்போர்ட்டுகளை முதலமைச்சர் உள்பட அனைத்து அதிகாரிகளுக்கும் அனுப்பினோம். ஆனால் எந்தவிதமான முடிவும் இல்லை.

அதைப்போல கள்ளச்சாராயத்தைப் பிடிப்பதற்காக உதவிய காவலரே கொலை செய்யப்பட்டார்கள். அதுவும் கன்னியாகுமரி மாவட்டத்தில் நடந்தது. 1983ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் கள்ளச்சாராயத்தைப் பிடிக்க போலீசிற்கு உதவி செய்த சுந்தரராசன் என்ற காவலரை சாராயக் கடைக்காரர்கள் எல்லாம் சேர்ந்து கொலை செய்துவிட்டார்கள். சந்தேகம் ஏற்பட்டு சாமியார் மடம் பகுதியிலுள்ள அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து போலீசுக்குப் புகார் போகிறது. 18-11-83-ல் இம் மன்றத்தில் இது விஷயமாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அந்த கேஸ் பிடிக்கப்பட்டதா? பிடிக்கப்படவில்லை; திறமை, சாமர்த்தியம் என்று சொல்கிறீர்களே, இது தானா திறமை? ஒரு தாசில்தாருடைய மகன் கொலை செய்யப்பட்டார்; பிடிக்க முடியவில்லை; இது போன்ற பெரிய குற்றங்கள் நடந்தால் பிடிக்க முடியவில்லை;





ஏப்படி நடக்கும்? அங்கே இருக்கிற காவலர்களுக்கு அந்த நிலையத்தைச் சேர்ந்த எல்லாக் காவலர்களையும் நான் சொல்லவில்லை; பல சமூக விரோதிகள், பலாத்காரவாதிகளுடன் தொடர்பு உண்டு.

இதுபோன்று இருக்கிற ஏழை ஜனங்களுடைய விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். கீழக்கோட்டையூரில் வீராண்டி என்பவர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட கேஸ்; இது ஸ்ரீவில்லி புத்தூர் தாலுக்காவைச் சேர்ந்த இடத்தில் நடந்தது; 13-1-1984 ஆம் தேதி இரவு வீராண்டியும், மேலக்கோட்டையூர் அழகப்பத் தேவர் மகன் கந்தையாவிடம் விவசாய வேலைக்குச் சென்றவன்; நெல்லிற்கு தண்ணீர் பாய்ச்சுகிறபோது அன்றைக்கு அவன் கொலை செய்யப்பட்டிருக்கிறான். 14 ஆம் தேதி அந்தச் செய்தி அவன் மனைவி வீராத்தாவிற்கு கிடைத்தது. அந்தச் செய்தியை போலீஸ் ஸ்டேஷனில் கொண்டு சென்றால், செய்தியை பதிவு செய்ய மாட்டோம்; அதையெல்லாம் எங்கள் ஏட்டையா செய்வார்; நீ இந்தப் பக்கம் வரக்கூடாது என்று சொல்லி விரட்டி விட்டார்கள். ஒரு சாதாரண விவசாய தினக் கூலியான அந்தப் பெண்மணியின் கணவன் கொலை செய்யப் பட்டிருக்கிறான் என்று போலீசில் ரிப்போர்ட் செய்தால் அதை அவர்கள் பதிவதற்குத் தயாராக இல்லை. இப்படி கேசும் பதிவு செய்யவில்லை; இப்போது தாராளமாக பதிந்துதான் ரிப்போர்ட் அதிகமாகி இருக்கிறது என்று சொல்கிறார்கள்; இந்த மாதிரி இருப்பவைகள் பதிவு செய்யப்பட வேண்டாமா? இந்த விஷயத்தைக் கூட அநேகமாக முதல்வர் உள்பட பல்வேறு போலீஸ் அதிகாரிகளுக்கும் ரிப்போர்ட் செய்யப்பட்டும், நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இதைப்போல திண்டுக்கல் வட்டாரத்தில் ஆண்டியம்மாள் கணவன் முருகேசன் கொலை செய்யப்பட்டார். திண்டுக்கல் வட்டம் கன்னிவாடி காவல் நிலையத்திற்கு உட்பட்ட ஆதிவாசி, புலையர் சமூகத்தைச் சார்ந்த முருகேசன் 25-2-1984 ஆம் தேதி வீட்டிலிருந்து போனவர், திரும்பவில்லை. அன்று மாலை 4-30 மணியளவில் முருகேசன் வாழைக்காய் வெட்டி விட்டார் என்று காரணம் கூறி சக்திவேல் பிள்ளை மற்றும் எட்டு பேர்கள் சேர்ந்து அவரைக் கொலை செய்து பக்கத்திலே இருக்கிற ஒரு கிணற்றடியில் போட்டு விட்டார்கள். இதைக்கேட்டு முருகேசன் மனைவி ஆண்டியம்மாள் 26-2-1984 ஆம் தேதி கன்னிவாடி வட்ட காவல் நிலையத்தில் புகார் கொடுக்கச் சென்றபோது அதை வாங்க மறுத்து மிரட்டி அனுப்பி விட்டார்கள். 27-2-1984 ஆம் தேதி காலை முருகேசன் உடலை திண்டுக்கல் மருத்துவமனைக்கு கொண்டு வந்து, அவர் மனைவியைக் கூப்பிட்டு அவர் உடலைக் கொடுக்காமல், வேறு சில கையாட்கள் கையில் கொடுத்து அந்தப் பிணத்தை எரித்து விட்டார்கள். அந்த ஊர் பெரிய மனிதர்கள் அந்த அம்மாளிடத்தில் மிரட்டி உன்னுடைய கணவன் உடலை எரித்து விட்டார்கள். நீ போய் ரிப்போர்ட் எதுவும் கொடுக்கக்கூடாது என்று சொல்லி விட்

டார்கள். அதற்கு பிறகு அந்தத் தாய் மதிப்பிற்குரிய முதலமைச்சர் உட்பட சகல போலீஸ் அதிகாரிகளுக்கும் ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் அவர்களுக்கும் செய்தி வந்து அவரும் ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார். ஆனால் குற்றவாளி பிடிக்கப்படவில்லை; திறமையும் சமர்த்தியமும் எங்கே இருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும்.

இங்கே சென்னை நகரில் நிலைமை எப்படி இருக்கிறது என்பதை நாம் பார்க்கவேண்டும். அரசாங்கத்தின் மூக்கினுடைய அடியில் இருக்கிற சென்னை நகரில் நந்தனத்தில் இருக்கிற நந்தனம் காலனியில் சந்திரமோகன் என்ற தொழிலாளி கொலை செய்யப்பட்டார். நந்தனம் தெரு, 2, வீட்டு நம்பர் 7-ல் குடியிருந்த 30 வயதான சந்திர மோகன் காஞ்சிபுரத்தில் உள்ள மோட்டார் வண்டி பட்டறையில் வேலை செய்து வந்த தொழிலாளி. 2-12-1983-ல் அவர் சம்பளப் பணத்தைப் பெற்றுக்கொண்டு வந்தபோது நந்தனத்தில் வீட்டிற்கு முன்னாலே கொலை செய்யப்பட்டார்.

(முற்பகல் 11-40)

3–12–1981-ல் அரசு பொது மருத்துவ மனையில் ரயிலில் அடிபட்டு அனாதையாகக் கிடந்த பிணம் என்று சொல்லி கொடுத்து விட்டார்கள். இதைப் போலீஸ்தான் செய்தது. இந்தச் செய்திகூட 6-12-1981 அன்றுதான் அவனுடைய குடும்பத்திற்குத் தெரிந்தது. 19-3-1982-ல் இந்த அவையில் அது தொடர்பாக தெரிவிக்கப்பட்டபோது தகுந்த புகார் கொடுத்தால் இது குறித்து நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்று அவை முன்னவர் அவர்கள் சொன்னார்கள். இன்று வரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. புகார்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தாயும் தகப்பனுமே புகார் கொடுத்திருக்கிறார்கள். ஆண்டுகள் இரண்டு,மூன்று ஆகிய பின்பும் இன்னும் அதன் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கான காரணம் என்ன?

இதேமாதிரி நெல்லை மாவட்டத்தில் உடன்குடி போலீஸ் சரகத்தில் ஒரு பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த வாட்ச்மென் 1983 இறுதியில் கொலை செய்யப்பட்டார். அந்தக் குற்றவாளியும் இதுவரையிலும் கண்டுபிடிக்கப்படவில்லை. நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கோயம்புத்தூர் ஹவுசிங் காலனியில் கண்ணம்மா என்ற பெண் 6-ம் எண் வீட்டில் வசித்து வருகிறார். அந்த வீட்டைப் பிடுங்கிக் கொள்ள வேண்டுமென்று அந்தப் பெண்ணோடு தொடர்பு வைத்துக் கொண்டிருந்த பார்பர் அவளுக்கு விஷத்தைக் கொடுத்துக் கொன்றுள்ளதாக சுற்றிலும் குடியிருந்தவர்கள் அத்தனைபேரும் விவரம் கொடுத்தார்கள். அந்த விவரங்கள்



பூராவையும் எழுதி நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுத்தேன். அங்கே இருக்கிற எஸ்.பி. அவர்களிடத்திலும் கொடுத்தேன். மாதங்கள் கழிந்துவிட்டன. ஆனால் இந்த மரணத்தைப் பற்றி எந்த விவரமும் தெரியவில்லை. ஆனால் ஆறு மாதம் கழித்த பிறகு எனக்கு மாவட்டக் கலெக்டரிடமிருந்து There is no foul play என்று கடிதம் வருகிறது. அந்தப் பெண்ணை எப்படிக் கொன்றிருக்கிறார்கள் என்றால் மருந்து காப்ஸ்யூல்களில் உள்ள மருந்தைக் கீழே கொட்டிவிட்டு அதிலே* விஷத்தை வைத்துக் கொடுத்து அவளைக் கொன்றிருக்கிறார்கள். போலீஸ் நிர்வாகம் இதுகுறித்து என்ன விசாரணை செய்தார்கள் என்று தெரியவில்லை. ஒழுங்காக நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. முதன்முதலாக கோவையில் ஒரு பெண்ணை எஸ். பி- யாகப் போடுகிறோம் என்று சொன்னார்களே, அந்த எஸ்.பி அம்மையாரையே பார்த்து இப்படி ஒரு பெண் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்று கூறினேன். அவர் விசாரணைக்கு வந்தார். பேரூர் போலீஸ் நிலைய எல்லைக்குள் அந்த இடம் வருவதால் அங்கே அந்த அம்மையார் வருவதற்கு முன்பாகவே அந்தக் காவல் நிலைய எஸ். ஐ. ஹவுசிங் காலனிக்குச் சென்று நீங்கள் உண்மையைச் சொன்னால் என்ன நடக்கும் தெரியுமா? என்று சொல்லி அங்குள்ளவர்களை மிரட்டியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட முறையில் காவல் துறையினர் நடந்தால் எப்படி கேஸ்களைச் சரியான முறையில் இன்வெஸ்டிகேஷன் செய்யமுடியும். இந்தக் கொலை கண்டுபிடிக்கப்படவில்லை.

லாக்-அப் மரணம் அன்றாடம் நடந்து கொண்டு இருக்கிறது. இந்த மரணங்கள் எதனால் நிகழ்கின்றன என்பதை இந்த அரசாங்கத்தால் சொல்ல முடியுமா? போலீஸ் பலாத்காரத்தால் இது நடக்கவில்லை என்பதைச் சொல்லமுடியுமா? அந்த லாக்-அப் மரணத்தின் தன்மையில் நடந்ததுதான் சேலம் கிச்சிப்பாளையம் தெய்வமணி மரணம். முதலில் அதைப்பற்றித் தெரிவித்தபோது அது சரியான மரணம்தான் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைய நிலைமை என்னவென்று சொன்னால், இங்கே வைக்கப்பட்டுள்ள அறிக்கை என்ன சொல்கிறது என்றால், அந்த விசாரணை நீதிபதி திரு. நஞ்சப்பன் என்ன சொல்லியிருக்கிறார் என்றால் 'அந்தப் பெண் தன்னுடைய புடவையை எடுத்து கழுத்தில் சுற்றிக்கொண்டு செத்து விட்டார்கள்' என்பது போலீசார் நடத்திய நாடகம் என்று சொல்லியிருக்கிறார். இப்படி இந்த லாக்கப் மரணங்கள் எத்தனையோ நடந்திருக்கின்றன. ஏன் என்று இப்போது நீங்கள் யோசித்துப் பாருங்கள். சென்னை மாநகரில் பிப்ரவரி மாதத்தில் 3 லாக்கப் மரணங்கள் நடந்திருக்கின்றன. குமரன் காலனி காவல் நிலையத்தில் ஒரு மரணம் நடந்திருக்கிறது. மயிலாப்பூர் காவல் நிலையத்தில் ஒரு மரணம் நடந்திருக்கிறது. அதைப்போன்று இன்னொரு மரணம் நடந்திருக்கிறது. இடம் சரியாகத் தெரியவில்லை. இந்த அறிக்கையில் அதுபற்றி ஒரு வரி கூட இல்லை.

[திரு. கு. ரமணி] [1984 மார்ச் 29

இப்படிப்பட்ட மரணங்கள் எல்லாம் தற்கொலை என்று தீர்மானிப்பது யார்? போலீஸ்காரர்களும் மற்றவர்களும் சேர்ந்து தற்கொலை என்று சொல்கிறார்கள். இந்த விஷயத்தை இந்த சர்க்கார் ஆழமாகப் பரிசீலிக்க வேண்டும். கிரைம் கேஸ்கள் என்று வரக்கூடிய கேசுகளில்தான் இப்படிப்பட்ட மரணங்கள் ஏற்படுகின்றன, கைது செய்து வருகிறார்கள். லாக்கப்பில் கொலை நடக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று நீங்கள் சிந்திக்க வேண்டும். இதிலே சந்தேகத்திற்கு இடமில்லாமல் இப்படித்தான் இந்த மரணம் நடந்தது என்று உங்களால் நிச்சயமாகச் சொல்ல முடியாது. (குறுக்கீடு.)

இது சம்பந்தமாக இன்னும் சில விவரங்களைச் சொல்கிறேன். மீஞ்சூர் காவல் நிலையத்தில் ஏழுமலை என்பவருடைய மரணம் நடந்தது. அவருடைய தந்தை விம்கோ தீப்பெட்டித் தொழிற்சாலையில் வேலை செய்தவர், வேலையை விட்டு நீங்கி சுமார் 80,000 ரூபாய் வாங்கிக்கொண்டு வந்து வீட்டில் வைத்தார். அந்தக் காவல் நிலையத்திலுள்ள சில காவலர் ஏழுமலை வீட்டில் பணம் இருப்பதை அறிந்துகொண்டு, சந்தேகம் என்று சொல்லி, ஏழுமலையைக் கைதுசெய்து கொண்டு போகிறார்கள். ஏழுமலையோடு வேறு சிலரையும் கைது செய்தார்கள். ஆனால் ஏழுமலையை மட்டும் மீஞ்சூர் காவல் நிலையத்தில் வைத்துவிட்டு மற்றவர்களைப் பொன்னேரிக்கு அனுப்புகிறார்கள். அந்த ஏழுமலை லாக்கப்பில் நன்றாக அடிக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, இறுதியில், 18-2-1984 அன்று அதிகாலை உயிரிழந்தார். ஆனால் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார் என்று முடிவு அறிவித்தார்கள். இப்படி லாக்கப் கொலைகள் எத்தனையோ நடந்திருக்கின்றன. இதற்கு எல்லாம் முடிவு இல்லாமல் என்னதான் இந்த இலாகாவைப் பற்றி பெருமையாகப் பேசினாலும் மக்கள் மத்தியில் என்ன எண்ணம் இருக்கும் என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும்.

இங்கே சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்றவர்கள் கதி என்ன? என்னைப் போன்றவர்களிடம் கூட ரௌடித்தனம் செய்கிறார்கள், ரௌடிகள் வந்து மிரட்டுகிறார்கள். கோவை செல்வபுரம் ஹவுசிங் யூனிட்டில் கண்ணம்மாள் எப்படிச்செத்தாள் என்று நான் இங்கே குறிப்பிட்டேன். அந்த கேஸ் சம்பந்தமாக நான் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் போலீஸ் சூப்பிரண்டுக்கும் எழுதினேன். அதனால் கோபாவேசம் கொண்டவர்கள் 1982 ஜனவரியில் நான் வீட்டில் இல்லாதபோது வீட்டுக்கு டெலிபோனில் பேசி மிரட்டியிருக்கிறார்கள். அவர்கள் யார் என்றால் ** என் வீட்டில் இருந்தவர்களை மிரட்டினார்கள். என்னை அட்ரஸ் இல்லாமல் செய்துவிடுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி எல்லாம் உயர் போலீஸ் அதிகாரி இராதாகிருஷ்ணனிடம் சொன்னோம், இந்தப் பேரவைக்கும் சொன்னோம். (குறுக்கீடுகள்).

---

**மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1984 மார்ச் 29]

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் பேசும்போது * * * என்று சொன்னார்கள். எனவே அந்த வார்த்தைகளை நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : நான் மாண்புமிகு உறுப்பினர்கள் யாரைப் பற்றியும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பாதிக்கப்பட்டவன் நான். நானே சொல்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்) : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பழம்பெரும் அரசியல்வாதி. அவர்களுக்கே நன்றாகத் தெரியும். அதுபோன்று வார்த்தைகள் அவைக் குறிப்பில் இருப்பது நல்லதல்ல. அதனால் அவற்றை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

(முற்பகல் 11-50)

திரு. கு. ரமணி : நான் நியாயத்தைத்தான் சொல்கிறேன். இந்த மன்றத்தில் நான் முன்பு பேசியிருக்கிறேன். அது இந்த மாமன்றத்தின் ரெக்கார்டுகளில் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு விண்ணப்பம் கொடுத்திருக்கிறேன். யார் என்று நீங்கள் தீர்க்கமாக விசாரணை செய்து பாருங்கள் என்று சொன்னேன். எல்லாம் ரெக்கார்டுகளில் இருக்கிறது. 'இதற்கு என்ன முடிவு? நீங்கள் என்ன வடிகட்டும் முறையை வைத்திருக்கிறீர்கள் ? (குறுக்கீடு) உங்களுக்குத் தைரியம் இருந்தால், பகிரங்கமாக என் கொயரி வையுங்கள், ' ஐ சேலஞ்ச் யூ' ஒரு லிஸ்டே ரௌடிகளைப் பற்றி கொடுத்திருக்கிறேன். அந்த ரௌடிகளின் பட்டியலைக் கொடுத்திருக்கிறேன். பரம்பரை ரௌடிகளாக இருக்கிறவர்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கட்சியின் பெயரைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள், அக்கட்சிக்குள்ளே வருகிறார்கள் அது உங்களுக்குத் தெரிய வேண்டாம் என்றால் விட்டுவிடுங்கள், பரவாயில்லை.

காவலர்கள் மத்தியில் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படும்போது என்ன வருகிறது ? லாக்-அப்பில் மரணம், எம்.எல்.ஏ. வை மிரட்டுவது. இங்கே நமது தோழர், உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன்கூட, அவ்வரை மிரட்டியது பற்றி அவர்களே போலீஸ் ஸ்டேஷனை குறிப்பிட்டு, ஒரு போலீஸ்காரனின் நம்பரைக் கொடுத்து, புகார் செய்திருக்கிறார்கள். அவருக்கு மிரட்டல் வந்தது, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? எனக்கு மிரட்டல் வந்தது. என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? இன்று வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நான் கேட்கிறேன். இன்றைக்கு நீங்கள் ஆளும் கட்சியாக இருக்கலாம். ஆனால்

---

* * மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நாளைக்கு எதிர்க்கட்சியாக வந்துவிட்டால், உங்களுக்கு இந்த நிலைமை வராது என்று எப்படித் தெரியும்? ஆகவே தான் சொல்கிறேன். அநீதி நடப்பதைச் சுட்டிக்காட்டி நியாயம் வேண்டுமென்று தான் வாதிடுகிறோமே தவிர, யார் பேரிலும் எந்தக் கெட்ட உணர்வோடும், இதைச் சொல்லவில்லை. ஆகவே காவலர்கள் மத்தியில் இப்படிப்பட்ட நிலைமைகள் நடக்கும் போது, எம். எல். ஏ. வை மிரட்டுவது, லாக்-அப்பில் மரணம் எல்லாவற்றுக்கும் போர்வை போட்டு மறைக்க வழி இருக்கிறது என்ற நிலைமை ஏற்பட்டால், அவர்களுடைய மனோ பாவம் எப்படி இருக்கும்? அவர்களும் மனிதர்கள் தானே. அவர்கள் மக்களைப் பாதுகாக்கின்ற காவலர்களாக இருக்க வேண்டாமா? இன்றைக்கு இதற்கான தன்மையில் பல பேர்கள் இல்லை. மக்களை மிரட்டிப் பணிய வைக்கின்ற எஜமானப் போக்குதான் அங்கேயிருக்கிறது. அதிகார வெறி, ஆணவம் தலை விரித்தாடுகின்ற நடைமுறை இருக்கிறது. அவர்களுடைய ' பிராக்டீஸ் அண்டு அட்டிட்யூட் ' அப்படி இருக்கிறது. எனவே இதைப் போக்கவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்றைக்கு இதற்கான முழு பொறுப்பும் யார் வகிக்கவேண்டுமென்றுசொன்னால், இன்றைக்கு தமிழ்நாட்டை ஆளுகின்ற கட்சி ஏற்கவேண்டும், இந்த அரசாங்கம்தான் பொறுப்பேற்க வேண்டும். முழுப் பொறுப்பும் அவர்களைச் சார்ந்தது. அமைச்சர்களிலிருந்து கட்சித் தொண்டர்கள் வரை எப்படி நடக்கிறார்கள். எப்படி செயல்படுகிறார்கள் என்பதை அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு சில எண்ணங்கள் ஏற்படுகின்றன. ஆகவே காவல் துறையிலுள்ள அத்தனை காவலர்களும் தவறானவர்கள் என்பது அல்ல நம்முடைய வாதம். அவர்கள் பலவிதமான துன்பங்களை ஏற்று, செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை நடத்திக் கொண்டிருக்கிற உங்களுடைய நடவடிக்கை அவர்களுக்கு அப்படிப்பட்ட தூண்டுதலை உண்டாக்கும் என்பதைத் தான் தெரிவித்துக்கொள்கிறேன்.

4 ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கின்ற இந்த ஆட்சியில் ஏற்பட்டிருக்கிற கணக்குகளை இந்தக்குறிப்பு புத்தகத்தில் சொல்லியிருக்கிறீர்கள். எனவே அதை நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை. நீங்களே அதைப் பார்க்கலாம். 1983-ல் எப்படிப் பதிவு செய்த குற்றங்கள் இருக்கின்றனவோ, அதைப்போல பதிவு செய்யப்படாத குற்றங்களும் எத்தனையோ இருக்கின்றன. கணக்கில் பரிசீலிக்கப்பட்டது இருக்கின்றதே தவிர, பரிசீலிக்கப்படாதது கணக்கில் இல்லை. அந்தக் கணக்கைக் கொடுங்கள். சுமார் 53,000-க்கும் மேற்பட்ட குற்றங்கள் இந்த நான்கு ஆண்டுகளில் பரிசிலிக்கப்படாமல் விடுபட்டிருக்கின்றன. காவலர்கள் இருக்கின்ற நிலைமையில், அவர்களுக்குக் கொடுத்திருக்கிற உபதேசங்களை





நீங்கள் பார்க்கலாம். மிகப் பிரமாதமான உபதேசங்கள். அது என்ன உபதேசம் என்றால், ''காவலரிடம் முறையிடவோ, குற்றம் சாட்டப்பட்டவராகவோ அல்லது உதவி கோரியோ வருபவர்களில் பெரும்பான்மையான மக்கள் ஏழைகளாகவும் சமூகத்தில் கீழ் மட்டத்தில் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதைக் காவலர்கள் நன்கு புரிந்துகொள்ளவேண்டும். எனவே அவர்களிடம் காவலர் அன்பும் அனுசரணையும் காட்டி நடந்து கொள்ள வேண்டும்.'' நல்லதுதான். இப்போது போலீஸ் ஸ்டேஷனிலே ஒரு ஏழை மகன் தைரியமாகப் போய் நிற்க முடியுமா? ஆகவே இந்த உபதேசம் எங்கே நிற்கும் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். அடுத்து ''பொது மக்களின் நன் மதிப்புடன் பெறும் ஆதரவு இன்றியமையாதது என்பதைக் காவல் துறையினர் உணர்ந்து இத்தகைய ஒத்துழைப்பை மிக அதிக அளவில் பெறும் வகையில் மக்கள் தொடர்பைச் சீர்படுத்திக் கொண்டு, மேலும் தங்கள் பணிகளைத் தொடரவேண்டும்.'' இதுவும் நல்லது தான். ஆனால் லாக்-அப்பில் கொலைகள் நடந்திருக்கின்றன. அநாதைப் பிணம் என்று சொல்லி, கொண்டு வந்து விடுவார்கள். எது வேண்டுமானாலும் நடக்கும். இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டால் மக்கள் மத்தியில் எப்படி காவலர்களுக்கு சுமுகமான தொடர்பு ஏற்படும். அப்படியானால் சொல் ஒன்று, செயல் ஒன்று என்றுசொன்னால், நிலைமை என்னவாகும் என்பதை நீங்கள் பார்க்கவேண்டும். உங்கள் கொள்கையும் செயலும் ஒத்துவரவில்லை. இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்படுகிறது. மக்கள் அனைவரும் காட்டும் அன்பினால் மட்டுமே அவர்களுடைய மனம் நிறையும். உண்மை. மக்கள் அன்பு காட்ட முடியவேணுமா, இல்லையா? அப்போதுதானே மனம் நிறையும். நீங்கள் கொடுக்கிற சம்பளத்தைக் கொண்டு அவர்கள் வயிறு நிறையவில்லை; மனதாவது நிறையும். அப்படி என்றால், அதற்கு வேண்டிய அன்பு காட்ட வேண்டும் என்று சொன்னால், அவர்கள் மனோ நிலை, இன்றைக்குக் கெட்டுவிடுவதற்கு ஆளும் கட்சியும் அரசும் தான் காரணம் என்பது எங்களுடைய முடிவான முடிவு. நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், அதைப்பற்றி நீங்களே சொல்லுங்கள்.

கடைசியாகச் சொல்லுகிறார்கள், தியாகச் செம்மல்கள். ஏன் என்று கேட்டரல், தியாகச் செம்மல்கள் என்று அச்சு போட்டு, ஒவ்வொருவருக்கும் ஒரு கார்டு கொடுத்தால்கூட நல்லதுதான் அதையும் மாட்டிக்கொள்ளலாமே. மாபெரும் பொறுப்பை ஏற்ற நாட்டுத் தொண்டர்கள் ஆக ஒவ்வொருவரும், தன்னை எண்ணி தியாகச் செம்மல்களாகச் செயல்பட்டு சமூகத்திற்குச் சேவை செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அவர்களைப் புகழ்ந்து பேசுவதைப் பற்றி அல்ல நான் குறைப்படுவது. இந்த அடைமொழி எல்லாம் நீங்கள்கொடுப்பது இந்த உபதேசம் இருக்கிறதே, அதில் உண்மையிலே நல்ல சாராம்சம் இருக்கிறதா, சத்து இருக்கிறதா? உண்மை என்பது என்ன? 'Practice is the crit rion of truth'

நடைமுறையின் சாரம்தான் உண்மை. நடைமுறையின் சாரம் வேறு, நீங்கள் கொடுக்கிற உபதேசம் வேறு, அப்படி உங்களுடைய உபதேசம் இருக்கிறது. மேற்கண்ட குறைகள் இருந்த போதிலும், இவ்வளவும் இருந்தாலும், காவல் துறையினர் பல துன்பங்களை ஏற்று, வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை என்பதை நாங்களே ஒத்துக் கொண்டு, நாங்களும், இந்தக் காவலர்களுக்கு நியாயம் வழங்க வேண்டும் என்று சொல்லக் கூடியவர்கள்தான். இந்த அரசு காவல் துறையினருக்குக் கொடுத்த வாக்கை, இவ்வளவு நீங்கள் உபதேசம் பண்ணுகிறீர்களே, கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டாமா? நிறைவேற்றியிருக்கிறீர்களா ?

முதலாவது 1980 ஆம் ஆண்டு தேர்தலின்போது, திருச்சியில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதி, 7 கோரிக்கைகளையும் அவர்களுக்கு நிறைவேற்றுவோம் என்பது. ஒன்று முன்பு நடந்த போராட்டத்திலே ஈடுபட்டதற்காக வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள் பூராவும் எடுக்கப்படும். அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்ட காலத்திற்கும் சம்பளம் கொடுக்க எற்பாடு செய்யப்படும். சங்க உரிமை, அங்கீகாரம், இன்றைக்கும் இருக்கிறதா ? இவர்கள் சங்கம் வைத்து நடத்றுவதற்கு நீங்கள் விடுவீர்களா ? அவர்கள் செய்ய முடியுமா ? யோசனை செய்து பாருங்கள். ஆகவே இந்த வாக்குறுதிகள் எல்லாம், நிற்கவில்லை, அது காற்றிலே பறக்கின்றது. அவைகள் நிறைவேற்றப்படவில்லை. தமிழகத்தில் அந்தச் சங்கம் வைத்தார்கள் என்பதற்காக, இதிலே முன்னணியிலிருந்த 90-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் வெளியே தள்ளப்பட்டிருக்கிறார்கள், பழி வாங்கப்பட்டார்கள். அவர்களை இன்னும் திருப்பி எடுக்காமல் இருக்கிறார்கள். அவர்கள் திரும்பி எடுக்கப்படவேண்டும், நீங்கள் சொல்வது கொஞ்சமாவது நடை முறையில் நியாயமாக இருப்பதற்கு.

அடுத்ததாக, 1980 செப்டம்பரிலே 10 ஆயிரம் பேர்களை போலிசார் வேலைக்குத் தேர்வு செய்ய நீங்கள் ஏற்பாடு செய்தீர்கள். செய்தது என்ன ஆயிற்று? அந்த 10 ஆயிரத்திலே. 7 ஆயிரம் பேர்கள் உண்மையிலேயே போலிசாருடைய குடும்பத்தைச்சார்ந்த பிள்ளைகள், ஏன் அவர்கள் நீக்கப் பட்டார்கள். சில காலம் வைத்திருந்து அவர்கள் அத்தனை பேர்களும் நீக்கப்பட்டார்களே, என்ன காரணம் ? போலீசாருடைய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் வேலை கொடுப்பதற்கு நீங்கள் பிரியப்படவில்லையா ? 7 ஆயிரம் வரைக்கும் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். கணக்குத் தப்பாக இருந்தால் நீங்கள் சொல்லுங்கள். அவர்களுக்கு வேலை கொடுக்கவில்லை. அப்போது என்னமோ விஷயம் இருக்கிறது என்று அர்த்தம். பிறகு புதிய தேர்வு இப்போது பிப்ரவரி 18 ஆம் தேதி. 10 ஆயிரம் பேர்களுக்கு டோக்கன் கொடுத்தீர்கள். 25 ஆயிரம் பேர்கள் வந்தார்கள். அந்தக் கூட்டத்தைச் சமாளிக்க குதிரைப் படையை விட்டு, சமாளிக்க வேண்டி வந்தது. எப்படி இருக்கிறது நிலைமை ? இப்படி நடக்க





லாமா என்பதை யோசனை பண்ணுங்கள். ஆகவேதான் சொல்கிறேன். சொல் ஒன்று, செயல் ஒன்று என்று இப்படி போய்க் கொண்டிருக்கின்றது. நாளது வரையிலும், இந்தத் தேர்வு நடத்தும் கூட, என்ன ரிசல்ட் என்று தெரியாது. இது இந்தியாவிலேயே அற்புதம்—அடிக்கடிச் சொல்கிறீர்கள்—இந்தியாவிற்கு வழிகாட்டி, தமிழகம் உலகத்திற்கே வழிகாட்டி என்று சொல்வது தான்பாக்கி. அப்படியானால், இதுவும் இந்தியாவில் எங்கும் நடக்காத அற்புதம், சாதனை தானா, என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்து வேலை நேரம். 8 மணி நேரம் வேலை என்று பெயர். பாராக் கொடுக்கிற போலீஸ்காரர்கள், 6 மணி நேரம் பாரா செய்து 12 மணி நேரம் அங்கேயே காவல் நிலையத்திலே வெயிட்டிங்கில் இருக்கிறார்கள். இந்த நிலை மாற வேண்டும். அவர்களும் மனிதர்கள்தான். குடும்பத்தோடு வாழவேண்டும். வாரம் 6 நாள் வேலை. 7-வது நாள் லீவ் என்பது பொருள். ஆனால், 7-வது நாள் லீவ் அன்றும் வேலை வாங்கப்படுகிறது. அதற்கு 7 ரூபாய் கூலி மட்டும் கொடுப்பதாகக் கேள்விப் படுகிறேன். கணக்கு தப்பாக இருந்தால் நான் திருத்திக் கொள்ளத் தயார். உண்மையிலேயே ஓவர்-டைம் ஓர்க் என்று பேக்டரிகளில் போய்ச் செய்தால், டபிள் சம்பளம் கிடைக்கும். இங்கே போலீசாக இருப்பதாலே, கேட்பதற்கு வழியில்லை. 7-வது நாள் வேலை செய்தாலும், 7 ரூபாய் வாங்கிக் கொண்டு போகும் படியான நிலை. அப்படி பல பேர்கள் லீவ் கிடைக்காமல், வேலை செய்துக் கொண்டிருக்கின்ற நிலை ஏற்படுகிறது.

(நண்பகல் 12-00)

அப்புறம் மானிய விலையிலே ரேஷன். இதைத்தான் நீங்கள் போன தடவை தமிழ்நாடு முழுவதும் எடுத்து பிரச்சாரம் பண்ணியது. 80-ஆம் வருஷ விலையில் 50 சதவீதம் அவர்களுக்கு மானியம் கொடுக்கப்படும். அதாவது 80 ஆம் வருஷ விலையினுடைய மதிப்பீட்டிலே அவர்களுக்கு 50 சதவீதம் மானியமாகக் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இதில் இப்பொழுது நிலைமை என்ன ? 1984-ல் என்ன விலைவாசி ஏற்றம்? அதற்காக அவர்களுக்கு என்ன செய்யப்பட்டிருக்கிறது? அவர்கள் இப்போது என்ன நிலையில் இருக்கிறார்கள் ?

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இந்த 4 யூனிட் ரேஷனையும் ஒருவர் வாங்க வேண்டும் என்று சொன்னால், 80-ஆம் வருஷத்திலே உள்ள விலைப்படி உள்ள அந்தச் சலுகை இருக்கிறதே அதைப்பயன் படுத்தினாலும், 20 ரூபாய்க்கு மேலே அவர்கள் கையிலே இருந்து செலவு பண்ண வேண்டியிருக்கிறது. அது மட்டும் அல்லாமல், அந்த ரேஷன் சப்ளை எங்காவது வெகுதூரத்திலே உள்ள ஒரு கோடவுனிலே இருக்கும். அங்கேயிருந்து இந்த அரிசி, பருப்பு எல்லாம் வாங்கிக்

கொண்டு வந்து சுமந்துக் கொண்டு வீட்டுக்கு கொண்டுப் போகக்கூடிய செலவு இருக்கிறதே, டாக்சி, ஆட்டோ சார்ஜ்ஜஸ் போன்ற மற்ற செலவுகளும் இருக்கிறதே, அதையும் செலவு பண்ண வேண்டும். ஆகவே, 80-ஆம் வருஷத்து விலையிலே பாதி விலைக்கு பொருள் கொடுப்பதாக சொல்பவர்கள், இந்த வருஷம் 84-வது வருஷ விலையிலே பாதி விலைக்கு அந்தப் பொருளைக் கொடுத்தால் அவர்களுக்கு ஓரள விற்கு நன்மை செய்வதாக இருக்கும். அவர்களுடைய கையிலே இருந்து 20 ரூபாய் அதிகமாக அவர்களே செலவு பண்ணுவதற்கு பதிலாக, அரசாங்கம் அந்தச் செலவை செய்யக்கூடிய நிலைமை யிலே இருக்கிறதா இல்லையா என்பதுதான் அவர்களுடைய ரேஷன் பிரச்னை. இதைச் செய்யவேண்டும்.

அதேமாதிரி யூனிஃபார்ம். அவர்களுக்கு இன்றைக்கு கொடுக்கும்படியான யூனிஃபார்ம் இருக்கிறதே, அதை தைக்கும் விதம் நமக்குத் தெரியும். ஒரு பெரிய கதை அது. ஆள் எப்படி இருந்தாலும் சரி, யூனிஃபார்ம் அத்தனை பேருக்கும் அளவு எடுக்காமல் தைக்கப்படுகிறது. அதை பிறகு ஒவ்வொருவரும் பிரித்து மாற்றி டைட் பண்ணி தைத்துக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட நிலைமை. இந்த நிலைமை அவர்களைப் பாதிக் கிறது. அத்தோடு பருத்தித் துணியிலே அந்த உடைகளைப் போடும்போது வெயிலிலும், மழையிலும் எதுவும் பாராமல் சுற்றிக் கொண்டிருக்கின்ற போலீசார்களுக்கு, அந்த உடையால் உடம்புக்கே கஷ்டம் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு ஏன் டெரிகாட்டன் துணியிலே யூனிஃபார்ம் கொடுக் கக்கூடாது என்று கேட்கிறேன். பல தொழிற்சாலைகளில் கூட அப்படிக் கொடுக்கப்படுகிறது.

அதேமாதிரி சென்னை நகரில் பெண் கைதிகள் வந்தால் இது உண்மையிலேயே இந்தியாவிலே வேறு எங்காவது இருக்கி றதா என்று யோசிக்க வேண்டிய விஷயம்—அந்தப் பெண் கைதி களைப் பாதுகாப்பதற்காக, அவர்களை இரவில் காவல் புரிவதற் காக கோர்ட்டுக்கு கொண்டு செல்லுவதற்காக, நியமிக்கப்பட்டு உள்ள பெண் வார்டன்கள்—பெண் போலீஸ்காரர்கள் அல்ல—பெண் வார்டன்கள், 200 பேர்கள் இருப்பதாகச் சொல்லு றார்கள். அவர்களுக்கு ஒரு நாளைக்கு 7 ரூபாய் கூலி. அவர்கள் வருகிற அன்றைக்கு அவர்களுக்கு வேலை கிடைத்தால்தான் கூலி, இல்லையென்றால், இல்லை. அவர்களுக்கு வந்து போகிற செலவு. சாப்பாடு இவைகளையெல்லாம் அவர்களுடைய கையி லேயிருந்துதான் செய்து கொள்ள வேண்டும். 200 பெண்கள் 7 ரூபாய் கூலிக்காக இப்படி ஒரு அவல நிலைமையிலே அங்கே தினமும் போய்வந்துக் கொண்டிருக்கிறார்கள். தயவு செய்து அந்த நிலைமை இனிமேல் அங்கு இருக்கக் கூடாது. அது இன்றே மாற்றப்படவேண்டும். அவர்களையும் நீங்கள் பெர்மனென்ட் செய்து, பெண் போலீஸ்காரர்களை வைத்திருக்கிறீர் களே, அப்படி பெண் வார்டன்களையும் பெர்மெனென்ட் போஸ்டிலே வைக்க வேண்டும். பெண் போலீஸ்காரர்களை





பெர்மெனென்ட்டாக வைத்துக் கொண்டிருக்கும்போது, ஏன் பெண் வார்டன்களை வைத்துக் கொள்ளக் கூடாது? அப்படி யானால் அந்தப் பெயரை கொடுத்து அவர்களைத் தரம் தாழ்த்தி பணியில் வைத்தால்தான், தினக் கூலியாகக் கொடுக்கலாம் என்ற அர்த்தத்தில்தானே அப்படி செய்யப்பட்டிருக்கின்றது. இது முதலாளித்தனமான பார்வை. இது சரியல்ல என்று சொல்ல விரும்புகின்றேன்.

அதேமாதிரி பட்டதாரி காவலர்கள். இவர்கள் பி.ஏ. எம். ஏ., படித்தவர்கள். சென்னை நகரத்திலே மட்டும் இவர்கள் 200 பேர்களுக்கு மேல் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். தமிழ் நாடு முழுவதும் கணக்கு எடுத்தால் ஒரு ஆயிரம் பேர்களுக்கு வரலாம். இவர்கள் இங்கே வேலை செய்கிறார்கள். சாதாரண காவலர்களாக, அவர்களுக்கு 3 வருஷம், 4 வருஷம், 5 வருஷம் ஆனால் ஏஜ் பார் ஆக ஆகிப் போய்விடுகிறது. வேறு எந்த சர்க்கார் உத்தியோகத்திற்கும் போக முடியாது. மேல் உத்தி யோகமும் இதில் கிடையாது. இப்படிப்பட்ட ஒரு அவல நிலை மையில் பட்டப்படிப்பு படித்த பட்டதாரி காவலர்கள் இருக்கி றார்கள். அவர்களுடைய கோரிக்கையை பல தடவை சொல்லி யும் அது நடக்காமல் இருக்கிறது. அவர்களை இந்த பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வு எழுதுவதற்கு ஏஜ் பார் ஆகிவிட்டது என்று சொன்னால், அதற்கு தவிர்ப்பு ஒரு சலுகையைக் கொடுத்து, அவர்களை எழுத வைத்தால் என்ன தப்பு? அவர்கள் ஒரு சமயம் போலீஸ் இலாக்காவிலே மேல் மட்டத்திற்கு வந்து விடுவார்களோ என்று தானே? மேல் மட்டத்தில் இருக்கிற போலீஸ் பெரிய அதிகாரிகளுக்கு அப்படி ஒரு சமயம் பயம் இருக்கலாம். ஆனால் செய்ய வேண்டிய நியாயம் அல்லவா இது. அது செய்யப்படவில்லை. அது செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள். அவர்கள், 3 ஆண்டுகளுக்கு மேலாக அதே பதவியில் இருக்கிறார்கள். அந்த ரிசர்வ் போலீசிலே சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு மேல் உத்தியோகம் கிடையாது. அவர்கள் மேலே போவது என்பது அநேகமாக நடக்காது. 25, 30 ஆண்டுகள் சர்வீஸ் செய்து, சப்-இன்ஸ்-பெக்டராகவே ரிடையர் ஆகிறார்கள். அவர்கள் தங்களை லோக்கல் போலீசிலே இன்ஸ்பெக்டராக மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரிவிலிருந்து அந்தப் பிரிவிற்கு மாற்றும்படி அவர்கள் கேட்டு அதற்கு ஒரு ஜீ. ஓ. அரசு போட்டு, 3 வருஷம் ஆகிறது.

ஜீ. ஓ. போட்டுவிட்ட பிறகு, இப்போது அவர்களிடம் கிளாரிபிகேஷன் கேட்கப்படுகிறது. அதை 3 தடவை கேட்டு இப்போது ஒன்றும் இல்லாமல், கோழி முட்டையாகத்தான் இருக்கிறது. இது எப்படி சரியாகும்? அது சரியில்லை என்று சொல்ல விரும்புகிறேன். ஆகவே அப்படிப்பட்ட நிலைமை மாற வேண்டும். அவர்களும் தங்கள் வாழ்க்கைக்கு உங்களைத்தானே

நம்பியிருக்கிறார்கள். உங்களை என்றால், உங்களையே அல்ல, இந்த அரசை, இந்த ஜனங்களை நம்பிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்கள் முன்னேறுவதற்கு ஒரு வழி செய்ய வேண்டும்.

அடுத்து, காவல்துறை அமைச்சுப் பணியாளர்கள், இதிலேயும் நீங்கள் பார்க்கலாம் இந்தியாவிலேயே உங்களுக்கு இதில் எந்த ஈடு இணையும் இருக்காது. இந்த விஷயத்தில், இன்வேர்டட் கமாஸிலேதான் சொல்கிறேன். ஏனென்றால் இந்த அமைச்சுப் பணியாளர்கள் இந்த மாநிலம் முழுவதும் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஓரே ஒரு கோரிக்கை, அவர்கள் கேட்பது சம்பளம் அல்ல. பஞ்சப் படி அல்ல, வேறு சலுகைகள் எதுவும் இல்லை, உடை சலுகை கூட இல்லை. அதிகம் ஆள் தேவை என்று கேட்கிறார்கள். வேலைப் பளு தாங்க முடியவில்லை. ஆளை கொடுங்கள் என்று கேட்டார்கள். அவர்களில் பலர் உண்ணாவிரதப் போராட்டங்கள் எல்லாம் நடத்தினார்கள். உங்களுக்கு ரொம்ப இணக்கமாக செயல்பட்டிருக்கிறார்கள் அப்படி இருந்தும் அதற்கு ஒரு பரிசிலனைக் குழுப் போட்டு அதில் பைனான்ஸ் செக்கரட்டரி, ஹோம் செக்கரட்டரி இரண்டு பேரும் இருந்து அவர்கள் ஒரு ஆலோசனைக் கொடுத்து இருக்கிறார்கள். 7-4-82-ல் அரசுக்கு அந்த ஆலோசனையை சமர்ப்பித்து இருக்கிறார்கள். 20-4-83-ல் சட்டசபையில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குழுவின் பரிந்துரைப் படி கூடுதல் அமைச்சுப் பணியாளர்கள் வழங்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டும் இன்று வரை நடத்தப் படவில்லை. காவல் துறை இயக்குநர் அவர்கள் இந்த பரிந்துரைப்படி 1075 பேரை உடனடியாக அந்தப் பணிக்கு நியமிக்க வேண்டும் என்று ஆலோசனைக் கேட்டும் இன்று வரைக்கும் நடைபெறவில்லை. இதை கொஞ்சம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நாங்கள் சொல்லக்கூடிய எங்களுடைய கண்ணோட்டத்தையும் பார்வையையும்—கொள்கை உங்களுக்கு பிடிக்காமல் இருக்கலாம்—ஆயினும் பார்க்க வேண்டும். நடைமுறையை அனுபவத்தில் கிடைக்கின்ற விவரங்களைதான் நாங்கள் உங்களுக்குச் சொல்கிறோம். அது தப்பு என்றால் திருத்துங்கள், அதை நாங்களும் திருத்திக்கொள்ள தயார் ஆனால் இதை எல்லாம் நீங்கள் எப்படி தப்பு என்று சொல்ல முடியும்? இது எல்லாம் உண்மை நிலைமைகள். ஆகவே அவர்கள் திண்டாடுகிறார்கள். இப்படிப்பட்ட முறையில் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப் படவேண்டும்.

அடுத்தபடியாக நெருப்பு அணைக்கும் படையினர், இது இன்னொரு பெரிய சாதனையாகத்தான் சொல்லவேண்டும். என்ன நிலமை ஏற்பட்டு இருக்கிறது என்று கேட்டால், போலீஸ் நிர்வாகத்தை விட்டு இந்த பகுதி பிரித்து முன்பு போலீசோடு இருந்தார்கள்—1967—1970-ல் ஒரு 10 வருட காலத்தில் ஓரளவுக்கு அதற்கு தனியாக டைரக்டர் போட்டு அபிவிருத்தி செய்து வந்தார்கள். டெக்னிக்கல் பயிற்சி உள்ள ஆள் தான் டைரக்டராக



போட்டிருந்தார்கள். ஏன் என்றால் பலவிதமான இயந்திர சாதனங்கள் அதில் இருக்கின்றன. தற்போது இந்தநிலை மாற்றப் பட்டுள்ளது. ஏன்? இப்போது டெக்னிகல் குவாலிபிகேஷன் இல்லாத கெப்பாசிட்டி இல்லாத ஆள் போடப்பட்டு எது வேண்டுமானாலும் செய்யலாமா? எப்படி வந்தீர்கள் இந்த முடிவுக்கு? டெக்னிக்கல் ஆள் இல்லாமல் போலீஸ் அதிகாரிகளே டைரக்டராகவும் அதுவும் முழு நேர டைரக்டராக இல்லாமல் சிலநேரங்களில் அடிஷனல் சார்ஜில் கூட போட்டு விட்டார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இன்று ஏற்பட்டிருக்கின்றது. அந்தப் பிரிவு முழுவதும் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. ஒவ்வொரு இடத்திலும் நீங்கள் பார்க்கலாம் சரியானபடி வண்டிகள் இல்லை. அப்படி வண்டிகள் வந்தாலும் சரியாக வேலை செய்வது இல்லை. கரூரில் நடந்த தி.மு.க. மாநாட்டுப் பந்தலில் தீ பிடித்து அதை அணைப்பதற்கு வந்த தீ அணைப்பு வண்டி சரியாக ஸ்டார்ட்டு ஆகாததால் அதனிடம் தண்ணீர் பாய்ச்சக்கூடிய சக்தி இல்லை. அப்புறம் தான் தகராறு வந்தது. அந்த தகராறினால் தடியடிப்பிரயோகம் செய்யவேண்டிய நிலை எல்லாம வந்தது. காரணம் அந்த வண்டி சரியாக வேலை செய்யவில்லை. அப்படி டெக்னிக்கல் ஆள் டைரக்டராக இருந்தால்தான் அவர் அதை கவனிக்கமுடியும். மற்றும் கீழே வேலை செய்யக்கூடிய ஜவான்கள் பல பேரும் அந்த டெக்னிக்கல் விஷயத்தை தெரிந்தவர்கள் முன்னுக்கு வருவதற்கும் வழிகள் ஏற்படும். அவர்களும் முன்னுக்கு வரமுடியும். இன்றைக்கு இதற்கு வழி இல்லை. மறுபடியும் அதை பழைய இடத்தில் கொண்டு போய் முறைப்படி வைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதை விட ஒரு பயங்கரமான நிலையை நான் கேள்விப்பட்டேன். நீங்கள் அதை பரிசீலனை செய்து சொல்ல வேண்டும். 50-க்கு மேற்பட்ட வண்டிகள் இந்த துறைக்காக வாங்கப்பட்டு அதனுடைய பாடிகள் கட்டப்படாமல் அதனுடைய சேஸ்கள் இங்கே சென்னையில் பல இடங்களில் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அது வாங்கி பல ஆண்டுகள் ஆகிவிட்டதால் அது துருபிடித்து கெட்டு குட்டிச்சுவர் ஆகியிருக்கிறது. பாடி கட்டமுடியவில்லை. அரசினுடைய எந்த மோட்டார் பழுது பார்க்கும் ஒர்க்ஷாப்பிற்கும் போனாலும் பாடி கட்டமுடியவில்லையாம். அந்த பாடி கட்ட ஒரு பெரிய உத்தியோகஸ்தர் ஊருக்கு ஊர் அவர் சுற்றி சுற்றி பிரயாணம் செய்து கொண்டிருக்கிறார். ஆனால், பாடி கட்ட முடியவில்லை. இப்படி ஒரு நிலை இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர் இங்கே சொன்னார்கள். இந்த நிலையங்களை திறக்கவேண்டும் பல இடங்களில், ஜனங்களின் அன்றாட தேவைக்காக இது உள்ளது. வெயில் காலம் வந்தால் எங்கெங்கோ நெருப்பு பிடிக்கும். அப்போது இந்த துறை ஒழுங்காக இல்லை என்றால் எப்படி ? இப்படிப்பட்ட நிலை இருக்கிறதே? ஆகவே நான் சொல்கிறேன். தமிழ்நாடு காவல் துறையினர் முற்றிலும் திறமை அற்றவர்கள் என்பது அல்ல எங்களுடைய வாதம். அதிலே பலர்

[திரு. கு. ரமணி] [1984 மார்ச் 29

திறமை உள்ளவர்கள் இருக்கிறார்கள். நல்லவர்கள்
இருக்கிறார்கள். ஆனால், இந்த அரசினுடைய கொள்கையினால்
இவர்கள் மக்களின் உண்மையான காவலர்களாக இல்லாமல்
உங்களுடைய கொள்கையின், கண்ணோட்டத்தில், நடை
முறையின் காரணமாக அவர்களுக்கு ஒரு விதமான விரக்தியும்,
கஷ்டமும் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் குறைகள்
தீர்க்கப்படாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில்
அவர்கள் இருப்பதனால்தான் இந்தத் துறைக்கு ஏற்பட்டு
இருக்கக்கூடிய பிரதான கஷ்டம் என்பதை நான் சொல்ல விரும்பு
கிறேன். இவை அனைத்தையும் நல்ல காரியங்களுக்காக, 4½ கோடி
தமிழ் மக்களுடைய நன்மைக்காக, காவலுக்காக அவர்களும் நன்
றாக செயல்படவேண்டும். அவர்களுடைய கோரிக்கைகளையும்
நிறைவேற்றினால் தான் மக்களும் வாழ முடியும். தொழிலாளர்
களையும், விவசாயிகளையும் ஜனநாயக இயக்கத்தையும்
தாக்காதீர்கள். அது உங்களுக்கு வெற்றி தராது என்பதை
உங்களுக்கு அறிவுறுத்திக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.
நன்றி. வணக்கம்.

(பிற்பகல் 12-10)

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்
களால் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய காவல் துறை மானியத்
திலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதலில் நன்றியைச்
சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். சுமார் 4 ஆண்டு காலமாக
இந்த அவையில் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாமல் மேலே அமர்ந்து
பேசுகின்ற வாய்ப்பைப் பெற்ற எனக்கு, எப்படி நீங்கள் எல்லாம்
இந்த 4 ஆண்டு காலமும் இங்கே இருந்து பணியாற்றினீர்கள்
என்ற உணர்வை இன்றையதினம் பெறும்போது உண்மையிலேயே
மகிழ்ச்சியடைகிறேன். நம்முடைய மாண்புமிகு தமிழக முதல
மைச்சர் அவர்கள் சுமார் 86 கோடி ரூபாயை மானியமாக இங்கே
கேட்டிருக்கிறார்கள். 86 கோடி ரூபாயை இங்கே நாம் மானியமாக
அளிக்கும் போது சமுதாயத்திற்கு காவல்துறை என்ன பணி ஆற்று
கிறது என்பதை உறுப்பினர்களாகிய நாம் முதலில் சிந்திக்கவேண்
டும். காவல் துறை ஒரு சமுதாயத்தில் நன்கு இல்லாவிட்டால்,
நல்ல முறையில் பணி செய்ய முடியாவிட்டால், உண்மையில் சமு
தாயம் அழிந்து விடும். சட்டம் ஒழுங்கு கெட்டு விடும். இங்கே
கொள்கை குறிப்பில் படிக்கும்போது சமுதாயத்தில் நடைபெற்ற
கொள்கைகளையும், கொலைகளையும் இன்னும் அதிகமான குற்
றங்களையும் எடுத்து வைத்திருக்கிறார்கள். இந்த 86 கோடி
ரூபாயை நம்முடைய தமிழக அரசு செலவழித்தப் பிறகு நம்மு
டைய சமுதாயம் இதனால் எந்த அளவுக்கு பயனடைந்து இருக்
கிறது என்பதை நான் முதலில் இங்கே சொல்ல கடமைப்பட்டிருக்
கிறேன். ஆங்கில அறிஞர் ஒருவர் சொன்னார். ஒரு மொழிக்கு
எப்படி இலக்கணம் இன்றியமையாததோ அது போல ஒரு சமு
தாயத்திற்கு காவல் துறை தான் இன்றியமையாதது என்பதை
What grammer is to language, so is the police to society



1984 மார்ச் 29] [திரு. பி. எச். பாண்டியன்]

என்று ஒரு ஆங்கில அறிஞர் சொல்லியிருக்கிறார். அதை
எண்ணிப் பார்க்கும்போது இன்றைய தினம் நம்முடைய சமு
தாயத்தில் காவல்துறையினர் எப்படி எல்லாம் பணியாற்றினார்
கள் என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.
குறிப்பாக நம்முடைய இந்திய தலைமை உச்ச நீதி மன்றத்தையே
நம்முடைய தமிழக காவல் துறையினர் தான் இன்றைக்கும் பாது
காத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே டெல்லிக்குச் செல்லும்
போதும் அங்கே இருக்கக்கூடிய காவல் துறை நண்பர்கள்
சந்தித்துச் சொல்வார்கள், எங்களுக்கு அதிகமான அளவுக்கு இங்கே
படி வசதிகள் இல்லை, படி கொடுக்கப்படவில்லை என்று அங்கே
சொல்லியிருக்கிறார்கள். இதை நான் இங்கே சொல்வதற்குக் கார
ணம் காவல்துறையினர் குறிப்பாக நம்முடைய தமிழக காவல்
துறையினர் இந்திய உச்ச நீதிமன்றத்தைப் பாதுகாக்கிறார்கள்.
அகில இந்திய அளவில் தமிழக காவல்துறையினருக்கு எந்த அள
வுக்கு மதிப்பு இருக்கிறது, எந்த அளவுக்கு அவர்கள் நாணயமாக
பணியாற்றுவார்கள் எந்த அளவுக்கு இன்றைக்கு அவர்கள்
உயர்ந்து இருக்கிறார்கள் என்பதை நான் பாராட்டாகவே
சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இது மட்டும் அல்ல, இங்கே இந்தக் கொள்கை குறிப்பைப்
படிக்கும் போது எந்த அளவுக்கு இங்கே தமிழகத்தில் கொலை,
கொள்ளைகளை கண்டுபிடித்து இருக்கிறார்கள் என்பதை சிந்
தித்துப் பார்க்கும் போது நானும் பாராட்ட கடமைபட்டிருக்கி
றேன். இந்த கொலை குற்றங்கள், கொள்ளைகள் ஏன் அதிகரிக்கின்
றன என்பதைத்தான் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய
காவல் துறையைச் சார்ந்தவர்கள் நல்ல முறையில் பணியாற்றி
னாலும் நல்ல முறையில் குற்றங்களைக் கண்டுபிடித்தாலும் நீதி
மன்றத்திற்குச் சொல்லும்போது அங்கே சாட்சிகள் இல்லாமல்
இன்னும் சொல்லப்போனால் அங்கே சரியான அளவுக்கு வழக்கு
களை நாம் எடுத்துச் சொல்ல வாய்ப்பு இல்லாத காரணத்தால் சில
குற்றவாளிகள் சட்டத்திலிருந்து தப்பி விடுகிறார்கள் என்பதை
நான் இங்கே சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே நம்மு
டைய சென்னை மாநகரை உலுக்கிய ஒரு மாபெரும் கொள்
ளையை வங்கியில் செய்து இருக்கிற குற்றவாளி சுமார் 20 லட்ச
ரூபாயை கொள்ளை அடிப்பதற்காக காசாளரைக் கொன்று
பெங்களூருக்குச் சென்று அங்கே நம்முடைய தமிழக காவல்
துறையினரால் கைது செய்யப்பட்டு, சுமார் 12, 13 லட்ச ரூபாய்
கைப்பற்றப்பட்டு நம்முடைய காவல் துறையினர் பெரிய
அளவிற்கு அந்தக் குற்றத்தைக் கண்டுபிடித்து குற்றவாளியை
காவலில் அடைத்து இருந்தார்கள். சுமார் 13 லட்சம் ரூபாயைக்
கைப்பற்றி விட்டார்கள்; ரெக்கவர் செய்து விட்டார்கள்.

எந்தக் சூழ்நிலையானாலும் சரி, அந்தக் கொலைக் குற்றத்
திற்கு நிச்சயமா மரண தண்டனையை விட எந்தத் தண்டனை
யையும் யாரும் வழங்க மாட்டார்கள். அப்படிப்பட்ட ஒரு
கொலையாளியை நம்முடைய தமிழக காவல் துறை நல்ல

[திரு. பி. எச். பாண்டியன்] [1984 மார்ச் 29

முறையிலே நுட்பமான விசாரணை முறையிலே புலன் விசாரணை செய்து கைது செய்யப்பட்ட நபரை இன்றைக்கு நமது சென்னை உயர்நீதி மன்றம் ஜாமீனில் விட்டிருக்கிறது.

இதை நான் சொல்வதற்குக் காரணம், எவ்வளவுதான் நம்முடைய காவல்துறை கஷ்டப்பட்டு, நுட்பமான புலன் விசாரணைத் திறன் மூலமாக வழக்குகளைத் தொடர்ந்தாலும், அங்கே சட்டத்தின் முன்னால் வாதாடக் கூடியவர்கள், சட்டத்தை வைத்து வாதாடக் கூடியவர்கள், அதை வெல்லுகின்ற வாய்ப்பு இன்றைக்குச் சட்டத்திலே அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய சட்டம் குற்றம் புரிந்தவர்களுக்கு அதிகப் பாதுகாப்பாக இருக்கிறது. குற்றவாளிக்கு சமுதாயத்திலே, அரசாங்கம் செலவழிக்கின்ற அளவிற்கு இன்றைக்குச் சட்டம் வகை செய்கிறது.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இங்கே நம்முடைய உறுப்பினர்கள் பேசினார்கள். * * *

அதுமட்டுமல்லாமல் சிறையில் இருப்பவன் சொல்கிறான், தனிமைச் சிறையில் இருக்க முடியாது, எனக்குச் சட்டை வேண்டும், எனக்கு உணவு வேண்டுமென்று கேட்கிறான். அந்த அளவிற்கு உரிமையோடு கேட்கிறான். வளருகின்ற நாட்டில், நிதிப் பற்றாக்குறை இருக்கின்ற பொழுது இதுபோன்ற வசதிகளைக் குற்றவாளிக்கு ஏன் செய்து கொடுக்க வேண்டுமென்று குடிமகன் என்ற முறையில் நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன் (குறுக்கீடு) கடைசியாகக் கேட்கலாம். எனக்குப் பேசிப் பழக்கம் இல்லை. இது என்னுடைய கன்னிப் பேச்சு.

இங்கே குண்டர்கள் சட்டத்தின் கீழ் பல நபர்களைக் கைது செய்கிறோம். சமுதாயத்தைச் சீரழிக்கிறார்கள்; சமுதாயத்தைக் கெட்ட வழிகளில் கெடுக்கிறார்கள் என்பதை, அரசாங்கம் புலன் விசாரணையின் மூலமும், அதிகாரிகளின் புலன் விசாரணையின் மூலமும் அறிந்து, குண்டர்கள் சட்டத்தின்கீழ் சில நபர்களைக் கைது செய்கிறோம். ஆனால், குண்டர்கள் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகின்றவர்களுக்குத் தினந்தோறும் 11 ரூபாய்க்குச் சாப்பாடு போட வேண்டும். அவர்கள் வசதியானவர்களாக இருந்தாலும், அவர்கள் வருமான வரி கட்டுபவர்களாக இருந்தாலும், அவர்களுக்கு அரசாங்கத்தின் பணத்தைச் செலவழிக்கின்ற அளவிற்குத் தண்டனையாகத்தான் 11 ரூபாயை நாள்தோறும் செலவழிக்க வேண்டும். இப்படி வசதி வாய்ப்பு உள்ளவர்கள் இதுபோன்ற குற்றவாளிகளாக இருந்து, சமுதாயத்திற்குக் கேடு விளைவிக்கின்ற பொழுது அவர்களிடமிருந்தே ஏன் அந்தச் செலவை வசூலிக்கக் கூடாது என்பதைத் தான் என்னுடைய வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சாதாரண ஏழை மக்களைப் பாதுகாக்கலாம்.

* மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1984 மார்ச் 29] [திரு. பி. எச். பாண்டியன்]

Law abiding citizens என்று சொல்வார்கள். சட்டத்தை வணங்கி, வாழக் கூடியவர்களைப் பாதுகாக்கலாம். ஆனால், சட்டத்தை மீறுபவர்களுக்குத் தான் சட்டத்திலே பாதுகாப்பு இருக்கிறது; அரசியல் சட்டத்திலே பாதுகாப்பு இருக்கிறது.

இன்றைக்கு ஒருவன் வெட்டிவிட்டான் என்றால், அந்தக் குற்றவாளியிடம் ஏதாவது கோளாறு இருந்தால் நேரடியாகவே, எந்தச் சான்றிதழும் இல்லாமல் அரசாங்க மருத்துவ மனையிலே சேர்க்கிறோம். அவரிடம் எந்தச் சான்றிதழும் கேட்கத் தேவையில்லை; பணம் கேட்கத் தேவையில்லை; போலீஸ் பாதுகாப்போடு அரசு மருத்துவ மனையில் அவனுக்குச் சிகிச்சை கொடுக்கப்படுகிறது.

ஆனால், வெட்டுபட்டவனை ஒரு அரசு மருத்துவ மனைக்கு ஆட்டோ ரிக்ஷாவிலேயோ அல்லது டாக்சியிலேயோ எடுத்துக் கொண்டு சென்றால், உடனே கேட்பார்கள், சான்றிதழ் கொடுங்கள், மாத வருமானம் என்ன என்று. இப்படி, வெட்டியவனுக்குப் பாதுகாப்பு, வெட்டியவனுக்கு மரியாதை, வெட்டியவனுக்கு அரசாங்கச் சலுகை. ஆனால் வெட்டுப்பட்டவன் எந்தப் பாதுகாப்பும் இல்லாமல், சட்டத்தின் மூலம் வழியில்லாமல் இன்று அல்லல்படும் நிலைமைதான் நம்முடைய சமுதாயத்தில் இருக்கிறது என்பதை நான் இந்த மானியத்திலே பேசும்பொழுது சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12–20)

இன்றைக்கு நம்முடைய அரசு மருத்துவ மனைகளில் இருந்து நாள்தோறும் வருகின்ற பிணவறை ஊர்திகளைப் பார்ப்பவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும். ஒவ்வொரு அரசு மருத்துவ மனையிலும் நிச்சயமாக நான்கைந்து பேர்கள் இறப்பார்கள், ஏதாவது கோளாறு காரணமாக அல்லது விபத்தின் மூலமாக. ஆனால் அதைப்பற்றி எல்லாம் நாம் இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவருவதில்லை; அதைப் பற்றி விவாதிப்பதும் இல்லை. ஏனென்றால் அவையெல்லாம் சாதாரணச் சாவு. ஆனால் குற்றம் புரிந்தவர் ஒருவர் லாக் அப்பிலே செத்துவிட்டார் என்றால் உடனே நாம் அவனுக்காகப் பேசுகிறோம். இதை நான் ஒரு குறையாகச் சொல்லவில்லை. மனதில் பட்டதைச் சொல்கிறேன். ஆகவே, இன்றைக்குக் குற்றம் புரிந்தவர்களுக்குப் பாதுகாப்பாகத்தான் நம்முடைய சட்டமும் இருக்கின்றது; சட்டங்களை இயற்றக் கூடிய மன்றங்களும் இருக்கின்றன என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குற்றங்களைக் குறைக்க வேண்டும் என்றால்—நான் பத்திரிகை நண்பர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்—யாருக்காவது நாம் தண்டனை கொடுத்தால் அவர்கள் நிச்சயமாக அதைப் பற்றி எழுதுவார்கள். யாருக்காவது தூக்குத் தண்டனை வழங்கப்படுமேயானால், அல்லது கொலைக் குற்றத்திற்காகவோ அல்லது கொள்ளை அடித்ததற்காகவோ தண்

டனை வழங்கப்படுமேயானால், அதைப் பற்றிப் பெரிதாக நீங்கள் பத்திரிகைகளிலே போட வேண்டும். ஆனால் விடுதலை அடைந்தவர்களைப் பற்றிப் பத்திரிகையில் போடக்கூடாது. விடுதலை அடைந்தவர்களைப் பற்றியும் பத்திரிகைகளிலே போடுவதன் காரணத்தால் இன்றைக்குச் சமுதாயத்திலே ஒரு எண்ணம் வளர்ந்து இருக்கின்றது. ஆகவே, நான் தலைவர் மூலமாக கேட்டுக் கொள்கிறேன். நீதி மன்றத்திலே பெரிய வக்கீல்களை வைத்து தப்பி வந்துவிடலாம் என்ற எண்ணம் குற்றம் செய்பவர்களுக்கு இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது. அதைத் தடுக்கின்ற வகையில் சமுதாயத்தில் குற்றம் புரிந்தால் இந்தத் தண்டனை கிடைக்கும் என்பதை உணர்த்த வேண்டும். அந்த அளவுக்கு நிலைமையை மாற்றியாக வேண்டும். ஆனால் விடுதலை ஆவது பற்றி மக்களுக்குச் சொல்லக் கூடாது. இதை விளையாட்டாக நான் சொல்லவில்லை. ஒரு நேரத்தில் ஒரு வழக்கில் ஒரு குற்றவாளி தன்னுடைய நண்பர் மூலமாக என்னிடத்திலே வந்தார். இது நிச்சயமாக விடுதலை ஆகுமா என்று கேட்டான். நிச்சயம் சொல்ல முடியாது என்று சொன்னேன். நீங்கள் ஏன் இப்படி சொல்கிறீர்கள், நிச்சயமாக விடுதலை வாங்கித் தருவேன் என்று சொன்னால் தான் இதுபோன்ற வழக்குகளில் வாதாட முடியும் என்று சொல்லி எடுத்துக் காட்டாக சிறைச்சாலைகளிலும் வக்கீல்கள் நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்று என்னிடத்திலே சொன்னார். சமுதாயத்தில் நல்ல பெயர் எடுத்தால் மட்டும் போதாது, வாழ வேண்டும் என்றால் சிறைச்சாலைகளிலும் நல்ல பெயர் எடுத்தால்தான் எங்களுடைய வாழ்க்கையை நல்ல முறையில் நடத்த முடியும் என்பது போன்ற நிலைமை இருக்கின்றது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, குற்றங்களைக் கண்டுபிடிக்கின்றபோது நம்முடைய காவல் துறையினருக்கு பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. சில நேரங்களில் குற்றவாளிகளைப் பிடிக்கவில்லை என்றால் அதைப் பற்றி நாம் இங்கே கேள்வியாகக் கேட்கிறோம். சில நேரங்களில் குற்றவாளிகளைப் பிடித்து விட்டாலும் அவ்வாறு பிடிக்கின்ற போது ஏதாவது ஒரு ஃபோர்ஸ் யூஸ் பண்ணிவிட்டால் அதைப் பற்றியும் அவர்களை நாம் கேட்கிறோம். இப்படி இரண்டு பக்கமும் அவர்கள் அடிபடுகின்ற காரணத்தால் சில நேரங்களில் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் என்ன நடந்தால் நமக்கென்ன என்று இருந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் அவர்களை நாம் பாதுகாக்க வேண்டும். இன்றைக்கு தமிழகத்திலே இருக்கக் கூடிய காவல் நிலையங்களிலே இருப்பவர்கள் ஒருநாள் லீவு போட்டுவிட்டார்களேயானால், அவர்களுக்கு லீவு வழங்க வேண்டும் என்று எண்ணினால் சமுதாயம் நிச்சயமாக அமைதியாக இருக்க முடியாது.

நேற்றைய தினம் கூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பூங்காவனம் அவர்கள் கொண்டுவந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை நான் கேட்டுக் கொண்டிருந்தேன். காவல் துறையினர் பிடித்தாலும் குற்றம், அடித்தாலும் குற்றம், சட்டத்தை





அமல் நடத்தினாலும் குற்றம் என்றிருக்கின்றது. ஆகவே, சமுதாயத்தைப் பாதுகாக்க வேண்டும் என்றால்—என்னுடைய சொந்த எண்ணத்தை இங்கே சொல்கிறேன்—காவல் துறையினர் பி. ஆர். ஓ. போல இருக்கக்கூடாது. குற்றவாளிகளை அழைத்து இப்படிச் செய்யலாமா என்று அவர்கள் பேசிக் கொண்டிருக்கக் கூடாது. அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். சுமார் 100 மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்றால் 2 நபர்கள் பாதிக்கப்படுவதில் தவறில்லை என்பதைத்தான் என்னுடைய எண்ணமாக நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஜனநாயகத்தில் நாம் மெஜாரிட்டியாக இருக்கிறோம். ஆகவே, பெரும்பான்மையான மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நம்முடைய காவல் துறையினருக்கு இருக்கின்றது. ஆகவே, அவர்கள் சமுதாயத்தைப் பாதுகாப்பதற்குத் தைரியமாக இறங்க வேண்டும். இன்னும் ஒரு படி மேலே போய் சொன்னால்

* * * *

யாரையோ, காவல் நிலையங்களில் லாக் அப்பில் கொன்று விட்டார்கள் என்று இங்கே விவாதித்துக் கொண்டிருக்கிறோம். பலமுறை விவாதித்துக் கொண்டிருக்கிறோம். * * * (குறுக்கீடுகள்)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. இரா. ஜெயராமன்).

* * * *

என்று சொன்ன அந்த வாக்கியத்தை மட்டும் நீக்கி விடுகிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : அதை பூராவையும் எடுத்து விடுங்கள். நம்முடைய உறுப்பினர்களுக்கு நாட்டிலே எப்படி இருக்கிறது என்ற என்னுடைய எண்ணத்தை நான் சொல்லிவிட்டேன். இது வெளியிலே தெரிய வேண்டுமென்ற அவசியம் இல்லை. அது, உங்களுக்குத் தெரிந்தாலே போதும். வெளியே தெரிய வேண்டாம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. இரா. ஜெயராமன்) : மாண்புமிகு உறுப்பினர் பேசிய பேச்சு கோர்ட்டிலே இருக்கிறது. So the matter is subjudice ஆகவே கம்ப்ளீட்டாக அதை எடுத்து விடுகிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : இவ்வளவு பாதுகாப்பு இருக்கிற காரணத்தால் தான் அங்கேயும் இப்படி நடக்கிறது என்பதை நான் உணர்வோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விஷ ஊசி வழக்கில் சுமார் 7 குற்றவாளிகளைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் அன்றைக்கு தலைக்கு ரூ. 5,000-ஐ வழக்கறிஞர்களுக்குக் கொடுத்து நியமித்தது. நானும் ரூ. 5,000 ஒரு குற்றவாளிக்காக அன்றைக்குப் பெற்றிருந்தேன். அரசாங்க

---

* மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

வக்கீலுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 150 என்று நியமித்து 6 மாத காலங்கள் அந்த வழக்கு நடைபெற்றது. ஸ்பெஷல் நீதிபதி நியமித்தார்கள். இன்றைக்கு அந்த வழக்கு என்ன ஆனது? சமுதாயத்தின் பணம் எதற்காகச் செலவழிக்கப்படுகிறது? இங்கே சாதாரணமாக ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிற ஒருவனுக்கு மருந்தை வாங்குவதற்கு நாம் பணத்தை அள்ளிக் கொடுப்பதில்லை. ஆனால் குற்றத்தைப் புரிந்து பல நபர்களைக் கொன்றவனுக்கு நாம் பாதுகாப்பைக் கொடுக்கிறோம் என்பதைத்தான் நான் இங்கே எடுத்துக் காட்டாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Dr. K. SOWRIRAJAN : Mr. Chairman, Sir, he is quoting wrongly. The very purpose of justice is that no innocent man should be punished. குற்றம் புரியாதவன் யாரையும் தண்டிக்கக் கூடாது என்பது நீதியின் குறிக்கோள்.

திரு. பி. எச். பாண்டியன் : வளருகின்ற நாடுகள் வளர்ச்சிப் பணிகளுக்கு அதிகமான நிதியைச் செலவழிக்க வேண்டும். நாம் வளர்கின்ற நிலையிலே இன்றைக்கு இருக்கின்றோம். இன்றைக்கு நல்ல முறையிலே, பெரும்பான்மையான மக்கள் சட்டத்தை மீறுவதே கிடையாது. சமுதாயம் எப்படி இருக்கிறதோ அதைப் போலத்தான் சமுதாயத்தில் வாழக்கூடியவர்கள் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட சமுதாயத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் நான் இதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்குப் பெரும்பான்மையான மக்கள் பாதிக்கப்படும் போது அவர்களுக்குச் செலவழிக்க முடியாமல், நிதி ஒதுக்க முடியாமல், அந்தப் பணிகளுக்கு நிதி ஒதுக்க முடியாமல், பற்றாக்குறையால் நாம் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, பெரும்பான்மையில் நம்பிக்கைக் கொண்டிருக்கக்கூடிய நாம், பெரும்பான்மையான மக்களை பாதிக்கக் கூடியவர்களைப் பாதுகாக்க வேண்டும். இன்றைக்கு நம்முடைய நாட்டில் ஆங்கில முறை சட்டத்தைப் பின்பற்றுகின்றோம். ஒரு குற்றவாளி அரசாங்கத்தால், பிராசிக்யூஷன் தரப்பால், குற்றவாளி என்று நிரூபிக்கப்படுகிற வரையில் அவன் நிரபராதி. இந்தத் தத்துவம் ஆங்கிலேயத் தத்துவமாகும். அது வளர்ந்த நாடு, பல நாடுகளை அடக்கிய நாடு; உரிமைகள் பெற்ற நாடு. அந்த நாட்டில் இருக்கக்கூடிய தத்துவம் அது. ஆனால் நாம் அடிமைப்பட்டு இப்பொழுதுதான் விடுதலை அடைந்திருக்கின்றோம். நமக்கு ஏன் இந்தச் செலவு அதிகமாக இருக்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

இன்றைக்கு நீதித் துறையில், குறிப்பாக, சிறைச்சாலைத் துறைக்கும், காவல் துறைக்கும் நாம் செலவழிக்கக்கூடிய பணத்தில் அதிகமான அளவுக்கு ரிட்டர்ன் கிடையாது.





(பிற்பகல் 12-30)

சிறைச்சாலைகளில் இன்றைக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து இருக்கிறோம். அங்கே செலவழிக்கக்கூடிய பணம் இன்றைக்கு சமுதாயத்தை நல்ல முறையிலே சீர்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு தான், குற்றம் புரிந்தவர்களை. திருத்த வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் செலவு செய்யப் படுகிறது. இதை வளர்ந்த நாடுகள் செய்து கொண்டிருக்கின்றன. ஆனால் நாம் பற்றாக்குறையில் இருக்கிறோம். ஓவர் டிராப்ட்டில் ஓடுகிற நாடுகளுக்கு ஏன் இதுபோன்ற செலவுகள் இருக்கவேண்டுமென்ற எண்ணத்தை இங்கே சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். மற்றொன்றைச் சொல்ல வேண்டுமென்றால், குற்றவாளிகளுக்காக அங்கே நான் வழக்காடுபவன்; அங்கே அவர்களை நிரபராதி என்று சொல்லி வாதாடுகிறவன்; அங்கேயும் அவர்களுக்கு சட்டத்திலே சில நேரங்களில் வழி வைக்காமல் இருந்திருக்கிறார்கள். ஒருவனை இன்றைக்கு செஷன்ஸ் நீதி மன்றம் தூக்கு தண்டனை விதித்து, அவனை அனுப்பும்படி உயர்நீதி மன்றம் அந்தத் தீர்ப்பை ஊர்ஜிதம் செய்ய வேண்டும். ஊர்ஜிதம் செய்தவுடன் அவன் உச்ச நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் அவனுக்கு சட்டத்திலே வழியே கிடையாது. உயர்நீதி மன்றத்தில் அனுமதியை கேட்க வேண்டும். அது நீதிபதியின் டிஸ்கிரஷன் ஆகும். அந்த நீதிபதி மறுத்துவிட்டால் உச்ச நீதி மன்றத்திற்குச் சென்று விசேஷ அனுமதியை கோர வேண்டும். அந்த 'விசேஷ அனுமதியை கேட்டு ஒரு வேளை கிடைக்காவிட்டால் அங்கேயும் வாய்ப்பு கிடையாது. தூக்கு தண்டனைக்கு எதிராக உச்ச நீதிமன்றத்திற்கு போகிற அளவிற்கு சட்டத்தில் வழியில்லை என்றால் உச்ச நீதிமன்றம் எப்படி சமுதாயத்தை பாதுகாக்க முடியும் என்பதைத் தான் நான் இந்த மன்ற உறுப்பினர்களை கேட்க கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்ட விதியைத் திருத்துவதற்கு உதவியாக எல்லா கட்சி உறுப்பினர்களும் முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் அரசியல் சட்டத்தில் நிர்வாகத் துறையானாலும், நீதித் துறையானாலும், சட்ட மன்றத் துறையானாலும் மூன்று துறைகளும் சமமாக செயல்பட வேண்டும். இங்கே நிர்வாகத் துறையில் ஏதாவது தவறு நடந்துவிட்டால் நாம் நீதிமன்றத்திற்குச் செல்கிறோம். உதாரணமாக, மருத்துவக் கல்லூரியில், என்ஜினியரிங் கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை என்றால், 90 மார்க் வாங்கி இடம் கிடைக்கவில்லை, 85 மார்க் வாங்கியர்வர்களுக்கு கொடுத்திருக்கிறீர்கள் என்று நாம் அங்கே போய் கேட்கிறோம். நீதி மன்றம் அந்தந்த வழக்குகளுக்கு ஏற்ப தீர்ப்பை அளிக்கிறது. சட்டம் அதற்கு வகை செய்கிறது; நம்முடைய உச்ச நீதி மன்ற நீதிபதி பகவதி அவர்கள் ஒரு தீர்ப்பிலே சொல்லி இருக்கிறார்கள். அதாவது 302 ஷரத்தை எடுத்துவிட வேண்டுமென்று புரட்சிகர

மான தீர்ப்பை கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அது மைனாரிட்டி ஜட்ஜ்மெண்ட். அதை அவர்கள் சொல்கிறபோது, சட்டமன்றத் துறையோ, பாராளுமன்றத் துறையோ எங்களுக்கு எந்த அளவிற்கு தீர்ப்பை அளிக்கவேண்டும் என்றும், எந்த குற்றவாளிகளுக்கு எப்படிப்பட்ட தீர்ப்பை அளிக்கவேண்டுமென்றும் கைட்-லைன்ஸ் எதையும் சொல்லவில்லை ; failure of Parliament and Legislatures has caused this discrepancy என்று சொல்லி இருக்கிறார்கள். இதன் காரணமாகத்தான் ஒரு நீதிபதி ஒருவனை தூக்கிலிடுகிறார்கள் ; இன்னொரு நீதிபதி ஒருவரை விடுதலை செய்கிறார் ; ஒரு நீதிபதி ஒருவருக்கு ஸ்டே கொடுக்கிறார் ; இன்னொருவர் அதைப் போல ஸ்டே கொடுப்பதில்லை ; காரணம் டிஸ்கிரிஷன் ; இதை சீர்திருத்த வேண்டும் ; நாம் நிச்சயமாக கைட்-லைன்ஸை கொடுக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் வேண்டுகோளாக சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே காவல் துறை மானியத்தில் நான் பேசுகிறபோது இந்த ஏழு ஆண்டுகளாகச் சட்டம் ஒழுங்கு நல்ல முறையில் நாட்டில் இருந்து வருகிறது. நம்முடைய தமிழக காவல் துறை அகில இந்திய அளவில் இன்னும் சொல்லப் போனால், அகில உலக அளவிலே நல்ல பெயரை எடுத்திருக்கிறது. இங்கே உள்ள நாம் பல மாநிலங்களைச் சுற்றிப் பார்த்து வந்திருக்கிறோம். இந்தத் துறையில் இருப்பவர்கள் நல்ல முறையில் பணியாற்ற அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும் ; குறை சொல்லலாம் ; கண்டிக்கலாம் ; ஆனால் அவர்களைப் பயமுறுத்தக் கூடாது ; தண்டித்துவிடவும் கூடாது. எதற்கெடுத்தாலும் விசாரணை கமிஷன் என்று போடுவோமேயானால், நிச்சயமாக அவர்கள் உற்சாகம் இழந்து விடுவார்கள். அந்த அளவிற்கு போய்விடக் கூடாது. ஆகவே நம்முடைய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களும் நாம் எப்படி இருக்கிறோமோ அதேபோல் தான் அவர்களும் இருப்பார்கள். ஆகவே, அவர்களை நாம் என்கரேஜ் செய்யவேண்டுமென்று சொல்லி, இந்த நான்காண்டு காலமாக இந்த அவையில் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்காமல் இருந்தாலும் இன்றைக்கு பேசக்கூடிய வாய்ப்பைக் கொடுத்த நம்முடைய தலைவருக்கும், அவைத் தலைவருக்கும் நன்றி சொல்லி, காவல் துறை மானியத்தை ஆதரித்து, நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் காவல் துறை மீது கொண்டு இருக்கும் நம்பிக்கையையும், பாசத்தையும் வரவேற்று அமைகிறேன். நன்றி. வணக்கம்.

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் பேச்சைக் கேட்கும் வாய்ப்பு இன்றைக்கு எங்களுக்குக் கிடைத்தது. உங்கள் பேச்சையும் கேட்க விரும்புகிறேன். நீங்கள் எப்போது பேசப் போகிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : என் பேச்சை மாலை 5 மணிக்கு மேல் கேட்கலாம்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன் இன்றைய விவாதத்தில் நம்முடைய அவையின் துணைத் தலைவர் அவர்கள் பங்கேற்றுப் பேசியது ஓரளவிற்கு கலகலப்பை கூட்டியது. அவர்கள் சில பிரச்சினைகளைச் சொன்னார்கள். அவர்கள் அப்படிச் சொல்கிறபோது ஏதோ எங்கள் பக்கத்திலே நின்று கொண்டு பேசுகிறமாதிரி சில உணர்வுகளை ஏற்படுத்தியது. ஆனாலும் மிக ஜாக்கிரதையோடு அவருக்கே உரித்தான பாணியில் அவர்கள் சில கூர்மையான கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். * * *

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

நம்முடைய காவல் துறை வெகு சிறப்பானது. அதைப் பற்றி ஒரு வார்த்தை சொன்னார்கள். இந்தியாவிலேயே உச்ச நீதி மன்றத்திற்குக் கூட பாதுகாப்புத் தருவது நம்முடைய காவல் துறை என்று சொன்னார்கள். அப்படியானால், டெல்லியிலுள்ள காவல் துறை மத்திய அரசின் காவல் துறை அவர்களைப் பாதுகாக்க முடியாதா என்பது ஒன்று, இரண்டாவதாக, திருநெல்வேலி மாவட்டத்தில் நம்முடைய காவல் துறை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணைத்தலைவர் சொன்னவை நீக்கப்பட்டுவிட்டன. மறுபடியும் பேசும்போது அந்த வார்த்தைகளை அவர் கூறியிருக்கிறார். ஆகவே அதையும் குறிப்பேட்டிலிருந்து நீக்கி விடுவது நல்லது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவை துணைத்தலைவர் பேச்சிலிருந்து நீக்கப்பட்ட வார்த்தைகளை திரு. பூங்காவனம் இங்கே குறிப்பிட்டிருப்பதால் அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. என். ஏ. பூங்காவனம் : தமிழகத்தில் இந்த ஓராண்டு காலத்தில் காவல்துறை எடுத்த நடவடிக்கைகளைப் பற்றிய ஒரு ஆய்வறிக்கையை இங்கே கொடுத்திருக்கிறார்கள். அதிலே பல்வேறு கருத்துக்கள் பல்வேறு நடைமுறைகள், காவல்துறை

---

* மாண்புமிகு மாற்றுத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பொதுமக்களுக்கு எப்படி சிறப்பாகப் பணியாற்றியது என்பதையெல்லாம் சொல்லி இருக்கிறார்கள். நான் ஒன்றைக் கூறிக் கொள்கிறேன். திருநெல்வேலி மாவட்டத்தில் தாழையூத்து என்ற இடத்தில் உள்ள காவல் நிலையத்தில் பொதுமக்களைப் பாதுகாக்கும் போலீஸ், சொத்துக்களைப் பாதுகாக்கும் போலீஸ், உயிருக்கும் உடைமைக்கும் உறுதுணையாக இருக்கும் போலீஸ், அந்தக் காவல்நிலையத்திலேயே வெட்டிக் கொலை செய்யப்படுகிறார். அது சம்பந்தமாக வழக்கு நடந்து நீதிமன்றத்தில் விசாரித்தபோது சாட்சியம் இல்லையென்று வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. காவல்துறையினருக்கு போலீஸ் நிலையத்திலேயே பாதுகாப்பு இல்லையே. இப்படிப் பட்ட நிலை ஏன் ஏற்பட்டது. அதற்கு அரசாங்கம் என்ன பதில் சொல்கிறது?

(பிற்பகல் 12-40)

இரண்டாவதாக, தஞ்சை மாவட்டத்தில் பத்துதலை கிராமத்தில் சுந்தர ரெட்டியார் என்பவர் அதே கிராமத்தில் இன்னொரு சுந்தரரெட்டியார் நிலத்தை குத்தகைக்கு பயிர் வைக்கிறார். அந்த ஏழை விவசாயியை போலீசைப் பயன்படுத்தி, அந்தப் பகுதியிலே உள்ள இதரர்களையும் பயன்படுத்தி, வெளியேற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு பொய் வழக்குப் போட்டு, அவரை உள்ளேத் தள்ளியிருக்கிறார்கள்.

அதைப்போன்று இன்னொரு இடத்தில் கொடுமையான நிகழ்ச்சி ஒன்று நடந்திருக்கிறது. அந்தக் கிராமத்தில் ஒரு சாதாரண விவசாயி. அவருக்கு இரண்டு பிள்ளைகளும் 3 பெண்களும் இருக்கிறார்கள். அவருடைய ஒரு மகனை கொன்று விட்டார்கள், கொலை செய்துவிட்டார்கள். அவரை கொலை செய்தது பற்றி காவல் துறைக்குப் புகார் கொடுக்கிறார்கள் காவல் துறையினர் என்ன செய்தார்கள்? கொலை செய்தவர்களைக் கண்டுபிடித்து, நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக யார் ,புகார் கொடுத்தாரோ அவர் வீட்டுப் பிள்ளையைக் கைதுசெய்து உள்ளே வைத்தார்கள் இப்படி புகார் கொடுப்பவருக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாதஒரு நிலை இருக்கிறது.

அதைப்போன்று திருத்துறைபூண்டி காவல் சரகத்தில் ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவர் இருக்கிறார். அந்த ஜாதியை நான் சொல்ல விரும்பவில்லை. அவர் உயர்ந்த ஜாதி என்று செல்லக்கூடிய ஒரு ஜாதியைச் சேர்ந்தவர், அதிகாரியாக இருக்கிறார். மாற்றுப் பிரிவினர்களை, சாதாரண விவசாயிகளை, அரிசன மக்களை கொடுமைப் படுத்துகிறார். அவர்கள்மீது வழக்குகள் போடுகிறார், துன் புறுத்துகிறார். இப்படி எல்லாம் செய்து நிலத்தைவிட்டு





வெளியேற்ற முயற்சி செய்கிறார். இது சம்பந்தமாக எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது அல்லாமல் இனி நம்முடைய காவல் துறை சம்பந்தமாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நம்முடைய காவல் துறை, கடந்த ஓராண்டு காலத்தில், சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு ஏறத்தாழ 6,000 குற்றங்கள் கூடுதலாக நடந்திருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது, அதேநேரத்தில் சென்ற ஆண்டு எந்த அளவுக்கு குற்றங்களை கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கை எடுத்தார்களோ, கண்டு பிடிக்க முயற்சிகளை மேற்கொண்டார்களோ, குற்றங்களைக் கண்டுபிடித்தார்களோ, அதைவிட குறைவாகத்தான் இந்த ஆண்டு கண்டுபிடித்திருக்கிறார்கள். போன ஆண்டு 72.5 சதவீதம் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்க, இந்த ஆண்டு 65.5 சதவீதம் குற்றங்கள்தான் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன. அப்படி என்றால் சென்ற ஆண்டைபோல இந்த ஆண்டு காவல்துறை குற்றங்களைக் கண்டுபிடிப்பத்தில் முயற்சி செய்யவில்லை என்பது தெரிகிறது. 37,000 ஆக இருந்தது, கிட்டத்தட்ட 5,000 அளவுக்கு குற்றங்களில் கூடியிருக்கிறது, ஆனால் கண்டுபிடித்தது குறைந்திருக்கிறது.

அடுத்து, சேலத்தில் ஒரு விஷயம், போன வருஷம் இதே மன்றத்தில் ஒத்தி வைப்புத் தீர்மானம் மூலமும் வேறு பல நேரங்களிலும் கொண்டுவரப்பட்டது. சேலம் விஷயத்தில் கற்பழிப்பு-கொலை சம்பந்தமாக, காவல் நிலையத்தில் தெய்வ மணி கொலை செய்யப்பட்டார். அது சம்பந்தமாக இங்கே சொல்கிறபோது அரசாங்கத்தின் சார்பில் அப்படி இல்லை, நோய், உடல் வலி ஏற்பட்டு, அதைத் தாங்கிக் கொள்ளாமல் தன்னுடைய சேலையை முறுக்கிப்போட்டு தற்கொலை செய்து கொண்டாள் என்று சொன்னர்கள். ஆனால் நீங்கள் நியமித்திருக்கிற ஓய்வுபெற்ற நீதிபதி நஞ்சப்பன் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். கொலை நடந்துள்ள நிகழ்ச்சியில் ஏற்பட்டுள்ள சூழ்நிலைகளை ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டும்; தீர்க்கமாக ஆராய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அவர் அப்படிச் சொன்னதற்குப் பிறகும் அங்கே சாட்சியமாக யாரும் இல்லை என்று சொல்லுகிறார்கள். நடந்த இடம் காவல் நிலையம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் பெண்களுக்கு எங்கே பாதுகாப்பு? எங்கே அவர்களுடைய பாதுகாப்புக்கு உத்தரவாதம்?

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இந்த ஓராண்டு காலத்தில் காவல் துறை தரப்பிலிருந்து எந்த நிலயத்தை எடுத்துக்கொண்டாலும் ஊழல் நடந்திருக்கிறது. நான் இப்படி சொல்வதால், மாற்றுத் தலைவரவர்களே, தவறாக எடுத்துக்

கொள்ளக் கூடாது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் எல்லா காவல் நிலையங்களிலும் சர்வசாதாரணமாக நீதிமன்றத்திற்கு முன்னால் வழக்கறிஞர்கள் சில புரோக்கர்களை வைத்துக் கொண்டிருப்பார்கள், தன்னிடம் கேசைக்கொண்டு வருவதற்காக.

அதன்மூலம் அவர்கள் வாழ்க்கையை நடத்தவும், தொழிலை செம்மைப்படுத்திக் கொள்ளவும் இப்படிச் செய்கிறார்கள். அதே முறையில் தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு காவல் நிலையத்திலும் முன்பும் புரோக்கர்கள் இருக்கிறார்கள். ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் வேண்டுமானால் இல்லையென்று சொல்லலாமே தவிர, மனசாட்சியோடு வேறு யாரும் இப்படிச் சொல்லமாட்டார்கள். இது எல்லா உறுப்பினர்களுக்கும் தெரியும். ஆக இரண்டு பேரிடமிருந்தும் காசு வாங்குகிறார்கள். அடிபட்டவனும் பணம் கொடுக்கவேண்டும் அடித்தவனும் பணம் கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுத்தால் தான், இரண்டு பேரும் வெளியே போகமுடியும். இல்லையென்றால், உள்ளே தான் இருக்கவேண்டும். இதுதான் தமிழ் நாட்டிலுள்ள காவல் துறையின் நிலைமை. இதை நான் சொல்லும்போது, குற்றம் சொல்லவேண்டும் என்றோ, குறை சொல்லவேண்டும் என்றோ, கண்டிக்கவேண்டும் என்றோ சொல்வதாக நினைக்கவேண்டாம். காவல்துறையைப் பற்றி எனக்கு உயர்ந்த உணர்வு உண்டு. மற்ற எந்தத் தொழிலைக் காட்டிலும், கடுமையான தொழில், காவல்துறை தொழில் தான் மற்ற சராசரி மனிதனுக்கு இருக்கிற சுதந்திரம், வசதிகள் போன்றவைகள் காவல் துறையினருக்கு மிகக் குறைவு. காவல் துறையினர் வீட்டில் உறங்குகிறபோதும், குழந்தைகளுடன் பேசிக்கொண்டிருக்கும்போதும், நாட்டிலே ஏதாவது நடக்கும். அதன் அடிப்படையிலே உடனே அழைக்கப்படுவார்கள். இவர்கள் உடனே அங்கே போகவேண்டும். நிம்மதியாகத் தூங்கமுடியாது. இத்தனை மணிநேரம் தான் வேலை என்ற உத்திரவாதமும் கிடையாது. எனவே உண்மையிலேயே மனப்பூர்வமாகச் சொல்கிறேன். அவர்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும். திறமையாக வேலை செய்பவர்களுக்குப் பதவி உயர்வு தர வேண்டும். போதுமான எண்ணிக்கையில் [illegible] அவர்களை நியமிக்க வேண்டும். இதெல்லாம் நியாயமான கோரிக்கைகள்தான். தப்பு ஒன்றுமில்லை. [illegible] அரசாங்கம் உடனடியாக இவைகளை எல்லாம் செய்ய வேண்டும். வெறும் வார்த்தைகளாலும், அறிவுரைகளாலும் [illegible] போதாது. வாழ்க்கைத் தரத்தை அடிப்படையாகக் கொண்டு, தேவையை அடிப்படையாகக் கொண்டு, [illegible]வும், தூய்மையாகவும் தொழிலைச் செய்வதற்கு வழி [illegible] வேண்டும். நம்முடைய அவை முன்னவர் [illegible] சொன்னார். கையூட்டு என்று. கையூட்டு என்று பெறாமல் இருப்பதற்கு, அவர்களுக்குப் போதிய ஊதியம் தர வேண்டும். இல்லையென்றால் இதெல்லாம் நடக்கும். எனவே அந்த நிலையத்திலுள்ளவர்களை மாற்ற வேண்டுமென்பதிலே கருத்து வேறுபாடு இல்லை.



அதேபோல, விவசாயிகள் போராட்டம், அல்லது வேறு எந்தப் போராட்டம் என்றாலும் எடுத்துக் கொள்ளுங்கள். சமீபத்தில் பிப்ரவரி மாதம் போலீசை ஆளுங்கட்சியைச் சேர்ந்த நண்பர்களும், சில தோழர்களும் கண்டித்துப் பேசினார்கள். அல்லது வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்பதற்காக அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் ஒன்றாக இணைந்து கண்டனக் கூட்டம் போட்டார்கள், பிப்ரவரி மாதம் 20 -ஆம் தேதி. ஆனால் மார்ச் 21 அன்று — ஒரு மாதத்திற்குப் பிறகு, எல்லா ஆட்களையும் பிடிக்கிறார்கள். தோழர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். என்ன நடந்தது? யாரைத் தாக்கினார்கள்? எங்கே தீ வைத்தார்கள். எந்த இடத்தில் அவர்கள் வெடிகுண்டு வைத்தார்கள் என்று சொல்ல முடியுமா? அங்கே போலீஸ் என்ன சொல்கிறது? அங்கே போலீசை தப்பாகப் பயன்படுத்திக் கொண்டு, இயக்கிக் கொண்டிருக்கிறார்கள். பொதுக் கூட்டங்கள் நடத்தப்படுகிறது. தாக்குதல் நடக்கிறது. அப்பாவி மக்கள் தாக்கப்படுகிறார்கள். அதற்கு என்ன காரணம்? போலீசார் உஷாராக இல்லை. காலத்தோடு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பாரபட்சமாக நடக்கிறது. ஒரு தலைப்பட்சமாக நடக்கிறது. நியாயத்தின் பக்கம் நடக்கவில்லை.

சாதாரணமாக ஒரு தொழிற்சாலையில் தொழிலாளர்களுடைய போராட்டம் நடந்தால், அங்கே முதலில் நிற்பது நம்முடைய காவல் துறை தான். முதலாளிகள் கூட அவ்வளவு கடுரமாக, அவ்வளவு வேகமாக இல்லை. ஆனால் இந்த காவலர்கள் தான் வேகமாக நடந்து, அந்த முயற்சியில் அந்தப் போராட்டத்தை உடைக்க உதவுகிறார்கள். இதிலிருந்து இந்தச் சர்க்கார் ஏதோ தொழிலாளர்களுக்கு நண்பன் என்று சொல்லிக் கொண்டும், உறுதுணையாக இருக்கிறது என்று சொல்லிக் கொண்டும் இருக்கிறதே தவிர, முதலாளிக்குத் தான் ஆதாவாக இருக்கிறதோ, என்ற ஐயம் ஏற்படுகிறது. அந்தப்பக்கத்திலுள்ள நண்பர்கள் ஏதோ தவறாகக் குற்றம் சாட்டுகிறார்கள் என்ற நிலையில் பார்க்கக் கூடாது. நியாயமான முறையில் பார்த்து, எங்கே தப்பு நடக்கிறதோ, அது தடுக்கப்பட வேண்டும். தவிர்க்கப்பட வேண்டும். காவல் துறையிலுள்ளவர்கள் மக்களுடைய நண்பர்களாக இருக்கிறார்கள், நடந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பார்க்க வேண்டுமானால், காவல் நிலையங்களைப் போய் பாருங்கள். நிதானமாக விசாரியுங்கள். கேட்டுப் பாருங்கள். உள்ளே போய் திரும்ப வெளியே வருகிறபோது, — இங்கே முன்பெல்லாம் மக்களுக்குள் ஒரு நெருக்கடி வந்தால், வலிவு உள்ளவன், வலிவு இல்லாதவனைத் தாக்கினால் அவன் போகிற முதல் இடம் காவல் நிலையம். இப்போது வலிவு இல்லாதவனை, வலிவு உள்ளவன் தாக்கினால், என்ன நினைக்கிறான் தெரியுமா, சாட்சிக்காரன் காலிலே விழுவதை விட, சண்டைக்காரன் காலிலே விழுவது மேல் என்ற அவல நிலைக்கு காவல் நிலையம் பயங்கரமாக மாற்றப்பட்டிருக்கிறது. உள்ளே போகும்போதே, அவன் நடுங்கிப் போகிறான். காசு கொடுத்தாலும் அடி, கொடுக்கவில்லை

என்றாலும் அடி. அவர்கள் மேலே வழக்கு நடத்தப்படுகிறது. எதையும் செய்வார்கள். இந்தச் சூழ்நிலை வந்து கொண்டிருக்கிறது. ஆகவே அதை மாற்றவேண்டும்.

(பிற்பகல் 12-50)

அது போன்று தொழிலாளர்கள் விஷயத்திலே, நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இந்த விஷயத்திலே எல்லாம் தொடர்ந்து போலீசார் குறுக்கிடுவது, தலையிடுவது போன்ற நிகழ்ச்சியை அரசு நிறுத்த வேண்டும். அப்படி இல்லை என்று சொன்னால், உண்மையிலேயே பாமர மக்களுக்கு, ஏழை மக்களுக்கு அது உறுதுணையாக இல்லை என்றுதான் பொருள். சென்ற முறை நாங்கள் ஹர்த்தால் நடத்தியபோது, மறியல் நடத்தியபோது, வேறு பல நிகழ்ச்சிகளிலே எல்லாம் ஈடுபட்ட போதெல்லாம், மாநிலம் முழுமையும், சாதாரணமாக விட்டிலே உள்ள எல்லோரையும் கைது செய்தார்கள். காவல் துறைப் பணி சிறப்பானது. கைது செய்வதிலா? அந்த முறையில் சிறப்பானதா? இதை விளக்க வேண்டும் அல்லவா? சில கேஸ்களைப் பிடிக்கிறார்கள். வெகு தூரம் சென்று கண்டு பிடித்து வந்திருக்கிறார்கள். பாராட்டுக்குரியது. நன்றி, அதிலே தப்பு இல்லை. ஆனால் பெருவாரியான கேஸ்களில், இந்த நிகழ்ச்சிகளில் எல்லாம் எப்படி நடந்து கொள்கிறது என்று சொன்னால், எல்லா வகையிலேயும் எதிர் நிலை எடுக்கிறார்கள். அதை மாற்ற வேண்டும். அப்படி மாற்றம் வருவதோடு, இந்த ஆளும் கட்சித் தரப்பின் மீது கூட ஏராளமான புகார்கள் எல்லாம் வந்து கொண்டிருக்கின்றன. அதையும், தவிர்க்க வேண்டும். ஏதோ இவர்கள் ஏவி விடுகிறார்கள். சொல்வதைச் செய்கிறார்கள் என்ற அப்படிப்பட்ட அவல நிலைக்கு காவல்துறை போகவே கூடாது. ஆளும் கட்சி என்பதும், எதிர்க் கட்சி என்பதும், ஒரு ஜனநாயக நாடு என்பதில், முதலாளித்துவ சமூக அமைப்பில் இன்றைக்கு அங்கே இருப்பார்கள், நாளைக்கு இங்கே வருவார்கள். இது சர்வ சாதாரணமான விஷயம். இப்படி இருக்கிற சந்தர்ப்பத்திலே காவல் துறையைப் பொறுத்த மட்டில், எந்தக் காரணத்தை முன்னிட்டும், ஒரு வழிகாட்டு முறை என்று சொல்கிறார்களே, அதைத்தான் அவர்கள் அமுலாக்க வேண்டும். அதிலிருந்து மாறுபட்டுப் போவார்களானால் அடுத்து வருகிற ஆட்சியில், பழி வாங்குவதற்கு அவர்கள் ஆளாக்கப்படுவார்கள். அந்த நிலையிலே இருந்து மாற்றம் வர வேண்டும். மாற்றம் வருவதற்கான முறையில் அரசே வழி காட்ட வேண்டும்.

உதாரணமாக சாதாரண சின்ன விஷயங்கள், நிகழ்ச்சிகளை எல்லாம் பெரிதாகக் காட்டுகிற முறையில் அவர்கள் ஆக்குகிறார்கள். கடைசியாக என்னுடைய தொகுதியில் ஒரு சின்ன விஷயம், நிகழ்ச்சி நடந்தது. ஒரு பெண்ணைத் தொந்திரவு செய்தார்கள் என்பதற்காக அந்த ஊரினுடைய நாட்டாண்மைக்காரர் சந்திரன் என்பவர், ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர், ஊட்டி.நாடு ஊர் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர் அவர் கேட்ட





வுடனே அவரை அடித்தார்கள். அவர் தம்பியைக் கையை முறித்தார்கள். மண்டை உடைந்தது. காது அறுந்தது. கை முறிந்தது. அதற்குப் பின்னால் என்னுடைய மகனும் தலையிட்டு அதிலே தாக்கப்பட்டார். இந்த நிலை வந்த பிறகு, அந்த சமூக விரோதிகள் அந்த ஊரிலேயே இருக்கிறார்கள். யார் இதைச் செய்வது? காட்பாடி காவல் நிலையத்தில் வேலை செய்கிற எஸ். ஐ. ஆக இருக்கிற அண்ணாமலை, அவரோடு மணி என்ற ஏட்டு ஒருவர் இருக்கிறார். இந்த 2 பேரும் இந்த 5 நிலையங்களுக்கு, ஏறக்குறைய 28 கிராமங்கள் உள்ளடங்கிய பகுதியிலே என்ன அக்கிரமம் செய்ய முடியுமோ, அத்தனை அக்கிரமமும் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் காவல் துறையைப் பற்றிச் சொல்கிறபோது, பொது மக்கள் மத்தியில் ஏற்படக் கூடிய அவநம்பிக்கை, அபகீர்த்தி, தவறான கருத்து மாற்றப்பட வேண்டும் என்றால், காவல்துறை சீராக, முறையாக, சரியான முறையில் செயல்பட வேண்டும். எனவே இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் நடைபெறாமல் இருப்பதற்கு நீங்கள் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இதிலே பல்வேறு கருத்துக்களை எனக்கு முன்னாலே பேசிய தோழர் ரமணி அவர்கள், எங்கள் தரப்பிலேயிருந்து நிறைய கருத்துக்களைச் சொல்லி விட்டார்கள். இரண்டாவதாக, ஒரு விஷயத்தைப் பற்றி மட்டும் நான் சொல்லி விடுகிறேன். தீ அணைப்பு நிலையம். இது சம்பந்தமாக முன்னேற்ற கழகத் தோழர்கள் பேசினார்கள். நானும் சொல்கிறேன். அதிலே பணியாற்றக் கூடிய தொழிலாளர்கள், சில நேரங்களில், திறமையாகவும், உறுதியாகவும், வேகமாகவும் பணியாற்றுகிறார்கள். அதில் தப்பில்லை. அதிலே உள்ள குறைபாடு, போன ஆண்டுக்கு முன்னாலே இதே மானியத்திலே பேசுகிற போது நான் முதல்வர் அவர்களிடம் கேட்டுக் கொண்டேன். தீ அணைப்பு வண்டி எந்த நேரமும் காலியாக இருக்கிறது. ஃபையர் ஆனவுடனே, தீ பற்றிக் கொண்ட உடனே, தகவல் கொடுத்தால், வண்டி வந்த பிறகு தண்ணீர் எங்கே என்று கேட்கிறார்கள். தண்ணீர் எங்கே என்று கேட்கிறபோது தான் எரிகிற தீ ஒரு பக்கம், மக்களின் உணர்ச்சி, அந்த வேகம் இன்னொரு பக்கம், வண்டியும் தாக்கப்படுகிறது. நம்ம ஆளும் தாக்கப்படுகிறான். தண்ணீர் எப்போதும் இருக்கும் என்று சொன்னார்கள். நிலையத்தில் எப்போதும் தண்ணீர் இருக்கும் என்று சொன்னார்கள். எங்கே பார்த்தாலும் இந்த வண்டியிலே தண்ணீர் இல்லை. மக்களோடு தகராறு ஏற்பட்டு தாக்கப்படுகிற செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அது தவிர்க்கப்பட வேண்டும். தண்ணீரோடு அந்த தீயணைப்பு வண்டி அங்கே நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என்னுடைய தொகுதியில் லத்தேரி, தேவிகுப்பம், திருவளம் ஆகிய இடங்களில் தீயணைப்பு நிலையங்களை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கோரிக்கையை போன ஆண்டும் கூட கேட்டேன். இந்த ஆண்டும் சொல்கிறேன். என்னுடைய தொகுதி என்று மட்டும் அல்லாமல், எங்கெல்லாம் தீயணைப்பு நிலையங்கள் அவசிய

மாகத் தேவைப்படுகிறதோ, அப்படிப்பட்ட இடங்களில் மக்க ளுடைய பாதுகாப்பை முன்னிட்டு, கட்டாயமாக அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே. காவல்துறை, தீயணைப்புப் பணிகள், மாநில ஆயத் தீர்வைத்துறை, ஆகிய மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இங்கே சொல்ல விரும்பு கிறேன். இதைப்பற்றி நான் பேசுவதற்கு முன்னால், எனக்கு முன்னால் பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர் பூங்காவனம் அவர் கள், தொழிற்சாலைகளில் போராட்டம் நடந்தால், அங்கு அந்தத் தொழிலாளர்களுடைய முதலாளிகள் வருவதற்கு முன் னால், தொழிற்சாலைகளின் நிர்வாகிகள் வருவதற்கு முன்னால், அரசாங்கம், தமிழக அரசினுடைய போலீஸ் முன்னதாக வந்து விடுகிறது என்று சொன்னார்கள்.

அந்த அவர்கள் மனம் திறந்து பாராட்டாகச் சொன்னார் களோ, அல்லது மனத்திலே ஏதாவது வைத்துக் கொண்டு சொன்னார்களோ என்பதை யெல்லாம் எடுத்துக் கொள்ளாமல் அதை அவர் பாராட்டாகவே சொன்னார் என்றே நான் எடுத்துக்கொள்கிறேன். அதற்குக் காரணம், எந்தத் தொழிற் சாலையில் போராட்டம் நடைபெற்றாலும், தொழில் தகராறுகள் ஏற்பட்டாலும் அதற்கு உரிய தீர்வு காண வேண்டும் என்று எங்கள் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு காவல் துறை யை அனுப்பி, தொழிலாளர்களை பாதுகாக்கிறது. தொழிற்சாலை களுக்கு பாதுகாப்பு அளிக்கிறது என்பதை தெரியாத்தனமாக அவர்கள் ஒப்புகொண்டிருக்கிறார்கள், அதற்காக நான் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளுக்கு எல்லோருக்கும் முன்னாலே போலீசாரை அனுப்புவதைப் பற்றி நான் தெரியாத்தனமாகச் சொல்லவில்லை. போராட்டத்தை உடைப்பதற்காக கருங்காலி களாக வேலை செய்வதற்காக போலீஸ் அங்கே போகிறது என்ற முறையில்தான் சொன்னேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். எந்தப் போராட்டம் நடைபெற்றாலும், அல்லது எந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றாலும், அதிலே ரௌடிகள் நுழைந்துவிடுகிறார்கள். கருங்காலிகள் நுழைந்து விடுகிறார்கள், அதிலிருந்து பாதுகாப்புக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று கருத்து உள்பட பேசினார்கள். ஆகவே, அப்படிப் பாதுகாப்பதற்காக, அப்படி கருங்காலிகள் நுழைவதற்கு



விட வேண்டாம் என்று அந்த அடிப்படையிலே தான் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு போலீசாரை முன்னதாக அனுப்பி பாதுகாப்பு தருகிறது.

அப்படிப்பட்ட பாதுகாப்பு கடந்த 6, 7 வருடங்களுக்கு முன்னால், ஏன் 10 வருடங்களுக்கு முன்னால் கூட கிடைக்காத காரணத்தால் தான், மதிப்பிற்குரிய பிரதாப் சந் திரன் அவர்கள் கொல்லப்பட்டார்கள். அப்படி அவர் கொல்லப் பட்டதற்காக, அவர்கள் செய்த தியாகத்திற்கு மதிப்பு அளிப்பதற்காகத்தான், இந்த அரசு, புரட்சித்தலைவர் அவர்கள் தலைமை பொறுப்பேற்றிருக்கிற அனைத் திந்திய அண்ணா தி. மு.க. அரசு, சிலையை வைக்கிறது என் பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். (குறுக்கீடு). மேற்கு வங்கத்தினுடைய பிரச்சினைகளையெல்லாம் எழுப்பி, பசி நேரத் திலே அவரோடு சண்டை போட நான் தயாராக இல்லை.

தமிழகத்திலே டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், எம். ஜி. ஆர். அவர்கள் ஆட்சியிலேதான் காவல்துறை மிகச் சிறப்பாக, தமிழகத்தில் மட்டுமல்ல, இந்திய துணைக் கண்டத்தில் மட்டுமல்ல, அகில உலக அளவிலே கூட நல்லதொரு பெயரையும். மிக உன்னதமாக செயல்படுகிற துறை என்ற நற்சான்று பத்தி ரத்தையும் பெற்றிருக்கிற அளவிற்கு சிறப்பாகச் செயல்படுகிறது.

அதற்கு உதாரணமாகத்தான், இன்றைக்கு மிக திறமையான போலீசாரை வைத்துக்கொண்டிருக்கிற, ஸ்காட்லாண்ட் யார்ட் போலீஸ்படை இருக்கிற இங்கிலாந்து நாட்டிலே, கும்பகோணத் திற்கு பக்கத்திலே இருக்கிற செம்பனார் கோவிலிலே உள்ள முருகனுடைய மனைவிகளான வள்ளி, தெய்வானை சிலைகள் கடத்திக்கொண்டு போகப்பட்டன. 2 வள்ளியம்மை சிலை களும், ஒரு தெய்வயானை சிலையும் அப்படி கடத்திக்கொண்டு போகப்பட்டபோது, அவைகள் யாரிடம் இருக்கின்றன என்பதை கண்டு பிடித்ததோடு மட்டுமல்லாமல், அந்த வழக்கிலே திறமை யாக வாதாடி வெல்லுவதற்காக, அந்தக் கோவிலிலே அந்த ஆண் டவன் சிலையை பூஜை செய்து கொண்டிருந்த அர்ச்சகர், முத் தையா குருக்கள் என்பவரையும் அங்கே அழைத்துச்சென்று நிறு த்து, திறமையோடு வழக்காடியதன் காரணமாக, வழக்கிலே தீர்ப்பு நமக்குச் சாதகமாக அமைந்திருக்கிற அளவிற்கு சூழ்நிலை ஏற்பட்டதால், அங்கேயிருக்கிற, '' டெய்லி டெலிகிராப் '' என்ற ஆங்கில நாளேடு 17—6—1933 அன்று மிகப் பெரிய அளவிலே குருக்களின் படத்தையும் நம்முடைய காவல்துறையின் அதிகாரி யின் படத்தையும் போட்டு, நம்முடைய தமிழக அரசாங்கத்தை யும், தமிழகத்தினுடைய காவல்துறையைப் பற்றியும் பாராட்டி எழுதியிருக்கிறது. அது மட்டுமல்ல, இங்கிலாந்து நாட்டிலே, இருக்கிற தொலைக் காட்சி நிலையத்திலும் ஒளிபரப்பச் செய்து, அந்த நாட்டினுடைய ரேடியோவில் மட்டும் அல்லாது, பி.பி.சி. யிலும் கூட ஒலிபரப்பக்கூடிய அளவிற்கு, உலக அளவில் ஒரு

சாதனையை, பாராட்டை நம்முடைய தமிழகத்தில் உள்ள காவல் துறை பெற்றிருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே இருப்பவர் களுக்கு எடுத்துக் காட்டுவதற்காகச் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-00)

அதே நேரத்திலே தமிழகத்திலிருந்து இலண்டனுக்குக் கடத் தப்பட்ட சிலையைக் கண்டுபிடித்த காவல்துறையினர் அமெரிக்கா விலிருந்து தமிழகத்திற்கு ஆப்பிரகாம் லிங்க சிலை கடத்தப் பட்டதாகப் பொதுமக்களிடத்திலே பேசப்படுகிறது. அதையும் கண்டுபிடித்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே இருக்கிற காவல் துறையினருக்கு பல வாகனங் கள் அளிக்கப்பட்டிருந்தாலும், அந்த வாகனங்கள் பழுதுபடுகிற போது உடனடியாக பழுதுபார்க்காத நிலையில்—ஒரு ஊரிலேயோ நகரத்திலேயோ பெரிய பிரச்சின்ன உருவாகிறபோது அந்தப் பிரச்சினைகளுக்காக வாகனங்கள் வேண்டும், போலீஸை அழைத் துச் சென்று அங்கே மொபிலைஸ் செய்ய வேண்டுமென்ற சூழ் நிலை வருகிறபோது தான் தலைமை நிலையத்திலே பல வாகனங் கள் பழுதுபட்டிருக்கின்றன என்ற நிலைமை வருகிறது—ஆகவே, வேறு ஊரிலிருந்து வாகனம் வரவேண்டும், வேறு ஊரிலிருந்து வாகனம் வந்த பிறகுதான் போலீஸை அந்தப் பகுதிக்குக் கொண்டு செல்ல முடியும் என்ற இக்கட்டான சூழ்நிலை இருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்கு—தற்போது சென்னைக்குப் பக்கத்திலே, உள்ள ஆவடியிலே தான் மோட்டார் வாகனங்களைப் பழுது பார்க்கிற நிலையம் பணி மனை இருக்கிறது, இந்த ஆண்டு, மேலும் அதற்காக $2\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் கூடுதலாக ஒதுக்கி திருச்சியிலே இன்னொரு பணிமனையை அமைப்பதாகச் சொல்லி யிருக்கிறார்கள்—மோட்டார் வாகனப் பராமரிப்பு நிலையங்கள் சென்னையிலேயும், திருச்சியிலேயும் இருப்பது மட்டும் போதாது, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலேயும் அப்படிப்பட்ட பணி மனைகள் வந்தாக வேண்டும். ஒவ்வொரு மாவட்டத் தலை நகரிலேயும் அது கொண்டுவரப்பட வேண்டுமென்றாலும் ஒரு ரேஞ்ச் என்று சொல்லப்படுகிற ஒரு சாகத்திற்கு ஒரு பணிமனை நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே புரட்சித் தலைவர் அவர்களுக்கு வேண்டுகோளாக வைக்கக் கட மைப்பட்டிருக்கிறேன்.

பல மாவட்டங்களிலே நடமாடும் காவல் படைகள் இருக்கின் றன. அவைகள் எல்லாம் மிகவும் சிறப்பாக செயல்படுகின்றன. நடமாடும் காவல் படையினருக்கு இன்னும் ஒரு சில மாவட்டங் களிலே வாகனங்கள் தரப்படவில்லை என்று அறிகிறேன். நட மாடும் காவல் படையினருக்கு தனியாக ஜீப்புகள் வழங்கப்பட வில்லை. அவர்களுக்கு என்று தனியாக ஜீப்புகள் வழங்கப்படு வதற்கு முயற்சிகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.





தமிழகம் முழுவதும் உள்ள காவல் துறையிலே இருக்கிற ஆய்வாளர்கள், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்று சொல்லப்படு கிற சரக ஆய்வாளர்கள் ஆகியவர்களுக்கு முழுமையாக வாக னங்கள் தரப்படவில்லை. அவர்களுக்கு வாகனங்கள் தரப்படாத நிலை இருக்கிற காரணத்தினால் ஒரு தாலுகா தலைநகரத்திலோ அல்லது ஒரு சரகத்தின் தலைமையிடத்திலோ இருக்கிறவர்கள்— ஒரு கிராமத்திலே ஏற்படுகிற நிகழ்ச்சி, சட்டம் ஒழுங்குப்பிரச் சினை சம்பந்தமாக செல்ல வேண்டுமானால்—அவர்களுக்கு, வாகனம் இல்லாத காரணத்தினால், யார் பாதிக்கப்பட்டிருக் கிறாரோ, யார் தன்னுடைய வீட்டிலே கொலை நடந்தது என் றோ, தன்னுடைய வீட்டிலே ஒரு கொள்ளை நடந்தது என்றோ, தன்னுடைய வீட்டிலே ஒரு குற்றம் நடந்தது என்றோ, யார் வந்து முறையிடுகிறார்களோ, யார் வந்து பதறிப் போய் எந்தவித உதவியுமின்றி நிர்க்கதியாக காவலர்களிடத்திலே முறையிடுகிறார் களோ அவர்களையே அழைத்து ஒரு வாகனத்தைக் கொண்டு வாருங்கள் என்று சொல்கிற நிலைமை இருக்கிறது. அதற்குக் காரணம் அந்தப் பகுதியிலே சரகத்திலே வாகனம் வழங்கப்பட வில்லை என்பதுதான். அது காவல் துறையின் தவறு என்று எதிர்க்கட்சியினர் பேசுவதைப் போல் சொல்லக்கூடாது, அதற்கு அவர்கள் பொறுப்பல்ல, வாகனம் தரப்படாதது தான் காரணம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சர்க்கிள் இன்ஸ்பெக் டருக்கு ஜீப் தரப்படவில்லை, அவருக்கு மோட்டார் சைக்கிள் கொடுக்கப்பட்டிருப்பதால் 2 பேர்கள்தான் செல்ல முடியும், ஜீப் இருக்குமானால் 4, 5 காவலர்களை அழைத்துச் செல்ல முடியும், அதன் மூலமாக சட்டம் ஒழுங்குப் பிரச்சினையாக இருந் தால் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு முடியும். அந்த வகை யிலே வாகனம் இல்லாத காரணத்தினாலே பல்வேறு குற்றங்கள் நடந்து முடிந்தபிறகு போகிற துர்ப்பாக்கியமான நிலைமை ஏற்படுகிறது. அவசரத் தேவையாக ஒவ்வொரு சரகத்திற்கும் சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்கும் ஆய்வாளருக்கும் ஒவ்வொரு ஜீப் வழங்க வேண்டுமென்று வேண்டுகோளாக நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே உள்ள காவல் நிலையங்கள் எண்ணற்றவை இன்றைக்கு வாடகைக் கட்டடங்களிலே இருந்து கொண்டிருக்கின் றன, தனியார் கட்டடங்களிலே அவைகள் இருக்கக்கூடிய நிலை மைகள் இருக்கின்றன. புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி வந்ததற்குப் பிறகு மூன்றில் இரண்டு பங்காவது அரசுக் கட்டடங் களிலே அமைகிற வகையில் கட்டடங்கள் படிப்படியாகக் கட்டப் பட்டு வருகின்றன. இந்தநிலையில் இன்றைக்கு அரசு தொகை பெரும் தொகை வாடகையாகச் செலுத்த வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே எந்த எந்த காவல்நிலையங்கள் வாடகைக் கட்டடங்களிலே தனியார் கட்டடங்களிலே இருக்கின்றனவோ பேச்சுவார்த்தை மூலமாக அல்லது வேறு ஒரு முயற்சியின் மூல மாக கையகப்படுத்தி அரசுக்குச் சொந்தமான இடங்களிலே செயல்படுகின்ற முறையைச் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் பல்வேறு நேரங்களில் குற்றம் புரிந்தவர்களுக்கு நாம் சலுகைகள் காட்டுகின்ற சூழ்நிலையில் நம்முடைய சட்ட அமைப்பு இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் அதே நேரத்தில் சட்ட அமைப்பு இருக்கிறதோ என்னவோ, சில அரசு மருத்துவ மனைகளில், நெடுஞ்சாலையில் விபத்து ஏற்படுமானால் முன்னால் போகின்ற ஒரு வாகனத்தை வேறு ஒரு வாகனம் மோதி விடுகிறது என்று வைத்துக்கொண்டாலும் அல்லது ஒரு சைக்கிளில் போகிறவர் மீது ஒருவர் காரில் சென்று மோதிவிட்டு அவர் சென்று விடுகிறார் என்றால் அங்கே கீழே விழுந்து இருப்பவரை பின்னால் வாகனத்தில் வருகின்றவர் எடுத்துக்கொண்டு போய் பக்கத்தில் இருக்கின்ற மருத்துவமனையில் சேர்க்க வேண்டும் என்றால் அப்படி சேர்க்கும் போது யார் விபத்துக்கு உள்ளானவரை எடுத்துச் செல்கிறார்களோ, அழைத்துச் செல்கிறாரோ அவரையே மீண்டும் மீண்டும் விசாரிக்கும் சூழ்நிலை. நீங்கள் எப்படி அவர்களை பார்த்தீர்கள்? எங்கே பார்த்தீர்கள்? என்று அவருக்கு அடிக்கடி சம்மன் அல்லது அந்த குற்றவாளியை கண்டுபிடித்து அதற்குரிய தண்டனையை பெறுகின்றவரையில் பலமுறை அவருக்கு தாக்கீது வருகின்ற சூழ்நிலை பலமுறைகள் கோர்ட்டுக்கு வருகின்ற சூழ்நிலைகள் ஏற்படுகிறது. உதவி செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்பவர்களுக்கு இப்படி ஏற்படுகிறது. இப்படி ஏற்படுகிற காரணத்தால் பல பேர் ரோட்டில் யாராவது அடிபட்டு குற்றுயிரும், கொலை உயிருமாக இருந்தால் கூட அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வு இல்லாமல் இருக்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. அந்த முறைக்கு ஏதாவது ஒரு மாற்று முறையை நாம் கண்டு பிடித்து ஆக வேண்டும். இன்றைக்கு பெரிய நெடுஞ்சாலைகளில் ஒரு பெரிய அளவில் ஒரு நிர்வாகத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். நெடுஞ்சாலைப் பாதுகாப்பு காவல் துறை என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதை எல்லா அளவுக்கும் இன்றைக்கு மாநில நெடுஞ்சாலைக்கும் 'ஸ்டேட் ஹைவேஸ்' என்று சொல்லப்படுகின்ற நெடுஞ்சாலை பகுதிக்கும் போட்டு ஆக வேண்டும். அப்படி 30 கிலோ மீட்டர் 60 கிலோ மீட்டர் பகுதிக்கு ஒரு ரேஞ்சு அல்லது ஒரு பகுதிக்கு ஒரு எஸ். ஐ. என்ற அளவிலாவது அல்லது ஒரு தலைமைக் காவலர் என்ற அளவிலாவது ஒரு ஸ்குவாடு உருவாக்கி அவர்களுக்கு என்று தனியாக ஒரு வாகனத்தைத் தந்து அவர்கள் போய் வருவதற்கு வழிவகைகளை செய்ய வேண்டும். பகலில் அதிகமாக இல்லாவிட்டாலும் இரவில் அந்த ரோந்துகளை அதிகப் படுத்த வேண்டும். அப்படி செய்தால் வழிந் தடங்களில் நடக்கும் வழிப் பறி கொள்ளைகளை ஓரளவுக்கு தடுக்கலாம் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் இன்றைக்கு உளுந்தூர்பேட்டையிலிருந்து சென்னைக்கு வருகின்ற வரை இருக்கின்ற பாதை மிகவும் நெருக்கமாக இருக்கின்ற காரணத்தால் காவல்துறை டிராபிக்





ரெகுலேஷனுக்காகவுள்ள அதை டெல்லியிலிருந்து சண்டிகர் வரை இருக்கின்ற ஒரு வழி பாதை போல் குறைந்தபட்சம் சென்னையிலிருந்து உளுந்தூர்பேட்டை வரை இதை ஒரு வழி பாதையாக ஆக்கினால் நல்லது. அதற்கு மத்திய அரசை நாம் வலியுறுத்துவோமானால் அப்போது பலவேறு பிரச்சினைகள் ஓரளவுக்கு தீர்க்கப்படும். அதனால் சாலை விபத்துக்கள் குறைக்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

எந்த ஒரு அரசியல் கட்சியாக இருந்தாலும் அல்லது பொது நிறுவனங்களாக இருந்தாலும் இன்றைக்கு ஒவ்வொரு 3 சாலைகள் சந்திக்கும் இடங்களிலும், 4 சாலைகள் சந்திக்கும் இடங்களிலும், 5 சாலைகள் சந்திக்கும் இடங்களிலும் இருக்கின்ற அந்த டிராபிக் கான்ஸ்டேபிள்கள் நிற்கக்கூடிய அந்த குடைகள் எதற்கு வைக்கப்பட்டிருக்கிறது என்றால் சாலையில் வருகின்றவர்களுக்கு வழியைக் காண்பிப்பதற்காகவும் இவர்கள் இந்த பகுதியாக போக வேண்டும், இவர்கள் இந்த பகுதியாக செல்ல வேண்டும் என்று அவர்களுக்கு டைரக்ஷன் கொடுப்பதற்காக வைக்கப் பட்ட ஒன்றாக, இருந்தாலும் அதை பல்வேறு நிறுவனங்கள், இந்தியன் வங்கி, ரோட்டரி கிளப், லையன்ஸ் கிளப் போன்ற நிறுவனங்கள் அதை இனாமாக தந்து அந்த காவலர்கள் வெயிலில் நிற்கக்கூடாது அவர்கள் சற்று உயரமாக நிற்க வேண்டும் என்பதற்காக தரப்பட்டு இருக்கின்ற அந்த குடையை இன்றைக்கு அரசியல் கட்சிகளும், அதேபோல் பொதுநிறுவனங்களும் ஒரு நிகழ்ச்சியை நடத்துபவர்களும் தவறாகப் பயன்படுத்துகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 1-10)

இந்தக் குடையைச் சுற்றி, இன்னார் வருகிறார்கள், இந்தப் பொதுக்கூட்டம் நடக்கிறது, இந்த சினிமா நடக்கிறது என்று போஸ்டர்களை ஒட்டுகின்ற சூழ்நிலை தமிழகத்தின் தலைநகரத்திலேயும், இன்னும் மதுரை, சேலம் போன்ற அந்த மாவட்டத்தின் தலைநகரங்களிலேயும் கூட இப்படி டிராபிக் போலீஸ் நிற்கின்ற குடைகள் போஸ்டர் ஒட்டுகின்ற இடங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. கடந்த ஐந்தாறு ஆண்டு காலமாக இப்படி நடக்கிறது. இதைத் தடுப்பதற்கு, ஒரு திறமையான முடிவை, முன்னெச்சரிக்கையான முடிவை தமிழக காவல் துறை எடுக்க வேண்டும். எந்த இயக்கம் ஒட்டுகின்றது என்பது அல்ல பிரச்சினை. மக்களுக்கு இதனால் பாதிப்பு உருவாக்கப் படுகிறது என்ற கணக்கில் இதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போஸ்டர்கள் ஒட்டுவதற்கு இந்தந்தப் பகுதிகள் என்று தேர்ந்தெடுத்து, இந்தந்தப் பகுதிகளில்தான் போஸ்டர்களை ஒட்ட வேண்டுமென்று சொல்லப்பட்டு, ஒன்றிரண்டு Litter free zone ஓரளவு பாதுகாக்கப்பட்டன. ஆனால் அந்த Litter free zon

தற்பொழுது பாழடிக்கப்பட்டு வருகின்றன. இதைப் பற்றித் தீவிரமாகக் கவனித்து காவல் துறை முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த மன்றத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, காவல்துறை மானியக் கோரிக்கையிலே நான் சார்ந்துள்ள காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

காவல் துறையினுடைய கொள்கைக் குறிப்புப் புத்தகத்தில், அவர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்தும், அவர்கள் ஆற்றிய பணிகள் குறித்தும், அவர்கள் கண்டுபிடித்துள்ள குற்றங்களைக் குறித்தும், எப்படி எல்லாம் திறமையாகச் செயல்பட்டார்கள் என்ற விவரங்களைக் குறித்தும் வெகு அழகாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆனால் அவர்களுக்கு எவ்வளவு காரியங்கள் விடப்பட்டிருக்கின்றன என்பதையும் நாம் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல்துறையினருக்கு மலிவு விலையில் அரிசி போன்ற உணவுப் பொருட்களை முன்பு வழங்கினோம். ஆனால் இப்பொழுது அது நிறுத்தப்பட்டுவிட்டது. ஒன்று, அவர்களுக்கு அளிக்காமலேயே இருந்திருக்கலாம். இப்படி அளித்து விட்டு, பிறகு நிறுத்திவிட்டது என்பது கண்ணிழந்தான் பெற்றிழந்தான் என்ற கதைபோல ஆகி, அவர்கள் சங்கடப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு மானிய விலையில் அரிசியை மறுபடியும் வழங்க வேண்டும் அல்லது அதிக சம்பளத்தை அவர்களுக்குக் கூட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு காவல் நிலையத்திலும் காவலர்களுக்கு குடியிருப்பு வேண்டுமென்று பல்வேறு தடவைகளில் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. காவலர்களுக்குக் குடியிருப்பு கட்டித் தருகிறோம் என்று சொல்லி சிலயிடங்களில் கட்டியிருக்கிறார்கள். ஆனால் பெரும்பாலான இடங்களில் இன்னும் குடியிருப்புகள் கட்டப்படவில்லை. இப்படிக் குடியிருப்புகள் இல்லாத காரணத்தினால் அவர்கள் வாடகை வீடுகளிலே இருக்க வேண்டியிருக்கிறது. அப்படி வாடகை வீட்டிலே வசிக்கும்பொழுது வீட்டுக்குச் சொந்தக்காரர்களுக்குச் சில காரியங்களிலே சாதகமாகச் செய்ய வேண்டிய சூழ்நிலை காவல்துறைக்கு ஏற்படுகிறது. அந்த நிலைமைகளை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்காக, காவல் நிலையம் இருக்கின்ற ஒவ்வொரு ஊரிலேயும், காவலர்களுக்குக் குடியிருப்பு வீடுகளை அரசின் செலவிலே கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து, ஓய்வு பெறும்போது அவர்கள் தங்களுடைய சொந்த ஊரிலே குடியிருக்க வீடு கட்டிக் கொள்வதற்காகக் கடன் வழங்கப்படும் என்று முன்பு சொன்னார்கள். ஆனால் அதைப் பற்றி இந்தக் குறிப்பிலே ஒன்றும் காணப்படவில்லை.

இன்றைக்குக் காவல் நிலையத்திலே ஒருவர், ஒருவர் மீது புகார் கூறிவிட்டால், அதைப்பற்றி விசாரிக்க வேண்டும் என்பதற்காகவோ அல்லது வேறு எதற்காகவோ அவர்கள் வாடகைக் கார்களை எடுத்துச் செல்கிறார்கள். அப்படி வாடகைக் கார்களை எடுத்துச் சென்றால், அதற்காக வாடகைப் பணத்தை அவர்கள் சம்பளத்திலேயிருந்து கொடுக்க முடியுமா? அதனால் குற்றம் சாட்டியவரிடமிருந்தோ அல்லதும் குற்றம் சாட்டப்பட்ட குற்றம் புரிந்தவர்களிடமிருந்தோ தான் பணத்தை வாங்கி வாடகைக் கார்களுக்குப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. எனவே, இந்த நிலைமை மாற்றியாக வேண்டும். ஒன்று, காவல் துறையினர் வாடகைக் காரில் நிச்சயமாகச் செல்லக் கூடாது என்று உத்தரவு போட வேண்டும் அல்லது அந்தந்தக் காவல் நிலையங்களுக்கு வாகன வசதி செய்து தரவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்ததைப்பற்றி இங்கே எத்தனையோ ஒத்தி வைப்புத் தீர்மானங்களின் மூலமும் மற்றவைகளின் மூலமும் கொண்டு வந்திருக்கிறோம். இதற்குமுன் பேசிய உறுப்பினர்கள் கூறினார்கள், காவல் துறையில், பல கொலைகள் தற்கொலைகள் என்று மாற்றப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். சில நேரங்களில் திருட்டு வழக்குகளிலே உண்மைகளைக் கண்டு பிடிப்பதற்காக இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியிருக்கத்தான் செய்யும். எனவே, காவல் துறையை அதற்காக நான் குறை சொல்லவில்லை. ஆனால், அதேநேரத்தில் குற்றவாளிகள் கொஞ்சம் அதிகமாக அடிபட்டு, அவர்களை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் வழியிலோ அல்லது ஆஸ்பத்திரியில் அளிக்கப்படும் சிகிச்சை பலன் அளிக்காமலோ இறந்து விடவும் நேரிடுகிறது. காரணம், காவல்நிலையத்திலிருந்து மருத்துவமனை அதிக தொலைவில் இருப்பதால்தான். எனவே, ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் அருகிலேயும் ஒரு மருத்துவமனை இருக்குமேயானால், ஒருவேளை அடிபட்டாலும்கூட அவசரமாக அந்த மருத்துவமனையில் சேர்ப்பதற்கும், சிகிச்சை அளிக்க வேண்டுமென்றால் சிகிச்சை அளித்துக் காப்பற்றுவதற்கும் வழிவகையாக இருக்கும்.

அதோடு அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கும் அது உபயோகமாக இருக்கும். ஆகவே காவல் நிலையம் இருக்கின்ற ஒவ்வொரு ஊரிலேயும் அரசு மருத்துவமனை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நாட்டிலே ஜனத்தொகை வளர்ந்து கொண்டு வருகின்றது. ஆகவே இப்போது இருக்கின்ற காவலர்களை வைத்து சமாளிக்க முடியாது என்ற நிலைமை ஏற்பட்டு ஏற்கெனவே 12 ஆயிரம் காவலர்கள் நியமிக்கவேண்டும் என்று

சொல்லப்பட்டது. ஆனால் இதுவரையில் ஒரு காவலர் கூட நியமிக்கப்படவில்லை. ஆகவே ஜனத்தொகைக்கு ஏற்ப காவல் துறையின் எண்ணிக்கையையும் கூட்டவேண்டும் என்ற காரணத்தால் அதிகமான காவலர்களை நியமிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வளவு அரசு அவர்களுக்காகப் பரிந்துரைகளைச் செய்கின்றபோது அவர்கள் செய்கின்ற சில தவறுகளையும் சுட்டிக் காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். கவனக்குறைவு காரணமாக பல நிகழ்ச்சிகள் நடக்கின்றன.

என்னுடைய தொகுதியில் நடைபெற்ற சம்பவம் பற்றி பத்திரிகையில் பார்த்திருப்பீர்கள். 9 பேர் தொடர்ந்து கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 2 வருடங்களுக்கு முன்னதாகவே நடந்த சம்பவம் அது. ரெட்டியார்பட்டி என்ற ஊரிலே ஒரு சிறுவனை ஆசைகாட்டி மதுரைக்கு அழைத்து வந்து கத்தியால் குத்திக் கொன்றுவிட்டார்கள். காவல் துறைக்கு அதுபற்றி தகவல் கிடைத்தவுடன் விசாரிக்காமல் விட்டதன் காரணத்தால் அவன் அதைப்போன்று தொடர்ந்து கிட்டத்தட்ட 9 பேரைக் கொலை செய்திருக்கிறான். தற்சமயம் பிடிபட்டிருக்கிறான். ஆனால் காவல்துறையினர் புகார் கிடைத்த உடனேயே நடவடிக்கைகளை எடுத்திருப்பார்களேயானால் இந்தக் கொலைகள் எல்லாம் தடுக்கப்பட்டிருக்கும்.

கடந்த 9 மாதங்களுக்கு முன்பாக கோட்டைக்காடு என்ற ஊரிலே சின்னத்துரை என்பவருடைய மகன் வேல்குமார் என்ற 14 வயது உள்ள பையன் ஏரல் காவல் நிலையத்திற்கு வெளியே சும்மா நின்றுகொண்டிருந்தவன்; அவனுடைய தலைமயிரைப் பிடித்து இழுத்து காவல் நிலையத்தில் வைத்து அடித்து நொறுக்கி இருக்கிறார்கள். அதைப்பற்றி கேட்கப் போன அவனுடைய தகப்பனாரையும் தரக்குறைவாகப் பேசி ஏசி இருக்கிறார்கள். இதுபற்றி சாத்தான்குளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். என். இராமசாமி அவர்களிடம் மனு கொடுத்து அவர்கள் டி. எஸ். பி., எஸ். பி. முதலிய உயர் அதிகாரிகளைச் சந்தித்து சொல்லி இருக்கிறார்கள். ஆனாலும் இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்தச் சம்பவத்திலே ஈடுபட்ட ஏட்டு சுடலைமுத்துப்பிள்ளை, போலீஸ் ஆப்ரகாம், சுந்தரம் ஆகிய மூன்று பேர் மீதும் இன்னும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே சட்டமன்றத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்வதோடு நின்றுவிடுகின்றது. சொல்கின்ற காரியங்கள் செய்யப்படுகின்றனவா என்றால் இல்லை. நான் ஆளுநர் அவர்களின் உரையின்போது கூட சொன்னேன். எனது ஊரைச்சேர்ந்த





பாலூர் சத்திரம் காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுக்கப்பட்டது. ஈரோட்டிலே இருந்து டிராக்டர் உழவுக்காக வந்திருந்தது. அதன் பின் சக்கரம் இரண்டையும் இரவோடு இரவாக கழற்றிக்கொண்டு சென்றுவிட்டார்கள். டிராக்டரின் பின் சக்கரத்தைத் தூக்கவேண்டும் என்றால் கிட்டத்தட்ட மூன்று நான்கு பேர் சேர்ந்தால்தான் முடியும். எளிதாக மறைத்துக்கொண்டு போகக்கூடிய சாதாரணப் பொருள் அல்ல. அதுபற்றி போலீஸ் ஸ்டேஷனிலே புகார் கொடுத்து இதுவரை 5 மாத காலம் ஆகின்றது. இதுவரையில் அந்த டையர் கண்டுபிடிக்கப்படவில்லை. அந்தப் புகாரையும் பதிவு செய்து கொள்ளவில்லை. அந்த புகாரைப் பதிவு செய்துகொண்டாலாவது இன்சூரன்ஸ் பணமாவது கிடைக்கும் என்று டிராக்டர் முதலாளி சொல்கிறார். ஆனால் பதிவு செய்துகொள்ளாமல், இதோ கண்டு பிடித்துவிடுகிறோம், கண்டு பிடித்துவிடுகிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிக் கண்டு பிடிப்பதற்காக காருக்கு, டாக்ஸிக்கு என்று கிட்டத்தட்ட 1,500 ரூபாய்க்கும் மேலாக அவர் செலவழித்து இருக்கிறார்.

இப்படி பல மோசமான நிலைமைகள் காவல் துறையில் இருக்கின்றன. அவற்றை எல்லாம் கண்காணித்து களைய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். சூதாட்ட கிளப் கிராமங்கள் தோறும் தோன்றிவிட்டன. சொல்வதற்குக் கூட வேட்கமாக இருக்கின்றது. அத்தனை சூதாட்ட கிளப்புகளும் காவல் துறைக்கு மாமூல் கொடுத்துக் கொண்டு இந்த காரியங்களைச் செய்து கொண்டு இருக்கின்றன.

(பிற்பகல் 1-20)

இன்று, சட்டபூர்வமாகச் சூதாட்ட கிளப்புகள் என்பதற்குப் பதிலாக அவர்கள் ரெக்ரியேஷன் கிளப்புகள் என்று போட்டுக் கொள்கிறார்கள். அந்த ரெக்ரியேஷன் கிளப்புகள் என்ற பெயரால் அனுமதி கொடுப்பது யார் என்றே எங்களுக்குத் தெரியவில்லை. டி. எஸ். பி. கொடுக்கிறார்களா? அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் கொடுக்கிறார்களா ? அல்லது தாசில்தார் கொடுக்கிறார்களா என்ற விவரம் சரியாகத் தெரியவில்லை. ஆகவே, அந்த அனுமதி பெற்றிருப்பவர்கள் சூதாட்டம் நடத்தினால் கடுமையான முறையிலே தண்டிக்கப்பட வேண்டும், அந்த சூதாட்ட கிளப்புகள் ஒழிக்கப்பட வேண்டுமென்றுநான் கேட்டுக் கொள்கிறேன்.

தீயணைப்புப் பொறுத்தவரையிலும் சென்ற ஆண்டு சொன்னேன். தீயணைப்பு ஊழியர்கள் மிகத் தியாக உள்ளம் படைத்தவர்கள். எவ்வளவோ பெரிய இடைஞ்சல்களுக்கிடையே அவர்கள் அந்தப் பணியைப் புரிந்து வருகிறார்கள். மிகப் பெரிய மாடியில் தீ இருந்தால்கூட அவர்கள் அங்கே ஏறி தங்கள் உயிரைக் கூட மதியாது உயிர்களைத் காக்கின்ற மிகப் பெரிய பணியிலே ஈடு

[திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்] [1984 மார்ச் 29

பட்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் காவல் துறையிலே மற்ற காவலர்களுக்குக் கிடைக்கக்கூடிய வசதிகள் இவர்களுக்குக் கிடையாது. சம்பளத்தைத் தவிர வேறு எந்த வருமானமும் கிடையாது. எனவே, அவர்களுக்குச் சம்பளத்தை நிச்சயமாகக் கூட்டிக் கொடுக்கவேண்டும்.

அதுவும் தவிர ஒரு தீயணைப்பு நிலையம் கிட்டத்தட்ட 40,50 மைல்களுக்கு அப்பால் இருந்தால், அந்தத் தீயணைப்பு வண்டி உரிய இடத்திற்கு வருவதற்குத் தாமதமாகும். எனவே, 20 மைல்களுக்கு ஒரு தீயணைப்பு நிலையத்தை நாம் நிறுவியாக வேண்டும். எனது தொகுதியிலே ஊத்துமலையிலே ஒரு தீயணைப்பு நிலையம் வேண்டும். ஏனென்றால், ஊத்துமலை விவசாயிகள் நிறைந்தபகுதி. உங்களுக்கெல்லாம் தெரியும். கிராமத்திலே பார்த்திருப்பீர்கள். வைக்கோல் படப்பிகளை வரிசையாக அடுக்கி வைக்கிறோம். ஒருவருக்குச் சொந்தமான படப்பிலே தீ பிடித்தால் சில மணி நேரங்களுக்குள்ளாக அந்தத் தீ முழுவதும் பரப்பி, அந்தப் பகுதியே நாசமாகிவிடும். ஒரு இடத்திலே தீ பிடித்து நாம் தீயணைப்புப் படைக்கு போன் செய்து அவர்கள் வந்து சேருவதற்குள்ளாக முழுவதும் நாசமாகிவிடும். ஆகவே, விவசாயிகள் நிறைந்த ஊத்துமலைப் பகுதியில் தீயணைப்பு நிலையம் ஒன்று வைக்க வேண்டும். அங்கே ஏதாவது தீ விபத்து ஏற்பட்டால், தீயணைப்புப் படையினருக்குப் போன் செய்தால், ஒன்று சங்கரன் கோவிலிலிருந்து வரவேண்டும், அல்லது திருநெல்வேலியிலிருந்து வரவேண்டும், அல்லது தென்காசியிலிருந்து வரவேண்டும். ஒவ்வொன்றிற்கும் கிட்டத்தட்ட 35 மைலுக்கு அப்பால் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, ஊத்துமலைப் பகுதியில் ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கோரி வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

*திரு. மா. சின்னராசு: மாண்புமிகு மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய நாளில் காவல் துறை மானியத்தை வரவேற்று தாங்கள் இந்த மன்றத்தில் இந்த நாட்டுக்கு அளித்திருக்கிற சில கருத்துக்களைத் தங்களது பிறந்த நாள் செய்தியாக நாங்கள் கொள்ளுகிறோம். அவருக்கே உரிய பாணியில் பல புரட்சிகரமான கருத்துக்களை நீதித் துறைக்கும், சட்டத் துறைக்கும் காவல் துறைக்கும் விவாதத்திற்குரிய பல நல்ல கருத்துக்களைக் கொடுத்திருப்பதற்கு முதலில் அவர்களுக்கு நன்றி சொல்லி எனது சில கருத்துக்களை இந்த மசோதாவை வரவேற்று இங்கே சொல்ல முற்படுகிறேன்.

இன்றைய காவல் துறை எடுத்திருக்கிற நல்ல பாதுகாப்பு நடவடிக்கைகளின் காரணமாகவும் காவல் துறையினுடைய வேகமானப் பணியின் காரணமாகவும் பல இடங்களில் குற்றங்கள் தடுக்கப்பட்டிருப்பதும் நடந்துவிட்ட குற்றங்களில் குற்றவாளிகளை உடனடியாகக் கண்டுபிடித்து தண்டனைக்குரியவர்களாக ஆக்கியதையும் இன்று, இந்தக் கொள்கைக் குறிப்பிலே



1984 மார்ச் 29] [திரு. மா. சின்னராசு]

நாம் காணுகிறோம். ஆனால், குற்றங்கள் நிகழ்ந்துகொண்டுதானிருக்கின்றன என்பது ஒரு பெரும் உண்மையாக இருந்தாலும், குற்றங்கள் நிகழ்வதற்கான காரணங்கள் காலத்தால் மாறுபட்டு வருகின்றன என்பதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். பழைய கால சமுதாயத்தில் குற்றங்கள் பெரும்பாலும் கொள்ளையாகத் தானிருக்கும். தங்களுக்கு வேண்டிய பொருள்களை மக்களிடமிருந்து பறிப்பதற்காக, சாப்பாட்டுக்கு இல்லாதவர்கள் கூட கொள்ளை அடிப்பார்கள்; அதிகப் பொருள் சேர்க்க வேண்டுமென்ற ஆசையால் கொள்ளை அடிப்பார்கள். ஆகவே, இது போன்ற குற்றங்களே இருந்த நாட்டில் இப்பொழுது பலவித குற்றங்களுக்குச் சமுதாயம் ஆளாக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மத மாற்றங்களின் காரணமாகவும், இனவெறியைத் தூண்டுவதன் காரணமாகவும், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவும், தொழில் சங்கங்களின் மத்தியில் ஏற்படுகிற போட்டியின் காரணமாகவும் பெரும்பாலும் பெரும்கூட்டங்கள் கூடுகிற வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கிற காரணங்களாலும் குற்றங்கள் மலிவாக நடக்கின்ற சூழ்நிலை இருந்ததாலும் மக்கள் தொகை, பெருக, பெருக இந்தக் குற்றங்களின் அளவும் பெருகும் என்ற நியதி இருந்தாலுங்கூட தமிழகத்தைப் பொறுத்தஅளவில் நிகழ்ந்துவிட்ட குற்றங்களைப் பார்க்கும்போது இந்தியாவில் தமிழகத்தில் இழைக்கப்பட்ட குற்றங்கள், கொடுமைகள் குறைவு என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். மற்றைய மாநிலங்களில் காவல் துறை நடத்துகிற முறையையும் அங்கே ஏற்படுகிற குற்றங்களையும் மக்களுக்குப் பாதுகாப்பற்ற ஒரு அச்ச நிலைமை இருக்கிற செய்தியினை அன்றாடம் பார்க்கிறோம். ஆக அதற்கு மாறுபட்டு தொடர்ந்து தமிழக காவல் துறையினர் தமிழக மக்களுடைய பாதுகாப்பிற்கு எடுத்திருக்கிற முயற்சிகளை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். காவல் துறை அதனுடைய பணிகளைச் செய்கிற அதே நேரத்தில் குற்றங்களைத் தூண்டுகிற பல முயற்சிகளில், தெரிந்தோ, தெரியாமலோ, சமுதாயத்திலே பலர் இடம் பெற்றிருக்கிறார்கள் அல்லது பல விஷயங்கள் இடம் பெற்றிருக்கின்றன என்பதை இன்று உணர்ந்து பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இதற்கு உதாரணமாக சொல்ல வேண்டுமென்றால் பத்திரிகைகள் சுதந்தரமாகச் செய்திகளை வெளியிடலாம். ஆனால் சுதந்திரத்தைப் பயன்படுத்தி, உரிமைகளைப் 'பயன்படுத்தி பல தவறான செய்திகளை, மக்களிடத்திலே பரப்புகிற காரணத்தால்தான் அவைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் ஜனநாயக நாட்டில் ஏற்படுகிறது.

நேற்று முஸ்லீம் லீக் உறுப்பினர் திரு. சாகுல் ஹமீது அவர்கள் மிகவும் மனம் நொந்து சில கருத்துக்களைச் சொன்னார்கள். சுவற்றிலே அவர்களுடைய மதத்தை இழிவுபடுத்தி வாசகங்களை எழுதப்பட்டதாகச் சொன்னார்கள். அந்த வாசகங்களை

எழுதுபவர்களை தண்டிப்பதற்காக, மத உணர்வு உள்ளவர்
களை புண்படுத்துகிற அளவிற்கு எண்ணங்களை செய்திகளாக
வெளியிடுகிறவர்களை தண்டிப்பதற்காக சட்டம் கொண்டு
வந்த நேரத்தில் அவர்களும் வெளிநடப்பு செய்தார்கள்
என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே ஒரு
குற்றத்தை தடுக்க வேண்டுமென்றால் கடுமையான சட்டம்
வேண்டும். அதுவும் சமுதாயத்தின் நலனிற்காக சட்டங்களைக்
கொண்டு வருகிறபோது அது சமுதாயத்தின் நலனிற்கு எவ்
வளவு பயன்படுகிறது' என்பதை பார்க்க வேண்டும்; குற்ற
வாளிகளை கடுமையாக தண்டிப்பதற்கு வழி செய்வதால்
அந்தக் குற்றவாளிகளுக்காக வாதாடுகிற மன்றமாக இந்த
மன்றம் ஆகிவிடக் கூடாது என்பதை நான் இங்கே சுட்டிக்
காட்ட விரும்புகிறேன். பொய்ச் செய்திகளை வெளியிடுகிற
பத்திரிக்கைகளை நாம் கண்டிப்பதில்லை. அண்மையில்
பத்திரிக்கை கவுன்சிலில் சில பத்திரிக்கைகளை சுட்டிக்காட்டி
இவ்வளவு பொய்யான விளைவுகளை ஏற்படுத்துகிற. உண்
மைக்குப் புறம்பான செய்திகளை போடுகிற பத்திரிகை
கண்டிப்பதற்கு உரியவை என்று கடுமையாக விமர்சித்து
இருக்கிறது. அவைகளுக்கு நாம் பாதுகாப்பாக இருந்து
சில நேரங்களில் கருத்துக்களை விமர்ச்சிக்கிறோம். உதாரண
மாக சொல்ல வேண்டுமென்றால் கடந்த 13-ம் தேதி ஆளுநர்
உரைக்காக நம்முடைய சட்டமன்றம் கூடியது. கோவையிலி
ருந்து வெளி வருகிற தினகரன், மாலை முரசு போன்ற பத்தி
ரிகைகள் 9-ம் தேதி ஒரு செய்தியை வெளியிட்டன. சட்ட
மன்றம் அண்ணா தி.மு.க. கூட்டம் கூட்டப்படுகிறது என்றும்
திருப்பூர் மணிமாறன், நம்முடைய கொறடா அவர்கள் அந்தக்
கூட்டத்தை கூட்டி இருக்கிறார்கள் என்றும்; 10-ம் தேதி அந்தக்
கூட்டம் நடக்கிறது என்றும் ஒரு செய்தியை அவர்கள் சொன்
னார்கள். 9-ம் தேதி மாலை நான் மலைப்பகுதியில் உள்ள ஒரு
கிராமத்தில் இருந்தேன். அந்தச் செய்தியைப் பார்த்தவுடன்
கட்சித் தோழர் ஒருவர் ஓடோடி வந்து செய்தியை தெரிவித்தார்.
சட்டமன்றக் கட்சி கூட்டம் கூடுகிற நேரத்தில் நம்முடைய சட்ட
மன்ற உறுப்பினர் இங்கே தங்கி விட்டால் போக முடியாதே
என்று அவர் எண்ணினார்; அங்கே போய் உடனே திரும்ப
முடியாது; இரண்டு நாட்கள் ஆகும்; ஆகவே அந்தப் பத்தி
ரிக்கையை எடுத்துக் கொண்டு ஓடோடி வந்தார். 13 ஆம்
தேதி கூட்டத்திற்கு 10 ஆம் தேதி கூட்டம் என்றும், அதை
கொறடா அவர்கள் கூட்டி இருக்கிறார்கள் என்றும் செய்தியை
போட்டு விட்டார்கள். அந்தத் தோழர் வந்தது மாலை நேரமாக
இருந்ததால் வருகிற மலைப்பாதையில் யானையை பார்த்து
அதற்கு பயந்து ஒரு குழியில் தன்னுடைய பாதுகாப்பிற்காக
விழுந்து இப்படி பல விளைவுகள் இதனால் ஏற்பட்டன.
அதற்கு பிறகு மறுநாள்தான் அவர் வெளியே வர முடிந்
தது. ஆகவே இப்படி செய்திகளை வெளியிடுவதற்கு எந்த நாட்டி
லும் நடக்க முடியாது; யாரும் இதை ஒப்புக்கொள்ள மாட்டார்
கள் எந்த ஜனநாயக உரிமையிலும் இதற்கு பாதுகாப்பு கொட



யாது. ஆனால் நமது நாட்டிலே இருக்கிறது. ஆகவே அப்படி
தெரிந்தே பொய் செய்திகளை வெளியிடுகிற, பல உணர்வு பூர்வ
மான பிரச்னைகளை தூண்டி விடுகிற, கலவரங்களை ஏற்படுத்து
வதற்கும், மதத்திலும், இனத்திலும் சில உணர்வுகளை
தூண்டி விடுகிற, மக்களை குற்றத்திற்கு ஆளாக்குகிற எந்த
நடவடிக்கைகளையும் கண்டிப்பதற்கு சட்டத்திலே இடம்
வேண்டும். அப்போதுதான் ஜனநாயகம் பாதுகாக்கப்படும்.
அந்த ஜனநாயக உணர்வுகளை பாதுகாக்க வேண்டுமென்றால்
சமுதாயத்தில் குற்றங்களை தூண்டிவிடுகிறவர்களை தடுக்கிற
நல்ல நடைமுறைகள் சட்டத்தில் இடம் பெறவேண்டும். காவல்
துறை குற்றவாளிகளை தண்டிக்கவேண்டும் என்று இருக்கி
றதே தவிர, குற்றத்தை தூண்டுகிறவர்கள், அது அரசியல் கட்சி
கள் பெயரிலானாலும் சரி, அல்லது ஒரு தொழிற்சங்கம்
பெயரில் ஆனாலும் சரி; ஒரு தொழிற்சங்கத்திற்கு எதிராக
இன்னொரு தொழிற் சங்கம் தன்னுடைய ஜனநாயக உரிமைக்
காக வாதாடுகிற நேரத்தில் அவர்களை பழி வாங்குவது என்று
இருந்தாலும் கூட இங்கே குற்றங்கள் நிகழ வாய்ப்பு இருக்கிறது.
கோவையில் உள்ள எவரெஸ்ட் என்ஜினியரிங் தொழிற்சாலையில்
ஒரு கொலை நடந்தது. அந்தக் கொலைக்கு யார் காரணம்
என்பதற்கு நான் போகவில்லை; எந்த அரசியல் கட்சி காரணம்
என்பதை நான் விமர்சிக்க போவதில்லை; ஆனால் அதற்கு
காரணம் அந்தத் தொழிலாளர்களிடையே தொழிற்சங்கவாதிகள்
சில உணர்வுகளை தூண்டுகின்ற முயற்சிகள்தான் என்பதை
இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சமுதாயப் பணிகளை
ஆற்றுவதற்காக அரசியலில் அங்கம் வகித்துக்கொண்டிருக்கிற அர
சியல் கட்சி நடத்துகிற தலைவர்களாக இருக்கிறவர்கள் குற்றங்
கள் நடக்காமல் இருப்பதற்கு நமக்கும் கடமையும், பொறுப்பும்
இருக்கிறது என்பதை உணர்ந்து பார்க்க வேண்டும். ஆகவே
குற்றத்தை எந்தவிதத்திலும் தூண்டுகிறபோது அதற்கு
நாம் ஆதரவாக இல்லாமல், அதைக் கண்டிக்கிற முறையிலே
அதற்காக கொண்டு வரப்படுகிற தடுப்புச் சட்டங்களை ஆத
ரிக்கிற முறையிலே இருந்தால் நிச்சயமாக ஜனநாயக நாட்டிலே
குற்றங்கள் எண்ணிக்கை குறையும். அந்த அளவிற்கு அந்த
முயற்சியிலே நாம் அனைவரும் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

கோவை மாநகருக்கு கமிஷனர் ஆப் போலீஸ் அந்தஸ்து
கொடுத்து (Commission r) நியமித்திருக்கிற மாண்புமிகு புரட்
சித் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி, கோவை மாநக
ரத்திற்கு கமிஷனரை விரைவாக நியமிக்க வேண்டுமென்று கேட்
டுக் கொள்கிறேன்.

கோவை வடக்கிலே இருக்கிற கவுண்டன்பாளையத்தில் இருக்
கிற தீயணைப்பு நிலையம் கட்டிடம் இல்லாமல் ஏழு ஆண்டு
களாக இருந்து வருகிறது. ஆகவே அந்தத் தீயணைப்பு நிலை
யத்திற்கு கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் குப்பகோணம்புதூரில் ஒரு காவல் நிலையம் வேண்டுமென்று நீண்டகாலமாக வற்புறுத்தி வருகிறோம். மிக அவசியமாக தேவைப்படுகிறது என்பதைச் சொல்லி மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இறுதியாக ஓரே ஒரு கருத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-30)

இறுதியாக ஒரே ஒரு கருத்தைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் காவல் துறையிலே இருக்கின்ற பப்ளிக் பிராசிகியூட்டர்களுக்கு துணை புரிகின்ற வகையில், டைரக்டர் ஆப் பிராசிகியூஷன் என்ற முறையில் தனியாக ஒரு துறை அமைப்பதற்கான செயற்குறிப்பு இருந்து வருகிறது. அதை ஏற்படுத்துவதன் மூலம் சாட்சியங்களை முறையாகக் கோர்ட்டுக்கு கொண்டு வருவதற்கும் குற்றவாளிகளுக்கு முறையாக உரிய தண்டனை வாங்கிக் கொடுக்கவும் வாய்ப்பு ஏற்படும். ஆகவே, அதை அமைக்க அரசு விரைவாக முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, 30-3-1984 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

*பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.*

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

எதுவுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

100. தமிழ்நாடு காவல் துறை குறித்த ஆய்வுரை, 1983-84 (தமிழ், ஆங்கிலம்).

101. கோரிக்கை எண் 16—தமிழ்நாடு தீயணைப்புத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85 (தமிழ், ஆங்கிலம்).

102. கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85. (தமிழ், ஆங்கிலம்).

103. 'வணிக ஒற்றுமை' திங்களிதழ் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கை. (தமிழ்)





இணைப்பு I.

(.. 215-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க).

தமிழ்நாடு காவல் துறை.

ஆய்வுரை.

முன்னுரை :

காவலர்களுடைய பணிகள் இடர்ப்பாடு நிறைந்ததாகவும் பல்வேறு பட்டதாகவும் இருக்கின்றன. இவற்றை மேற் கொள்ளும்போது எழுகின்ற வித வித மான அறைகூவல்களை, ஏற்றுத் திறம்பட கடமையாற்றுவதற்கு, உன்னிப்பான விழிப்புணர்வும் பணித் திறமையும் தேவைப்படுகின்றன. தொழில் வளர்ச்சியும், சமுதாய மாற்றங்களும் சட்ட ஒழுங்கு தொடர்பான பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகின்றன. இத்தகைய சூழ்நிலைகளில் சிக்கல்களை விரைவில் தீர்க்க உதவும் வண்ணம் காவலர்கள் நடு நிலை தவறாமல் தக்க நடவடிக்கையை மேற் கொள்ள வேண்டியுள்ளது. பெருகி வரும் மக்கள் தொகையாலும், அதன் விளைவாக எழுகின்ற தேவைகளாலும், காவலர்களின் பணிகள் மிகவும் பெருகியுள்ளதோடு கடினமானவையாக அமைந்துள்ளன. நகரங்கள் விரைவாக வளர்வதாலும், குற்றவாளிகள் நவீன முறைகளைக் கையாளுவதாலும், காவலர்களின் பொறுப்புகள் விரிவடைந்து பெருகி உள்ளன.

2. சட்டம் ஒழுங்கைப் பேணுதலும், குற்றங்களைத் தடுப்பதும், அவற்றைக் கண்டு பிடிப்பதும், காவலர்கள் வழக்கமாக ஆற்றிவரும் கடமைகளாகும். மேலும் சமூகப் பொருளாதார, தொழில் துறைகளில் அரசினுடைய ஆணைகளைக் காவலர்கள் செயல் படுத்துகின்றனர். இதற்குச் சான்றாக, காவலர்கள் தீண்டாமையை ஒழிக்கும் சட்டத்தைத் தீவிரமாகச் செயல் படுத்தும் பொறுப்பை மேற்கொண்டுள்ளதைச் சுட்டிக் காட்டலாம். மக்களின் நலம் நாடும் ஆட்சியில் காவலர்கள் தமக்கு அளிக்கப்பட்ட கடமைகளை நடுநிலை தவறாமல் செவ்வனே செய்ய வேண்டுமென்பது சொல்லாமலேயே விளங்கும். மத, இனக் கலவரங்கள் தோற்றுவிக்கப்படும்போது காவல் துறையினர் விரைந்து திறமையுடன் செயல் படுவதோடு இத்தகைய தருணங்களில் தீங்கிழைத்து வன் முறையில் ஈடுபடுகின்ற சமூக விரோதிகளையும் சட்ட விரோதிகளையும் கட்டுப் படுத்த வேண்டியது காவலர்களின் பொறுப்பாகும்.

3. திட்டமிட்டுச் சிலர் கூட்டாகச் சேர்ந்து குற்றம் புரிகின்ற பொழுதும், பதட்ட நிலை நெடு நாட்களுக்கு நிலவுகின்ற பொழுதும், வன்முறையாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்ற பொழுதும், காவல் துறையினர் முன் கூட்டியே நிலைமையைத் தெளிவாகக் கண்டறிந்து அவை எந்த அளவிற்கு பாதகமானவை

என்பதை உணர்ந்து அத்தகைய நிலைமைகள் ஏற்படாமல் இருக்க முன்னெச்சரிக்கையாகத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றனர். மேலும் விருப்பு வெறுப்பின்றி இத்தகைய பதட்ட நிலைகளை அடக்கி அமைதியை நிலை நாட்டுகின்றனர். சினமூட்டுகின்ற சூழ்நிலைகளிலும் காவலர்கள் தங்களுடைய உயிரையும் பொருட்படுத்தாது மிகுந்த கட்டுப்பாட்டுடன் பணி புரிய வேண்டியுள்ளது.

4. திட்டமிட்ட கூட்டத்தினர் குற்றங்கள் புரிகின்ற பொழுது மக்களிடத்தில் தற்காப்பு உணர்வை ஏற்படுத்துவது காவலர்களுடைய பெரும் பொறுப்பாகும். மேலும் இத்தருணங்களில் எளியோர்களும் சட்ட முறைகளிலும் அரசு இயந்திரத்திலும் தொடர்ந்து நம்பிக்கை கொள்ளும் வகையில் பணி ஆற்றி, பொது மக்களுடைய போற்றுதலைப் பெறுவது காவலர்களின் கடமையாகும். சட்டத்தையும் சமுதாய நீதியையும் நிலை நாட்டுகின்ற சீரிய குறிக்கோள்களைக் கருத்திற்கொண்டு சமுதாய, பொருளாதாரத் திட்டங்களில் காவல் துறையினர் நீதியை நிலை நாட்டுவதில் பெரும் பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

5. நம் மாநிலத்தில் காவல் துறையினர் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பல்வேறு பணிகளையும் செவ்வனே செய்து வருகின்றனர். மேலும் அரசினுடைய நற்பணித் திட்டங்களை நிறைவேற்றுவதில் அரசினுடைய சிறந்த கருவியாக அமைந்து செயல் பட்டு வருகின்றனர். வளர்ந்து வரும் சமுதாயத்தில் பொதுமக்களினுடைய எண்ணங்களையறிந்து, அமைதியையும், ஒழுங்கையும் நிலை நாட்டுவதிலும், சமுதாயத்தில் பல பிரிவினர்களுக்கிடையில் ஏற்படும் கசப்பு உணர்ச்சியைக் களைவதிலும், அரசிற்கும் பொதுமக்களுக்கும் இடையே நல்லெண்ணத்தை வளர்ப்பதிலும் தமிழகக் காவல் துறையினர் தொடர்ந்து சிறந்த பணியாற்றி வருகின்றனர்.

6. காவல் துறையினர் தங்களுடைய பெரும் பொறுப்புகளைச் சிறந்த முறையில் நிறைவேற்ற வழி வகை செய்யும் பொருட்டு, வேகமாகச் செல்வதற்கான வாகன வசதிகளையும், விரைந்து செயலாற்ற நல்ல செய்தித் தொடர்பு அமைப்பினையும் தமிழக அரசு காவல் துறையினருக்கு ஏற்படுத்தி கொடுத்துள்ளது. குற்றங்களைப் புலனாய்வு செய்வதில் அறிவியல் சாதனங்களைப் பயன் படுத்துவதற்கும், அன்றாட நிர்வாகத்தில் நவீன முறைகளைக் கையாளுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1983–84 ஆம் ஆண்டில் காவல் துறையைப் பற்றியும், அதனுடைய முக்கிய சாதனைகளைப் பற்றியும் பின்வரும் பத்திகளில் விளக்கங் ள் அளிக்கப்பட்டுள்ளன.

7. நன்கு பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர்களும் அதிகார வரம்புகள் தெளிவான முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள சிறந்த அமைப்பு முறையும் காவல் துறை திறம்பட பணியாற்றுவதற்கு



இன்றியமையாதது ஆகும். பணியாளர் தொகுதியைப் பற்றியும் காவல் துறையினுடைய அமைப்பு பற்றியும் பகுதி 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

8. காவல் துறையினுடைய அரும் பணிகளைக் கருத்தில் கொண்டு, விரைவில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடம் செல்வதற்கு ஏற்ற வாகன வசதிகளையும், சீரிய செய்தித் தொடர்பு அமைப்பையும் காவல் துறைக்கு அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. தொழில் நுட்ப வளர்ச்சியினால், குற்றவாளிகளை அடையாளம் கண்டறிவதிலும் குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும் பல அறிவியல் சாதனங்கள் பயன் படுத்தப்படுகின்றன. மேலும் எழுத்துப் பணியை வெகுவாகக் குறைத்து தாமதத்தைத் தவிர்க்கும் வகையில் தகவல்களை விஞ்ஞான ரீதியில் சேமித்து வைப்பதற்குக் கம்பியூட்டர் பயன் படுத்தப்படுகிறது. குற்றங்களைப் புலனாய்வு செய்வதில் கையாளப்படும் அறிவியல் கருவிகளைப் பற்றிய தொகுப்பு பகுதி 3-ல் இடம் பெற்றுள்ளது.

9. காவல் துறையில் திறமையை நன்கு பேணி வளர்ப்பதற்குப் போதுமான ஊக்கமும் உற்சாகமும் மிகவும் இன்றியமையாதவை ஆகும். காவல் துறையினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் இவ்வரசு மிகுந்த அக்கறை கொண்டு செயல் பட்டு வருகிறது. அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும் காவலர்களின் ஒழுங்குணர்வை மிகச் சீரிய முறையில் பேணுவதற்குப் பல பதக்கங்களை வ்ழங்குவதற்கும் இவ்வரசு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியுள்ளது. இவை பற்றிய குறிப்புகள் பகுதி 4-ல் இடம் பெற்றுள்ளன.

10. மைய அரசு அளித்துள்ள உதவிகளின் விவரம் பகுதி 5-ல் கொடுக்கப்பட்டுள்ளது. நடைபெறும் 1983–84 ஆம் ஆண்டில் நிகழ்ந்துள்ள குற்றம், சட்டம், ஒழுங்கு பற்றிய முக்கிய நிகழ்ச்சிகள் பற்றிய தொகுப்பு பகுதி 6-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

11. காவல் துறை திறம்படச் செயல்புரிய வேண்டுமெனில், பொது மக்களுக்கும் காவல் துறையினருக்கும் இடையே சுமுகமான உறவு நிலவ வேண்டும். இத்தகைய சூழ்நிலையை உருவாக்குவதற்கு காவல் துறையினருக்கு நல்ல பயிற்சி அளிப்பதுடன் காவல் துறையின் பணிகளைச் சிறந்த முறையில் செய்தித்தாள்கள், வானொலி, திரைப்படங்கள் ஆகியவை வாயிலாகப் பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். மேலும், தொண்டு நிறுவனங்களும் காவல் துறையின் பணிகளில் பங்கேற்பதும் தேவையாகும். காவல் துறையின் இத்தகைய செயல்களையும் பணிகளையும் பகுதி 7 எடுத்துக் கூறுகிறது. பகுதி 8-ல் காவல் துறையில் 1983–84 ஆம் ஆண்டில் மேற்கொண்டுள்ள புதிய திட்டங்களும் சலுகைகளும் இடம் பெற்றுள்ளன. சில புள்ளி விவரங்கள் இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

[1984 மார்ச் 29

## பிரிவு 1

### அமைப்பும் பணியாளர் தொகுதியும்.

12. காவல் துறையின் மேல் மட்டத்தில் இரண்டு காவல்துறை இயக்குநர்கள் உள்ளனர். இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (சட்டம்-ஒழுங்கும் மற்றும் நிர்வாகம்) காவல் துறை இயக்குநரின் கீழ் பணியாற்றுகிறார். காவல் துறை இயக்குநர் சட்டம் மற்றும் ஒழுங்கினை நிலைநாட்டும் பணிகளுடன் பொதுவாக காவல் துறையின் நிர்வாகப் பொறுப்பினையும் கவனித்து வருகிறார். காவல் துறை இயக்குநர் (குற்றப் புலனாய்வுத்துறை) அவர்களின் பொறுப்பில் நுண்ணறிவு, குற்றங்களைக் கட்டுப்படுத்தல், பாதுகாப்பு, திட்டம் தீட்டுதல், மற்றும் வானொலி பிரிவு, விரல் ரேகைப் பிரிவு,கம்பியூட்டர் பிரிவு போன்ற தொழில் நுட்பப் பணி பற்றிய பிரிவுகள் இயங்கி வருகின்றன. இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (சட்டம், ஒழுங்கு மற்றும் நிர்வாகம்) சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவது, அன்றாட நிர்வாக அலுவல்களைக் கவனித்தல் போன்ற பணிகளை ஆற்றி வருகிறார்.

13. தமிழ்நாட்டிற்கென ஒதுக்கப்பட்ட இந்தியக் காவல்பணிப் பதவிகள் 130 ஆகும். இவ்வாண்டில் நான்கு இந்தியக் காவல் பணி அலுவலர்கள் பதவியிலிருந்து ஓய்வு பெற்றனர். மூன்று நேரடி நியமன இந்தியக் காவல் பணி அலுவலர்கள் தமிழ் நாட்டிற்கென ஒதுக்கப்பட்டனர். மூன்று மாநிலக் காவல் பணி அதிகாரிகள் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட இந்திய காவல் பணிப் பதவிகளில் பதவி உயர்வு வழங்கி நியமிக்கப்பட்டுள்ளனர். நேரடி நியமனம் மூலம் காவல் துறைத்துணைக் கண்காணிப்பாளர் (வகை1) மூன்று பேர்கள். தமிழ்நாடு காவல் பணிக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். மூவரில், இருவர் சென்னையில் உள்ள காவல் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று வருகின்றனர். மூன்றாமவர் 31-10-1983 அன்று பிற்பகலில் பணியிலிருந்து விலகி விட்டார்.

14. 1-1-1984 அன்று உள்ளவாறு தமிழ்நாடு காவல் துறைப் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 56,629 ஆகும். அதன் விவரங்கள் இணைப்பு 1-ல் தரப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் 2,144 நிர்வாகப் பணியிடங்களும், 190 அமைச்சுப் பணியிடங்களும், 66 தொழில் நுட்பப் பணியிடங்களும் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் விவரம் இணைப்பு 2-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### மக்கள் குடியுரிமைச் சட்டங்களை அமல்படுத்தல்.

15. தீண்டாமை' அகற்றுதல் என்ற உயரிய நோக்கினைக் கருத்தில் கொண்டு ஆதி திராவிடர்களுக்கு இழைக்கப்படும் தீங்கினை அகற்றவும் 1976ஆம் ஆண்டின் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.



1984 மார்ச் 29]

16. தற்போது 20 காவல் மாவட்டங்களில் உள்ள 20 சுற்றுக் காவல் படைகள் ஒவ்வொன்றிலும் ஒரு ஆய்வாளர், ஓர் உதவி ஆய்வாளர், இரண்டு தலைமைக் காவலர்கள் மற்றும் இரண்டு காவலர்கள் (நிலை 2) பணியாற்றுகின்றனர். ஒவ்வொரு சுற்றுக் காவல் படைக்கும் ஒரு ஜீப் வழங்கப்பட்டுள்ளது.

17. புள்ளி விவரங்களைச் சேகரித்திடவும் அவற்றைத் தொகுத்து அளிக்கவும் 20 புள்ளி விவர ஆய்வாளர்கள் மற்றும் 20 உதவி ஆய்வாளர்கள் நியமனம் செய்ய ஒப்பளிப்பு செய்யப் பட்டுள்ளது. மக்கள் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்ட வழக்கு களை விசாரித்து விரைவில் தீர்ப்பு வழங்கிட குற்றவியல் வகுப்பு நடுவர்களின்கீழ் நான்கு தனி நீதிமன்றங்கள் தேவையான பணியாளர்களுடன் தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களிலும் இயங்கி வருகின்றன. தனி நீதிமன்றங்கள் செயல் படும் மேற்கூறிய நான்கு மாவட்டங்களுக்கும் மற்றும் வழக்குகள் அதிகமாகத் தேங்கியுள்ள தென்னாற்காடு, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களுக்கும் ஆறு வழக்குத் தொடுப்பு அணிகள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு அணியிலும் ஒரு உதவி ஆய் வாளர், ஒரு தலைமைக் காவலர், ஒரு காவலர் (நிலை 2) பணி யாற்றி வருகின்றனர். தீண்டாமைக் கொடுமை கூடுதலாகத் தென்படும் இடங்களில் ஆய்வு செய்வதற்காகத் தேவையான பணியாளர்களைக் கொண்ட ஒரு ஆய்வுக்குழு ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

18. 174 சேமப் படை அணிகளும், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் ஏழு அணிகளும் சட்டம், ஒழுங்கை திறம் படப் பேணிக் காத்திட உள்ளூர் காவல் துறையினருக்கு உதவி வருகின்றனர். ஆவடியிலுள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் படை இரண்டாம் அணி 25-8-1980 முதல் மத்திய அரசின்கீழ் பிற மாநிலங்களில் செயல்பட அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

19. மதுரை, சென்னை, கோவை, திருச்சி ஆகிய இடங்களில் நான்கு நாய்ப் படைகள் குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் துணை புரிய அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் பணி 1983 ஆம் ஆண்டு 738 வழக்குகளில் பயன்படுத்தப்பட்டு அவற்றில் 260 வழக்கு களில் பயனுள்ளவையாக இருந்தன.

20. கூட்டத்தினரைக் கட்டுப்படுத்த குதிரைப் படைக் காவலர்கள் பெரிதும் உதவியாக உள்ளனர். தற்போது சென்னை நகரில் 34 குதிரைகள் கொண்ட ஒரு பிரிவு மட்டும் உள்ளது. மதுரை, கோவை ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் 10 குதி ரைகள் கொண்ட குதிரைப்படை அமைத்திட ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது. ஒப்பளிக்கப்பட்ட குதிரைகளின் மதிப்பு கூடியதால் அக்குதிரைகளை வாங்குவதற்குத் தேவையான கூடுதல் தொகை யினை அரசு பரிசீலனை செய்து, ஒப்புதல் அளிக்கப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

21. சாலைப் போக்குவரத்தினை சீர்படுத்திட இராமநாதபுரம் (கிழக்கு) மற்றும் கோயம்புத்தூர் (ஊரக) மாவட்ட போக்குவரத்துப் பிரிவுகளுக்கு அரசு கூடுதல் பணியாளர்களை நியமித்துள்ளது. இதன் மூலம் போக்குவரத்துக் கட்டுப்பாட்டினைத் திறமையாகச் செயல்படுத்த இயலும்.

22. நெடுஞ்சாலைக் கண்காணிப்புப் பணிக்கு சென்னையிலிருந்து பிரியும் 3 நெடுஞ்சாலைகளுக்கும் ஜீப் மற்றும் காவல் படையினர் கொண்ட 3 அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை போக்குவரத்துக் குற்றங்களைத் திறமையாகக் கட்டுப்படுத்தவும், விபத்தில் காயமடைந்தவர்களுக்குத் தக்க சமயத்தில் உடனடி சிகிச்சை அளிக்கவும் உதவும். சென்னை-விழுப்புரம் நெடுஞ்சாலை, சென்னை-வேலூர் நெடுஞ்சாலை, சென்னை-நெல்லூர் நெடுஞ்சாலை ஆகிய மூன்று நெடுஞ்சாலைகளுக்கும் இந்தச் சுற்றுக் காவல் படைகள் அமைக்கப்பட்டுள்ளன. மத்திய அரசும் தனது நெடுஞ்சாலை சுற்றுக்காவல் திட்டத்தின்கீழ் சென்னை-திண்டுக்கல் நெடுஞ்சாலையைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு 50 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு சுற்றுக் காவல்படை வீதம் 10 சுற்றுக் காவல்படைகள் அமைக்க முன் வந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

பெண் காவலர்கள்.

23. தமிழ்நாடு காவல் துறையில் பெண் காவலர்கள் பிரிவு ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது. பொது மக்களுக்கு உதவி புரிவதிலும், போக்குவரத்தினை ஒழுங்குபடுத்துவதிலும் இந்தப் பிரிவு முக்கியப் பணியை ஆற்றி வருகிறது. விமான நிலையங்களில் பெண் பயணிகளைச் சோதனையிடவும், இரயில் நிலையங்களில் வழி தவறித் தடுமாறும் பெண் பயணிகளுக்கு உதவி புரியவும், மருத்துவமனைகளில் பெண் நோயாளிகளுக்கு உதவவும், குழந்தைகள் திருட்டைத் தடுக்கவும் பெண் காவலர் பயன்படுத்தப்படுகின்றனர். 1973 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பெண் காவலர் பிரிவு நாளடைவில் கணிசமாக அதிகரித்துள்ளது. தற்போது பெண் காவலர் பிரிவில் 82 பெண் உதவி ஆய்வாளர்களும், 73 பெண் தலைமைக் காவலர்களும், 666 பெண் காவலர்களும் உள்ளனர்.

பிரிவு 2.

செய்தித் தொடர்பு.

24. காவல் துறையினர் தங்களது பணியினைச் செவ்வனே ஆற்றிடவும் நிலைய அதிகாரிகள் தலைமையிடங்களிலிருந்து ஆணைகளைப் பெற்று, அவ்வாணைகளை நிறைவேற்றத் தன் கீழ் பணிபுரியும் காவலர்களுடன் தொடர்பு கொள்ளவும் செய்தித்





தொடர்பு மிகவும் அவசியமானதென்பதை வலியுறுத்தத் தேவையில்லை. தமிழ்நாட்டில் கம்பியில்லாத் தந்திப்பிணைப்பு, வானொலி, தொலைபேசி, வாக்கி-டாக்கி ஆகிய கருவிகள் கொண்ட சிறந்ததொரு செய்தித் தொடர்பு அமைப்பு இயங்கி வருகிறது.

25. காவல் துறை வானொலிப் பிரிவு, கம்பியில்லாத் தந்திப் பிணைப்பு, வானொலி ஆகியவை கொண்ட ஒரு விரிவான அமைப்பை ஏற்படுத்தியுள்ளது. தற்போது ஒவ்வொரு மாவட்ட தலைமையிடமும், மாநிலத் தலைமையிடத்துடன் நுண்ணலைக் கருவி ( Micro Wave ) மீவுயர் அலைப்பிணைப்புக் கருவிகள் (V.H.F.) மூலம் இணைக்கப்பட்டுள்ளது. ஒலி மற்றும் தொலையச்சுப் பொறிகளின் நேரடித் தொடர்பு செயல்படுத்தப் படுகிறது.

26. தமிழ்நாட்டிலுள்ள 951 காவல் நிலையங்களுள் 857 நிலையங்களும், 98 துணைக் கோட்டங்களில் 56 துணைக் கோட்டங்களும் மீவுயர் மின்னலைச் செய்தித் தொடர்பு அமைப்பு (V.H.F.) மூலம் மாவட்ட தலைமை இடங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. இதனால் மாநிலத் தலைமை இடத்திலிருந்து எந்த ஒரு காவல் நிலையத்துடனும் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடிகிறது. இவ்வசதி இல்லாத பிற காவல் நிலையங்களிலும் மீவுயர் மின்னலைச் செய்தித் தொடர்பு அமைப்பு மூலம் தொடர்பு கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன.

27. மேலும் 837 காவல் நிலையங்களுக்கும், 160 புறக் காவல் நிலையங்களுக்கும் தொலைபேசிக் கருவிகள் வழங்கப் பட்டுள்ளன. மீதியுள்ள காவல் நிலையங்களுக்கும், புறக் காவல் நிலையங்களுக்கும் தொலைபேசிக் கருவிகளை வெகு விரைவில் அமைத்துத் தர் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

28. மைய அரசின் நவீனப்படுத்துதல் திட்டம், 7-வது நிதிக் குழு மற்றும் மாநில நிதி இவற்றிலிருந்து இதுவரை 1,800 இருவழிச் செய்தித் தொடர்புக் கருவிகள் (Walkie talkie) ரோந்து செல்லும் காவலர்கள் பயன்படுத்திக் கொள்வதற்காக ஒவ்வொரு காவல் நிலையத்திற்கு இரண்டு வீதம் மாவட்டத்திலுள்ள பல்வேறு காவல் நிலையங்கள், தமிழ்நாடு சிறப்புக் காவல் படை, சென்னை மாநகரக் காவல் படை, இரயில்வே காவல் படை ஆகியவைகளுக்கு வழங்கப் பட்டுள்ளன. 1983-84 ஆம் ஆண்டில் ரூபாய் 40 இலட்சம் செலவில் 400 இருவழிச் செய்தித் தொடர்புக் கருவிகள் வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

29. மிக உயர் அலைப்பிணைப்புக் கட்டுப்பாட்டு பிரிவுகள் செய்திப் பிரிவில் முக்கிய இடம் வகிக்கின்றன. 83 நிலையங் களும் 5 கட்டுப்பாட்டு நிலையங்களும் கொண்டு இவை செயல் படுகின்றன. வெள்ளம் போன்ற அவசரக் கலாங்களில் விரைந்து செயல்பட 12 அவசர நிலையங்கள் முக்கியமான இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

30. கம்பியில்லாத் தந்தி அதிகம் பயன்படுத்தப்படுவதின் காரணமாக குறிப்பாக குற்றப் புலனாய்வுத் துறையினருக்கு உத வும் வகையில் இதனை மேம்படுத்த வேண்டிய அவசியம் ஏற் பட்டுள்ளது. இதன் அவசியத்தை உணர்ந்து அரசு ரூபாய் 120 இலட்சம் செலவில் அதி மீவயர் மின்வலைச் சாதனங்கள் (U.H.F. ) பொருத்துவதற்கென அனுமதியளித்துள்ளது. இதற்கான ஏற்பாடுகளை அரசு இந்திய எலக்ட்ரானிக் கார்ப்ப ரேசன் மூலம் செய்து வருகிறது. இந்திய எலக்ட்ரானிக் நிறு வனம் இச்சாதனத்திற்கு தேவையான சில முக்கிய கருவிகளை ஜப்பானில் உள்ள தோசிபா கம்பெனியிடம் இருந்து பெறுவதற்கு ஏற்பாடு செய்து வருகிறது. மேலும் இந்நிறுவனம் இச்சாதனங் களை 1984 ஆம் ஆண்டு ஜூன் மாத அளவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது.

31. நடப்பு ஆண்டில் ரூபாய் 53.37 இலட்சம் செலவில் 57 மோட்டார் வாகனங்கள் வாங்க அரசு அனுமதி அளித்து உள்ளது. மேலும் 1983-84 ஆம் ஆண்டில் 218 உபயோகிக்க இயலாத பழைய வாகனங்களுக்குப் பதிலாக அதே எண்ணிக் கையில் புதிய வாகனங்கள் 1980-81 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்ட "புதிதாக மாற்றுதல்" திட்டத்தின்படி ரூபாய் 1.88 கோடி செலவில் வாங்கத் தீர்மானித்துள்ளது. காவல் படைகளை ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு விரைந்து செல்லும் வகையில் அவர்களுக்கு நல்ல நிலையில் உள்ள வாகனங்களை அளிப்பதற்கும் அவற்றை நல்ல நிலையில் பேணிக் காப்பதற்கும் தீவிர முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. வாகனங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் பெருகி வருவதைக் கருத்தில் கொண்டு காவல் துறையில் உள்ள வாகனங்களுக்கென்று தனி யாக மோட்டார் வாகனப் பராமரிப்பு நிலையம் ஏற்படுத்துவது தேவையெனக் கருதப்படுகிறது. ஆகவே, தற்போது தமிழ்நாடு சிறப்புக் காவல் அணி மற்றும் சென்னை நகரக் காவல் படை ஆகியவற்றின் உபயோகத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள மோட்டார் வாகனங்களைப் பழுது பார்ப்பதற்கு ஆவடியில் ஒரு பராமரிக்குங் நிலையம் உள்ளது. மேலும் ரூபாய் 2.50 இலட்சம் செலவில் திருச்சிராப்பள்ளியில் உள்ள மோட்டார் வாகனப் பராமரிப்பு நிலையத்தின் உபயோகத்திற்குத் தேவையான இயந்திரங்களும் மற்றும் கருவிகளும் வாங்கப்பட்டுள்ளன. இதே போன்று மோட்டார் வாகனப் பராமரிப்பு நிலையங்கள் கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.





சென்னை-600 008. 13625

பிரிவு 3.

அறிவியல் சாதனங்கள்

32. காவல் துறை கம்பியூட்டர் பிரிவு :

தமிழ்நாட்டில் குற்றவாளிகளைப் பற்றிய தகவல்களைப் சேகரித்து வைப்பதற்கும் அவற்றை நல்ல முறையில் பயன்படுத்தி குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வசதிகளைப் பெருக்கும் வகையி லும், குற்ற நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் ஒருங்கே ஒரு இடத் தில் விவரங்களை தரும் வகையில் சேர்த்து வைத்துக் கொள்வதற் காகவும் காவல் துறையில் பணியாற்றும் எல்லா பணியாளர் களுடைய விவரங்களைச் சேகரித்து வைத்துக் கொள்வதற்கும் கம்பியூட்டர் என்கின்ற நவீன அறிவியல் சாதனம் ஒன்று காவல் துறையில் 1971 ஆம் ஆண்டு காவல் துறையை நவீனப்படுத்தும் மைய அரசு திட்டத்தின் மூலம் துவக்கப்பட்டது.

இப்பிரிவு காவல் துறைத் தலைவர் (குற்றப் புலனாய்வுத் துறை) மற்றும் காவல் துறை துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (திட்டம் மற்றும் ஒருங்கிணைத்தல்) ஆகியோரின் மேற்பார்வை யில் இயங்கி வருகிறது. இந்தப் பிரிவினை மேலும் நவீனப் படுத்தும் வகையில் 1976 ஆம் ஆண்டில் டி.டி.சி. 316 வகை கம்பியூட்டரை வாங்க அரசு ரூபாய் 74 இலட்சம் அனுமதி அளித் தது. இந்தத் தொகை மைய அரசால் நம் மாநில அரசுக்கு காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் வழங்கப் பட்டதாகும். தமிழ்நாடு அரசும் இந்தத் தொகையை இரண்டு கட்டங்களில் செலவழிக்க ஆணையிட்டது.

புதிதாக நிறுவப்பட்ட கம்பியூட்டர், காவல் துறையில் 1979 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் முதல் இயங்கத் தொடங்கியது. இந்தக் கம்பியூட்டர் கீழே கண்ட வகைகளில் பயன்படுத்தப்படு கிறது.

(1) குற்றம்/குற்றவாளிகள் :

செய்முறைக் குற்றவாளிகளின் பட்டியல் தயாரித்து கண்டு பிடிக்க முடியாத சொத்து வழக்குகளில் விசாரணை செய்தல்.

(2) கைரேகைப் பயன்பாடு :

கைது செய்யப்பட்ட குற்றவாளிகளின் கடந்த கால வாழ்க் கையைப் பற்றி விவரங்கள் சேகரித்துக் கொடுத்தல்.

(3) காவல் நிலையங்கள், வட்டங்கள், கோட்டப் பிரிவு மற்றும் மாவட்ட அளவில் காவலர்களின் செயல்பாடுகளையும், நிர்வாகத் தன்மை பற்றியும் ஆய்ந்து திங்கள் தோறும் அறிக்கை தயாரித்தல்.

[1984 மார்ச் 29

காவல் நிலையங்களிலிருந்து சொத்துக்கள் பற்றிய குற்றங்கள் நடைபெறும் பொழுது வரும் தகவல்கள் இந்த கம்பியூட்டரால் சேகரிக்கப்பட்டு. மாவட்ட காவல் துறை அதிகாரிகளுக்குத் தேவைப்படும்பொழுது உடனடியாக குற்றங்கள் அவற்றின் தன்மை, குற்றவாளிகள் இவர்களைப் பற்றிய விவரங்களை கம்பியூட்டர் மூலமாக மாவட்டங்களுக்கு அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. 1979 ஆம் ஆண்டு முதல் 1983 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை இவ்வாறு மாவட்டக் காவல் அதிகாரிகளுக்குக் குற்றவாளிகளைப் பற்றிய தகவல் அறிவிப்புக் குறிப்புகள் பின்வருமாறு அனுப்பப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | தகவல் அறிவிப்புக் குறிப்புகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 1979 | 16,587 |
| 1980 | 21.877 |
| 1981 | 16,093 |
| 1982 | 12,108 |
| 1983 (10/83 வரை) | 12,952 |

இரண்டாவதாக, கம்பியூட்டர் மூலமாக குற்றவாளிகளின் விரல் ரேகைப்பதிவு சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. குற்றம் புரிந்ததற்காக சந்தேகப்படும் நபர் ஒருவரைக் காவல் துறையினர் கைது செய்யும் வகையில் அவருடைய விரல் ரேகைப் பதிவுகள் கிடைக்கப்பெற்று கம்பியூட்டருக்கு அனுப்பப்படும். கம்பியூட்டரில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள விரல் ரேகைப் பதிவுகளுடன் அவைகள் பொருத்தப்பட்டு தேவையான விவரங்கள் மாவட்டங்களுக்கு உடனடியாக அனுப்பப்படும்.

மேலும் காவல் துறையில் பணியாற்றும் அதிகாரிகள், காவலர், அமைச்சுப் பணியாளர், இவர்களைப் பற்றிய எல்லா பணிவிவரங்களையும் சேகரித்து தேவைப்படும் பொழுது அவற்றைப் பயன்படுத்துவதற்கும் இந்த கம்பியூட்டர் உபயோகப்படுத்தப்படுகிறது.

வருங்காலத்தில் தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்து விபத்துக்களைப்பற்றிய விவரங்கள் அவற்றைத் தவிர்க்கும் வழிகள், குற்றங்களைப் பற்றிய முழுமையான விவரங்கள், காவல் துறைக்கு தேவையான பொருட்கள், சாதனங்கள் இவற்றிற்கான மதிப்பீடு தயாரித்தல் இதுபோன்ற பணிகளில் கம்பியூட்டர் உபயோகப்படுத்தப்படும்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் தலைமை இடத்திலுள்ள கம்பியூட்டர், காவல் மாவட்டங்களுடன் தொடர்பு கொள்ளுவதற்கான வழிவகைகள் முதன் முறையாக நடை



முறைப்படுத்தப்பட்டுள்ளது என்பது பெருமை மிகுந்த சாதனையாக எடுத்துக் கூறலாம். மாவட்டங்களுடன் சென்னையிலுள்ள கம்பியூட்டர் தொலைத் தொடர்பு சாதனம் மூலமாகவும் இணைக்கப்பட்டு வருகிறது. இதுவரை 18 காவல் மாவட்ட தலைமை இடங்கள் கம்பியூட்டருடன் இணைக்கப்பட்டு இந்த வசதிகள் கொடுக்கப்படுகின்றன. இதனால் குற்றங்கள், குற்றவாளிகள், கைரேகைகள், சொத்துக்கள் பற்றிய விவரங்கள் அவ்வப்பொழுது சேகரிக்கப்பட்டு தேவைப்படும் அளவிலேயே மாவட்டங்களுக்கு அறிவிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன.

மேலும் தமிழ்நாட்டில் காவல் துறையிலுள்ள கம்பியூட்டர் பிரிவு முழுமையாகவும் திறம்படவும் பணியாற்றுவதற்காக நிபுணர்களைக் கொண்டு ஆய்வு செய்து அவர்களுடைய பரிந்துரை மேல் கம்பியூட்டர் பிரிவினை வலுப்படுத்த தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

### தமிழ்நாடு விரல் ரேகைப் பதிவுக் கூடம்.

தமிழ்நாட்டில் உள்ள விரல் ரேகைப் பதிவுப் பிரிவு இந்தியாவிலேயே மிகவும் நவீனமானதொன்றாகும். தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் காவல் நிலையங்களிலும் கைது ஆகும் குற்றவாளிகளையும் சந்தேகக் குற்றவாளிகளையும் பற்றிய முன் தகவல்களை அறிந்து இந்தப் பிரிவு விசாரணை செய்யும் அதிகாரிகளுக்குப் பெரிதும் பயன்படுகிறது. விரல் ரேகைப் பதிவுப் பிரிவுகள் தலைமையிடத்திலும், எல்லாக் காவல் மாவட்டங்களிலும் இயங்கி வ்ருகின்றன. இந்தப் பிரிவில் பணியாற்றும் பணியாளர்கள் கொலை, கொள்ளை, வீடு புகுந்து நடக்கும் களவு, திருட்டு போன்ற குற்றங்கள் நடக்கும் இடத்திற்கு சென்று அங்கு காணப்படும் விரல் ரேகைகளைப் பதிவு செய்து, விரிவுபடுத்தி விரல் ரேகைப் பதிவு கூடத்தில் உள்ள பதிவுகளை ஒப்பிட்டு குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க புலனாய்வு அதிகாரிகளுக்கு உதவி புரிகின்றனர். இந்தப் பிரிவில் பல்வேறு குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்ட சற்றேறக் குறைய 5.69 இலட்சம் குற்றவாளிகள் விரல் ரேகைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தகவல் கிடைத்த உடன் பிரிவில் பணியாற்றும் பணியாளர்கள் குற்றங்கள் நிகழ்ந்த இடத்திற்கு விரைந்து சென்று தடயங்களைச் சேகரித்து பதிவு செய்யப்பட்ட தடயங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து தங்களுடைய பரிந்துரைகளை புலனாய்வு அதிகாரிகளுக்கு வழங்குகின்றார்கள். வழக்குகள் விசாரணைக்கு வரும் பொழுதும் சாட்சியங்கள் கூறி தடயங்களின் தன்மைகளை விளக்குகின்றார்கள். சென்னையில் குற்றவாளிகளின் விரல் ரெகைகள் வகைப்படுத்தப்பட்டு சேகரித்து வைக்கப்பட்டுள்ளள. சென்னையில் பணிபுரியும் அலுவலர்கள் காவல் நிலையங்களிலிருந்து கோரிக்கை வந்தவுடன் தேவையான விவரங்களை காவல் நிலையங்களுக்கு அளிக்கின்றார்கள்.

பல ஆண்டுகளாக திறம்பட பணியாற்றி வந்துள்ள விரல் ரேகைப் பதிவுக் கூடத்தை மேலும் நவீனப்படுத்துவதே அரசின் கொள்கையாகும். இதற்காக 1976-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் சுமார் 13 இலட்சம் ரூபாய் மதிப்பில் மீரா கோடு என்கின்ற எலக்ட்ரானிக் சாதனம் இந்தப் பிரிவிற்கு வழங்கப்பட்டு உள்ளது. இந்த சாதனத்தின் மூலமாக குற்றங்கள் நடந்த இடத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அடையாளம் தெரியாத விரல் ரேகைகளைக் கொண்டு குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க பெரிதும் ஏதுவாகிறது.

குற்றவாளிகளின் கை ரேகைப் பதிவுகள் மிக நுண்ணிய அளவில் எல்லா அடையாளங்களும் காணக் கூடிய குறியீடுகளுடன் படம் பிடிக்கப்பட்டு குற்றம் நடந்த இடத்திலிருந்து கிடைக்கப் பெற்ற விரல் ரேகைகளைக் கொண்டு குற்றவாளியைக் கண்டுபிடிக்க மீரா கோடு சாதனம் பயன்படுத்தப்படுகிறது. வேறொரு மறு ஆய்வு சாதனத்தின் மூலம் கை ரேகைப் பதிவுகள் பெரிது படுத்தப்பட்டு திரையில் காண்பிப்பதன் மூலமாக வெகு விரைவாக கை ரேகைகளை நிபுணர்கள் ஒப்பிட்டுப் பார்த்து குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க இந்தச் சாதனம் பெரிதும் உதவுகின்றன. இப்பணியைத் தீவிரப் படுத்த 1983-ஆம் ஆண்டு 20 விரல் ரேகை பதிவு நிபுணர்கள், ஒரு நிழல் படம் எடுப்பவர் இரண்டு கண்காணிப்பாளர்கள் ஆகிய பதவி கள் அரசினால் அனுமதிக்கப்பட்டு உள்ளன.

தற்போது வரையப்பட்டுள்ள திட்டத்தில் ஏறக்குறைய 90,000 கடும் குற்றவாளிகளின் கைரேகைப் பதிவுகள் இக் கருவி யின் மூலம் தொகுக்கப்படும். இது வரை 83,865 கை ரேகைப் பதிவுகள் இவ்வாறு தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றில் சுமார் 41,000 கை ரேகைப் பதிவுகள் நுண்ணிய அளவில் படமாக்கப் பட்டு சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. மேலும் அடுத்த கட்ட மாக இந்த மீரா கோடு சாதனத்தின் மூலம் இரண்டு இலட்சம் கை ரேகைப் பதிவுகள் தொகுக்கப்பட்டு நுண்ணிய அளவாக வைக்கப்படும். இவ்வாறு செய்யப்பட்டவுடன் காவல் நிலையங் களில் இருந்து தகவல் வந்தவுடனேயே வெகு குறுகிய கால அளவில் மீரா கோடு சாதனத்தைப் பயன்படுத்தி நுண்ணிய அளவு படங்களுடன் ஒப்பிடப்பட்டு குற்றவாளிகளைப் பற்றிய முழுவிவரங்கள் காவல் நிலையங்களுக்கு அனுப்பப்படும். இந்தியா விலேயே தமிழ்நாட்டில் தான் இந்த நவீன சாதனம் பொருத்தப் பட்டு, கை ரேகைப் பதிவுகள் சேகரிக்கப்பட்டும், ஒப்பிடப் பட்டும், குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க உதவுவதிலும் பயன் படுத்தப்பட்டு வருகிறது.

### தமிழ்நாடு தடய அறிவியல் ஆய்வகம்.

33. தமிழ்நாடு தடய அறிவியல் ஆய்வகம் 1980-ஆம் ஆண்டி லிருந்து ஒரு இயக்குநரின் கீழ்த் தனித் துறையாகச் செயல்பட்டு



வருகிறது. சென்னையில் உள்ள ஒருங்கிணைக்கப்பட்ட தடய அறிவியல் ஆய்வகம் கீழ்க்கண்ட பகுதிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது :—

1. துப்பாக்கி இயல்.
2. உயிரியல்.
3. வேதியியல்.
4. ஆவணங்கள்.
5. ஆயத் தீர்வை.
6. பௌதிகம்.
7. மது விலக்கு.
8. ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி.
9. குருதி நீரியல்.
10. நச்சு இயல்.

மேலும் வட்டாரத்தடய அறிவியல் ஆய்வகம் தற்போது மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, வேலூர் ஆகிய 5 இடங்களில் உள்ளன. மாவட்ட அளவில் 21 நடமாடும் தடய அறிவியல் ஆய்வகங்களும் இயங்கி வருகின்றன. மதுரையில் உள்ள வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்குக் கட்டிடங்கள் கட்டு வதற்கு என்று ரூபாய் 7.2 இலட்சம் ஒதுக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் விரைவில் துவங்க இருக்கின்றன. மேலும் ரூபாய் 4.51 இலட்சம் செலவில் ஒரு மேலுறை ஆவிப் பகுப்பாய்வு கருவி (Head Space Analyser) ஒன்று வாங்க அரசு அனுமதி அளித்துள்ளது.

34. தமிழ்நாடு தடய அறிவியல் ஆய்வுக் கூடம் தடய அறி வியலில் இரண்டாண்டு முழுநேர பட்ட மேற்படிப்பு வகுப்பு நடத்தி வருகின்றது. இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கை 10-லிருந்து 12-ஆக உயர்த்தப்பட்டு, அந்த இரு இடங்களும் வெளி மாநிலத்தில் இருந்து வருபவர்களுக்கு ஒதுக்கப் பட்டுள்ளன. 1981-ஆம் ஆண்டில் இருந்து சென்னைப் பல்கலைக் கழகம் தடய அறிவியல் பண்டாரகர் (Ph.D) பட்டம் வழங்கு வதற்கு தமிழகத் தடய அறிவியல் ஆய்வகத்தை ஆராய்ச்சி நிலையமாக இயங்குவதற்குச் சென்னைப் பல்கலைக்கழகம் அனு மதி அளித்துள்ளது. தற்போது 5 முழு நேர ஆராய்ச்சியாளர் களும் 5 பகுதி நேர ஆராய்ச்சியாளர்களும் ஆராய்ச்சி செய்து வருகின்றார்கள்.

பிரிவு 4.

காவலர் நலன்.

35. காவலர்க்கு மலிவு விலையில் நுகர் பொருள்கள் வழங்கும் திட்டம் வெற்றிகரமாகத் தொடர்ந்து நடத்தப்படுகிறது. இதோடு, காவலர்கள் நிர்ணயிக்கப்பட்ட அளவு சர்க்கரையை வரம்பின்றி வாங்கலாம். ஏற்கெனவே இது 4 அலகு (Unit) என்ற வரம்பு அளவுக்குட்பட்டிருந்தது. திருமணமாகாமல் தங்கள் பெற்றோருடன் வசிக்கும் காவவலர்களும் இரண்டு அலகு ( Units ) வீதம் உணவுப் பொருள் வாங்க முதன் முறையாக அனுமதிக்கப்பட்டுள்ளனர். மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1,000 அதற்கு மேல் ஊதியம் பெறும் ஆய்வாளர் நிலையில் உள்ள பணியாளர்கள் வரை மலிவு விலையில் அரிசி வாங்குவதற்கு ஆகஸ்டு 1983 முதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளனர்.

காவலர் வீட்டுவசதித் திட்டம்.

36. நம் மாநிலத்தில் பணிபுரியும் காவலருக்காக காவலர் வீட்டு வசதித் திட்டம் 1955-56-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. சார்நிலை காவலர்களில் குறைந்தது 80 சதவீதத்தினருக்காவது வீட்டு வசதி அளிப்பதே அதன் குறிக்கோளாகும். இந்திய அரசின் ஏழாவது நிதிக் குழு 1979-80 முதல் 1983-84 வரையிலான அய்ந்து ஆண்டு காலத்திற்கு காவல் துறை முதுநிலைப் பணியாளர்களுக்கு 524 குடியிருப்புக்கள் கட்டவும், காவல் துறைச் சார்நிலைப் பணியாளர்களுக்கு 830 குடியிருப்புக்கள் மற்றும் 5,097 படை வீடுகள் ஆக 6,451 குடியிருப்புக்கள் கட்டுவதற்கு மத்திய அரசு ரூபாய் 6.75 கோடி மானியம் ஒதுக்கியுள்ளது. இதனைப் பயன்படுத்தித் தமிழ்நாடு அரசு முதுநிலைப் பணியாளர்களுக்கு 523 குடியிருப்புகளும், சார்நிலை பணியாளர்களுக்கு 3,487 குடியிருப்புகளும் 2,445 படை வீடுகளும் கட்டுவதற்கும் ஒப்புதல் அளித்துள்ளது. ஒதுக்கியுள்ள மானியத்தைக் காட்டிலும் அதிகமாக ஏற்படும் கூடுதல் செலவாகிய ரூபாய் 13.30 கோடியை மாநில அரசே ஏற்கிறது.

37. இதுவரையில் ஏழாவது நிதிக் குழுவின் மானியத்தைக் கொண்டுக் கட்டப்பட்டு வரும் குடியிருப்புகளில் காவல் துறைப் பணியாளர்களுக்கான 3,875 குடியிருப்புகள் கட்டுமானப் பணிகள் முடிவுற்று, அக்குடியிருப்புகள் குடி புகுவதற்காக ஒப்படைக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள குடியிருப்புக்கள் மற்றும் படை வீடுகள் பல நிலைகளில் கட்டுமானத்தில் உள்ளன.

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்.

38. காவல் துறையில் பணிபுரியும் அதிகாரிகளும், காவலர்களும், பணியிலிருந்து ஓய்வு பெறும் நிலையில் தங்களுக்கென சொந்த வீடுகளைக் கட்டி வைத்துக் கொள்ள வேண்டும் என்கிற



உயர்ந்த நோக்கத்தோடு அரசு அவர்களுக்கு வீடுகளைக் கட்டித் தருவதற்காக நிதி வசதிகளைச் செய்யும் வகையில் ஒரு புதிய நிறுவனத்தை துவக்க வேண்டுமென்று முடிவு எடுத்தது. அந்த அடிப்படையில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் 1980ம் ஆண்டு துவக்கப்பட்டது. இக்கழகம், 1981-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் பதிவு செய்யப்பட்டது. இக் கழகத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூபாய் 100 இலட்சம் ஆகும்.

39. இக் கழகம் திருச்சிராப்பள்ளி மாவட்டம் நாவல்பட்டு என்ற இடத்தில் 720 வீடுகளை ரூபாய் 163 இலட்சம் செலவில் கட்டி வருகிறது. இத் திட்டத்தில் கட்டுமானப் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

40. 1983-84-ஆம் ஆண்டிற்கு காவல் துறைப் பணியாளர்கள் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தால் கட்டப்பட்ட வீடுகள் வாங்குவதற்கு காவலர்களுக்கு முன் பணமாக அளிப்பதற்கு ரூபாய் 50 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

41. இக்கழகம் கோயம்புத்தூர் மாவட்டம், கணபதி என்ற இடத்தில் கோவில் நிலம் மற்றும் பட்டா நிலங்கள் அடங்கிய 24.85 ஏக்கர் நிலத்தை ரூபாய் 11 இலட்சம் செலவில் வாங்கியுள்ளது. இவ்விடத்தில் ரூபாய் 150 இலட்சம் செலவில் 432 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த வீடுகள் பணியிலிருந்து ஓய்வு பெறும் காவலர்கள், சொந்தத்தில் வாங்கி குடியிருப்பதற்காக கட்டப்பட்டு வருகின்றன.

காவல் நிலையக் கட்டிடங்கள்.

42. தற்சமயம் 951 காவல் நிலையங்களும், 189 புறக் காவல் நிலையங்களும் உள்ளன. இவற்றில் 344 காவல் நிலையங்களும், 96 புறக் காவல் நிலையங்களும் தனியார் வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. இதற்கு ஆண்டு ஒன்றுக்கு வாடகைச் செலவு சுமார் ரூபாய் 6.00 இலட்சம் ஆகிறது. வாடகைக் கட்டிடங்களில் இயங்கிவரும் 150 காவல் நிலையங்கள் மற்றும் புறக் காவல் நிலையங்களுக்கு அரசுக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூபாய் 350 இலட்சம் முதல் கட்டமாக அனுமதி அளித்து அரசு உத்திரவிட்டுள்ளது. இதில் 50 கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன பிற கட்டிடங்களின் கட்டுமானப் பணிகள் பல நிலைகளில் முன்னேறி வருகின்றன. இரண்டாவது கட்டமாக (அரசு நிலையாணை எண் 2744, உள் துறை, நாள் 29-12-1983-ல்) 95 காவல் நிலையங்கள்/புறக் காவல் நிலையங்களுக்கு அரசுக் கட்டிடங்களை ரூபாய் 331.71 இலட்சம் செலவில் கட்டுவதற்கு அனுமதி அளித்து அரசு ஆணையிட்டுள்ளது.

43. 1981-82ஆம் ஆண்டில் குறிப்பிட்ட சில காவல் நிலையங்களின் பெண் காவல் பிரிவிற்கு இட வசதி செய்து தர 10 இணைப்புக் கட்டிடங்களை ரூபாய் 3.50 இலட்சம் செலவில்

கட்டிக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 1983-84ஆம் ஆண்டில் 50 இணைப்புக் கட்டிடங்களை ரூபாய் 25 இலட்சம் செலவில் பெண் காவல் பிரிவிற்கு இடவசதி செய்து கொடுக்க அரசு அனுமதி அளித்துள்ளது.

### குடியரசுத் தலைவரின் காவலர் பதக்கம் மற்றும் காவல்துறை பதக்கம்.

44. காவலர் படையின் ஒழுங்குணர்வு உயர்ந்த நிலையில் இருப்பதற்கும் அது மேலும் மேலும் சிறந்த முறையில் பணி யாற்ற ஊக்கமளிக்கவும், காவலரின் சிறப்புமிக்க பணிகளைக் கவனித்து மதிக்க வேண்டியது ஓர் அவசியமான நடவடிக்கை யாகும். தமிழ்நாட்டைச் சேர்ந்த 11 காவல் துறை அலுவலர் களுக்கும், காவலர்களுக்கும் 1983ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவரின் காவலர் பதக்கமும், காவல் துறைப் பதக்கமும் வழங்கப்பட்டன. இம் மாநிலத்தைச் சார்ந்த 2 ஊர்க்காவல் படையினருக்குக் குடியரசுத் தலைவரின் ஊர்க்காவல் படை மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்புப் பதக்கம், அவர்களின் சிறப்பு மிக்கப் பணிக்காக 1983ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

### தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கம் (வீரச்செயல் மற்றும் சிறப்பு மிக்க கடமைப்பற்று உறுதிக்காகவும்)

45. வீரச் செயலுக்கானத் தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர் பதக்கம் 6 காவல் துறை அலுவலர்களுக்கும் காவலர் களுக்கும் 1983ஆம் ஆண்டில் அளிக்கப்பட்டது. 54 காவல் துறை அலுவலர்களுக்கும் காவலர்களுக்கும், அவர்களின் சிறப்பு மிகு பணிக்காக முதலமைச்சரின் காவலர் பதக்கம் வழங்கப் பட்டது. 5 ஊர்க்காவல் படையினருக்கு முதலமைச்சரின் ஊர்க் காவல் படைப் பதக்கம் 1983-ல் வழங்கப்பட்டது. இவ்வாறு வழங்கப்படும் பதக்கங்களின் எண்ணிக்கையை 40-லிருந்து 50ஆக உயர்த்துவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

### தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர் பதக்கம். (பாராட்டதக்க பணிக்காக)

46. இப்புதிய திட்டத்தின்படி 10 ஆண்டுகளுக்குக் குறையா மல் எவ்வித குறையுமின்றிச் சிறப்புமிக்க பணி புரிந்த தலைமைக் காவலர்களும், காவலர்களும் மற்றும் இவர்களுக்குச் சமமான பதவி வகிக்கும் மற்றவர்களும் இந்த பதக்கம் பெறத் தகுதி யுடையவர் ஆவர். அரசு, முதல் தடவையாக இத் திட்டத்தை 1982ஆம் ஆண்டு பொங்கலன்று அறிவித்தது. அவ்வாண்டில்



1,351 பேருக்கு பதக்கம் வழங்கப்பட்டது. 1983ஆம் ஆண்டில் பதக்கம் வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,179 ஆகும். 1984ஆம் ஆண்டில் 1,378 பேர்களுக்கு இப் பதக்கம் வழங்கப் பட்டது. இப் பதக்கம் அளிப்பது குறித்த அறிவிப்பு ஆண்டு தோறும் பொங்கல் திருநாளன்று அரசால் அறிவிக்கப்படும்.

### தமிழ்நாடு காவலர் நல நிதி.

47. காவல் துறையைச் சேர்ந்த சார்நிலைப் பணியாளர் களுக்கு இறப்பு, பிணி குறித்தச் செலவுக்கான நிதி உதவி, குறிப்பிட்ட சில பிரிவுகளில் பயிலும் குழந்தைகளுக்குப் படிப்புதவி ஏனைய நல உதவி, பொழுது போக்கு வசதி ஆகிய உதவிகள் செய்து கொடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு காவலர் நல நிதி தொடர்ந்து நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. காவல் துறையில் பணிபுரியும் சார்நிலை அலுவலர்கள் மனமுவந்து கொடுக்கும் அன்பளிப்புத் தொகைகள் மூலமும், உயர் அலுவலர் களிடமிருந்து பெறும் நன்கொடைகள் மூலமும் இந்நிதிக்கும் பணம் திரட்டப்படுகிறது. 1971-72ஆம் ஆண்டிலிருந்து ஒவ் வொரு நிதி ஆண்டும், அரசு மானியமாக ரூபாய் 1.50 இலட்சம் இந்நிதிக்கு வழங்கி வருகிறது. 1983-84ஆம் ஆண்டிலிருந்து அரசின் நேரிடை மானியம் ரூபாய் 2.5 இலட்சத்திற்கு உயர்த்தப் பட்டுள்ளது.

### தமிழ்நாடு காவல்துறை நூற்றாண்டு விழா படிப்புதவித் தொகை.

48. தமிழ்நாடு காவலர் நல நிதியைத் தவிர தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு விழாப் படிப்புதவித் தொகை நிதியும் உள்ளது. காவல் துறை. அரசிதழ் பதிவு பெறாத நிர்வாக அலுவலர்களின் பிள்ளைகளில் தகுதியுடையோருக்கு கல்லூரி களில் மேல் படிப்பும் தொழில் நுட்பக் கல்வியும் பயில ஆண்டு தோறும் இந்நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது. தனிப்பட்டவர்களிடமிருந்து பெறப்படும் நன்கொடைகளின் மூலம் இந்நிதிக்குப் பணம் திரட்டப்படுகிறது. 1982-83ஆம் ஆண்டில் ரூபாய் 30,000 படிப்புதவித் தொகையாக இந்நிதியி லிருந்து வழங்கப்பட்டது.

### தமிழ்நாடு காவலர் நல்வாழ்வு நிறுவனம்.

49. காவல் துறையைச் சேர்ந்த, அமைச்சுப் பணியாளர் உள்ளிட்ட அனைத்து அரசிதழ் பதிவு பெறாதப் பணியாளர் களின் குடும்பங்களின் நல்வாழ்வுப் பணிகளை தோற்றுவித்து வளர்த்து ஒருங்கிணைப்பது, தமிழ்நாடு காவலர் நல்வாழ்வு நிறு வனத்தின் முக்கிய குறிக்கோளாகும். காவல் துறையைச் சேர்ந்த பணியாளர் குடும்பங்களுக்கு உபரி வருவாய்க்கு வழி வகுத்தல், காவலர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் பொழுதுபோக்கு, மருத்துவம் மற்றும் கல்வி வசதி செய்து

கொடுத்தல் போன்ற இதர திட்டங்கள் இவ்வமைப்பில் அடங்கும். இந்த அமைப்பு குறித்த பல்வேறு திட்டங்களின்கீழ் நூற்புதையல் வேலை, பாய் முடைதல், ஜமுக்காளம் நெய்தல், தீக்குச்சி செய்தல், காகித உறைகள் செய்தல், பால் பண்ணை மற்றும் கோழிப் பண்ணை போன்றவைகள் அமைத்தல் ஆகிய பல்வேறு தொழில்கள் காவலர் குடும்பங்களின் வருவாயைத் தொடர்ந்து பெருக்கி வருகின்றன.

### பிரிவு 5.

### மைய அரசின் நிதி உதவி.

50. 1980-81 முதல் 1989-90 வரையிலான 10 ஆண்டுகளுக்கு மைய அரசு, மாநிலக் காவல் துறைப் படைகளை நவீனமயமாக்கும் திட்டத்தை மற்றும் ஒரு முறை நீட்டித்திருக்கிறது. 1980-81 முதல் 1982-83 வரையிலான முதல் மூன்று ஆண்டுகளுக்கு மத்திய அரசு ரூபாய் 103.315 இலட்சம் கடனாகவும், ரூ. 103.315 இலட்சம் மானியமாகவும் அளித்துள்ளது. வி. எச். எப்., வாக்கி-டாக்கி, யு.எச்.எப். கலன்கள், மோட்டார் சைக்கிள்கள், கம்ப்யூட்டர் சாதனங்கள், புலன் விசாரணைக்கு உதவும் அறிவியல் சாதனங்கள், ஆகியவை வாங்கவும் மற்றும் வட்டாரக் காவல் துறை போக்குவரத்துப் பணிமனை நிறுவிடவும் இத்தொகை முழுதும் பயன்படுத்தப்பட்டது. நடப்பு ஆண்டில் மதுரையில் வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகத்திற்குக் கட்டிடம் கட்டுவதற்கு அரசு அனுமதி அளித்து உள்ளது. சரகத் தலைமையிடங்களான திருச்சி, வேலூர், கோவையில் நுண்ணலை நிலையங்கள் அமைத்தலும், புலன் விசாரணைக்குத் தேவையான அறிவியல் சாதனங்கள் வாங்குதலும் இவ்வாண்டு செயல்படுத்தப்படவிருக்கும் பிற திட்டங்களாகும். மைய அரசின் உதவி தவிர 1981-82 முதல் 1982-83 வரை மாநில அரசு ரூபாய் 78.67 இலட்சம் செலவிட்டுள்ளது.

51. ஏழாவது நிதிக் கமிஷனின் பரிந்துரையின்படி தமிழ் நாடு காவல் துறை மற்றும் ஊர்க்காவல் ஆகியவற்றின் நிர்வாகத்திறனை மேம்படுத்த ரூபாய் 675 இலட்சம் முதலீட்டுச் செலவும், ரூபாய் 413 இலட்சம் வருவாய்ச் செலவும் ஒதுக்கப்பட்டுள்ளன. இத்தொகை முழுவதும் மகளிர் காவல் பிரிவு, விரல்ரேகைப் பிரிவு, காவல் வானொலி பிரிவு, விசேஷப் பிரிவு ஆகியவற்றை வலுப்படுத்தவும் வாக்கி டாக்கி கருவிகள் வாங்கவும் மற்றும் ஊர்க்காவல் படையின் மேம்பாட்டிற்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. இதற்காக வருவாய் பிரிவின்கீழ் ரூபாய் 417.09 இலட்சமும் மற்றும் மூலதனப் பிரிவின்கீழ் ரூபாய் 453.36 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளன.

52. இவை தவிர, இரயில்வே காவல் துறை. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தை அமுல்படுத்துவது போன்ற சில திட்டங்களுக்காகும் மொத்தச் செலவில் 50 விழுக்காட்டை மைய அரசு ஏற்கும்.



### பகுதி 6.

### குற்றம் மற்றும் சட்டமும் ஒழுங்கும்

### குற்றம்.

53. வளர்ந்துவரும் சமுதாயத்தில் குற்றங்களைக் கட்டுப்படுத்தலும், சட்டம் ஒழுங்கினை நிலைநாட்டுதலும் காவல் துறை எதிர்நோக்கியுள்ள பெரிய அறைகூவலாகும்.

54. குற்ற நிகழ்வுகள் சென்ற ஆண்டில் பெரும் பாலும் பல்வேறு சமூக பொருளாதார பிரச்சினைகள், 1983-ல் மாநிலத்தில் நிலவிய வறட்சி நிலைமை, நகரங்கள் விரிவடைவது போன்ற காரணங்களின் அடிப்படையில் அமைந்துள்ளன. எனினும், பயங்கரமான மற்றும் குறிப்பிடத்தக்க குற்றங்களில், அவற்றிற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றைக் கட்டுப்படுத்த திறமையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படுவதுடன், நீதியும் நிலை நாட்டப்படுகிறது.

55. 1982 ஆம் ஆண்டைவிட 1983 ஆம் ஆண்டில் ஒட்டு மொத்த அளவில் குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. "குற்றங்களைத் தாராளமாகப் பதிவு செய்ய வேண்டும்" என்ற முறை அதிகக் குற்றங்கள் பதிவு செய்யப்படுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

கீழ்க்காணும் அட்டவணையில் கண்டுள்ளபடி குற்றங்களைக் கண்டுபிடிப்பதின் விழுக்காடு சிறிதளவு குறைந்துள்ளது.

### அட்டவணை.

சொத்து குறித்து நிகழ்ந்த குற்றங்கள் பற்றிய புகார்கள், அவை கண்டு பிடிக்கப்பட்டது பற்றிய விவர அறிக்கை.

| குற்றங்கள் வகைபாடு. | 1982 புகார் செய்யப் பட்டவை. | 1982 கண்டு பிடிக்கப் பட்டவை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| ஆதாயத்திற்கான கொலை .. .. | 52 | 39 |
| கொள்ளை .. .. .. | 38 | 22 |
| வழிப்பறி .. .. .. | 283 | 163 |
| கன்னக் களவு .. .. .. | 8,203 | 4,642 |
| பெரிய திருட்டுகள் .. .. .. | 23,654 | 17,988 |
| சிறிய திருட்டுகள் .. .. .. | 1,501 | 1,469 |
| கால் நடைத் திருட்டுகள் .. .. | 949 | 851 |
| மொத்தம் .. .. | 34,680 | 25,174 |

குற்றக் கண்டுபிடிப்பு விழுக்காடு .. 72.5

| குற்றங்கள் வகைப்பாடு. | 1983 | |
|---|---|---|
| | புகார் செய்யப் பட்டவை. | கண்டு பிடிக்கப் பட்டவை. |
| (1) | (2) | (3) |
| ஆதாயத்திற்கான கொலை .. .. | 69 | 29 |
| கொள்ளை .. .. .. .. | 60 | 32 |
| வழிப்பறி .. .. .. .. | 366 | 223 |
| கன்னக் களவு .. .. .. | 10,988 | 5,958 |
| பெரிய திருட்டுகள் .. .. .. | 25,538 | 17,183 |
| சிறிய திருட்டுகள் .. .. .. | 1,916 | 1,801 |
| கால் நடைத் திருட்டுகள் .. .. | 1,102 | 983 |
| மொத்தம் .. .. | 40,039 | 26,209 |

குற்ற கண்டுபிடிப்பு விழுக்காடு .. 65.5

56. சென்னையிலுள்ள விரல் ரேகைப் பதிவு நிலையம், மாவட்டங்களில் உள்ள ஒரு விரல் பதிவு நிலையங்கள், தமிழ்நாடு தடய அறிவியல் ஆய்வகம், நாய்ப் படை மற்றும் கம்பியூட்டர் பிரிவு ஆகிய பிரிவுகள் தொடர்ந்து, விஞ்ஞான ரீதியில் குற்றங் களைக் கண்டு பிடிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றன.

57. 1979 ஆம் ஆண்டில் அகில இந்திய அளவில் மீட்கப்பட்டத் திருட்டுச் சொத்துக்களின் சதவிகிதம் '' இந்தியாவில் குற்றங்கள் '' என்ற வெளியீட்டின்படி 1978-ஆம் ஆண்டைவிடச் சற்று உயர்ந்து 27.7 சதவிகிதம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. நாடு முழுவதிலும் கடந்த ஐந்து ஆண்டுகளில் திருட்டுப் போனச் சொத்துக்களின் மீட்பு விழுக்காடு 40-ஐ தாண்டியதில்லை. ஆனால் தமிழ் நாட்டில் 1978 ஆம் ஆண்டில் 41.2 விழுக்காட்டி லிருந்து 1983-ல் 53.6 விழுக்காடாக உயர்ந்துள்ளது. 1983 ஆம் ஆண்டு பொதுவாகக் குற்றக் கண்டுபிடிப்புக்களின் விழுக்காடு 65 ஆக உள்ளது. இந்தியாவில் அண்மைக் காலங்களில் வேறெந்த மாநிலமும் சாதிக்காத வகையில் தமிழ்நாட்டில்தான் சொத்து சம்பந்தமான குற்றங்களின் கண்டுபிடிப்புகளின் விழுக் காடு ஒரு சாதனை நிகழ்த்தும் வண்ணம் அமைந்துள்ளது.

58. கீழ்க்கண்ட பத்திகளில் சில முக்கியமான குற்ற வழக்கு களின் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.—

1. ஆதாயத்திற்கான கொலை.

59. 21-5-1983 இரவு நிகழ்ந்த சென்னை எஸ்பிளனேட் காவல் நிலைய குற்ற எண் 594/83 வழக்கில், சென்னை தம்புச் செட்டித் தெருவில் உள்ள கர்நாடகா வங்கியில், அதன் ஊழிய





ரான, மங்களூரைச் சேர்ந்த லட்சுமிராஜு ஷெட்டி என்பவர் அந்த வங்கியின் மேலாளர் ஞானசம்பந்தத்தைக் கொலை செய்து விட்டு ரூபாய் 13,57,900 திருடிக் கொண்டு போய்விட்டார். நகரக் காவல் துறையினர் விரைவாகத் தொடர்ந்து மேற்கொண்ட புலன் விசாரணையின் காரணமாக குற்றம் சாட்டப்பட்டவரை யும், அவரது தந்தையையும் முறையே 29-5-1983 மற்றும் 30-5-1983 ஆம் தேதிகளில் கைது செய்து மங்களூரிலிருந்து ரூபாய் 12,31,000-ஐ கைப்பற்றினர். இவர்கள் நீதிமன்ற விசாரணையில் உள்ளனர்.

60. 4-12-1983 இரவு, நெல்லை மாவட்டம், கயத்தாறு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அகிலாண்டபுரம் கிராமத்தில் பிள்ளையார் கோவில் தெருவில் வசிக்கும் கணபதி ஆசாரி, அவரது மனைவி ரத்னம்மாள், அவர்களது வளர்ப்பு மகன் இசக்கிராஜ் ஆகியோர் கொலை செய்யப்பட்டனர். ரூபாய் 1,06,018 பெறு மான நகைகளும், ரொக்கமும் களவு போயின. இ. த. ச. 302-380 பிரிவுகளின்கீழ் கயத்தாறு காவல் நிலையக் குற்ற எண் 248/83-ல் வழக்குப் பதிவு செய்யப்பட்டு நெல்லை காவல் துறை யினரின் விரைவான முறைப்படி தொடர்ந்து மேற்கொண்ட புலன் விசாரணையில் உள்ளூர் பழையக் குற்றவாளி மாடசாமியும், அவரது சகாவான முத்துப் பாண்டியும் கைது செய்யப்பட்டு, மொத்தச் சொத்துக்களும் மீட்கப்பட்டன. வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

61. 19-12-1983 அன்று மதுரை, கமலாத்தோப்பில் 52 வயதான திருமதி காவேரியம்மாள் கொலையுண்டு காணப்பட் டார். ரூபாய் 1,50,000 மதிப்புள்ள வைரம் உள்பட 120 சவரன் நகைகள் திருடுபோயின. மதுரை பி-4 கா. நி. கு. எண் 2280/ 83-ல் இ. த. ச. 302 மற்றும் 379 பிரிவுகளின்கீழ் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. தொடர்ந்து புலன் விசாரணையின் காரணமாக காவல் துறையினரால் மதுரையைச் சேர்ந்த ஷண்முகையா என்பவரும் மற்றும் மூவரும் கைது செய்யப் பட்டு, அனைத்துச் சொத்துக்களும் மீட்கப்பட்டன. வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

62. 4-3-1983 அன்று முகவை, கிழக்கு மாவட்டம் காளை யார்கோவில் சரகத்திலுள்ள சின்மங்கலத்தில் சரோஜினி ஆச்சி என்பவர் கொலையுண்டு கிடந்தார். ஒரு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நகைகள் திருடுபோயின. காளையார்கோவில் காவல் நிலையக் குற்ற எண் 27/83-ல் இ. த. ச. 302-392 பிரிவுகளின்கீழ் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. இராமநாத புரம் (கிழக்கு) மாவட்டக் காவல் துறையினர் குற்றம் சாட்டப் பட்ட கருப்பையாவை 27-3-1983 அன்று கைது செய்து, அவரது ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் எல்லாச் சொத்துக்களையும் மீட்டனர். குற்றம் சாட்டப்பட்டவர் நீதிமன்ற விசாரணையில் உள்ளார்.

63. திருப்பத்தூர் (வட ஆற்காடு) புறநகர் காவல் நிலையக் குற்ற எண். 280/83 வழக்கில் 21-11-1983-ஆம் நாள் (1) தினகரனின் மகன் செல்வராஜ், (2) பாலசுப்பிரமணியத்தின் மகன் தேவு என்கிற தேவராஜ் ஆகியோர் கண்ணப்ப செட்டியார் என் பவரைக் கழுத்தை நெரித்துக் கொலை செய்துவிட்டு, அவரது வீட்டிலிருந்து ரூபாய் 70,000 மதிப்புள்ள நகைகளை திருடிச் சென்றதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது. சரியான புலன் விசாரணை மூலம் குற்றம் சாட்டப்பட்டவர்கள் 26-11-1983 அன்று கைது செய்யப்பட்டு எல்லாச் சொத்துக்களும் அன்றே மீட்கப்பட்டன. வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

64. சென்னை நகரில் அமைந்தகரைக் காவல் நிலையக் குற்ற எண் 1124/83 இ.த.ச. 302 மற்றும் 380 பிரிவுகளின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கில், 21-12-1983 ஷெனாய் நகர் எண் 30, கிழக்குப் பூங்கா சாலை இல்லத்தில் லட்சுமிபதி என்பவரின் மனைவி சரஸ்வதி அம்மாளை தா. பி. சத்திரத்தைச் சேர்ந்த மோகன் என்பவர் கொலை செய்துவிட்டு ரூபாய் 20,000 பெறு மானமுள்ள தங்கச் சங்கிலி, வளையல் ஆகியவற்றைத் திருடிச் சென்றதாக வழக்குப் பதிவாகியுள்ளது. குற்றம் சாட்டப்பட்டவர் 22-12-1983 அன்று கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட பொருட்கள் அன்றே மீட்கப்பட்டன. வழக்கு புலன் விசாரணை யில் உள்ளது.

65. உலகம்பட்டி காவல் நிலைய குற்ற எண் 43/80
இ.த.ச. பிரிவு 302.

13-11-1980 அன்று அய்யாவு நாயக்கருக்குச் சொந்தமான. புஞ்சை நிலத்தில் காட்டுக்குடிபட்டியில் ராமச்சந்திர பிள்ளை யின் மனைவி சுமார் 65 வயதான வீராயி அம்மாள் கொலை செய்யப்பட்டு, அவர் அணிந்திருந்த சுமார் 13 சவரன் மதிப்புள்ள நகைகள் காணாமல் போயிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. குற் றப் புலனாய்வுத் துறை விசாரணையை மேற்கொண்டது. வழக்கு தண்டனையில் முடிவுற்றது. 8-8-1983 அன்று குற்றவாளி சடையனுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

2. கொள்ளை.

66. கோயம்புத்தூர் (நகர்புறம்), மாவட்டம் காட்டூர் காவல் நிலைய குற்ற எண் 765/83 வழக்கில் 12-6-1983 அன்று சர வணம்பட்டி பாரதிநகர் 38-ம் எண் வீட்டில் வசிக்கும் ரங்கசாமி யின் வீட்டில் அடையாளம் தெரியாத ஐந்து பேர்கள் பலவந்த மாக நுழைந்து தடிகளால் அவரைத் தாக்கி மண்டையில் ரத்தக் காயம் ஏற்படுத்தி, அவரது மனைவியிடமிருந்து நகைகளைப் பறித்து, இரும்புப் பெட்டியை அலசி ஆராய்ந்து ரூபாய் 1,270 ரொக்கம் உட்பட மொத்தம் ரூபாய் 30,000 மதிப்புள்ள துணி ஆகியவற்றை திருடிச் சென்றனர். வழக்கு விசாரணையின்போது புது டில்லியைச் சேர்ந்த பகதூர்சிங் என்கிற மோகன்லால், பின்னு



மற்றும் 9 பேர் அடங்கிய குழுவினர் கைது செய்யப்பட்டு சொத்துக்கள் 26-7-1983 அன்று மீட்கப்பட்டன. இந்த ஐந்து பேரும் போத்தனூர் காவல் நிலையக் குற்ற எண் 339/83 (கொள்ளை)-யில் சம்பந்தப்பட்டிருந்தனர். அவர்கள்மீது நீதி மன்ற விசாரணை நடைபெற்று வருகிறது.

67. தாம்பரம் காவல் நிலைய குற்ற எண். 838/83 இ.த.ச. 457 மற்றும் 397 பிரிவுகளின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 5/6-11-1983 இரவு இரும்புலியூர் கிராமம், பாலாஜீ நகரில் தடிகள் தாங்கிய 6 நபர்கள் சுவாமிநாதன் என்பவரது வீட்டைத் தாக்கி அவ்வீட்டிலுள்ளோரைக் காயப்படுத்திப் பெண்களிட மிருந்து ரூபாய் 30,000 பெறுமான நகைகளைப் பிடுங்கி சென் றனர். 8/9-11-1983 இரவு பல்லாவரம் காவல் நிலையத்திற்குட் பட்ட பம்மல், சங்கர் நகரில் இதே போன்றதொரு குற்றம் நிகழ்ந்தது. அது பல்லாவரம் காவல் நிலையக் குற்ற எண் 835 முதல் 837/83 வழக்கில் ரூபாய் 20,000 பெறுமானமுள்ள தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள், கைக் கடிகாரம் முதலிய பொருட்கள் வீட்டிலிருந்தவர்களை காயப்படுத்தியபின் கொள்ளையடிக்கப்பட்டன. நகரிலும் அதையடுத்துள்ளப் பகுதி களிலும் பீதி நிலவியது. இதன் தொடர்பாகக் காவல் துறை யினரின் விரைவான அயராத கூட்டுமுயற்சியால் ராஜஸ்தான் மாநில மினா கோஷ்டியைச் சேர்ந்த சுரேந்திரசிங் மற்றும் ராம்சிங் ஆகிய இருவர் கைது செய்யப்பட்டனர். வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

68. செங்கல்பட்டு மாவட்டம் (மேற்கு) திருவள்ளூர் தாலுகா காவல் நிலையக் குற்ற எண் 3/83 இ.த.ச. 396 பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 4-1-1983 அன்று சின்ன ஈக்காடு கிராமத்தில் ஏழுமலை, பாண்டியன், மோகன், முரளி, பாண்டி யன் ஆகியோர் ஒரு வீட்டில் புகுந்து அங்கிருந்தவர்களிடமிருந்து ரூபாய் 30,000 பெறுமான தங்க, வெள்ளிநகைகளைப் பறித்துச் சென்றனர். தீவிர புலன் விசாரணையின் காரணமாக குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் 11-1-1983 அன்று கைது செய்யப் பட்டு ரூபாய் 29,000 மதிப்புள்ள பொருட்கள் அன்றே மீட்கப் பட்டன. வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

69. சென்னை நகர் கிண்டி காவல் நிலையக் குற்ற எண் 208/83-ல் இ.த.ச. 397 பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 14-3-1983 நள்ளிரவில் மூர்த்தி என்பவன் தலைமையில் 10 பேர் கொண்ட கோஷ்டியினர் கிண்டி குதிரைப்பந்தய மைதானத் திலிருந்து ரூபாய் 34,000 மதிப்புள்ள இரும்புத் தகடுகள், கம்பிகள் முதலிய பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றுவிட்டனர். நகர காவல் துறையின் தீவிரப் புலன் விசாரணையின்போது எல்லாக் குற்றவாளிகளும் 20-7-1983 அன்று கைது செய்யப் பட்டு ரூபாய் 2 இலட்சம் பெறுமான சொத்துக்கள் 29-7-1983 அன்று மீட்கப்பட்டன. அம்பத்தூர் எல்லையினுள் நிகழ்ந்த

இதேபோன்ற மேலும் இரு கூட்டுக் கொள்ளைகள் வழக்கிலும் இவர்கள் சம்பந்தப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட அனைவர்மீதும் நீதி மன்ற விசாரணை நடைபெறுகிறது.

### 3. வழிப்பறி.

70. திருநெல்வேலி காவல் துறையினர் வெள்ளூரைச் சேர்ந்த (1) நாகராசன், (2) பாண்டி, (3) ராமமூர்த்தி, (4) முருகேசன் ஆகியோரை 1983 ஜூலை திங்களில் ஸ்ரீவைகுண்டம் காவல் நிலைய எல்லைக்குள் கைது செய்தனர். இக் குற்றவாளிகள் பெட்ரோல் நிலையங்களில் கொள்ளையடித்தது தொடர்பாக கீழ்க்காணும் காவல் நிலைய வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் :—

(1) சாத்தான்குளம் கா.நி.கு. எண் 176/83.

(2) சங்கரன்கோவில் கா.நி.கு. எண். 154/83.

(3) பாளையங்கோட்டை கா.நி.கு. எண் 492/83.

(4) புதுக்கோட்டை கா.நி.கு. எண். 139/83.

(5) ஆறுமுகநேரி கா.நி.கு. எண் 188/83.

சுமார் ரூபாய் 10,000 பெறுமானச் சொத்துக்கள், ரொக்கம், கைக்கடிகாரங்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டன. குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது நீதிமன்ற விசாரணை நடைபெறுகிறது.

71. செங்கல்பட்டு தாலுகா காவல் நிலைய குற்ற எண் 299/83வழக்கில் 29-10-1983 அன்று சென்னை-திருச்சி நெடுஞ்சாலையில் பரனூர் பாலம் அருகில் 10,000 கிலோ கிராம் பாமாயில் ஏற்றிச் சென்ற டி.எம்.ஐ. 4343 என்ற எண்ணெய் லாரியை அடையாளம் தெரியாத 4 குற்றவாளிகள் கத்தியைக் காட்டி கடத்திச் சென்றனர். அவர்கள் ரூபாய் 2,30,000 மதிப்புள்ள பாமாயில் எண்ணெயை அகற்றி விட்டனர். செங்கல்பட்டு மாவட்ட காவல் துறையின் தனிக் குழுவினரின் அயராத புலன் விசாரணையின் காரணமாக அரிபால கிருஷ்ணன் என்பவரையும், அவரது கூட்டாளிகளான பொன்னுரங்கம், ஏசு மற்றும் குட்டன் ஆகியோரை 21-11-1983 அன்று கைது செய்து, ரூபாய்1,22,000 மதிப்புள்ள பாமாலின் எண்ணெயை அன்றே கைப்பற்றினர். மேற்படி லாரி காஞ்சிபுரம் அருகில் கைவிடப்பட்டிருந்தது காணப்பட்டது. வழக்கு விசாரணையில் உள்ளது.

72. தஞ்சாவூர் (கிழக்கு) மாவட்டம் மயிலாடு துறைகா நி.கு. எண் 242/83 இ.த.ச. 392 பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 15-4-1983 அன்று உள்ளூர் பழைய குற்றவாளி முழியன் என்கிற ராசேந்திரன், வடக்கு ராமலிங்கம் தெருவில் உள்ள ஒரு



வீட்டின் முன்வாசல் வழியாகப் புகுந்து அவ் வீட்டுப் பெண்மணியிடம் கத்தியைக் காட்டி மிரட்டி அவரிடமிருந்து ரூபாய் 20,000 பெருமான தங்க நகைகளைப் பறித்துக் கொண்டு ஓடி விட்டதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்ட இவர் கைது செய்யப்பட்டு, சொத்துக்களும் மீட்கப்பட்டன. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

73. ராமேஸ்வரம் ரயில்வே காவல் நிலையக் குற்ற எண் 593/83 வழக்கில் 17-9-1983 அன்று பகல் சுமார் 11-30 மணியளவில் மேற்கு மண்டபம் முகாம் ரயில் நிலையத்தில் நின்றிருந்த எண். 770 புகைவண்டியில் பயணம் செய்து கொண்டிருந்த தங்கையா என்பவரிடமிருந்து பொன்னுசாமி, ராமச்சந்திரன், சேது ஆகியோர் ரூபாய் 20,000 மதிப்புள்ள தொலைக்காட்சிப் பெட்டி, ரூபாய் 500 மதிப்புள்ள துணிகள் அடங்கியப் பெட்டி ஆகியவற்றை வழிப்பறி செய்தனர் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. புலன் விசாரணையின்போது, ரயில்வே போலீசார் குற்றம் சாட்டப்பட்டவர்களைக் கைது செய்து பொருட்களை மீட்டனர். வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

74. தருமபுரி மாவட்டம் பாலக்கோடு காவல் நிலைய, எல்லைக்குட்பட்ட பாலக்கோடு மந்திரி கவுண்டர் தெருவில் 9-5-1983 அன்று பெதமனேரியை சேர்ந்த விஸ்வம் என்கின்ற விஸ்வநாதன் வீடு புகுந்து ஜகஸ்ஸ்வரி என்கிற பெண்மணியிடம் கத்தியைக் காண்பித்து அச்சுறுத்தி ரூபாய் 13,000 பெறுமானமுள்ள நகைகளைத் திருடிச் சென்றுவிட்டார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்ட இவர் கைது செய்யப்பட்டு களவு போனப் பொருட்களும் மீட்கப்பட்டது. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

### 4. வீடு புகுந்து களவாடுதல்.

75. திருச்சிராப்பள்ளி மாவட்டம் சிறுகானூர் காவல் நிலையம் கரியமாணிக்கம் விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தில், கரியமாணிக்கத்தைச் சார்ந்த கோபால் என்பவர் 2-7-1983 அன்று சங்கத்தில் பூட்டை உடைத்து அங்கு வைக்கப்பட்டிருந்த ரூபாய் 5,12,000 பெறுமானமுள்ள தங்க நகைகள் மற்றும் பணத்தைக் களவாடியதால் சிறுகானூர் காவல் நிலையக் குற்ற எண் 81/83-ல் வழக்கு பதியப்பட்டு குற்றம் சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்டுக் களவு போன சொத்துக்கள் மீட்கப்பட்டன. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

76. 4—11—1983 அன்று கோயம்புத்தூர் மாவட்டம் கோவை பி-1, கடை வீதி காவல் நிலைய எல்லையில் உள்ள என். எச். சாலை இராஜா திரையரங்கத்திற்கு அருகிலுள்ள ஜனசகாயம் வங்கியில், ஆறுமுகம், மணி, ரங்கசாமி, செல்வன்

மற்றும் பாபு ஆகியோர் முன்வாயிற்கதவிலிருந்த பூட்டுகளை உடைத்து உட்புகுந்து ரூபாய் 1,40,000 பெறுமானமுள்ள தங்க நகைகளைத் திருடினர். மேற்படி காவல் நிலையத்தில் குற்ற எண். 2051/83-ல் இ.த.ச. 457 மற்றும் 380-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்றவாளிகள் அனைவரும் 15—11—83 மற்றும் 20—11—1983 ஆம் தேதிகளில் கைது செய்யப்பட்டு மொத்தச் சொத்துக்களும் கைப்பற்றப்பட்டன. வழக்கு நீதி மன்ற விசாரணையில் உள்ளது.

77. தருமபுரியில் வீடு புகுந்து திருடிய 17 சம்பவங்கள் மற்றும் ஏழு பெரிய திருட்டுகள் ஆகியவற்றில் சம்பந்தப் பட்ட தருமபுரி பழையக் குற்றவாளி இன்னெசியப்பன் மற்றும் அவனது நான்கு கூட்டாளிகளையும் தருமபுரிக் காவல் நிலை யத்தினர் கைது செய்து ரூபாய் 29,165 பெறுமானமுள்ள சொத்துக்கள் கைப்பற்றப்பட்டன. வழக்கானது நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

78. 19—11—1983 அன்று திருநெல்வேலி மாவட்டம் (மேற்கு) இடிந்தகரை கிராமத்தில் உள்ள இடிந்தகரை பாண்டியன் கிராம வங்கியில் மேற்படி கிராமத்தைச்சார்ந்த ரவி மற்றும் முகம்மது அலி ஜின்னா இருவரும் பூட்டை உடைத்து உட்புகுந்து 60 சவரன் எடை உள்ள தங்க நகை கள் மற்றும் ரொக்கம் ரூபாய் 27,000 ஆக மொத்தம் ரூபாய் 79,962 பெறுமானமுள்ளவற்றை திருடினர் என்று புகார் செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக இராதாபுரம் காவல் நிலையக் குற்ற எண். 284/83-ல் இ.த.ச. பிரிவுகள் 457 மற்றும் 380 ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்து காவல் துறைக்குக் கிடைத்த ஒரு தகவலின் பேரில் திரு நெல்வேலி காவல் துறையினர் குற்றம் சாட்டப்பட்டவர் களைக் கைது செய்து களவாடப்பட்ட சொத்துக்களைக் கைப் பற்றினர். வழக்கு விசாரணையில் உள்ளது.

79. புதுக்கோட்டை மாவட்டம் வலையப்பட்டி கிராமத்தில் 26—4—1983க்கும் 4—5—1983க்கும் இடையில், உள்ளூர் முன்னாள் கைதி பழனியப்பன் மற்றும் முருகப்பன் இருவரும் வீட்டின் ஜன்னல் கம்பிகளை வளைத்து உட்புகுந்து தங்க நகைகள், வெள்ளி பாத்திரங்கள், பட்டுப்புடவைகள், ரொக் கம் ரூபாய் 300 ஆக மொத்தம் ரூபாய் 55,000 பெறுமான முள்ள சொத்துக்களைத் திருடினர் என்று புகார் வந்துள்ளது. பொன்னமராவதி காவல் நிலையக் குற்ற எண். 176/83 இ.த.ச. 457 மற்றும் 380 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப் பட்டு, தீவிர விசாரணைக்குப் பின்னர் குற்றம் சாட்டப் பட்டவர்கள் கைது செய்யப்பட்டுக் களவுபோன சொத்துக்கள் கைப்பற்றப்பட்டன. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.



80. வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணாமலை நகரில் 13—1—1983 அன்று இரவு மேலச்சேரி கிராமத்தைச் சார்ந்த பழைய குற்றவாளி ஜெயபால் என்பவர் கள்ளச் சாவியை உபயோகித்து ஒருவரின் வீட்டிற்குள் புகுந்து தங்க நகைகள் மற்றும் வெள்ளிப் பாத்திரங்கள் ஆக ரூபாய் 95,000 பெறு மானமுள்ள சொத்துக்களைக் களவாடினார். இது சம்பந்த மாக திருவண்ணாமலை காவல் நிலையக் குற்ற எண். 13/83 -ல் இ.த.ச. 457 மற்றும் 380-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப் பட்டு விசாரணைக்குப்பின்னர் குற்றவாளி கைது செய்யப் பட்டுக் களவு போன பொருட்கள் மீட்கப் பட்டன. வழக்கு தண்டனையில் முடிவடைந்தது.

81. 29—3—1983 அன்று பெரியார் மாவட்டம் தொப்பம் பட்டி கிராமத்தில் செல்வராஜ் என்ற குற்றவாளி வீடுபுகுந்து ரூபாய் 50,000 பெறுமானமுள்ள நகைகளைத் திருடினார். குண்டடம் காவல் நிலைய குற்ற எண். 34/83-ல் இ.த.ச. 457 மற்றும் 380 பிரிவுகளின் கீழ் வழக்கொன்று பதிவு செய்யப் பட்டு தீவிர விசாரணைக்குப் பின்னர் குற்றவாளி 30—6—83 அன்று கைது செய்யப்பட்டுக் களவாடப்பட்டச் சொத்துக்கள் அனைத்தும் அன்றே கைப்பற்றப்பட்டன. வழக்கு தண் டனையில் முடிந்தது.

82. கோயம்புத்தூர் (புறநகர்) மாவட்டம் மேட்டுப் பாளையம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சிறுமுகை கிராமத்தருகில் உள்ள சவுத் இந்தியா விஸ்கோஸ் நிறுவனத் திற்குச் சொந்தமான மோட்டார் டயர்கள், செம்பு மற்றும் பித்தளைச் சாமான்கள் ஆக மொத்தம் ரூபாய் 2,15,340 பெறுமானமுள்ள சொத்துக்களை முருகையன் மற்றும் 18 பேர் சேர்ந்து கொள்ளை அடித்தனர். இது சம்பந்தமாக மேற் படி காவல் நிலையத்தில் குற்ற எண் 107/83-ல் இ.த.ச. 457 மற்றும் 380-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசார ணைக்குப் பின்னர் குற்றம் சாட்டப்பட்டவர்கள் கைது செய் யப்பட்டு 1—6—1983 மற்றும் 14—6—1983 ஆகிய தேதி களில் களவாடப்பட்டப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன. வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

83. 1—4—1983 அன்று இரவு சென்னை மைலாப்பூர் முத்துகிருஷ்ண முதலித் தெரு இலக்கம் 3-ல் சோலையப்பன் என்பவருக்கு சொந்தமான தங்க நகைகள் ரூபாய் 1,00,000 பெறுமானமுள்ளவற்றை அடையாளம் தெரியாத சிலர் திருடி னர். மைலாப்பூர் காவல் நிலைய குற்ற எண். 759/83-ல் இ.த.ச. 457 மற்றும் 380 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய் யப்பட்டது. நகர காவல் துறையினர் குமார் என்கிற தங்கம் என்பவரை 15—4—1983 அன்று கைது செய்து களவாடப்பட்ட அனைத்துச் சொத்துக்களையும் கைப்பற்றினார். வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

5. சிலைத் திருட்டுகள்.

84. அண்ணாமலை நகர் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட குமாரமங்கலம் கிராமத்தில் உள்ள விஸ்வநாதர் கோவிலின் பூட்டை உடைத்து 11—9—1983 அன்று சிதம்பரம் நாகநாத ஐயர் என்பவர் மூன்று பஞ்சலோக சிலைகள் மற்றும் ஒரு பித்தளை குத்து விளக்கு மொத்தம் ரூபாய் 1,00,000 பெறுமான முள்ளவற்றைத் திருடினார் என்று வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அண்ணாமலை நகர் காவல் நிலைய (தென்னாற்காடு மாவட்டம்) குற்ற எண். 169/83-ல் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணைக்குப் பின்னர் குற்றம் சாட்டப்பட்டவர் 14—9—83 அன்று கைது செய்யப்பட்டுக் களவுபோனப் பொருட்கள் அன்றே மீட்கப்பட்டன. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

85. வட ஆற்காடு மாவட்ட ஆரணி ஊரகக் காவல் நிலை நிலைய குற்ற எண். 27/83-ல் கணிகிறுப்பை கிராமத்தில் உள்ளூர் குற்றவாளி சாரங்கன் என்பவர் ரூபாய் 50,000 மதிப்புள்ள தெய்வானை சிலையினை 2—3—1983 அன்று திருடினார். குற்றவாளி கைது செய்யப்பட்டு சிலை மீட்கப்பட்டது. வழக்கு தண்டனையில் முடிந்தது.

86. தஞ்சை கிழக்கு மாவட்டம் பெரம்பூர் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட கப்பூர் கிராமத்தில் உள்ள ஸ்ரீவேத நாராயணப் பெருமாள் கோவிலில் முன்பின் தெரியாத குற்றவாளிகள் சிலர் சுவரேறிக் குதித்து 31—8—1983 அன்று கோவிலில் பூட்டை உடைத்து ரூபாய் 1,00,000 பெறுமானமுள்ள விலை உயர்ந்த ஏழு பஞ்சலோக சிலைகளைத் திருடினர். பெரம்பூர் காவல் நிலைய குற்ற எண். 130/83-ல் வழக்கு பதியப்பட்டு கைரேகை நிபுணர்களின் தீவிர ஆய்வினால் கிடைத்த ரேகை அடையாளங்களைக் கொண்டு மேற்படி பெரம்பூரைச் சார்ந்த முன்னாள் குற்றவாளி சின்னப்பாவின் கைரேகைகளுடன் ஒத்திருந்ததை அடுத்து அவர் கைது செய்யப்பட்டு, அனைத்துப் பொருட்களும் கைப்பற்றப்பட்டன. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

6. திருட்டு.

87. மதுரை (வடக்கு) மாவட்டம், போடிநாயக்கனூர் இந்திய சென்ட்ரல் வங்கியில் 3—5—1983 அன்று காலை 11-00 மணி அளவில் பாண்டியன் சேர்வையின் மகன் வாக, திருச்சி ராம்ஜி நகரைச் சார்ந்த இராஜேந்திரன் ஆகிய இருவரும் ரூபாய் 1 இலட்சம் ரொக்கத்தைத் திருடினர் என்று புகார் செய்யப்பட்டுள்ளது. போடி நகர காவல் நிலைய குற்ற எண் 127/83-ல் வழக்கு பதியப்பட்டு, காவல் துறையினரின் துரிதமான நடவடிக்கைக்குப்பின் குற்றம் சாட்டப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு ரூபாய் 66,000 தொகை கைப்பற்றப்பட்டது. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.



88. 1—7—1983 அன்று கோயம்புத்தூர் (புறநகர்) மாவட்டம், இடையர் தெருவில், நல்லைய சேர்வையின் மகன் பழைய குற்றவாளி துரை மற்றும் திருச்சி இராம்ஜி நகர் பாலுசாமியின் மகன் முத்து ஆகிய இருவரும் சேர்ந்து ரூபாய் 97,000 தொகையுடன் கூடிய ஒரு வி.ஐ.பி. கைப்பெட்டியைக் களவாடினர். குற்றம் சாட்டப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு ரூபாய் 80,020 தொகை கைப்பற்றப்பட்டது. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

89. ஈரோடு நகர பாரத ஸ்டேட் வங்கியில் 29—9—1983 அன்று ஒரு வாடிக்கையாளரின் கவனத்தைத் திருப்பி, திருச்சி ராம்ஜி நகர் முனியனின் மகன் முருகன் என்பவர் ரூபாய் 1,57,425 தொகையைத் திருடினார் என்று வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. விசாரணையின் போது குற்றவாளி கைது செய்யப்பட்டு அவனிடமிருந்து ரூ. 1,00,200 தொகை கைப்பற்றப்பட்டது. வழக்கு தண்டனையில் முடிந்தது.

புலனாய்வுத் துறை, குற்றப்பிரிவின் குறிப்பிடத்தக்க சில பணிகள் பற்றிய குறிப்பு.

90. கன்னியாகுமரி மாவட்டம், திருவிதாங்கோடு, செயின்ட் மேரிஸ் மாதா கோயிலின் முன்னாள் பாதிரியார் கே. ஜி. வர்கீஸ் என்பவர் எண்ணெய் வளநாடுகளில் வேலை வாங்கித் தருவதாக தமிழகத்திலும் கேரள மாநிலத்திலும் பல்வேறு நபர்களிடம் மொத்தம் ரூபாய் 2 இலட்சம் வாங்கிக் கொண்டு ஏமாற்றிய 18 வழக்குகளில் சம்மந்தப்பட்டிருந்தார். (புலனாய்வுத் துறை, குற்றப் பிரிவு குற்ற எண். 5/78 இ.த.ச. பிரிவு 420) இவர் 1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களிலிருந்து தலைமறைவாக இருந்து வந்தார். அண்மையில் புதுடில்லிக்கு அனுப்பப்பட்ட குற்றப் பிரிவுக் குழுவினரால் இவர் டெல்லியில் கைது செய்யப்பட்டார். இவர் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டு, 8 பிரிவுகளின் கீழ் ஒவ்வொன்றிலும் தலா மூன்று ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்.

சென்னை நகர் டி-2 அண்ணா சாலை காவல் நிலையக் குற்ற எண். 1802/83 மற்றும் 2 வழக்குகள்.

91. பழைய குற்றவாளிகள், (1) ஆறுமுகம், (2) ரவி, (3) மாரிமுத்து, (4) சுப்பிரமணியம் மற்றும் (5) திருவெறும்பூர் காந்தி நகரைச் சார்ந்த கிருஷ்ணமூர்த்தி ஆகியவர்கள் அடங்கிய ஒரு கொள்ளைக் கூட்டத்தை 26-10-1983 மற்றும் 3-11-1983 தேதிகளில் கைது செய்து ரூபாய் 89,500 தொகையைக் கைப்பற்றினர். இத் தொகையை இக் கொள்ளைக் கூட்டம், சென்னை அண்ணா சாலை, தாம்பரம், திருச்சி, ஈரோடு, சிதம்பரம், கடலூர், நாமக்கல் ஆகிய இடங்களில் ஜூலை, செப்டம்பர் 1983-ல் வங்கிகளில் பணம் கட்டும் இடங்களில் நிற்பவர்களை ஏமாற்றிக்

கொள்ளை அடித்தனர். குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் குற்றவாளிகள் எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டு, ஒரு ஆண்டு காலக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டனர்.

சென்னை நகர யானை கவுனி காவல் நிலைய குற்ற எண் 114/83.

92. குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையினரால் திருவெறும்பூரில் இருந்த கொள்ளைக் கூட்டத்தில் ஒருவரான பாலகிருஷ்ணன் என்பவர் 28-9-1983 அன்று ரொக்கம் ரூபாய் 25,000வுடன் கைது செய்யப்பட்டார். இத் தொகையானது நகரில், வங்கி பணம் செலுத்துமிடத்தில் 12-9-1983 அன்று களவாடப்பட்டதாகும். பால்கிருஷ்ணன் குற்றவாளி எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டு 6 மாத காலத்திற்கு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்.

சீர்காழி காவல் நிலையக் குற்ற எண். 63/81 இ.த.ச. 252 மற்றும் 380 பிரிவுகள்.

93. 3-3-1981 அன்று, தஞ்சை மாவட்டம் வைத்தீஸ்வரன் கோவிலில் கோவிலுக்குச் சொந்தமான சுமார் 423 சவரன் எடையுள்ள ரூபாய் 6 இலட்சம் மதிப்பிடத்தக்க தங்க நகைகள் களவாடப்பட்டதாக புகார் செய்யப்பட்டது. இதனை அடுத்து சீர்காழி காவல் நிலையத்தின் குற்ற எண். 63/81-ல் இ.த.ச. பிரிவுகள் 454 மற்றும் 380 ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளூர் காவலரால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பின்னர் இக்குற்ற வழக்கானது குற்றப் பிரிவு, குற்றப் புலானய்வுத் துறையினரால் எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்வழக்கினை துப்புத் துலக்க விசேஷ குழு ஒன்று அமைக்கப்பட்டது. சில தடயங்கள் கிடைத்ததை அடுத்து, திருவாரூருக்கு அருகிலுள்ள குழிக்கரையைச் சேர்ந்த கலியபெருமாள், வயது 30 என்பவர் 9-10-1983 அன்று தஞ்சையில் கைது செய்யப்பட்டார். மேலும் காவலரின் தீவிர விசாரணை, மற்றும் கைது செய்யப்பட்ட குற்றவாளி கொடுத்த தகவலையும் அடுத்து, ரூபாய் 4.5 இலட்சம் பெறுமான 275.3 சவரன் எடையுள்ள திருடப்பட்ட தங்க நகைகள் பல்வேறு நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன. மேலும் இதே குற்றவாளி, 29-4-1983-ல் திருப்பனந்தாள் கோவில் ஒன்றில் நடந்த திருட்டுக்கும் பொறுப்பானவர் என்றும் அறியப்பட்டது. இறுதியில் இக் குற்றவாளி இரண்டாண்டு காலம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்.

கும்பகோணம் வடக்கு காவல் நிலையக் குற்ற எண் 215/83 கு.வி.மு. சட்டப்பிரிவு 174ன் கீழ் முதலில் பதியப்பட்டு பின் இ.த.ச. பிரிவுகள் 302, 201 மற்றும் 203க்கு மாற்றப்பட்டது.

94. 30-8-1982 அன்று கும்பகோணம் சுகுமாரன் என்பவரின் மனைவி அழகுமீனா (எ) மீனா (வயது 22)வின் மாமனாரான வி. பி. ரங்கநாத ஆசாரி என்பவர் தமது மருமகள் அழகு



மீனா மண்ணெண்ணையை தன் மேல் ஊற்றிக் கொண்டு தற்கொலை செய்து கொண்டதாக கும்பகோணம் வடக்கு காவல் நிலையத்தில் பொய்யான புகார் மனுவினைக் கொடுத்தார். இவ்வழக்கினை குற்றப் பிரிவின் குற்ற புலனாய்வுத் துறையினர் எடுத்துக் கொண்டனர். விசாரணையின் பொழுது, அவளது கணவன் சுகுமாரனே அவள் மீது மண்ணெண்ணையை ஊற்றித் தீ வைத்ததாகவும், அவளது மாமானார் சாட்சியங்களை மறைத்ததாகவும் அவள் இறப்பதற்கு அனுசரணையாக இருந்ததாகவும், பின்னர் அவர் காவல் நிலையத்தில் தனது மருமகள் தற்கொலை செய்து கொண்டதாக பொய்யான புகாரைக் கொடுத்ததாகவும் தெரிய வந்தது. சுகுமாரன் குற்றவாளி எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டார். ரங்கநாத ஆசாரியும் குற்றவாளி எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டு மூன்று ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்.

தக்கலை காவல் நிலைய குற்ற எண் 67/81ல் இ.த.ச. 457மற்றும் 380, தக்கலை காவல் நிலையக் குற்ற எண் 191/81ல் இ.த.ச. 302 பிரிவு.

95. 19-2-1981 அன்று முன் பின் தெரியாத நபர் ஒருவர் தக்கலை காவல் நிலையத்திற்குட்பட்ட குமரன் கோவிலில் உள்ள ஸ்ரீ முருகன் கோவிலின் உட்புகுந்து ரூபாய் ஒரு இலட்சம் மதிப்பு உள்ள அம்மன் சிலையைத் திருட முயற்சித்தான். ஆனால் குற்றவாளி, யாரோ குரல் கொடுத்ததைக் கேட்டதும் சிலையை அப்படியே விட்டு விட்டு ஓடி விட்டான். பிறகு அதே கோவிலில் 10-5-1981 அன்று இரவு கோவிலின் காவல்காரர் சாஸ்தா பிள்ளை என்பவர் கொலை செய்யப்பட்டதாகவும் நல்லபெருமாள் பிள்ளை என்பவர் கத்தியால் தாக்கப்பட்டு காயமுற்றதாகவும் புகார் செய்யப்பட்டது. இவ் வழக்குகளின் விசாரணையை மாநில குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினர் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டனர். தீவிர விசாரணைக்குப் பிறகு இவ் வழக்கு சம்மந்தமாக திருவனந்தபுரத்தைச் சார்ந்த ஸ்டீபன் என்பவர் 29-7-81 அன்று கைது செய்யப்பட்டார், இவரே மேற்படி கோவிலில் சிலையை திருட முயற்சித்தார் என்றும் கண்டு பிடிக்கப்பட்டது. இவர் இறுதியில் சிலைத் திருட்டு வழக்கில் குற்றவாளி என தீர்ப்பு அளிக்கப்பட்டு 3 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். மற்றும் கொலைக் குற்றத்திற்கென ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டார்.

காங்கேயம் காவல் நிலையக் குற்ற எண் 187/81 இ.த.ச. 289 பி மற்றும் சி.

96. கள்ள நூறு ரூபாய் நோட்டுக்களை வைத்திருந்து புழக்கத்தில் நடமாட விட்டதாக, சாமியப்பன் மற்றும் பொன்னுசாமி இருவரும் சம்மந்தப்பட்ட குற்ற வழக்காகும் இது. பெரியார் மாவட்டத்தில் பதியப்பட்ட இவ் வழக்கானது தீவிர விசாரணைக்

கென குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையினரால் எடுத்துக் கொள்ளப்பட்டது. தீவிர விசாரணைக்குப் பின்னர், குற்றவாளிகள் மீது குற்றப் பத்திரிக்கைத் தாக்கல் செய்யப்பட்டு, இறுதியில் 3 ஆண்டு காலம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டனர்.

**குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத்துறை குற்ற எண் 91/83, இ.த.ச. 120 பி மற்றும் இ.த.ச. 489பி மற்றும் சி பிரிவுகளுடன் இணைந்து படிக்கப்பட்டது.**

97. குற்றப் பிரிவின் வழக்கு எண். 54/83-ல் பதிவு செய்யப்பட்ட ஒரு மோசடி வழக்கு சம்மந்தமாக கே. என். பெரியசாமி (சேலம்) மற்றும் அவரது சகாக்கள் ஐவர் 10-12-1983 அன்று குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டனர். ரூபாய் 1,27,910 மதிப்புள்ள கள்ள நூறு ரூபாய் நோட்டுகள் மற்றும் கள்ள 20 ரூபாய் நோட்டுகள் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன. வழக்கு புலனாய்வில் உள்ளது.

**குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை குற்ற எண் 2/83 இ.த.ச. 120 பி மற்றும் 420 வுடன் இணைக்கப்பட்டது.**

98. அண்ணா, நகர் நூர்முகமது என்பவரின் மகன் ரஃபி (எ) பாபு, வெளிநாட்டுத் தங்கத்தை குறைந்த விலையில் கொடுப்பதாகச் சொல்லி, திட்டமிட்டு பலரை நவீன முறையில் ஏமாற்றி மோசடி செய்ததாகவும், மற்றும் வழிப்பறி செய்தும் வந்த ஒரு பெரும் கூட்டத்தைக் குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையினர் கண்டு பிடித்தனர். இந்த ஏமாற்று வித்தையில் தங்கத்தைக் கொடுத்து பணத்தை வாங்கிக் கொள்ளும் நேரம் பார்த்து இக் கும்பலைச் சார்ந்த ஒரு சிலர், சுங்க இலாகா அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள் போல அவ்விடத்திற்கு வந்து மிரட்டி வலுக்கட்டாயமாக பணத்தையும் தங்கத்தையும் கைப்பற்றினர். இது சம்பந்தமாக 35 குற்றவாளிகள், இரு காவலர்கள், வேலை நீக்கம் செய்யப்பட்ட 2 காவலர்கள் மற்றும் ஒரு மத்திய வருமான வரி அதிகாரி ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மொத்தமாக ஏமாற்றியது சுமார் ரூ. 7 இலட்சமாகும். இக்கூட்டத்தின் தலைவர் ரஃபி என்பவர் தமிழ் நாடு குண்டர்கள் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டார். இக் குற்றவாளிகள் மேலும் இது போன்ற 12 ஏமாற்று மோசடிக் குற்றங்களைச் செய்துள்ளனர். அனைத்து வழக்குகளும் புலனாய்வில் இருந்து வருகிறது.

**மீன்சுருட்டி காவல் நிலையக் குற்ற எண் 125/83 இ.த.ச. 302 வது பிரிவு.**

99. திருச்சி மாவட்டம், கவட்டேரி கிராமத்தைச் சேர்ந்த கலியமூர்த்தி என்பவர் அவரது வைப்பாட்டியாக இருந்த இளையபெருமாள் நல்லூரைச் சேர்ந்த கலிங்கராணி என்பவரை



தன்னை மனைவியாக்கிக் கொள்ளும்படி அடிக்கடி தொந்தரவு செய்தார் என்பதற்காக, கொலை செய்து விட்டார். அன்றிரவே சம்பவம் நிகழ்ந்த இடத்திலிருந்து சடலத்தை அப்புறப்படுத்தி, தனது கூட்டாளிகளின் உதவியோடு ஒரு இடத்தில் புதைத்து விட்டார். சாட்சியங்களை மறைப்பதற்காக ஒரு வார காலத்திற்குள் புதைக்கப்பட்ட சடலம் இரண்டு வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டு, பின்னர் அது சவுக்குத் தோப்புக்கு எடுத்துச் செல்லப்பட்டு எரிக்கப்பட்டது. அரசின் ஆணைப்படி குற்றப் பிரிவு குற்றப் புலானய்வுத் துறையினர் புலன் விசாரணையை மேற்கொண்டனர். முறையான இடைவிடாத முயற்சியுடன் நடத்தப்பட்ட புலன் விசாரணைக்குப் பின்னர் கலியமூர்த்தியும் மற்றும் 5 பேரும் கைது செய்யப்பட்டு, அரிவாள், எலும்புகள் மற்றும் குற்றத் தடயப் பொருட்களும் கைப்பற்றப்பட்டன. இது சம்பந்தமாகக் குற்றப் பிரிவு, குற்றப் புலானாய்வுத் துறையினரால் 8-1-1983 அன்று ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**விழுப்புர நகர காவல் நிலையக் குற்ற எண் 1112/78 இ.த.ச. 147, 302 மற்றும் பல பிரிவுகள்.**

100. 1978 ஆம் ஆண்டு விழுப்புரத்தில் ஆதி திராவிடர்களுக்கும் சாதி இந்துக்களுக்கும் இடையே நிகழ்ந்த வகுப்புக் கலவரத்தின்போது, 25-7-1978 அன்று வி. மருதூர் கிராமத்தில் குளம் ஒன்றில் 9 ஆதி திராவிடர்களின் சடலங்கள் காணப்பட்டன. குற்றப் பிரிவு, குற்றப் புலானய்வுத் துறையினர் புலன் விசாரணையை மேற்கொண்டனர். புத்திசாலித்தனமாக சலியாத உழைப்புடன் நடத்தப்பட்ட புலன் விசாரணையின் காரணமாக 41 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 4 பேர் ''அப்ருவர்களாக'' எடுத்துக் கொள்ளப்பட்டனர். கடலூர் கூடுதல் செஷன்ஸ் நீதிபதி குற்றவாளிகளில் மூவருக்கு மரண தண்டனையும், 27 பேர்களுக்கு ஆயுள் தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார்.

**சிலைத்திருட்டு வழக்குகள்.**

**குத்தாலம் காவல் நிலையக் குற்ற எண் 46/78.**

101. தஞ்சை (கிழக்கு) மாவட்டம், குத்தாலம் காவல் நிலையக் குற்ற எண் 46/78 வழக்கில் சம்பந்தப்பட்ட நடராசர் சிலை, தமிழக காவல் துறை குற்றப் பிரிவினரால் 1982 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் டல்லாசில் உள்ள கிம்பெல் கலைப் பொருள் அருங் காட்சியகத்தில் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இப்போது மேற்படி கிம்பெல் கலைப் பொருள் அருங் காட்சியகம், அந்தச் சிலையை எவ்வித நிபந்தனையுமின்றி, இலவசமாகத் திருப்பித் தர சம்மதித்துள்ளது. இதன் தொடர்பாக மைய அரசின் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

102. தமிழ்நாடு காவல் துறைக் குற்றப் புலனய்வுப் பிரிவினர் கொடுத்தத் தகவலின்பேரில், இங்கிலாந்தில் உள்ள ஸ்காட்லாந்து யார்டு காவல் துறையினர் 1982 ஆம் ஆண்டு, லண்டனில் உள்ள இந்திய கடத்தல்காரரான எல்.பி. கொரோரியா என்பவரது வீட்டை திடீர் சோதனையிட்டு நரசிங்கம்பேட்டை காவல் நிலைய குற்ற எண் 226/77 வழக்கொன்றில் சம்பந்தப்பட்ட நடராசர் சிலை, விக்ரமங்கலம் காவல் நிலைய வழக்கொன்றில் சம்பந்தப்பட்ட நடராசர் சிலை, சந்திரசேகர் சிலை, பிரதோஷ நாயகர் மற்றும் அம்மன் சிலைகள் ஆகியவற்றையும் மற்றும் 36 கலைப் பொருட்களையும் கைப்பற்றினர். இவ்வழக்கு இன்னும் ஸ்காட்லாந்து யார்டு போலீசாரின் விசாரணையில் உள்ளது.

103. தமிழ்நாடு காவல் துறையின் குற்றப் பிரிவு குற்றப் புலனய்வுத் துறை அளித்தத் தகவலின் பேரில், ஸ்காட்லாந்து யார்டு அதிகாரிகள் லண்டனில் உள்ள இதேந்திர ராவல் என்பவரின் இல்லத்திலிருந்து, தஞ்சை மாவட்டம், செம்பனார் கோவில் காவல் நிலைய குற்ற எண் 141/79 வழக்கொன்றில் சம்பந்தப்பட்ட வள்ளி, தெய்வானை மற்றும் ஒரு வள்ளி சாமி சிலைகளையும், 237 இந்திய கலைப் பொருட்களையும் கைப்பற்றினர். காவல் துறை குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வு துணைத் தலைவர் அக் கோயிலின் அர்ச்சகரான முத்தையாக் குருக்களை அங்கு அழைத்துச் சென்று அந்தச் சிலைகளை அடையாளம் காட்டச் செய்தார். அவர் லண்டனில் பழைய பெய்லி நீதிமன்றத்தில் சாட்சியமும் அளித்தார். அந்தச் சிலைகளை இந்தியாவுக்குத் திருப்பிக்கொண்டு வர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

104. தஞ்சை (மேற்கு) மாவட்டம், கொரடாச்சேரி காவல் நிலைய குற்ற எண் 323/76-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கொன்றில் திருடுபோன நடராசர் சிலை ஒன்று அமெரிக்காவில் உள்ள ''பம்பர் கார்ப்பரேஷனி''லிருந்து உலோக நோயிலிருந்து பாதுகாக்க லண்டனுக்கு அனுப்பப்பட்டபோது ஸ்காட்லாந்து யார்டு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டது. லண்டனில் உள்ள நீதிமன்றத்தில் இச் சிலையை திருப்பிக் கொணர வழக்கொன்று தொடுக்கப்பட்டுள்ளது.

ஆற்றுப்பிரிவு, குற்றப் புலனாய்வுத்துறை குற்ற எண் 2?/82.

105. தொன்மை வாய்ந்த மதிப்பு மிக்க நான்கு சிலைகள், குற்றப் புலனாய்வுத் துறை, குற்றப் பிரிவினரால் 19 மற்றும் 22-7-1982 தேதிகளில் கைப்பற்றப்பட்டன. சாமிக்கண்ணு, நண்ணப்ப படையாச்சி, ராமச்சந்திரன், சானகிராமன் ஆகிய 4 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். தென் ஆற்காடு மாவட்டம், வேப்பூர் காவல் நிலைய எல்லைக்



குட்பட்ட புடையூர் கோயிலிலிருந்து அச் சிலைகள் களவாடப்பட்டவை. மூன்று குற்றவாளிகளுக்கு 29-11-1983 அன்று இரண்டாண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

திருக்கழுக்குன்றம் காவல் நிலைய குற்ற எண் 194/81 இ.த.ச பிரிவுகள் 457 மற்றும் 380.

106. 25-7-1981 அன்றிரவு திருக்கழுக்குன்றம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வள்ளிபுரம் கிராமத்திலுள்ள ஸ்ரீகண்டேஸ்வரர் ஆலயத்தில் மாரியம்மன், செல்லியம்மன், நடராஜர் மற்றும் சுந்தரமூர்த்தி நாயனார் ஆகிய கடவுள்களின் சிலைகள் திருடப்பட்டன. குற்றப் பிரிவுக் குற்றப் புலனாய்வுத் துறையினரின் தீவிர முயற்சியால் 5-8-1983 அன்று குற்றம் சாட்டப்பட்ட ஏழுமலை என்கிறப் பூக்கார ஏழுமலை மற்றும் வாலாஜாபாத்தைச் சேர்ந்த அயூப் ஆகியோர் கைது செய்யப்பட்டு சிலைகள் மீட்கப்பட்டன. குற்றவாளி ஏழுமலை பதினெட்டு மாத சிறைத் தண்டனை பெற்றார். குற்றவாளி அயூப் குற்றவாளிகளின் நன்னடத்தை சட்டத்தில் தண்டனை பெற்றார்.

செஞ்சி காவல் நிலைய குற்ற எண் 386/81 இ.த.ச. 457 மற்றும் 380 பிரிவுகள்—குற்றப் புலனாய்வுத்துறை குற்ற எண் 39/82.

107. தென்னாற்காடு மாவட்டம், செஞ்சிக் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கங்கபட்டு பெருமாள் கோயிலில் 30-8-1981 அன்றிரவு நான்கு சிலைகள் திருடப்பட்டன. இவ்வழக்கில் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினரால் விசாரணை செய்யப்பட்டது. இடைவிடாத விசாரணை காரணமாக குற்றவாளிகள் ராமதாஸ் மற்றும் விநாயகம் ஆகியோர் கைது செய்யப்பட்டு சிலைகள் மீட்கப்பட்டன. 7-1-1984 அன்று குற்றவாளிகள் இரண்டாண்டு கடுஞ் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டனர்.

தனிப் பிரிவு (கம்பித் திருடு கண்டுபிடிப்பு).

108. தமிழ்நாடு மின்வாரியம், இருப்புப்பாதை மற்றும் தபால் தந்தித் துறைகள் ஆகியவற்றில் நடைபெறும் கூட்ட மாக சேர்ந்து செப்புக் கம்பிகளைத் திருட்டு செய்து வருபவர்களைக் கண்டு பிடிக்கவும் மற்றும் செய்திகளைத் திரட்டவும் அரசு ஆணை (நிலை) எண் 788, உள்துறை, நாள் 5-4-1982-ன் படி ஒரு துணை காவல் கண்காணிப்பாளர், இரண்டு துணை ஆய்வாளர்கள், முதல் ஒரு ஆய்வாளர், நிலைக் காவலர் ஒருவர் மற்றும் இரண்டாம் நிலைக் காவலர் இருவர் ஆகியோர்கள் அடங்கிய ஒரு தனிப் பிரிவு ஆரம் பிக்கப்பட்டது. உள் துறை ஆணையர் மற்றும் அரசுச் செயலரின் நேரடி பார்வையின்கீழ் இயங்கும் இந்தத்

தனிப் பிரிவு 12-7-1982 முதல் செயல்படத் துவங்கியுள்ளது. கீழ்க்கண்ட வேலைகள் இத் தனிப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டது :—

(1) கூட்டமாகச் சேர்ந்து செப்புக் கம்பி திருட்டுச் செயலில் ஈடுபடுபவர்களைப் பற்றிய தகவல்களைச் சேகரிப்பது.

(2) விரைவில் புலனாய்வு செய்தவைகளைத் துரிதப்படுத்துவது.

(3) குற்ற வழக்குத் தொடர்புகளைத் துரிதப்படுத்துவது.

(4) புகார் தரும் துறைகளோடு தொடர்பு அதிகாரியாகப் பணியாற்றுவது.

(5) முக்கியமான வழக்குகளைக் கண்காணித்து அதைப் பற்றி அறிக்கை தருவது.

இந்த தனிப் பிரிவு, புலனாய்விற்காகத் தொடர்ந்து மாவட்டந்தோறும் முறையான சுற்றுப்பயணம் செய்கிறது. இந்தச் சுற்றுப் பயணத்தின்போது கம்பித் திருட்டைப் பற்றி இந்த தனிப் பிரிவு ஆழ்ந்து கவனித்து, இதை அறவே தடுத்து நிறுத்துவதற்கு வேண்டிய வழிமுறைகளைப் பற்றி புலனாய்வு அதிகாரிகளுக்கு அறிவுரைகள் நல்கி வருகின்றன. குற்றங்களைக் கண்டுபிடிக்க அறிவியல் முறைகளைக் கைக்கொள்ளவும் ஆணை பிறப்பிக்கிறது. தனிப்பிரிவு துணை கண்காணிப்பாளரால் கம்பித் திருட்டு பற்றிய விவரங்களும், நிலுவை வழக்குகளும், வழக்குத் தொடர்வதற்காக ஆகும் காலதாமதத்தின் காரணங்களும் கால முறையோடு அரசுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இவ்வறிக்கையின் அடிப்படையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுக்கு அரசு ஆணைகள் பிறப்பிக்கின்றன.

1981, 1982, 1983 ஆம் ஆண்டுகளில் மின் கம்பி களவு இனங்களின் விவரங்கள்:

| ஆண்டு | மொத்தம் தெரிவிக்கப்பட்டவை. | மொத்தம் மீட்கப்பட்டவை. | பொருள்கள் இழப்பின் மதிப்பு. | பொருள்கள் மீட்கப்பட்டவை மதிப்பு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) (ரூபாய்) | (5) (ரூபாய்) |
| 1981 | 1,695 | 707 | 10,98,774 | 5,90,164 |
| 1982 | 1,700 | 511 | 15,46,673 | 5,84,868 |
| 1983 | 1,855 | 531 | 12,77,779 | 2,81,902 |



1982-83-ம் வருடங்களில் தனிப் பிரிவின் உதவியினால் கண்டு பிடிக்கப்பட்ட சில முக்கியமான நேர்வுகளின் விவரங்கள் கீழ்க் கண்டவாறு—

1. 1983 ஆம் ஆண்டு (1) பழனிச்சாமி, த/பெ. குழந்தையப்ப கவுண்டர், (2) நடராஜ், த/பெ. ராமசாமி கவுண்டர் இவர்கள் அடங்கிய திருட்டுக் கூட்டம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் மின் கம்பிகளைத் திருடியுள்ளனர். அவர்களைக் கைது செய்து ரூபாய் 23,240 மதிப்புள்ள மின் கம்பிகள் மீட்கப்பட்டுள்ளன.

2. 1983 ல் (1) சையது அலி, த/பெ. அபாஸ் மரக்காயர், (2) முப்பிடாதி த/பெ. தங்கமுத்து, (3) பூவராஜ் த/பெ. சித்திரை வேலு நாடார், (4) சக்கரவர்த்தி த.பெ. செந்தூர் நாடார் இவர்கள் அடங்கிய திருட்டுக் கூட்டம் திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தில் தமிழ்நாடு மின்வாரியத்தில் சுமார் 2,250 அடி நீளமுள்ள செப்புக் கம்பிகளைத் திருடியுள்ளார்கள். இதன் மதிப்பு ரூ. 10,000 ஆகும். இவர்களை கைது செய்து, திருடப்பட்ட செப்புக் கம்பிகள் மீட்கப்பட்டுள்ளன.

3. 1983-ல் சந்திரன் மற்றும் இரண்டு பேர்கள், செங்கல்பட்டு மேற்கு மாவட்டத்தில், சுமார் ரூபாய் 18,709 மதிப்புள்ள மின் கம்பிகளைக் களவாடியுள்ளனர். இவர்கள் கைது செய்யப்பட்டு களவுபோன மின் கம்பிகள் மீட்கப்பட்டுள்ளன. இதேபோல் ரூபாய் 13,947 மதிப்புள்ள மின் கம்பிகளை, திருத்தணிப் பிரிவில் திருடிய ஞானசேகரன் மற்றும் மூன்று பேர்களை கைது செய்து அப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

4. 1982-ல் 1. நாகராஜன், 2. அண்ணையா, 3. ராமகிருஷ்ணன், 4. சந்திரசேகரன், 5. கிருஷ்ணன் ஆகியவர்கள் தர்மபுரி மாவட்டத்தில் தமிழ்நாடு மின் வாரிய அலுமினிய மின் கம்பிகளைக் களவாடியுள்ளார்கள். இதன் மதிப்பு ரூபாய் 32,278 ஆகும். அவர்கள் கைது செய்யப்பட்டு அப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

5. 1982-ல் 1. கோபி (என்கிற) மாரியப்பன், 2. மணியன் 3. கிருஷ்ணன், 4. வேலுசாமி ஆகியவர்கள் திருநெல்வேலி (கிழக்கு) மாவட்டத்தில் ரூபாய் 34,000 மதிப்புள்ள மின் கம்பிகளைக் களவாடியுள்ளனர். அவர்கள் கைது செய்யப்பட்டு அப்பொருள்கள் மீட்கப்பட்டன.

6. 1982-ல் தாமோதரன் மற்றும் மூன்று பேர் சேர்ந்து சேலம் மாவட்டத்தில் தமிழ்நாடு மின்வாரியத்தில் 2,287 மீட்டர் அலுமினியக் கம்பிகளை களவாடியுள்ளனர். இதன் மதிப்பு ரூபாய் 5,750 ஆகும். அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு களவு போன மின் கம்பிகள் மீட்கப்பட்டுள்ளன.

சட்டமும் ஒழுங்கும் :

109. கடந்த ஆண்டு தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு, காவல் துறையினரின் தகுந்த நடவடிக்கைகளினால் அமைதி நிலவியது. நடப்பாண்டில் தமிழ் நாட்டில் இன அமைதி நிலவியது. இருப்பினும், மாநிலத்தில் ஒரு சில இனக் கலவரங்கள் நடைபெற்றன. அவைகளுக்கு காரணம் அனைத்தும் உள்ளூர் தனிப்பட்ட பகைமையின் காரணங்கள் தான். ஆனால் காவல் துறையினரின் உரிய கால நடவடிக்கை இனக் கலவரங்களைக் குறைக்கப் பெரிதும் உதவியது.

கீழே கொடுக்கப்பட்டுள்ளப் பத்திகளில் உள்ள ஒரு சில முக்கிய சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சினைகள் பற்றிய சம்பவங்களில் காவல் துறையினர் தக்க சமயத்தில் தலையிட்டுத் தங்களது திறமையான நடவடிக்கையினால் சட்டம் ஒழுங்கினை நிலைநாட்டியது பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இனக் கலவரங்கள் :

110. 19-4-1983 அன்று சேலம் மாவட்டம், கிச்சி பாளையத்தில் ஒரு ஆதி திராவிடர்மீது தற்செயலாக சைக்கிளில் மோதிய ஒரு சாதி இந்துவை ஆதி திராவிடர்கள் தாக்கினர். மீண்டும் 20-4-1983 அன்று ஆதி திராவிடர்கள் இரண்டு சாதி இந்துக்களைத் தாக்கினர். இச் சம்பவத்தை விசாரிக்க ஆதி திராவிடர்கள் இருக்கும் வீதிக்கு சுமார் பத்து சாதி இந்துக்கள் வந்தபோது ஆதி திராவிடர்களால் அச்சுறுத்தப்பட்டனர். இதனால் கோபமடைந்த சுமார் 50 சாதி இந்துக்கள் ஆதி திராவிடர்கள் வாழும் பகுதிக்குச் சென்று அவர்களை தாக்கினர். இதற்கிடையில் ஆதி திராவிடர்களும் தாக்குதலை சமாளிக்க தங்களுடைய ஆட்களை ஒன்று சேர்த்தனர். இரு பிரிவினரும் கற்களையும், செங்கற்களையும் வீசித் தாக்கிக் கொண்டதில் இரு பிரிவினருக்கும் சொந்தமான 30 வீடுகளுக்குச் சேதம் ஏற்பட்டது. காவல் துறையினர் தலையீட்டின்பேரில் அமைதி நிலவியது. இது சம்பந்தமாக குற்ற எண். 233/83, 234/83, 235/83 மற்றும் 237/83-ன்கீழ் நான்கு வழக்குகள் தனித் தனியாக இரு தரப்பினர் மீதும் பதிவு செய்யப்பட்டது.

111. 15-5-1983 அன்று தென்னாற்காடு கடலூருக்கருகில் 5 ஆதி திராவிடர்கள் ஒரு சாதி இந்துவை முன் பகை காரணமாக தாக்கினர். பழிக்குப் பழியாக 16-5-1983 அன்று சில சாதி இந்துக்கள் ஒரு ஆதி திராவிடரைத் தாக்கினர். முடிவில் இரு பிரிவினருக்குமிடையே ஏற்பட்ட மோதலில் 11 ஆதி திராவிடர்களுக்குக் காயமேற்பட்டது. இரு பிரிவினருக்குச் சொந்தமான பத்து குடிசை வீடுகளும், ஐந்து பம்பு செட்டுகளும் மற்றும் ஆதி திராவிடர்களுக்குச் சொந்தமான இரண்டு வைக்கோற் போர்களும் தீ வைக்கப்பட்டன. மோதலில் ஈடுபட்ட கும்பலை அப்புறப்படுத்தக் காவல் துறையினர் கண்ணீர்



புகைக் குண்டுகளை வீசினர். இந்தக் குழப்பத்தில், 11 காவல் துறையினருக்கு காயம் ஏற்பட்டது. இச் சம்பவம் தொடர்பாக கடலூர் காவல் நிலையக் குற்ற எண்கள் 287/83, 288/83, 290/83, 291/83, 292/83, 293/83, 294/83 மற்றும் 295/83-ல் இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 341, 448, 323, 326, 427, 147, 148, 324, 307, 306, 436-ன் கீழ் தனித் தனியாக இரு தரப்பினர் மீதும் வழக்கு பதிவு செய்யப் பட்டுள்ளது.

112. சேலம் மாவட்டம் வேப்பிலைப்பட்டியைச் சேர்ந்த ஆதி திராவிடர்களுக்கும் முடியனூரைச் சேர்ந்த சாதி இந்துக்களுக்கும் இடையே கசப்புணர்ச்சி நிலவி வந்தது. இருப்பினும், செல்லமுத்து என்கிற சாதி இந்து ஒரு ஆதி திராவிடரை தன்னுடைய நிலத்தில் வேலை செய்ய வாய்ப்புக் கொடுத்த காரணத்தினால் பிற சாதி இந்துக்கள் சமூக ரீதியாகப் புறக்கணித்தனர். 18-5-1983 அன்று செல்லமுத்து மீது ஒரு நாட்டு வெடிகுண்டு வீசப்பட்டது. அவர் அந்த இடத்திலேயே இறந்தார். காவல் துறையினர் ஸ்தலத்திற்கு விரைந்து அமைதியை நிலை நாட்டினர். இது சம்பந்தமாக வாலப்பாடி காவல் நிலையக் குற்ற எண். 83/83-ல் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 147, 302, 341 மற்றும் இந்திய வெடி மருந்துகள் விதி பிரிவு 5 (3) (பி)-ன் (இணைந்து படிக்கப்பட்ட) கீழ் 10 நபர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

113. இராமநாதபுரம் (கிழக்கு) மாவட்டம் தத்தன்குடியில் முத்துராமலிங்கம் (சாதி இந்து) என்பவருக்கும் திக்விஜயன் (ஆதி திராவிடர்) என்பவருக்குமிடையே ஒரு நிலத் தகராறு இருந்து வந்தது. 1983 ஆம் ஆண்டு மே மாதம் முடிவில் திக்விஜயனும் அவருடைய கூட்டாளிகளும் முத்துராமலிங்கத்திற்குச் சொந்தமான பல மூட்டைகள் கொண்ட அடுப்புக் கரிக்குத் தீ வைத்தனர். 7—6—1983 அன்று முத்துராமலிங்கத்திற்குச் சொந்தமான லாரியினை வழிமறித்து அதிலிருந்து அடுப்புக் கரியை அவர்கள் இறக்கினர். இதனால் கோபம் கொண்ட முத்துராமலிங்கமும் அவரது கூட்டாளிகளும் ஆதி திராவிடர்களை துப்பாக்கி கொண்டு தாக்கியதில் மூவருக்கும் காயமேற்பட்டது. மேலும் தாக்குதலில் எட்டு பேருக்கு காயமேற்பட்டது. துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த மதுரை வீரன், இராமநாதபுர மாவட்ட அரசு தலைமையிட மருத்துவமனையில் இறந்தார். காவல் துறையினர் தகுந்த நேரத்தில் தலையிட்டு அமைதியை நிலை நாட்டினார்கள். இந் நிகழ்ச்சி சம்பந்தமாக சிக்கல் காவல் நிலையக் குற்ற எண் 61/83-ல் இ.த.ச. பிரிவு 147, 148, 326, 302, 307 (மற்றும் இந்திய வெடி மருந்துப் பொருள்கள் விதியுடன் இணைந்து படிக்கப்பட்டது)-ன் கீழ் 16 நபர்கள் மீது வழக்கு பதிவு செய்யப் பட்டுள்ளது.

114. ஒரு தகராறைத் தொடர்ந்து, 5—11—1983 அன்று கந்தசாமி என்கிற ஒரு ஆதி திராவிடரை சாதி இந்துக்கள் ஒன்பது பேர் இராமநாதபுரம் மேற்கு மாவட்டம், வரலோட்டி கிராமத்தில் கத்தியால் குத்திக் கொலை செய்தனர். மேலும் இரண்டு ஆதி திராவிடர்களும் தாக்கப்பட்டனர். காவல் துறையினர் இரு வழக்குகள் பதிவு செய்து, இரண்டு குற்றவாளிகளைக் கைது செய்தனர். இச்சம்பவத்திற்கு வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் வகையில் 19—11—1983 அன்று ஆதி திராவிடர்களில் ஒரு பிரிவினர் வரலோட்டி கிராமத்தைச் சேர்ந்த ராமசாமி நாயக்கரைக் கொலை செய்தனர். இச்சம்பவம் தொடர்பாக அருப்புக்கோட்டை காவல்நிலையம் குற்ற எண். 238/83 239/83-ல், இ.த.ச. பிரிவு 147, 148, 336, 427, 302, 324 336-ன் கீழ் 21 பேர்கள் மீது இரண்டு வழக்குகள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

115. கோவில் நிலங்களில் அனுபவிப்பதில் ஏற்பட்ட விவகாரத்தை தொடர்ந்து, கோனார் வகுப்பினைச் சார்ந்தவர்களுக்கும் தேவர் வகுப்பினரின் ஆதரவு பெற்ற ரெட்டியார்களுக்குமிடையே 30—11—1983 அன்று திருநெல்வேலி மாவட்டம், ராமச்சந்திரபுரத்தில் ஏற்பட்ட மோதலில் இரண்டு கோனார் வகுப்பினைச் சார்ந்தவர்கள் இறந்தார்கள். ஒரு கோனார், இரண்டு ரெட்டியார்கள், ஒரு தேவர் மற்றும் ஒரு பண்டாரம் வகுப்பினைச் சார்ந்தவர்களுக்குக் காயம் ஏற்பட்டது. கோனார் வகுப்பினருக்கு சொந்தமான 30 வீடுகளுக்கும் தீ வைக்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக, ஒரு ரெட்டியார் வகுப்பினரை ஒரு கோனார் வகுப்பினைச் சேர்ந்தவர் வெட்டிக் கொன்றார். காவல் துறையினர் தலையிட்டு அமைதியை நிலைநாட்டினர். இச்சம்பவங்களின் தொடர்பாக, காவல் துறையினர் 10 ரெட்டியார் வகுப்பினர் மற்றும் 7 கோனார் வகுப்பினர் ஆகியோர் மீது 6-12-1983 அன்று பாதுகாப்பு நடவடிக்கையினை மேற்கொண்டனர். இச்சம்பவம் தொடர்பாக விளாத்திகுளம் காவல் நிலைய குற்ற எண் 323/83, 232/83, 234/83 மற்றும் புதூர் காவல் நிலைய குற்ற எண். 237/83-ல் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 302, 341, 324, 232, 147, 430-ன் கீழ் நான்கு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

116. 5-12-1983 அன்று கோயம்புத்தூர் (நகர்புறம்) மேட்டுப்பாளையத்தில் ஒரு சவ ஊர்வலம் செல்கையில் மசூதிக்கு முன்பாக ஆதிதிராவிடர்கள் பட்டாசு கொளுத்தியதின் காரணமாக அப்பகுதி முகமதியர்கள் அமைதியிழந்தனர். பதட்ட நிலைமை ஏற்பட்டமை காரணமாகக் காவல் துறையினர் விரைந்து சென்று அமைதியை நிலைநாட்டினர். இச்சம்பவம் குறித்து மேட்டுப்பாளையம் காவல்நிலையக் குற்ற எண் 347/83-ல் சென்னை நகரக் காவல் சட்டம் 75-ன் கீழ் 4 நபர்கள் மீது வழக்கொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.



117. முன்பகை காரணமாக 10-12-1983 ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்ட தெற்கு வள்ளியாவிளையில் இந்து நாடார் ஒருவருக்கும் ஒரு கிறிஸ்துவ மீனவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. இச்சம்பவத்தைத் தொடர்ந்து ராஜாக்காமங்கலம் துறையைச் சேர்ந்த மீனவர் வகுப்பினைச் சேர்ந்த சுமார் 60 நபர்கள் தெற்கு வள்ளியாவிளைக்குச் சென்று அங்கிருந்த வீடுகள் மீது கற்களை எறிந்து, இரண்டு நாடார்களைத் தாக்கினர். இச்சம்பவத்தில் இரண்டு மீனவர்களும் காயமடைந்தனர். அன்றைய தினமே (10-12-1983) இந்து நாடார்களின் ஒரு பிரிவினரால் ஒரு மீனவர் தாக்கப்பட்டார். இதனால் நாடார்களுக்குச் சொந்தமான தென்னங்கன்றுகளை மீனவர்களில் ஒரு பிரிவினர் சேதப்படுத்தினர். காவல் துறையினர் தகுந்த நேரத்தில் தலையிட்டு அமைதியை நிலை நாட்டினர். இச்சம்பவம் தொடர்பாகக் கோட்டாறு காவல் நிலையக் குற்ற எண். 1564/83-ல் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 147, 148, 324 மற்றும் 307-ன் கீழ் இரு தரப்பினர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் :

118. 1983 ஆம் ஆண்டில் தீவிரவாதிகள் என்ற பெயரில் நடமாடும் சமூக விரோதிகளின் நடவடிக்கைகள் கணிசமான அளவில் குறைந்துள்ளது. ஆயினும் இவர்களில் பல பிரிவினர் தலைமறைவாக இருந்து கொண்டு இவர்களின் நடவடிக்கைகளைத் தடுக்க மாநில அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளைக் கண்டித்து அரசுக்கு எதிராகப் பல இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டியும் வந்தனர்.

## விவசாயிகளின் நிலைமை :

119. நடப்பாண்டில் விவசாயிகளின் நிலைமை பொதுவாக அமைதியாக இருந்தது. ஆயினும் சில முக்கிய சம்பவங்கள் பற்றிய விவரங்கள் கீழ்க்கண்ட பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

120. வடவாறிலிருந்து தண்ணீர் விடக் கோரி, வடவார் விஸ்தரிப்பு கால்வாயைச் சேர்ந்த (தஞ்சாவூர் மேற்கு) சுமார் 3,000 விவசாயிகள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். அம்பிகாபதி தலைமையில் 23-8-1983 அன்று தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை மறியல் செய்ய முயன்றனர். காவலர்களால் அவர்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர்.

121. மின் இணைப்புத் துண்டிப்பு, மின் கட்டணத்தை கடுமையான முறையில் வசூலித்தல் ஆகியவைகளைக் கண்டித்து 2-9-1983 அன்று மாநிலத்தின் சில இடங்களில் தமிழ்நாடு மின் வாரிய அலுவலகத்திற்கு முன்பாக இந்திய உழவர் உழைப்பாளர் கட்சியினர் உண்ணாவிரதம் இருந்தனர்.

[1984 மார்ச் 29

122. விவசாயிகளுக்குத் துண்டிப்பில்லாத மின் விநியோகம், சலுகை விலையில் விவசாயிகளுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் விநியோகம் ஆகியவைகளைக் கோரியும் விவசாயிகளின் கடன் பாக்கிகளை ரத்து செய்யக் கோரி மாநில அரசை வற்புறுத்தியும் 24-10 1983 அன்று திரு. சி. நாராயணசாமி நாயுடு தலைமையில் இந்திய உழவர் மற்றும் உழைப்பாளர் கட்சியினர் 47 பேர் தலைமை செயலகத்தின் முன்பு மறியல் செய்யும் முயற்சியாக குறளகத்திலிருந்து ஊர்வலமாக சென்றனர். இந்திய ரிசர்வ் வங்கியின் வடக்கு முனை சுரங்கப் பாதையருகே இவர்கள் காவல் துறையினரால் நிறுத்தப் பட்டனர். அவர்கள் மேலும் தலைமைச் செயலகத்திற்குப் புறப்பட்டுச் செல்ல முயற்சி செய்தபோது காவல் துறையினர் அவர்களை கைது செய்து மாலையில் விடுவித்தனர்.

123. மின்வாரிய அதிகாரிகள் விவசாயிகளுக்கு தீங்கிழைத்ததாகக் குற்றஞ்சாட்டி, 28-11-1983 அன்று கோயம்புத்தூர் (ஊரக) மாவட்டத்தின் பல இடங்களில் இந்திய உழவர் உழைப்பாளர் கட்சியினர் மின்வாரிய அலுவலகங்களுக்கு முன்பாக மறியல் செய்தனர். இது தொடர்பாக மறியலில் ஈடுபட்ட 683 பேர் காவல் துறையினரால் அப்புறப்படுத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

124. 1-12-1983 அன்று கோவையில் நடைபெற்ற இந்திய உழவர் உழைப்பாளர் கட்சியினர் மாநில செயற் குழு எடுத்த முடிவின்படி, மின்வெட்டை கண்டித்தும் விவசாயிகளுக்கு தொடர்ந்த மின் விநியோகம் கோரியும் 9-12-1983 அன்று மாநிலத்தின் பல இடங்களில் இக்கட்சியினர் மின்வாரிய அலுவலகங்களின் முன்பு மறியல் செய்ய முயற்சி செய்தனர். இது தொடர்பாக மொத்தத்தில் 1,523 பேர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டனர். பெரியார் மாவட்டம் ஈரோடு மின் வாரிய அலுவலகத்தை மறியல் செய்ய முயன்ற திரு. நாராயணசாமி நாயுடுவும் மற்றும் ஐம்பது பேரும் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட 1,523 பேரில்; 1,402 பேர் விடுதலை செய்யப்பட்டனர். 121 பேர்கள் காவலில் வைக்கப்பட்டனர்.

தொழிலாளர்கள்.

125. 1983 ஆம் ஆண்டில் தொழிலாளர்களின் நிலைமை அமைதியாகவே இருந்தது. இருப்பினும் காவல் துறையினர் தலையிட்டு அமைதியையும் சட்டம் ஒழுங்கையும் காப்பாற்ற வேண்டிய சில சம்பவங்களின் தொகுப்பு கீழே வருமாறு :—

தொழிற்சங்கங்கள்.

126. 19-1-1982 அன்று நடைபெற்ற 'பாரத் பந்த்' முதலாமாண்டு நிறைவுநாளை அனுசரிக்குமுகத்தான் 19-1-1983 அன்று மாநிலத்தின் பல இடங்களில் பல



1984 மார்ச் 29]

தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்கள் (அ.இ.அ.தி.மு.க. நீங்கலாக) மத்திய-மாநில அரசு ஊழியர்கள், பொதுத் துறை ஊழியர்கள் ஆகியோர் ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் ஆகியவற்றை நடத்தினர்.

127. இலங்கைத் தமிழர்கள் படுகொலைக்குள்ளாக்கப் பட்டதைக் கண்டிக்குமுகத்தான் 22-8-1983 அன்று மதுரை, வட ஆற்காடு, நாகப்பட்டிணம் ஆகிய இடங்களிலும், 23-8-1983 அன்று கும்பகோணம், சத்தியமங்கலம் (பெரியார்) மற்றும் மதுரை ஆகிய இடங்களிலும் பல தொழிற் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் ஊர்வலங்கள் நடத்தினர். 20-8-1983 அன்று அவர்கள் திருச்சி, தஞ்சை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உண்ணாவிரதமும் இருந்தனர்.

போக்குவரத்து தொழிலாளர்கள்.

128. தொழிற்சங்கப் போட்டி காரணமாக 22-5-1983 அன்று இரவு செங்கல்பட்டு (கிழக்கு) மாவட்டம் திருவொற்றியூரில் சுயம்பு மற்றும் 15 பல்லவன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள், டெல்லி என்பவரையும் மற்றும் ஒரு பல்லவன் போக்குவரத்துக்கழகத் தொழிலாளியையும் தாக்கினர். காவல் துறையில் கொடுத்தப் புகாரின் பேரில் காவல் துறையினர் வழக்கொன்று பதிவு செய்து சுயம்பு, மற்றும் ஐவரை கைது செய்து 23—5—1983 அன்று ஜாமீனில் விடுதலை செய்தனர். விடுதலை செய்யப்பட்டவுடன் அவர்கள், இரண்டு பல்லவன் போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுடன் சேர்ந்து கிருஷ்ணன் மற்றும் ஒரு தொழிலாளியைத் தாக்கினர். காவல் துறையினர் வழக்கொன்று பதிவு செய்து சம்பந்தப்பட்ட எட்டு குற்றவாளிகளையும் கைது செய்தனர். 23—5—1983 அன்று திருவொற்றியூர் பல்லவன் போக்குவரத்துக் கழக ஓட்டுநர் ஒருவரை கிருஷ்ணன் மற்றும் சில தொழிலாளர்கள் தாக்கினர். மற்றுமொரு வழக்கொன்றை காவல் துறையினர் பதிவு செய்தனர். திருவொற்றியூர் பல்லவன் போக்குவரத்துக் கழகப் பணிமனையின் இரண்டு போட்டி தொழிற் சங்கங்களில் தொழிலாளர்களிடையே ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சி காரணமாகப் பல்லவன் போக்குவரத்துக் கழக ஓட்டுநர் ராமச்சந்திரனை (அண்ணா போக்குவரத்துச் சங்கம்) பெரியசாமி மற்றும் ஐவர் 27—5—1983 அன்றிரவு எண்ணூர் பேருந்து நிலையத்தில் தாக்கினர். இச்சம்பவம் குறித்து எண்ணூர் காவல் நிலையத்தில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுக் காயமடைந்தவர் மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டார்.

தோட்டத் தொழிலாளர்கள்.

129. வாரக் கூலி கொடுக்கக் கோரி 24—4—1983 அன்று உதகை நடுவட்டம் ராயல் பள்ளத்தாக்குத் தோட்டத் தொழிலாளர்கள் 144 பேர் வேலை நிறுத்தம் செய்தனர். தோட்ட

உதவி மேலாளரை அவர்கள் முற்றுகையிட்டுத் தாக்கினர். இச் சம்பவத்தில் இரண்டு தொழிலாளர்களுக்கும் காயமேற்பட்டது. இது தொடர்பாக நடுவட்டம் காவல் நிலையக் குற்ற எண்கள் 31 மற்றும் 32/83-ல் இரு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 25—5—1983 அன்று நிர்வாகம் கதவடைப்பை அறிவித்தது. பின்னர் ஒரு உடன்பாடு ஏற்பட்டதும், 20—6—1983 ஆம் நாள் கதவடைப்பு நீக்கப்பட்டது.

130 உயர் ஊதியம் கோரி மதுரையைச் சேர்ந்த கைத்தறி நெசவாளர்கள் 12—10—1983 முதல் கிளர்ச்சி செய்யத் துவங்கினர். 12—10—1983 அன்று சுமார் 5,000 நெசவாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். 16—10—1983 அன்று அவர்கள் ஊர்வலமாகச் சென்று ஒரு பொதுக் கூட்டத்தை நடத்தினர். 17—10—1983 அன்று மொத்தத்தில் சுமார் 96 கைத்தறி நெசவாளர்கள் ஒரு தலைமை நெசவாளரின் வீட்டுக்கு முன்பாகவும் மற்றும் இரு கைத்தறி ஆலையின் முன்பும் தர்ணா அனுசரித்தனர். காவல் துறையினால் அவர்கள் அப்புறப்படுத்தப்பட்டனர். 18—10—1983 முதல் பல தினங்களில் கைத்தறி நெசவாளர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தித் தலைமை நெசவாளர்களின் இல்லங்களுக்கு முன்பாகவும், கைத்தறி ஆலைகளுக்கு முன்பாகவும் மறியல் செய்தனர். 28—10—1983 அன்றிரவு சுமார் 800 நெசவாளர்கள் மதுரை முனிச் சாலையில் சுமார் அரை மணி நேரத்திற்குப் பேருந்துகளை நிறுத்தினர். காவல் துறையினர் தலையிட்டு அமைதியை நிலை நாட்டினர். 29—10—1983 அன்று சுமார் 2,000 நெசவாளர்கள் மதுரை முனிச்சாலை சந்திப்பில் கூடி நின்று சுமார் 2 மணி நேரத்திற்குப் போக்குவரத்தைத் தடுத்தனர். இதற்கு முன்னர், சுமார் 30 நெசவாளர்கள் கிருஷ்ணமாச்சாரி என்கிற தலைமை நெசவாளரின் வீட்டிற்குள் புகுந்து ரூபாய் 2,000 பெறுமான நூல் கட்டுகளுக்கும் சைக்கிளுக்கும் சேதம் விளைவித்தனர். இது தொடர்பாக வழக்கொன்று பதிவு செய்யப்பட்டது. 30—10—1983 அன்று 93 கைத்தறி நெசவாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்து மதுரையில் கைத்தறி நிலையத்தின் முன்பு மறியல் செய்தபோது அவர்கள் காவல் துறையினரால் அப்புறப்படுத்தப்பட்டனர். 31—10—1983 அன்று மதுரை முனிச்சாலை சந்திப்பில் நான்கு நெசவாளர்கள் காலவரையற்ற உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர். 18—10—1983 முதல் 22—11—1983 வரை தலைமை நெசவாளர்களின் இல்லங்கள் மற்றும் கைத்தறி ஆலைகளின் முன்பும் மறியல் செய்த 731 கைத்தறி நெசவாளர்கள் கைது செய்யப்பட்டனர். ஒரு உடன்பாட்டின் பேரில் 27—11—1983 அன்று கிளர்ச்சி கைவிடப்பட்டது. இருப்பினும் கைது செய்யப்பட்ட அனைத்து தொழிலாளர்களையும் விடுதலை செய்யக் கோரி, நெசவாளர்கள் பணி செய்ய மறுத்தனர். கைது செய்யப்பட்ட எல்லா நெசவாளர்களும் விடுதலை செய்யப்பட்ட பிறகு 30—11—1983 அன்று அவர்கள் பணிக்குத் திரும்பினர்.



## காவல் துறையினரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடுகள்.

131. 1983 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் டிசம்பர் திங்கள் 31 வரையில் தமிழ்நாட்டில் காவல் துறையினர் 18 சம்பவங்களில் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஒரு சம்பவத்தில் ஒருவர் இறந்தார். 1982 ஆம் ஆண்டு 21 சம்பவங்களில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. கீழ்க்கண்ட பத்திகளில் இது பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

132. முறைகேடான நடவடிக்கைகளுக்காக 31—1—1983 அன்று திருநெல்வேலி மாவட்டம் தெரசாபுரத்தைச் சேர்ந்த இரண்டு மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட மீனவர்களை மீட்பதற்காக மீனவர்களில் ஒரு பிரிவினர் காவல் துறையினர் மீது கல்லெறிந்தனர். அவர்களது முயற்சி தோல்வியடைந்தபோது அருகாமைப் பகுதியில் பணி செய்து கொண்டிருந்த மூன்று காவலர்களை அவர்கள் கடத்தினர். காவல் படை அங்கு விரைந்து சென்று காவலர்களை மீட்டனர். இதனால் கோபமடைந்த மீனவர்கள் காவல் துறையினர் மீது கற்கள் மற்றும் ஆயுதங்களைக் கொண்டு தாக்கினர். இதன் காரணமாகக் காவல் துறையினர் தடியடிப் பிரயோகம் செய்தனர். அது பயனற்றுப் போகவே, காவல் துறையினர் வன்முறை கும்பலைக் கலைக்க ஆகாயத்தை நோக்கிச் சுட்டனர். தூத்துக்குடி கோட்டாட்சித் தலைவரால் இச்சம்பவம் பற்றி நீதி விசாரணைச் செய்யப்பட்டு அதன் அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

133. 27—2—1983 மற்றும் 8—3—1983 ஆகிய தினங்களில் மண்டைக்காடு திருவிழா நடைபெற விருந்ததால், 13—2—1983 அன்று இந்து முன்னணி அமைப்பாளர்கள் ஏற்பாடு செய்திருந்த ஊர்வலத்திற்கும், மாநாட்டிற்கும் அனுமதி கொடுக்கக் கன்னியாகுமரி மாவட்ட அதிகாரிகள் மறுத்தனர். இந்து முன்னணித் தொண்டர்கள் பெருமளவில் கூடி, அமுலில் இருந்த தடையுத்தரவை மீற முயன்றனர். இதற்கிடையில், நகரத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும், அண்டை கிராமங்களில் இருந்தும் முன்னணித் தொண்டர்கள் ஒன்று கூடி, காவல் துறையினர் கலையும்படி கேட்டுக் கொண்ட வேண்டுகோளைக் கேளாது, ஊர்வலமாகச் செல்ல வேண்டுமென்று வற்புறுத்தினர். அதன் பிறகு கூட்டத்தினரைக் கலைக்க காவல் துறையினர் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசி, தடியடிப் பிரயோகம் செய்தனர். ஆனால் கூட்டத்தினரின் வன்முறை அதிகரித்து, தொடர்ந்து காவலர்களைக் கற்களால் தாக்கினர். கூட்டத்தினரைக் கலைக்க காவல் துறையினர் முதலில் ஆகாயத்தை நோக்கிச் சுட்டனர். பின்னர் கூட்டத்தினரை நோக்கிச் சுட்டனர். குமார் என்பவர் துப்பாக்கிச் சூட்டில் பலியானார். மீண்டும் 13—2—1983 அன்று நாகர் கோவில், மீனாட்சிபுரத்தில் சாலையில் உள்ள ஓலைவேய்ந்த குடிசைகளில் நெருப்பு வைத்த ஒரு கூட்டத்தைக் கலைக்க முதலில்

தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டு, பின்னர் ஆகாயத்தை நோக்கிச் சுடப்பட்டது. மாவட்டக் கூடுதல் நீதிபதியான கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) இச்சம்பவம் பற்றி விசாரணை செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளார்.

134. 6-4-1983 அன்று தஞ்சாவூர் (மேற்கு) செங்கிப்பட்டிப் புறக்காவல் நிலையம் காவலர் நாராயணசாமி எண். 999 என்பவர் குடிபோதையில் கெட்ட எண்ணத்துடன் ஒரு பெண்ணை ஒரு தனி வீட்டிற்கு அழைத்துச் சென்றதாகக் கூறப்பட்டது. அந்தக் கிராமத்தைச் சேர்ந்த சிலர் அந்த வீட்டைச் சுற்றி வளைத்துக் கொண்டு கூக்குரலிட்டனர். உடனே அக்காவலர் வீட்டை விட்டு வெளியேறி, புறக்காவல் நிலையம் சென்று துப்பாக்கியை எடுத்து வந்து கூட்டத்தைக் கலைக்க ஒரு முறை சுட்டார். ஆயினும் இதில் ஒருவரும் காயமுறவில்லை. இச்சம்பவம் குறித்து நீதி விசாரணையின் அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

135. 10-4-1983 அன்று, கலவை காவல் நிலையத்தில் சென்னை நகர காவல் சட்டம் 75 பிரிவின்கீழ் கைது செய்யப்பட்டு பின்னர் ஜாமீனில் விடப்பட்ட ஒரு ரிக்ஷா இழுக்கும் தொழிலாளி, 11-4-1983 அன்று தன் வீட்டில் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படுகிறது. காவல் துறையினர் செய்த கொடுமையினால் அவர் இறந்தார் என்று கருதி, சுமார் 2,000 மக்கள் காவல் துறையின் இருப்பிடங்களைத் தாக்கி சேதம் விளைவித்தனர். வட ஆற்காடு மாவட்டம் கலவை காவல் நிலைய உதவி ஆய்வாளர் பிரேத விசாரணை செய்வதையும் தடுத்து நிறுத்தினர். கட்டுக்கடங்காதக் கூட்டத்தினரைக் கலைக்க காவல் துறையினர் ஆகாயத்தை நோக்கிச் சுட்டனர். இத் துப்பாக்கிச் சூட்டில் யாரும் காயமுறவில்லை. இராணிப்பேட்டை வருவாய்த் துறை அதிகாரியினால் ரிக்ஷா தொழிலாளியின் மரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டது. இத்துப்பாக்கிச் சூட்டில் எவரும் காயமடையாததால் இது குறித்து தனியாக நீதி விசாரணை ஏதும் நடத்தப்படவில்லை.

136. சாதி இந்து மற்றும் ஆதி திராவிடர் சமூக பெண்களுக்கிடையே ஏற்பட்ட ஒரு தகராறை யொட்டி 24-4-1983 அன்று, மதுரை வடக்கு ஜெயமங்கலத்தில் இரு பிரிவினருக்கிடையே நாட்டு வெடி குண்டுகளை வீசி மோதிக் கொண்டனர். காவல் துறையினர் தலையிட்டபோது ஆதி திராவிடர்கள் காவல் துறையினரைத் தாக்கினர். எனவே கூட்டத்தைக் கலைக்கக் காவல் துறையினர் ஆகாயத்தை நோக்கிச் சுட்டனர். இத் துப்பாக்கிச் சூட்டில் எவரும் காயமுறவில்லை. இச்சம்பவம் குறித்து வருவாய் அலுவலரின் நீதி விசாரணை அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.



137. 18-5-1983 அன்று கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை பாலத்தில் கொள்முதல் ஆய்வுப்பணி நடைபெறுமிடத்தில் தணிக்கை வருவாய்த்துறை ஆய்வாளர் ஒருவர் லாரி ஒன்றினைத் தடுத்து நிறுத்தினார். அதே சமயத்தில் லாரியின் உரிமையாளராகச் சொல்லப்படும் திரு. சமாலுதின் என்பவர் வருவாய்த் துறை ஆய்வாளரை உதைத்ததுடன் லாரி ஓட்டுநரை அதை எடுத்துச் செ[illegible]படி கேட்டுக் கொண்டார். மற்றொரு காரில் மற்றும் நால்வருடன் அவரும் தப்பிவிட்டார். வருவாய்த்துறை ஆய்வாளர் உத்தரவின்படி, பாதுகாவல் பணி மேற்கொண்டிருந்த காவலர் லாரியை நோக்கிச் சுட்டார். இருந்த போதிலும் ஓட்டுநர் லாரியை எடுத்துச் சென்றுவிட்டார். கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் இதில் நீதி விசாரணை தேவையில்லை என்று தெரிவித்துள்ளார். இது அரசின் பரிசீல்னையில் உள்ளது.

138. 2-6-1983-ல் சென்னை பேசின் பாலம் மின் நிலைய வாசலில் காவலர் 7348, ஆர். சண்முகம் பர்துகாவல் பணி செய்து கொண்டிருக்கையில் 'சமூக விரோத கூட்டத்தினர் ஒரு சிலர், மின் நிலைய வளாகத்துக்குள் நுழைந்து இரும்புத் தடிசளைத் திருட முயன்றனர். காவலரும், மின் நிலைய மற்ற பாதுகாப்பு அதிகாரிகளும், இதை எதிர்த்தபோது. சமூக விரோதிகள் கல் வீசினர். குற்றவாளிகளை விரட்டவும், மின் வாரியச் சொத்துக்களைப் பாதுகாக்கும் பொருட்டும், காவலர் 7348 ஆகாயத்தை நோக்கிச் சுட்டார். குற்றவாளிகள் ஓடி விட்டனர். துப்பாக்கிச் சூட்டில் எவரும் காயமுறவில்லை. விசாரணை தேவையில்லை என்ற மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையை அரசு ஏற்றுக்கொண்டது.

139. 20-6-1983 அன்று, கன்னியாகுமரி, வெட்டுண்ணிமடம் அருகே பார்வதிபுரத்தில், நெல்லைக் கடத்திச் சென்ற லாரியின் ஓட்டுநர், காவல்துறை தணிக்கைச் சாவடியில், வண்டியை நிறுத்த அதிகாரிகள் கொடுத்த சைகையைப் பொருட்படுத்தாமல் கேரளாவை நோக்கி லாரியை ஓட்டிச் செல்ல முயன்றனர். காவல் துறையினர் துப்பாக்கியால் லாரியின் டயரில் சுட்டு, காற்றை இறக்கி, லாரியை நிற்கச் செய்தனர். அதிலிருந்து 140 நெல் மூட்டைகளைக் கைப்பற்றினர். லாரியின் ஓட்டுநர் உட்பட, மூவர் கைது செய்யப்பட்டனர். இத் துப்பாக்கிச் சூட்டில் எவரும் காயமுறவில்லையாதலால், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரின் விசாரணைத் தேவையில்லை என்ற பரிந்துரையை அரசு ஏற்றுக் கொண்டது.

140. 13-7-1983 அன்று, தென்னாற்காடு, சாரம் கிராமத்தில் தென்னாற்காடு உணவுப் பொருள் வழங்கல் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை ஆய்வாளர் நெல்லைக் கடத்த முயற்சிக்கும் ஒரு லாரியைக் கைத்துப்பாக்கியால் சுட்டு, லாரியை நிறுத்தி, லாரி ஓட்டுநரையும் சுமை ஏற்றும் தொழிலாளி ஒருவரையும் கைது செய்தார்.

141. 19–7–1983 அன்று, மதுரை வடக்கு கம்பர் மேட்டில் அரிசி கடத்துதலில் ஈடுபட்டிருந்த ஒரு கூட்டத்தினர் உத்தம பாளையம் வட்ட ஆட்சியர், மற்றும் அவருடைய குழுவினரை அவர்களது கடமைகளை செய்யவிடாமல் தடுத்தனர். வட்ட ஆட்சியர் உத்தரவின் பேரில் காவலர் ஒருவர் கடத்தல் காரர்களைக் கலைப்பதற்கு ஆகாயத்தை நோக்கிச் சுட்டார். விசாரணை தேவையில்லை என்ற மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையை அரசு ஏற்றுக் கொண்டது.

142. 24–7–1983 அன்று, சென்னை நகர காசிமேடு காவல் நிலையக் காவல் துறைக் குழு, காசிமேடு பகுதியில் கடத்தலில் ஈடுபட்டிருப்பதாக சந்தேகப்பட்டு ஒரு கட்டுமரத்தை, விசைப படகில் சென்று துரத்தினர். கடத்தல்காரர்கள் காவல் துறை அதிகாரிகளைக் கொல்ல முயன்றபோது, ஆய்வாளர் ஒருவர் தன் கைத்துப்பாக்கியால் சுட்டார். இதில் ஒரு கடத்தல்காரர் காயமுற்றார்.

143. 19–8–1983 அன்று, கன்னியாகுமரி மாவட்டத்தில், அருமனை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மல்லக்கம்பி அருகே, கேரளாவுக்கு அரிசி கடத்திச் செல்லும் பணியில் ஈடுபட்டிருந்த ஒரு லாரியை நிறுத்த, விளவங்கோடு வட்டார உணவு வழங்கல் அதிகாரி உத்தரவின்பேரில் காவல் துறையினர் சுட்டனர். இருவர் கைது செய்யப்பட்டனர். மாவட்ட ஆட்சித் தலைவரின் விசாரணை தேவையில்லை என்ற பரிந்துரை அரசின் பரிசீலனையில் உள்ளது.

144. 21–8–1983 அன்று, கேரளாவுக்கு அரிசி கடத்தும் பணியில் ஈடுபட்டிருந்த லாரியின் ஓட்டுநர், லாரியை வணிகவரி தணிக்கைச் சாவடிமீது மோதி விட்டு பின்னர், திருநெல்வேலி, புளியரையில் உள்ள உணவு வழங்கல் துறை தணிக்கைச் சாவடி மீதும் மோதிவிட்டு, ஓடிவிட்டார். உணவு வழங்கல் துறை தணிக்கைச் சாவடியின் பொறுப்பிலிருந்த துணை வட்டார ஆட்சியரின் உத்தரவின்பேரில் காவல் துறையினர் துப்பாக்கியால் லாரியின் டயரில் சுட்டு, அதில் இருந்த காற்றை இறக்கினர். விசாரணை தேவையில்லை என்ற மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையை அரசு ஏற்றுக்கொண்டது.

145. 30–8–1983 அன்று, தென்னார்க்காடு கச்சிராபாளையத்தில் முன் விரோதப் பகை காரணமாக ஒட்டர் வகுப்பினருக்கும், நாயக்கர் வகுப்பினருக்குமிடையே ஒரு மோதல் ஏற்பட்டது. உதவி ஆய்வாளர் ஒருவரும், காவலர் ஒருவரும் இதில் தலையிட்டபோது, கோபமடைந்த கூட்டத்தினர் அவர்கள் இருவரையும் தாக்கி, அவர்களுக்குக் காயம் ஏற்படுத்தினர். பின்னர் கூட்டத்தைக் கலைக்க ஆய்வாளர் வானத்தை நோக்கிச் சுட்டார். இச் சம்பவம் குறித்து விசாரணையின் அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.



146. 15–9–1983 அன்று, சேலம் அம்மாபாளையத்தில் சில விஷமிகள் அரசுக்குச் சொந்தமான காட்டு மரங்களை வெட்டிக்கொண்டிருந்தனர். வனத் துறை அலுவலர்கள் அவர்களைத் தட்டிக் கேட்டபோது, அவர்கள் வனத் துறை அலுவலர்களை விரட்டி அடித்தனர். வனத் துறை அலுவலர்கள் வேண்டுகோளின் பேரில் ஒரு காவல் படைக் குழு அனுப்பப்பட்டு, 5 பேர்கள் கைது செய்யப்பட்டனர். இதை எதிர்த்து கிராம வாசிகள் சுமார் 50 பேர் காவல்படைக் குழுவைத் தாக்கினர். இந்த மோதலில் கைது செய்யப்பட்டவர் தப்பி ஓடினர். இந்தத் தாக்குதலில் எட்டு வனத்துறை அலுவலர்களும், ஆறு காவல் துறை அதிகாரிகளும் காயமுற்றனர். காவல் துறை அதிகாரிகளின் உயிருக்கு ஆபத்து என்ற நிலையில், கட்டுக் கடங்காகக் கூட்டத்தைக் கலைக்க காவல் துறையினர், ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கியால் சுட்டனர். இச் சம்பவம் குறித்த விசாரணை அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

147. 30–9–1983 அன்று (தென்னாற்காடு) மண்டபத்தில் நெல்லைக் கடத்திச் செல்கின்ற ஒரு லாரியை நிறுத்த, உணவு வழங்கல் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை ஆய்வாளர் துப்பாக்கியால் சுட்டார்.

148. 12–11–1983 அன்று, செங்கற்பட்டு, கிழக்கு தாம்பரம் மற்றும் பல்லாவரம் ஆகிய இடங்களில் நடைபெற்றக் கூட்டுக் கொள்கை சம்பந்தமாக ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த ஒரு காவல் படைக் குழு பூந்தமல்லியிலுள்ள ஒரு மாந்தோப்பில் 4 பேர்களை சந்தேகிக்கும்படியான சூழ்நிலையில் கண்டனர். அக் காவலர் குழு அவர்களைப் பிடிக்க முயற்சி செய்த போது அவர்களில் ஒருவர் காவலர் ஒருவரை கோடாரியால் தாக்கினார். உடனே ஆய்வாளர் ஒருவர் தனது கைத் துப்பாக்கியால் இரு முறை சுட்டுக் காயப்படுத்தி, பின் அவரைக் கைது செய்தார்.

### கண்ணீர் புகை உபயோகம்.

149. 1983ஆம் ஆண்டு வட ஆற்காடு, தென்னாற்காடு மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் பொருட்டு மூன்று முறைக் கண்ணீர் புகைப் பிரயோகம் செய்யப்பட்டது.

## பிரிவு 7.

### காவலர்—பொது மக்கள் தொடர்பு.

150. காவல் துறை சிறப்புற இயங்க வேண்டுமெனில், பொது மக்களின் ஒத்துழைப்பும், நல்லெண்ணமும் மிக அத்தியாவசியத் தேவை என்பதை வலியுறுத்திச் சொல்ல வேண்டுவதில்லை. பொது மக்களிடம் ஏற்படுத்த சுமூகமான தொடர்பை நிலையான முயற்சிகள். மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

151. காவலர்-பொது மக்கள் தொடர்பு தமிழ் நாட்டில் நல்ல நிலையில் உள்ளது. மேலும் இரு தரப்பிலும் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும் தன்மை இருப்பதால் அமைதி தவழ்கிறது. பொது மக்களின் மத்தியில் நல்லெண்ணத்தை ஏற்படுத்த, காவல் துறையினர், செய்தித்தாள்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம் பெரு முயற்சி செய்து வருகின்றனர். காவல் துறையினர் பொது மக்களுக்கு உதவும் விதமும், குற்றவாளிகளைக் கட்டுப்படுத்தும் விதமும், திரைப்படமாக எடுக்கப்பட்டுப் பொதுமக்களுக்குக் காட்டப்படும்.

152. 1983ஆம் ஆண்டு புதுடில்லியில் "கூட்டு சேரா நாடுகளின் மாநாடு" (Non-Aligned meet) நடைபெற்றபோது தமிழ்நாடு காவல் துறையினர் பாதுகாப்புப் பணியை மேற்கொள்ள நியமிக்கப்பட்டனர். தமிழ்நாடு காவலர்களின் பணியை வெளிநாட்டுப் பெருமக்கள் பெரிதும் பாராட்டியது பெருமையுடன் குறிப்பிடத்தக்கது.

153. வேலூர் குற்றப் பிரிவைச் சேர்ந்த காவலர் 6457 திரு. சண்முகம் அண்ணா நீச்சல் குளத்தில் 26–6–1983ஆம் நாள் முதல் 29–6–1983ஆம் நாள் வரை தண்ணீரிலேயே உலக சாதனையை விஞ்சியிருக்கிறார்.

154. 28–11–1983 முதல் 4–12–1983 ஆம் நாள் முடிய கேரளாவில் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற முப்பத்து மூன்றாவது அகில இந்தியக் காவல் துறை விளையாட்டுக்கள் தெற்குப் பகுதி போட்டியில் தமிழ் நாடு காவல் துறை விளையாட்டுப் பிரிவு "கைபந்து" மற்றும் "கூடைப்பந்து" ஆகிய விளையாட்டுகளில் வெற்றியடைந்தும், "கபடி" மற்றும் "உடற்பயிற்சி திறமை" போட்டிகளில் இரண்டாம் இடத்தைப் பிடித்தும் சிறப்புற்றனர். இந்த நிகழ்ச்சியில் தமிழ் நாடு சிறப்புக் காவலர் பிரிவினைச் சேர்ந்த திரு. அமீர், ஹவில்தார் 161, தனி நபர் "சாம்பியனாக" வெற்றி பெற்றுள்ளார்.

155. 1983-ல் "லக்னோ"வில் 3-12-1983 முதல் 10-12-1983 முடிய நடைபெற்ற இருபத்தி ஏழாவது அகில இந்தியக் காவல் துறைப் பணியாளர்கள் விளையாட்டுப் போட்டிகளில் நான்கு தங்கம், மூன்று வெள்ளி மற்றும் இரண்டு வெண்கலப் பதக்கங்களையும் தமிழ்நாடு காவல் துறை வென்றது.

156. காவலர்களின் பணிகளில் பொதுமக்களை ஈடுபாடு கொள்ளச் செய்வதில் அலுவல் சார்பற்ற நிறுவனங்களைப் பயன்படுத்துவது காவலர்-பொது மக்கள் உறவினை மேம்படுத்தும் மற்றொரு முறையாகும். குற்றத் தடுப்பு மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடித்தல் ஆகிய பணிகளில் பொதுமக்களை ஈடுபடச் செய்வதில், பொதுத் தொண்டில் ஆர்வமுள்ளவர்கள் இடம் பெற்றுள்ள கண்காணிப்புக் குழுக்கள் பயன்படுத்தப்படுகின்றன.



157. இதைத் தவிர காவலர்களையும், பொது மக்களையும் சேர்த்து விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடுத்தி அவர்களிடையே நட்புணர்ச்சியை வளர்ப்பதும் இந்தத் திட்டங்களில் ஒன்றாகும். காவல் துறை விளையாட்டு வீரர்களும், மற்ற விளையாட்டு வீரர்களும் பந்தயங்களிலும், விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கெடுத்து தத்தம் திறமையை வெளிக்காட்டும் பொழுது, அவர்களிடையே நிலவும் நட்பு மனப்பான்மை மேலும் மேலும் காவலர்களிடம் மக்கள் வைக்க வேண்டிய நம்பிக்கையை வளர்க்க உதவும். இந்த அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் காவலர்களுக்கும், பொது மக்களுக்கும் சேர்த்து விளையாட்டுப் போட்டிகள் சிறந்த அளவில் நடத்தப்படும்.

ஊர்க்காவல் படை.

158. இந்தத் தொண்டு நிறுவனம், காவல் துறையினருக்குத் துணைப் படையாக திறம்படச் செயல்பட்டு வருகிறது. 1983ஆம் ஆண்டில் போக்குவரத்தை முறைப்படுத்துதல், இரவு நேரத்தில் ரோந்துப் பணி, திருவிழா பந்தோபஸ்து மற்றும் வடகிழக்குப் பருவக் காற்றின்போது வெள்ள நிவாரணப் பணி ஆகியவற்றிற்கு ஊர்க்காவல் படை பயன்படுத்தப்பட்டது. இதுநாள் வரை இந்திய விமானப்படையினரால் செய்யப்பட்ட பணியை 24-12-1983 ஆம் நாள் முதல் 29-12-1983 ஆம் நாள் முடிய சென்னை எம். ஏ. சிதம்பரம் விளையாட்டரங்கில் இந்தியாவிற்கும் மேற்கிந்தியத் தீவிற்குமிடையில் நடைபெற்ற ஆறாவது கிரிக்கெட் டெஸ்ட் பந்தயத்திற்கு ஊர்க்காவல் படையினரின் சேவையை நுழைவாயிலுக்கு பயன்படுத்தப்பட்டது ஓர் முக்கியமான நிகழ்ச்சியாகும். கிரிக்கெட் பந்தயத்தின்போது, அவர்கள் ஆற்றிய சிறப்பான சேவையைப் பொது மக்களும், நிறுவன அதிகாரிகளும் பெரிதும் பாராட்டினர்.

159. 1983-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் சென்னையில் நடைபெற்ற ஒன்பதாவது அகில இந்திய ஊர்க்காவல் படை உள்நாட்டுப் பாதுகாப்பு அலுவலர்கள் விளையாட்டு விழாவினை தமிழ்நாடு சிறப்பாக நடத்தியது. அரசுத் தொகுதி அணி, மீட்புப் பணி, ஆயுதமேந்திய கவாத்து, ஆண்கள் கைப்பந்து, பெண்கள் கைப்பந்து மற்றும் பீகாருடன் கூட்டாக விளையாட்டுகளில் சாம்பியன்ஷிப் கோப்பை ஆகிய ஐந்து சுழற் கோப்பைகளை வென்றதுடன் அனைத்து விளையாட்டுகளுக்குமாகச் சேர்ந்து அளிக்கப்படுகிற "சாம்பியன்ஷிப்" கேடயத்தையும் கைப்பற்றியது.

160. 1978 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட சென்னை மாநகரக்காவல் போக்குவரத்து வார்டன் அமைப்பு, 1978 ஆம் ஆண்டில் அமைக்க, அது முற்றிலும் தானே விரும்பி வந்து செயல்படுவோரைக் கொண்ட அமைப்பாக உள்ளது. இவ்வமைப்பு ஒரு முதன்மைப் பாதுகாவலர், ஒரு துணை முதன்மைப் பாதுகாவலர், எழுபது போக்குவரத்து நெறிக் காவலர்

ஆகியோரைக் கொண்டது. இந்த அமைப்பின் முக்கிய நோக்கம் போக்குவரத்துப் பாதுகாப்பினைப் பராமரிக்க காவலருக்கு உதவுவது, பொது மக்களுடனும் அதிகாரிகளுடனும் ஒத்துழைப்பது, விபத்தைத் தவிர்க்கவும், போக்குவரத்தைக் கட்டுப்படுத்தவும் ஒரு சரியான திட்டம் உருவாக்குவது, பாதைகளை பயன்படுத்துவோர்களிடையே பாதுகாப்புத் தேவையை உணர்த்துவது ஆகியவையாகும். முக்கியப் பிரமுகர்கள் வருகை, பெருந்திரளாக மக்கள் கூடுதல், கிரிக்கெட் விளையாட்டுப் பந்தோபஸ்து முதலியவற்றின்போது போக்குவரத்தை நெறிப்படுத்தும் பணியில் பாராட்டத்தக்க வகையில் இந்த அமைப்பு செயல் புரிந்துள்ளது.

161. தஞ்சை, திருச்சி, தென்னார்காடு, புதுக்கோட்டை மற்றும் இரமநாதபுரம் மாவட்டங்களில் வடகிழக்குப் பருவ காலத்தில் பெய்த பெருமழையினால் பலத்த உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் ஏற்பட்டன. இம் மாவட்டங்களில் துயர் துடைப்புப் பணி பெருமளவில் மேற்கொள்ளப்பட்டு சகஜ நிலைமைக்கு கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் காவல் துறையினர் உள்நாட்டுப் பாதுகாப்புப் பிரிவு மற்றும் ஊர்க் காவல் படையினர் ஆகியோர் துயர் துடைப்புப் பணி, மீட்புப் பணி ஆகியவற்றில் அரும்பெரும் சேவை புரிந்ததுடன் வெள்ளத்தால் பல ஆறுகளில் அடித்துச் செல்லப்படும் உயிர்களை தம்முடைய உயிரைப் பொருட்படுத்தாது காத்து மீட்ட செயல்களும், உண்மையிலேயே மிக உயர்ந்த செயலாகும். துயர் துடைப்புப் பணிகளில் பங்கேற்று காவல் துறைக்குப் பெருமை சேர்த்த ஒவ்வொருவரின் பெயரையும் குறிப்பிட்டுச் சொல்வது எளிதானதல்ல. உடைப்புகளை அடைப்பதிலும் பாதிக்கப்பட்டவர்களை காப்பாற்றியும் ஆதரவற்றவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்வதிலும், உணவுப் பொட்டலங்கள் வழங்குவதிலும், நோயுற்றவர்களுக்கு மருத்துவ வசதி செய்து கொடுப்பதிலும், போக்குவரத்து வசதி செய்து கொடுப்பதிலும் இரவு பகல் பாராது கண் விழித்து நாள் முழுவதும் அனைவரும் பெருந்தொண்டாற்றினர்.

### வீரச் செயலுக்கான விருது.

162. கோயம்புத்தூர் பி-1, குற்றப் பிரிவு உதவி ஆய்வாளரும், காவலர் திரு. கருப்பையா (எண். 306) என்பவரும் கேரளத்தில் 28 வழக்குகளில் சம்பந்தப்பட்ட இரண்டு பேர்களைப் பற்றிய துப்புக் கிடைத்ததின் பேரில் 4-6-1981 அன்று அவர்களைப் பிடிப்பதற்காக ஒரு நகைக் கடைக்குச் சென்றனர். காவலர்களைக் கண்டவுடன் அவர்கள் தப்பி ஓட முயன்றனர். ஆயினும் உதவி ஆய்வாளரும், காவலரும் ராஜன் என்ற சோமனைக் கைது செய்தனர். காவலர் திரு. கருப்பையா குற்றவாளியைப் பிடிக்கும்போது, குற்றவாளி திடீரென்று தன்னுடைய



இடையிலிருந்து ஒரு கத்தியை எடுத்து காவலர் திரு. கருப்பையாவை பல இடங்களில் குத்தினார். இவ்வாறு உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் குத்தப்பட்டும்கூட காவலர் அஞ்சா நெஞ்சத்துடன் தனது கடமையில் இருந்து தவறாது குற்றவாளியைத் தப்பவிடாமல் பிடித்துக்கொண்டார். இதற்கிடையில் உதவி ஆய்வாளர் தனது தடியினால் கத்தியைத் தட்டிவிட்டார். காவலர் திரு. கருப்பையா தனது கடமை உணர்வு, பொறுப்புணர்ச்சி மற்றும் வீரத்தை வெளிப்படுத்தியுள்ளார். அவருக்கு 18-6-1983 அன்று மத்திய அரசின் வீரச் செயலுக்கான காவலர் பதக்கம் வழங்கப்பட்டது.

## பிரிவு 8.

### நடப்பு ஆண்டில் வழங்கப்பட்ட ஆணைகள்

163. காவல் துறையினருக்கு பணியாளர் மற்றும் கருவிகள் பற்றிய வளர்ந்துவரும் தேவைகளைக் கருதி 1983-84 ஆம் ஆண்டில் கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு அரசு அனுமதி வழங்கியுள்ளது :—

(1) சென்னை மாநகரில் ஏற்படும் சட்டம், ஒழுங்கு நிலைமையைச் சமாளிக்கத் தேவையான அதிகப்படியான ஆயுதப் படைப் பணியாளர்களைக் கருத்திற்கொண்டு மேலும் ஆறு சேமப்படை அணிகள் அமைக்க அரசு அனுமதி அளித்துள்ளது.

(2) இதேபோல் பெரியார் மாவட்டத்திலுள்ள சேமப் படை அணிக்குத் தேவையான அதிகப்படியான பணியாளர்களைக் கருத்திற்கொண்டு மேலும் ஒரு சேமப்படை அணி அம் மாவட்டத்தில் அமைக்க அனுமதியளித்துள்ளது.

(3) தமிழ் நாடு மிகுந்த காடுவளம் நிறைந்ததாகும். இந்த காடுவளம் குறையாமல் அதைப் பாதுகாக்கும் பொருட்டு ஒரு விழிப்புக் குழு அமைக்க அரசு அனுமதியளித்துள்ளது. இந்த விழிப்புக் குழு ஒரு காவல்துறைத் துணைத் தலைவர் இரு காவல் துறை கண்காணிப்பாளர்கள் மற்றும் பணியாளர்கள், போதிய வாகனங்களைக் கொண்டதாக இருக்கும். இதற்காகத் திட்டமிடப்பட்ட தொடர் இனச் செலவு ரூபாய் 14.68 இலட்சம். தொடரா இனச் செலவு ரூபாய் 14.16 இலட்சம் ஆகும்.

(4) மதுரை, கோயம்புத்தூர் மாவட்டங்களில் பெருநகர் காவல் அமைப்பினை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இது குறித்து அரசுக்கு செயற்குறிப்புகள் சமர்ப்பிக்க ஆரம்பத்தில் காவல்துறைத் துணைத் தலைவர் நிலையில் உள்ள ஓர் தனி அலுவலரை நியமித்துள்ளது. இவ்வாண்டில் மதுரை,

கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களுக்குச் இச்செயற்குறிப்பு களை பரிசீலித்து அரசுக்கு அனுப்ப இரண்டு காவல் துறைத் துணைத் தலைவர் பதவிகளை அரசு ஏற்படுத்தியுள்ளது.

(5) விலை மதிப்புள்ள சிலைகள் மற்றும் விலை மதிப்பிட முடியாத புராதனச் சின்னங்கள் கோயில் சொத்துக்கள் மற்றும் பிற நினைவுச் சின்னங்கள் திருடாமல் பாதுகாக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக ஒரு சில பணியாளர் களைக் கொண்ட அமைப்பு ஒன்று குற்றம் மற்றும் புலனாய்வுத் துறையின் கீழ் இயங்கிக் கொண்டிருந்தது. இவ்வாண்டு அரசு இவ்வமைப்பை பலப்படுத்துவதற்காகத் தனிக் குழுவை ஏற்படுத்த முடிவு செய்து அதை காவல் கண்காணிப்பாளர் நிலையில் உள்ள ஒரு அலுவலரிடம் தேவையான பணியாளர்களுடன் ஒப்படைக்க முடிவு செய்துள்ளது.

(6) சென்னையிலுள்ள பெரிய மருத்துவ மனைகளில் உள்ள மருந்து, உணவுப் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்களைத் திருடுவதிலிருந்து பாதுகாக்கவும், சம்பந்தமில்லாமல் நபர்கள் மருத்துவ மனையில் நுழைவதைத் தடுப்பதற்கும் இப்பொழுது உள்ள காவல் அமைப்பினைப் பலப்படுத்துவதைப் பற்றி அரசு பரிசீலித்துள்ளது. இவ்வாண்டு இதற்காக 4 துணைக் காவல் கண்காணிப்பாளர்கள், 3 ஆய்வாளர்கள், 7 சார்பு ஆய்வாளர், 18 தலைமைக் காவலர் மற்றும் 116 காவலர் பதவிகளை ஏற்படுத்த அனுமதியளித்துள்ளது.

(7) '' மிராக்சோடு சேகரிப்பு '' தொடர்பாக எல்லாக் கை ரேகைகளையும் சேகரித்து அவற்றை நவீனமுறைப்படி பகுத்து வைப்பது சம்பந்தமான பணியைச் செய்து முடிக்க கைரேகைப் பிரிவில் மேலும் இரண்டு விரல் ரேகை கண்காணிப்பாளர், ஒரு விரல் கைரேகைப் பதிவு நிழற்படக் கலைஞர், 20 விரல் ரேகை வல்லுநர்கள் பதவிகளை ஏற்படுத்த அனுமதியளித்துள்ளது.

(8) காவல்துறையில் உள்ள சுருக்கெழுத்துப் பிரிவின் பணி பரந்து உள்ளதால் அதன் பணிகளை ஒழுங்குபடுத்துவதற்காகக் கூடுதல் பதவிகளை ஏற்படுத்தி வலுப்படுத்த வேண்டியுள்ளது. ஆகவே, ஒரு தலைமை நிருபர், 14 முதுநிலை நிருபர், 23 இள நிலை நிருபர், ஒரு உதவியாளர், 2 இளநிலை உதவியாளர் பதவிகளை ஏற்படுத்த அரசு அனுமதியளித்துள்ளது.

(9) குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தைக் கண்டிப்பாக அமுல்படுத்த அரசு தக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கான அமைப்பினை வலுப்படுத்த இயங்கும் காவல் பிரிவுக்காக 20 புள்ளி விவர ஆய்வாளர்கள், 20 சார்பு ஆய்வாளர்கள் பதவி களும், காவல் துறைத் துணைத் தலைவர் (குடியுரிமை பாது காப்புச் சட்டம்) அலுவலகத்திற்காக ஒரு கண்காணிப்பாளர் 3 உதவியாளர், 1 தட்டச்சர் பதவிகளும், புதிதாக ஏற்படுத்தப்



பட்டுள்ள ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு குழுவிற்காக ஒரு சமூகவியல் அலுவலர், ஒரு பொருளாதார அலுவலர், 1 தட்டச்சர், அடிப்படை ஊழியர்கள் பதவிகளை ஏற்படுத்த அரசு அனுமதியளித்துள்ளது.

ராம்பிரசாத்ராவ் கமிஷனுக்காக ஒரு காவல் கண்காணிப் பாளர் பதவியை ஏற்படுத்த அரசு அனுமதியளித்துள்ளது.

(10) மாவட்ட படைக்கலப் பிரிவினை வலுப்படுத்த சென்னை செங்கல்பட்டு கிழக்கு, தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி, மதுரை தெற்கு, திருநெல்வேலி, வட ஆற்காடு சேலம் மாவட்டங்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு சேமப்படைச் சார்பு ஆய் வாளர் பதவியினை ஏற்படுத்த அரசு அனுமதி அளித்துள்ளது.

(11) திருச்சிராப்பள்ளி நகரிலும் அதன் புறநகரிலும் போக்குவரத்து சமீபக் காலத்தில் வெகு வேகமாக வளர்ந்து வருவதால் போக்குவரத்தை முறைப்படுத்த போக்குவரத்துக் காவலர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டியுள்ளது. ஆகவே, ஒரு சேமப்படை ஆய்வாளர், 2 சேமப்படை சார்பு ஆய்வாளர், 5 தலைமைக் காவலர், 40 காவலர்கள் பதவிகளுக்கு அரசு அனுமதியளித்துள்ளது.

(12) கோயம்புத்தூர் (ஊரகம்) மாவட்டத்தில் குறிப்பாகத் திருப்பூரில் உள்ள போக்குவரத்து அமைப்பினை வலுப்படுத்த வேண்டியுள்ளது. ஆகவே, கோயம்புத்தூர் (ஊரகம்) மாவட் டத்தில் 1 சேமப்படை சார்பு ஆய்வாளர், 5 தலைமைக் காவலர் 25 காவலர்கள், (இரண்டாம் நிலை) பதவிகளை ஏற்படுத்த அரசு அனுமதியளித்துள்ளது. இதேபோல் ராமநாதபுரம் (கிழக்கு) மாவட்டத்திலுள்ள போக்குவரத்து அணியை வலுப்படுத்த மேலும் 1 சேமப்படை ஆய்வாளர், 8 காவலர்கள் பதவிகளுக்கு அரசு அனுமதியளித்துள்ளது.

(13) காவல்துறை மதுவிலக்கு பிரிவு, கள்ளத்தனமான காய்ச்சுதல் மற்றும் கடத்துதலைக் தடுப்பதற்குப் பெரும் பொறுப்பு கொண்டதாகும். இப்பிரிவுலுள்ள வேலைப் பளுவைக் கருத்திற்கொண்டு மேலும் ஒரு காவல் துறை கண்காணிப்பாளர், 11 துணைக் காவல் கண்காணிப்பாளர்கள், 49 ஆய்வாளர்கள், 50 சார்பு ஆய்வாளர்கள், 1 சேமப்படை ஆய்வாளர், 1 சேமப் படை சார்பு ஆய்வாளர், 89 தலைமைக் காவலர், 44 காவலர் (முதல் நிலை), 556 காவலர்கள் (இரண்டாம் நிலை), 102 ஓட்டுநர் காவலர்கள், 2 மெக்கானிக் தலைமைக் காவலர் மற் றும் அடிப்படை ஊழியர்கள் உட்பட 163 அமைச்சுப் பணியாளர் கள் பதவிகளுக்கு அனுமதியளித்துள்ளது. இக் குழுவிற்கு 15 அம்பாசிடர் கார்கள், 34 பிக்கப் வேன்கள், 2 ஜீப்புகள் வழங் கப்பட்டுள்ளது. இதற்கு மொத்த தொடரின — தொடரா இனைச் செலவு ரூபாய் 1.41 கோடியாகும்.

(14) ஊட்டி-குன்னூர் உட்கோட்டங்களை இரண்டாகப் பிரித்ததின் விளைவாக ஒரு துணைக் காவல் கண்காணிப்பாளர் பதவிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(15) அமைச்சுப் பணியாளர்களின் வேலைப்பளு அதிகமாக உள்ளது. ஆகவே, கூடுதல் பணியாளர்கள் தேவை என்ற முறையீடுகளை அரசு கருத்திற் கொண்டுள்ளது. அமைச்சுப் பணியாளர்களின் வேலைப் பளுவை மதிப்பிடுவதற்கும், அதிகப்படியான பணியாளர்களை வழங்கவும் அரசு உள்துறை சார்புச் செயலர், நீதித்துறை சார்புச் செயலர், காவல்துறை இயக்குநரின் நேர் உதவியாளரைக் கொண்ட குழு ஒன்றை அரசு நியமித்தது. அக்குழு தனது அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்துள்ளது. அக்குழுவின் பரிந்துரைகள் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

(16) தமிழ்நாடு முதலமைச்சர் காவல் பதக்கங்களின் எண்ணிக்கையை 40-லிருந்து 50-ஆக உயர்த்த அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(17) திருப்பூரில் ஒரு புதிய போக்குவரத்து காவல் நிலையம் ஏற்படுத்த அரசு அனுமதியளித்துள்ளது. ஊட்டி உட் கோட்டத்தை ஊட்டி, குன்னூர் என்று இரண்டு பிரிவாக பிரிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(18) தமிழ்நாடு காவலர் நல நிதிக்கு அரசுத் தொகையை ரூபாய் 2.5 இலட்சமாக உயர்த்த அனுமதி வழங்கியுள்ளது.

(19) நவீன குற்றங்களை கண்டுபிடிக்க, பொய் கண்டு பிடிக்கும் கருவி, உலோகம் கண்டுபிடிக்கும் கருவி, அல்ட்ரா வயலட் கதிர், மைக்ரோ பிலிம் போன்ற நவீனக் கருவிகளை வாங்க 1983-84 முதல் 5 வருடங்களுக்கு மொத்தம் ரூபாய் 1,86,528 தொடரினச் செலவிற்கும், ரூபாய் 27,45,050 தொடரா இனச் செலவிற்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது

(20) ரூபாய் 40 இலட்சம் செலவில் 400 வாக்கி டாக்கிக் கருவிகள் வாங்க அரசு அனுமதி அளித்துள்ளது.

(21) ரூபாய் 25 இலட்சம் செலவில் 50 காவல் நிலையங்களில் இணைப்புக் கட்டிடங்கள் கட்ட அரசு அனுமதி அளித்துள்ளது.

(22) காவல் நிலையங்கள் மற்றும் புறக்காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டிடங்கள் கட்டுவது அரசின் முக்கியக் கொள்கையாகும். ரூபாய் 3.31 கோடி செலவில் காவல்/புறக்காவல் நிலையங்களுக்கு படிப்படியாக 95 கட்டிடங்கள் கட்ட அரசு அனுமதி அளித்துள்ளது. அதில் 1983-84-ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 50 இலட்சமாகும்.





(23) கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மாவட்டங்களில் சமீப காலத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு முக்கியப் பிரமுகர்கள் வருகை தருவது பெருகிவிட்டதால் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கத் தனியாகட் பணியாளர்கள் ஏற்படுத்த வேண்டும் என்று கருதப்படுகிறது. அதன்படியே 2 சார்புச் ஆய்வாளர்கள், 3 தலைமை காவலர்கள், 1 காவல் ஓட்டுநர் (இரண்டாம நிலை) அடங்கியத் தனிப்பாதுகாப்பு பிரிவுகளை இவ்விடங்களில் ஏற்படுத்தவும், 3 அம்பாசிடர் கார்கள் வாங்கவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(24) காவல்துறை ஆயுதங்களை நல்ல முறையில் பராமரிக்கத் தமிழ்நாடு சிறப்புக் காவல் முதல் அணியின் ரிபிரெஷனிங் மையத்திற்கு ஒரு ஹவில்தார். இரண்டு இரண்டாம் நிலைக் காவலர்கள் பதவிகள் ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(25) வேலூர் (வடக்கு) குற்றக் காவல் நிலையத்தில் வேலைப் பளு அதிகமானதின் விளைவாக இரண்டு தலைமைக் காவல 9 காவலர்கள் பதவிகள் ஏற்படுத்த அரசு ஆணை வழங்கியுள்ளது.

(26) தென்காசி உட்கோட்டத்தில் சிறப்புப் பிரிவில் வேலைப் பளு மிகுந்ததின் காரணமாகப் புலனாய்வு வேலையைக் கவனிக்க 3 சார்பு ஆய்வாளர் 4 தலைமைக் காவலர்கள் பதவிகள் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

## பிரிவு 9.

## முடிவுரை.

164. நம்முடைய சமுதாயத்தைப் போன்ற வளர்ந்து வரும் சமுதாயத்தில் காவல்துறையின் பணி மிகவும் கடினமானது.. பொருளாதார சமூக மாற்றங்கள் ஏற்படுகின்ற சூழ்நிலையில் காவலர்களின் பொறுப்பு சிக்கல் நிறைந்ததாக உள்ளது. ஏழை மக்களுக்கும் சமுதாயத்தில் நலிவுற்றோருக்கும் பின்னடைந்தோர்க்கும் தொண்டாற்றுவதைக் குறிக்கோளாக வைத்து, காவல் துறையினர் தம்முடைய பொறுப்புகளை உறுதியான, ஆனால் சாமர்த்தியமான முறையில் நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கின்றனர். காவலர்களும் சமுதாயத்தினுடைய உறுப்பினர்கள்தான். ஆகவே சமுதாயத்தில் ஏனைய பிரிவினரை பாதிக்கின்ற சமூக உந்தல்களுக்கு ஆளாகிறார்கள். இருப்பினும் இவர்கள் மற்றவர்களைவிட தம்மை மேம்படுத்தி காட்டும் வகையில் சட்டத்திற்கு கட்டுப்படும் குடிமகனுக்கு நண்பனாகவும் நலிவுற்றவர்களுக்கு உதவியும், நியாயமும், நீதியும் தர மாபெரும் கடமையை ஆற்றுபவராகவும் இருக்க வேண்டும். சமுதாயத்தைக் கொடுமைக்கு ஆளாக்குகின்ற குற்றவாளிகளை உறுதியுடன் அடக்குபவர்களாகவும், சட்டம் ஒழுங்கை குலைக்கும் வகையில் எழுகின்ற சிக்கல்களை திறம்பட தீர்ப்பவராகவும் காவலர்கள் செயல்பட வேண்டும்.

[1984 மார்ச் 29

165. தமிழ்நாடு காவல் துறை அவ்வப்போது அளிக்கப்பட்ட
பொறுப்புகளையும், கடமைகளையும் திறம்பட நிறைவேற்றி வரு
கிறது. தமிழகத்தில் சென்னை, மதுரை, கோவை போன்ற
பெருநகரங்களிலும் நகராட்சிகளிலும் மற்றும் கிராமப்புறங்களி
லும் சேர்த்து ஏறக்குறைய 5 கோடி மக்கள் வாழ்கின்றனர். இத்
தகைய பெரிய மாநிலத்தில் எழுகின்ற சிக்கலான பிரச்சினை
களைத் தீர்க்க சுமார் 56,000 பேர்களைக் கொண்ட காவற்படை
போதுமானது அல்ல. இதைக் கருத்திற்கொண்டு பார்க்குங்கால்
தமிழக காவல் துறையினர் தம்முடைய பணியினை உறுதியோடு
திறம்பட தீவிரமாகவும் ஆர்வத்துடனும் பொதுத் தொண்டு புரி
யும் உணர்வோடும் செய்துள்ளனர் என்பதில் ஐயமில்லை.
தமிழ்நாடு காவல் துறையினர் தம்முடைய கடமைகளை ஆற்றும்
பொழுது சில அடிப்படை வழிமுறைகளை பின்பற்றி நடப்ப,
தாலும் அவ்வழி முறைகள் அன்றாட நிர்வாகத்தில் பெருங்
குறிக்கோளாக இருப்பதாலும் காவல் துறையில் இத்தகைய
பணியை செவ்வனே செய்ய முடிகிறது. இந்த வழி முறைகளை
இங்கே எடுத்துக் கூறினால் அது மிகவும் சிறப்புடையதாக இருக்
கும்.

(அ) தெரிவிக்கப்பட்ட எல்லாக் குற்றங்களும் புள்ளி விவர
நிலையைக் கருதாமல் கட்டாயமாகப் பதிவு செய்யப்படும். இவ்
வாறு தெரிவிக்கப்படும் குற்றங்களைப் பதிவு செய்வதன் மூலம்
தான் அக்குற்றங்களை வெளிப்படுத்தி நடவடிக்கைகள் மேற்
கொள்ள இயலும்.

(ஆ) மிகச் சிறிய குற்றங்கள் குறித்து இயன்ற வரையில்
அக்குற்றங்களைச் செய்தோரை எச்சரித்து விட்டுவிட வேண்டும்.
காவல்துறை, நீதிமன்றங்கள், சிறைத்துறை மற்றும் குற்றவாளி
கள் நன்னடத்தையைக் கண்காணிக்கும் பிரிவு ஆகியவை அடங்
கிய மாநிலக் குற்றவியல் நிர்வாகம் தன் வசமுள்ள வரையறுத்த
அளவு வசதிகளை அநாவசியமாகப் பயன்படுத்தவோ, சிதறடிக்
கவோ கூடாது. மது விலக்கைப் பொறுத்தவரை கள்ளச்
சாராயம் காய்ச்சுதல், அவற்றைக் கடத்துதல், அவற்றைப் பெரு
மளவு கையிருப்பு வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய
வற்றைத் தடுப்பதில் தீவிர கவனம் செலுத்தவேண்டும்.

(இ) காவலரிடம் முறையிடவோ, குற்றம் சாட்டப்பட்டவ
ராகவோ அல்லது உதவிகோரியோ வருபவர்களில் பெரும்பான்
மையான மக்கள் ஏழைகளாகவும் சமூகத்தில் கீழ் மட்டத்தில்
உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதைக் காவல்துறை
நன்கு புரிந்து கொள்ளவேண்டும். எனவே அவர்களிடம் காவலர்
அன்பும் அனுசரணையும் காட்டி நடந்து கொள்ளவேண்டும்.

(ஈ) காவல் துறையினர் மொத்தத்தில் எப்பொழுதும் நேர்
மையாகவும் திறமையாகவும் இருப்பார்கள். இதற்காகக் கட்டுப்
பாடு மற்றும் எல்லாப் பணிகளிலும் உயர்வான தரம் ஆகியவை



1984 மார்ச் 29]

குறிப்பாக நேர்மையும் மற்றும் திறமையற்றவர்களைப் பொறுத்
துத் தயை தாட்சண்யமின்றி செயற்படுத்தப்படும். இவ்வாறு
செயல்படும் பொழுது காவலர்களை விடக் காவல்துறை அதி
காரிகளைப் பொறுத்தமட்டில் இது மேலும் தரக் கண்டிப்
புடன் கடைப்பிடிக்கப்படும்.

(உ) காவல்துறையினரின் தூய்மையையும் திறமையையும்
உறுதி செய்யும் பொருட்டு அவர்களது ஒழுங்குணர்வையும்
கட்டுப்பாட்டையும் உயரிய நிலையில் பேணிவரவேண்டும். இதை
சாதிப்பதற்கு வேண்டிய இன்றியமையாத அடிப்படை நட
வடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஊ) பொதுமக்கள் சிறந்த காவல் பாதுகாப்பிற்கு உரிமை
உடையவர்கள் ஆவர். எனவே இது காறும் போதிய அளவுகாவல்
பாதுகாப்பு இல்லாத பகுதிகளில் காவல் நிலையங்கள் அமைத்து
அவற்றில் நன்கு பயிற்சி பெற்ற காவலர்கள் போதிய எண்ணிக்கை
யில் நியமிக்கப்படுவர்.

(எ) அவ்வாறு திறம்படைத்த காவல் பாதுகாப்பு இட்டு
வதை உறுதி செய்யும் பொருட்டு காவல் துறையின் பயிற்சி
வசதிகள் மேம்படுத்தப்படும். ஆராய்ச்சி வசதிகள் வலுப்படுத்
தப்படும். காவல்துறையை நவீனப் படுத்தலும் தொடரும்.

(ஏ) இயன்றவரை வன்ம் மற்றும் வனவிலங்குகளைப் பாது
காத்தல், விலங்குகளைக் கொடுமைப்படுத்துவதைத் தடுத்தல்,
துப்புரவுக் கேடு, சப்தத்தால் வரும் கேடு, தூய்மைக்குக்கேடு
ஆகியவற்றைத் தவிர்த்தல் போன்ற ஏனைய பணிகளிலும் காவல்
துறை முனைப்புடன் உதவி புரிய வேண்டும்.

(ஒ) பொதுமக்களின் நன் மதிப்புடன் பெறும் ஆதரவு
இன்றியமையாதது என்பதைக் காவல் துறையினர் உணர்ந்து
இத்தகைய ஒத்துழைப்பை மிக அதிக அளவில் பெறும் வகையில்
மக்கள் தொடர்பைச் சீர்ப்படுத்திக்கொண்டு மேலும் தங்கள்
பணிகளைத் தொடரவேண்டும்.

166. பெற்றோர் மீது மாறா அன்பு, குடும்பப்பற்று, பிள்
ளைப் பாசம் இது போன்ற மனிதத்தன்மை காவல் துறையில்
பணியாற்றுபவர்களுக்கும் இருப்பது இயல்பு ; தவிர்க்க இயலா
தது. ஆனால் சில சமயம் ஒட்டுமொத்த சமூக நலனை முன்
னிறுத்தி மேலே சொனனவைகளை எல்லாம் மறந்து தனது
நாட்டு நலனுக்காகத் தன்னையே தியாகம் செய்ய உளமறிந்து
ஏற்றுக்கொள்ளும் பணிதான் காவல்துறைப் பணியாகும். ஊதிய
உயர்வு, பதவி உயர்வு, பதக்கங்கள் இவை போன்றவைகளால்
மட்டும் அவர்கள் உள்ளம் நிறைவு பெறுவதில்லை. மக்கள்
அனைவரும் காட்டும் அன்பினால் மட்டுமே அவர்கள் மனநிறைவு
பெறுவர். பொது மக்களின் இத்தகைய நல்லெண்ணத்தை-
மக்கள் நல்க வேண்டும். காவல் துறையினரும் இதை உணர்ந்து
சமூகத்தின் ஒழுங்கைக் கட்டுப்பாட்டை, சீர்மையை, அமைதியைக்

[1984 மார்ச் 29

காக்கும், உருவாக்கும், மாபெரும் பொறுப்பை ஏற்ற நாட்டுத் தொண்டராக ஒவ்வொருவரும் தன்னை எண்ணித் தியாகச் செம் மல்களாகச் செயல்பட்டு சமூகத்துக்குச் சேவை செய்யவேண்டும். மக்களுக்கும் காவல் துறைக்கும் இணைப்புப் பாலமாக அரசியல் கட்சித் தலைவர்களும் கட்சிகளும் ஒத்துழைப்புத் தரவேண்டும்.

167. இத்தகைய சூழ்நிலையில் மேற்கண்ட வழி முறைகளைத் தொடர்ந்து கடைப்பிடித்து, வரும் ஆண்டில் மேலும் திறமை யுடன் பணிபுரிய தமிழகக் காவல் துறை அனைத்து முயற்சிகளை யும் மேற்கொண்டு செயல்படும்.

பிற்சேர்க்கை 1.

டிசம்பர் 31, 1983ஆம் தேதியில் காவல்துறையின் எண்ணிக்கை.

| | |
|---|---|
| காவல்துறை இயக்குநர் | 1 |
| இன்ஸ்பெக்டர்-ஜெனரல் | 2 |
| காவல்துறை ஆணையர் | 1 |
| காவல்துறைத் துணைத் தலைவர் | 21 |
| காவல் கண்காணிப்பாளர் | 51 |
| இணைக் காவல் கண்காணிப்பாளர் | 5 |
| கூடுதல் காவல் கண்காணிப்பாளர் | 35 |
| தளவாய் | 8 |
| துணைத் தளவாய் | 4 |
| உதவிக் காவல் கண்காணிப்பாளர் | 12 |
| துணைக்காவல் கண்காணிப்பாளர்-தரம் 1 | 209 |
| துணைக் காவல் கண்காணிப்பாளர்-தரம் 2 | 34 |
| உதவித் தளவாய் | 32 |
| அட்சுடண்ட் ஆய்வாளர்/ஆய்வாளர் | 1,120 |
| சேமப்படை இன்ஸ்பெக்டர் | 90 |
| சார்பு ஆய்வாளர் | 3,549 |
| சேமப்படை சார்பு ஆய்வாளர் | 334 |
| உதவி சார்பு ஆய்வாளர் | 43 |
| சேமப்படை உதவி சார்பு ஆய்வாளர் | 167 |
| தலைமைக் காவலர் | 5,250 |
| ஹவில்தார் | 660 |
| நாயக்குகள் | 594 |
| லான்ஸ் நாயக்குகள் | 523 |
| காவலர் நிலை 1 | 4,639 |
| காவலர் நிலை 2 | 38,424 |
| மகளிர் சார்பு ஆய்வாளர் | 82 |
| மகளிர் தலைமைக் காவலர் | 73 |
| மகளிர் காவலர் | 666 |
| மொத்தம் | 56,629 |



1984 மார்ச் 29]

பிற்சேர்க்கை 2.

ஜனவரி 1, 1983-லிருந்து டிசம்பர் 31, 1983 வரை ஒப்பளிப்பு செய்யப்பட்ட கூடுதல் பணியாளர் பற்றிய விவரங்கள்.

(அ) செயல் அலுவலர்கள்.

| | | |
|---|---|---|
| 1 | காவல் துறைத் துணைத் தலைவர் | 2 |
| 2 | காவல் கண்காணிப்பாளர் | 5 |
| 3 | கூடுதல் காவல் கண்காணிப்பாளர் | 1 |
| 4 | துணைக் காவல் கண்காணிப்பாளர் | 21 |
| 5 | ஆய்வாளர் | 60 |
| 6 | சேமப்படை ஆய்வாளர் | 4 |
| 7 | சார்பு ஆய்வாளர் | 152 |
| 8 | சேமப்படை சார்பு ஆய்வாளர் | 16 |
| 9 | சேமப்படை உதவி சார்பு ஆய்வாளர் | 3 |
| 10 | தலைமைக் காவலர் | 227 |
| 11 | ஹவில்தார் | 1 |
| 12 | காவலர் நிலை 1 | 52 |
| 13 | காவலர் நிலை 2 | 1,568 |
| 14 | நாயக்குகள் | 28 |
| 15 | லான்ஸ் நாயக்குகள் | 4 |
| | மொத்தம் | 2,144 |

(ஆ) அமைச்சுப் பணியாளர்கள்.

| | | |
|---|---|---|
| 1 | நேர்முக உதவியாளர் | 1 |
| 2 | கண்காணிப்பாளர்கள் | 7 |
| 3 | உதவியாளர்கள் | 35 |
| 4 | இளநிலை உதவியாளர்கள் | 34 |
| 5 | சுருக்கெழுத்துத் தட்டச்சர் | 1 |
| 6 | தட்டச்சர்கள் | 5 |
| 7 | இளநிலை உதவியாளர்-தட்டச்சர் | 5 |
| 8 | பதிவெழுத்தாளர்கள் | 3 |
| 9 | தனிப் பிரிவு உதவியாளர்கள் | 2 |
| 10 | அடிப்படை ஊழியர்கள் | 97 |
| | மொத்தம் | 190 |

(இ) தொழில் நுட்பப் பணியாளர்கள்.

| | | |
|---|---|---|
| 1 | வானொலி ஆய்வாளர் .. .. .. | 1 |
| 2 | வானொலி உதவி ஆய்வாளர்கள் .. | 6 |
| 3 | இளநிலை உதவி ஆய்வாளர் (தொழில் நுட்பம்). | 1 |
| 4 | தலைமை அறிக்கையாளர் .. .. | 1 |
| 5 | முதுநிலை அறிக்கையாளர்கள் .. .. | 10 |
| 6 | இளநிலை அறிக்கையாளர்கள் .. .. | 15 |
| 7 | விரல் ரேகைப் பதிவு கண்காணிப்பாளர்கள் | 2 |
| 8 | விரல் ரேகைப் பதிவு வல்லுநர் .. .. | 1 |
| 9 | தொழில் நுட்ப அலுவலர் .. .. | 1 |
| 10 | நிழற் படம் பிடிப்பவர்கள் .. .. | 6 |
| 11 | புள்ளி விவர ஆய்வாளர்கள் .. .. | 20 |
| 12 | சமூக இயல் வல்லுநர் .. .. | 1 |
| 13 | பொருளாதார வல்லுநர் .. .. | 1 |
| | மொத்தம் .. | 66 |

## இணைப்பு II.

(......37ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### தமிழ்நாடு தீயணைப்புத் துறை.

### மானியக் கோரிக்கை எண் 16.

### கொள்கைக் குறிப்பு

### 1984—85

தீயினால் அழிக்கப்படும் எண்ணற்ற மனித உயிர்கள் மற்றும உடைமைகளின் சேதம் காரணமாக நமது நாடு ஒவ்வொ ஆண்டும் மிகவும் பாதிக்கப்படுகிறது. தமிழ்நாட்டிலும் தீரு னால் ஏற்படும் சேதங்கள் பெருமளவில் உள்ளன. 1983—யி ஆம் ஆண்டில் தமிழ் நாடு முழுவதும் தீயினால் சேதமடை 84 உடைமைகளின் மதிப்பு ஏறத்தாழ ரூபாய் எட்டு கோடி ந்த ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் வெள்ளத்தினா லும் இதர இயற்கை இடர்பாடுகளினாலும் உயிர்களுக்கும், உடைமைகளுக்கும், பயிர்களுக்கும் சேதங்கள் ஏற்படுவதுடன் மக்களுக்குத் துன்பமும் துயரமும் விளைகின்றன. எனவே மீட்பு மற்றும் இதர பணிகளின் மூலமாக தீ விபத்துக்களைத்



தடுப்பதும், தீயினாலும் இதர இயற்கை இடர்பாடுகளினாலும் ஏற்படும் அழிவுகளின் விளைவுகளைக் குறைப்பதாக இருந் நாடு தீயணைப்புத் துறையின் முக்கிய குறிக்கே வருகின்றன.

2. மத்திய அரசினரால் அளிக்கப்படும் கடன் மற்றும் உதவித் தொகைகளையும் ஏற்றுக் கொண்டும் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பெற்ற நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப் படும் கடன் வசதிகள் மூலமாகவும், இம்மாநிலத்தின் நிதி நிலைமைக்குட்பட்டும் முடிந்த அளவு அதிகமான எண்ணிக் கையில் இம்மாநிலத்தில் தீயணைப்பு நிலையங்கள் திறப்பது தான் அரசின் குறிக்கோளாகும். இம்மாநிலம் முழுவதும் 25 கி.மீ. தூரத்துக்கு ஒன்று வீதம் ஒவ்வொரு இடத்திலும் தீயணைப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்துவதற்கு அரசு பெரு முயற்சி எடுத்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு தீ விபத்துக்கள் ஏற்படுவதற்கு அதிகம் வாய்ப்புடைய தொழிற் சாலைகள் அல்லது குடிசைகள் நிறைந்த பகுதிகளுக்கு முக் கியத்துவம் கொடுத்தும் தமிழகத்தில் புதிய தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்த வேண்டிய நகரங்களின் முன்னுரிமைப் பட்டியல் ஒன்றிற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. ஒப்பளிக்கப் பட்ட பட்டியலிருந்து நிதி நிலைமைக்கேற்ப ஒவ்வொரு ஆண் டும் தீயணைப்பு நிலையங்கள் திறக்க அரசு ஒப்புதலளித்து வருகிறது.

3. சிறந்த நவீன தொழில் நுடபம் வாய்ந்த புதிய ஊர்தி களையும் இதர தீயணைப்பு சாதனங்களையும் வாங்குவதன் மூலம் இம்மாநிலத்தின் தீயணைப்புத் துறையை நவீனப் படுத்துவதற்கு அரசு அதிகபட்ச முயற்சி எடுத்து வருகின்றது. இதற்காக இந்திய பொது ஈட்டுறுதி கழகத்திடமிருந்து ரூபாய் 1.41 கோடி கடனாக பெறப்பட்டது.

4. தீயணைப்புப் பணியாளர்களின் நலனை அரசு உரிய கவனத்துடன் பரிசீலித்து வருகிறது. உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் மற்றும் கீழ்நிலைப் பதவிகளிலுள்ள பணியாளர்களுக்கு சில இன்றியமையாத உணவுப் பொருட்கள் மலிவு விலையில் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. இதற்காக ஆண்டு ஒன்றிற்கு சுமார் ரூபாய் 30 இலட்சம் அரசுக்கு செலவாகின்றது. உடுமலைப்பேட்டை, இராணிப் பேட்டை மற்றும் சிவகாசி ஆகிய இடங்களில் தீயணைப்புத் துறை பணியாளர்களுக்காக குடியிருப்புகள் கட்ட அரசு ஒப் பளிப்பு வழங்கியுள்ளது.

5. தீயணைப்புத் துறையின் முக்கிய நடவடிக்கைகளும் 1983-84 ஆம் ஆண்டில் இத்துறை நிகழ்த்திய சாதனைகளும் தொடர்ந்துவரும் பத்திகளில விவரிக்கப்பட்டுள்ளன.

[1984 மார்ச் 29

1967 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் தனித் துறையாக இயங்கிவரும் தமிழ்நாடு தீயணைப்புத் துறை இந்நாட்டிலேயே மிகப் பெரிய துறை மற்றும் சீரிய திறன் வாய்ந்த துறைகளுள் ஒன்று என்ற நற்பெயரையும் தொடர்ந்து நிலைநாட்டி நற்பணி புரிந்து வருகிறது. உயிரையும், உடைமைகளையும் தீ விபத்துக்களினின்றும் காப்பாற்றுவதே இத் துறையின் முக்கிய குறிக்கோளாகும். தீ விபத்தினை தடுப்பதும், தீயை அணைப்பதும், இத்துறையின் தலையாய பணியாயினும், பிற வகையிலும் பல நிலைகளில் பொதுமக்களின் நலனுக்காக விலைமதிப்பிட இயலாத உதவி புரிந்து சீரிய பணியாற்றி வருகிறது. பொருட்காட்சிகளிலும், திருவிழாக்களிலும், தீத்தடுப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதுடன், சிதைந்த கட்டிடங்களின் இடிபாடுகளில் சிக்கிய, ஆழ்கிணற்றில் வீழ்ந்த வெள்ளம் மற்றும் இதுபோன்ற பிற இடர்களில் அகப்பட்ட மக்களையும், கால்நடைகளையும் மீட்கும் நற்பணியையும் புரிந்து வருகிறது. மிகப்பெரிய நகரங்களிலுள்ள தீயணைப்பு நிலையங்களில் நோயாளர் ஊர்திகளையும் பராமரித்து வரும் இத்துறை, இவ்வூர்திகளின் மூலம் நோயுற்றவர்களையும், காயமுற்றவர்களையும் உடனடி மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு விரைந்து அழைத்துச் செல்ல உதவுகிறது. இத்துறையின் பணி இரவுபகலென ஒரு நாளின் இருபத்து நான்கு மணி நேரமும் எந்நேரத்திலும் பொதுமக்களுக்கு கிடைக்கிறது. தொத்து நோய்கள் பெருவாரியாக பரவும் காலங்களில் மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு இத்துறை பெரிதும் உதவி புரிகிறது. தேர்தல் காலங்களின்போதும் கலவரங்களின்போதும் மற்றும் பந்தோபஸ்து நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போதும் காவல் துறையினருடன் இணைந்து பணியாற்ற தீயணைப்பு பணியாளர்களும் அனுப்பி வைக்கப்படுகின்றனர். இத்தகைய பலதரப்பட்ட மனிதாபிமான தொண்டாற்றுவதுடன், இத்துறை செயல் அலுவலர்கள் பொதுமக்கள் கூடும் இடங்கள் பற்றிய சட்டம், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், சென்னை மாநகராட்சி சட்டம், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், படைக்கலச் சட்டம், ஆகியவற்றின் கீழும் அவற்றில் இயற்றப்பட்ட விதிகளின்படியும், தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளின்படியும் உரிமங்கள் வழங்கப்பட்டுள்ள அல்லது வழங்கப்படவுள்ள பல்வேறு இடங்களை ஆய்வு செய்யும் பணிகளையும் மேற்கொள்கின்றனர்.

6. நிருவாக அமைப்பு—

இத்துறை, தமிழ்நாடு தீயணைப்புத் துறை இயக்குநரின் தலைமையின் கீழ் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இம் மாநிலம் இரண்டு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு ஒன்று சென்னையையும், மற்றொன்று மதுரையையும் தலைமையிடமாகக்



1984 மார்ச் 29]

கொண்டு, தனித் தனி துணை இயக்குநரின் கீழ் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மண்டலமும் கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது ; ஒவ்வொரு கோட்டமும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களை தன்னகத்தே கொண்டு ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் கீழ் செயல்புரிந்து வருகிறது. கோட்டத் தீயணைப்பு அலுவலருக்கு நிருவாக மற்றும் செயல் பணிகளில் உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் உதவி புரிகிறார். சமீப காலத்தில் பல புதிய தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட்டதன் காரணமாக, ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் அதிகார வரம்பிற்குட்பட்ட தீயணைப்பு நிலையங்களின் எண்ணிக்கை அதிகமாகி விட்டது.

படிப்படியாக தற்போதுள்ள மண்டலங்கள் மற்றும் கோட்டங்
களைமேற்கொண்டு பிரிப்பதற்கு அரசு உத்தேசித்துள்ளது. முதற்
கட்டமாக சேலம்-தருமபுரி-வட ஆற்காடு மற்றும் திருநெல்வேலி-
கன்னியாகுமரி-இராமநாதபுரம் ஆகிய இரு கோட்டங்களை
தேவையான பணியாளர்களுடன் பிரித்து 1982-இல் அரசு
ஆணைகள் பிறப்பித்தது. 1983-இல் திருச்சிராப்பள்ளி-புதுக்
கோட்டை-தஞ்சாவூர் கோட்டத்தை பிரிக்கவும் ஆணைகள்
வழங்கப்பட்டன. தற்சமயம் ஒரு கோட்டத் தீயணைப்பு அலு
வலர் தலைமையின் கீழ் ஒரு கோட்டம் என மொத்தம் பதினோரு
கோட்டங்கள் உள்ளன.

7. தீயணைப்பு நிலையங்கள் :

இம்மாநிலத்தில் 1984 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1 ஆம்
நாள் நிலவரப்படி, இத்துறைப் பணியாளர்களால் நிருவகிக்கப்
பட்டுவரும் சேலம் உருக்காலைத் தீயணைப்பு நிலையம் உட்பட
மொத்தம் 131 தீயணைப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன.
(விவரங்கள் இணைப்பு 1-இல் கொடுக்கப்பட்டுள்ளன.)

இவற்றுள் 20 தீயணைப்பு நிலையங்கள் சென்னை மாநகரி
லும், ஏனைய 111 தீயணைப்பு நிலையங்கள் மற்ற மாவட்டங்
களிலும் அமைந்துள்ளன. இவ்வாண்டில், புதிதாக திறக்கப்
பட்ட பொன்னமராவதி, வேப்பூர் மற்றும் ஒரத்த நாடு ஆகிய
மூன்று தீயணைப்பு நிலையங்களும் இதில் அடங்கும்.

மேற் சொன்ன தீயணைப்பு நிலையங்களைத் தவிர அரசின
ரால் ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட 34 தீயணைப்பு நிலையங்கள்
திறக்கப்பட வேண்டியவையாகும். (விவரங்கள் இணைப்பு
2-இல் கொடுக்கப்பட்டுள்ளன.) இத் தீயணைப்பு நிலையங்கள்
புதிய ஊர்திகள் தயார் ஆனவுடன் திறக்கப்படும். புதிய ஊர்தி
களை கட்டுமானம் செய்ய தேவையான அனைத்து நடவடிக்கை
களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதிய தீயணைப்பு நிலை
யங்கள் திறக்கப்பட வேண்டிய முன்னுரிமைப் பட்டியலில் உள்ள
நகரங்கள் இணைப்பு 3-இல் கொடுக்கப்பட்டுள்ளன.

8. பணியாளர்களின் எண்ணிக்கை:

1984 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1 ஆம் நாள் நிலவரப்படி. தமிழ்நாடு தீயணைப்புத் துறையிலுள்ள செயல் மற்றும் நிருவாக பணியாளர்களின் எண்ணிக்கை விவரங்கள் இணைப்பு 4-இல் கொடுக்கப்பட்டுள்ளன.

9. தீ விபத்து அழைப்புகள்:

1983 ஆம் ஆண்டில், இம்மாநிலத்திலுள்ள தீயணைப்பு நிலையங்கள் 9,176 தீயணைப்புகளை மேற்கொண்டன. (விவரங்கள் இணைப்பு 5-இல் தரப்பட்டுள்ளன). மேற்படி தீயணைப்புகளில், 149 பெருந் தீ விபத்து அழைப்புகளாகும். பெருந் தீ விபத்து ஒவ்வொன்றிலும் ரூ. 50,000-க்கு மேற்பட்ட உடமைகள் இழப்பு அல்லது உயிர்ச் சேதம் ஏற்பட்டது. இம்மாநிலத்தில் ஏற்பட்ட தீ விபத்துக்களினால் அழிந்துவிட்ட அல்லது சேதமடைந்த உடைமைகளின் மதிப்பு சுமார் ரூ. 8 கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது. தீயின் அழிவினின்றும் காப்பாற்றப் பட்ட பொருட்களின் மதிப்பு சுமார் ரூ. 66 கோடி ஆகும்.

10. உயிர் மீட்பு மற்றும் அவசர அழைப்புகள்:

1983 ஆம் ஆண்டில், 1,201 அவசர மற்றும் மீட்பு அழைப்புகளை இத்துறை ஏற்றது. திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் சமீபத்தில் பெய்த மழையினால் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தின் போது இரவு பகலென பாராது பலரின் உயிர்களை மீட்ட இத்துறை பணியாளர்களின் சேவையானது தனித் தன்மையானது. தீயணைப்புத் துறையினரின் தன்னிகரற்ற இச் சேவை பொது மக்களாலும், மாவட்ட உயர் அதிகாரிகளாலும் மிகவும் பாராட்டப்பட்டது. இவ்வாண்டில் 10,594 மனித உயிர்களையும், 956 கால்நடைகளையும் மீட்டு இத்துறை காப்பாற்றியுள்ளது.

11. நோயாளர்களைக் கொண்டு செல்லும் ஊர்தி :

ஒவ்வொரு நகரத்தின் தேவைக்கேற்ப, அவசர சிகிச்சைக்கென நோயாளிகளை உடனுக்குடன் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் ஊர்திகளும் சில தீயணைப்பு நிலையங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவ்வூர்திகள் 1983 ஆம் ஆண்டில், 6,331 அழைப்புகளை ஏற்றன. இவற்றுள், விபத்து மற்றும் இலவச அழைப்புகளின் எண்ணிக்கை 435 ஆகும். கட்டண அழைப்புகளின் எண்ணிக்கை 5,896 ஆகும். நோயாளர் ஊர்திகளில் நோய்வாய்ப்பட்டவர்களை சிகிச்சைக்காக மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றதற்காக வாடகைக் கட்டணமாக ரூ. 17,965 வசூலிக்கப்பட்டது.



12. விபத்து உதவி வண்டி—

இத்துறையில் ஒரே ஒரு விபத்து உதவி வண்டி உள்ளது. இவ்வூர்தி, தென் சென்னைக் கோட்டத்தைச் சார்ந்த எழும்பூர் தீயணைப்பு நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. சாலை விபத்துக்களில் கவிழ்ந்து சிதைந்த ஊர்திகளைத் தூக்கி அகற்றவும்/இழுத்துச் செல்லவும், இடிந்த கட்டிடங்களில் மீட்புப் பணியின் போது அதிக எடையுள்ள கட்டிடப் பகுதிகளை அகற்றவும் ஏற்றவாறு இவ்வூர்தியில் தனித் துணை பாகங்கள் பொருத்தப் பட்டுள்ளன. இது போன்ற பணிகளுக்காக 1983 ஆம் ஆண்டில் இவ்வூர்தி 10 அழைப்புகளை மேற்கொண்டு இதற்கென ரூ. 2,242 ஈட்டித் தந்தது.

13. பணிக்களரி மற்றும் நடமாடும் பழுது பார்க்கும் குழுக்கள்—

இத்துறையின் ஊர்திகள் மற்றும் துணைக் கருவிகளின் முக்கிய பழுதுகளை செப்பனிடுவதற்காக சென்னையில் ஒரு மாநிலப் பட்டறையை இத்துறை பராமரித்து வருகிறது. இதில், இத் துறையின் ஊர்திகளை செப்பனிடும் 174 பணிகள் மேற் கொள்ளப்பட்டன. இவற்றின் மதிப்பு ரூ. 1,47,508 ஆகும். இத்துறையின் நீண்ட நாளைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, மாநிலப் பட்டறையைப் புனரமைப்புச் செய்ய தீர்மானிக்கப்பட்டு இதன் முதல் கட்டமாக உதவி கோட்டத் தீயணைப்பு அலுவலருக்குப் (போக்குவரத்து) பதிலாக, உதவிப் பொறியாளர் (இயக்கூர்தி) என்ற பதவியை ஏற்படுத்த அரசு அனுமதித்துள்ளது. மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையைச் சேர்ந்த ஓர் இயக்கூர்திப் பொறியாளரை மேற்படி பதவியில் அரசு விரைவில் நியமனம் செய்யும். வட சென்னைக் கோட்டம் தவிர இதர கோட்ட தலைமையிடங்களில் அந்தந்த கோட்ட ஊர்திகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளைச் செப்பனிடுவதற்காக நடமாடும் பழுது பார்க்கும் குழுக்கள் உள் ளன. இந்த் நடமாடும் பழுது பார்க்கும் குழுக்கள் ரூ. 3,12,664 மதிப்புள்ள 734 பணிகளை இவ்வாண்டில் மேற்கொண்டன.

தீயணைப்புத் துறையிலுள்ள, ஒப்பளிக்கப்பட்ட ஊர்திகளின் விவரங்க்ள் கோட்ட வாரியாக இணைப்பு 6-இல் தரப்பட்டுள்ளன. இந்தியப் பொது ஈட்டுறுதிக் கழகம், இத்துறைக்கு ரூ. 141 இலட்சம் கடனாக வழங்கியுள்ளது. இத்தொகையிலிருந்து பின் பக்க பம்ப் அமைப்பும், 1,000 காலன் கொள்ளளவும் கொண்ட நீர் தாங்கி வண்டிகள் கட்டுமானம் செய்ய 12 அடிக்கட்டைகளும் நோயாளர் ஊர்திகள் 10-ம், மற்றும் "ரோசன் பார்" பம்புகள் 10-ம் வாங்கப்பட்டு நோயாளர் ஊர்திகளும், பம்புகளும் தீயணைப்பு நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. தேவையான நீர் தாங்கி வண்டிகள் கட்டுமானம் செய்வது குறித்து தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வூர்திகள் கட்டுமானம் செய்யப்பட்டு, தயாராகி தீயணைப்பு நிலையங்களுக்கு

வழங்கப்பட்டதும், இத்துறையின் செயல்திறன் எதிர்பார்க்கும் அளவிற்கு மேலும் முன்னேற வாய்ப்பு உள்ளது. இந்தியப் பொது ஈட்டுறுதி கழகம் வழங்கிய மேற்படி கடனுதவித் தொகையிலிருந்து வேறு சில ஊர்திகள் வாங்குவது குறித்தும் அரசு பரிசீலித்து வருகிறது. பல மாடிக் கட்டிடங்களில் ஏற்படும் தீ விபத்துக்களின் போது தீத்தடுப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்காக 1980 ஆம் ஆண்டு ''ஸ்நார்க்கல்'' என்ற நவீன வசதிகள் கொண்ட ஓர் ஊர்தி இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு சென்னை மாநகருக்கு வழங்கப்பட்டது. இப்புதிய ஊர்தி, சென்னை மாநகரம் மற்றும் அதன் சுற்றுப் புறங்களில் ஏற்படும் சில பெருந் தீ விபத்துகள் மற்றும் குடிசை தீ விபத்துக்களின் போது பங்கேற்று பணியாற்றுவதில் இத்துறைக்கு சீரிய முறையில் மிகவும் உதவி புரிந்தது.

14. பயிற்சி :

சென்னையில் உள்ள தமிழ்நாடு தீயணைப்புத் துறை மாநிலப் பயிற்சிப் பள்ளி நேரடியாக நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தொடர்ந்து பயிற்சியளித்து வருகிறது. இப்பயிற்சிப்பள்ளி ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் பொறுப்பில் செயல்பட்டு வருகிறது. கோட்டத் தீயணைப்பு அலுவலருக்கு அவரது பணிகளில் இரண்டு நிலையத் தீயணைப்பு அலுவலர்களும் இரண்டு முன்னணித் தீயணைப்பு அலுவலர்களும் உதவி புரிகின்றனர். இந்த ஆண்டில் 2 நிலையத் தீயணைப்பு அலுவலர்கள் பயிற்சி வகுப்புகளும் மற்றும் 3 தீயணைப்போர் பயிற்சி வகுப்புகளும் இப்பள்ளியில் நடத்தப்பட்டன. இப்பயிற்சி வகுப்புகளில் பயிற்சிபெற்ற பணியாளர்களின் எண்ணிக்கை விவரங்கள் கீழ் வருமாறு :

நிலையத் தீயணைப்பு அலுவலர்கள் பயிற்சி வகுப்பு :

| | | |
|---|---|---|
| (1) நிலையத் தீயணைப்பு அலுவலர்கள் (நேரடி நியமனம்). | | 16 |
| (2) முன்னணித் தீயணைப்போர்கள் | .. | 34 |
| (3) சென்னை துறைமுகப் பணியாளர்கள் | .. | 12 |
| மொத்தம் | .. | 62 |

தீயணைப்போர் பயிற்சி வகுப்பு :

| | | |
|---|---|---|
| (1) புதிய தீயணைப்போர்கள் | .. .. | 146 |
| (2) சென்னை துறைமுகப் பணியாளர்கள் | .. | 32 |
| மொத்தம் | .. | 178 |



ஓட்டுநர் பயிற்சியின் தரத்தை உயர்த்தும் பொருட்டு, தமிழ் நாடு தீயணைப்புத்துறை மாநிலப் பயிற்சிப் பள்ளியிலேயே இப் பயிற்சியை மையப்படுத்த அரசு அங்கீகரித்துள்ளது.

1—7—1983 முதல் தமிழ்நாடு தீயணைப்புத்துறை மாநிலப் பயிற்சிப் பள்ளியில் கீழ்க்கண்ட பணியாளர்களுடன் ஓட்டுநர் பயிற்சிப் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது :—

| | | |
|---|---|---|
| (1) நிலைய அலுவலர் (போக்குவரத்து) | .. | 1 |
| (2) இயந்திரக் கம்மியர் ஓட்டி | .. | 2 |
| (3) தீயணைப்போர் ஓட்டி | .. | 2 |

இரண்டு தீயணைப்போர் ஓட்டி பயிற்சி வகுப்புகள் மாநிலப் பயிற்சிப் பள்ளியில் நடத்தப்பட்டு, 33 தீயணைப்போர்கள் பயிற்சி பெற்றனர். இவ்வாண்டு, நிலைய அலுவலர்கள்/ பயிற்றுவிப்போர் பயிற்சி பெற இரு நிலையத் தீயணைப்பு அலுவலர்களும், கோட்ட அலுவலர் பயிற்சி பெற ஒரு உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலரும் நாகபுரி தேசிய தீயணைப் புக் கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மேற்படி மூவரும் வெற்றிகரமாக பயிற்சியை முடித்தனர்.

15. வெகுமதிகள் :

இவ்வாண்டில், வீரதீர செயல்களுக்கான இந்தியக் குடியரசுத் தலைவரது பதக்கம் ஒரு தீயணைப்போர் ஓட்டிக்கும், தன்னிகரற்ற பணிக்கான இந்தியக் குடியரசுத் தலைவரது பதக்கம் இரு நிலையத் தீயணைப்பு அலுவலர்களுக்கும், இரு இயந்திரக் கம்மியர் ஓட்டிகளுக்கும், ஒரு முன்னணித் தீயணைப் போருக்கும் மற்றும் ஒரு தீயணைப்போருக்கும் வழங்கப்பட் டது. தன்னிகரற்ற பணிக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கங்கள் ஒரு இயந்திரக் கம்மியர் ஓட்டிக்கும், இரு முன் னணித் தீயணைப்போர்களுக்கும் மற்றும் ஒரு தீயணைப்போ ருக்கும் வழங்கப்பட்டன.

16. தீயணைப்புத்துறை சேமநலநிதி :

துயருற்ற தீயணைப்புத்துறை பணியாளர்களுக்கு நிதியுதவி செய்யவும், அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் 1962 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தீயணைப்புத்துறை சேம நல நிதி தொடங்கப்பட்டது. காசநோய், தொழு நோய் அல்லது புற்று நோயினால் அவதியுறும் பணியாளர்களுக்கோ அல்லது அவரைச் சார்ந்துள்ளவர்களுக்கோ அவர்களின் சத்துணவிற் காகவும், அங்கத்தினர்களின் பிள்ளைகளின் உயர் கல்விக்கும், பணியாளர்களோ அவர்களைச் சார்ந்தவர்களோ இறக்க நேரிட் டால் அவரின் ஈமச்சடங்கு செலவிற்கும் இந்நிதியிலிருந்து உதவித் தொகை அளிக்கப்படுகிறது. அங்கத்தினர்கள் அவர்களது பணிக்

காலத்தில் இந்நிதியிலிருந்து உதவித் தொகை ஏதும் பெறாமல் ஓய்வு பெற்றால் அவர்களுக்கு அடையாள நிதி உதவித் தொகை அளிக்கப்படுகிறது. தீயணைப்புத் துறை சேம நல நிதியின் மொத்த அங்கத்தினர்களின் எண்ணிக்கை 3,904. 1983 ஆம் ஆண்டில் அங்கத்தினர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட மொத்த சந்தாத் தொகை ரூ. 53,200.10. 1983 ஆம் ஆண்டில் இந் நிதியிலிருந்து அங்கத்தினர்களுக்கு அளிக்கப்பட்ட உதவித் தொகையின் மதிப்பு ரூ. 32,417.65. இந் நிதிக்கென அரசு ஆண்டு மானியமாக ரூ. 10,000 வழங்கியது.

17. நலன் :

உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் பதவி மற்றும் அதற்கு கீழ் நிலைப் பதவிகளிலுள்ள பணியாளர்களுக்கு சில இன்றியமையாத உணவுப் பொருட்கள் அரசினால் மலிவு விலையில் வழங்கப்படுகின்றன. இத் திட்டம் 1981 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு குடியிருப்பு வசதியளிக்க முதற்படியாக தீயணைப்புப் பணியாளர்களுக்கு ரூ. 40.5 இலட்சம் செலவில் உடுமலைப்பேட்டை, இராணிப்பேட்டை மற்றும் சிவகாசியில் குடியிருப்புகள் கட்ட அரசு அனுமதி அளித்துள்ளது. மேற்படி உடுமலைப்பேட்டை, இராணிப்பேட்டை ஆகிய இரண்டு இடங்களில் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு, பணியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. சிவகாசியில் குடியிருப்புகள் கட்டிமுடிக்கும் பணி முன்னேற்ற நிலையில், விரைவில் கட்டி முடிக்கப்பட உள்ளது. இந்த ஒப்பளிப்பினால் மூன்று நிலையத் தீயணைப்பு அலுவலர்கள் மற்றும் 117 பணியாளர்கள் பயனடைந்துள்ளனர். படிப்படியாகத் இத்திட்டத்தின் கீழ் மற்ற நகரங்களிலுள்ள பணியாளர்களுக்கும் குடியிருப்பு வசதி செய்து தருவது குறித்தும் அரசு பரிசீலித்து வருகிறது.

18. பொது.

அரசினரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கையின்படி, மற்றுமொரு பெரிய கோட்டமான தென் ஆற்காடு—செங்கற்பட்டு கோட்டம் பிரிக்கப்பட வேண்டியுள்ளது. இது அடுத்த ஆண்டு பரிசீலிக்கப்படும். இந்திய அரசு அளித்துள்ள மாதிரி தீயணைப்பு சட்ட முன் வடிவின் அடிப்படையில் சட்ட முன் வடிவு தயாரிக்கப்பட்டு அதனைச் சட்டமாக கொண்டு வருவதற்கு அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது. இச்சட்ட



முன் வடிவு நிறைவேற்றப்படும்போது இத்துறையின் நிருவாக மற்றும் செயல் திறனில் பெருமளவில் முன்னேற்றம் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறாக தீயணைப்புத்துறை பொது மக்களுக்கு பயனுள்ள வகையில் தொடர்ந்து நற்பணியாற்றி வருகிறது.

இணைப்பு 1.

1—2—1984 ஆம் நாள் நிலவரப்படி இயங்கும் தீயணைப்பு நிலையங்களின் எண்ணிக்கை.

| மாவட்டம் மற்றும் வட்டத்தின் பெயர். (1) | இயங்கும் தீயணைப்பு நிலையங்களின் பெயர். (2) |
|---|---|
| **வட வட்டாரம்.** | |
| **சென்னை மாநகர் கோட்டம்.** | |
| வடசென்னைக் கோட்டம். .. | வண்ணாரப்பேட்டை<br>எஸ்பிளனேடு<br>இராயபுரம்<br>வியாசர்பாடி<br>செம்பியம்<br>கீழ்ப்பாக்கம்<br>வேப்பேரி<br>தண்டையார்பேட்டை<br>வ.உ.சி. நகர் |
| பொன்னேரி .. .. | எண்ணூர்<br>மணலி |
| தென் சென்னைக் கோட்டம். | எழும்பூர்<br>திருவல்லிக்கேணி<br>மைலாப்பூர்<br>தேனாம்பேட்டை<br>அசோக்நகர்<br>சைதாப்பேட்டை<br>கிண்டி |
| சைதாப்பேட்டை .. | தாம்பரம்<br>அம்பத்தூர் |

[1984 மார்ச் 29

| மாவட்டம் மற்றும் வட்டத்தின் பெயர். | இயங்கும் தீயணைப்பு நிலையங்களின் பெயர். |
|---|---|
| (1) | (2) |

தென் ஆர்க்காடு—செங்கற்பட்டு கோட்டம்.

தென் ஆர்க்காடு மாவட்டம்.

| | |
|---|---|
| சிதம்பரம் .. .. | சிதம்பரம் |
| கடலூர் .. .. | கடலூர் |
| பண்ருட்டி .. .. | பண்ருட்டி |
| விருத்தாசலம் .. | விருத்தாசலம் |
| கள்ளக்குறிச்சி .. | கள்ளக்குறிச்சி |
| திருக்கோயிலூர் .. | திருக்கோயிலூர் |
| உளுந்தூர்பேட்டை .. | உளுந்தூர்பேட்டை |
| விழுப்புரம் .. | விழுப்புரம் |
| திண்டிவனம் .. | திண்டிவனம் |
| செஞ்சி .. .. | செஞ்சி |
| வேப்பூர் .. .. | வேப்பூர் |

செங்கற்பட்டு மாவட்டம்.

| | |
|---|---|
| காஞ்சீபுரம் .. .. | காஞ்சீபுரம் |
| ஸ்ரீபெரும்புதூர் .. | ஸ்ரீபெரும்புதூர் |
| மதுராந்தகம் .. | மதுராந்தகம் |
| செங்கற்பட்டு .. | செங்கற்பட்டு |
| திருவள்ளூர் .. | திருவள்ளூர் |
| கும்மிடிப்பூண்டி .. | கும்மிடிப்பூண்டி |

சேலம்—தர்மபுரி கோட்டம்.

சேலம் மாவட்டம்.

| | |
|---|---|
| சேலம் .. .. .. | சேலம்<br>சேலம் உருக்காலை |
| ஆத்தூர் .. .. .. | ஆத்தூர் |
| மேட்டூர் .. .. .. | மேட்டூர் |
| நாமக்கல் .. .. .. | நாமக்கல் |
| இராசிபுரம் .. .. .. | இராசிபுரம் |

தர்மபுரி மாவட்டம்.

| | |
|---|---|
| தர்மபுரி .. .. .. | தர்மபுரி |
| ஓசூர் .. .. .. | ஓசூர் (சிப்காட்) |
| கிருஷ்ணகிரி .. .. | கிருஷ்ணகிரி |
| அரூர் .. .. .. | அரூர் |



1984 மார்ச் 29]

| மாவட்டம் மற்றும் வட்டத்தின் பெயர். | இயங்கும் தீயணைப்பு நிலையங்களின் பெயர். |
|---|---|
| (1) | (2) |

வட ஆற்காடு கோட்டம்.

வட ஆற்காடு மாவட்டம்.

| | |
|---|---|
| வேலூர் .. .. .. | வேலூர் |
| வாலாஜா .. .. .. | இராணிப்பேட்டை (சிப்காட்) |
| வாலாஜா .. .. .. | இராணிப்பேட்டை |
| அரக்கோணம் .. .. | அரக்கோணம் |
| வந்தவாசி .. .. .. | வந்தவாசி |
| ஆரணி .. .. .. | ஆரணி |
| திருவண்ணாமலை .. .. | திருவண்ணாமலை |
| செங்கம் .. .. .. | செங்கம் |
| திருப்பத்தூர் .. .. | திருப்பத்தூர் |
| வாணியம்பாடி .. .. | வாணியம்பாடி<br>ஆம்பூர் |
| குடியாத்தம் .. .. | குடியாத்தம் |
| போளூர் .. .. .. | போளூர் |

தென் வட்டாரம்.

மதுரைக் கோட்டம்.

மதுரை மாவட்டம்.

| | |
|---|---|
| மதுரை (தெற்கு) .. | மதுரை |
| மதுரை (வடக்கு) .. .. | தல்லாகுளம் |
| மேலூர் .. .. .. | மேலூர் |
| நத்தம் .. .. .. | நத்தம் |
| உசிலம்பட்டி .. .. | உசிலம்பட்டி |
| நிலக்கோட்டை .. .. | வத்தலக்குண்டு |
| திண்டுக்கல் .. .. .. | திண்டுக்கல் |
| பழனி .. .. .. | பழனி<br>ஒட்டன்சத்திரம் |
| பெரியகுளம் .. .. | பெரியகுளம்<br>தேனீ—அல்லிநகரம் |
| உத்தமபாளையம் .. .. | உத்தமபாளையம்<br>போடிநாயக்கனூர் |

[1984 மார்ச் 29

| மாவட்டம் மற்றும் வட்டத்தின் பெயர். | இயங்கும் தீயணைப்பு நிலையங்களின் பெயர். |
|---|---|
| (1) | (2) |

கோயம்புத்தூர்-பெரியார்—நீலகிரி கோட்டம்.

கோயமுத்தூர் மாவட்டம்.

| | |
|---|---|
| கோயமுத்தூர் | கோயமுத்தூர் (தெற்கு)<br>கோயமுத்தூர் (வடக்கு) |
| மேட்டுப்பாளையம் | மேட்டுப்பாளையம் |
| பல்லடம் | திருப்பூர் |
| பொள்ளாச்சி | பொள்ளாச்சி |
| உடுமலைப்பேட்டை | உடுமலைப்பேட்டை |

பெரியார் மாவட்டம்.

| | |
|---|---|
| ஈரோடு | ஈரோடு |
| தாராபுரம் | தாராபுரம்<br>காங்கேயம் |
| கோபிசெட்டிப்பாளையம் | கோபிசெட்டிப்பாளையம் |

நீலகிரி மாவட்டம்.

| | |
|---|---|
| கூடலூர் | கூடலூர் |
| உதகமண்டலம் | உதகமண்டலம் |
| குன்னூர் | குன்னூர் |

திருச்சிராப்பள்ளி—புதுக்கோட்டை கோட்டம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

| | |
|---|---|
| திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி<br>ஸ்ரீரங்கம் |
| முசிறி | முசிறி |
| துறையூர் | துறையூர் |
| பெரம்பலூர் | பெரம்பலூர்,<br>ஜெயங்கொண்டசோழபுரம் |
| கரூர் | கரூர் |
| மணப்பாறை | மணப்பாறை |

புதுக்கோட்டை மாவட்டம்.

| | |
|---|---|
| புதுக்கோட்டை | புதுக்கோட்டை |
| அறந்தாங்கி | அறந்தாங்கி |
| திருமயம் | பொன்னமராவதி |



1984 மார்ச் 29]

| மாவட்டம் மற்றும் வட்டத்தின் பெயர். | இயங்கும் தீயணைப்பு நிலையங்களின் பெயர். |
|---|---|
| (1) | (2) |

தஞ்சாவூர் கோட்டம்.

தஞ்சாவூர் மாவட்டம்.

| | |
|---|---|
| தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| கும்பகோணம் | கும்பகோணம் |
| மன்னார்குடி | மன்னார்குடி |
| நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் |
| திருவாரூர் | திருவாரூர் |
| நன்னிலம் | நன்னிலம் |
| மயிலாடுதுறை | மயிலாடுதுறை |
| பட்டுக்கோட்டை | பட்டுக்கோட்டை |
| ஒரத்தநாடு | ஒரத்தநாடு |

திருநெல்வேலி—கன்னியாகுமரி கோட்டம்.

திருநெல்வேலி மாவட்டம்.

| | |
|---|---|
| திருநெல்வேலி | பாளையங்கோட்டை<br>திருநெல்வேலி பேட்டை |
| தென்காசி | தென்காசி<br>கடையநல்லூர் |
| கோவில்பட்டி | கோவில்பட்டி |
| தூத்துக்குடி | தூத்துக்குடி |
| தூத்துக்குடி | தூத்துக்குடி அனல் மின் நிலையம். |
| திருச்செந்தூர் | திருச்செந்தூர் |
| நாங்குநேரி | நாங்குநேரி |
| அம்பாசமுத்திரம் | அம்பாசமுத்திரம் |

கன்னியாகுமரி மாவட்டம்.

| | |
|---|---|
| அகஸ்தீஸ்வரம் | நாகர்கோவில்<br>கன்னியாகுமரி |
| விளவங்கோடு | குழித்துறை |

| மாவட்டம் மற்றும் வட்டத்தின் பெயர். | இயங்கும் தீயணைப்பு நிலையங்களின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| **இராமநாதபுரம் கோட்டம்.** | |
| **இராமநாதபுரம் மாவட்டம்.** | |
| இராமநாதபுரம் .. .. .. | இராமநாதபுரம்<br>இராமேஸ்வரம் |
| காரைக்குடி .. .. | காரைக்குடி |
| தேவக்கோட்டை .. .. | தேவக்கோட்டை |
| சிவகங்கை .. .. .. | சிவகங்கை |
| பரமக்குடி .. .. .. | பரமக்குடி |
| ஸ்ரீவில்லிபுத்தூர் .. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| இராஜபாளையம் .. .. | இராஜபாளையம் |
| சாத்தூர் .. .. .. | சாத்தூர்<br>சிவகாசி |
| அருப்புக்கோட்டை .. .. | அருப்புக்கோட்டை |
| விருதுநகர் .. .. .. | விருதுநகர் |



## இணைப்பு 2.

அரசினரால் ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்டு, இன்னும் திறக்கப்படாமல் உள்ள தீயணைப்பு நிலையங்களின் பட்டியல்.

| மாவட்டத்தின் பெயர். | தீயணைப்பு நிலையத்தின் பெயர். | ஒப்பளிக்கப்பட்ட அரசு ஆணை எண் மற்றும் நாள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. சேலம் .. .. .. | சங்ககிரி .. .. .. | 2,310, உள் துறை, 13-9-1979. |
| 2. திருச்சிராப்பள்ளி.. .. | அரியலூர் .. .. .. | 2,661, உள் துறை, 10—10—1980. |
| 3. இராமநாதபுரம் .. | கமுதி .. .. .. | ஷை |
| | திருப்பத்தூர் .. .. | ஷை |
| 4. திருநெல்வேலி .. .. | ஸ்ரீவைகுண்டம் .. .. | ஷை |
| 5. கன்னியாகுமரி .. .. | குலசேகரம் .. .. | ஷை |
| | பத்மநாபபுரம் (அல்லது) தக்கலை. | ஷை |
| 6. கோயமுத்தூர் .. .. | சத்தியமங்கலம் .. .. .. | ஷை |
| 7. மதுரை .. .. | கொடைக்கானல் .. .. | ஷை |

| | | |
|---|---|---|
| [illegible] திருநெல்வேலி .. .. | சங்கரன் கோயில் .. .. | 812, உள்துறை, 22-4-1983 |
| | விளாத்திகுளம் .. .. | ஷை |
| [illegible] | சாத்தான்குளம் .. .. | ஷை |
| 9. வட ஆற்காடு .. .. | நாட்ரம்பள்ளி .. .. | ஷை |
| | செய்யார் .. .. | ஷை |
| [illegible] | சோளிங்கர் .. .. | ஷை |
| 10. தென் ஆற்காடு .. .. | திட்டக்குடி .. .. | ஷை |
| | காட்டுமன்னார் கோயில் .. | ஷை |
| | நெல்லிக்குப்பம் .. .. | ஷை |
| | குறிஞ்சிப்பாடி .. .. | ஷை |
| 11. புதுக்கோட்டை .. | ஆலங்குடி .. .. .. | ஷை |
| | திருமயம் .. .. .. | ஷை |
| | கீரனூர் .. .. .. | ஷை |
| 12. இராமநாதபுரம் .. | வத்திராயிருப்பு .. .. | ஷை |
| 13. தஞ்சாவூர் .. .. | பேராவூரணி .. .. | ஷை |
| | சீர்காழி .. .. .. | ஷை |
| | திருத்துறைப்பூண்டி .. .. | ஷை |
| | பாபநாசம் .. .. | ஷை |
| 14. செங்கற்பட்டு .. .. | மறைமலை நகர் .. .. | ஷை |



| மாவட்டத்தின் பெயர். (1) | தீயணைப்பு நிலையத்தின் பெயர். (2) | ஒப்பளிக்கப்பட்ட அரசு ஆணை எண் மற்றும் நாள். (3) |
|---|---|---|
| 15. மதுரை .. .. | திருமங்கலம் .. .. | 812, உள்துறை 22-4-1983. |
| | கம்பம் .. .. .. | |
| | வேடசந்தூர் .. .. | ஷை |
| 16. கோயமுத்தூர் .. .. | வால்பாறை .. .. .. | ஷை |
| 17. சேலம் .. .. .. | ஏற்காடு .. .. .. | ஷை |
| | திருச்செங்கோடு .. .. | 935, உள் துறை, 13-5-1983. |

## இணைப்பு 3.

தீயணைப்பு நிலையங்கள் தொடங்குவதற்கான முன்னுரிமைப் பட்டியலிலுள்ள நகரங்கள்.

1. அரவக்குறிச்சி.
2. திருக்காட்டுப்பள்ளி.
3. செங்குன்றம்.
4. சேலம் (ஹஸ்தம்பட்டி).
5. தஞ்சாவூர் (2-வது தீயணைப்பு நிலையம்).
6. ஊத்தங்கரை.
7. கழுகுமலை.

[1984 மார்ச் 29

## இணைப்பு 4.

1984 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதலாம் நாள் அன்று அனுமதிக்கப்பட்டுள்ள தீயணைப்புப் படைப் பணியாளர்களின் எண்ணிக்கை.—

| வரிசை எண்ணும் பதவிப் பெயரும். | பதவி எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| **செயல் பணியாளர்கள்.** | |
| 1 தீயணைப்புத்துறை இயக்குநர் .. .. | 1 |
| 2 தீயணைப்புத் துறை துணை இயக்குநர்கள் .. | 2 |
| 3 கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள் .. .. | 12 |
| 4 உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள் .. | 13 |
| 5 உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் (போக்குவரத்து). | 1 |
| 6 நிலையத் தீயணைப்பு அலுவலர்கள் .. .. | 163 |
| 7 நிலைய அலுவலர்கள் (போக்குவரத்து) .. | 9 |
| 8 முன்னணித் தீயணைப்போர் .. .. .. | 509 |
| 9 ஓட்டுநர்-எந்திரக் கம்மியர் .. .. .. | 152 |
| 10 தீயணைப்புத் துறை கம்மியர் .. .. .. | 8 |
| 11 தீயணைப்புத் துறை ஓட்டுநர்கள் .. .. | 768 |
| 12 பற்றவைப்பாளர் (வெல்டர்) .. .. .. | 1 |
| 13 தீயணைப்புத் துறைத் தச்சர் .. .. .. | 1 |
| 14 தீயணைப்புப் பணியாளர் (அதற்கு நிகரான பதவித் தரத்திலுள்ளவர்கள்.) | 2,962 |
| மொத்தம் .. | 4,602 |



1984 மார்ச் 29]

## இணைப்பு 4—தொடர்ச்சி.

| வரிசை எண்ணும் பதவிப் பெயரும். | பதவி எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| **நிர்வாகப் பணியாளர்கள்.** | |
| 1 தீயணைப்புத் துறை இயக்குநரின் நிர்வாக நேர்முக உதவியாளர். | 1 |
| 2 கண்காணிப்பாளர்கள் (தேர்வுத் தரம்) .. | 3 |
| 3 கண்காணிப்பாளர்கள் .. .. .. | 13 |
| 4 உதவியாளர்கள் .. .. .. .. | 44 |
| 5 இளநிலை உதவியாளர்கள் .. .. .. | 49 |
| 6 சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் .. .. | 3 |
| 7 தட்டச்சர்கள் .. .. .. .. | 17 |
| 8 பதிவேட்டு எழுத்தர்கள் .. .. .. | 13 |
| 9 அடிப்படைப் பணியாளர்கள் .. .. .. | 32 |
| மொத்தம் .. | 175 |

## இணைப்பு 5.

### 1983 ஆம் ஆண்டில் தீ அணைப்பதற்கான அழைப்புகள்.

| மாவட்டம். | பெருந் தீ. | நடுத்தர தீ. | சிறிய தீ. | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| சென்னை .. .. .. .. .. | 20 | 27 | 1,107 | 1,154 |
| தென் ஆற்காடு .. .. .. .. | 15 | 43 | 993 | 1,051 |
| செங்கல்பட்டு .. .. .. .. | 6 | 12 | 337 | 355 |
| சேலம் .. .. .. .. .. | 14 | 31 | 461 | 506 |
| தர்மபுரி .. .. .. .. .. | 2 | 8 | 33 | 43 |
| வட ஆற்காடு .. .. .. .. | 8 | 66 | 1,016 | 1,090 |
| திருச்சிராப்பள்ளி .. .. .. .. | 17 | 58 | 730 | 805 |
| புதுக்கோட்டை .. .. .. .. | 4 | 7 | 132 | 143 |
| தஞ்சாவூர் .. .. .. .. .. | 9 | 36 | 856 | 901 |
| கோயமுத்தூர் .. .. .. .. | 8 | 32 | 435 | 475 |
| பெரியார் .. .. .. .. | .. | 24 | 394 | 418 |



## இணைப்பு 5—தொடர்ச்சி.

### 1983 ஆம் ஆண்டு தீ அணைப்பதற்கான அழைப்புகள்—தொடர்ச்சி.

| மாவட்டம். | பெருந் தீ. | நடுத்தரத் தீ. | சிறிய தீ. | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| நீலகிரி .. .. .. .. .. | .. | 1 | 61 | 62 |
| மதுரை .. .. .. .. .. | 19 | 35 | 648 | 702 |
| திருநெல்வேலி .. .. .. .. | 6 | 35 | 586 | 627 |
| கன்னியாகுமரி .. .. .. .. | 9 | 11 | 149 | 169 |
| இராமநாதபுரம் .. .. .. .. | 12 | 48 | 615 | 675 |
| மொத்தம் .. | 149 | 474 | 8,553 | 9,176 |

## இணைப்பு 6.

### 1-2-1984 ஆம் நாள் நிலவரப்படி ஒப்புதலளிக்கப்பட்ட தியணைப்பு ஊர்திகளின் எண்ணிக்கை.

| தொடர் எண்ணும், மாவட்டத்தின் பெயரும். | நீர் தாங்கி வண்டி. | இழுக்கும் ஊர்தி. | இழுக்கும் மோட்டார் வண்டி. | நோயாளர் ஊர்தி. | வான் தந்தி ஊர்தி. | மோட்டார் சைக்கிள் | தண்ணீர் லாரி. | ஏனைய வண்டிகள். |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 வட சென்னைக் கோட்டம் (11). | 16 | 5 | 5 | 5 | 3 | .. | 3 | பிக்கப் வேன் (பண்டகசாலை-1) |
| 2 தென் சென்னைக் கோட்டம் (9). | 12 | 5 | 5 | 6 | 3 | 2 | 3 | பாதுகாப்பு சாதனப் பிரிவு 1, நீர்க்குழாய் வண்டி 1, கிராஷ் டெண்டர்-1. மடக்கு ஏணி-1, அவசரக்கால வேன்-1. ஸ்நார்க்கல்-1. நீர்க்குழாய் வண்டி-1. |



## இணைப்பு 6—தொடர்ச்சி.

### 1-2-1984-ம் நாள் நிலவரப்படி ஒப்புதலளக்கப்பட்ட தியணைப்பு ஊர்திகளின் எண்ணிக்கை.

| தொடர் எண்ணும், மாவட்டத்தின் பெயரும். | நீர் தாங்கி வண்டி. | இழுக்கும் ஊர்தி. | இழுக்கும் மோட்டார் வண்டி. | நோயாளர் ஊர்தி. | வான் தந்தி ஊர்தி. | மோட்டார் சைக்கிள். | தண்ணீர் லாரி. | ஏனைய வண்டிகள். |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 3 தென் ஆற்காடு (11) | 11 | 5 | 10 | 6 | 1 | 1 | .. | |
| 4 செங்கல்பட்டு (6) | 6 | 2 | 5 | 2 | .. | .. | .. | |
| 5 வட ஆற்காடு (13) | 13 | 7 | 12 | 7 | 1 | 1 | .. | |
| 6 தர்மபுரி (4) .. | 4 | 1 | 3 | 1 | .. | .. | .. | .. |
| 7 சேலம் (6) .. | 5 | 2 | 5 | 1 | .. | .. | 1 | (சேலம் உருக்குத் தொழிற்சாலைப் பிரிவுகள் சேர்க்கப்படவில்லை.) |
| 8 திருச்சிராப்பள்ளி (8) | 8 | 5 | 7 | 5 | 1 | 1 | .. | .... |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 புதுக்கோட்டை (3) | 3 | 1 | 1 | 1 | .. | .. | .. | .... |
| 10 தஞ்சாவூர் (9) .. | 9 | 6 | 7 | 6 | .. | .. | .. | .... |
| 11 கோயமுத்தூர் (6) | 6 | 5 | 6 | 5 | 1 | 1 | 1 | .... |
| 12 பெரியார் (4) .. | 4 | 2 | 3 | 2 | .. | .. | .. | .... |
| 13 நீலகிரி (3) .. | 3 | 2 | 2 | 3 | .. | .. | .. | .... |
| 14 மதுரை (13) .. | 13 | 7 | 9 | 6 | 1 | 1 | .. | .... |
| 15 திருநெல்வேலி (10) | 11 | 4 | 8 | 4 | 1 | 1 | .. | இராஜ் டெண்டர்-1. |
| 16 கன்னியாகுமரி (3). | 3 | 1 | 2 | 1 | .. | .. | .. | .... |
| 17 இராமநாதபுரம் (12) | 12 | 6 | 10 | 6 | .. | .. | .. | .... |
| கோட்ட ஒதுக்கீடு. | 12 | .. | .. | .. | .. | .. | .. | .... |
| மொத்தம் (131). | 151 | 66 | 100 | 67 | 12 | 8 | 8 | 9 |
| அனுமதி வழங்கப்பட்டு தொடங்கப்படாமல் உள்ள தீய்ப்பு நிலையங்கள் (34). | 34 | .. | .. | .. | .. | .. | .. | .. |
| மொத்தம் .. | 185 | 66 | 100 | 67 | 12 | 8 | 8 | 9 |



## இணைப்பு—III.

(215-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறை.

மானியக் கோரிக்கை எண். 2.

மாநில ஆயத்தீர்வைத் துறை.

1984–85

கொள்கை விளக்கக் குறிப்பு.

தளர்த்தப்பட்ட மதுவிலக்குச் சட்டத்தைக் கடந்த மூன்று ஆண்டுகளாக அரசு செயற்படுத்தி வருகிறது. சில நிபந்தனைகளுக்குட்பட்டு கள், சாராயம், மது ஆகியவற்றை அருந்த இந்தச் சட்டம் அனுமதி வழங்குகிறது. கள்ளச் சாராயம் தயாரிப்போர் விற்பனை செய்வோர் ஆகியோர் பிடியில் குடிப்பழக்கம் உள்ளோர் சிக்கித் தமது உடல்நலத்தைக் கெடுத்துக் கொள்வதைத் தவிர்ப்பது இத் திட்டத்தின் நோக்கம். தவிர, சமூக விரோத சக்திகளிடம் செல்லும் பணத்தை அரசின் வருமானமாகக் கொண்டுவருவதே அரசின் நோக்கம் ஆகும். எனவே, ஒருபுறம் முறையாகத் தயாரிக்கப்பட்ட சாராயம் அல்லது கள் அல்லது இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மது ஆகியவற்றை அருந்த அனுமதி வழங்குவதை முறைப்படுத்தும் வகையில் சட்டத்தைத் திருத்தியமைத்தபோதிலும், அதே சமயம் கள்ளச் சாராயம் காய்ச்சுவோரையும் விற்பனை செய்வோரையும் கண்டுபிடித்து, ஒழித்து, மாநிலத்திலிருந்தே கள்ளச்சாராயத்தை ஒழித்து விடுவது அரசின் நோக்கமாகும். 1–6–1983 முதல் ஒரு குறிப்பிடத்தக்க மாறுதல் இந்தத் திட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளது. இது, சாராயத்தையும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகளையும் மொத்த விற்பனை மூலம் வழங்கும் பணியினைத் தனியார் வசமிருந்து பொதுத் துறைக்கு எடுத்துக்கொண்டதாகும். இந்த மாறுதலுக்கிணங்க, 1983 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் கடைசி வாரத்திலிருந்து சாராயம் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுவகைகள் ஆகியவற்றை மொத்த விற்பனை மூலம் வழங்கும் பணியினை, மாநில அரசுக்கு முழுவதும் சொந்தமானதும் மற்றும் அதன் கட்டுப்பாட்டில் உள்ளதுமான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் என்ற ஒரு நிறுவனத்தை கம்பெனிகள் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்து அதன் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த வாணிபக் கழகம் திருப்தி தரும் வகையில் இயங்கி வருகிறது. எனவே, இது அரசின் வருவாய் கணிசமான அளவு அதிகரிக்க உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கள் :

2. சில்லறையில் கள் விற்பனை செய்யும் உரிமை, பொது
ஏலத்தின் மூலமும், ஒப்பந்தப் புள்ளிகள் மூலமும், தமிழ்நாடு
1981 ஆம் ஆண்டு கள்-சாராயக் கடை (ஏல விற்பனை) விதித்
துறைகளின்படி விற்பனை செய்யப்படுகிறது. ஒவ்வோராண்டும்
ஜூலைத் திங்கள் 16 ஆம் நாளில் தொடங்கி அடுத்த ஆண்டு
ஜூலைத் திங்கள் 15 ஆம் நாள் வரையிலான ஆயத்தீர்வை
ஆண்டுக்கு, கள் விற்பனை உரிமை இந்த முறையில் அனுமதிக்
கப்படுகிறது. ஏலத்திலோ, ஒப்பந்தப்புள்ளியிலோ எவர் அதிக
விலைக்குக் கேட்டிருந்து அந்த விலை போதுமானது எனத்
தொடர்புடைய மாவட்ட ஆட்சியர் அறிந்த பின்னர் அவருக்கு
விற்பனை உரிமை வழங்கப்படுகிறது.

3. 1983-84 ஆம் ஆயத்தீர்வையாண்டில், 9,077 கள்ளுக்
கடை உரிமங்கள் வழங்கப்பட்டன. முந்தைய 1982-83 ஆம்
ஆண்டில், உரிமம் வழங்கப்பட்ட கள்ளுக்கடைகள் 9,420 ஆகும்.
அறிவிக்கப்பட்ட சில கடைகளுக்கு, ஏலம் கேட்பவர் இல்லாதது
அல்லது நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்பட்டது அல்லது
ஏனைய காரணங்களினால் உரிமம் வழங்க இயலவில்லை. சில
இடங்களில் கள்ளுக்கடைகள் விற்பனையாகததற்கு வறட்சியினால்
கள் உற்பத்தி குறைந்தது முக்கிய காரணமாகும்.

4. 1982-83 ஆம் ஆயத்தீர்வையாண்டில், கள்ளுக்கடை
களைக் குத்தகைக்கு விட்ட வகையில் கிடைத்த தொகை ரூபாய்
27.13 கோடி. 1983-84 ஆம் ஆண்டில் 31-1-1984 வரை,
இந்தக் கணக்குத் தலைப்பின் கீழ் கிடைத்த வருவாய் ரூபாய்
19.41 கோடியாகும். வறட்சி நிலை காரணமாகச் சென்ற ஆண்
டுடன் ஒப்பிடும்போது இவ்வாண்டில் கள்ளுக்கடைகளை ஏலம்
விட்ட வகையில் கிடைத்த மாதாந்திரக் குத்தகைத் தொகை
குறைந்துள்ளது.

5. கள் இறக்கப்படும் மரங்கள் மீது மர வரி விதிப்பதில்
ஏற்படும் நிருவாக இடையூறுகளைக் கருத்திற் கொண்டும், வரு
வாய் இழப்பு எற்படும் சாத்தியக் கூறினைத் தடுக்கும் பொருட்
டும், 1982-83 ஆம் ஆயத் தீர்வையாண்டிலிருந்து மர வரி
விதிப்பதை அரசு நிறுத்தி விட்டது. தென்னை பாளை விடும்
பருவம் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் ஆண்டு தொடங்கு
வதால், 1984-85 ஆம் ஆண்டிலிருந்து அக்டோபர் திங்கள் 1 ஆம்
நாள் தொடங்கி அடுத்த ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம்
நாள் வரை கள்ளுக்கடைக்கான ஆயத் தீர்வை ஆண்டாக மாற்
றப்பட்டுள்ளது. இதனால், தற்பொழுது நடைமுறையில் உள்ள
கள்ளுக்கடைகளின் உரிமம் 30-9-1984 வரை நீட்டிக்கப்படும்



நீரா மற்றும் பதநீர் இறக்க உரிமம் வழங்கும் முறை ரத்து :

6. 1939 ஆம் ஆண்டு சென்னை நீரா அல்லது பதநீர் விதி
களின் கீழ் நீரா மற்றும் பதநீர் இறக்க உரிமம் கட்டணம் எதுவு
மின்றி வழங்கப்பட்டு வருகிறது. தமிழ் நாடு மாநில பனை/
தென்னை தொழிலாளர் சங்கம் இந்த உரிமம் வழங்கும் முறையை
உடனடியாக ரத்து செய்ய வேண்டுமெனக் கோரியது. அரசு
இதைக் கவன்மாகப் பரிசீலனை செய்து பனை/தென்னை மரங்
களிலிருந்து நீரா/பதநீர் இறக்குவதற்கு உரிமம் வழங்கும்
முறையை உடனடியாக ரத்து செய்து ஆணையிட்டுள்ளது.
நீரா/பதநீர் இறக்குவதாக கூறி இம்மரங்களைக் கள் இறக்க
உபயோகிக்காமல் இருக்கும்படி ஆயத்தீர்வை அதிகாரிகள்
முனைப்புடன் கள் விதிகளின்படி கண்காணிக்குமாறு அறிவுரை
வழங்கப்பட்டுள்ளது.

சாராயம் :

(i) சாராய சில்லரை விற்பனை :

7. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கள்-சாராயக் கடைகள்
(ஏல விற்பனை) விதிகளைச் சேர்ந்த விதித்துறைகளின்படி,
சாராயத்தைச் சில்லரையாக விற்பனை செய்யும் உரிமை, பொது
ஏலத்திலும், ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதன் மூலமாகவும் விற்
கப்படுகிறது. ஒவ்வோராண்டும், ஜூலைத் திங்கள் 16-ஆம்
நாள் தொடங்கி அடுத்த ஆண்டின் ஜூலைத் திங்கள் 15 -ஆம்
நாள் முடிய உள்ள ஆயத் தீர்வை ஆண்டுக்கு, உரிமை விற்பனை
செய்வது இம்முறையில் அனுமதிக்கப்படுகிறது. விற்பனை செய்
தல், உறுதிப்படுத்துதல், உரிமம் வழங்குதல் முதலியவை குறித்த
விதிகள், கள்-சாராயக் கடைகளுக்குப் பொதுவானவையாகும்.

8. 1983-84 ஆம் ஆயத்தீர்வை ஆண்டில் 6,511 சாராய
சில்லரை விற்பனைக் கடை உரிமங்கள் வழங்கப்பட்டன.
1982-83-ஆம் ஆண்டில் உரிமம் வழங்கப்பட்ட சாராயச் சில்
லரை விற்பனைக் கடைகள் 5,081 ஆகும். அறிவிக்கப்பட்ட சில
கடைகளுக்கு ஏலத்தில் ஏலம் கேட்பவர் இல்லாததால் அல்லது
வழக்கு தொடரப்பட்டதால் அல்லது ஏனைய காரணங்களினால்
உரிமம் வழங்க இயலவில்லை. 1982-83-ஆம் ஆயத்தீர்வை,
ஆண்டில், சாராயச் சில்லரை விற்பனைக் கடைகளைக் குத்த
கைக்கு விட்டதன் மூலம் கிடைத்த தொகை ரூபாய் 66.31
கோடியாகும். 1983-84 ஆம் ஆண்டில் 1984-ஆம் ஆண்டு
சனவரி முடிய, இக்கணக்குத் தலைப்பின் கீழ் வசூலிக்கப்பட்ட
தொகை ரூபாய் 65.96 கோடியாகும்.

9. 1981-82 ஆம் ஆண்டைய நிலையைக் கருத்திற் கொண்டு
கள், சாராயக் கடைகளை ஏலம் விடுவதற்கும், உரிமம் வழங்கு
வதற்குமான நடைமுறை 1982-83 ஆம் ஆண்டில் சீரமைக்கப்

பட்டது. இந்த நடைமுறைகளையே 1983-84 ஆம் ஆண்டிலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது. இக்கடைகளை அமைக்கும் இடங்களைப் பொறுத்த மட்டில், பள்ளிகள், கோயில்கள், விதிகளில் குறிப்பிடப்பட்ட ஏனைய இடங்கள் ஆகியவற்றுக்கும் இக்கடைகளுக்கும் இடையில் இருக்க வேண்டிய தொலைவு குறித்த விதிகள் தொடர்பாக நியாயமான மறுப்புகள் ஏதுமில்லையெனில், சில நிலைகளில் அவசியமான அளவிற்கு விதிகளைத் தளர்த்தி உரிமம் வழங்க, தற்போதுள்ள விதிகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரமளிக்கின்றன. ஆனால், பள்ளி, கல்லூரி, மாணவரில்லம், மருத்துவமனை, வழிபாடு செய்யப்படும் அல்லது புனிதமான இடங்கள் ஆகியவை அமைந்த இடங்களிலிருந்து 150 மீட்டர் தொலைவிற்குள் இத்தகைய கடைகளை அமைக்க அனுமதிக்கலாகாது என்று விதிகளில் தெளிவாக கூறப்பட்டுள்ளது. சொற் பொருள் மயக்கத்தைத் தவிர்க்கும் பொருட்டு பள்ளி முதலிய சொற்களுக்கு விதியிலேயே தக்க பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது.

10. 1981-82 மற்றும் 1982-83 ஆம் ஆண்டுகளில், சாராயக் கடைகளுக்கு மட்டும் கிளைக் கடைகளை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தது. 1983-84 ஆம் ஆண்டில் கள் மற்றும் சாராயக் கடைகளுக்குக் கிளைக் கடைகள் வைத்துக்கொள்ள அனுமதி இல்லை. ஆனால், சென்ற ஆண்டில் கிளைக் கடைகள் அனுமதிக்கப்பட்ட பகுதிகளின் தேவையைத் தீர்க்கத் தகுந்த முறையில் சாராயக் கடைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

11. நடைமுறைகளைச் சீரமைத்ததினால், ஆயத்தீர்வை நிருவாகத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கள் சாராயக் கடைகளை அமைப்பதற்கான இடங்கள் குறித்து, 1983-84 ஆம் ஆயத் தீர்வையாண்டில் பெறப்பட்ட மறுப்பு மனுக்களின் எண்ணிக்கை 642. கடந்த ஆண்டு பெறப்பட்ட மறுப்பு மனுக்களின் எண்ணிக்கை 872.

12. இம்மாநிலத்தின் பல பகுதிகளில், கள்ளத்தனமாகச் சாராயத்தை வடித்தெடுத்து அதனை, விற்பனை செய்வதைத் தடுக்கத் தொடர்ந்து துணிந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாலும், புட்டிகள் மீது ஆயத்தீர்வைச் சீட்டுக்களை ஒட்டுதலாலும் மாதாந்தர சாராய விற்பனை 1982-83 ஆம் ஆண்டில் அதிகபட்சமாக 84 இலட்சம் லிட்டராக இருந்தது. 1983-84 இல் அதிகபட்சமாக 119 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது.

(ii) சாராய மொத்த விற்பனை :

13. சாராயக் கலவை ஆலைகளிலிருந்து புட்டிகளில் நிரப்பப்பட்ட சாராயம் மொத்த விற்பனையாளர்களுக்கு விற்கப்படுகிறது. மாவட்டத்திற்கு ஒன்று என்ற விதத்தில், சேலம் மாவட்டத்தைத் தவிர, மற்ற 15 மாவட்டங்களுக்கும் மொத்த விற்பனையாளர்கள் வருடத் தொடக்கத்தில் இருந்தனர். தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தின் கீழ், 1-6-1983-லிருந்து சாராய மொத்த வியாபாரத்தை அரசே ஏற்றுத் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் இந்தப் பணியை ஏற்றுக் கொண்ட வரை, அதாவது 27-7-1983 வரை நடத்தி வந்தது. மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை மற்றும் வருவாய்த்துறை ஊழியர்களின் உதவியுடன் மாவட்ட ஆட்சியர்கள் இந்தப் பணியினை நடத்தி வந்தனர். 1-6-1983 முதல் 27-7-1983 வரை ரூ. 17.54 கோடி மதிப்புள்ள சரக்குகளைச் சாராயக் கலவை ஆலைகளிலிருந்து கொள்முதல் செய்து சில்லரை விற்பனையாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்டது. இதனால், அரசுக்குக் கிடைத்த வருமானம் ரூ. 1.14 கோடியாகும். 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு சாராய (மொத்த விற்பனைக்கு வழங்குதல்) விதிகளின் விதித்துறைகளின்படி, தமிழ் நாடு மாநில வாணிபக் கழகம், சாராய மொத்த வியாபாரம் நடத்த உரிமம் பெற்று, 28-7-1983 முதல் நடத்தி வருகின்றது. சாராய சில்லரை விற்பனையாளர்களுக்குக் குறித்த நேரத்தில் எளிதாக விநியோகம் செய்ய ஏதுவாக இருக்கும் வகையில் மாவட்டங்களில் மொத்தம் 64 மொத்த விற்பனைக் கிடங்குகளை நிறுவியுள்ளது.

(iii) சாராயம் தயாரித்தல்.

14. புட்டிகளில் நிரப்பப்படும் சாராயத்தைத் தயாரிப்பதற்காக 10 சாராயக் கலவை ஆலைகளை நிறுவ அரசு உரிமம் வழங்கியுள்ளது. 10 கலவை ஆலைகளில், செங்கற்பட்டு மாவட்டத்தின் ஐயன்சேரியில் நிறுவப்பட்டுள்ள கலவை ஆலை 1-8-1983 முதல் செயல்படவில்லை. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராய (தயாரிப்பு) விதித்துறைகளின்படி இந்தக் கலவை ஆலைகள் செயற்படுகின்றன. 1982-83 ஆம் ஆயத்தீர்வை ஆண்டில் எல்லாக் கலவை ஆலைகளிலிருந்தும் 997 இலட்சம் லிட்டர் சாராயம் அனுப்பப்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆயத்தீர்வை ஆண்டில் 31-1-1984 வரை, எல்லாக் கலவை ஆலைகளிலிருந்தும் 755.05 இலட்சம் லிட்டர் சாராயம் அனுப்பப்பட்டுள்ளது. மாவட்டத் தடய அறிவியல் ஆய்வுக் கூடத்தில் சாராயத்தின் தன்மையும் தரமும், பரிசோதிக்கப்பட்ட பின் பின்னரே கலவை ஆலைகளிலிருந்து புட்டிகளில் நிரப்பப்பட்ட சாராயம் மொத்த விற்பனையாளருக்கு அனுப்பப்படுகிறது.

15. ஆயத்தீர்வை, விற்பனை வரி ஏய்ப்பைத் தடுக்கும் பொருட்டும், வழங்கப்படும் சாராயத்தின் தரத்தை உறுதி செய்வதற்கும், உற்பத்தியாளர் ஒவ்வொரு சாராயப் புட்டியின் மீதும் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகள் புட்டியின் மீதும் 1-11-1982-லிருந்து ஆயத்தீர்வை வில்லைகள் ஒட்டப்படுகின்றன. ஆயத் தீர்வை வில்லைகளுக்கான செலவைக் கலவை ஆலை உரிமதாரர்கள் ஏற்கின்றனர்.

இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகள்:

(i) இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் சில்லரை விற்பனை:

(16) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு (மது உரிமம் மற்றும் அனுமதி) விதிகளின்படி இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது வகைகளைச் சில்லரை விற்பனை உரிமைக்கு உரிமம் வழங்கப்பட்டு வருகிறது. உரிமம் வழங்குவதனால் உள்ளூரின் தேவை பூர்த்தி செய்யப்படும் என்றும் உரிமம் வழங்குவதனால் பொது நலன் பாதிக்கப்படாது என்றும் வழங்கப்படும் உரிமம் முறைகேடாகப் பயன்படுத்தப்படமாட்டாது என்றும் திருப்தி அடைந்தால் மதுவிலக்கு ஆயத்தீர்வை ஆணையர் புட்டியில் அடைக்கப்பட்ட இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகள் அல்லது அயல்நாட்டு மதுவகைகள் சில்லரையாக விற்பதற்கான உரிமம் விண்ணப்பம் அளிக்கப்படுவதன் பேரில் வழங்குகிறார்.

17. 1981–82லிருந்து இதுவரை வழங்கப்பட்ட 1,213 உரிமங்களில் 211 உரிமங்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. 1983–84 ஆம் ஆண்டில் 1,016 உரிமங்கள் புதுப்பிக்கப்பட்டன.

(ii) இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகளின் மொத்த விற்பனை:

18. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகளை 31–5–1983 வரை தனிநபர் மொத்த வியாபாரிகளும் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையமும் நடத்தி வந்தனர் 1–6–1983 முதல இவற்றைத் தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தின்கீழ் அரசே ஏற்றுக்கொண்டது. 1–6–1983 முதல் 27–7–1983 ஆம் ஆண்டு வரை மதுவிலக்கு ஆயத் தீர்வைத்துறை மற்றும் வருவாய் துறை ஊழியர்களின் உதவியுடன் மாவட்ட ஆட்சியர்கள் இந்தப் பணியினைத் துறை வாயிலாக நடத்தி வந்தனர். இந்தக் காலக் கட்டத்தில் ரூ. 4.97 கோடி மதிப்புள்ள இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளைச் சில்லரை வியாபாரிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது. இதனால், அரசுக்கு ஏறக்குறைய ரூ. 0.43 கோடி வருமானம் கிடைத்தது. 28–7–1983 முதல் இந்தப் பணியினை 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் (மொத்த விற்பனைக்கு வழங்குதல்) விதிகளின் விதித்துறைகளின்படி தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ஏற்று நடத்திக்கொண்டு வருகின்றது. இந்தக் கழகம் ஒவ்வொரு மாவட்டத்திலும் மொத்த விற்பனைக் கிளை ஒன்றை நிறுவியுள்ளது.



19. விதித்துறைகளின்படி ஆயத்தீர்வை வில்லைகள் ஒட்டப்படாத மது அடைக்கப்பட்ட பாட்டில் அல்லது கொள்கலன்களை மொத்த விற்பனைக் கிடங்குகளில் வைத்திருக்கவோ அல்லது மொத்த விற்பனைக் கிடங்குகளிலிருந்து வெளியிடவோ கூடாது. முன்பு வட்ட ஆயத்தீர்வை ஆட்சியரின் மாதிரிக் கையொப்பம் கொண்ட முத்திரை மது அடைக்கப்பட்ட புட்டிகளின் மீது பதிக்கப்பட்டு வந்தது. 1–11–1982லிருந்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறையால் விநியோகம் செய்யப்படும் ஆயத்தீர்வை வில்லைகளை மற்ற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மது அடைக்கப்பட்ட புட்டிகள் அல்லது கொள்கலன்கள் மீது ஒட்டவேண்டுமென்று மொத்த வியாபாரிகள் அறிவுறுத்தப்பட்டனர். ஆயத்தீர்வை வில்லைகளைப் புட்டிகளின் மீது பதிப்பிப்பதற்கும் மற்றும் இது சம்பந்தப்பட்ட பணியினை மேற்பார்வை செய்வதற்கும் வட்டாட்சியர் தரத்திற்குக் குறையாத ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்கள் மொத்த விற்பனைக் கிடங்குகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். பணியாளர் மற்றும் ஆயத்தீர்வை வில்லைகளுக்கு ஆகும் செலவை உரிமதாரரிடம் இருந்து வசூலிக்கப்படுகிறது.

(iii) இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகள் தயாரிப்பு :

20. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகள் (தயாரித்தல்) விதிகள் இம் மதுவகைகளைத் தயாரிப்பதற்கு உரிமம் வழங்குவதை முறைப்படுத்துகின்றன. இதுவரை இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளைத் தயாரிக்க மூன்று நிறுவனங்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த மூன்று நிறுவனங்களும் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை இம் மாநிலத்தின் மொத்த விற்பனையாளரான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு விற்பனை செய்கின்றன.

21. இம்மாநிலத்தில் மது தயாரிக்கப்பட்டு அடைக்கப்பட்ட அனைத்து புட்டிகளின் மீதும் 1—11—1982லிருந்து ஆயத்தீர்வை வில்லைகள் ஒட்டப்பட்டு வருகின்றன. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது வகைகளைத் தயாரிக்கும் இந்த மூன்று நிறுவனங்களிலும் இந்தப் பணியினை மேற்கொள்வதற்காக மாவட்டத் துணை ஆட்சியர் பதவித்தரத்தில் ஆயத்தீர்வை மேற்பார்வை அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். பணியாளர் மற்றும் ஆயத்தீர்வை வில்லைகளுக்காகும் செலவை உரிமைதாரரிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

(iv) பீர் தயாரித்தல் :

22. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு புருவரி விதிகள் பீர் தயாரிப்பதற்கு உரிமம் வழங்குவதை முறைப்படுத்துகின்றன. புருவரி தொடங்குவதற்கான அனுமதிக் கடிதம் (Letter of Indent) ஒரு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

மதுவை எடுத்துச் செல்லுதல்

23. தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின்படி உரிமம் அல்லது அனுமதி பெறாமல் மதுவை இறக்குமதி செய்வதை, கொண்டு செல்வதை அல்லது மாநிலம் வழியாக எடுத்துச் செல்வதைத் தடுக்கும் பொருட்டு 1982 இல் 13 ஆம் எண் அவசரச் சட்டத்தை அரசு பிறப்பித்தது. இந்த அவசரச் சட்டத்தைப் பின்பு தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு சட்டம் எண் 2 ஆகச் சட்டமாக்கப்பட்டது. தமிழ்நாட்டிற்கு வெளியேயுள்ள ஓரிடத்திலிருந்து தமிழ்நாடு வழியாகத் தமிழ்நாடு மாநிலத்திற்கு வெளியேயுள்ள மற்றோரிடத்திற்கு மதுவை எடுத்துச் செல்வதற்கான அனுமதி வழங்கத் தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு மது (எடுத்துச் செல்லுதல்) விதிகள் வகை செய்கின்றன. மதுவை எடுத்துச் செல்வதற்குக் காவல்துறை பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. ஆனால், உரிமதாரர் காவலர் பாதுகாப்புக்கான செலவை முன்னதாகச் செலுத்தி விடவேண்டும்.

24. இந்த அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதன் காரணமாகத் தென்னாற்காடு மாவட்ட ஆட்சியரால் இதுவரை 423 எடுத்துச் செல்வதற்கான அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு சட்டம் எண் 2 ஆகச் சட்டமாக்கப்பட்ட இந்த அவசரச் சட்டத்தை எதிர்த்து பாண்டிச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் மொத்த வியாபாரிகள் சிலர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்தனர். இந்த வழக்குகளில் சென்னை உயர் நீதிமன்றம் கீழ்க்கண்ட இடைக்கால ஆணைகளைப் பிறப்பித்துள்ளது.

"1. ரிட் வழக்கு முடியும்வரை தமிழ்நாட்டின் வழியாக மது வகைகளை எடுத்துச் செல்ல இதற்கான அனுமதிச் சீட்டிற்கு விண்ணப்பிக்கவோ, அனுமதிச் சீட்டு பெறவோ கட்டாயமின்றி மனுதாரர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

2. மதுவகைச் சரக்குகள் மாநில எல்லையில் நுழையும் இடத்திலிருந்து மாநில எல்லையைக் கடக்கும்வரை வழி நெடுகிலும் காவல் பாதுகாப்பு மாநில அரசு அளிக்கலாம்.

ஆனால் சரக்கு ஊர்தி தமிழ்நாடு மாநில எல்லைக்குள் நுழையுமிடத்தில் காவல் பாதுகாப்பு அளிக்கும்போது சம்பந்தப்பட்ட அலுவலர் அந்த லாரி அல்லது டிரக்கு வண்டியில் காவல் பாதுகாப்புப் பணியினரை ஏற்றிச்செல்வதனால் மோட்டார் வண்டிகள் சட்டத்தின்கீழ் அதிகாரிகளால் நிறுத்தப்படக்கூடாது என்று சான்றிதழ் வழங்கவேண்டும்.

3. அவசரச்சட்டம் 13/1982-ல் பிரிவு 32-A ல் குறிப்பிட்டபடி, ஊர்தி மாநில எல்லைக்குள் நுழையும் போது, அதில் எடுத்துச் செல்லப்படும் மது வகைகள் மாநிலத்தை விட்டு வெளி



யேறும்போதும் உள்ளனவா என்பதை உறுதி செய்துகொள்ளும் வகையில் அறிவிக்கை மூலம் சோதனைச் சாவடிகள் அல்லது சாலைத்தடைகள் அல்லது இரண்டும், மாநில அரசு நிறுவலாம்.

4. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மனுதாரர்கள்ால் முன்கூட்டியே தெரிவிக்கப்பட்ட குறிப்பிட்ட சோதனைச்சாவடி மூலமாகத்தான் பாண்டிச்சேரி மாநிலத்திற்குள் மனுதாரர்கள் நுழையவேண்டும் என்று தெளிவாக்கப்படுகிறது."

இந்த வழக்கு இன்னும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

எரிசாராயம் : (Rectified Spirit)

25. எரி சாராயம், சாராயம் தயாரிப்பதற்கு அடிப்படைப் பொருளாகும். மேலும், இது பல்வேறு தொழிற்சாலைக் காரியங்களுக்கும் விஷசாராய (Denatured Spirit) முதலியவை தயாரிப்பதற்கும் தேவைப்படுகிறது. எரிசாராயத்தைத் தயாரிப்பதற்குத் தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வடிசாலை விதிகளின் கீழ் இம்மாநிலத்தில் எட்டு வடிசாலைகளுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

26. 1981 ஆம் ஆண்டு வடிசாலை விதிகளின் கீழ் இதுவரை உரிமக் கட்டணம் எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. ஆனால் 1-4-1984 முதல் வடிசாலைகளுக்கான உரிமத்திற்கு ரூ.20,000 வருடாந்திர உரிமக்கட்டணமாக அரசு நிர்ணயித்துள்ளது.

27 இந்திய அரசின் பெட்ரோலியம் அமைச்சகம் அமைத்துள்ள, கருப்பஞ்சாற்றுக் கசண்டு மத்தியக் குழு, கருப்பஞ்சாற்றுக் கசண்டுகள் ஆல்கஹால் ஆண்டின் தொடக்கத்தில் ஆண்டுதோறும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு (Molasses) ஆல்கஹாலும் உபரியாக வுள்ள மாநிலங்களிலிருந்து அவை பற்றாக்குறையுள்ள மாநிலங்களுக்கு உத்தேச ஒதுக்கீடு செய்யப்படும் பொருட்டு, தேவை கிடைக்கப்பெறும் அளவு ஆகியவற்றை மதிப்பீடு செய்யவும், இது தொடர்பான பிறகூறுகள் பற்றியும் கலந்துரையாட இயலும் வகையில் கூடி முடிவு எடுக்கின்றது. 1982-83 ஆம் ஆல்கஹால் வருடத்தில் தமிழ்நாட்டில் ஆல்கஹால் உபரியாக இருந்தது. எனவே, மற்ற மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்ய மத்திய அரசு ஒதுக்கீடு செய்தது. அதனால் 29.80 இலட்சம் லிட்டர் ஆல்கஹால் மற்ற மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

28. மேட்டூரிலுள்ள கெமிகல்ஸ் அண்டு பிளாஸ்டிக் இந்தியா லிமிடெட், குன்னூருக்கு அருகில் அரவங்காட்டிலுள்ள கார்டைட், பேக்டரி, திருச்சிராப்பள்ளியிலுள்ள திருச்சி டிஸ்டிலரிஸ் அண்டு கெமிகல்ஸ் லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் இம்மாநிலத்தில் ஆல்கஹாலைத் தொழில் காரியங்களுக்காகப் பெருமளவு பயன்படுத்தும் நிறுவனங்களாகும். தொழில் காரியங்களுக்காகவும், அருந்துவதற்கு பயன்படுத்தவும் அதிகமான அளவு ஆல்கஹால்

நம் மாநிலத்திற்கே தேவைப்படுவதாலும், ஆல்கஹால் கிடைப்பதில் பற்றாக்குறை எதிர்ப்பார்க்கப்படுவதாலும், 1984 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் மற்ற மாநிலங்களுக்கு ஆல்கஹால் ஏற்றுமதி செய்ய இயலவில்லை. இந்த நிலையை, 6—1-1984 அன்று கருப்பஞ்சாற்றுக்கசண்டு மத்தியக் குழுவின் கூட்டத்தில் அக்குழுவுக்குத் தெரிவிக்கப்பட்டுவிட்டது.

29. 1982 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் உற்பத்தி முறையில் ஆல்கஹால் தேவைப்பட்டு இறுதியில் ஆல்கஹால் இல்லாதப் பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு எரிசாராயம் மீதான ஆயத்தீர்வை மற்றும் விற்பனைக் கட்டணம் பல்க் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1.50 லிருந்து ரூ. 0.75 ஆகவும். ரூ. 1.00 லிருந்து ரூ. 0.25 ஆகவும் முறையே குறைக்கப்பட்டது. 15-4-1983 லிருந்து தொழிற்சாலைகளை ஊக்குவிக்கும் பொருட்டு ஆயத்தீர்வைக் கட்டணம் பல்க் லிட்டர் ஒன்றுக்கு ரூ.0.10 ஆக மேலும் குறைக்கப்பட்டது. ஆல்கஹாலை அடிப்படையாகக் கொண்டு புதிதாக தொடங்கப்பட்ட தொழில் நிறுவனங்களுக்கு அவை செயற்படும் முதல் ஐந்து ஆண்டுகளுக்கு ஆயத்தீர்வை மற்றும் விற்பனைக் கட்டணங்களிலிருந்து அறவே விலக்கு அளிக்கப்பட்டது. உற்பத்தி முறையில் மிதில் ஆல்கஹால் (மெத்தனால்) மற்றும் விஷ சாராவி தேவைப்பட்டு, இறுதியில் ஆல்கஹால் மற்றும் மெத்தனால் இல்லாத பொருள்களைத் தயாரிக்கும் புதிதாக தொடங்கிய தொழிற்சாலைகளுக்கும் முதல் ஐந்தாண்டுகளுக்கு இந்த முழு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளை ஊக்குவிக்கும் இந்த நோக்கத்துடனே மிதில் ஆல்கஹால் (மெத்தனால்) மற்றும் விஷசாராவி தேவைப்பட்டு இறுதியில் மிதில் ஆல்கஹால் (மெத்தனால்) இல்லாத பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு விற்பனைக் கட்டணம் பல்க் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1.00 லிருந்து ரூ. 0.25 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

30. தொழில் காரியங்களுக்காக ஒதுக்கப்பட்ட ஆல்கஹாலை அருந்துவதற்குப் பயன்படுத்துவதைத் திறம்படத் தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன் பிரஞ்சிபாலிஸ், வார்னிஷ் முதலியவை தயாரிப்பது பொதுத்துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொழிலுக்கென்று உண்மையாக பயன்படுத்துபவர்கள், தங்களுக்குரிய தேவைகளை நியாயமான விலையில் பெற இயலும் வண்ணம் அம்பத்தூரிலுள்ள டான்சி தொழிற்சாலையும், மதுரையில் வனத்துறை நடத்தி வரும் அரக்குத் தொழிற்சாலையும் வார்னிஷ் மெருகூட்டு, வார்னிஷ் இளக்கி (தின்னர்ஸ்) பிக்சர் வார்னிஷ் கேன்கட், ஷெல்லாக் முதலியவற்றைத் தயாரிக்கும் பணியை மேற்கொண்டுள்ளன. இத்தொழில் பிரிவுகளின் உற்பத்திப் பொருள்கள் அவற்றைப் பெருமளவில் பயன்படுத்துபவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாகவும் நேரடியாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.





கருப்பஞ்சாற்றுக் கசண்டு:

31. சர்க்கரை ஆலைகளில் சர்க்கரை தயாரிப்பதிலிருந்து கருப்பஞ்சாற்றுக் கசண்டு துணைப் பொருளாகக் கிடைக்கிறது. இது எரிச்சாராயம் தயாரிப்பதற்குரிய அடிப்படை மூலப் பொருளாகும். மதுவிலக்கு ஆயத்தீர்வை ஆணையர் கருப்பஞ்சாற்று கசண்டு மாநில கட்டுப்பாட்டாளர் ஆவார். ஆலைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட கருப்பஞ்சாற்றுக் கசண்டைச் சேமித்து வைத்தல், கொண்டு செல்லுதல் பயன்படுத்துதல் ஆகியவற்றை இவர் கட்டுப்படுத்துகிறார்.

32. இம்மாநிலத்தில் 21 சர்க்கரை ஆலைகள் உள்ளன. செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள திருத்தணியில் ஒன்றும், சேலம் மாவட்டத்திலுள்ள பள்ளிப்பாளையத்தில் மற்றொன்றும் ஆக இரண்டு புதிய சர்க்கரை ஆலைகள் விரைவில் உற்பத்தியைத் தொடங்கவிருக்கின்றன.

33. 1982-83 ஆம் சர்க்கரை ஆண்டில் (1982 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் 1983 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முடிய) கருப்பஞ்சாற்றுக் கசண்டு உபரியாக இருந்தது. எனவே, அரசு வாணிபக் கழகம் (State Trading Corporation) மூலமாக மற்ற மாநிலங்களுக்கும் அயல் நாடுகளுக்கும் கருப்பஞ்சாற்றுக் கசண்டை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளித்தது. 31—12—1983 வரை ஒதுக்கீடு செய்யப்பட்ட மற்றும் ஏற்றுமதிக்காக வெளியீடு செய்யப்பட்ட கருப்பஞ்சாற்றுக் கசண்டின் அளவுகள் பற்றிய விவரங்கள் கீழே குறிக்கப்பட்டிருக்கின்றன :

| | மற்ற மாநிலங்களுக்கு | அயல் நாடுகளுக்கு |
|---|---|---|
| | (மெட்ரிக் டன் எடை). | |
| ஒதுக்கீடு .. .. | 20,000 | 1.25 லட்சம் |
| வெளியிடப்பட்டது .. .. | 6,000 | 0.71 லட்சம் |

வறட்சி நிலை காரணமாக 1983-84 ஆம் சர்க்கரை ஆண்டில் உற்பத்தி குறையும் என்பதைக் கருத்திற் கொண்டு 1983-84 ஆம் ஆண்டில் மாநிலத் தேவையைப் பூர்த்தி செய்ய கருப்பஞ்சாற்றுக் கசண்டைச் சேமித்து வைப்பதற்காக, ஏற்றுமதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவில் மீதமுள்ளதை ஏற்றுமதி செய்யாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

34. சாராயத்தையும் ஆல்கஹாலையும் கள்ளத்தனமாக வடிப்பதற்குப் பயன்படுத்தும் முக்கிய மூலப் பொருள்களில் ஒன்றான கருப்பஞ்சாற்றுக் கசண்டு கள்ளச் சந்தைக்குச் செல்லுவதைத் தடுக்கும் வகையில் அதன் ஒதுக்கீடு கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், முந்தைய ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டவற்றை உபயோகப்படுத்தியமைக்கான சான்றிதழ்கள் மாவட்ட

அலுவலர்களிடம் பெற்ற பின்னரே எம். எல். 4 உரிமங்கள் (கருப்பஞ்சாற்றுக் கசண்டை வைத்திருக்க மற்றும் உபயோகப் படுத்துவதற்கான உரிமம்) வைத்திருப்பவர்களுக்குக் கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. வடிசாலைகள், கால்நடைத் தீவனம், கோழி இரை தயாரிப்பவர்கள், நல்லெண்ணெய் தயாரிப்பவர்கள் போன்ற பயன்பாட்டாளர்களுக்கு மட்டுமே உரிமங்கள் வழங்கப்படுகின்றன. கருப்பஞ்சாற்றுக் கசண்டைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தவிர்க்கும் நோக்குடன், சமையல் எண்ணெய் அல்லாத பிற எண்ணெய்களைத் தயாரிப்பதற்குத் தற்போது கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை. முறைகேடுகளைத் தடுப்பதற்குச் சர்க்கரை ஆலைகளையும், வடிசாலைகளையும் ஏனைய உரிமதாரர்களின் வளாகங்களையும் அவ்வப்போது சோதனையிடுமாறு மாவட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. கருப்பஞ்சாற்றுக் கசண்டு விதிகள் இறுக்கமாக்கப்பட்டுள்ளன. முன்பு வருவாய்க் கோட்டாட்சியர் வழங்கி வந்த கருப்பஞ் சாற்றுக் கசண்டை வைத்திருக்க மற்றும் உபயோகப்படுத்துவதற்கான எம். எல். 4 உரிமங்களை வருவாய்க் கோட்ட ஆட்சியாளர்களுக்கு பதிலாகத் தற்போது மாவட்ட ஆட்சியர், மாவட்டக் கூடுதல் ஆட்சியர் அல்லது மாவட்ட வருவாய் அதிகாரிகள் வழங்கி வருகின்றனர்.

விஷசாரா்வி :

35. (1) விஷசாராவி, மெத்தனால் வார்னிஷ் போன்றவற்றைப் பயன்படுத்தவும், விற்பனை செய்யவும் (2) விஷசாராவி மெத்தனால் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட பொருள்களைத் தயாரிக்கவும், விற்பனை செய்யவும் டி. எல். வகை உரிமங்கள் கொடுக்கப்படுகின்றன.

36. சாராவியை அடிப்படையாகக் கொண்ட பொருள்களை அதாவது வார்னிஷ், பிரஞ்ச் பாலிஷ் போன்றவற்றைத் தயாரிப்பதற்கு ஏராளமான உரிமதாரர்களுக்கு முன்னர் ஒதுக்கப்பட்ட விஷ சாராயம் கள்ளச் சாராயம் வழங்குவதற்கு முக்கிய ஆதாரமாக அமைந்து விட்டது. 20-சி என்ற புதிய பிரிவை சேர்த்துக் கொள்ளும் வகையில், தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தைத் திருத்தம் செய்ததையடுத்து விஷ சார்ாவி, வார்னிஷ் போன்றவற்றின் மொத்த விற்பனையும், சில்லரை விற்பனையும் 1—10—1978 ஆம் நாள் முதல் கூட்டுறவுச் சங்கங்களிடமும், அரசுத் துறைத் தொழில் பிரிவுகளிடமும் அரச நிறுவனங்களிடமும் கொடுக்கப்பட்டன. அவற்றிற்குக் கொடுக்கப்பட்ட விஷ சாராவியை வேறுவகையில் பயன்படுத்தியதாகப் புகார் எதுவும் வரவில்லை. இம்முறை நன்கு செயற்படுகிறது.

37. மருத்துவர்கள் போன்ற உண்மையான பயனீட்டாளர்களுக்கு விஷ சாராவியையும், வார்னிஷையும் காலதாமதமின்றிப் போதிய அளவு வழங்க அறிவுரைகள் அளிக்கப்பட்டுள்ளது.





38. ஒவ்வொரு கம்பெனிக்கும் அல்லது கம்பெனிகள் தொகுக்கும் ஆண்டுப் பங்கீட்டு அளவு 50,000 லிட்டர்களுக்கு அதிகமாக இருக்கும்போது, அவற்றிற்குத் தனியாக ஆயக்கண்காணிப்பு அதிகாரியை நியமித்து அவருடைய விழிப்பான மேற்பார்வையில் சாராவியை அடிப்படையாகக் கொண்ட பொருள்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. 50,000 லிட்டர்களுக்குக் குறைவாக ஆண்டுப் பங்கீட்டளவு இருக்கும் ஏனைய இனங்களில் உரிமம் பெற்றவர்களின் கணக்குகளைக் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை சரிபார்க்கும்படி வட்ட ஆயத்துறை அதிகாரிகளுக்கும் ஆயத்துறை உதவி ஆணையருக்கும் தக்க உத்தரவுகள் பிறப்பிக்கப்புட்டுள்ளன. மேலும், சாராவியை அடிப்படையாகக் கொண்ட பொருள்களைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தும் சாராவியின் அளவைச் சரிபார்க்கவும், பொருளைச் செய்து முடிப்பதற்குப் பயன்படுத்தும் சாராவியின் விதாச்சாரத்தைக் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை மறு ஆய்வு செய்யவும் இயன்ற அளவு நிபந்தனைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

மருந்து ஒப்பனைப் பொருள்கள் தயாரிப்பு :

39. மருந்துப் பொருள்கள்-ஒப்பனைப் பொருள்கள் தயாரிப்பதற்கும் விற்பனை செய்வதற்கும் 'L' வகை உரிமங்கள் வழங்கப்படுகின்றன.

40. மத்திய அரசின் சட்டமான 1955 ஆம் ஆண்டு மருந்துப் பொருள்கள்—ஒப்பனைப் பொருள்கள் தயாரிப்புச் சட்டம், மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளின்படி சாராவி வழங்கப்பட்டுள்ள உரிமதாரர்களின் நடவடிக்கைகள் ஆய்விற்கு உட்பட்டவை. டிஞ்சர், சிஞ்சர்பெரிஸ் போன்றவற்றைக் கள்ளத்தனமாக இறக்குமதி செய்வதைத் தடுப்பதற்கு மாநில எல்லை யோரங்களில் விழிப்புடன் கண்காணிப்புப் பணிகள் நடைபெறுகின்றன.

41. அசவம், அரிஷ்டம், கஷாயம் என்ற பெயரில் கள்ளச் சாராயம் பயன்படுத்தப்படுவதாகவும், விநியோகிக்கப்படுத்துவதாகவும் அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. இவ்வாறு செய்வோர் மீது தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டம் அல்லது 1940 ஆம் ஆண்டு மருந்துப் பொருள்கள்-ஒப்பனைப் பொருள்கள் சட்டத்தின்படி அல்லது இவ்விரு சட்டத்தின்படியும் நேர்விற்கேற்றபடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அசவம், அரிஷ்டம், கஷாயம் தயாரிப்பதற்கு எல். 2 உரிமம் பெற்றுள்ளவர்களின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 1940 ஆம் ஆண்டு மருந்துப் பொருள்கள்-ஒப்பனைப் பொருள்கள் சட்டத்தின் IV-A இயலின் விதித்துறைகளைச் செயற்படுத்தியதன் விளைவாக அசவம், அரிஷ்டம் போன்றவற்றைத் தயாரிப்பதில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதால், இத்தகைய பொருள்களை உண்மையாகவே தயாரிப்பவர்கள் மட்டுமே பெற முடிகிறது.

42. குளோரால் ஹைட்ரேட் என்பது ஊறு விளைவிக்கும் ஓர் வேதியியற் பொருளாகும். இதனைத் தயாரிக்கத் தமிழ் நாட்டில் தடை விதிக்கப்பட்டுள்ளது. இப்பொருளைப் பயன் படுத்துவது தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்கு சட்டத்தின் படி பிறப்பிக்கப்பட்ட தனி விதிகளின்கீழ் முறைப்படுத்தப் படுகிறது. நாட்டின் பிற பகுதிகளிலிருந்து இம்மாநிலத்திற்கு குளோரால் ஹைட்ரேட் கள்ளத் தனமாகக் கொண்டு வருவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

போதைப் பொருள் குற்றங்கள்.

43. சென்னை, குற்றப் புலனாய்வுத் துறை, குற்றப் பிரிவு, போதைப் பொருள் குற்றத் தகவல் சேகரிப்புப் பிரிவு, 1983 ஆம் ஆண்டில் அபின் சட்டத்தின்படி ரூ. 2.95 இலட்சம் மதிப்புடைய 147.620 கிலோ கிராம் அபினைக் கைப்பற்றியது தொடர்பாக 14 வழக்குகளையும், ரூ. 15.46 இலட்சம் மதிப்புடைய 1931.620 கிலோ கிராம் கஞ்சாவைக் கைப்பற்றியது தொடர் பாக 110 வழக்குகளையும் பதிவு செய்தது.

44. இந்த போதைப் பொருள்களை மற்ற மாநிலங்களி லிருந்து சென்னை மற்றும் தமிழ் நாட்டிலுள்ள மற்ற இடங்கள் வழியாகக் கடத்தப்படுவதைத் தடுக்கக் குற்றப் புலனாய்வுத் துறை தீவிரமாகக் கண்காணித்து வருகிறது.

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின்
நடவடிக்கைகள்.

தொடக்கம்.

45. 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தைத் திருத்துகின்ற வகையில், தமிழ்நாடு அரசு 1983 ஆம் ஆண்டு மே திங்கள் 27 ஆம் நாளன்று தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தைப் (தமிழ்நாடு அவசரச் சட்டம்) 4/1983) பிறப்பித்தது. இந்த அவசரச் சட்டத்தின் விதித்துறை களின்படி சாராயம் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது வகைகளின் மொத்த விற்பனைக்காக வழங்கப்பட்ட உரிமங்கள் 1983 ஆம் ஆண்டு மே திங்கள் 31 ஆம் நாளுடன் முடிவுற்றன. சாராயம் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகளை இம்மாநிலம் முழுவதும் மொத்த விற்பனைசெய்யும் முழு உரிமையைத் தமிழ்நாடு முழு தும் அரசுக்குச் சொந்தமான அதன் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு வழங்க இந்த அவசரச் சட்டம் வகை செய்தது. இந்த அவசரச் சட்டத்தை 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்தச்) சட்டமாக (தமிழ்நாடு சட்டம் 33/1983) சட்ட மன்றத்தால் நிறைவேற்றப் பட்டது. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் கம்பெனிகள்



சட்டத்தின் கீழ் 23—5—1983 அன்று பதிவு செய்யப்பட்டது. மேற்படி கழகம் 1—6—1983 லிருந்து இரண்டு மாத காலத் திற்குள் செயல்பட ஆரம்பிக்க வேண்டும். மேற்படி கழகம் அவ்வாறு செயல்படத் துவங்கும் காலம் வரை இடைக்கால ஏற்பாடாக மாநில அரசே சாராயம் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது வகைகளின் மொத்த விற் பனை செய்யும் பொறுப்பை ஏற்றது. மேற்படி கழகம் 1983 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் இறுதி வாரத்தில் அச்சமயம் இருப்பில் இருந்த சாராயம் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகளைச் சம்பந்தப்பட்ட அரசு அதிகாரி களிடமிருந்து பொறுப்பேற்றுக்கொண்டது. அவ்வாறு பொறுப் பேற்ற நாளிலிருந்து இக்கழகம் சாராயம் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகள் மொத்த விற்பனையை மேற்கொண்டு சில்லரை வியாபாரிகளுக்கு விநியோகித்து வருகிறது

நிர்வாக அமைப்பு :

46. சென்னையில் அமைந்துள்ள இக்கழகத்தின் தலைமை அலுவலகம் மாநிலம் முழுவதும் சாராயம் மற்றும் இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மது வகைகளின் மொத்தக் கொள்முதல் மற்றும் விநியோகம் ஆகிய பணிகளை வரையறை செய்கிறது. கீழே குறிப்பிட்டுள்ள அலுவலர்களைக் கொண்ட நிர்வாகக் குழு இக்கழகத்தின் பணிகளை நிர்வகித்து முறைப்படுத்துகிறது:—

(1) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்.

(2) ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை.

(3) ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர், நிதித்துறை.

(4) அரசு இணைச் செயலாளர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை.

தலைமை அலுவலகத்தில் தலைவர் மற்றும் நிர்வாக இயக்கு நரின் பணிகளை நிர்வகிக்கப் பொது மேலாளர், ஒரு முதுநிலை மேலாளர் (வாணிபம்), ஒரு நிதி ஆலோசகர் மற்றும் தலைமைக் கணக்கு அலுவலர், ஒரு கம்பெனி செயலாளர் மற்றும் நிர்வாக அலுவலர் ஆகியோர் உள்ளனர். மாவட்டத்திற்கு ஒன்று எனும் அடிப்படையில் இக்கழகத்திற்கு 16 மண்டல அலுவலகங்கள் உள்ளன. சென்னை மாவட்ட அலுவலகத்திற்கு மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் ஒரு முதுநிலை மண்டல மேலாளர் நியமிக்கப்பட்டுள்ளார். புதுக் கோட்டை, தர்மபுரி, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி ஆகிய நான்கு நீங்கலாக மாவட்டங்களில் உள்ள மண்டல அலுவலகங் களில் வட்டாட்சியர்களும் எஞ்சியுள்ள 11 மாவட்டங்களில்

துணை மாவட்ட ஆட்சியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைக் கிடங்கு ஒன்று உள்ளது. மாவட்டங் களிலுள்ள சிலலரை விற்பனை உரிமதாரர்களுக்கு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது வகைகள் இக்கிடங்கு களிலிருந்து விநியோகிக்கப்படுகின்றன. சாராய விநியோகத் தைப் பொறுத்த மட்டில் ஒவ்வொரு மாவட்டத் தலைமை யிடத்திலும் கோட்டத் தலைமையிடத்திலும் 64 சாராய மொத்த விற்பனைக் கிடங்குகள் நிறுவப்பட்டுள்ளன. ஒவ் வொரு கிடங்கும் அதன் விற்பனை அளவிற்கேற்றவாறு ஒரு வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியரால் நிர்வகிக்கப் படுகின்றது. கோயம்புத்தூர் போன்ற அதிக அளவு உரிமங்கள் உள்ள மாவட்டங்களில் வட்டத்திற்கு ஒன்று என்கிற விகிதத்தில் அனைத்து, வட்டத் தலைமையிடங்களிலும் சாராயக் கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னை, கோயம் புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல் வேலி போன்ற சில மையங்களில் இந்தியாவில் தயாராகும் அயல் நாட்டு மதுவகைகளுக்கென வெளியிடும்போது ஆயத் தீர்வை செலுத்தும் ஏற்பாடுள்ள கிடங்குகள் (Bond d w.re-house) நிறுவும் திட்டம் உள்ளது.

நிதியமைப்பு:

47. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், ஒவ்வொன்றும், ரூ. 1,000 மதிப்புள்ள 50,000 சம உரிமைப் பங்குகள் கொண்ட ரூ. 5 கோடி அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன் பதிவு செய்யப் பட்டுள்ளது. இது அரசுக்குச் சொந்தமான நிறுவனமாகை யால் மாநில அரசே இதன் முக்கிய நிதி ஆதாரமாகவுள்ளது. மாநில அரசு இக்கழகத்திடமிருந்து ரூ. 1,000 மதிப்புள்ள 10,000 பங்குகளைப் பெற்று ரூ. 1 கோடி அளித்துள்ளது. இது மட்டுமல்லாமல் வழிவகை முன் பணமாக ரூ. 2.02 கோடி வழங்கியுள்ளது. மேற் குறிப்பிடப்பட்ட முன் பணம் 12.5 சதவிகித வட்டியுடன் ஆறு சம மாதத் தவணைகளில் 1984-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடங்கி ஒவ்வொரு மாதமும் அரசுக்குத் திரும்பச் செலுத்தப்படவேண்டும். மேலும் இக்கழகம் வைத் துக்கொண்டுள்ள ஸ்டேட் வங்கியின் வர்த்தகப் பிரிவு ரூ. 2.75 கோடிக்குக் காசுக் கடன் வசதி அளித்துள்ளது.

வாணிப நடவடிக்கைகள் :

48. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் இதுவரை 669.47 இலட்சம் லிட்டர் சாராயத்தை தற்போது இயங்கி வரும் 9 வடிவ ஆலையிலிருந்து கொள்முதல் செய்து 1984-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ஆம் நாள் வரை சில்லரை வியாபாரிகளுக்கு 660.81 இலட்சம் லிட்டர் விற்பனை செய்துள்ளது. இந்தியா வில் தயாராகும் அயல்நாட்டு மது வகைகளை, இம்மாநிலம்





மற்றும் பிற மாநிலங்களில் உள்ள தயாரிப்பாளர்களிடமிருந்து இக்கழகத்தின் தலைமை அலுவலகம் தருவித்து மண்டலத் கிடங் குகளுக்கு அனுப்புகிறது. இக்கழகம் அரசிடமிருந்து எடுத்துக் கொண்ட சுமார் 3 கோடி ரூபாய் பெருமான இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுவகைகளுடன் தனது வர்த்தகப் பணியை ஆரம்பித்தது. 31-1-1984 வரை ரூ. 103.58 கோடி பெறுமான மது வகைகளை விற்பனை செய்துள்ளது. 31-3-1984-ல் முடிவுறும் நிதியாண்டிற்கான விற்பனை சுமார் ரூ. 130 கோடி எனவும் ஓர் ஆண்டு முழுவதற்குமான விற்பனை சுமார் ரூ. 200 கோடி எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

49. இவ்வாணிபக் கழகத்தால் விற்கப்படும் ஒரு பல்க் லிட்டர் சாராயத்திற்கு ரூ. 0.45-ம், சாராவி மதுவகைகள். சேம்பென்ஞ் மற்றும் 42 சதவிகிதத்திற்கு மேல் சாராவி கொண்ட அதிக வீரியமுள்ள ஒயின்ஸ் போன்ற இந்தியாவில் தயாராகும் அயல் நாட்டு மது வகைகைளுக்கு பல்க் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 3.50-ம், மேற்குறிப்பிட்ட மது வகைகள் நீங்கலாக மற்ற எல்லா மது வகைகளுக்கும் பல்க் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1.00-ம், ஒரு பல்க் லிட்டர் பீருக்கு ரூ. 1.50-ம் ; 1-8-1983 முதல் கூடுதல் விற்பனைக் கட்டணமாக விதிக்கப்பட்டுள்ளது. இதற்கான அறிவிக்கை 8-2-1984 அன்று வெளியிடப்பட்டது.

மதுவிலக்கைச் செயற்படுத்துதல் :

50. தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டம் மற்றும் அதன்படி இயற்றப்பட்ட விதிகளின் படி மதுவிலக்கைச் செயற்படுத்தும் பணியை 1-9-1980 முதல் காவல்துறையைச் சார்ந்த மதுவிலக்குச் செயற்படுத்தும் பிரிவு கவனித்து வருகிறது. கள்ளச் சாராயம் காய்ச்சுதல் மற்றும் மதுவைக் கள்ளத்தனமாகக் கடத்தி வந்து விற்பனைச் செய்தல் போன்றவற்றில் ஈடுபட்டிருப்பவர்களைக் கண்டு பிடிப் பதில் எல்லா மாவட்டங்களிலும் அதிகப்படியான கவனம் செலுத்தப்படுகிறது. மாவட்டங்களில் மேற்கண்ட குற்றங்கள் அதிகமாக நடக்கின்ற இடங்களைக் கண்காணித்து அவ்வப் பொழுது திடீர்ச் சோதனைகள் நடத்தப்படுகின்றன. இந்தச் செயல்முறைகளினால் இம்மாநிலத்தில் சாராய மொத்த வியா பாரம் மற்றும் சில்லரைக் கடைகளும் எடுத்துக்கொள்ளப்படும் சாராயத்தின் அளவு 1982ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் 58.70 லட்சம் லிட்டரிலிருந்து 1984 ஆம் ஆண்டு சனவரித் திங்களில் 119.53 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. சென்னை மாநகரைச் சுற்றியுள்ள எல்லையோரப் பகுதிகளில், கள்ளச் சாராயம் வடிக்கும் இடங்களை அழித்துவிட்டதன் மூலம் கள்ளத் தனமாக வடித்தலை நன்றாகக் கட்டுப் படுத்த முடிந்தது. மற்ற மாவட்டங்களிலும் கள்ளச் சாராயம் வடிப்பதற்குப் பெயர் பெற்ற பகுதிகளைச் சோதனை செய்து பெருமளவு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

[1984 மார்ச் 29

51. இம்மாநிலத்தில் கள்ளச் சாராயம் அதிகமாக வடித்தெடுக்கும் பகுதிகளைத் தகர்த்தெரிந்ததன் விளைவாக, ஆந்திர பிரதேசம், கர்நாடகம், கேரளம் மற்றும் பாண்டிச்சேரி ஆகிய அண்டை மாநிலங்களில் எல்லையோரப் பகுதிகளிலிருந்து கணிசமான அளவு சாராயம் இம்மாநிலத்திற்குக் கடத்தப்படுகிறது. இதே போன்று, பாண்டிச்சேரியில் குறைந்த வரிகள் விதிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, அந்த மாநிலத்திலிருந்து இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுவகைகளும் இம்மாநிலத்திற்குக் கடத்தப்படுகின்றன. கடத்துதலுக்கு உபயோகப்படுத்தக் கூடிய எல்லா வழிகளிலும் சாலைத் தடுப்புகள் அடிக்கடி நடத்தியதன் பயனாகப் பல மோட்டார் வண்டிகள் மற்றும் கடத்தல் சரக்குள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இது போன்ற சந்தர்ப்பங்களில் கடத்தல்காரர்கள் கடத்தலைத் தடுக்க முயலும் காவல்துறைக் குழுவினர் மீதே வாகனங்களை ஏற்றி ஓட்டித் தப்பவும் முயல்கின்றனர். 1983ஆம் ஆண்டு பறிமுதல் செய்யப்பட்ட வண்டிகள், கைப்பற்றப் பட்ட கள்ளச் சரக்குகளின் அளவு மற்றும் அவற்றின் மதிப்புகள் முதலியவை பின்வருமாறு :—

| விவரங்கள். | 1983 |
|---|---|
| (அ) கள்ளத்தனமாக வடிக்கப்பட்ட சாராயத்தின் அளவு (லிட்டரில்) .. .. | 390,700 |
| (ஆ) அழிக்கப்பட்ட புளிக்க வைக்கப்பட்ட ஊறலின் அளவு (லிட்டரில்) .. .. | 8,383,423 |
| (இ) கைப்பற்றப்பட்ட புட்டிகளில் அடைக்கப் பட்ட இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது வகைகள் .. .. .. | 5,852 முழு அளவு புட்டிகள்<br>9,052 பாதியளவு புட்டிகள்<br>14,971 கால் புட்டிகள். |
| (ஈ) கைப்பற்றப்பட்ட இந்தியாவில் தயாரிக்கப் படும் அயல்நாட்டு மது வகைகளின் மதிப்பு. | ரூ. 11,95,000 |
| (உ) கைப்பற்றப்பட்ட வண்டிகள் எண்ணிக்கை .. | 64 |

உரிம நிபந்தனைகளை மீறிச் சாராயம், கள் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைக் கடைகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் நல்ல பலனை



1984 மார்ச் 29]

அளித்துள்ளன. உரிம நிபந்தனைகளை மீறிய உரிமதாரர்கள் மீதுள்ள புகார்கள் மீது சம்பந்தப்பட்ட மாவட்ட அலுவலர் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை ஆணையர் தகுந்த நடவடிக்கை எடுத்து வந்துள்ளார். சாராயம், கள் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைக் கடைகளில் நடத்தப் பட்ட திடீர்ச் சோதனைகளைப் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

| | 1–7–1982 முதல் 30–4–1983 வரை. | 1–5–1983 முதல் 31–12–1983 வரை. | மொத்தம். |
|---|---|---|---|
| (அ) இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகை உரிமதாரர்கள் .. | 83 | 74 | 157 |
| (ஆ) சாராயக் கடைகள். | 413 | 858 | 1,271 |
| (இ) கள்ளுக்கடைகள் .. | 175 | 342 | 517 |

52. மதுகசாயம் போன்ற ஆயுர்வேதத் தயாரிப்புகளிலும் கள்ளிலும் க்ளோரல் ஹைட்ரேட் போன்ற போதைத் தரும் நச்சுப் பொருள்கள் உபயோகப்படுத்திய சில நிகழ்ச்சிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. கள் உட்பட மற்ற மதுவகைகளிலும் ஆயுர்வேதத் தயாரிப்புகளிலும் ஊறு விளைவிக்கும் இதுபோன்ற போதைப் பொருட்களை உபயோகப்படுத்துவதைத் தடுக்கத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மதுகசாயம் மற்றும் அவை போன்ற மற்றத் தயாரிப்புகளில் க்ளோரல் ஹைட்ரேட் உபயோகப்படுத்தியதாக 40 நேர்வுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. கள்ளில் க்ளோரல் ஹைட்ரேட் உபயோகப் படுத்தியதாக 179 தேர்வுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

53. 1982ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் 63 ஆய்வாளர்கள், 168 துணை ஆய்வாளர்கள், 84 தலைமைக் காவலர்கள், 42 முதல் நிலைக் காவலர்கள், 504 இரண்டாம் நிலைக் காவலர்கள், 84 ஓட்டுனர் காவலர்களும் கூடுதலாக நியமிக்கப்பட்டனர். 21 வேன்களும், 21 ஜீப்புகளும் புதிதாக வாங்க அனுமதி அளிக்கப் பட்டது. கூடுதலாக நியமிக்கப்பட்ட இந்தப் பணியாளர்கள் மற்றும் வாங்கப்பட்ட வண்டிகளும் ஏற்கெனவே உள்ள பணி யாளர்களுடன் சேர்ந்து கள்ளத்தனமாக வடித் தெடுத்தல், மதுவைக் கள்ளத் தனமாகக் கடத்துதல், மற்ற மதுவிலக்கு குற்றங்களை அறவே ஒழிக்கும் இப்பெரிய பணிக்குப் போதுமான தாக இல்லை. எனவே, 1983ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் 1 கண்காணிப்பாளர், 11 துணைக் கண்காணிப்பாளர்கள், 49 ஆய்வாளர்கள், 50 துணை ஆய்வாளர்கள், 89 தலைமைக்

காவலர்கள், 44 முதல் நிலைக் காவலர்கள், 556 இரண்டாம் நிலைக் காவலர்கள், 102 ஓட்டுநர் காவலர்கள், 1 ரிசர்வ் ஆய்வாளர், 1 ரிசர்வ் துணை ஆய்வாளர், 2 மெக்கானிக் தலைமைக் காவலர்கள் முதலிய கூடுதல் பதவிகளை அரசு மீண்டும் ஏற்படுத்தியது. மேலும் 15 கார்கள், 34 வேன்கள், (Pick-up vans), 2 ஜீப்புகளை வாங்கவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்தக் கூடுதல் பணியாளர் நியமிக்கப்பட்டதன் மூலமும் புதிதாக வாங்கப்பட்ட வண்டிகளின் துணையுடனும் மதுவிலக்குச் செயற்பாட்டுப் பணியில் மேலும் முன்னேற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது. இந்தக் கூடுதல் பணியாளர்களுக்குத் தேவையான அலுவலகத் தளவாடங்களுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

54. கடந்த ஐந்தாண்டுகளில் கண்டுபிடிக்கப்பட்ட மதுவிலக்குக் குற்றங்கள் பற்றிய விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:



கண்டுபிடிக்கப்பட்ட மதுவிலக்குக் குற்றங்கள் பற்றிய விவரங்கள்.

| தொடர் எண்ணும் விவரங்களும். | 1978–79 | 1979–80 | 1980–81 | 1981–82 | 1982–83 | 1983–84 (1–4–83 முதல் 31–12–83 வரை.) |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 ஏனைய மாநிலங்களிலிருந்து மதுவைக் கள்ளத்தனமாகக் கடத்துதல். | 5,609 | 4,400 | 2,534 | 1,062 | 911 | 525 |
| 2 ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு மதுவைக் கள்ளத்தனமாகக் கடத்துதல். | 597 | 193 | 801 | 305 | 285 | 296 |
| 3 கள்ளச்சாராயம் காய்ச்சுதல். | 44,512 | 34,697 | 29,504 | 18,123 | 15,602 | 10,084 |
| 4 எரிசாராயம் அல்லது கள்ளத்தனமாக வடிக்கப்பட்ட சாராயத்தை வைத்திருத்தல். | 1,29,111 | 64,878 | 25,022 | 5,297 | 6,713 | 6,364 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 5 கள்ளத்தனமாக வடிக்கப்பட்ட சாராயத்தை அல்லது எரி சாராயத்தை விற்பனை செய்தல். | 23,704 | 25,151 | 21,570 | 5,386 | 15,518 | 14,385 |
| 6 உரிமம் இல்லாமல் கள்ளைப் புளிக்க வைத்தல். | 5,462 | 1,258 | 3,089 | 1,830 | 2,267 | 2,828 |
| 7 உரிமம் இல்லாமல் பதநீரைப் புளிக்கவைத்தல். | 87 | 84 | 348 | 20 | 3 | .. |
| 8 உரிமம் இல்லாமல் மரத்திலிருந்து பதநீரை இறக்குதல். .. | 468 | 179 | 295 | 104 | 56 | 8 |
| 9 மதுவைக் கள்ளத்தனமாக எடுத்துச் செல்லுதல் .. | 24,749 | 25,141 | 34,056 | 36,374 | 26,411 | 17,436 |
| 10 மதுவை உரிமம் இல்லாமல் விற்பனை செய்தல் .. | 406 | 63 | 27 | 52 | 396 | 814 |
| 11 மதுவை உரிமம் இல்லாமல் வைத்திருத்தல் .. | 13,404 | 2,860 | 2,820 | 1,637 | 2,625 | 2,004 |



| (1) | (2) | (3) | (6) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 12 ஹெம்ப் மருந்துச் செடி வகைகளைப் பயிரிடுதல் .. | 207 | 206 | 88 | 5 | 25 | 23 |
| 13 பிற மாவட்டங்களிலிருந்து மற்ற மாவட்டங்களுக்கு போதை மருந்துப் பொருள்களைக் கள்ளத்தனமாகக் கடத்தல் .. | | | | | | |
| 14 போதை மருந்துப் பொருள்களைக் கள்ளத்தனமாக எடுத்துச் செல்லுதல் .. | 115 | 159 | 141 | 266 | 294 | 146 |
| 15 போதை மருந்துப் பொருள்களை உரிமம் இல்லாமல் விற்பனை செய்தல். | 155 | 183 | 120 | 40 | 79 | 32 |
| 16 போதை மருந்துப் பொருள்களை உரிமம் இல்லாமல் வைத்திருத்தல் .. | 7,315 | 5,578 | 1,426 | 605 | 1,858 | 1,447 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 17 பல்வேறு குடி போதையில் இருந்தல் .. | 76,440 | 62,566 | 10,816 | 229 | 234 | 302 |
| 18 விஷசாராயத்தைக் குடிக்கத் தக்கதாக மாற்றியளித்தல் | 2,425 | 861 | 379 | 66 | 62 | 121 |
| 19 அபினைக் கள்ளத் தனமாகக் கடத்தல் | .. | .. | 21 | 6 | .. | 2 |
| 20 அபினைக் கள்ளத் தனமாக எடுத்துச் செல்லுதல் .. | .. | .. | .. | .. | .. | .. |
| 21 அபினை வைத் திருத்தல் .. | 357 | 639 | 235 | 33 | 14 | 6 |
| 22 அபினை விற்பனை செய்தல் .. | 1 | .. | .. | .. | .. | .. |
| 23 அபாயகரமான மருந்துப் பொருள் கள் சட்டத்தின் கீழ்க் குற்றங்கள் .. | 28 | 84 | 98 | 35 | 139 | 368 |
| 24 ஏனைய பல்வகை இனங்கள் | .. | .. | 8 | 73 | 13,547 | 11,860 |
| மொத்தம் .. | 3,34,952 | 2,29,180 | 1,33,407 | 71,548 | 87,039 | 69,051 |



கள்ளச் சாராயக்காரர்கள் முதலியோரைத் தடுப்புக் காவலில் வைத்தல் :—

55. கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் மற்றும் மதுவிலக்குக் குற்றம் புரிந்தவர்களின் நடவடிக்கைகளைத் திறம்பட ஒடுக்கு வதற்காகத் தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், போதை மருந்துப் பொருட்கள் சட்டத்தின்படி குற்றம் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றம் செய் பவர்கள் , சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்கள் ஆகியோர், பொது அமைதிக்குக் கேடு விளை விக்கும் கொடிய செயல்கள் புரிவதைத் தடுக்கும் சட்டம் இயற் றப்பட்டது. இச்சட்டத்தில் விதித் துறைகளைப் பயன் படுத்திக் கள்ளச் சாராயக்காரர்கள் என்ற வகையில் 1982 ஆம் ஆண்டு 62 நபர்களையும், 1983 ஆம் ஆண்டு 45 நபர்களையும், 1984 ஆம் ஆண்டு 12 நபர்களையும் தடுப்புக் காவலில் வைக்கப்பட் டுள்ளது. 29—2—1984ல் உள்ளபடி இந்தச் சட்டத்தின் விதித் துறைகளைப் பயன்படுத்தி இச்சட்டத்தில் வகைப்படுத்தப் பட்டுள்ள குற்றங்களின் கீழ்த் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட நபர்களின் விவரம் பின்வருமாறு :—

| | |
|---|---|
| கள்ளச்சாராயக்காரர்கள் | 119 |
| போதை மருந்துக் பொருள்கள் சட்டத்தின்படி குற்றம் செய்தவர்கள் | 3 |
| குண்டர்கள் .. | 339 |
| விபசாரக் குற்றம் செய்தவர்கள் .. | 3 |
| மொத்தம் .. | 464 |

56. கள்ளச் சாராயம் காய்ச்சுதல், விற்பனை செய்தல் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல் நாட்டு மது வகைகளை விற்பனை செய்தல் ஆகியவற்றை அறவே ஒழிக்க அனைத்து முயற்சிகளையும் தீவிர நடவடிக்கைகளையும் தொடர்ந்து அரசு முனைப்புடன் செயலாற்றும்.

ஆயத்தீர்வை விதம்.

57. பல்வேறு வகையான மது வகைகளின் மீது தற்போது நடைமுறையில் உள்ள ஆயத்தீர்வை விற்பனைக் கட்டண விதங்கள் பற்றிய விவரம் வருமாறு :—

ஆயத்தீர்வை விதங்களைக் காட்டும் விவர அறிக்கை.

| தொடர் எண்ணும் விவரங்களும். | ஆயத்தீர்வை. | விற்பனைக் கட்டணம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூ. பை. | ரூ. பை. |
| 1. (அ) எரி சாராயம் (சாராவி) .. | 8.00 (புருப் லிட்டர்) ஒன்றுக்கு. | 1.00 (பல்க் லிட்டர்) ஒன்றுக்கு). |
| (ஆ) உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பொருள்கள் ஆல்கஹால் இல்லாமல் தயாரிக்கப்பட்டிருந்தால். | 0.10 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு). | 0.25 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு). |
| 2. (அ) விஷ சாராவி மற்றும் மெதில் ஆல்கஹால் (மெத்தனால்). | இல்லை. | 1.00 (பல்க் லிட்டர்) ஒன்றுக்கு). |
| (ஆ) உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பொருள்கள் ஆல்கஹால் மெதில் ஆல்கஹால் (மெத்தனால்) இல்லாமல் தயாரிக்கப்பட்டிருந்தால். | இல்லை. | 0.25 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு). |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| 3. பிற மாநிலங்களுக்கு ஆல்கஹால் ஏற்றுமதி (30-6-1984 வரை செல்திறனுள்ளவை). | | |
| (i) எரிசாராயம் (சாராவி) .. | 0.50 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு). | 1.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு). |
| (ii) விஷ சாராவி .. | இல்லை. | 0.25 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு). |
| (iii) மெதில் ஆல்கஹால் (மெத்தனால்) .. | இல்லை. | 0.25 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு). |

4. A. மொத்த விற்பனை உரிமதாரரின் உள்ளூர்க் கொள்முதல் இறக்குமதி மற்றும் விற்பனை மீது :—

| | | |
|---|---|---|
| (i) இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல் நாட்டு மதுவகை வாங்குதல் அல்லது இறக்குமதி செய்தல். | 25.00 (புருப் லிட்டர் ஒன்றுக்கு) | 2.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு.) |
| விற்பனை செய்தல் .. | இல்லை. | 3.50 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு —42 சதவீதம் புருப் சாராவி கொண்ட அதி தீவிரமான ஒயின்ஸ் என்று வரையறுக்கப்பட்ட மது, சாராவி மற்றும் சேம்பேன்ஜ் போன்றவற்றிற்கு) 1.00 |

| | | |
|---|---|---|
| | | (பல்க் லிட்டர் ஒன்றுக்கு—மற்ற எல்லாவித ஒயின்ஸ்க்கு.) |
| | ரூ. பை. | ரூ. பை. |
| (ii) பீர் வாங்குதல் மற்றும் இறக்கு மதி செய்தல். | 1.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) | 0.35 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| விற்பனை செய்தல் .. .. | இல்லை. | 1.50 |
| B. கேன்டீன் ஸ்டோர்ஸ் துறையின் இறக்குமதிக்காக— | | (பல்க் லிட்டர் ஒன்றுக்கு). |
| (i) இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள்: | | |
| (அ) ரம் .. .. .. | 2.75 (புரூப் லிட்டர் ஒன்றுக்கு.) | 2.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு.) |
| (ஆ) மற்ற மது வகைகள் .. | 25.00 (புரூப் லிட்டர் ஒன்றுக்கு). | 2.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு.) |
| (ii) பீர் .. .. .. | 1.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு). | 0.35 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு.) |
| C. சென்னை ஒருங்கிணைந்த உணவு சோதனைக் கூடத்தால் (A.S.C.) இறக்குமதி செய்து கொள்வதற்காக— | | |
| ரம் மட்டும் .. .. .. | 6.00 (புரூப் லிட்டர் ஒன்றுக்கு). | 2.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு.) |
| 5. சாராயம்—கலவையாலைகளின் விற்பனை மீது. | 4.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) | இல்லை. |
| மொத்த விற்பனையாளரின் விற்பனைக்கு | இல்லை. | 0.45 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு). |



58. ''ஆயத் தீர்வை வருவாய்'' என்ற தலைப்பின் கீழ்க் கடந்த மூன்றாண்டுகளிலும், 1984 ஜனவரி திங்கள் வரையிலும் கிடைத்த வசூல்கள் பற்றிய விவரங்கள் கீழ்க்கண்ட விவர அறிக்கையில் காட்டப்பட்டுள்ளன :—

(ரூபாய் இலட்சத்தில்)

| | 1980-81. | 1981-82. | 1982-83. | 1983-84 (31-1-1984 வரையில்.) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. நாட்டுச் சராவி (சாராயம்) .. | 5.76 | 6,879.35 | 10,605.31 | 11,849.95 |
| 2. புளிக்க வைக்கப்பட்ட நாட்டு மது (கள்). | 0.30 | 2,157.55 | 2,728.47 | 1,946.01 |
| 3. பீர் .. .. .. | 70.40 | 180.65 | 156.82 | 83.10 |
| 4. அயல் நாட்டு மதுவும் சாராவியும். | 823.32 | 1,206.83 | 1,370.86 | 1,436.56 |
| 5. வணிக விஷசாராவி மருந்து கலந்த திராட்சை ரசங்கள். | 120.27 | 164.86 | 142.90 | 102.49 |
| 6. அபின் சாராவி முதலியவை அடங்கிய மருந்து மற்றும் ஒப்பனைத் தயாரிப்புப் பொருள்கள். | 175.28 | 196.66 | 254.55 | 165.88 |
| 7. அபின் மருந்து செடியும், ஏனைய மருந்துகளும். | 0.49 | 0.59 | 0.46 | 0.16 |

| | | | | |
|---|---|---|---|---|
| 8. ஏனைய வருவாய்கள் .. .. | 58.73 | 230.17 | 90.67 | 2,460.47 |
| 9. அபராதத் தொகைகள், பறிமுதல். | 0.51 | 19.32 | 9.78 | 5.11 |
| 10. பணியும் பணிக் கட்டணங்களும் | 1.42 | 2.58 | 1.07 | 1.55 |
| இருப்பித் தந்த தொகையைக் கழிக்கவும். | .. | .. | 147.94 | 162.46 |
| மொத்த விற்பனை வியாபாரத் தொகையினைக் கழிக்கவும். | .. | .. | .. | 2,462.69 |
| மொத்தம் .. | 1,256.48 | 11,038.56 | 15,212.95 | 15,426.13 |



நிர்வாக அமைப்பு—

59. மாநில மதுவிலக்கு-ஆயத்தீர்வை துறைத் தலைவரான மதுவிலக்கு-ஆயத்தீர்வை ஆணையாளர் தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின்படியும் அதன்படி இயற்றப்பட்ட பல விதிகளின்படியும், அவற்றின் கீழ் வெளியிடப்பட்ட அறிவிக்கைகளின்படியும் அவரிடம் நிலைபெற்றுள்ள பல்வேறு அதிகாரங்களைச் செலுத்துகிறார்.

60. மதுவிலக்கு-ஆயத் தீர்வை ஆணையாளரின், நிர்வாக அலுவல்களில் சென்னையிலுள்ள தலைமையிடத்தில் 5 இணை ஆணையாளர்கள் பணியாற்றுகின்றனர். அவர்களுக்கு இம் மாநிலம் முழுவதும் அதிகார வரம்பு உள்ளது. கணக்குப் பிரிவில் ஒரு தலைமைக் கணக்கு அதிகாரி உள்ளார். இவர் கருவூலக் கணக்குப் பிரிவு அதிகாரி—வகுப்பு II தரத்தில் உள்ளவர் முதல் வகுப்புக்கு இப் பதவியை உயர்த்தி 16–2–1984 இல் ஆணை இடப்பட்டுள்ளது. ஒரு இணை ஆணையாளர், இந்திய ஆட்சிப் பணியைச் சேர்ந்தவராவார். இவர் முது நிலைக் கால முறை சம்பள விகிதத்தைப் பெறுகிறார். ஏனையோர் மாவட்ட வருவாய் அதிகாரிகளின் பதவித் தரத்தைச் சேர்ந்தவர்களாவர். அவர்கள் வடிசாலைகள், சாராயக் கலவை ஆலைகள், சாராய மொத்த விற்பனை நிலையங்கள், ஆயத் தீர்வையைப் பின்பு செலுத்தும் தொழிற்சாலைகள், ஆல்கஹாலை மூலப் பொருளாகக் கொண்ட தொழிற்சாலைகள், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் தயாரிக்கும் நிலையங்கள், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுவகைகளில் மொத்த விற்பனை நிலையங்கள் ஆகியவற்றை மேற்பார்வையிட்டு ஆய்வு செய்கின்றனர்.

61. மாவட்ட அளவில், மது விலக்கு ஆயத்தீர்வைத் துறையின் நிர்வாகம், மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. மாவட்டங்களில் ஆயத் தீர்வை உதவி ஆணையாளர்கள் 22 பேர் உள்ளனர். அதாவது 16 மாவட்டத்திற்கு ஒவ்வொருவரும், சென்னை, வட ஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய ஆறு பெரிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் கூடுதலாக ஓர் உதவி ஆணையாளரும் உள்ளனர். அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளனர். அத்துடன் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக மதுவிலக்கு ஆயத் தீர்வைத் துறை ஆணையாளருக்குக் கட்டுப்பட்டவர்களாவர்.

62. வட்டாட்சியர் பதவித் தரத்தில் வட்ட ஆயத் தீர்வை அதிகாரி ஒருவரும், ஆயத் தீர்வை ஆய்வாளர்கள் இருவரும் துணைப் பணியாளர்களும் வட்ட அளவில் அமர்ந்து ஆயத் தீர்வைத் துறையின் பணிகளைச் செய்து வருகின்றனர்.

1984 மார்ச் 29]

63. இணை ஆணையர்களுக்கு, வடிசாலை அதிகாரிகளும், தொழிற்சாலையைச் சேர்ந்த தீர்வை வசூலிக்கும் அதிகாரிகளும், சர்க்கரை ஆலையைச் சேர்ந்த தீர்வை வசூலிக்கும் அதிகாரிகளும் ஆயத் தீர்வை மேற் பார்வை அதிகாரிகளும் உதவி அலுவலர்களாக உள்ளனர். வடிசாலை அதிகாரிகள் மாவட்டத் துணை ஆட்சியர் பதவித் தரத்திலுள்ள அதிகாரிகளாவர். வருவாய் ஆய்வாளர்களின் பதவித் தரத்திலுள்ள ஆயத் தீர்வை-போக்குவரத்து ஆய்வாளர்களின் துணையோடு கலவை ஆலைகளுக்கு எரி சாராயம் எடுத்துச் செல்லப்படுகிறது.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1. Account Test Institute, Egmore, Madras-8.
2. The City Book Company, Madras-4.
3. Higginbothams (Private) Limited, Madras-2.
4. P. Varadachary and Company, Madras-1.
5. C. Subbiah Chetty and Company, Madras-5.
6. The Universal Book House, Moore Market, Madras-3.
7. C. Sitharaman and Company, Madras-14.
8. Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9. C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10. The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11. The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12. New Century Book House (Private) Limited, Madras-2.
13. Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1. A. Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2. Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3. P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4. Appar Book Stall, Thanjavur.
5. P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6. Palaniappa Bros., Tiruchirappalli-2.
7. S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8. B. Aruldoss, Villupuram (South Arcot District).
9. Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10. Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11. S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1
12. Ganesh Stores, South Car Street, Sivakasi.
13. Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14. A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15. Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16. Meenakshi Pathipagam, Pudukkottai.
17. K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18. Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19. Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20. Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21. Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22. Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23. Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24. Ajantha Book Centre, Salem-1.
25. Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26. Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1. Jain Book Agency, New Delhi.
2. Inter National Book House, Trivandrum.
3. The Book Syndicate, Hyderabad-1.
4. Labour Law Publications, Hyderabad.
5. Puthaghalayam, Pondicherry.
6. Prabu Book Service, Gurgaon, Haryana.
7. K. P. Bagchi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

2509/ 31/85 2786

வெளியீடு 26-2-85] [Issued 26-2-85

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மார்ச் 30, 1984 - தொகுதி LXIV எண் 3

Friday the 30th March 1984 - Volume LXIV No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George, Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 paise

உள்ளடக்கம்.

30—3—1984.


| | பக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள் : | |
| உடுக்குறியிட்ட வினாக்கள். | 411 —439 |
| 2. ஒத்திவைப்புத் தீர்மானம் : | |
| இலங்கையில் தமிழர்கள் தாக்கப்படுவது. | 440 —466 |
| 3. 106-வது விதியின்கீழ் வேளாண்மை பல்கலைக் கழக மாணவர்களது கோரிக்கைகள் குறித்த அறிக்கை. | 466 —467 |
| 4. கவன ஈர்ப்புகள் : | |
| தஞ்சை, வடபாதிமங்கலம் ஆரூரான் சர்க்கரை ஆலை கழிவுநீர் குடமுருட்டி ஆற்றில் கலப்பது. | 467— 472 |
| 5. அறிக்கைகள் அளித்தல் : | |
| பொது நிறுவனங்கள் குழு | 473 |
| 6. வரவு—செலவுத் திட்டம் 1984-85 வாக்கெடுப்பு —(தொடர்ச்சி): | |
| (அ) கோரிக்கை எண். 15—காவல் துறை.<br>(ஆ) கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்.<br>(இ) கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வைத் துறை. | 473—529 |
| திரு. செ. இராமலிங்கம் | 473 —479 |
| திரு. ஆர். தியாகராசன். | 480—487 |
| திரு. பொ. விஜயராகவன். | 488—495 |
| திரு. சு. முத்துக்கிருஷ்ணன். | 495—500 |
| திரு. ஏ. சாகுல் ஹமீது. | 500—503 |
| திரு. கோவைத்தம்பி. | 503—509 |
| திரு. க. பாரமலை. | 509—516 |
| திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள். | 516—523 |
| திரு. ரா. கிருஷ்ணன். | 523—529 |
| 7. அறிவிப்பு : | |
| பேரவை அலுவல். | 530—531 |
| 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். | 530 —531 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

*1984, மார்ச் 30, வெள்ளிக்கிழமை.*

பங்குனி 17, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடிய .

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை ."

எல்லா உறுப்புக்களும் நிறைந்ததாய், இடையூறுகளுக்கு அஞ்சாததாய் உள்ள வெற்றி தரும் படை, அரசினுடைய செல்வங்கள் எல்லாவற்றிலும் சிறந்தது ஆகும்.

### 1. வினாக்கள் —விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**யுரேனியத்தைப் பயன்படுத்தி அணுமின் நிலையம் ஆரம்பிக்கும் திட்டம்**

510—(*வினா 20173) திரு. செ. செம்மலை : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் யுரேனியத்தைப் பயன்படுத்தி அமைக்கப்படும் அணு மின்நிலையத்தை ஆரம்பிக்க மைய அரசு முன் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் நம்முடைய நாட்டில் கிடைக்கின்ற யுரேனியத்தை பயன்படுத்தி வெளிநாட்டு உதவியுடன் ஒரு அணு மின் நிலையத்தை நம்முடைய நாட்டில் அமைக்க

இருப்பதாக பத்திரிகையில் செய்தி சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஒருவேளை யுரேனியத்தைப் பயன்படுத்தி வெளிநாட்டு உதவியுடன் அமைக்கும்போது, அப்படிப்பட்ட அணுமின் நிலையத்தை நம்முடைய தமிழ்நாட்டில் கிடைக்கின்ற யுரேனியத்தைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டில் அமைக்க நம்முடைய அரசு மத்திய அரசை வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, யுரேனியத்தைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யக்கூடிய ஆராய்ச்சி Fast Breeder Reactor என்ற அளவில் கல்பாக்கத்தில் நடைபெற்று வருகிறது. யுரேனியத்தைப் பயன்படுத்தி வெளிநாட்டு உதவியுடன் அணுமின் நிலையம், அமைக்கும் தகவல்பற்றி என்னிடம் விவரம் இல்லை. இருப்பினும் அணுமின் நிலையம் ஒன்று தமிழ்நாட்டில் அமைக்கப்பட வேண்டுமென்று நமது அரசு இந்திய அரசை வற்புறுத்தி வருகிறது.

திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் உற்பத்தியாகின்ற மின்சாரத்தை முழுமையாக நம்முடைய தமிழ் நாட்டுக்குக் கொடுக்க வேண்டுமென்று நம்முடைய அரசு வற்புறுத்தி வந்ததே, அதற்கு மத்திய அரசு ஒத்துக்கொண்டிருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அது மத்திய அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் அடுத்த அணுமின் நிலையத்தை உருவாக்குவதற்கு மத்திய அரசினுடைய பரிசிலனைக் குழு வந்து பரிசிலனை செய்துவிட்டுப் போயிருக்கிறது என்றும் அதை நம்முடைய அரசு வற்புறுத்தி வருகிறது என்றும் 2,000 மெகாவாட் உற்பத்தியாகும் அணுமின் நிலையம் தமிழ்நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்றும் ஒருமுறை அமைச்சரவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். இப்போது அந்தப் பிரச்சினை எந்த நிலையில் இருக்கிறது ? அதை நிச்சயமாக தமிழ்நாட்டிற்கு, தெற்குப் பகுதிக்குத் தருகின்ற நிலைமை இல்லை என்று பாராளுமன்றத்தில் பதில் சொல்லியிருக்கிறார்கள். அதன் உண்மையான நிலை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே. 2,000 மெகாவாட் என்று நான் சொன்னதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது சரியல்ல. அணுமின் நிலையத்தைப் பொறுத்தவரையில் அந்த அளவுக்கு அதிகரிக்கும் நிலைமை இல்லை. ஆனால் இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் 10,000 மெகாவாட் அணுமின் நிலையங்கள் மூலம் உற்பத்தி



செய்ய வேண்டுமென்று இந்திய அரசு விரும்புகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் கூடங்குளம் பகுதியில் ஒரு அணுமின் நிலையத்தை அமைக்க வேண்டுமென்று நாம் இந்திய அரசை வற்புறுத்தி வருகிறோம். அதற்கான இடத்தையும் பார்த்தாகி விட்டது. பாராளுமன்றத்தில் திரு. இரா. மோகன் என்ற தி.மு.க. உறுப்பினரின் கேள்விக்குப் பதில் அளிக்கும்போது இவ்வாறு சொல்லப்பட்டது.

The Committee set up by the Centre was examining various sites and a decision would be taken after it submits its report,— He told Mr. Era Mohan and Dr. A. Kalanidhi. Mr. Era Mohan said, the State plan document had stated that a site in Tirunelveli had been selected for an atomic power plant. Since the Centre had not made any such choice, he wanted to know whether the Tamil Nadu Chief Minister would be asked to delete this portion from the plan document. Mr. Patil said, it was not for him to make any such suggestion to the Chief Minister.

டெலீட் பண்ணவேண்டுமென்று நாம் கேட்காமல் இருந்தால் போதுமானது.

திரு. மீ. வின்சென்ட் : தலைவர் அவர்களே, யுரேனியம், டைட்டானியம், சிலிகான், மானோசைட் போன்ற மூலப்பொருள்கள் இந்தியாவிலேயே, தமிழ்நாட்டிலுள்ள குமரி மாவட்டத்தில் தான் கிடைக்கின்றன. ஆகையால் இங்கே அணுமின் நிலையத்தை அமைப்பதற்காக, மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எவ்வளவு கட்டாயம் வற்புறுத்த முடியுமோ, அவ்வளவு கட்டாயமாக வற்புறுத்துகிறோம்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், இந்தியாவைப் பொறுத்தவரையில், தொழில் வளர்ச்சிக்கும், மற்ற வளர்ச்சிக்கும், மின்சாரம் அவசியம் என்பதை எல்லோரும் அறிவோம். இப்போது தமிழ்நாட்டில் மின்சாரம் பற்றாக்குறையாக இருக்கிறது. கூடங்குளம் அனல் மின் நிலையத்தைப் பற்றி 10, 12 ஆண்டுகளாகப் பேசக் கூடிய பிரச்சினையாக இருக்கிறது. கூடிய விரைவிலேயே இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தமிழக அரசு முழு மூச்சுடன் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இதிலே ஒரு சிக்கல் இருக்கிறது. போதுமான நீர் வசதியில்லை. பச்சைமலை ஆற்றில் தற்போது வெள்ளம் நிறைய வந்து, நீர் வசதி இருக்கின்றது என்று நிரூபித்திருப்பதால், நீர் வசதி இருக்கிறது என்று சொல்லி, திரும்பவும், கூடங்குளத்தைப் பொறுத்தவரையில் வற்புறுத்தி வருகிறோம்.

[1984 மார்ச் 30

## மின் பயனீட்டாளர்களுக்கு மின்வாரியம் விதித்துள்ள நிபந்தனை

511 —(*வினா எண் 21525) திரு. மா. சின்னராசு, திரு. செ. செம்மலை : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின் வாரியம் மின்சாரப் பயனீட்டாளர்களே மின் இணைப்புக்காகும் முழுச் செலவையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை ஏதுவும் விதித்துள்ளதா ?

(ஆ) இது குறித்து புகார்கள் ஏதுவும் அரசுக்கு வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மின் பயனீட்டாளர்களே மின் இணைப்பிற்காகும் முழுச் செலவையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நிபந்தனை ஏதும் இல்லை. ஆனால் மின் பயனீட்டாளர்களுக்குச் சொந்தமான இடத்தில் எடுத்துச் செல்லப்படும் மின்பாதைக்குரிய கட்டணத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை உள்ளது.

(ஆ) இல்லை.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் ஐ.நா. மன்றத்திற்குச் சென்றபோது, மின் வாரியம், பயனீட்டாளர்களுக்கு மின்சாரம் எங்கேயிருந்து எடுக்கப்படுகிறதோ, அங்கிருந்து மின்சாரம் பயன்படுத்துகின்ற இடம் வரையுள்ள செலவை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்கிற கட்டாய உத்தரவை அமல்படுத்திய நேரத்தில் இந்தக் கேள்வி கேட்கப்பட்டது. அமைச்சரவர்கள் திரும்பி வந்ததும் இதில் தலையிட்டு பழைய மாதிரி பயனீட்டாளர்களுக்குள்ள செலவுகளைக் குறைத்திருக்கிறார்கள். இருந்தாலும் அவர்களுடைய சொந்த இடமாக இருக்கிறதே தவிர, வேறு இடங்களில் மின் இணைப்பைக் கொண்டுபோவதற்காகும் செலவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிபந்தனை ஏதேனும் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நிபந்தனை இல்லை. அதற்கான ஆப்ஷன் இருக்கிறது. சில மின் பயனீட்டாளர்கள் மின் வாரியம் சர்வீஸ் கனெக்ஷன் தருவதற்குக் காலதாமதம் ஆகிறது, என்று கருதுவார்களேயானால், அவர்களுடைய சொந்தச் செலவில் மின் இணைப்பை அமைத்துக்கொள்வதற்கு ஆப்ஷன் இருப்பதால், அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆனால் கம்பல்ஷன் இல்லை.



1984 மார்ச் 30]

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் வாரியம் மின் இணைப்பு கொடுப்பதற்குத் தயாராக இருந்தாலும், மின் இணைப்புக்கு வேண்டிய சாதனங்கள் பற்றாக்குறையாக இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே அப்படி மின் இணைப்பு கொடுப்பதற்கு வேண்டிய மின் இணைப்புச் சாதனங்கள் பற்றாக்குறையைப் போக்கிவிட்டதா ? அப்படி இல்லையென்றால், மின் வாரியம் உடனடியாக மின் இணைப்பு கொடுப்பதற்கு, பற்றாக்குறையைச் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதுவும் ஒரு குறை. மின் இணைப்பு தருவதற்குச் சாதனங்கள் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை ஆகியவற்றினால் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே மின் பயனீட்டாளர்கள் இந்த விதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : காலதாமதம் ஏற்படுமேயானால் அவரவர்களே வாங்கித் தந்தால், உடனடியாக இணைப்பைக் கொடுப்பதற்கு ஆப்ஷன் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எனவே அப்படி ஆப்ஷன் இருப்பதன் காரணமாக அவர்களே வாங்கித் தருவார்கள். நாம் ஏன் செலவு பண்ணவேண்டுமென்று டிலே பண்ண இடம் அளிக்கிறது. ஊழலுக்கும் அன்பேர் பிராக்டீசுக்கும் இடம் கொடுக்கிறது. ஆகவே ஏன் அவர்கள் டிபார்ட்மெண்டிலேயே இதை வாங்கக் கூடாது ?

(முற்பகல் 9—10)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இதிலே ஊழலுக்கோ, முறைகேடுகளுக்கோ, நிச்சயமாக இடம் இல்லை. அதோடு மட்டுமல்லாமல், நாம் நிதி ஒதுக்கும் செய்கிறபோதும், இந்த சர்வீஸ் கனெக்சன் மெட்டீரியல்சுக்கு இவ்வளவு என்று நிதி ஒதுக்கம் செய்கிறோம். அதற்கான ஆர்டர்களும் அவர்கள் போடுகிறார்கள். அதற்குரிய மெட்டீரியல்ஸ் வருவதில் காலதாமதம் ஏற்படுகிறது. அவ்வளவு பெருமளவிற்குக்கூட பயனீட்டாளர்கள் இந்த விதியைப் பயன்படுத்திக் கொள்வதில்லை. நிறைய லோன் வாங்கி, எஸ். டி. இன்டஸ்ரீஸ், சிறிய இன்டஸ்ட்ரீஸ் போட்டுவிட்டு காத்துக்கொண்டு இருப்பவர்கள், அதைப் போல உள்ளவர்கள் இதை ஓரளவிற்குப் பயன்படுத்துகிறார்களே தவிர, இது முறைகேட்டுக்கு வழி வகுக்காது.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ‘ஆப்சனிலிருந்து’ விவசாயத்திற்காக எடுக்கப்படும் மின் இணைப்புக்கு விதிவிலக்கு ஏதும் தரப்பட்டிருக்கி

றதா? விவசாயிகளுடைய நிலம் ஓரளவிற்குப் பரந்ததாக இருந்தால், 4 அல்லது 5 மின் கம்பங்கள் போட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதனால் அவர்களுக்குச் செலவு அதிக மாக ஆகிறது. ஆகவே அவர்களுக்கு 'கன்சசன்' தருகிற முறையில், நிவாரணம் தருகிற முறையில், அதிலிருந்து ஏதாவது சலுகை கொடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு இது பொருந்தாது. விவசாயத்திற்கு முழுவதுமே மின்சார வாரியத்தினுடைய நிதிநிலையில் இருந்து போடப்படுகிறது.

திரு. தி. ஏா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது, விவசாயத்திற்கு இது பொருந்தாது என்று சொன்னார்கள். பெரும்பாலான இடங்களில மின் கம்பங்கள் ஏணையவைகளைக் கொண்டு வருவதற்கு இந்த விவசாயிகளை மின் இலாகா பயன்படுத்தி கொண்டு வருகிறது. மேலும் அவர்கள் அப்படிக் கொண்டு வருவதில் காலதாமதமும் ஏற்படுகிறது, வண்டி வாகனங்கள் இல்லாததால். ஆகவே மின் இணைப்பு கொடுப்பதில் காலதாமதம் ஆகிறது. எனவே இந்த மாதிரியான புகார்கள் வருகிறபோது, அரசாங்கப் பரிசீலனை செய்து, இதைத் தவிர்க்க முன்வருமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இதில் ஒன்றும் புகார் வருவதில்லை. அதை விவசாயிகளே செய்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும். அது தொன்றுதொட்டு வரும் வழக்கம்.

திரு. ஏ. எர். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத் துறையிலே இருந்து மின் இணைப்பு பயனீட்டாளருக்குக் கிடைக்கிறபோது, அது அலுமினியம் ஒயரிலே செய்யப்படுகிற ஒயராக இருப்பதாலே, மின்சாரம் அடிக்கடி தடைப்படுகிறது அல்லது லோ-வோல்டேஜ் வருகிறது. ஆகவே, இதைத் தவிர்க்க செப்புக் கம்பியை வாங்கி அந்த ஒயரை வைத்து, மின் இணைப்பு தந்தால் நல்லது என்று பயனீட்டாளர்கள் நினைக்கிறார்கள். தற்போது, நகரங்களிலும் கிராமங்களிலும் அடிக்கடி மின்சாரம் தடைப்படுகிறது அல்லது லோ-வோல்டேஜில் வருகிறது. எனவே இவைகளைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, செப்புக் கம்பியைப் போடுவது சாத்தியம் அல்ல என்று பலமுறை சொல்லியிருக்கிறேன் ஏன் என்றால் செப்புக் கம்பி போட்டால் அது அங்கே இருப்பதில்லை.



திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் பயனீட்டாளர்களுக்கு மின்வாரியம் விதித்துள்ள நிபந்தனைகளில் ஒரு நிபந்தனை, முன்னால் எல்லாம் குறிப்பிட்ட நாட்களுக்குள் பணம் கட்டவில்லை என்றால், திரும்பவும் பணம் கட்டுகிற போது 5 ரூபாய் சேர்த்துக் கட்ட வேண்டும் என்று இருந்தது. இப்போது அந்த 5 ரூபாயை 10 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். எனவே 1 நாள், 2 நாள் கழித்து, ஞாபகமறதியாகக் கட்ட மறந்துவிட்டு, பின்னர் போய் பணம் கட்டும்போது 10 ரூபாய் என்று சேர்த்து வாங்குவதை, 5 ரூபாயாகக் குறைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ரூபாயின் மதிப்பு குறைந்து வருகிற இந்தக் காலத்தில் இது ஒன்றும் பெரிதல்ல.

### நாகப்பட்டினத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தங்கும் விடுதி கட்டும் திட்டம்

512—(*வினா எண் 17247) திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தங்கும் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) திட்ட மதிப்பீடு எவ்வளவு?

(ஈ) வேலை எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் நாகப்பட்டினத்தில் சாலையோர விடுதி கட்டும் திட்டம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

(இ) திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 12.50 இலட்சம்.

(ஈ) முறையாக முடிவெடுத்தபின் வேலை தொடங்கப்படும்

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாகப்பட்டினம் ஒரு மேஜர் சென்டர். பயணிகளைப் பொறுத்தவரைக்கும், நாகூருக்கு இலட்சக்கணக்கான

ஜனங்கள் வருவதும், அதேபோல் வேளாங்கன்னி ஆலயத்திற்கு இலட்சக்கணக்கான ஜனங்கள் வருவதும் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இருந்து பயணிகள் கப்பல் மூலமாக நிறைய பேர்கள் வருவதுமாக இந்த இடம் இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட இடத்தில் இன்று சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகள் இல்லாததினால், அங்கே தனியார்கள் மிகவும் சுகாதாரமற்ற முறையில் அவர்களைக் கசக்கிப் பிழிகிறார்கள், இங்கு இடம் பற்றாக்குறையிருப்பதால் வெளிநாட்டிலேயிருந்து வருகின்றவர்கள் ரோட்டிலே தங்கக்கூடிய நிலைமையிருக்கிறது. ஆகவே, இந்த நிலைமையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, இந்தத் தேவைகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேவையான அளவிலே, பெரிய அளவிலே தங்கும் விடுதிகளைக் கட்டும் திட்டத்தை வகுப்பதற்கு முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்துக்களையெல்லாம் அடிப்படையாகக் கொண்டுதான், முதலிலே ஒரு பெரிய விடுதியை சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முதலீட்டிலே கட்ட முடியுமா என்பது பற்றி பரிசீலிக்கப்பட்டது. ஆனால், அப்படி பெரிய முதலீட்டிலே கட்டினால், எந்த அளவிற்கு அது வருமானத்தைத் தரும் என்கிற சந்தேகம் வந்ததற்குப் பிறகு, முதலிலே 12 படுக்கை வசதிகளைக் கொண்ட, இது போன்ற சாலை ஓரம் தங்கும் விடுதி என்று அழைக்கப்படுகின்ற மோட்டல் கட்டலாம் என்று முடிவு எடுத்திருக்கிறார்கள். அதற்காக 1.25 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு உள்ளது. மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்ததைப் போல நாகூர், வேளாங்கன்னி, சிக்கல் போன்ற முக்கிய புனிதமான யாத்திரீகர்கள் ஸ்தலமாகவும், கப்பல் வருகின்ற காரணத்தாலே பயணிகளும் அங்கே வந்து செல்லுகிறார்கள், அந்த அளவுக்கு நாகப்பட்டினம் முக்கிய இடமாக இருக்கிறது. ஆனால், எவ்வளவு முக்கிய இடமாக இருந்தாலும் விடுதிகளிலே தங்குகிற பழக்கத்தை நம்முடைய மக்களிலே பலர் இன்னும் பற்றிக் கொள்ளாத காரணத்தாலே, பெரிய முதலீட்டிலே விடுதி கட்டினால் பயன் தருமா என்ற ஐயப்பாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு இருக்கிறது. ஆகவே, நமக்கு நிலம் அதிகமாக இருக்கிற காரணத்தால் முதலிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்றியதற்குப் பிறகு, நடைமுறைகளில் பார்த்து, அதை விரிவுபடுத்துகின்ற ஒரு திட்டத்தைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுத் திருவாரூரைத் தலைநகரமாகக் கொண்டு ஒரு மாவட்டத்தைப் பிரிக்க இருக்கிறார்கள். ஏற்கெனவே, நாகப்பட்டினத்தில் இட நெருக்கடி அதிகமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது, அதை மாற்றி, திருவாரூரிலே சுற்றுலா



வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் தங்கும் விடுதி கட்ட, அரசு மறுபரிசீலனை செய்தால் பொதுமக்களுக்கு நலமாக இருக்கும். எனவே, அரசு திருவாரூரிலே தங்கும் விடுதி கட்ட முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நாகப்பட்டினத்தில் இப்போது உடனடியாக அவசரமாக தேவைப்படுகிற சூழ்நிலையில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது. திருவாரூர் தலைநகரமாக வந்ததற்குப் பிறகு அதைப் பரிசீலிக்கலாம்.

## காரைக்குடியில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் விடுதி கட்டும் திட்டம்

513—(*வினா எண் 18496) திரு. சித. சிதம்பரம் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடியில் சுற்றுலாத் துறை மூலமாக விடுதி கட்ட திட்டமுள்ளதா ?

(ஆ) இல்லையெனில், சுற்றுலா விடுதி கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) காரைக்குடியில் சாலையோர விடுதி ஒன்று கட்டும் திட்டம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

## மதுராந்தகம்-திண்டிவனம் இடையே சாலையோர உணவு விடுதி ஏற்படுத்தும் திட்டம்

514—(*வினா எண் 19456) திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை-விழுப்புரம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் மதுராந்தகம் - திண்டிவனம் இடையே போக்குவரத்து வாகனங்கள் நிற்கக்கூடிய வகையில் கழிப்பிட வசதி, உணவு விடுதி போன்ற வசதிகளுடன் கூடிய சாலையோர உணவு விடுதி ஏற்படுத்தும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மதுராந்தகம்-திண்டிவனம் இடையே, மேல்மருவத்தூரில், சாலையோர விடுதி ஒன்று கட்ட ஒரு கருத்துரு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கி. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக அங்கே இந்த வசதிகளைச் செய்து தருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தப் பணிக்காக அங்கே கழிப்பிடங்கள் கட்டுவதற்காகவும், உணவு விடுதி கட்டுவதற்காகவும் நிலம் கையகப்படுத்தப்பட்டு விட்டதா? அதற்கான முயற்சிகள் எவ்வளவு சீக்கிரத்தில் செயல்படுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984–85ஆம் ஆண்டுக்கான திட்டத்திலேதான் இந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டு நிறைவேற்ற இருக்கிறார்கள். ஆகவே, சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினுடைய நிர்வாக இயக்குநர் அவர்கள், இயக்குநர்களின் கூட்டத்தைக் கூட்டி அதிலேதான் இதைப்பற்றி முடிவு எடுக்க வேண்டும். முடிவு எடுத்தபிறகு அந்தப் பணியினுடைய மீதி வேலைகள் நடைபெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் அண்மையிலே கிழக்காசிய நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்த நேரத்தில், ஜப்பான் நாட்டில் பல்வேறு இடங்களிலே போக்குவரத்து வாகனங்களை நிறுத்தக்கூடிய அளவிலே சாலை ஓரங்களில் இது போன்று அமைக்கப்பட்டுள்ளதைப் பார்க்க முடிந்தது. ஆகவே, தமிழகத்திலும் இதை விரைவாக அமைக்க மாண்புமிகு அமைச்சர் முயற்சி எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–20)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தில் இது போன்ற நெருக்கடிகள் அதிகமாக உள்ள நெடுஞ்சாலைகளிலும், தேசிய நெடுஞ்சாலைகளிலும், அதுபோல மாநில நெடுஞ்சாலைகளிலும், இந்த நெடுஞ்சாலைகளைத் தொடர்புபடுத்துகின்ற முக்கியமான ஊர்களிலும் இப்படிப்பட்ட மோட்டல் என்று அழைக்கப்படுகின்ற சாலை ஓர தங்கும் ஓய்வு விடுதிகளைக் கட்டுகிற திட்டம் தொடர்ந்து இப்பொழுதும் நடத்தப்பட்டு வருகிறது. உளுந்தூர்பேட்டை, இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் இப்போது நடைபெற்று வருகின்றன. மேலும் காஞ்சிபுரம், நாகப்பட்டினம், தேனி, புதுக்கோட்டை, காரைக்குடி, திருநெல்வேலி, குற்றாலம், செஞ்சி, சேலம், தூத்துக்குடி ஆகிய இடங்களிலும் இப்படிப்பட்ட விடுதிகள் கட்ட வேண்டுமென்ற திட்டங்கள் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பரிசீலனையில் இருக்கின்றன. அதையொட்டி போக்குவரத்துத் துறைக்கும் சுற்றுலாத் துறை இப்படிப்பட்ட ஒரு ஆலோசனையை வழங்கி





யிருக்கிறது. போக்குவரத்துக் கழகங்கள் சார்பிலே நெடுஞ்சாலைகளில்—அவர்களிடத்திலே இருக்கிற நிதியைக் கொண்டு—பயணிகளுக்கான அப்படிப்பட்ட வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். இரண்டு துறைகளும் இணைந்து தமிழகத்திலே உள்ள பல இடங்களிலே மிக முக்கியமான சாலைகளில் அந்த விடுதிகளைக் கட்டுகிற திட்டங்கள் படிப்படியாக நிறைவேற்றப்படும்.

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவர் அவர்களே, சென்னை-விழுப்புரம் சாலையில் ஒரு பயணிகள் தங்கும் இடம் ஏற்பாடு செய்வது சம்பந்தமாக ஆலோசனை இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதேபோன்று சென்னை-பெங்களூர் சாலையில் சுங்குவார்சத்திரம் என்ற ஊரில் ஆயிரக்கணக்கான மக்கள் செல்கிற அந்த இடத்தில் எந்தவிதமான சௌகரியமும் இல்லாமல் இருக்கிறதே அந்த இடத்திலே இப்படிப்பட்ட ஒரு அமைப்பை ஏற்படுத்த அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, சென்னை-பெங்களூர் சாலையில் இராணிப்பேட்டையிலே இப்படிப்பட்ட ஓய்வு விடுதி ஏற்கெனவே நடைபெற்று வருகிறது. சுங்குவார்சத்திரம் என்பது 40 மைல்களுக்குள்ளேயே இருக்கிறது. அது பயன் அளிக்குமா என்பது வேறு விஷயம். இப்போது நீங்கள் பார்க்கிற கூட்டம், போகிற லாரி, வண்டிகளை நிறுத்திக்கொண்டு டீ சாப்பிடுவதற்கும் சிற்றுண்டி சாப்பிடுவதற்கும்தான் நிற்கிறார்களே தவிர தங்குவதற்காக அல்ல. இப்படிப்பட்ட வசதி என்பது ஒருசில நேரங்களில் பயணிகள் குடும்பத்தோடு அல்லது பயணிகளே போனால் அங்கே களைப்பாறி அல்லது வாகனங்களில் போனால் அங்கே தங்கி இரவு நேரமாக இருந்தால் இரவிலே தங்கிவிட்டு காலையிலே புறப்படுவது போன்ற அப்படிப்பட்ட வசதிகள் நிறைந்ததுதான் மோட்டல் என்று அழைக்கப்படுகிற சாலை ஓர வசதித் திட்டம் ஆகும்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல இடங்களில் புதிதாக சாலை ஓர விடுதி அதாவது மோட்டல் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். பெரியார் மாவட்டத்தின் தலைநகரமாக இருக்கிற ஈரோடு பல போக்குவரத்துகள் சந்திக்கின்ற முக்கியமான இடமாக இருக்கிறது. ஈரோடு நகரில் இதுபோன்று சாலை ஓர விடுதி அதாவது மோட்டல் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு நகரம் என்பது ஒரு மாவட்டத்தின் தலைநகரமாக இருக்கிறது. ஆனால் தேசிய நெடுஞ்சாலை அல்லது மாநில நெடுஞ்சாலையை ஒட்டி

போக்குவரத்துப் பயணிகள் தங்குகின்ற அல்லது அந்த வழியில் போகின்ற மற்றவர்கள் தங்குகின்ற வகையில் ஈரோடு நகரம் வருகிறதா என்பதைப் பரிசீலித்துதான் முடிவு எடுக்க வேண்டும்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுங்குவார்சத்திரத்திலே போதிய வாய்ப்பு இருக்குமா நாம் ஒய்வு இல்லம் கட்டினால் என்று கேட்டார்கள். சுங்குவார்சத்திரம் வழியாக நான் ஒன்றுக்கு நூற்றுக்கணக்கான அல்ல பல நூற்றுக் கணக்கான பஸ்கள் செல்கின்றன. அங்கே அத்தனை பஸ்களும் நிற்கின்றன. அங்கே தாய்மார்கள் சிறுநீர் கழிப்பதற்குக் கூட எந்தவிதமான வசதியும் இல்லாமல் இருக்கிறது. குறைந்த பட்சம் கழிப்பிடம் உடனே கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலைகளில், மாநில நெடுஞ்சாலைகளில் இப்படிப்பட்ட வசதிகளை பயணிகளுக்காக செய்து தரவேண்டிய பொறுப்பை போக்குவரத்துக் கழகம் ஏற்றுக் கொள்ளவேண்டும், அதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும் என்று சுற்றுலாத் துறை போக்குவரத்துத் துறை இடத்தில் தெரிவித்து இருக்கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது தேசிய நெடுஞ்சாலை பகுதியாக இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். நான் ஏற்கனவே கொடை ரோடில் அந்த மாதிரி அமைக்கவேண்டும் என்று கேட்டபோது அதுவும் பரிசீலனையில் உள்ளதாகச் சொன்னார்கள். அங்கே கொடைக்கானல் மலையில் கிட்டத்தட்ட 352 நாடுகளிலிருந்து குழந்தைகள் வந்து படிக்கிறார்கள். அந்தக் குழந்தைகளின் பெற்றோர்கள் தங்குவதற்கு, காப்பி குடிப்பதற்கு இடம் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆக தேசிய நெடுஞ்சாலையாக இருக்கிறது. கொடைக்கானல் மலைக்குப் போகிறவர்கள் தங்குவதற்கு வசதியாக ஒரு விடுதி அமைத்துத் தருவதற்கு வழிவகைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இனிமேலாவது செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கொடைக்கானல் ரோடு என்று அழைக்கப்படுகின்ற அந்தப் பகுதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆனால் அந்த இடம் கொடைக்கானலுக்கு அருகே வழியில் இருக்கிற காரணத்தாலே அதனுடைய மதிப்பும் கவர்ச்சியும் குறைந்து காணப்படுகிறது. ரயில் பயணிகள்





இறங்கிய உடன் கொடைக்கானலுக்குச் சென்று விடுகிறார்கள். ஆகவே அந்த இடத்தில் யார் தங்குகிறார்கள், எவ்வளவு பேர் தங்குகிறார்கள், எவ்வளவு பேர் தங்குவதற்கு அவசியம் ஏற்படும் என்ற விவரம் எல்லாம் சேகரிக்கப்பட்டு வருகின்றன. நான் முதலில் தெரிவித்தபடி போக்குவரத்துத் துறையிடத்தில் அந்த இடங்களில் பயணிகள் வசதியாக தங்குவதற்கு அல்லது கழிப்பிடங்கள் மற்ற வசதி உள்ள ஒரு அமைப்பை உருவாக்குவதற்கு நம்முடைய சுற்றுலாத் துறை போக்குவரத்துத் துறைக்குப் பரிந்துரை செய்யும்.

திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூர்-நாகப்பட்டினம் நெடுஞ்சாலையில் வெள்ளக் கோயில் இருக்கிறது. அங்கே இந்த மாதிரி ஒரு மோட்டல் அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்-

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல நெடுஞ்சாலைகள் பல ஊர்களில் இருக்கின்றன. எல்லா ஊர்களிலும் இப்படி மோட்டல்கள் அமைக்க இயலாது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தமிழகத்தில் பல இடங்களில் சுற்றுலா விடுதிகள் கட்ட இருப்பதாக, குறிப்புகள் உள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாசித்தார்கள். ஆனால் தமிழகத்தில் மிகப் பெரிய சுற்றுலா ஸ்தலமாக திகழ்ந்து கொண்டு இருக்கக்கூடிய பழனியில் அந்த மாதிரி கட்டிக் கொடுப்பதற்கு எந்த ஏற்பாடும் இருப்பதாகத் தெரியவில்லை. இது சம்பந்தமாக மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு அனுப்பப் பட்டுள்ளது. ஆகவே இனிமேலாவது அந்த வளர்ச்சிக் குழுக் கூட்டத்தின் முடிவுக்கு இணங்க இந்த ஆண்டு அங்கு சுற்றுலாத் துறையின் மூலமாக ஒரு விடுதியைச் கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்திரவிடுவார்களா என அறிய விரும்புகிறேன்-

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி என்பது சுற்றுலா ஸ்தலம் என்கின்ற அடிப்படையில் அல்லாமல் அது ஒரு வணங்குகின்ற யாத்ரீக ஸ்தலமாக விளங்குகின்ற ஒரு பெரிய ஸ்தலம் ஆகும். ஆகவே பழனியில் பயணிகளுக்கு வேண்டிய அப்படிப்பட்ட விடுதிகளைக் கட்டுவதற்கு ஆலயம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிற வசதியை

ஆலய நிதியிலிருந்து செய்யலாம். அதை சுற்றுலாத் துறை சார்பில்தான் செய்யவேண்டும் என்பது அல்ல. ஆலய நிதியி லிருந்தே பயணிகளுக்குத் தேவையான விடுதியைக் கட்டுவதற்கு அரசு அவர்களுக்கு அறிவுரை வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில்தான் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்ற பிறகுதான் இதுபோன்ற ஓட்டல்கள் தமிழகத்தில் அதிகமாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது போன்ற ஓட்டல்களில் இரவு 7 மணிக்கு மேல் சிற்றுண்டிகூட கிடைப்பது இல்லை. வாகனங்களில் சென்று அங்கே நின்று உணவோ, சிற்றுண்டியோ இல்லாமல் திரும்ப வேண்டிய நிலைமை இருக்கிறது. மாலை 7 மணிக்கு மேல் சிற்றுண்டியாவது கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை ஓர பயணிகள் விடுதி என்பது இரவு பகல் முழுவதும் பணியாற்றுவதற்காக அமைக்கப்பட்டு இருக்கிற ஒன்று தான். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் தெரிவிப்பது போன்று இரவு 7 மணிக்கு மேல் அங்கே எந்த ஆகாரமும் கிடைப்பது இல்லை என்று சொல்வது சரியான கருத்தாகத் தெரியவில்லை, சரியான தகவலாக தெரியவில்லை. அவர்களுக்கு இரவு 9 அல்லது 10 மணிவரை உணவு பரிமாறப்படுகிறது அல்லது வழங்கப்படுகிறது. அதற்குமேல் நடுநிசியில் வருகிறவர்களுக்கு வழங்குகின்ற முறை சிலயிடங்களில் இருக்கிறதா என்பது கேள்விக்குரிய ஒரு சூழ்நிலை ஆகும். காரணம் இந்த உணவுகள் தயாரிக்கப்பட்டு விற்பனை ஆகாமல் தேங்கி விட்டால் அவ்வளவும் நஷ்டம் ஆகிவிடும். ஆகவே பயணிகள் வந்த பிறகு அவர்கள் ஆர்டர் கொடுத்தால் அதை வைத்துக் கொண்டு அவர்கள் தயாரிக்க வேண்டிய அவசியம் வரும். அப்படி நடு இரவில் வந்து அவர்கள் விரும்புகிற உணவை எல்லாம் தயாரித்துக் கொடுப்பது என்பதும் நடைமுறையில் சாத்தியம் இல்லாத ஒரு காரியம் ஆகும். இருந்தாலும் எந்த அளவுக்கு இயலுமோ நல்ல பயணிகள் வந்து வியாபாரம் அதிகமாகிற சூழ்நிலை உருவாகிற முறையில் அந்த அமைப்பு இருக்குமானால் எந்த நேரத்திலும் உணவுகள் வழங்குவதற்கு அவைகள் உருவாக்கப்படுகின்றன. 7 மணிக்கு மேலே கிடைக்காமல் இருக்கிறது என்ற ஒரு தகவல் வேளை உண்மையாக இருக்குமானால் அதை தெரிந்து 10, 11 மணி வரை கிடைப்பதற்கு இப்போதுள்ள அந்த முறையை இன்னும் சரியாக நடைமுறைப்படுத்த ஆணைகள் பிறப்பிக்கப்படும்.





திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலை பயணிகள் விடுதி அமைக்கின்ற திட்டத்தின்கீழ் தூத்துக்குடி-திருச்செந்தூர் செல்லும் வழியில் பாண்டிய மன்னர்கள் வாழ்ந்த கொற்கை என்ற இடத்தில் இது போன்ற நெடுஞ்சாலை பயணிகள் விடுதி அமைக்க அரசின் திட்டத்தில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் திட்டத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 413, 414, 415, 416, 417, ஆகியவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகின்றன.

(முற்பகல் 9-30)

## உப்பூர் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள C.M.C.S.S. என்ற கிளை நிறுவனம்

515—(*வினா எண் 16357) திரு. செ. சிவசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இராமநாதபுரம் மாவட்டம் ஆர். எஸ். மங்களம் ஒன்றியம் உப்பூர் கிராமத்தில் C.M.C.S.S. என்ற போலி கிளை நிறுவனம் ஆரம்பித்து ஹோமியோபதி மருத்துவர்களை மோசடி செய்து 1½ லட்சம் ரூபாய்க்கு மேல் கையாடல் நடந்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அப்படியானால், தடுத்து நிறுத்த என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ) : மோசடி குறித்து ஒரு புகார் தமிழ்நாடு ஹோமியோபதி மன்றத்திற்கு வந்தது என்றும் ஆந்திரப் பிரதேசத்திலுள்ள குற்றப் புலனாய்வுத் துறையினர் விசாரணை செய்து குற்றச்சாட்டுகளை நிரூபிக்கத் தகுந்த ஆதாரங்கள் இல்லாமையால் மேற்கொண்டு விசாரணை கைவிடப்பட்டதென்று தமிழ்நாடு குற்றப் புலனாய்வுத் துறையினர் தனக்கு அறிவித்துள்ளனர் என்றும் தமிழ்நாடு ஹோமியோபதி மன்றப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது இப்படிப்பட்ட முகாம்கள் நடத்துவதற்கு உத்தேசமில்லை என்று சொன்னார்கள். ஆனால் பல கிராமங்களில் பலபேர்கள் சிறு வயதில் கூட இந்தச் சர்க்கரை வியாதியால் பாதிக்கப்பட்டிருப்பதால் நாம் எப்படி கண் சிகிச்சை முகாம்கள் நடத்தினோமோ அதேபோல் இந்தச் சர்க்கரை வியாதியைப் பொறுத்தும் அப்படிப்பட்ட முகாம்கள் நடத்துவதற்கு ஏதாவது வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே இது மக்களுக்கு நன்றாகப் புரிய வேண்டும் என்பதற்காக நம்முடைய இலாகாவில் பணி புரிகிற டாக்டர் எ. சுந்தரம், எம். டி. அவர்கள் நீரிழிவு நோய் காலம் என தமிழில் ஒரு புத்தகம் போட்டு எல்லோருக்கும் புரியக்கூடிய அளவில் ஒரு நூலை தயார் செய்திருக்கிறார்கள். இப்போது நாம் என்ன செய்கிறோம் என்றால் அதிலிருந்து சில பகுதிகளை எடுத்து Health Education Information on Diabetes சர்க்கரை வியாதியை பொறுத்த வரையில் மக்கள் என்னென்ன தெரிந்து கொள்ள வேண்டும், என்பதையெல்லாம், எப்படிப்பட்ட உணவு அருந்த வேண்டும், எந்த உடற்பயிற்சி செய்ய வேண்டும், எப்படி அந்த வியாதி வருகிறது, தடுப்பு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வது என்பது பற்றி டயபடிக் எட்யூக்கேஷன் என்று ப்ரோச்சர்ஸ் அச்சடித்து பாம்ப்லட்ஸ் போல் தயார் செய்து ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டு வருகிறோம். எல்லா மருத்துவமனைகளிலும் அதற்காக ஏற்பாடு செய்து கொண்டு வருகிறோம். இன்னொன்றையும் தமிழக சர்க்கார் செய்திருக்கிறது. எந்த மாநிலத்திலும் செய்யாத ஒரு வேலையைச் செய்திருக்கிறோம். டயபட்டிக்ஸ்-க்கு போஸ்ட் க்ராஜுவேட் கோர்ஸ் கிடையாது. எம். டி. (டி) கொண்டுவர வேண்டும் என்று நாம் மெடிக்கல் கவுன்சிலுக்கு எழுதியிருக்கிறோம் இந்த ஆண்டு எம்.டி. (டயாபெட்டாலஜி) என்ற போஸ்ட் க்ராஜுவேட் படிப்புகூட வர வாய்ப்பிருக்கிறது. இந்த வகையில் இந்த டயபட்டிஸ் நோய்க்கு முக்கியத்துவம் கொடுத்து எல்லா வகைளிலும் ஏற்பாடுகள் செய்துகொண்டு வருகிறோம். பயிற்சி முகாம்தான் தேவை இல்லை என்று சொன்னேன்.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ப்ரைமரி ஹெல்த் சென்டரிலும் பாம்ப்லட்ஸ் போட்டுக் கொடுப்பதாகச் சொன்னார்கள். அப்படிக் கொடுத்தாலும்கூட கிராமங்களில் உள்ள மக்கள் இதைப் பற்றி தெரிந்து கொள்ள வாய்ப்பில்லை. இந்த நோயைக் கட்டுப்படுத்த. இது எதனால் வருகிறது என்று—இது ஹெரிடிட்டரி என்கிறார்கள். இதைக் கட்டுப்படுத்த வாய்ப்பிருக்கிறது





என்று —நாம் பயிற்சி முகாம்கள் நடத்தவில்லையென்றாலும் —ஆங்காங்கு ஆஸ்பத்திரிகளில் இதைப்பற்றி மக்களுக்குச் சொல்லக்கூடிய, Oral-ஆக சொல்லக்கூடிய வாய்ப்புகளை உண்டாக்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஏதாவது ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல யோசனை. இந்த யோசனையை நான் ஏற்றுக்கொண்டு அதற்கா வேண்டிய, தேவைப்படுகிற நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். இது செயல்படுத்தப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் எண்ணம் செயல்படுத்தப்படும் என்பதை நான் இங்கே வாக்குறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. எஸ். துரைசாமி : தலைவர் அவர்களே, சர்க்கரை வியாதியைக் கண்டுபிடிக்க, கிராமப்புறங்களில் [illegible] நடமாடும் ஆஸ்பத்திரிகளில் கண்டுபிடிக்க அரசாங்கம் [illegible] செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இப்போது நடமாடும் ஆஸ்பத்திரிகள் [illegible]க்கின்றன. ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் [illegible] மொபைல் ஹெல்த் சென்டர், 415 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 260 இடங்களில் மொபைல் ஹெல்த் சென்டர்ஸ் ஆரம்பித்திருக்கிறோம். அங்கு யூரின் டெஸ்ட் செய்து சர்க்கரை வியாதி இருக்கிறதா என்று கண்டுபிடிக்கிறார்கள். இன்னொன்றையும் நாம் செய்திருக்கிறோம். தாலுகா மருத்துவமனைகளில் உடனடியாக ப்ளட் டெஸ்ட் செய்து ப்ளட் ஷுகர் இருக்கிறதா என்று கண்டுபிடிக்கக்கூடிய விதத்தில் ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். எல்லா தாலுகா மருத்துவ மனைகளிலும் ப்ளட் டெஸ்ட் செய்வதன் மூலம் ப்ளட் ஷுகர் இருக்கிறதா, எவ்வளவு இருக்கிறது என்று கண்டுபிடிக்க ஏற்பாடுகள் செய்து கொண்டு வருகிறோம்.

### மதுரைப் புறநகர்ப் பகுதியில் மருத்துவமனை அல்லது மருந்தகம் அமைக்கும் திட்டம்

517—(*வினா எண். 19741) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மதுரைப் புறநகர்ப் பகுதிகளில் மருத்துவமனை அல்லது டிஸ்பென்ஸரி அமைக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, மதுரை மாவட்ட தலைமை மருத்துவமனை இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்ட தலைமை மருத்துவமனை இராமநாதபுரத்தில் இருக்கிற காரணத்தால் அது சென்ட்ரல் ப்ளேனில் இல்லை என இராமநாதபுர மாவட்ட மக்கள் மதுரையில் உள்ள தலைமை மருத்துவமனைக்கு வருகிறார்கள். இதனால் மதுரை புறநகர் மக்களுக்கு தலைமை மருத்துவ மனையில் இடம் கிடைக்காமல் நெருக்கடியாகவும் இருக்கிறது. ஆகவே இதை உத்தேசித்து மதுரை புறநகர்ப் பகுதியில் மருத்துவமனை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களை, இப்பொழுது மதுரை நகரத்தைப் பொறுத்தவரையில், மதுரையிலே பெரிபரல் மருத்துவமனை புற நகர் மருத்துவமனையாகச் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. இதுவல்லாமல், இன்னொரு யோசனையும் நமக்குத் தரப்பட்டிருக்கிறது. மதுரைப் பல்கலைக் கழகத்தின் எல்லைக்குள்ளே இருக்கிற ஒரு மருந்தகம் நெடுஞ்சாலையில்—இருக்கிறது. அந்த மருந்தகத்தைப் பெரிய மருத்துவமனையாக ஆக்குவதற்குச் சில யோசனைகள் கொடுக்கப்படிருக்கின்றன. அதையும் பரிசீலித்து, புற நகர் மருத்துவமனையாக ஏற்றுக்கொள்ளலாம். அதைப் பரிசீலித்து மதுரைப் பல்கலைக் கழக வட்டாரத்திலுள்ள மருந்தகத்தை நல்ல விரிவாக்கப்பட்ட மருத்துவமனையாக மாற்றுவதற்கு நாம் முயற்சியெடுத்துக் கொண்டிருக்கிறோம். அது வெகு விரைவில் செயல்படுத்தப் படும் என்று நான் கருதுகிறேன்.

(முற்பகல் 9-40)

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மதுரைப் பல்கலைக் கழகத்தில் ஏற்கனவே ஒரு டிஸ்பென்சரி இருப்பதாகவும், அதை விரிவுபடுத்தப் போவதாகவும் மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். அது எந்த அளவுக்கு விரிவுபடுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு நடந்த நேரத்தில், பரீட்சார்த்தமாக, பைலட் ப்ராஜக்ட் என்ற வகையில் எடுத்துச் செயல்படுத்தப்பட்டது. அங்கே நோயாளிகள் நிறைய வர ஆரம்பித்தார்கள் ; அதைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய நிலைமை ஏற்படுத்தப்பட்டது. அதையொட்டி அந்த இடத்தில் படுக்கை வசதி ஏற்படுத்தி,





அதற்கு வேண்டிய எல்லா வசதிகளையும்—இருதய நோய் போன்ற எல்லா நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கின்ற வகையில் விரிவாக்கப்பட்ட மருத்துவமனையாக அரசாங்கமே அதை எடுக்க வேண்டும்—ஏனென்றால் இப்பொழுது பல்கலைக் கழகத்தில் மேற்பார்வையில் அது இருக்கிறது. ஆகவே, அப்படிப் பட்ட ஒரு உத்தேசம் இருக்கிறது. அதைத்தான் நான் சொன்னேன். நிச்சயமாக வெகு விரைவில் அது செயல்படுத்தப்படும்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மதுரை புறநகர்ப் பகுதியிலே மருத்துவமனை ஏற்படுத்துவது பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே மதுரையில் இருக்கின்ற இராஜாஜி அரசு மருத்துவமனை மிகப் பெரிய அளவில் விஸ்தரிக்கப்பட்டு, ஏராளமான நோயாளிகள் அங்கே வந்து கூடுகின்ற காரணத்தால் நெருக்கடி இருக்கிறது ; போதுமான கட்டிட வசதிகள் இல்லை. ஆகவே, அந்த அரசு மருத்துவமனையில் இருக்கின்ற பல்வேறு பிரிவுகளையும் மதுரை நகரத்தில் உள்ள பல்வேறு பகுதிகளுக்கும் பிரித்து, தனித் தனியாக அமைப்பதற்கு அரசு ஏதாவது திட்டம் வகுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூடிய வரையிலேயும் பெரிபரல் மருத்துவ மனைகளை நாம் ஏற்படுத்த வேண்டுமென்ற யோசனை இருக்கிறது. ஐந்தாண்டுத் திட்டத்தில்கூடச் சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசிடமிருந்து எந்தவிதமான உதவியும் இல்லை ; நாமாகத்தான் செய்ய வேண்டியிருக்கிறது. நம்முடைய கொள்கையைப் பொறுத்தவரையில் திட்டவட்டமாக, புற நகரத்திலுள்ள பெரிபரல் மருத்துவமனை என்று சொல்லப்படும் அந்த மருத்துவமனைகளையெல்லாம் நாம் விஸ்தரிக்க ஏற்பாடு செய்து கொண்டு வருகிறோம். அதற்கு, மு[illegible] கட்டமாக நாம் என்ன செய்திருக்கிறோம் என்றால், த[illegible]பொழுது பெரிபரல் மருத்துவமனைகளில் சிவில் அசிஸ்டண்ட் சர்ஜன்கள் தான் இருக்கிறார்கள் ; சிவில் சர்ஜன்களை நியமித்தால் அங்கே உயர் மட்ட மருத்துவ வசதிகளைச் செய்து கொடுக்க முடியும் ; ஆகவேதான் அண்மையிலே பெரிபரல் மருத்துவ மனைகளுக்கெல்லாம் சிவில் அசிஸ்டண்ட் சர்ஜன்களாக இருக்கின்ற பதவியை உயர்த்தி—சிவில் சர்ஜன்களாக உயர்த்தி நாம் உத்தரவு போட்டுக்கொண்டு வருகிறோம் ; படிப்படியாகச் செய்து வருகிறோம். அந்த வகையில் ஏற்கனவே செயல்பட்டு வருகின்ற அந்த மருத்துவமனையைக்கூட இன்னும் விஸ்தரிப்பதற்கு ஏற்பாடு நடந்து கொண்டு வருகிறது. சிவில் சர்ஜன்களைப் போட்டு விட்டாலே, ஹை குவாலிட்டி ட்ரீட்மெண்ட் வரும். எம்.எஸ்., எம்.டி. படித்தவர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்றுச் செய்வதற்கு சௌகரியம் ஏற்படும்.

திரு. ஏ. பாலுச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் புறநகர்ப் பகுதிகளில் மருத்துவமனை அமைப்பதற்காகப் பஞ்சாயத்து ஒன்றியங்கள் ஒப்புதல் அளித்து, நிலம் கொடுப்பதாகவும், பணம் கட்டியும் இன்னும் மருத்துவமனைகள் அமைப்பதற்கு உத்தரவு வழங்காமல் உள்ளனவா? அவை எவை எவை என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அது குறித்துத் தனியாக ஒரு கேள்வி போட்டால் எல்லா விவரங்களையும் நாம் சேகரித்துத் தருவதற்கு சௌகரியமாக இருக்கும் .

## திருச்சியில் மருத்துவக் கல்லூரி அமைக்கும் திட்டம்

518.—(*வினா எண். 21439) திரு. எம். சின்னசாமி, திரு. சி. கணேசன், திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியில் மருத்துவக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலே மருத்துவக் கல்லூரி அமைக்கப்படுமா என்று கேட்டதற்கு அமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லை என்று சொன்னார்கள். ஆனால், ஓராண்டு காலத்திற்கு முன்பு திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தர் திரு. மணிசுந்தரம் அவர்கள் திருச்சி மாவட்டத்தில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் அழைத்து திருச்சியிலே இருக்கின்ற திரு. காளமேகம் என்பவரின் தலைமையில் ஒரு குழுவினைப் போட்டு அக்குழுவின் மூலமாக அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்வதாகச் சொன்னார்களே. அப்படிப்பட்ட குழு அரசாங்கத்திற்கு வந்து மாண்புமிகு அமைச்சர் அவர்களைச் சந்தித்ததா ?- அதுபற்றிய விவரம் அரசுக்குத் தெரியுமா ?



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, அதைப்பற்றிய குறிப்புகள் எதுவும் தரவில்லை; தந்தார்களேயானால் அதைப் பரிசீலிக்க அரசு தயாராக இருக்கின்றது.

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது திருச்சியிலே ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்துவது பற்றிப் பரிசீலிப்பதாக இருந்தது. பின்னர் அரசியல் சூழ்நிலை காரணமாக அது ஏற்படுத்தப்படாமல் போய்விட்டது என்று சில முதிய அரசியல்வாதிகள் சொன்னார்கள் அந்தக் கூட்டத்திலே. ஆகவே அந்தக் கருத்தை அடிப்படையாக வைத்தாவது திருச்சியிலே ஒரு மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கக்கூடிய முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, திருச்சியிலே மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பதைப் பொறுத்த வரையில் ஒரு சங்கடம் இருக்கின்றது. அங்கிருந்து 35 மைலுக்கு அப்பாற்பட்டு தஞ்சையிலே ஒரு மருத்துவக் கல்லூரி செயல்பட்டு வருகின்றது. ஆகவே அவ்வாறு 35 மைல் தூரத்திலேயே இன்னொரு மருத்துவக் கல்லூரியையும் ஆரம்பிக்கலாமா, அப்படி ஆரம்பிப்பது உசிதமாக இருக்குமா என்ற ஒரு கேள்வி எழுகின்றது.

மேலும் மத்திய அரசும் ஒரு கைட்லைன்ஸ் கொடுத்திருக்கிறார்கள். நூறு மைல் தூரம் இருக்கக்கூடிய அளவிலே, ஆங்காங்கே ரீஜினல் ரெப்ரசன்டேசன் வரக்கூடிய அளவுக்கு நல்ல வகையிலே மருத்துவக் கல்லூரிகளை ஏற்படுத்தினால் நன்றாக இருக்கும் என்ற ஒரு யோசனையை மத்திய அரசு எல்லா மாநிலங்களுக்கும் தந்திருக்கின்றது. அந்த யோசனைக்கு நாம் கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்பது இல்லை. இருந்தாலும் அது ஒரு யோசனை என்பதை இங்கே தகவலுக்காக நான் சொல்கிறேன்.

திரு. சி. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலே மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு சாத்திய கூறுகள் இல்லை என்றும், முயற்சிப்பதாகவும் மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆகவே சேலத்திலேயாவது ஏற்கெனவே இருக்கக்கூடிய அந்த நோக்கம் நிறைவேறுகின்ற வகையிலே மருத்துவக் கல்லூரியை ஆரம்பிக்கின்ற முயற்சியை அரசு செயல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, திருச்சியிலே அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்று சொல்லவில்லை. திருச்சியிலே இருந்து அப்படிப்பட்ட ஒரு கோரிக்கை வந்தால் கவனிக்கப்படும் என்றுதான் சொ...

னேன். ஆனால் சேலத்தைப் பொறுத்த வரையில் சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற தலைமை மருத்துவமனையில் மருத்துவக் கல்லூரிக்குத் தேவைப்படுகின்ற அளவுக்கு பெட் ஸ்ட்ரெங்த் 614 இருக்கின்றது. அதனை விஸ்தரிக்கக்கூடிய வாய்ப்பும் அங்கே இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல் இரயில்வே செஸ் ஃபன்ட்-லிருந்து 50 இலட்சம் ரூபாய், தேவைப்பட்டால் கொடுப்பதற்கு ஒப்புக் கொண்டதாகத் தகவல் வந்திருக்கின்றது. அதற்கான நிலத்தையும் கொடுக்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள்.

எனவே 100 மைல்களுக்குள்ளாக இருக்கக் கூடாது என்று, மத்திய அரசு சொல்லி இருக்கின்ற அந்தக் கருத்தின் அடிப்படையிலும், நம்முடைய எண்ணிக்கையை உயர்த்துகின்ற அடிப்படையிலும், கொஞ்சம் ரீஜினலைஸ் பண்ணக்கூடிய அளவுக்கு பிரித்துக் கொடுத்தால் நன்றாக இருக்கும். இப்போது சேலம் மாவட்டத்தில் ஹவுஸ் சர்ஜன்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றது. அங்கே சென்று ஹவுஸ் சர்ஜியன்ஸ் படித்துவிட்டால் பின்னர் அவர்கள் டிகிரி பெறக்கூடிய அளவில் ஒரு வாய்ப்பின்ன ஏற்படுத்தி இருக்கிறோம். இதனால் என்ன நன்மை என்றால் ஆங்காங்கே மாவட்டத்திலே இருப்பவர்கள் அந்தந்த மாவட்டத்திலே பயிற்சி பெற்றால் அங்கே வேலை செய்யக்கூடிய வகையில் ஒரு எண்ணம் ஏற்படும். அப்படிப்பட்ட ஒரு மென்டாலிட்டி டெவலெப் ஆகவும் வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே இவைகளை எல்லாம் ஆராய்ந்து இரயில்வே செஸ் மூலமாக 50 இலட்சம் ரூபாயும், இடமும் தருவதாகச் சொல்லப்பட்டிருக்கின்ற காரணத்தால் அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கின்றது. அந்தப் பரிசீலனையில் நல்ல வகையில் சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்ற முடிவுக்கு வந்தால் அங்கே மருத்துவக் கல்லூரி துவக்குவதற்கான வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, திருச்சியிலே மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்க சாத்தியக் கூறு இல்லாவிட்டாலும் சேலத்தில் ஆரம்பிக்கச் சாத்தியக்கூறு இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். சேலத்திலே ஆரம்பித்தால் சேலம், தர்மபுரி ஆகிய இடங்களிலே உள்ள மக்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்ற அளவில் அங்கே மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டும் என்று ரொம்பவும் பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள், பேரவைத் தலைவர் அவர்கள். ஆகவே அங்கே இடமும் இருப்பதால், இரயில்வே செஸ் ஃபன்டிலே இருந்து 50 இலட்சம் ரூபாய் பணமும் கிடைப்பதால் பேரவைத் தலைவருக்காவாவது அது அங்கே ஆரம்பிக்கப்படுமா? இப்போது அது ஒரு கோடி ரூபாயாகக்கூடி இருக்கின்றது. ஆகவே பணமும் கிடைக்கின்றது; இடமும் கிடைக்கின்றது; எனவே சேலத்திலே பேரவைத் தலைவருக்காகவாவது மருத்துவக் கல்லூரியை ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.





(முற்பகல் 9-50)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்ற உறுப்பினர் அத்தனை பேருக்கும் தெரியும், பேரவைத் தலைவர் எதையாவது நினைத்தாரானால் அதை முடித்தே தீருவார் என்பது. ஆகவே, அவர் எதை நினைத்தாலும் அதைச் செய்து முடிக்காமல் இருக்க மாட்டார் என்பது அத்தனை பேருக்கும் தெரியும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயப் படிப்பிற்கும் இன்ஜினியரிங் படிப்பிற்கும் தனி பல்கலைக் கழகம் இருப்பதைப் போல, மருத்துவப் படிப்பிற்கும் தனிப் பல்கலைக் கழகம் அமைக்கப்படுமா? ஆம் என்றால், எப்பொழுது செயலுக்கு வரும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காக நாம் கமிட்டி அமைத்து அவர்கள் ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்கள். அதற்குக் கொஞ்சம் பணம் செலவாகும் என்றுகூடச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. ஆகவே, இவைகளை நாம் கவனித்து கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பல்கலைக் கழகம் என்றால் இன்னும் ஏராளமாகச் செலவாகும். அதைப் பற்றியெல்லாம் சிந்தித்து ஒரு முடிவுக்கு வரவேண்டியிருக்கிற காரணத்தாலே உடனடியாக, இப்பொழுது நாம் ஆரம்பிக்க முடியும் என்று பதில் கூறமுடியவில்லை. என்றாலும்கூட அந்த எண்ணத்தை அரசாங்கம் கை விடவில்லை என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக ஒத்துக் கொண்டதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேநேரத்திலே, இந்த ஆண்டே அதற்குரிய ஆணை பிறப்பிக்கப்படுமா? பணமும் அங்கே இருக்கிறது. போதிய வசதிகளும் இருக்கின்றன. இடமும் கிடைப்பதற்கு., பேரவைத் தலைவரைப் போன்ற பெரியவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக இந்த ஆண்டே, அதற்குரிய அரசாணை பிறப்பித்து, நிதிநிலைமை அதிகமாகப் பாதிக்காத காரணத்தால், உடனே வருகின்ற 'எஜூகேஷனல்' ஆண்டு என்று சொல்லப்படுகின்ற கல்வி ஆண்டிலே இருந்து அங்கே கோர்ஸ்களை துவக்குவதற்கான உத்தேசம் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஒரு கருத்தை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. அதனால் நிதி நிலைமை பாதிக்காது என்று சொன்ன கருத்து அவ்வளவு ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தாக இல்லை. இதற்கும் பண நிறைய செலவாகும். அவர்கள் கொடுக்கக்கூடிய பணத்திலே உடனடியாக ஆரம்பிக்க முடியாது. அது ஓரளவுக்கு உதவும். ஒரு கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்றால் ரூ. 1½ கோடியிலிருந்து ரூ. 2 கோடி வரை நமக்குத் தேவைப்படுகிறது. மருத்துவ மனையை மருத்துவக் கல்லூரியாக விஸ்தரிக்க வேண்டுமென்றால், புதிதாக ஒரு கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்றால், இன்னும் ஜாஸ்தியாகும். ஆகவே, பணச் செலவு அதிகம் இருக்கிற காரணத்தாலே நாம் அதைப்பற்றி பதில் கூறுகிற நேரத்திலே கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

திரு. கே. சௌந்திரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சேலத்திலே மருத்துவக் கல்லூரி துவக்குவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதைச் சொல்லி, மாண்புமிகு பேரவைத் தலைவர் நினைத்ததை முடிப்பார் என்று சொன்னார். மாண்புமிகு பேரவைத் தலைவர் தமிழ் நாட்டுக்கே சொந்தமானவர். இதை அப்படியே செய் விடுவாரானால் அவர் ஏதோ சேலத்திற்கு மட்டும் சொந்தக்காரராக மாறிவிட்டவர் என்ற அச்சம் கூட ஏற்படக்கூடும். 100 மைலுக்கு இடையிலேதான் ஒரு கல்லூரி உருவாக வேண்டுமென்ற ஒரு கருத்தைச் சொல்லி வேறு ஒரு கருத்துக்கு ஆதரவாகத் தன்னை மாண்புமிகு அமைச்சர்அவர்கள் அடையாளம் காட்டிக் கொண்டார். நான் குறிப்பிட விரும்புவது, சென்னையிலே 3 கல்லூரிகள் இருக்கின்றன. அதை விட்டு, சென்னையிலேயிருந்து சுமார் 30 மைல் தூரத்திலேயிருக்கிற செங்கல்பட்டிலே ஒரு கல்லூரி இருக்கிறது. இவைகள் எல்லாம் கடந்த காலத்திலே இருக்கிற நடைமுறைகள். இவைகளை எல்லாம் தெரிந்து கொண்டிருக்கிற நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருச்சியிலே வரக்கூடாது அல்லது வருவதற்கு வாய்ப்பில்லை என்பதற்காக சுற்றி வளைத்து பல்வேறு காரணங்களைச் சொன்னாலும் அங்கே இருக்கிற மக்கள் 1968 ஆம் ஆண்டிலேயே..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றச்சாட்டு சொல்கிற நேரம் இதுவல்ல, உங்களுக்கு வேண்டுமென்று சொல்லுங்கள்.

திரு. சே. சௌந்திரராசன் : குற்றச்சாட்டாக நான் சொல்லவில்லை. நான் சொல்கின்ற கருத்தை வலியுறுத்துவதற்காகத்தான் சொல்கிறேன். திருச்சியிலே மருத்துவக் கல்லூரி வேண்டுமென்பதற்காக 1968 ஆம் ஆண்டிலிருந்து முயற்சி மேற்கொள்ளப்பட்டு, அதற்காக நிதி கூட வரு



விக்கப்பட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று அந்த மக்களிடத்திலே அதற்கான உணர்வுகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அந்த மக்களுடைய உணர்வை ஜனநாயக முறையிலே ஏற்றுக்கொள்கிற வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சேலத்தில் உருவாக்கட்டும் ; அதைப்பற்றி கவலைப்படவில்லை. அது உருவாக்கப்பட வேண்டியதுதான். அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் —திருச்சியிலே உருவாக்குவதற்கு என்ன வழியை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவருக்கும் இந்தக் கேள்விக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. நான் அதற்காகத்தான் மிக எச்சரிக்கையாக இதிலே பேரவைத் தலைவருக்குப் பங்கு இருக்கிறது என்று எதுவும் சொல்லவில்லை. நான் நம்முடைய சாத்தியக் கூறுகளைப் பற்றித்தான் சொன்னேன் எந்தப் பகுதியாக இருந்தாலும் சாத்தியக் கூறுகள் அடிப்படையிலும். 'இன்பிரா ஸ்டரக்ச்சரல் பெசிலிட்டீஸ்' அடிப்படையிலும் நாம் முடிவு எடுத்துக் கொள்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருச்சியைப் பொறுத்தவரையில் சொன்னார்கள். நான் சேலத்தில் இருக்கிற மாவட்ட மருத்துவமனையில் இருக்கிற நிலைமைகளைச் சொன்னேன். அதே நேரத்தில் 30 மைல்கள் தூரத்தில் இருக்கிறது ; ஆகவே நாம் துவக்கக் கூடாது என்று எதுவும் சொல்லவில்லை. மத்திய அரசினுடைய கருத்தை நாம் ஏற்றுக் கொள்கிறோம் என்றும் நான் சொல்லவில்லை. அவர்கள் கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். இன்னமும் சொல்ல வேண்டுமென்றால் திருச்சியைப் பொறுத்த வரையில் அங்கே ஒரு சவுகரியம் இருக்கிறது. அங்கே பல்கலைக் கழகம் இருப்பதால் அவர்களும் அந்த முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இது விஷயமாக மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் மற்றவர்கள் அங்கே வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். எதையும் கைவிடவில்லை ; அதையும் பரிசீலனை செய்கிறோம். பல்கலைக் கழகத்திலே இருக்கிறவர்கள் நம்மை அணுகவிருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் பேசிய உடனே அதைப்பற்றி முடிவை நாம் எடுத்துக் கொள்ளலாம். ஆகவே எதையும் நான் இங்கே திட்டவட்டமாக சொல்ல முடியவில்லை என்பதைத்தான் சொன்னேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருச்சியை நாம் ஏதோ பாரபட்சமாக நினைக்கிறோம், புறக்கணிக்கிறோம் என்ற மனப்பான்மையை வைத்துக் கொள்ளாமல் அந்த முயற்சியிலே அவர்கள் தொடர்ந்து ஈடுபடலாம். அதில் வெற்றி பெறுவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. அங்கே பல்கலைக் கழகத்தோடு தொடர்பு கொண்டு அவர்களுடைய உதவியும் நமக்குத் தேவைப்படுகிறது. கொஞ்சம் பணமும் அங்கே நமக்குக் கிடைக்குமானால் அங்கே ஆரம்பிப்பதற்குச் சவுகரியம் இருக்கிறது. ஆகவே எதையும் திட்டவட்டமாகச் சொல்வதற்கு இயலாது என்பதை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

## சிறுமுகையிலுள்ள விஸ்கோஸ் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர்

519 —(*வினா எண். 21265) திரு. கு. ரமணி : மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தை அடுத்துள்ள சிறுமுகையில் உள்ள விஸ்கோஸ் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் பவானியாற்றில் நீரைக் கெடுத்து வருவதால் கால்நடைகள் சாவதும், விவசாயம் பாதிப்பதும் அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) ஆம்.

(ஆ) இது குறித்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விஸ்கோஸ் கம்பெனி பல ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. அதிலே ரொம்ப மோசமாக விஷத்தன்மை கொண்ட இரசாயன கழிவுப் பொருள்கள் உபயோகப்படுத்தப்பட்டு அதிலேயிருந்து வெளியேறுகிற தண்ணீர் முழுவதும் பவானி ஆற்றிலே கலக்கிறது. அந்தத் தண்ணீரை மாடுகள் குடிக்கிறபோது அவை சாவதும் மனிதர்கள் உபயோகப்படுத்துகிறபோது அவர்களுக்குப் பல்வேறு வியாதிகள் வருகிற நிலைமையும் இருக்கிறது. இது குறித்து அரசாங்கத்திற்குப் பல ரிப்போர்ட்டுகள் விவசாய சங்கங்களின் சார்பிலும், தனி நபர்களின் சார்பிலும், தொழி சங்கங்களின் சார்பிலும் அனுப்பப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட மனுக்களின்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வாரியத்திற்கு அப்படிப்பட்ட புகார் எதுவும் வரவில்லை என்றுதான் குறிப்பிலே இருக்கிறது. அந்தக் கழிவு நீர் சம்பந்தமாக வாரியம் தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கைகள் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்காமல் இருக்கிறார்கள். அந்தக் கம்பெனியிலேயிருந்து வெளியேறுகிற கழிவு நீரிலேயிருந்து விஷத்தன்மை கொண்ட பொருள்களை அப்புறப்படுத்துவதற்காக பல லட்சக்கணக்கான ரூபாய் செலவழித்து வெளிநாடுகளின் உதவியோடு இயந்திரங்களை வரவழைத்திருந்தும் கூட அந்தத் தொழிற்சாலையில் அந்த இயந்திரங்களைப் பயன்படுத்தாத நிலை இருக்கிறது. அப்படியென்றால் அந்தத் தொழிற்சாலை தொடர்ந்து அந்த



தவறை செய்து கொண்டிருக்கிறது என்றுதான் அர்த்தம். அதை அரசாங்கம் பரிசீலனை செய்ததா? வாரியம் கவனிக்கிறது என்றால், இதன் மீது என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தொழிற்சாலை நாளொன்றுக்கு 57 மி.லி. தண்ணீரைத் தொழிற்சாலை உபயோகத்திற்காக பயன்படுத்துகிறது. நாளொன்றுக்கு 55 மி.லி திரவக் கழிவு நீரை இத்தொழிற்சாலை பவானி ஆற்றில் வெளியேற்றுகிறது. இத்தொழிற்சாலை தனது கழிவு நீரைச் சுத்திகரிப்பதற்காக சுமார் ரூபாய் இரண்டு கோடிக்கு ஒரு கழிவு நீர் சுத்திகரிக்கும் நிலையத்தை அமைத்துள்ளது. இத்தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவு நீரின் தன்மைகளாவன : பி.எச். 3.5; டி.டி.எல். 1,230 மி.லி./லிட்டர்; சிங்க் 5.5. மி.லி./லிட்டர்; பி.ஓ.டி. 380 மி.லி./லிட்டர்; சி.ஓ.டி. 964 மி.லி./லிட்டர்.

இத்தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவு நீரானது தானே இயங்கும் கண்தடுப்பு வழியாகச் செல்கிறது; இந்தக் கண்தடுப்பானால் கழிவு நீரில் உள்ள மிதக்கும் பொருள்கள் தடுத்து நிறுத்தப்படுகின்றன. பின்னர் இக்கழிவு நீரானது இரண்டு நடு நிலைப்படுத்தும் தொட்டிகளுக்கு அனுப்பப்படுகிறது. இத்தொட்டிகளில் கழிவு நீரானது மாறி மாறி சேகரிக்கப்பட்டு சுண்ணாம்புக் கலவையின் மூலம் நடுநிலைப்படுத்தப்படுகிறது. இத்தொட்டிகளின் அடிப்பகுதியிலிருந்து கழிவு நீரில் காற்று செலுத்தப்படுகிறது. இவ்வாறு சுத்தப்படுத்தப்பட்ட கழிவு நீர் இரண்டு வடிய வைக்கும் தொட்டிகளுக்கு அனுப்பப்படுகிறது. அந்தத் தொட்டிகளில் படிகாரத்தின் மூலம், கழிவு நீரானது தெளிவுபடுத்தப்படுகிறது. இவ்வாறு தெளிய வைக்கப்பட்ட கழிவு நீரானது ஒவ்வொன்றும் 50 குதிரைத் திறனுள்ள 30 காற்றூட்டிகள் பொருத்தப்பட்ட மூன்று தொட்டிகளுக்கு அனுப்பப்படுகிறது. இந்தக் காற்றூட்டி தொட்டிகளில் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரானது பின்னர் பவானி ஆற்றில் வெளியேற்றப்படுகிறது.

(முற்பகல் 10-00).

இவ்வாறு சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றப்படும் கழிவு நீரின் தன்மைகள் வாரியத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வரையறைக்குள் இல்லாமல் இருக்கின்றன என பரிசோதனை முடிவுகளிலிருந்து தெரிய வருகிறது. சுத்திகரிப்பு முறையிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து. கழிவு நீரின் தன்மையை, உரிய வரைமுறைக்குள் கொண்டு வரவேண்டும் என தொழிற்சாலை அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது குறித்து தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் —விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2 ஒத்திவைப்புத் தீர்மானம்

### இலங்கையில் தமிழர்கள் தாக்கப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. உமாநாத், கே. ஆர். சுந்தரம், சோ. அழகர்சாமி, இரா. கருப்பையா, இ. கா. நல்லப்பன், பொ. உத்திராபதி, என். ஏ. பூங்காவனம், எம். அப்பாதுரை, எம். ஆறுமுகம், ஏ. டி. கருப்பையா, ப. நெடுமாறன், துரைமுருகன், அ. ரகுமான்கான், அன்பில் தர்மலிங்கம், சு. பாலன், பி. சுந்தரம், து. இராசரத்தினம், மு. அரங்கநாதன், ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன், எஸ். என். இராமசாமி, பொ. விஜயராகவன், ஏ. சாகுல் ஹமீது ஆகியோர் "இலங்கை வாழ் தமிழர் மீண்டும் தாக்கப்படுவது குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே இருக்கக்கூடிய தமிழ் சிறுபான்மை மக்கள் மீது மீண்டும் ராணுவத் துறையிலிருந்து பயங்கரமான தாக்குதல் சமீபத்தில் இரண்டு நாட்களுக்கு முன்னதாக நடந்த விஷயம் தமிழகத்தில் இருக்கக்கூடிய மக்களுக்கு மட்டுமல்ல, இந்திய நாடு பூராவும்—நேற்று பாராளுமன்றத்தில் கூட அதனுடைய எதிரொலி இருந்ததைப் பார்த்து இருப்பீர்கள் — இன்றைக்குக் கவலை தரும் ஒரு விஷயமாக மீண்டும் தலை தூக்கி இருக்கிறது. நிலைமை அளவிற்கு மீறிப் போய் இருக்கிறது. உண்மையிலேயே பத்திரிகை செய்திகள் எல்லாவற்றையும் நான் பார்த்தேன் ஸ்ரீலங்காவின் அரசாங்கத்தின் அறிக்கையையும் படித்துப் பார்த்தேன். அவற்றைப் படிக்கிறபோது ஒன்று தெளிவாகத் தெரிகிறது.

அதாவது சாதாரண பொதுமக்கள் கூடியிருக்கும் ஒரு கான்கிரகேஷன் என்று சொல்வார்களே, அந்த மாதிரி இருக்கும் இடங்களில் ஏர்போர்ஸ் அங்கேயிருக்கும் விமானப்படை இன்டிஸ்கிரிமினேட்டாக துப்பாக்கிப் பிரயோகம் செய்து இருக்கிறார்கள். அதனால் ஏற்பட்ட மரணம் கிட்டத்தட்ட 10 என்று சொல்கிறார்கள், 30 என்று சொல்கிறார்கள். ஜனங்கள் கூடியிருக்கும் பகுதியில் இப்படிப்பட்ட தாக்குதலை, ராணுவத்தைச் சேர்ந்த, ஆகாயவிமானப் படையைச் சேர்ந்தவர்கள் செய்து இருக்கிறார்கள். இதனால் ஏராளமான மரணம் நடந்து இருக்கிறது. அங்கேயிருக்கும் ஸ்ரீலங்கா அரசாங்கம் அளித்துள்ள விளக்கத்தைப் பார்க்கிறபோது. டெர்ரரிஸ்ட் தாக்குதலுக்கு எதிர்தாக்குதல் செய்த





தாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இலங்கை ஏர்போர்ஸ் மீது எந்தவிதமான காயமோ சேதமோ ஏற்படவில்லை என்றும் அவர்களுடைய அறிக்கையிலேயிருந்து தெரியவருகிறது. அங்கே நடந்த தாக்குதல் விளைவாக, சுடப்பட்டதன் விளைவாக, கர்ப்பிணி பெண் இறந்து இருப்பதாக எல்லாப் பத்திரிகைளிலும் செய்தி வந்து இருக்கிறது. கர்ப்பிணிப் பெண் என்ன ஆயுதம் தாங்கி டெர்ரரிஸட் ஆக்ட் செய்தார்கள்? இதில் இருந்து ஒன்று தெரிகிறது. அந்த இலங்கை ராணுவ ஆகாயவிமானப் படை, சாதாரண மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியிருக்கிறது. அப்படிப்பட்ட முறையில் அங்கே கொலைகள் நடைபெற்று இருப்பதாகத் தெரிகிறது. இந்தியாவிலிருந்து, தமிழகத்தில் இருந்து சென்று அங்கே ஸ்ரீலங்காவில் வாழ்ந்து வரும் சாதாரண மக்கள் மீது, பாதுகாப்பற்ற முறையில் இப்படிப்பட்ட தாக்குதல் மீண்டும் தலைதூக்கி இருக்கிறது. இப்படிப்பட்ட அத்துமீறிய சம்பவம் அங்கே நடந்து கொண்டு இருக்கிறது

இது ஒரு சீரியஸ் விஷயம். அங்கே இருக்கக்கூடிய சிறுபான்மை தமிழ் மக்களுக்குக் பாதுகாப்பு இல்லை; பெரிய அபாயம் இருக்கிறது. அது மட்டுமல்ல, இது நடக்கக்கூடிய "பாக் கிரவுண்ட்", அதாவது அந்தப் பின்னணி என்ன என்று பார்க்க வேண்டும். ஒரு சுமுகமான தீர்வு காண்பதற்காக நம்முடைய மத்திய அரசு இன்னொரு அரசினுடைய விஷயத்தில் தலையிட அதிகாரம் இல்லை நம்முடைய நாட்டின் விவகாரத்தில் தலையிட இன்னொரு நாட்டுக்கு அதிகாரம் இல்லாத நிலையில். ஆனால் இந்திய அரசு இதிலே ஒரு சுமுகமான நிலையை உருவாக்குவதற்கு முயற்சி செய்த காரணம் அநத அரசின் வேண்டுகோளின்படிதான். அங்கே இருக்கக்கூடிய ஜனாதிபதி ஜெயவர்த்தனேக்கு டெலிபோன் பண்ணி, அவர் அவருடைய தம்பியை இந்தியாவுக்கு அனுப்பி, பிரதமரிடம் சொல்லி, அவர் உங்களுடைய குட் ஆபீசை பயன்படுத்திச் சொல்லுங்கள் என்று சொன்ன பிறகு, இன்னாரை அங்கே அனுப்பலாமா என்று கேட்டு, அவர்களுடைய சம்மதத்தின் பேரில்தான் இந்தியாவின் பிரதிநிதியை அனுப்பிவைத்தார்கள்.

இலங்கையில் இருக்கிற தமிழ் மக்கள் பிரதிநிதிகளும், அரசாங்கப் பிரதிநிதிகளும் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். பேச்சுவார்த்தை நடக்கிறபோது நம்முடைய அரசின் சார்பில் அவர்களைச் சமாதானப்படுத்துவதற்காகத் உதவி அளிப்பதாக, தான் இந்திய அரசின் பிரதிநிதியை அனுப்பியிருக்கிறார்கள். ரொம்ப சிரமப்பட்டு, இப்படிப்பட்ட ஒரு மாநாடு கூட்டி, பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறபோது மீண்டும் இப்படிப்பட்ட ஒரு பயங்கரமான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிற பின்னணிக்குப் பின்னால்தான் இந்தச் சம்பவம் நடக்கிறது என்றால் எதிர்காலத்தில் எவ்வளவு பெரிய அபாயத்திற்குப் போகும் என்று நமக்குத்

தெரியாது. பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருந்த அந்த மா
நாடு திடீரென்று இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டி
ருக்கிறது. It is not good. Does not augur well
என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். எதிர்காலத்தில் நல்ல
அறிகுறி இல்லை. இரண்டு மாதங்களுக்கு எந்தவிதமான
பேச்சுவார்த்தையும் இல்லாமல் மாநாட்டை ஒத்தி வைத்திருக்
கிறார்கள். இது கவனிக்க வேண்டிய ஒரு விஷயம்.

இந்தப் பின்னணியில் இன்னொன்றையும் நாம் பார்க்க
வேண்டியிருக்கிறது. அந்த அரசு கேட்டுக்கொண்டதால், அவர்
கள் அனுமதித்ததால்தான் அவர்களுடைய வேண்டுகோளுக்கு
இணங்க அட்வைஸ் கொடுக்கிறோம் என்றாலும் சிலோன்
சர்க்கார் என்ன பிரச்சாரம் செய்கிறது என்று பார்க்க
வேண்டும். நாம் சமாதானத்திற்கு முயற்சி செய்து கொண்டி
ருக்கிற நேரத்தில் அங்கே இருக்கிற பிரதமர் நமக்கு எதிர்
பிரச்சாரம் செய்கிறார். இந்தச் சம்பவத்திற்குக் காரணம்
இந்திய தலையீடு, அதிலும் குறிப்பாக தென்னகம், தமிழ்நாடு
தான் என்று அவர்களுடைய பிரசங்கத்தில் குறிப்பிட்டிருக்
கிறார்கள். இங்குதான் அவர்களுக்கு ஆயுதங்கள் கொடுக்
கிறார்கள், பயிற்சி கொடுக்கிறார்கள் என்று சொல்லி அங்கே
இருக்கக்கூடிய பதட்ட நிலையைத் தவிப்பதற்குப் பதிலாக
இந்திய நாட்டின் மீதும் தமிழ்நாட்டின் மீதும் குற்றஞ்சாட்டு
கிறார்கள். அங்கே இருந்துபோன ஒரு பத்திரிகையில், அந்தத்
தீவிரவாதிகளுக்கு இங்கே ட்ரெயினிங் கொடுக்கிறார்கள், இளம்
டைகர்ஸுக்கு இங்கே பயிற்சி கொடுக்கிறார்கள் என்று போட்
டிருப்பதாகப் பத்திரிகையைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.
அதுபற்றிகூட நம்முடைய நாடாளுமன்றத்தில் பெரிய விவாதம்
நடைபெற்றிருக்கிறது.

இப்போது சிலோனில் இருக்கிற கம்யூனிஸ்ட் கட்சி பத்
திரிகையில் அதனுடைய பின்னணி என்ன என்று எழுதியிருக்
கிறார்கள். இப்படிப்பட்ட செய்தியை, அதாவது இந்தியா
வில் அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டில்தான் தீவிரவாதிகளுக்குப்
பயிற்சி கொடுக்கிறார்கள் என்ற ஒரு செய்தியை பத்திரிகை
யில் போடச் செய்ததே சிலோன் அரசாங்கம்தான் என்று
ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி பத்திரிகை எழுதியிருக்கிறது.
சிலோன் அரசாங்கம் தான் அங்கே இருந்து இந்தியாவுக்கு
ஆட்களை அனுப்பி, அந்தப் பத்திரிகையிலே எழுத வைத்து,
அந்தப் பத்திரிகையை சிலோனுக்கு வரவழைத்து, அதை பேஸ்
பண்ணி இப்படிப்பட்ட பிரச்சனை நடத்தியிருக்கிறது என்று
ஸ்ரீலங்காவில் இருக்கிற கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகையில்
சொல்லியிருக்கிறார்கள். இப்படித்தான் இலங்கை அரசாங்
கம் தூண்டிவிடுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்
படிப்பட்ட ஒரு பின்னணியில்தான் அந்த மாநாடு நடக்காமல்
திடீரென்று இரண்டு மாதங்களுக்கு ஒத்திப்போடப்பட்டிருக்கிறது.





அதே நேரத்தில் இந்தியாவுக்கு எதிராகவும், தென்னகத்திற்கு
எதிராகவும் ஒரு விரோத உணர்ச்சியை, வெறியை ஊட்டக்
கூடிய நிலைமை இப்போது சிலோனில் நடந்து கொண்டிருக்
கிறது. இது மிக அபாயகரமானது. அங்கு இருக்கக்கூடிய
சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பு சுத்தமாக இல்லை;
பெருத்த அபாயம் ஏற்பட்டிருக்கிறது. இது 'ஹாலோஹஸ்ட்' மிகப்
பயங்கரமான அபாயமாக இருக்கிறது. ஸ்ரீலங்கா அரசாங்கத்தின்
இப்படிப்பட்ட போக்கை மாற்ற ஸ்ரீலங்காவில் இருக்கக்
கூடிய ஜனநாயக சக்திகளும், அங்கு இருக்கக்கூடிய மக்களும்
ஒன்றுபட்டு அந்தச் சிறுபான்மை மக்களைப் பாதுகாப்பது
என்பதுதான் வழியே தவிர ஸ்ரீலங்கா மக்களிடம் இந்த மாதிரி
யான வெறியுணர்வை ஊட்டுவது இலங்கைக்குப் பாதுகாப்பாக
இருக்காது. ஏனென்றால் அவர்களே ஒன்று சொல்கிறார்கள்.
இப்போது 'டிஃபன்ஸ் பண்டு' என்ற ஒன்று கலக்ட் பண்ணு
கிறார்கள் என்று தெரிகிறது. அது அவர்களுடைய உரிமை.
அதிலே நாம் தலையிடவில்லை. ஆனால் அவர்கள் இப்போது
ஒரு பிரச்சாரத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். அதாவது இலங்கை
யின் கோஸ்டல் ஏரியாவில் அயல்நாட்டுப் படையெடுப்பு அபாயம்
இருக்கிறது என்று சொல்கிறார்கள். யாரைக் குறிப்பிடுகிறது
என்று சொன்னால் - அங்கே இருக்கின்ற ஸ்ரீலங்கா மக்களிடம்
படை எடுப்பு அபாயம் இருக்கிறது என்று தூண்டிவிடுகிறார்
கள். ஆகவே நம்மைத்தான், இந்தியாவைத்தான் குறிப்பிடு
கிறார்கள். ஆகவே இந்திய மக்களுக்கு, தென்னக மக்களுக்கு
எதிராக ஜனங்களைத் தட்டிவிட்டு, படையெடுப்பு அபாயம்
என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்தப் படையெடுப்பு
அபாயம் ஸ்ரீலங்காவையும் சுயாதிபத்ய உரிமையையும் பாதிக்
கக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆனால் அது இந்தியா
வாலோ, அல்லது தமிழகத்தாலோ அல்ல. அமெரிக்காவி
லிருந்துதான் ஸ்ரீலங்காவினுடைய சுயாதிபத்திய உரிமை
பாதிக்கப்படும் அபாயம் இருக்கிறது. அவர்கள் அதைத் தடுப்
பதற்கு பதிலாக, அந்தச் சக்திகள் மீண்டும் தலை எடுக்கும்
வகையில் செய்தால், அவர்களுடைய சுயாதிபத்ய உரிமைக்கு
அபாயம் ஏற்படுகின்ற அளவிற்குத்தான் கொண்டுபோய்
விடும்.

(முற்பகல் 10-10)

அமெரிக்காவினுடைய தந்திரமே இதுதான். சுதந்திர
மடைந்த நாடுகளிலுள்ள சுதந்திரத்தைப் பறிப்பதற்காக,
அங்கே இருக்கக்கூடிய சிறுபான்மை மக்களைத் தாக்க விடுவது,
அந்த மக்களிடையே பிளவு ஏற்படுத்துவது. இவைகள்தான்.
லெபனானில் இதைப் பார்த்தோம். ரொம்ப தூரம் போக
வேண்டியதில்லை. சுயாதிபத்ய உரிமைக்கு அபாயம் இந்தி
யாவாலோ, தென்னக மாநிலங்களாலோ இடையாது. அமெரிக்

காவல்தான் வரும். அதைத் தடுப்பதற்கு அங்கே உள்ள மக்களை ஒன்றுபடுத்துவது, சிறுபான்மை மக்களை ஒன்றாகச் சேர்த்துக்கொண்டு, அந்தப் பாதுகாப்பு கொடுக்கும் முறையில் அவர்கள் முடிவு எடுப்பதுதான் சிறந்த வழியே தவிர, வேறு வழியல்ல. அப்படிச் செய்யாத வரையில், அவர்களுடைய சுயாதிபத்ய உரிமைக்கு அபாயம்தான் இருக்கும்.

திரு. அமிர்தலிங்கம் அவர்கள் ஸ்ரீலங்காவிலுள்ள பெருவாரியான தமிழ் மக்களின் பிரதிநிதியாக இருக்கிறார். அவர் டில்லிக்கு வந்திருக்கிறார், சென்னைக்கு வந்திருக்கிறார். இப்போது சென்னையில் இருக்கிறார். அவருடைய அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அந்த மாநாட்டைத் தோற்கடிப்பதற்காக, பல முயற்சிகளை எடுத்து, அவர்களுக்கு ஆத்திரமூட்டலை ஏற்படுத்தினால், அதைப் பார்த்து, அவர்கள், ''நாங்களே வெளியேறுவோம்'' என்று சொல்லி வெளியேறிவிடுவார்கள் என்று கருதினார்கள். ஆனால். 'We did n... obl ge th:m' என்ற வார்த்தைகளைச் சொன்னார்கள். அந்த மாநாட்டை உடைத்து, எங்களை வெளியேற்றுவதன் மூலம் மாநாட்டை 'குளோஸ்' செய்துவிடலாம் என்பதற்கு நாங்கள் இடம் கொடுக்கவில்லை என்றும், நாங்கள் உறுதியாக இருந்து வாதாடினோம் என்றும் சொன்னார்கள். அப்படிப்பட்ட ஆட்டிட்யூடிலே மேலும் மேலும் ஜனநாயக சக்திகளை ஒற்றுமைப்படுத்த வேண்டும். H lo-caus எப்படி பயங்கரமான சேதம் அந்தச் சிறுபான்மை மக்களுக்கு ஏற்படும் என்று கொண்டு, மத்திய அரசாங்கம் சீக்கிரமாக, எந்தவிதமான தாமதமும் இல்லாமல் பெரிய அளவில் இதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று அந்த சிலோன் அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு பிரதமர் அவர்கள் உடனடியாக இதைத் தடுப்பதற்கான சகல முயற்சிகளிலும். நடவடிக்கைகளிலும் இறங்க வேண்டும். இந்த மாநாட்டைச் சீக்கிரமாகக் கூட்டுவதற்காக, நம்முடைய இந்திய நாட்டின் 'குட் ஆபிசை' உபயோகப்படுத்தி, ' இந்த மாதிரி வெடிக்காமல் இருப்பதற்கு அந்த மாநாடு தொடர்ந்து நடைபெறுவதற்கான பேச்சுவார்த்தைகளின் மூலம் முடிவு காண்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்களுக்குப் பாதுகாப்பு இதுதான் தவிர, வேறு அல்ல.

மக்களை பாதுகாக்க வேண்டியது என்று சொன்னால், அரசாங்கம் இதற்காக நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. நம்முடைய மாநில அரசு மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு, உடனடியாக அடுத்த நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். ஆனால் இதுவரையில் என்ன செய்தார்கள் என்று தெரியவில்லை. சகலவிதமான யோசனைகளையும் முயற்சி



களையும் எடுத்து, நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்றிருப்பதால். இதைப்பற்றி விவாதிப்பதற்கு, அவையினுடைய மற்றைய அலுவல்களை ஒத்திவைத்து, இதனை விவாதிக்க இடம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இலங்கையிலே மீண்டும் நம்முடைய சிறுபான்மை தமிழர்கள். வசிக்கக் கூடிய இடங்களில், அந்த விமானப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ள தகவல்களைப் பல பத்திரிகைச் செய்திகள் தந்துள்ளன. 30, 100 பேர் என்று செய்தி வந்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல், அந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் காயம் அடைந்திருப்பவர்களுக்கு, டாக்டர்கள் சிகிச்சை அளிப்பதற்குக் கூடப் பயப்படுகிறார்கள். அப்படி சிகிச்சையளிப்பதன் காரணமாக டாக்டர்களுக்கும் இந்த ராணுவத்தினர் துன்பங் ' ளயும் கஷ்டங்களையும் ஏற்படுத்துகின்ற நிலை ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த வட்ட மேஜை மாநாடு நடந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே, அதை நிறுத்திவிட்டிருக்கிறார்கள். இந்த மாநாடுகளை அச்சுறுத்துவதில் இலங்கை அரசு, ஜெயவர்த்தனே அரசு இறங்கியிருக்கிறது.

அது மட்டுமல்லாமல், சென்ற வாரம் தேசிய பாதுகாப்பு அமைச்சகம் என்ற ஒரு அமைச்சகத்தை ஏற்படுத்தி, அதற்கு வேண்டிய நிதியை எல்லாம் சேகரிப்பதற்காக செய்திகள் எல்லாம் வந்திருக்கின்றன. இது சம்பந்தமாக இன்றைக்கு இலங்கையிலே உள்ள முற்போக்கு ஜனநாயக சக்திகள் இந்தப் பிரச்னையை சுமுகமாகத் தீர்க்க வேண்டும் என்று முயற்சி செய்தாலும் கூட, அங்குள்ள சில இன வெறியர்கள் அதே நேரத்தில். அதற்குப் பின்னால் உள்ள சில ஏகாதிபத்திய சக்திகளின் தூண்டுதல்களின் காரணமாக, இந்தியாவையே அச்சுறுத்தக் கூடிய முறையிலே பல நடவடிக்கைகளிலே அவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதை நாம் இந்த நேரத்தில் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

இந்தியாவோடு சுமுகமாக இருப்பதாகக் காட்டிக் கொண்டு, இந்தியாவோடு நட்பாக இருப்பதாகக் காட்டிக்கொண்டு, இந்தியாவிற்கு விரோதமான பல நடவடிக்கைகளில், ஜெயவர்த்தனே அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருகிற சம்பவங்களை எல்லாம் நாம் பார்க்கிறோம். இப்போது அமெரிக்காவிடமிருந்து ராணுவ உதவிகளையும் பெறுவதற்கு சகல முயற்சிகளும் நடந்து வருவதாகத் தெரிகிறது. ஆகவே நமக்குப் பக்கத்திலே உள்ள அண்டை நாடாகிய இலங்கையிலே இப்படி ஒரு வெறியை, மைனாரிட்டி மக்களுக்கு எதிராக, விரோதமாக தூண்டிவிட்டு, படுகொலைகள் செய்யக் கூடிய காரியங்கள் எல்லாம் நடைபெற்று வருகின்றன. நமக்கும் அவர்களுக்கும் உள்ள அந்த

உறவைத் துண்டிக்கக்கூடிய நிலையில் அவர்கள் இறங்கி இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே இந்த விஷயத்திலே, நம்முடைய தோழர் உமாநாத் அவர்கள் கூறியது மாதிரி, இந்த வட்ட மேஜை மாநாட்டைத் தொடர்ந்து நடத்தவும், அங்கே உள்ள ஜனநாயக சக்திகளுடைய துணையோடு, ஆதரவோடு அவர்கள் அந்தப் பிரச்சனையைச் சுமூகமாகத் தீர்க்க வேண்டும் என்றும் அங்குள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் எல்லாம், ஜனநாயக சக்திகள் எல்லாம் விரும்புகின்றன. ஆகவே அவர்களை எல்லாம் சேர்த்துக் கொண்டு இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நம்முடைய இந்திய சர்க்கார் தீவிரமாக, துரிதமாக எடுக்க வேண்டும். இது சம்பந்தமாக மத்திய சர்க்கார் சில நடவடிக்கைகளைக் கடந்த காலத்திலே எடுத்துக் கொண்டு வந்தாலும் கூட, இப்போது இந்த வட்ட மேஜை மாநாட்டை நிறுத்தி, வேறு காரியங்களிலே ஜெயவர்த்தனே அரசு இறங்கியிருப்பதாக நமக்குச் செய்திகள் வருகின்ற போது, மீண்டும் நம்முடைய மத்திய அரசு தீவிரமான கவனம் செலுத்தி, இந்தப் பிரச்சனையைத் தீர்க்க வேண்டும். அங்கேயுள்ள மைனாரிட்டி மக்களுக்குப் பாதுகாப்புத் தருகிற முறையிலே, அங்கே உள்ள நிலைமைகளைக் கண்டறிந்து, இடரைக் களையக்கூடிய முறையிலே, நடவடிக்கைகளை நம்முடைய மத்திய அரசு எடுக்க வேண்டும். அதற்கு மாநில அரசாங்கம் மத்திய அரசை வற்புறுத்தவோ, அல்லது தொடர்பு கொண்டோ, செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்றால், நம்முடைய அண்டை நாட்டில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலைமை நமக்கு ஒரு அச்சத்தைத் தருகிறது. எனவே இதில் மத்திய சர்க்கார் தீவிரமாகத் தலையிட்டு, இந்தப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு நம்முடைய மாநில அரசு முயல வேண்டும். இது சம்பந்தமாக விரிவாகப் பேசுவதற்கு, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே யாழ்ப்பாணத்திற்குப் பக்கத்தில் உள்ள சின்னகத்திடல உள்ள ஒரு சந்தையிலே ஆயிரக்கணக்கான அளவில் கூடியிருந்த மக்கள் மீது ஈவு இரக்கமின்றி, இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த விமானப்படையினர் அங்கே சுட்டு, ஏராளமான பேர்கள் இறந்து போயிருக்கிறார்கள். இன்று இந்தச் செய்தி தமிழகத்திலே உள்ள அத்தனை பேர்களையும் அதிர்ச்சி அடைய வைத்திருக்கிறது. இலங்கையில் உள்ள இந்த நிலைமைகள் வரக்கூடிய அறிகுறிகள் ஏறத்தாழ சில மாதங்களாகவே இருந்து வந்திருக்கின்றன. இந்திய அரசாங்கத்தின் முயற்சியின் பேரிலே ஒரு வட்ட மேஜை மாநாடு நடத்துவதற்கு இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே ஒப்புக் கொண்டாலும் கூட, இந்த வட்ட மேஜை மாநாடு வெற்றிகரமாக நடத்துவதற்கு அவர் ஆரம்ப முதலே விரும்பவில்லை. அவர்கள் தொடர்ந்து இந்த மாநாட்டை முறியடிப்பதற்கான பல வழிகளிலே ஈடுபட்டு வந்திருக்கிறார்கள். அதிலே இந்தப் பேச்சுவார்த்தை, தமிழர்களுடைய பிரதிநிதிகளுக்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் இடையே நடைபெற்ற அந்த வட்ட மேஜை மாநாட்டை திடீரென ஒத்தி வைத்தது ஒன்று. இரண்டாவது இலங்கைப் பிரதமராக உள்ள பிரேமதேசா அவர்கள் திடீரென இந்தியாவிற்கு எதிராக பிரச்சாரத்தை முடுக்கி விட்டார்கள். மூன்றாவது, இலங்கையிலே உள்ள திரிகோணமலையிலே அமெரிக்க இராணுவ தளத்தை அமைப்பதற்காக ரகசிய வேலைகள் எல்லாம் செய்வதில் இலங்கை அரசு ஈடுபட்டு இருக்கிறது. அதை மேலும் உறுதியாக்குகிற வகையிலே, இலங்கையிலே உள்ள புத்த குருமார்கள் அத்தனை பேர்களும் ஒன்று கூடி இந்தியாவிற்கு எதிராக, அமெரிக்கா, சீனா போன்ற இன்னும் இதற்கு உடன்பாடாக இருக்கக்கூடிய அத்தனை நாடுகளோடும், இராணுவ உடன்பாடு செய்து கொள்வதற்கு இலங்கை அரசு முன்வர வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தி இருக்கிறார்கள்.



(முற்பகல் 10-20)

புத்தமதக் குருக்கள் அதைச் செய்கிறார்கள் என்றால் இலங்கை அரசுக்குத் தெரியாமல் அவர்கள் அதைச் செய்ய முயயாது. அடுத்தபடியாக இலங்கைத் தமிழர்கள் வாழக்கூடிய வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்த போலீஸ் அதிகாரிகளை எல்லாம் எடுத்துவிட்டு, அந்த இடங்களை இராணுவத்திடம் ஒப்படைத்திருப்பதாக இலங்கை அரசு சில நாட்களுக்கு முன்னால் அறிவித்தது. ஆக, இலங்கை வாழ் தமிழர்கள் பகுதிகளில் சிவில் அட்மினிஸ்ட்டிரேஷன் இல்லை. இராணுவ ஆட்சி அங்கே முடுக்கிவிடப்பட்டிருக்கிறது. அடுத்து புதிய விசேஷமான சட்டம் ஒன்றை இலங்கை அரசு பிறப்பித்திருக்கிறது. இலங்கை இராணுவத்தினர் யாரை வேண்டுமானாலும் எந்தவிதமான வாரண்டும் இல்லாமல் கைது செய்யலாம். யாருடைய வீட்டுக்கு வேண்டுமானாலும் எந்தவிதமான உத்தரவும் இல்லாமல் அவர்கள் சென்று சோதனை போடலாம் என்று உத்தரவு பிறப்பித்து இருக்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக இலங்கையிலிருந்து வெளியே செல்லக் கூடிய செய்திகள் முழுவதுமாக தணிக்கை செய்யப்படுகின்றன, எந்தச் செய்தியும் இலங்கைக்கு வெளியே செல்வது தடுக்கப்பட்டிருக்கிறது. கடுமையான சென்ஸார் முறை அமலாக்கப்பட்டிருக்கிறது. தற்சமயம் கிடைக்கக்கூடிய அரைகுறை செய்திகள் எல்லாம் கூட லண்டன் மூலமாகவோ, வெளிநாடுகள் மூலமாகவோ தான் தெரியவருகின்றன. இலங்கையிலே தமிழர்கள் வாழ் பகுதிகளிலே நடக்கக் கூடிய உண்மையான செய்திகளை நம்மால் அறிய முடியாது. அந்த அளவிற்கு இலங்கை வாழ் தமிழர்கள் இருட்டிலே வைக்கப்பட்டிருக்கிறார்

கள். இப்படி அவர்கள் எல்லாவற்றையும் செய்து முடித்துக் கொண்டதற்குப் பின்னால், இனப் படுகொலையினை தொடங்கி இருக்கிறார்கள். திட்டவட்டமாக ஜெனோசைட் மீண்டும் ஆரம்பித்திருப்பதை இங்கே வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒவ்வொரு தடவையும் இதே போல இலங்கையில் இனப் படுகொலை நடக்கிறபோது அதை இங்குள்ள கட்சிகள், எந்தவித கட்சி வேறுபாடும் இல்லாமல், நாமெல்லோரும் தமிழர்கள் என்ற ஒரே உணர்வோடும், எல்லாவற்றிற்கும் மேலாக மனிதாபிமான உணர்வோடும் அதை எதிர்த்து இந்த அவையிலே குரல் கொடுக்கிறோம். இந்திய நாடாளுமன்றத்திலே கூட குரல் கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் இன்று மறுபடியும் தமிழகத்திற்கு பெரிய அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு தடவையும் இப்படிச் செய்வதோடு நம்முடைய கடமை முடிந்து விடுகிறதா? ஒவ்வொரு தடவையும் இனப் படுகொலையை அவர்கள் தொடர்ந்து நடத்திக் கொண்டேயிருக்கிறார்கள். முழுவதுமாக இலங்கையிலே இருக்கக்கூடிய தமிழர்களை அழிக்கும் வரையில் ஒய்வது இல்லை என்று அவர்கள் திட்டமிட்டு நடத்துகிறார்கள் என்றால், அதைப் பார்த்துக் கொண்டு எத்தனை நாளைக்கு நாம் சும்மா இருக்க முடியும் என்று அறிய விரும்புகிறேன் ?

இந்த சமாதான பேச்சு வார்த்தை எப்படி ஆரம்பித்தது என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். இந்திய அரசாங்கத்தின் முயற்சியின் பேரில் தமிழர்களின் தலைவர்கள் இதற்கு ஒத்துக் கொண்டார்கள், இலங்கை அரசும், ஜெயவர்த்தனேவும் என்ன செய்வார்கள் என்பது தமிழர்களின் தலைவர்களுக்குத் தெரியும். இந்தப் பேச்சு வார்த்தையினால் எந்தவிதப் பயனும் இல்லை என்பது அவர்களுக்குத் தெளிவாகத் தெரியும். ஆனாலும் கூட இந்திய அரசு சொல்கிறது. பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக இந்தப் பேச்சு வார்த்தைக்கு அவர்கள் சென்றார்கள். சென்ற போதிலும் கூட எந்தவிதமான பயனும் இல்லை. ஒரு பக்கம் பேச்சு வார்த்தை நடக்கிறது, இன்னொரு பக்கம் தமிழர்கள் படுகொலை நீடிக்கிறது.

ஆகவே, இந்திய அரசாங்கத்தின் ஆலோசனையின் பேரிலே இந்தப் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. ஆகவே, இன்றைக்கு இலங்கையிலே தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றால் அதைத் தடுத்து நிறுத்துவதற்கான முழு பொறுப்பையும் இந்திராகாந்தி அவர்கள் ஏற்க வேண்டும். அவர்களுடைய பேச்சை நம்பித்தான் தமிழர்களின் தலைவர்கள் பேச்சு வார்த்தைக்கு தயாராக சென்றார்கள். பேச்சு வார்த்தைக்குப் பின்னாலேயும், படுகொலை தொடர்ந்து நடக்குமே



யானால், அதைத் தடுக்க வேண்டிய முழு கடமையும் பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்கு உண்டு. இந்த அரசாங்கத்திற்கும் உண்டு. அதைச் செய்ய அவர்கள் தவறுவார்களேயானால் மனித சமுதாயம் நிச்சயமாக மன்னிக்காது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துக் கொண்டு ஒரு குழுவாக உடனடியாக டெல்லிக்குச் சென்று, இந்தப் படுகொலைகளை தடுத்து நிறுத்த வேண்டும் என்று இந்திரா காந்தி அவர்களை வற்புறுத்த வேண்டும். அவர்கள் இதனை தடுப்பதற்கு உடனடியாக எந்தவித நடவடிக்கையும் எடுக்காவிட்டால், இந்த அவை முழுவதும் ராஜினாமா செய்வதற்கு தயாராக இருக்க வேண்டும் என்பதை வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். பிரச்சினை முற்றியிருக்கிறது. அதை மேலும் வளர விடுவதன் மூலம், இலங்கையிலே வாழ்கிற தமிழர்கள் அத்தனை பேர்களுடைய உயிருக்கும் மிகப் பெரிய ஆபத்து ஏற்படும். அது மிகப் பெரிய பின் விளைவுகளை தமிழகத்தில் ஏற்படுத்தும். 5 கோடி மக்களும் அதைப் பார்த்துக் கொண்டு எதிர்க்காமல் சும்மா இருக்க முடியாது. சும்மா இருக்க மாட்டோம் என்று தெரிவித்து, அதைப்பற்றி இன்னும் விரிவாக விவாதிப்பதற்காக இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்குமாறு கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புயல் இன்னும் கரையை கடக்கவில்லை என்று சொல்வதைப் போல் இலங்கையில் இனப் படுகொலை காட்டுமிராண்டித் தனமாக நடைப் பெற்றுக்கொண்டிருக்கிறது. யாழ்ப்பாணத்திற்கு அருகே சுனகம் என்ற இடத்திலும் மால்கம் என்ற இடத்திலும் இலங்கையைச் சார்ந்த விமானப் படை தமிழர்களுக்கு எதிராக மனிதாபிமானம் அற்ற முறையில் அன்றைக்கு யூத மக்களுக்கு எதிராக ஹிட்லர் நடத்திய மிகப்பெரிய கொலை வெறியைப் போல அங்கே பலரை சுட்டுப் பொசுக்கி இருக்கிறார்கள். கர்ப்பிணிப் பெண்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். 100 பேருக்கு மேற்பட்டவர்கள் கொலை செய்யப்பட்டதாக செய்திகள் வந்திருக்கின்றன. அது மட்டும் அல்ல, அதற்கு இலங்க்க அரசின் சார்பாக சொல்லப்படுகின்ற காரணம் அந்த பகுதியில் இருக்கக்கூடிய விமானப் படையைச் சார்ந்த சிலர் ஒரு பாங்கில் டிபாசிட் செய்வதற்கு போனார்கள். விடுதலைப் புலிகள் அவர்களைக் கொன்று குவித்தார்கள். அதனுடைய விளைவாக இந்த கலவரம் என்று சிங்கள அரசு காரணம் சொல்லியிருக்கிறது. இது ஒரு காரணமே தவிர உண்மை அல்ல. அண்மையில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் தமிழர்கள் இலங்கையில் கொலை செய்யப்பட்

டார்கள். பல தமிழச்சிகள் கற்பழிக்கப்பட்டார்கள். தமிழர்கள் சொத்துக்கள் சூறையாடப்பெற்றன. இன்னும் சொல்லப்போனால் வெள்ளிக்கரை சிறைச்சாலையில் குட்டிமணியையும், அதுபோல தங்கதுரையையும் மற்றவர்களையும் மனிதாபிமானம் அற்ற முறையில் கொன்றார்கள். அப்போது எல்லாம் அவர்கள் சொல்லிய காரணம், இராணுவத்தை விடுதலைப் புலிகள் சுட்டார்கள் என்று தான். எனவே இதை ஒரு காரணமாக வைத்துக் கொண்டு இன்றைக்கு இலங்கை தமிழர்களுக்கு விரோதமாக இன வெறி படுகொலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக இந்த சபையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இன்றைக்கு இலங்கையில் நெருக்கடி பாதுகாப்பு நிதி திரட்டும் திட்டம் என்ற ஒரு திட்டத்தை அறிவித்து இருக்கிறார்கள். வீட்டில் இருக்கக்கூடிய அத்தனை பேரும் சிங்களவர்கள் மற்றவர்கள் அரசுக்கு நிதி கொடுக்கவேண்டுமாம். இதற்கு என்று தனியாக தேசிய பாதுகாப்பு அமைச்சரகம் என்ற ஒரு அமைப்பை அமைத்து இருக்கிறார்கள். ஒரு அமைச்சரைப் போட்டு ஒரு இலாக்காவை அமைத்து இருக்கிறார்கள். இதற்கு என்று ஒரு சிங்கள வெறியரை அமைச்சராகப் போட்டிருக்கிறார்கள். இதற்கு காரணம் என்ன என்று கேட்டால் விடுதலை புலிகளை கூண்டோடு ஒழிக்கவேண்டும். இலங்கையில் இருக்கக்கூடிய தமிழர்களை கூண்டோடு ஒழிக்கவேண்டும். அதுதான் இன்றைக்கு அங்கு ஏற்பட்டு இருக்கக்கூடிய அவசரநிலை ஆகும் என்று அவர்கள் வாதாடுகிறார்கள். அதற்கான காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அது மட்டும் அல்லாமல் இலங்கையில் இருக்கக்கூடிய புத்த பிச்சுகள் தமிழர்களை வேரோடு ஒழிக்கவேண்டும் என்ற உணர்வோடு இன்றைக்கு அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் இருக்கக்கூடிய அரசு பல்வேறு வெளிநாடுகளுக்கு எல்லாம் சென்று பாதுகாப்பு தலைமையமாக கருதப்படுகின்ற திரிகோண மலையை மையமாக வைத்து இராணுவ ஒப்பந்தங்கள் இலங்கைக்கு மிலிடெரி உதவி செய்யவேண்டும் என்று ஒப்பந்தங்கள் மறைமுகமாக போடப்படுவதாக செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. எனவே உங்கள் மூலமாக தெரிவிப்பது எல்லாம், இது இன்றைக்கு நேற்றைக்கு நடைபெறும் சம்பவம் அல்ல. 1956-லிருந்து ஆட்சி மொழிச் சட்டம் சிங்கள மொழி மட்டும் தான் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்று சட்டம் கொண்டு வரப்பட்ட காலத்திலிருந்து 1958, 1961 டட்லி சேனநாயகா பிரதமாராக இருந்தபோதும் 1966, 1972, 1977-லே 4-வது உலகத் தமிழ் மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றபோது ஜாலியன் வாலாபாக் போல நிரபராதியாக இருக்கின்ற தமிழர்கள் எல்லாம் அங்கே படுகொலை செய்யப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே இது தொடர்ந்து வருகிறது. அது மட்டும் அல்ல, புத்தலம் பள்ளி வாசலில் இருக்கும் தமிழ் பேசுகின்ற முஸ்லீம்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள். ஆகவே





தொடர்ந்து அண்மையில் நடைபெற்ற சம்பவங்கள் வரைக்கும் இந்த இனக் கலவரங்கள் தமிழர்களை கூண்டோடு இலங்கையை விட்டு வெளியேற்றவேண்டும், கொல்ல வேண்டும் என்ற காரியங்கள் சிங்கள வெறியர்காளல் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சிர்ல்மேத்திவ் என்ற சிங்கள அமைச்சர் சொல்லியிருக்கிறார், தமிழர்களை எல்லாம் கடலிலே தூக்கி போடவேண்டும்என்று. ஆக இதிலிருந்து தெரிவது என்ன என்று கேட்டால் இலங்கையில் சிங்களரோடு தமிழர்கள் வாழ முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தமிழன் அங்கே வாழ முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை தான் இது தெளிவாக காட்டுகிறது. மாண்புமிகு திரு. நெடுமாறன் அவர்கள் எடுத்துச் சொல்லியது போல் சுய நிர்ணய உரிமைப் பற்றி பேசினால் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் பார்லிமெண்டில் உறுப்பினராக இருக்க முடியாது. தேர்தலில் நிற்க முடியாது. கல்வி வசதி கிடையாது என்று 6-வது சட்டத்தில் திருத்தத்தை கொண்டு வந்து terrorist movement ஐ அடக்குகிறோம் என்பதன் பெயராலே நிரபராதியான தமிழர்கள் அங்கே படுகொலை செய்யப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் இவைகளுக்கு எல்லாம் என்ன பரிகாரம்? இந்த தமிழக அரசு என்ன செய்யவேண்டும்? மத்திய அரசு தமிழர்கள் பாதுகாப்பிற்கு என்ன செய்யவேண்டும் என்ற பிரச்சினையைப் பொறுத்தவரையில் வட்ட மேஜை மாநாடு நடத்தி பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என்று பிரதமர் இந்திரா அவர்கள் ஏற்பாடு செய்தார்கள்.

(முற்பகல் 10-30)

நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய தூதுக் குழுவை இலங்கைக்கு அனுப்பி வைக்கலாம் என்று சொன்னார்கள். நிவாரண நிதி திரட்டி பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்யலாம் என்று சொன்னார்கள். திரு. பார்த்தசாரதியை அனுப்பினார்கள். ஜெயவர்த்தனே தம்பியோடு பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இங்கு இருக்கக்கூடியவர்கள் அந்த பேச்சு வார்த்தைக்கு எதிராக இருக்கக்கூடாது என்று கூட நமக்கு எல்லாம் உபதேசம் செய்தார்கள். ஆனால் நான் கேட்கிறேன். இந்த வட்ட மேஜை மாநாடு இப்போது தான் புதிதாக இலங்கையில் நடைபெறுகின்றதா? 1950 ஆம் ஆண்டு பண்டார நாயகா செல்வா ஒப்பந்தம் வட்ட மேஜை மாநாட்டின் மூலமாகத்தான் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. 1960 ஆம் ஆண்டு டட்லி சேன நாயகா செல்வா ஒப்பந்தம் நடைபெற்றது. அந்த ஒப்பந்தத்தில் கூட்டாட்சியில் ஆரம்பித்து சுய ஆட்சிப்பற்றி பேசப்பட்டு மாவட்ட கவுன்சில் பற்றி பேசப்பட்டு; Regional Autonomy தருவதாகச் சொல்லப்பட்டு இவைகள் எல்லாம் ஒப்பந்தங்கள் போட்டு இன்றைக்கு தூக்கி ஏறியப்பட்டன, அங்கு இருக்கக்கூடிய ஜெயவர்த்தனே பொறுப்பால். அவரே கண்டி

யில் புத்தர் சிலை இருக்கக்கூடிய இடத்தில் அந்த நாட்டுக்கு தமிழும் அதேபோல் சிங்களமும் ஆட்சி மொழியாக ஆவது ஒத்துக்கொள்ளமுடியாது. Regional Autonomy ஒத்துக்கொள்ள முடியாது என்று சிங்கள வெறியர்களை திரட்டி ஒரு பாதயாத்திரை நடத்தியவர் தான் தமிழர்களுக்கு எதிராக இந்த வட்ட மேஜை மாநாடு ஒப்பந்தங்களை கிழித்து எறிந்தவர் தான் இன்றைக்கு இருக்கக்கூடிய ஜெயவர்த்தனே என்பதை தயவு செய்து மறந்துவிடக் கூடாது. இன்னும் ஒன்றை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். நம்முடைய வட்ட மேஜை மாநாட்டின் மூலம் பிரச்சினைகள் தீரப்போவது இல்லை. அதில் எந்தவிதமான சந்தேகமும் வேண்டாம். திரு. பார்த்தசாரதி அவர்கள் தூதுப் போனாலும் பிரச்சினைகள் தீரப்போவது இல்லை. அங்கே இருப்பவர்களுக்கு சுய நிர்ணய உரிமை தந்தால் ஒழிய தமிழர்கள் இலங்கையில் வாழ முடியாது. தனி ஈழம் பெற்றால் ஒழிய தமிழர்கள் அங்கே வாழ முடியாது என்ற நிலைமை தான் இருக்கிறது. ஆனால் இப்போது இவ்வளவு பெரிய படுகொலைகள் நடைபெற்றுள்ளதே இதை தடுப்பது எப்படி? நம்முடைய முதலமைச்சர் நம்முடைய உறுப்பினர்கள் பலபேரை அழைத்துக் கொண்டு டெல்லிக்கு மகஜர் கொடுக்கப் போனார்கள். அந்த மகஜரில் சொன்னார்கள், சர்வதேச பார்வையாளர் குழு ஒன்றை அனுப்பவேண்டும் என்றும் அதற்கு பிரதமர் இந்திரா அவர்கள் வலியுறுத்தவேண்டும் என்றும், அடுத்து இன்னும் ஒன்றைச் சொன்னார்கள். ஐ.நா. மன்றத்தினுடைய பாதுகாப்பு கவுன்சிலில் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையைப் பற்றி பேசவேண்டும் என்று அந்த மனுவில் சொன்னார்கள். நம்முடைய முதலமைச்சர் கொடுத்த மனுவில் இன்னும் ஒன்றையும் சொன்னார்கள். பாலஸ்தீனம் அகதிகள் பிரச்சினையில் மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுத்ததோ? பங்ளாதேச பிரச்சினையில் மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுத்ததோ அதே போன்ற நடவடிக்கையை இலங்கை தமிழர் பிரச்சினையிலும் எடுக்கவேண்டும் என்று சொல்லி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எல்லோரையும் அழைத்துக்கொண்டு டெல்லிக்குப் போய் பிரதமர் இந்திரா அவர்கள்மேல் நம்பிக்கை வைத்து அந்த மகஜரைக் கொடுத்தார்கள். ஆனால் உங்கள் மூலம் கேட்க விரும்புகிறேன், பாதுகாப்பு கவுன்சிலில் இந்தப் பிரச்சினை பேசப்பட்டதா? தென் ஆப்ரிக்கா நீக்ரோ-வெள்ளையர் இன வெறி படுகொலை செய்கிறார்கள் என்பதற்காக ஐ.நா மன்றத்தில் இந்திரா அம்மையார் பேசினார்கள். தென் ஆப்ரிக்காவின் தூதுவர் அலுவலகம் இங்கே கிடையாது. இந்தியாவின் தூதுவர் அலுவலகம் தென் ஆப்பிரிக்காவில் கிடையாது. அரசாங்க உறவை வெட்டி எறிந்து விட்டார். காரணம் நீக்ரோக்களுக்காக. நீக்ரோக்களுக்காக ஐ.நா. மன்றத்தில் பேசினார்கள். பேசக்கூடாது என்று நான் சொல்லவில்லை. இலங்கை தமிழர்கள் பிரச்சினையை பாதுகாப்பு கவுன்சிலில் இந்திய அரசின் சார்பாக பேசப்படவில்லை.





Arafat பிரச்சினை இங்கே பேசப்பட்டது. பாலஸ்தீனப் பிரச்சினை பேசப்பட்டது. ஐ.நா. மன்றத்தின் உறுப்பினராக அல்லாத Arafat ஆனாலும் அவர் பேசுவதற்கு ஐ.நா. மன்றத்தில் அனுமதி கொடுக்கவேண்டும் என்று வாதாடியவர் நம்முடைய பிரதமர் இந்திரா அவர்கள். இவைகள் எல்லாம் உள்நாட்டு விவகாரங்கள் என்று சொல்லி அவர்கள் நிறுத்திவிடவில்லை. ஆனால் இன்னும் ஒன்றையும் நான் தெளிவாக சொல்ல விரும்புகிறேன். இராணுவத்தை அனுப்பவேண்டும் என்று நாங்கள் சொல்வது அங்கே இருக்கக்கூடிய இலங்கையை கைப்பற்றுவதற்கு அல்ல. 'அக்ரஷனுக்காக' அல்ல. இன்றைக்கு ஒரு நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தலைவர் அவர்களே, சைப்ரஸ் தீவு உங்களுக்குத் தெரியும். நீங்கள் பல்வேறு நாடுகளுக்குப் போய் வந்தவர்கள். சைப்ரஸ் தீவில் துருக்கியர்கள் வாழ்கிறார்கள். கிரேக்கர்கள் வாழ்கிறார்கள். அங்கே வாழக்கூடிய துருக்கியர்கள் மைனாரட்டி. கிரேக்கர்கள் மேஜராட்டி. மேஜாரட்டியான கிரேக்கர்கள் மைனாரட்டியான துருக்கியர்களை இனப் படுகொலை செய்தபோது ஐ.நா. மன்றத்தினுடைய படை அன்றைக்கு அங்கே அனுப்பப்பட்டிருக்கிறது. சமாதானப்படை அனுப்பப்பட்டிருக்கிறது. அதைப் போலவே 1953-ல் கொரியாவுக்கு ஐ.நா. மன்றத்தின் படை அனுப்பப்பட்டிருக்கிறது. அதேபோல் ஐ.நா. மன்றத்தின் படை காங்கோவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஐ.நா. மன்றத்தின் படை சைப்ரஸ்க்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தோனேசியாவுக்கு ஐ.நா. மன்றத்தின் படை அனுப்பப்பட்டிருக்கிறது. அமைதி பாதுகாப்புக்காக. ஆனால் இன்றைக்கு ஐ.நா. மன்றம் தன்னுடைய படையை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்று கூட இந்திய அரசின் சார்பாக கேட்கவில்லை. சரி இந்திய அரசின் இராணுவத்தை அனுப்பக்கூடாதா என்று கேட்டால் இதே சைப்ரஸ் பிரச்சினையில் துருக்கி இராணுவத்தை அனுப்பி தங்களுடைய மக்கள் சைப்ரஸ் தீவில் படுகொலை செய்யப்படுவதை தடுத்து நிறுத்தி இருக்கிறது. இதே இந்திய அரசு பங்களாதேஷ் விவகாரத்தில் இராணுவத்தை அனுப்பியிருக்கிறது. உலக யுத்தம் வரும் என்று சிலர் சொல்கின்ற நேரத்தில் ஆளும் கட்சியைச் சார்ந்த திரு. முத்தண்ணன் அவர்கள் கூட சொன்னார்கள்; பயில்வானுக்கு பயந்து கொண்டு எவனும் கல்யாணம் செய்யாமல் இருக்கமுடியாது. இராமேஸ்வரத்தின்மீதுஜெயவர்த்தனே நாளைக்கு படை எடுப்பார் என்றால் உலக யுத்தம் வந்துவிடும் என்று இந்தியா அமைதியாக இருக்க முடியாது. நாளைக்கு டெல்லியை பாகிஸ்தான் காரன் படை எடுக்க வருகிறான் என்றால் உலக யுத்தம் வந்து விடும் என்று இந்தியா அமைதியாக இருக்கமுடியாது. நாளைக்கு கல்கத்தாவை சீனாக்காரன் படை எடுத்தால் உலக யுத்தம் வந்துவிடும் என்று அமைதியாக இருந்து விட முடியாது. ஈரான், ஈராக் யுத்தம் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. உலக யுத்தம் வந்து

நிலையிலே ஆபீஸர்கள் அதிகமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் கீழே இருக்கின்ற ஃபீல்ட் ஆஃபீஸர்கள் போதிய அளவுக்கு இருக்க வேண்டும். அப்படி இப்போது இல்லை. எனவே குற்றங்களைச் சரியாகக் கண்டுபிடிக்க முடியாது.

(முற்பகல் 11–40.)

மேலும் இப்போது காவலர்களுக்குச் சரியான வீட்டுவசதி இல்லை. இரவிலேயும், மற்ற நேரங்களிலும் பணியாற்றுகின்ற நிலையில் அவர்களுக்கு போதிய டி.ஏ., பேட்டா ஆகியவை கிடைக்கின்ற நிலைமை இல்லை. அவர்களுடைய வருமானத்தைப் பெருக்க வேண்டும். அப்படி பெருக்காத காரணத்தால் தான் எங்கே வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் வருமானத்தைத் தேடி தங்களுடைய குடும்பத்தைச் சமாளிக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் காரணத்தால் என்ன என்ன காரியங்கள் எல்லாமோ நடக்கின்றன. இருக்கின்ற அத்தனை போலிஸ் ஸ்டேஷனிலும் லஞ்சம் வாங்குவதில் தவறுவதில்லை

* * * *

* * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதை நீக்கும்படி உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு) அன்பார்லிமென்டரி என்பதற்காக அல்ல. சமுதாயத்தைப் பாதிக்கக்கூடிய எந்த வாசகம் சொன்னாலும் அது சில நேரங்களிலே நீக்கப்படுகிறது. சில நேரத்திலே ரொம்ப வெளிப்படையாக சொல்லக்கூடாது என்று நேற்று நீங்கள் விரும்பிய மாதிரி நானும் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) ஆதாரத்தோடு பேசவேண்டும். ஆதாரமில்லாமல் வேக் அலிகேஷன்ஸ் எதுவும் சொல்லக் கூடாது. ஆகவே அவையெல்லாம் நீக்கப்படுகின்றன.

திரு. ஆர். தியாகராஜன் : என்னுடைய நோக்கம் குறை சொல்ல வேண்டுமென்பது அல்ல. எல்லா அரசு காலத்திலும் இருந்தது தான். காங்கிரஸ் அரசிலும் இருந்தது என்றுதான் நான் சொன்னேன். சாதாரண கிராமத்திலே இருக்கக்கூடிய மக்களிடத்திலே போலிசார் நடந்துக்கொள்ளக்கூடிய விதங்களை முதலமைச்சருக்குத் தெரிவிக்க வேண்டுமென்றுதான் சொல்கிறேன். முதலமைச்சருக்குத் தெரிந்தால்தான் அதிகாரிகளைக் கூப்பிட்டு கண்டிக்க முடியும், இல்லையா? அதற்காக சொன்னேனே தவிர, உங்கள் காலத்திலேதான் தப்பு நடந்தது, அதற்கு முன்னால்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





இந்தப் பிரச்சினையிலே உள்ள முக்கியத்துவத்தைக் கருதி, இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையிலே உள்ள முக்கியத்துவத்தைக் கருதி; இதைப்பற்றி விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்ற ஜூன் மாதம்தான் இலங்கையில் நடந்த இனக் கலவரத்தில் ஆயிரக் கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டு, இலட்சக் கணக்கான தமிழ் மக்கள் வீடிழந்த அவலச் செய்தியைக் கேட்டோம்.

ஆனால், சமீபத்தில் இலங்கையிலே சுணகம், மல்லகம் ஆகிய இடங்களில் நிரபராதிகளான தமிழர்களைக் கொன்று இரத்தக் களரியை ஏற்படுத்தியிருப்பது சரியா? இந்திய அரசு தெரிவித்துள்ள கருத்துக்களைக் கூட, இலங்கை அரசைப் பொறுத்தவரையில் நட்புறவைப் பாதிக்கக் கூடும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது. இதிலிருந்து நேச மனப்பாண்மை என்பது இலங்கை அரசுக்கு இல்லை என்பது திட்டவட்டமாகத் தெளிவாகிறது.

எனவே, இனியும் இந்தியா தாமதமாக இருந்துகொண்டிருந்தால் அங்கே வாழுகின்ற தமிழர்களின் நிலைமை என்னவாகும் என்றே தெரியாது. பத்திரிகைகளில் நூறு பேர்கள் இறந்ததாகச் சொல்கிறார்கள். ஆனால் சரியான விவரங்கள் கிடைக்கவில்லை. ஏனென்றால், இலங்கையில் பத்திரிகைத் தணிக்கையை அமல் செய்கிறார்கள். எந்த நிகழ்ச்சி அங்கே நடந்தது என்று அறிய முடியவில்லை.

அதைவிட முக்கியமான பிரச்சினை, தமிழர்களை ஒழிக்க வேண்டுமென்பதற்காகப் புதுச் சட்டத்தைப் போட்டிருக்கிறார்கள். அதன்படி, வாரண்ட் இல்லாமலேயே யாருடைய வீட்டை வேண்டுமானாலும் சோதனை போடலாம்; யாரையும் கைது செய்யலாம்; அவர்களைக் கொன்றால்கூட பிரேதப் பரிசோதனை கூட நடத்த வேண்டாமென்று சொல்லுகின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்சினையை மிகத் தெளிவாகவும், தீவிரமாகவும் ஆராய வேண்டியிருக்கிறது.

மத்திய அரசு நடவடிக்கை எடுப்பதற்கு நமது மாநில அரசு தன்னுடைய பணிகளைச் சிறப்பாக செய்ய வேண்டிய கட்டம் இது. நமது மாண்புமிகு முதலமைச்சரவர்கள்கூட வெளி நாட்டுக்குச் செல்லவிருக்கிறார்கள். அதற்கு முன்பு, நாளைக்கோ அல்லது நாளை மறுநாளோ உடனடியாக டெல்லிக்கு நேரடியாகச் சென்று..........................

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் இப்பொழுது வெளிநாடு செல்வதாக இல்லை.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : எனவே, மாண்புமிகு முதல்வரவர்கள், நேரடியாகச் சென்று பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து, தகுந்த நடவடிக்கை எடுத்து, இலங்கைவாழ் தமிழர்களை காப்பாற்றுவதற்கான நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்பதற்காக, அதைப்பற்றி இன்னும் விரிவாகப் பேச வேண்டுமென்பதற்காக இன்றைய இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

திரு. பொ. விஜயராகவன் : தலைவர் அவர்களே, இன்றைக்கு இலங்கையில் நடைபெற்றுகொண்டு வருகின்ற காரியங்களைப் பார்க்கின்றபோது குறிப்பாக சிறுபான்மை இனமக்களான தமிழர்கள் தான் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகின்றது. இராணுவத்தினரே இந்த அத்துமீறலை நடத்தி, அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள். கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய கணக்கு எல்லாம் 10 பேர் இறந்து போனார்கள், 30 பேர் இறந்து போனார்கள் என்பதுதான் என்றாலும் கூட விமானப்படை விமானத்திலே இருந்து தாக்குதலை நடத்தி இருக்குமேயானால் எத்தனை பேர் இருந்திருப்பார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். பலநூற்றுக்கணக்கான பேர் இறந்துவிட்டனர் என்ற செய்தியைத்தான் நாம் அறிய வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. வட்டமேஜை மாநாடு நடத்தி அங்கே அமைதியை ஏற்படுத்தி, சுமுகமான சூழ்நிலையைக் கொண்டுவருவதற்குப் பதிலாக வட்டமேஜை மாநாட்டை ஒத்திப் போடுவது மட்டுமல்ல. இன்றைக்கு அங்கே ஸ்ரீலங்காவிலே இருக்கக்கூடிய பிரைம் மினிஸ்டர் இந்தியாவிற்கு எதிரான கருத்துக்களைப் பரப்பி வருகிறார். இந்திய அரசாங்கம் வருத்தம் தெரிவித்ததைக் கூட, கவலையோடு இந்திய அரசாங்கம் கண்டித்ததைக் கூட இன்றைக்கு மிக மோசமான அளவுக்கு அவர்கள் அதை எடுத்துக்கொண்டு இந்தியாவிற்கு எதிரான விஷமப் பிரச்சாரத்தைச் செய்துகொண்டு வருகிறார்கள். திரிகோணமலையிலே மிக வேகமாக அமெரிக்கா ராணுவத் தளத்தை அமைக்கின்ற முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றது. இவை எல்லாம் எதைக் காட்டுகின்றன என்று சொன்னால் ஒட்டு மொத்தமாக அங்கே இருக்கக்கூடிய தமிழ் மக்களை, சிறுபான்மை மக்களை அழித்துவிடவேண்டும் என்பதற்காக மட்டுமல்ல; இந்திய நாட்டினுடைய தெற்கு எல்லையிலே இந்திய நாட்டின் சுதந்திரத்திற்கும் இந்திய நாட்டினுடைய அமைதிக்கும் ஆபத்து



விளைவிக்கின்ற ஒரு செயலில் அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியாது. அவர்கள் எங்கோ ஒரு திசையில் திட்டமிட்டுச் சென்று கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக இந்திய விரோதச் செயலில் தமிழர்களைக் கொன்று குவிக்கின்ற ஒரு செயலில் அவர்கள் திட்டமிட்டு இறங்கிவிட்டார்கள். இந்த நிலைமையில் நாம் கண்ணை மூடிக்கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஆகவே தமிழக அரசின் சார்பிலே மத்திய அரசிடத்திலே சொல்லி அவர்கள் எந்த அளவுக்கு உடனடியாக இந்த விஷயத்திலே நடந்து கொள்ள வேண்டுமோ அப்படி நடந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அவர்கள் எப்படிச் செய்வார்களோ தெரியாது. அது உசிதமானதாக இருந்தாலும் எப்படி இருந்தாலும் நம்முடைய தேவை என்னவென்றால் உடனடியாக இந்த நிலைமைகள் தடுத்து நிறுத்தப்பட்டாக வேண்டும் என்பதுதான். இந்த நிலைமை உடனடியாக அடக்கப்பட்டாகவேண்டும். அந்தப் பகுதியிலே வாழ்கின்ற தமிழ் மக்களுடைய உயிருக்கும் உடமைக்கும் உத்தரவாதம் கொடுக்க வேண்டும்.

எனவே இதைக் கருத்தில் கொண்டு உடனடியாக இந்திய அரசுக்கு இதுபற்றித் தெரியப் படுத்துவதற்கான எல்லா முயற்சிகளிலும் இந்த அரசு ஈடுபடவேண்டும். அந்த வகையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக ஈடுபடவேண்டும். இந்திய நாட்டுக்கும், அண்டை நாடான இலங்கைக்கும் இடையே ஏற்பட்டிருக்கக்கூடிய இந்தப் பிரச்சினை காரணமாக இந்தியாவினுடைய எல்லைக்கே ஆபத்து வருகின்ற அளவில் குறிப்பாக தமிழ்நாட்டிற்கே ஆபத்து வருகின்ற அளவில் பிரச்சினைகள் இருப்பதன் காரணத்தால் இதுபற்றிய பல்வேறு விஷயங்களை விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை எல்லாம் ஒத்திவைத்துவிட்டு இதுகுறித்து விவாதிக்கவேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சிலோனிலே தமிழ்ச் சமுதாயத்தைச் சேர்ந்த சகோதர, சகோதரிகள் கொன்று குவிக்கப்படுகின்ற நிலையைக் காண்கிறோம். அங்கே வாழ்கின்ற தமிழ் மக்கள் சிறுபான்மை மக்கள். அப்படிப்பட்ட சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டிய அரசு, அந்த சிறுபான்மை மக்களைக் கொடுமைப்படுத்துகின்றது ; அந்த மக்களை ராணுவம் சுட்டுப் பொசுக்குகின்றது. எனவே இது மிகவும் கண்டிக்கத்தக்க ஒன்றாகும். மனித ரத்தத்தையே உறைய வைக்கும் அளவுக்கு, நெஞ்சை நடுங்க வைக்கின்ற அளவுக்கு கோரக் கொலைத் தாண்டவம் நடக்கின்றது. அந்தக் கோரக் கொலையைத் தடுத்து நிறுத்து

கின்ற அளவிலே மனிதாபிமானத்தோடு இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக அங்கே தமிழ்ச் சமுதாயம், சிறுபான்மை மக்கள் வதைபடுவதை இந்த அரசு கண்டித்து, இந்திய அரசின் மூலமாகத் தகுந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

சிலோனில் இருக்கின்ற தூதரகத்திலே தமிழகத்தின் சார்பாக ஒரு தூதர் இருந்தால் நிச்சயமாக இந்த மாதிரி நிலைமைகள் ஏற்படாமல் தடுக்க முடியும். ஆகவே இன்றைக்கு தமிழ் மக்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளையும், கோரக் கொலைகளையும் தடுத்து நிறுத்துகின்ற வகையிலே உடனடியாக நமது தமிழக அரசு இந்திய அரசை அணுகி தகுந்த நடவடிக்கை எடுத்து இப்பிரச்சினைக்கு முறையாகத் தீர்வு காண முயல வேண்டும். வட்டமேஜை எல்லாம் இன்றைக்கு உடைந்த மேஜையாக ஆகி விட்டது. ஆகவே இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து பூரணமாக விவாதிக்க வேண்டும் என்று நான் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, இன்றைக்கு இலங்கையிலே இலங்கை அரசினுடைய இராணுவம் கட்டவிழ்த்து விடப்பட்ட காரணத்தினால் இலங்கையிலே வாழ்கின்ற தமிழ் மக்கள் விமானப் படையினரால் சுட்டு வீழ்த்திக கொல்லப்பட்டார்கள். இலங்கையிலே இருக்கிற தமிழ் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் சீருடை அணிந்து பஸ் நிலையத்திலே நின்று கொண்டிருந்த பொழுது, மிருகத்தனமாக விமானப் படையைச் சேர்ந்தவர்கள் சுட்டு வீழ்த்தியிருக்கிறார்கள். பத்திரிகைச் செய்தி நமக்கு ஓரளவுக்குக் கிடைத்தாலும் அதிலே முழுமையாக செய்திகள் தரப்படவில்லை. ஒரு பத்திரிகையைப் பார்த்தால் 10 பேர்கள் என்று சொல்கிறார்கள். இன்னொரு பத்திரிகையிலே 100 பேர்கள் என்று சொல்கிறார்கள். விமானப் படை தாக்கி 100 பேர்கள் தான் இறந்திருப்பார்கள் என்கின்ற அளவுக்கு, முடிவாகக் கூட நமக்கு அண்டை நாடாகிய, நமது தமிழ் மாநிலத்திலேயிருந்து 20, 30 கிலோ மீட்டர் தூரத்திலே, இலங்கையிலே நடக்கின்ற செய்தி நமக்குத் தெரியாத அளவுக்கு, அங்கே பத்திரிகைச் சுதந்திரம் இல்லையென்று சொல்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, இலங்கையிலே வாழ்கிற தமிழர்களை அழித்து ஒழித்து விட வேண்டுமென்பதற்காகவே புதியதொரு இலாகாவை அந்த அரசு ஏற்படுத்தி இருக்கிறது. மத்திய அரசு முயற்சியின் மூலமாக, வட்ட மேஜை மகாநாடு தொடர்ந்து நடந்தாலும் அந்த நிகழ்ச்சியை ஒத்திப் போட்டுவிட்டு, அந்த நாட்டின் பாதுகாப்பு என்பதன் பேரில் ஒரு அமைச்சரை ஏற்படுத்தி, அங்கே பாதுகாப்பு நிதி வசதி செய்து கொண்டிருக்



கிறார்கள். தமிழ் இனத்தையே இலங்கை மண்ணிலிருந்து ஒழித்து விட வேண்டுமென்று செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு முன்னால் நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் இந்த மன்றத்திலேயும் விரிவாக விவாதித்திருக்கின்றோம். ஜூன் மாதத்திலே நடந்த இனப் படுகொலையில் இலட்சக்கணக்கான தாய்மார்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். தமிழ் இனத்தைச் சேர்ந்த பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள் ; பெண்களை எல்லாம் கடலிலே வீசி எறிந்தார்கள் என்ற செய்தியைக் கேட்டுத் தமிழர்களும், தமிழகத்திலே இருக்கிற அனைத்துக் கட்சிகளும் ஒட்டு மொத்தமாக ஒரு போராட்டத்தை இந்தத்தமிழகத்திலே நடத்திக் காட்டி அதற்கு மேலும் தமிழக முதல்வர் அவர்கள், அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துச் சென்று மத்திய அரசு பிரதம அமைச்சர் இந்திரா அம்மையார் அவர்களிடம் ஒரு மனுவைக் கொடுத்தார்கள். அந்த மனுவிலே சொல்கிற பொழுது மத்திய அரசு வங்காள தேசத்திற்கு என்ன நடவடிக்கை எடுத்ததோ, அந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஒரு மனுவைக் கொடுத்தார்கள். அந்த மனுவிலே கையெழுத்துப் போட்டவர்களிலே நானும் ஒருவன். இந்திரா அம்மையாரிடம் பேசியபொழுது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். வங்காள தேசத்திலே எடுக்கப்பட்ட நடவடிக்கையை ஏன் எடுக்கக்கூடாது என்று கேட்டபொழுது, Geography is different என்று சொன்னார்கள். என்ன பூகோள வித்தியாசம் இருக்கிறது என்று தெரியவில்லை. இருந்தாலும் திரு. ஜி. பார்த்தசாரதி அவர்களை அனுப்பி வட்டமேஜை மாநாடு மூலம் தீர்வு கண்டு விடுவோம் என்று பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

இலங்கையிலே படுகொலை நடத்திய நேரத்திலே, ஐக்கிய நாட்டு சபையிலே பேசிய இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இலங்கையிலே படுகொலை செயயப்பட்ட அந்த நிகழ்ச்சியைப் பற்றி பேசாமல் மற்ற உலக விவகாரங்களையெல்லாம் பேசியிருக்கிறார்கள். அந்த நிகழ்ச்சியைப் பற்றி பேசாமல் இருந்தது, தமிழ் மக்கள், தென் பிராந்தியத்தில் இருக்கிறார்கள் என்ற அந்தப் பாகுபாட்டோடு அந்த அம்மையார் வைத்திருக்கிறார்களோ என்கின்ற அளவுக்கு அச்சம் ஏற்படுகிறது. உலக யுத்தமாக மாறிவிடும் என்று சொல்கிறார்கள். வங்காள தேசத்திலே அவர்கள் நடவடிக்கை எடுத்த பொழுது உலக யுத்தம் வராதது இன்றைக்குத் தமிழ் மக்களைக் காப்பாற்றுவதற்காக நடவடிக்கை எடுத்தால் உலக யுத்தம் வந்து விடுமோ என்ற காரணத்தை மத்தியிலே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற இந்திரா அம்மையார் சொல்வார்களானால் அது வெறும் கண் துடைப்பாகும். தொடர்ந்து நிகழ்ச்சிகள் நடந்து கொண்டே இருக்கின்றன. சென்ற முறை நிகழ்ச்சிகள் நடந்த பொழுது தமிழகத்திலே இருக்கிற மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றவர்களை, கப்பல் படையினர் பிடித்து அடித்து நொறுக்கியிருக்கிறார்கள் என்ற செயதி

தமிழக அரசுக்கும் தெரியும், மத்திய அரசுக்கும் தெரியும். ஆகவே
தொடர் நடவடிக்கையாக இலங்கை அரசு இந்திய அரசை
எதிர்த்துச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கே இருக்கிற
நமது தூதரகத்தைத் தாக்கியபொழுது, தமிழ் மக்களை மட்டும்
தாக்கியிருக்கிறார்கள். இந்திய அரசை எதிர்த்து நடவடிக்கை
இல்லை என்று மத்திய அரசு நினைக்குமானால் தமிழ் மக்களை
காப்பாற்றக் கூடாது என்ற எண்ணத்தில் அவர்கள் இருந்தார்
களே தவிர, இலங்கை அரசு செய்கிற ஒவ்வொரு செயலும
இந்திய அரசுக்கு விரோதமாக செய்கின்ற பொழுது கூட சமர்
தானம் பேசிக் கொண்டிருப்பார்களானால் தமிழகத்தில் இருக்
கிற தமிழ் மக்களை மட்டுமல்ல, இந்தியாவில் இருக்கிற தமிழ்
மக்களையும் காப்பாற்றுகின்ற நடவடிக்கைகளிலே மத்திய அரசு
இல்லை என்ற நினைப்புதான் நமக்குத் தோன்றுகிறது.
நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

ஆகவே, தமிழக மக்கள் சார்பாக அனைத்துக் கட்சிகள் சார்
பாக, தமிழக முதல்வர் அவர்கள் மத்தியில் ஆட்சிப் பொறுப்பி
லிருக்கிற இந்திரா அவர்களை வலியுறுத்தி என்ன நடவடிக்கை
எடுத்தாலும் இங்குள்ள தமிழ் மக்களைக் காப்பாற்றுவதற்கு
உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்த வேண்டும்.
இதில் அரசியல் பார்க்க வேண்டாம். தமிழ் இனமே அழிகின்ற
நேரத்தில் அரசு சார்பாக என்று எடுத்துக் கொள்ளாமல் அனைத்
துக் கட்சிகள் சார்பாக நமது உணர்வுகளை மத்திய அரசுக்கு
தமிழக முதல்வர் அவர்கள் கடுமையாக எடுத்துக் கூற வேண்டு
மென்று கேட்டுக் கொண்டு, இந்தப் பிரச்சினை பற்றி இன்னும்
விரிவாக விவாதிப்பதற்கு இந்த அவையினுடைய இதர அலுவல்
களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10—50)

திரு.. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத்
தலைவர் அவர்களே, கடந்த இரண்டு நாட்களாகவே இலங்கைத்
தீவிலே நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி நமக்கு வருகிற செய்தி
கள் அதிரச்சியும், வேதனையும் நெஞ்சை உருக்குவதுமாக இருக்
கின்றன. கடந்த ஜூலை மாதத்திலிருந்து நடைபெறுகிற அந்த
பயங்கர நிகழ்ச்சிகள் இன்றைக்கு ஓரளவிற்கு, வட்ட மேஜை
பேச்சு வார்த்தைகள் மூலமாக குறைந்து சுமூகமான சூழ்நிலை
வரும் என்று நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற இந்த நிலை
யில், வெந்தப் புண்ணில் வேலைப் பாய்ச்சுவதைப் போல கடந்த
இரண்டு நாட்களாக வருகிற செய்திகள் நமக்கு மிக்க வேதனை
யூட்டுகின்றன. எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்
கள் எல்லோரும் எடுத்துச் சொன்னதைப் போல யாழ்ப்பாணம்
சந்தைக்குப் போய் வந்த மக்கள் மீது இலங்கை இராணுவத்தின
ரும், விமானப் படையினரும் வெறித்தனமாக சுட்டதன் காரண



மாக கர்ப்பிணிப் பெண்கள் உட்பட பலர் இன்றைக்கு இறந்து
போயிருக்கிற சோகமான செய்திகள் நம்மைப் பெரிதும் வாட்டு
கின்றன. பொதுவாகவே இந்தப் பிரச்சினை தமிழர்கள் பிரச்
சினையாக மட்டுமல்லாமல், இந்தியர் பிரச்சினையாக மட்டுமல்
லாமல், மனிதாபிமானத்திலே நம்பிக்கைக் கொண்டுள்ள யாருமே
ஒப்புக் கொள்ள முடியாதது; சகிக்க முடியாததாகும். அந்த
அளவிற்கு கொடுமைகள் அந்தத் தீவிலே நடந்து கொண்டிருக்
கின்றன. இந்த மாமன்றத்தைப் பொறுத்த வரையில் அரசியல்
வேறுபாடின்றி நம்முடைய அருமைத் தமிழர்கள் அங்கே படு
கொலை செய்யப்படுவதை கண்டித்து பல்வேறு காலக் கட்டங்
களில் குரல் கொடுத்திருக்கிறோம். இதைத் தொடர்ந்து நடப்
பதை நாம் நிச்சயமாக அனுமதிக்க முடியாது என்பதில் யாருக்கும்
இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது. நம்முடைய தமிழக
முதலமைச்சர் அவர்களும், இந்த அரசும் இந்தப் பிரச்சினையில்
எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கைகளுக்கு இந்திய தேசிய
காங்கிரஸ் கட்சி நிச்சயமாக தன்னுடைய ஆதரவைக் கொடுக்கும்
என்று உறுதி கூற விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசிய
உறுப்பினர்கள் சொன்னதைப் போல, தேவைப்படுமேயானால்
பாரதப் பிரதம அமைச்சரிடம் இங்கேயிருந்து எல்லாக் கட்சி
களும் அடங்கிய ஒரு தூது கோஷ்டி நம்முடைய முதலமைச்சர்
அவர்களின் தலைமையில் சென்று இந்தப் பிரச்சினையை வலி
யுறுத்துவது பொருத்தம் என்று கருதுவார்களானால் அந்த
முயற்சியை அரசு எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்ல விரும்பு
கிறேன்.

பொதுவாகவே எங்கேயெல்லாம் மனிதாபிமானம் பாதிக்கப்
படுகிறதோ, மனிதர்கள் படுகொலை செய்யப்படுகிறார்களோ,
சமாதானத்திற்கு சாவு மணி அடிக்கப்படுகிறதோ அதற்கெல்லாம்
குரல் கொடுக்கிற நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் நிச்சய
மாக இந்தப் பிரச்சினையில் அசட்டையாக இருக்க மாட்டார்கள்.
பல்வேறு காலக் கட்டங்களில் தொடர்ச்சியாக நடவடிக்கை
எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்தப் பிரச்சினை முடிந்து
எதிர்காலத்தில் நம்முடைய தமிழர்கள் சுமுகமாக வாழ வேண்டு
மென்பதில் மிக அக்கறையாக இருக்கிறார்கள். ஆகவே இந்தப்
பிரச்சினையில் இங்கே கொடுக்கிற குரல்கள் மத்திய அரசின்
காதுகளை எட்டும் என்பதோடு, இந்தப் பிரச்சினையில் உடனடி
யாகத் தீர்வு காண வேண்டும் என்பதில் நாம் மிகுந்த அக்கறை
யுடையவர்களாக இருக்கிறோம். எனவே இதுபோன்ற பல்வேறு
பிரச்சினைகளைப் பேசவிருக்கிற காரணத்தால் இந்தப் பேரவை
யின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிச்
பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற இரண்டு நாட்களாக
இலங்கையின் யாழ்ப்பாணம் பகுதியில் அங்கே வாழ்கிற தமிழர்
களுக்கு எதிராக சிங்கள இராணுவத்தினர் ஈடுபட்டிருக்கிற வெறி

யாட்டத்தின் மூலமாக, கலவரங்கள் வாயிலாக ஏற்பட்ட சூழ்நிலையை ஒட்டி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய உணர்வுகளை வெளியிட்டு இருக்கிறார்கள். இலங்கை வாழ் தமிழர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதிலும், அவர்களுக்கு வாழ்வு உரிமை அளிக்க வேண்டும் என்பதிலும் இந்த அவை அவ்வப்போது அக்கறை கொண்டு, அவையிலே உள்ள அத்தனைக் கட்சிகளுடைய சார்பாகவும், உணர்வுகளை வெளிப்படுத்தி இருப்பதோடு, என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதற்கான காரண காரிய விளக்கங்களோடு கூடிய கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் அவ்வப்போது வழங்கி வந்திருக்கிறார்கள்.

இலங்கையில் கடந்த ஆண்டு சூலை, ஆகஸ்ட், திங்களில் சிங்கள இனவெறியர்களும், சிங்கள இராணுவத்தினரும், சிங்கள காவல் துறையினரும், இலங்கைவாழ் தமிழர்களுக்கு எதிராக கலவரத்தில் ஈடுபட்டனர். அப்பொழுது பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள். தமிழரின் கடைகள் சூறையாடப்பட்டன. தமிழர்களின் வீடுகள் கொள்ளையிடப்பட்டு தீ வைக்கப்பட்டன இந்தியக் குடியுரிமை பெற்றவர்கள் கொலை,கொள்ளை போன்ற பேரவதிகளுக்கு உட்பட்டனர். இந்தியாவைச் சேர்ந்த வங்கிகள் தாக்கப்பட்டன. பல இலட்சக்கணக்கான தமிழர்கள் வீடு இழந்து, வாழ்க்கை வசதிகள் இழந்து, வெவ்வேறு இடங்களுக்கு ஓடி அலைந்து திரிந்து அனாதைகளாயினர்.

அப்பொழுது தாய்த் தமிழகத்திலுள்ள தமிழ் மக்கள் அனைவரும் எல்லா வேறுபாடுகளையும் மறந்து, ஒருமித்த உணர்வோடு ஒன்று திரண்டு எழுந்து, இலங்கை வாழ்த் தமிழர்களுக்கு எல்லா வகையிலும் பேதமற்ற வாழ்வுரிமைகளும், பாதுகாப்பும் அளிக்க வேண்டும் என்று ஒருமித்த குரல் எழுப்பினார்கள். தமிழகச் சட்டமன்றப் பேரவையும், மேலவையும் மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்து, இந்தியப் பிரதமர் அவர்கள் மனிதத் தன்மையைக் காப்பாற்றும் அடிப்படையிலும் இந்திய அரசின் பொறுப்புணர்ச்சி, கடமையுணர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையிலும் நேரிடையாகத் தலையிட்டு நியாயத்தையும்அமைதியையும் நிலைநாட்டவேண்டும் என்று கேட்டுக்கொண்டும், உலக அமைதியையும் உலக நாடுகளிலுள்ள சிறுபான்மையோரின் அடிப்படையுரிமைகளையும் காப்பாற்றும் பொறுப்பைப் பெற்றிருக்கிற ஐக்கிய நாடுகள் அவை தலையிட்டுக் கடமையை ஆற்ற வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொண்டும் தீர்மானங்களை நிறைவேற்றி உரியவர்களுக்கு அனுப்பி வைத்தன.

இந்தியப் பிரதமர் அவர்கள் பல்வேறு வகையான முறையான முயற்சிகளை மேற்கொண்டும் சிறப்புப் பிரதிநிதியான திரு. ஜி. பார்த்தசாரதி அவர்கள் மூலம், இலங்கையில் சமரச சுத்த நன்னெறி வழிப்பட்ட ஏற்பாடுகளைச் செய்தார்கள். அவற்றின்





காரணமாக ஓரளவுக்கு அமைதி ஏற்படவும், இலங்கையிலுள்ள எல்லாத் தரப்பினரும் கூடிக் கலந்து பேசி, சுமூகமாக ஒருமித்த ஒரு முடிவு காண வட்ட மேஜை மாநாடு கூட்டப்படவும் ஆன நிலைமைகள் உருவாகின. இந்த முயற்சிகளெல்லாம் நல்ல நிலைமையை நிலையாக உருவாக்கும் என்ற நம்பிக்கையோடு நாம் இருந்து வந்தோம். வட்ட மேஜை மாநாடு திடீரென்று மே திங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது என்ற செய்தி நமக்கெல்லாம் மிக்க வருத்தத்தையும், வேதனையையும் அளித்தது.

இந்த நிலையில் இலங்கை சிங்கள வெறிபிடித்த இராணுவத்தினர் மீண்டும் இலங்கை வாழ் தமிழர்களுக்கு எதிரான வெறியாட்டங்களிலும், கலவரங்களிலும் ஈடுபட்டிருக்கின்றனர் என்ற செய்தி நமக்கு பேரதிர்ச்சியையும் துயரத்தையும் ஏற்படுத்தியிருப்பதோடு, கொந்தளிப்பான நிலையை உருவாக்கும் தன்மையையும் உண்டாக்கி இருக்கிறது.

தமிழர்கள் மிகையாக வாழும் யாழ்ப்பாணம் அருகில் உள்ள சுன்னாகம் நகரத்தில் சந்தைக்கூடத்திற்கு அருகில் சிங்கள இராணுவத்தினர் 28—3—1984 அன்று வெறியாட்டம் ஆடி பாமர மக்களைச் சுட்டுத்தள்ளியிருக்கின்றனர். அங்கேயுள்ள, தமிழர்கள் சுட்டார்கள் என்றும் அவர்களை எதிர்க்கின்ற அளவுக்கு அந்தப் பகுதிகளில் இராணுவத்தினர் சுட்டார்கள் என்றும் கூறப்படுகின்றது. இருப்பினும் சிங்கள இராணுவத்தினருக்கு, காயம் எதுவும் ஏற்படவில்லை என்றும் சிங்கள இராணுவத்தினர் யாரும் பாதிக்கப்படவில்லை என்றும் செய்திகள் கூறப்பட்டிருக்கின்றன. இது தொடர்பாக இலங்கை அரசு 10 பேர்கள் தான் துப்பாக்கிச் சூட்டில் இறந்துபட்டனர் என்று அறிவித்திருந்தாலும் வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்கள் மூலம் வந்துள்ள செய்தி 30 பேர்களுக்கு மேல் துப்பாக்கிச் சூட்டில் இறந்துபட்டனர் என்றும் நூற்றுக்கணக்கானவர்கள் காயம் அடைந்தனர் என்றும் அவர்களில் 25 பேர்களின் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கின்றன என்றும் கூறுகின்றன. மல்லகம் என்ற இடத்திலும் இராணுவத்தினரின் வெறியாட்டம் நடைபெற்றதாகச் சொல்லப்பட்டுள்ளது.

தமிழர்கள் வாழும் பகுதிகளில் சிங்கள இராணுவத்தினர் வெறித்தன்மையோடு சுற்றித் திரிந்து கொண்டிருக்கிறார்கள் என்றும், கண்ணில் பட்டவர்கள் அடித்து, உதைத்து இழுத்துச் செல்லுகின்றனர் என்றும், 40 பேர்களை கைது செய்து விசாரணைக்கு அழைத்துச் சென்றுள்ளனர் என்றும் அந்தச் செய்தி கூறுகிறது.

கலவரம் காரணமாக இலங்கைக்கும், தமிழ் நாட்டிற்கும் இடையேயான விமானப்போக்குவரத்து ரத்து செய்யப்பட்டிருக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 மார்ச் 30

இந்திய வெளிநாட்டுத் துறையைச் சார்ந்த அதிகாரி ஒருவர் இலங்கையில் ஏற்பட்டுள்ள கலவர நிலை குறித்து வருத்தம் தெரிவித்தும், சுமூகமான பேச்சுவார்த்தை மூலம் இலங்கை வாழ் தமிழர் பிரச்சினைக்கு நிலையான தீர்வு ஏற்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் கருத்தறிவித்துள்ளார். இந்திய பாராளுமன்ற மக்களவையில் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளுமாறு வற்புறுத்தும் வகையில் இந்தப் பிரச்சினை பற்றிக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இது சம்பந்தமாகத் தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் கொந்தளிப்பு உணர்ச்சியை வெளிப்படுத்தும் வகையிலும், பாரதப் பிரதமர் இந்தப் பிரச்சினையை நல்ல முறையில் தீர்க்க அரசியல் ரீதியாக உள்ள எல்லாவித நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்பதை வற்புறுத்தும் முறையிலும்; 29—3—1984 ஆம் நாளன்று (நேற்று) பாரதப் பிரதமருக்கு டெலக்ஸ் மூலம் ஒரு செய்தியை அனுப்பியுள்ளார்.

28—3—1984-இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு கலவர நிகழ்ச்சியைக் கேட்டுக் கொதிப்படைந்த சென்னை சட்டக்கல்லூரி மாணவர்கள் 29—3—1984 [illegible] காலை 2 மணியளவில் சென்னையிலுள்ள இலங்கைத் தூதரக அலுவலகத்தினை முற்றுகையிட முற்பட்டனர். ஆனால், சென்னைக் காவல் துறையினர், செய்தியறிந்து, உடனடியாக விரைந்து சென்று, மாணவர்களைச் சமாதானப்படுத்தி அங்கிருந்து திரும்பிப் போகச் செய்தனர். சென்னை சட்டக்கல்லூரி மாணவர்கள் 29—3—1984 அன்றும், மீண்டும், காலையில் வந்து, அமைதியான முறையில், இலங்கைத் தூதரகம் சென்று, மகஜர் கொடுத்துள்ளனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பிய டெலக்ஸ் செய்தியை உங்களுக்குப் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

"As soon as the news of large scale massacre of Tamils in Jaffna (Sri Lanka) by Sri Lanka Air Force personnel reached here, there was widespread reaction among the people of Tamil Nadu. At Madras, students of Law College, Madras, marched towards Sri Lanka Deputy Commissioner's Office last night around 2 a.m. Timely intervention and alertness of Police Officers in tackling students prevented them from causing any major incidents and they were persuaded to go back to their hostel by Police Officers. Sri Lanka Deputy High Commission Office has been given police protection.



1984 மார்ச் 30] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

News of massacre of Tamil speaking population in Sri Lanka is likely to result in serious repurcussions throughout Tamil Nadu as witnessed during July—August 1983 and disturbing effects on the minds of the people.

I pray that Prime Minister may intervene immediately, and take action in the matter as you were kind enough to do under similar circumstances, during July—1983."

(முற்பகல் 11.00)

என்று நேற்று டெலக்ஸ் மூலம் செய்தி அனுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களோடு இணைந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் பிரச்சினையை கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். நிலைமைகளை ஒட்டி, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்ததற்கு இணங்க, சர்வ கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்டி, ஆலோசனை நடத்தி, முடிவு எடுக்க வேண்டிய தன்மை ஏற்பட்டால் அதற்கான முயற்சிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுப்பார்கள்.

அதுமட்டுமல்ல, ஒரு, தூதுக்குழு சென்று இந்தியப் பிரதமருக்கு எடுத்துச் சொல்வதன் மூலமாகவும் நல்ல பயன் ஏற்படுமானால் அதையும் சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டும்போது முடிவு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று காலை இலங்கைத் தமிழர் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்களைச் சந்தித்து சுமார் அரை மணி நேரம் அங்கு ஏற்பட்டுள்ள நிலைமைகள் பற்றி உரையாடியிருக்கிறார்கள். இந்தியப் பிரதமர் அவர்களுடைய சிறப்புப் பிரதிநிதியான திரு. ஜி. பார்த்தசாரதி அவர்கள் இங்கே வந்ததன் காரணமாக அவர்களுடனும் இன்று காலை பேசி தமிழ் மக்களுடைய உணர்வுகளைத் தெரிவித்து, இந்தியப் பிரதமருக்கு அதைத் தெரிவிக்கும்படி சொல்லியிருக்கிறார்கள். பிரதமரின் சிறப்புப் பிரதிநிதி திரு. ஜி. பார்த்தசாரதி அவர்கள் இன்று மாலை டெல்லிக்குச் செல்ல இருக்கிறார்கள். தமிழக அரசினுடைய உணர்வையும் தமிழக மக்களுடைய உணர்வுகளையும் தன்மைகளையும் பிரதமருக்கு எடுத்துக் கூறி, தக்க நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்வதாக திரு. ஜி. பார்த்தசாரதி அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

மாநில அரசும், மத்திய அரசும் இந்தப் பிரச்சினை குறித்து முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதில் நம்பிக்கையை வைத்துத் தமிழகத்தில் அமைதி காக்குமாறு அனைத்து தரப்புப் பொது மக்களையும், மாணவர்களையும், எல்லா அரசியல் கட்சியினரையும் அரசின் சார்பாக இந்த அவையிலே கேட்டுக்கொள்கிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 மார்ச் 30

இலங்கை வாழ் தமிழ் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் முழுமையான உத்தரவாதம் அளிப்பது மட்டுமல்ல, வட்டமேசை மாநாட்டை விரைவிலே கூட்டி, நல்ல நிலைமைகளை உருவாக்க வேண்டும். இந்த நிலையை ஏற்படுத்த இந்திய அரசு எல்லா விதமான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று நாம் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். இந்த வகையிலே அங்குள்ள நிலைமைகளை அறிந்து, அவ்வப்போது தக்க நடவடிக்கை எடுக்க இருக்கிற காரணத்தால் இந்த அவையை ஒத்திவைத்து மேலும் இதுகுறித்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, இதுபற்றி ஒரு சிறு விளக்கம் கேட்க அனுமதிக்க வேண்டும். (மணியடிக்கப் பெற்றது) ஒத்திவைப்புத் தீர்மானம் முடிந்த பிறகு சில சந்தர்ப்பங்களில் விளக்கம் கேட்பதற்கு இதற்கு முன்னால் அனுமதித்திருக்கிறீர்கள். அதைப் போன்று எனக்கும் ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் தீர்ப்பு அளித்த பின்னால் எந்தவிதமான விளக்கமும் கேட்க முடியாது, அனுமதிக்கவும் முடியாது, உட்காருங்கள்.

## 3. 106-வது விதியின்கீழ் வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்களது கோரிக்கைகள் குறித்த அறிக்கை.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினையும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினையும் சேர்ந்த மாணவர்கள் சார்பாக ஏழு மாணவர்கள் பிரதிநிதிகள் நேற்று என்னைச் சந்தித்து அவர்களுடைய கோரிக்கைகளை எடுத்துச் சொன்னார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் :

(1) மொத்தம் உள்ள வேளாண்மை அலுவலர் பதவிகளில் 10 சதவீதத்திற்கு உதவி வேளாண்மை அலுவலர்களை துணை வேளாண்மை அலுவலர்களாக பதவி உயர்வு அளிக்கலாம். அதற்கு மேல் பதவி உயர்வு அளிக்கக்கூடாது.

(2) 1983 டிசம்பர் வரை உதவி வேளாண்மை அலுவலர்களது பதவி உயர்வை 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக தற்காலிகமாக உயர்த்தி அரசு ஆணை வழங்கியிருந்தது. ஆனால் 15 சதவீதத்திற்கு மேலாக துணை வேளாண்மை அலு



1984 மார்ச் 30] [டாக்டர் கா. காளிமுத்து]

வலர்களாக பணி அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு 15 சதவீதத்திற்கும் அதிகமாக பணியில் அமர்த்தப்பட்டிருப்பதை உடனடியாக ஆய்ந்து, அதிகமாக உள்ளவர்களை மீண்டும் உதவி வேளாண்மை அலுவலர்களாக் நியமித்து, புதிய வேளாண் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பினை அளித்திடல் வேண்டும்.

(3) பதவி உயர்வுக்கு தற்காலிகமாக 15 சதவீதம் அல்லது நிரந்தரமாக 10 சதவீதம் என்று கணக்கிடும்போது வேளாண்மை விரிவாக்கத் துறையிலுள்ள வேளாண்மை அலுவலர் பதவிகளை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆராய்ச்சிக்காக நியமிக்கப்பட்ட பதவி இடங்களைக் கணக்கில் சேர்த்துக் கொள்ளக் கூடாது.

மாணவர்கள் இந்த கோரிக்கைகளையும் ஏற்றுக் கொண்டு கோரிக்கை 2-ஐப் பற்றி ஆய்ந்து அவர்கள் கேட்டுக் கொண்டவாறு மேல் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளேன். மாணவர்கள் பிரதிநிதிகள் எனது கருத்தை ஏற்று கொண்டு தங்களது வேலை நிறுத்தத்தை விலக்கிக் கொண்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. கவன ஈர்ப்புகள்

### தஞ்சை, வடபாதிமங்கலம் ஆரூரான் சர்க்கரை ஆலை கழிவுநீர் குடமுருட்டி ஆற்றில் கலப்பது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பொ. உத்திராபதி, தி. கா. நல்லப்பன், என். ஏ. பூங்காவனம், இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்படுத்தல் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. பொ. உத்திராபதி : தலைவர் அவர்களே, ''தஞ்சை மாவட்டம், வடபாதிமங்கலம் ஆரூரான் சர்க்கரை ஆலையின் கழிவுநீர் குடமுருட்டி ஆற்றில் கலப்பதால் கால்நடைகளிடையே நோய் பரவுவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்படுத்தல் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராஜேந்திரன் : (டாக்டர் முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக் கிறேன்.

[திரு. எஸ். என். இராஜேந்திரன்] [1984 மார்ச் 30

அறிக்கை.

ஆரூரான் சர்க்கரை ஆலை தஞ்சை மாவட்டத்தில் நீடாமங்கலம் தாலுக்காவில் வடபாதி மங்கலம் கிராமத்தில் அமைந்துள்ளது. இத்தொழிற்சாலை நாள் ஒன்றுக்கு சுமார் 2,000 டன் கரும்பிலிருந்து சர்க்கரை தயாரிக்கின்றது.

2. அதிகப்படியான சாறு, இயந்திரங்களில் ஏற்படும் கசிவு, இயந்திரங்களை குளிரூட்டப் பயன்படும் தண்ணீர் மற்றும் எண்ணெய், இயந்திரங்களை கழுவுகின்ற நீர் ஆகியவை கரும்பு ஆலையிலிருந்து வெளிவரும் கழிவு நீராகும். மேற்கூறிய ஆலை நாள் ஒன்றுக்கு 28 லட்சம் லிட்டர் கழிவு நீரை வெளியிடுகின்றது. கரும்பு ஆலையிலிருந்து வரும் கழிவுநீர் அமிலத் தன்மையும், பி.ஓ.டி. சுமார் 2,000 மி.கி. லிட்டர் கொண்டது. மேலும், மொலாசஸ் சுமார் 9,00,000 மி.கி. லிட்டர் பி.ஓ.டி. கொண்டது.

3. மொலாசஸ் சேமிக்க 6,000 டன் கொள்ளளவுள்ள எஃகுத் தொட்டி இந்த ஆலையில் உள்ளது. ஆலையிலிருந்து வரும் கழிவு நீர் சுத்திகரிக்கப்படாமல், ஒரு பகுதி, ஆலைக்குச் சொந்தமான நிலத்தில் நெல் மற்றும் கரும்பு சாகுபடி செய்யப் பயன்படுத்தப்படுகிறது. மற்றொரு பகுதி 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஆற்றைச் சென்றடைகின்றது. இக்கழிவுநீர் ஆற்றில் கலப்பதால் கால்நடைகளுக்குப் புதிதாக நோய் ஏற்படுவதாக தகவலேதும் வரவில்லை.

4. மேற்கண்ட ஆலை 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26வது பிரிவின்கீழ் தனது கழிவு நீரை வெளியேற்ற தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அனுமதி பெறுமாறு கடிதம் மூலம் வலியுறுத்தப்பட்டது. மேலும் இவ்வாலைக்கு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 44வது பிரிவின்படி ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கு தகுந்த காரணம் காட்டுமாறு அறிக்கை விடுக்கப்பட்டது. உடனே ஆலை வாரியத்திற்கு விண்ணப்பிக்க வேண்டிய படிவங்களை தற்போது பெற்றுச் சென்றுள்ளது. எனினும் வாரியம் மேற்படி ஆலைக்கு அனுமதி வழங்கும் போது தொழிற்சாலைக் கழிவுநீரை வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைக்கு ஒப்ப ஓர் குறிப்பிட்ட கால வரையறைக்குள் சுத்திகரித்து வெளியிடும்படி வலியுறுத்தும். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு பொ. உத்திராபதி : தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அந்த விவர அறிக்கையைப் பார்க்கிறபோது, 1974-ஆம் ஆண்டு கழிவு நீரை வெளியில் விடுவதற்காக இருந்த அனுமதியை இன்னும் கொடுக்காமல்



1984 மார்ச் 30] [திரு. பொ. உத்திராபதி]

இருக்கிற சூழ்நிலையில், குறிப்பாக, குடமுருட்டி ஆறு திருத்துறைப்பூண்டி தாலுக்காவில் செல்கிறது. இந்த ஆரூரான் சர்க்கரை ஆலை ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து போன ஆண்டு வரையில் இந்த குடமுருட்டி ஆற்றில், இந்தக் கழிவு நீர் திறந்துவிடப் படவில்லை. ஆனால் இந்த ஆண்டுதான் புதிதாக திருத்துறைப் பூண்டித் தாலுக்காவில் —50 கிராமங்களின் வழியாகப் போகும் அந்த கழிவு நீரைத் திறந்துவிட்டதால் அந்தப் பகுதியிலுள்ள ஆயிரக்கணக்கான ஆடு மாடுகள் அந்த ஆற்றில் உள்ள தண்ணீரை குடிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியிலுள்ள நூற்றுக்கணக்கான கிராமங்களிலுள்ள மக்கள் இந்தக் கழிவு நீரால் ஏற்படும் துர்நாற்றம் 15, 20 கிலோ மீட்டர் வரை வீசக்கூடிய காரணத்தால், மக்கள் உணவு கூட சரியாக உண்ண முடியவில்லை. சுகாதாரத்திற்குக் கேடு விளைவிக்கக் கூடிய வகையில், இந்த ஆற்றில், இந்த ஆண்டில் கழிவு நீர் விடப்பட்டிருப்பது, மிக மோசமான நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது.

அவர் கொடுத்துள்ள அறிக்கையிலே, சரி பாதி தண்ணீர் கரும்பு விவசாயத்திற்கும், நெல் விவசாயத்திற்கும் அளிப்பதாகவும்; மீதமுள்ள தண்ணீரை வெளியே திறந்து விடுவதாகவும் இருக்கிறது.

(முற்பகல் 11-10)

அதேபோல 1974-ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையில், இந்தக் கழிவு நீரை எந்த முறையில் வெளியிடவேண்டுமென்று இந்த வாரியத்திலிருந்து அவர்களுக்கு அனுமதி வழங்கப்படாமலேயே, இந்தக் கழிவு நீரைக் கண்ட இடங்களிலே திறந்து விடுவதன் காரணத்தால், பொதுமக்களுக்கு சுகாதாரக் கேட்டை உண்டாக்குகிறது. அப்படி மாடுகள் அந்தத் தண்ணீரைக் குடிப்பதால் —1984 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11-ஆம் நாள் அன்று நான் அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தேன். பெரும்பாலான மாடுகள் அந்தக் கழிவு நீரைக் குடித்து விட்டு, மயக்கமுற்ற நிலையில், பிறகு கால்நடை டாக்டர்கள் வந்து பரிசோதனை செய்து மருந்து அளித்திருக்கிறார்கள். இந்த நிலையில் அமைச்சரவர்கள், உடனடியாக இந்தக் கழிவு நீரினால் ஏற்படும் சுகாதாரக் கேட்டைப் போக்கவும், அந்தக் கால்நடைகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கும், இந்தக் கழிவு நீரை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்குமான நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி அனுமதி வாங்காமல், கழிவு நீரைத் திறந்துவிட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தக் கழிவு நீரைக் கண்ட இடங்களிலே விடுவதாகச் சொல்கிறார்கள். கண்ட இடங்களில் விடுவதாக என்னிடம் குறிப்புகள் இல்லை. ஒரு பகுதி கழிவு நீரை அவர்களுக்குச் சொந்தமான இடத்தில் உள்ள நெல் மற்றும் கரும்பு சாகுபடி செய்ய பயன்படுத்துகிறார்கள்: மற்றொரு பகுதியை, 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஆற்றில் கலக்கவிடுகிறார்கள் என்பதுதான் இங்கே தகவல். 1974ஆம் ஆண்டுச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆரூரான் சர்க்கரை ஆலையில் மொலாசஸ் சேமிக்க 6 ஆயிரம் டன் கொள் அளவு உள்ள எக்குத் தொட்டிகள் மட்டுமே இருக்கின்றன என்று இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் கழிவு நீர் 8 கிலோ மீட்டர் சென்று குடமுருட்டி ஆற்றிலே கலப்பதாகவும் இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் 8 கிலோ மீட்டர், தொலைவிலே சென்று அங்கே கலக்கின்றபோது, அந்த ஆற்றின் தண்ணீரை அருந்துகின்றபோது, கால்நடையாக இருந்தாலும், மனிதர்களாக இருந்தாலும், பல்வேறு சுகாதாரக் கேடுகளுக்கு ஆளாகக் கூடிய நிலை ஏற்படுகிறது. எனவே 1974-ஆம் ஆண்டு சட்டப்படி இந்த ஆலையிலேயிருந்து வரக்கூடிய கழிவு நீரை அப்புறப்படுத்துவதற்கு அங்கே இருக்கக்கூடிய சுகாதார முறைப்படி செய்வதற்காக அரசு தாக்கீது செய்தும் அந்த ஆலையைச் சார்ந்தவர்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. என்று இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தக் கழிவு நீர் குடமுருட்டி ஆற்றிலே கலக்காமல் இருப்பதற்கும் ஏனைய நடவடிக்கைகளை எடுப்பதற்கும், 1974-ஆம் ஆண்டிலே இருந்து விதிக்கப்பட்டு இருக்கக்கூடிய அந்த நிலையினை உடனடியாக அவர்கள் மேற்கொண்டு செய்வதற்கும், இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாற்றுத் தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டு மத்திய அரசால் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த அரசால் 1982ஆம் ஆண்டு இந்த வாரியம் உருவாக்கப்பட்டது. ஆகவே இந்தச் சட்டத்தின்கீழ் சம்பந்தப்பட்டவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்து, இந்தக் கழிவு நீரை அகற்ற முடியுமோ, அந்த அளவிற்கு இந்தச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், வடபாதிமங்கலம் ஆரூரான் சர்க்கரை ஆலையில் இருந்து வெளி வருகிற கழிவு நீர் ஆற்றில் கலக்கப்படுவதால், கால்நடைகளுக்கு நோய்களும், குறிப்பாக அந்தப் பகுதியில் உள்ள அனைத்து கிராமங்களில் உள்ள மக்கள் இந்த நிலத்தடி தண்ணீரைக் குடிப்பதற்கு எடுப்பதால், அவர்களுக்கும் இது நோயை உண்டாக்கக்கூடிய முறையில் இருக்கின்றது. இதனால் தண்ணீரும் கெட்டுப் போகக்கூடிய நிலைமையிருக்கிறது. ஆகவே இதைத் தடுத்து, வேண்டுமானால் இன்னொரு பகுதியில், இதைப் பயன்படுத்திக் கொள்வதற்கு அரசும், அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாற்றுத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமான குறிப்புகள் என்னிடம் இல்லை. தனிக்கேள்வி கேட்டால், பதில் தயாரித்துக் கொடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆவடியில் உள்ள திருமுல்லைவாயிலில் அமெரிக்கன் ரப்பர் பேக்டரியிலிருந்து ரப்பரும், அமிலமும், கலந்து வந்து, நச்சுக் கருப்பு தூசிகள் ஊர் முழுவதும் படிந்து கெடுதலை உண்டாக்கியதால் அந்த ஆலையை மூடிவிட்டதாக அமைச்சர் அவர்கள் சமீபத்திலே சட்ட சபையிலும், பத்திரிகையிலும் அறிவித்ததை நான் பார்த்தேன். அதைப்போல இந்த தஞ்சை மாவட்டம் வடபாதிமங்கலத்தில் உள்ள ஆரூரான் சர்க்கரை ஆலையில் இருந்து வருகிற கழிவு நீரை குடமுருட்டி ஆற்றில் கலக்கவிடுவதால், அங்கே உள்ள விவசாய நிலங்களுக்கும், கால்நடைகளுக்கும், மனிதர்களுக்கும் கூட ஏராளமான தோல் வியாதிகள் வந்து அவர்கள் சாகக்கூடிய நிலைமைகள் இருக்கிற காரணத்தால், அந்த ஆலையை மூடுவதற்கும், இந்த அரசு போடுகின்ற அந்த உத்தரவிற்கு அவர்கள் கீழ்ப்படியாவிட்டால் சம்பந்தப்பட்ட உரிமையாளர்களுக்கு ஆயுள் தண்டனை போன்ற மாபெரும் தண்டனை கொடுப்பதற்கும் அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாற்றுத் தலைவர் அவர்களே, இது தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஆலையைப் பற்றிய கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆவடிக்கு அருகில் உள்ள திருமுல்லைவாயிலிலுள்ள ஆலை மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையை சம்பந்தப்படுத்திக் கேட்கிறார்கள் திருமுல்லைவாயிலிருந்து அமெரிக்கன் ரப்பர் பேக்டரி மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை தனி. தஞ்சையில் இருக்கின்ற

[திரு. எஸ். என். இராஜேந்திரன்] 1984 மார்ச் 30

இந்த சர்க்கரை ஆலையிலிருந்து வருகின்ற அந்தக் கழிவு நீரின் ஒரு பகுதியை பயன்படுத்தி, மற்றொரு பகுதியை சுத்திகரிக்காமலேயே அவர்கள் ஆற்றில் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக பலர் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

வாரியம் சமீபத்தில் அறிவித்திருக்கிறபடி, 1974 ஆம் ஆண்டு சட்டத்திலே 20-வது பிரிவின் கீழ் மாசு கட்டுப்படுத்தி பிறகு தண்ணீரை வெளியேற்ற வேண்டும் என்று அந்த ஆலைக்கு முதலில் அறிவுறுத்தினார்கள். அதை சட்டை செய்யாமல் அலட்சியம் படுத்திய காரணத்தினாலே, 44-வது பிரிவின்படி ஏன் உங்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்காக தகுந்த காரணம் காட்டும்படி அறிக்கை விட்டபின், இப்பொழுது தான் அவர்கள் இந்த வாரியத்திலிருந்து படிவங்களை வாங்கிச் சென்றிருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்து இந்த வாரியம் எடுத்து வருகிறது. இந்த வாரியத்தின் வாயிலாக 44-வது பிரிவின் படி, படிவத்தை நிரப்பி, விரைவில் வாரியத்திடம் ஒப்படைத்து அனுமதி பெறுவார்களேயானால், கழிவு நீரை மாற்றுவதற்கான வழிமுறைகள் அவர்களுக்கு அறிவுறுத்தப்படும். காலமும் கொடுக்கப்படும்.

அதன் பின்னரும் அவர்கள் அலட்சியப்படுத்துவார்களேயானால், இந்த வாரியம் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்கான வாய்ப்புக்கூறுகள் இந்த சட்டத்திலே இடம் பெற்றிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த ஆலையை மூட முடியுமா, ஆயுள் தண்டனை கொடுக்க முடியுமா என்று கேட்டார்கள். ஆலையை மூடுவதோ அல்லது ஆலையிலே பணியாற்றக் கூடிய தொழிலாளர்களுக்கு கேடு விளைவிப்பதோ இந்த வாரியத்தின் நோக்கம் அல்ல. நிலம், நீர், காற்று ஆகியவற்றில் மாசுபடாமல் காக்கவேண்டும் என்பதுதான் இந்த வாரியத்தின் நோக்கம். அப்படி மாசு படுத்தப்படாமல் நடவடிக்கை எடுக்கக்கூடிய மிகப் பெரிய பொறுப்பு ஆலை அதிபர்களுக்குத் தான் இருக்கிற காரணத்தால் ஆலை அதிபர்கள் அலட்சியப் போக்காக இருப்பார்களேயானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது போல், கழிவு நீரை நன்னீராக மாற்றி ஆற்றில் விடக்கூடிய அளவுக்கு சம்பந்தப்பட்ட ஆலை அதிபர்கள் தவறுவார்களேயானால், அவர்களுக்கு 2 ஆண்டு கடுங்காவல் விதிக்கப்படும் என்பதை மட்டும் சொல்லிக் கொள்கிறேன்.



## 5. அறிக்கைகள் அளித்தல்

### பொது நிறுவனங்கள் குழு

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவினுடைய கீழ்க்கண்ட அறிக்கைகளை பேரவைக்கு வைக்கிறேன்.

(அ) இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1979-80 ஆம் ஆண்டிற்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையின் மீதான மேற்படி குழுவின் முப்பத்தேழாவது அறிக்கை.

(ஆ) இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1978-79-மற்றும் 1979-80 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகள் (சிவில்) மீதான மேற்படி குழுவின் முப்பத்தெட்டாவது அறிக்கை.

(இ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 1971-72 முதல் 1975-76 வரையிலான ஆண்டுக் கணக்குகள் குறித்த மேற்படி குழுவின் முப்பத்தொன்பதாம் அறிக்கை.

(ஈ) தமிழ்நாடு வேளாண்-தொழில்கள் கழகத்தின் செயல்முறை குறித்த மேற்படி குழுவின் நாற்பதாவது அறிக்கை. போதிய அவகாசம் இல்லாததால் அச்சடித்த பிரதிகளுக்குப் பதிலாக படி எடுக்கப்பட்ட பிரதிகள் உறுப்பினர்களுக்கு மேற்கொண்டு அளிக்க விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. அறிக்கையின் தமிழ் மற்றும் ஆங்கிலப் பிரதிகள் சட்ட மன்ற உறுப்பினர்களின் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அச்சடித்த பிரதிகள் கிடைத்தவுடன் பேரவை உறுப்பினர்களுக்கு தனியாக அனுப்பி வைக்கப்படும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

6. வரவு செலவுத் திட்டம் 1984-85 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)

அ. கோரிக்கை எண்: 15—காவல் துறை.

ஆ. கோரிக்கை எண் 16.—தீயணைப்புப் பணிகள்.

இ. கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வைத் துறை.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே காவல் துறை, தீயணைப்புத் துறை, மதுவிலக்கு ஆயத் தீர்வை துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது தமிழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நேற்று முதல் இங்கே பல்வேறு

உறுப்பினர்கள் பேசினார்கள். இந்த ஆட்சியிலே நடைபெறுகிற கொலை, கொள்ளை போன்றவைகளையெல்லாம், ஆளும் கட்சியினர் உட்பட, இங்கே பட்டியல் போட்டு பேசினார்கள். நடைபெற்ற குற்றங்களில் கண்டு பிடிக்கப்பட்டவை எத்தனை என்பதை எல்லாம் இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள். ஆண்டுதோறும் நடக்கின்ற குற்றங்களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே இருக்கிறது. நான் உங்களைக் கேட்க விரும்புகிறேன். இந்தக் குற்றங்கள் நிகழாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை காவல் துறையினர் ஏதாவது எடுத்திருக்கிறார்களா, என்பதை இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அன்றாடம் பத்திரிகையில் பார்க்கிறோம். சென்னையில் முகமூடி கொள்ளை பயம். இரவு நேரங்களில் பொது மக்கள் நிம்மதியாக நடமாட முடியாத நிலைமை. பேருந்து நிலையங்களிலும் புகை வண்டி நிலையங்களிலும் ஜேப்படிக்காரர்கள். இப்படிப்பட்ட பேர்களிடமிருந்தெல்லாம் காவல் துறையைச் சார்ந்தவர்கள் மாமூல் பெறுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு. இன்றையதினம் பொதுமக்களுக்கு பாதுகாப்பாக இருக்க வேண்டிய காவல்துறையைச் சார்ந்தவர்கள் சில தனிப்பட்டவர்களுக்கு மட்டும், குறிப்பாக ஆளும் கட்சியைச் சார்ந்த சிலருக்கு மட்டும் பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்பதை நினைக்கும்போது காவல் துறையின் மீது பொதுமக்கள் வைத்திருக்கிற நம்பிக்கை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது.

இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே சில குறிப்புகளைக் கொடுத்து இருக்கிறார்கள். 1982 ஆம் ஆண்டு நடைபெற்ற மொத்த குற்றங்களின் எண்ணிக்கை 34,680. அவற்றில் கண்டுபிடிக்கப்பட்டவை 25,174. ஏறத்தாழ 72 சதவீதக் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக இங்கே கூறியிருக்கிறார்கள். அதேபோன்று 1983 ஆம் ஆண்டில் நடந்த மொத்தக் குற்றங்களின் எண்ணிக்கை 40,039. அவற்றில் கண்டுபிடிக்கப்பட்டவை, 26,209. ஆக மொத்த விழுக்காடு 65 சதவீதம். இப்படி ஆண்டுக்காண்டு மொத்தக் குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகிறது என்பதற்கும், ஆனால் கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களின் விழுக்காடு மிகவும் குறைந்து கொண்டே வருகிறது என்பதற்கும்இந்தப்புள்ளிவிவரமே நமக்குத் தெரிவிக்கிறது. நான் கூட 'இந்தியா டுடே' பத்திரிகையில் பார்த்தேன்:

Between 1978-1983 ther: was one d:ath behind bars in Tamil Nadu every ten days.

ஒவ்வொரு 10 நாட்களுக்கும், ஒரு காவல் கைதி போலீஸ் காவலில் இறந்துவிடுகிறான் என்று அந்தப் பத்திரிகை சுட்டிக்காட்டி இருக்கிறது. குறிப்பாக 1977 ஆம் ஆண்டு, முதலமைச்சர் எம். ஜி. ஆர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு 1983 ஆம் ஆண்டு வரை, ஏறக்குறைய 355 பேர்கள் காவல் நிலையத்தில் காவல் கைதிகளாக இருந்த நிலைமையில் கொல்லப்பட்டு இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நாம் கூர்ந்து கவனித்தாக வேண்டும். இந்த நிலைமை ஒரு நல்ல ஜனநாயகத்திற்கு உகந்ததாக இருக்கிறதா, என்பதை மட்டும் நீங்கள் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



(முற்பகல் 11-20.)

அதேபோன்று, இந்த ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள், இன்றையதினம் அரசாங்கத்தின் மூலமாக, எதிர்கட்சியினர் மீது குறிப்பாக, இந்த ஆட்சிக்கு வேண்டாதவர்கள் மீது பொய் வழக்குகளைப் புனைந்திருக்கிறார்கள்.

இங்கே மதுவிலக்குக் குற்றங்கள் பற்றியும் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக, 1979 ஆம் ஆண்டு மட்டும் 2,47,467 மதுவிலக்குக் குற்றங்கள் சம்பந்தப்பட்டது என்றும், அவற்றில் தண்டிக்கப்பட்டவர்கள், 31,345 பேர்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதேபோன்று, 1980 ஆம் ஆண்டு 1,44,458 வழக்குகள் மதுவிலக்குக் குற்றத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. ஆனால் தண்டனை அடைந்தவர்கள் 5,434 பேர்கள் மட்டுமே. அதேபோன்று, 1981 ஆம் ஆண்டு, 53,734 வழக்குகள் மதுவிலக்குக் குற்றச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது 794 பேர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தப் புள்ளிவிவரங்களைப் பார்க்கின்றபோது, மற்றவர்களுடைய தூண்டுதலால் மட்டுமே இந்த வழக்குகள் புனையப் பட்டுள்ளது என்பது நமக்குத் தெரிகிறது.

இதைப் பார்க்கின்றபோது, நம்முடைய போலீசாருடைய திறமை இவ்வளவுதானா என்று நாம் சந்தேகப்பட வேண்டிய ஒரு நிலைமையில் இருக்கிறோம். காரணம் அந்த அளவிற்கு பொய் வழக்குகளை அதிகமாகப் போடுவதன் காரணமாக இந்த வழக்குகள் முழுமையாக நிரூபிக்கப்படவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் கூட கடந்த 3, 4 ஆண்டுக்காலமாக தொடர்ந்து இனக் கலவரங்கள், சாதிக் கலவரங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. அதைப் பற்றி, நேற்றையதினம் இங்கே பேசிய இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் கூட கூறினார்கள். என்னுடைய தொகுதியில், வேட்டமங்கலம் கிராமத்திலே, திருப்பனந்தாள் கிராமத்திலே, சூரியநாராயணகோயில் கிராமத்தில், கடந்த 3 ஆண்டுக்காலமாக சாதிக் கலவரங்கள் நடைபெற்றுக்கொண்டு

[திரு. செ. இராமலிங்கம்] [1984 மார்ச் 30

ருக்கின்றன. ஆனால் இங்கே நம்முடைய சி. ஐ. டி. இலாக்கா இந்தக் கலவரங்கள் ஏற்படுவதற்கு முன்பாக அவைகளைப் பற்றி தகவல் தெரிந்து, அதைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையை ஏதாவது மேற்கொண்டார்களா என்றால், உள்ளபடியே நடவடிக்கைகளில் நம்முடைய சி. ஐ. டி. இலாக்கா ஈடுபடுவது கிடையாது. மாறாக எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள், அல்லது எதிர்க் கட்சித் தலைவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பற்றித் தான், இன்றையதினம் உள்ள சி.ஐ.டி. இலாக்கா கவனத்திலே வைத்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று என்னுடைய தஞ்சை மாவட்டத்தில் உள்ள வலங்கைமான் வட்டத்தில், ராசேந்திர நல்லூர் என்ற ஊரில் திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சார்ந்த கோபால் என்பவர் பட்டப் பகலில் படுகொலை செய்யப்பட்டார். இன்று வரை இது சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை. இங்கே இளையபெருமாள் கூட சுட்டிக்காட்டினார்கள். நான் கேட்க விரும்புகிறேன். என்ன காரணத்தினால், இன்றுவரை சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை, யாருடைய தூண்டுதலின் பேரில் யாருடைய துணையின் பேரில், அவர்கள் இன்றையதினம் வெளியில் இருக்கிறார் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இப்படி நாடு முழுவதும் எங்கே பார்த்தாலும், இந்த ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு, எங்கே பார்த்தாலும், சாதிக் கலவரங்கள் இனக்கலவரங்கள் ஏராளமாக நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. சிலயிடங்களில் சிறப்பாக பணிபுரிகின்ற அதிகாரிகளை 3 மாத காலம் கூட சேர்த்தாற் போல் ஒரே இடத்தில் அவர்கள் பணி புரிவதற்கு நீங்கள் அனுமதிப்பது கிடையாது. குறிப்பாக என்னுடைய தொகுதியில் ஒரு கிரைம் இன்ஸ்பெக்டர் கடமை தவறாதவர், நேர்மையான அதிகாரி ஜெயகுமார் என்பவர் அவர் வந்து ஒரு ஆண்டு காலத்திற்குள் அவரை 2 தடவை மாற்றல் செய்திருக்கிறார்கள். அவர் ஏறத்தாழ 40 வழக்குகள், சிலை திருட்டு வழக்குகளை எல்லாம் கண்டுபிடித்து மாவட்டத்தில் இருக்கின்ற பெரிய காவல் துறை அதிகாரிகள் எல்லாம் அவருடைய பணியை பாராட்டியிருக்கிறார்கள். அதேபோல் ராஜீ என்கிற ஒரு ஆய்வாளர். அவருடைய பெயரை ஆனஸ்டு ராஜீ என்று கூறுவார்கள். நேர்மையையும், கடமையையும் தன்னுடைய குறிக்கோளாக கொண்டு பணியாற்றக்கூடிய சிறந்த அதிகாரி அவர். ஒரு ஆண்டு காலத்தில் 3 தடவை அவரை மாற்றல் செய்திருக்கிறீர்கள். என்ன காரணத்தால் இப்படி செய்கிறீர்கள்? உங்களுக்கு இருக்கின்ற கவனம் எல்லாம் இங்கே காவல்துறையிலே மேல் அதிகாரிகளாக இருப்பவர்களைப் பற்றி தான் கவலைப் படுகிறீர்களே ஒழிய கீழே சிறப்பாக பணிபுரிபவர்களைப் பற்றி உங்களுக்கு கவலை



1984 மார்ச் 30] [திரு. செ. இராமலிங்கம்]

கிடையாது. அதே போன்று நேர்மையாக பணியாற்றுகின்ற அதிகாரிகளை நீங்கள் டிஸ்கரேஜ் செய்கின்ற வகையில் அவர்களுக்கு ஏராளமான தொல்லைகளை இன்றையதினம் செய்து கொண்டிருக்கிறீர்கள்.

இங்கே இந்த கொள்கை விளக்க குறிப்பில் காவல்துறையின் சாதனைகளை எல்லாம் குறிப்பிட்டு இருக்கிறீர்கள். நான் உங்களைக் கேட்கவிரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தில் திருவாடுதுரை கிராமத்தில் அந்த கிராமத் தலைவராக இருந்த முத்து குமார சாமி 6 ஆண்டு காலத்திற்கு முன்னால் கொலை செய்யப்பட்டார். குற்றவாளிகளைகண்டு பிடித்தீர்களா? தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த மார்க்கிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த வெங்கட்டாசலம் அவரைப் பற்றி இன்று வரை அவர் கொலை செய்யப்பட்டரா? அல்லது உயிரோடு இருக்கிறாரா? என்பதை கூட இந்த அரசு தெரிவிக்கவில்லை. அந்த வழக்கு சம்பந்தமாக ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் அல்லது காவல்துறைச் சேர்ந்தவர்கள் என்ன முடிவு அறிவித்தார்கள்? நான் கேட்கவிரும்புகிறேன். இன்றையதினம் காவல்துறையைச் சேர்ந்தவர்கள் இப்படிப் பட்ட ஏராளமான கொலை, கொள்ளைகளை கண்டுபிடிக்காமல், அறிவிக்க இயலாமல் இருப்பது உள்ளபடியே வருந்தத்தக்கது என்பதை இந்தநேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தில் 2 வார காலத்தில் முன்னால் கும்பகோணம் காவல் நிலையத்திற்கு எதிராக இருக்கின்ற பொற்றாமரைக் குளத்தில் மாயவரத்தை சேர்ந்த ஸ்ரீராம் என்ற வாலிபர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டு பிணமாக கிடந்தார். ஆனால் எங்களுக்கு கிடைத்த தகவல் அவர் ஏறத்தாழ 10 ஆயிரம் ரூபாயோடு கடை தெருவில் இருந்து அவரோடு சிலர் சண்டை காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்பெற்று பிறகு அவரை யாருமே சந்திக்கமுடியவில்லை. மறுநாள் அவர் குளத்தில் பிணமாக இருந்தார் என்ற தகவல் எங்களிடத்தில் சொல்லப்படுகிறது. அவரை கொலை செய்ததாக கூறுகிறார்கள். அவரை கொலை செய்தவர் யார்? அவரிடம் இருந்த பணம் என்ன ஆனது? இது பற்றி காவல்துறை என்ன நடவடிக்கை மேற்கொண்டார்கள் என்பதை கூறவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் இன்றையதினம் முதலமைச்சர் நிவாரண நிதிக்கு மோட்டார் வாகன வரியிலிருந்து 15 சதவிததை எடுத்துக்கொள்கிறார்கள். ஆனால் கடந்த ஒரு ஆண்டு காலமாக சாலை விபத்தில் இறந்து பட்டவர்கள் 60 பேருக்கு கும்பகோணம், திருவிடைமருதூர் பொருத்த வரையில் நிவாரண நிதி வழங்கப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று சுமார் 3 மாதங்களுக்கு முன்னால் இராமநாதபுரம் மாவட்டத்தில் பாகநேரி என்ற ஊரில் அங்கே இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முன்னால் மத்திய அமைச்சர் திரு. ஆர். வி. சாமிநாதன் அவர்களுடைய சொந்த ஊர். இன்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. யூ. சுப்பிரமணியம் அவர்களுடைய சொந்த ஊர். அந்த ஊரில் ஏறத்தாழ 70 கிலோ எடை உள்ள பிள்ளையார் சிலையை அங்கே இருந்த காவலர்களை எல்லாம் அடித்து விட்டு திருடி சென்று இருக்கிறார்கள். அதேபோன்று இன்னொரு திருட்டு ஒரு தனியார் வீட்டில் எல்லா கதவுகளையும் உடைத்து எல்லா பொருட்களையும் களவு செய்திருக்கிறார்கள். அதே நேரத்தில் அடுத்த 4 தினங்களில் பக்கத்து ஊராக இருக்கக்கூடிய காளையார் மங்களத்தில் சிவன் கோயில் சிலையை திருடி விட்டார்கள். இப்படி ஒரு வார காலத்தில் பல கொள்ளைகள் குறிப்பிட்ட பகுதியில் நடைபெற்றும் இன்று வரை எந்த துப்பும் துலக்காமல் இருக்கிற போலீஸ் துறையை உள்ளபடியே நாம் இவர்கள் சிறந்த காவல் துறையினர் என்று எப்படி பாராட்ட முடியும். அதேபோன்று வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு வார காலத்திற்கு முன்னால் செய்யார் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்-வட ஆற்காடு மாவட்டத்தில் நடைபெறுகிற போலீஸ் அராஜகம் கொஞ்சம் நஞ்சம் அல்ல.

(முற்பகல் 11-30.)

குறிப்பாகச் சொல்லப்போனால், அங்கே சண்முகம் என்ற சர்க்கிள் இன்ஸ்பெக்டர் எந்தக் காரணமும் இன்றி இரண்டு வாலிபர்களை அழைத்துச் சென்று பலமாகத் தாக்கியதன் காரணத்தால், அவர்கள் உயிருக்கு ஆபத்தான நிலைமையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** ** **

சிறந்த காவல்துறை என்று பெயர் பெற்றிருக்கின்ற நம்முடைய காவல்துறை இன்றைக்குச் சென்னை நகரத்தில் ஏராளமான மசாஜ் கிளப்புகளுக்கு அனுமதி வழங்கி உள்ளது. அங்கே ஆபாசம் நடக்கின்றது என்ற குற்றச்சாட்டு வருகின்ற நேரத்தில், அவைகளுக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டு வருவதையும் நாம் பத்திரிகைகளின் வாயிலாக பார்க்கிறோம். சட்டமன்ற உறுப்பினரின் படம் அங்கே இருந்தது ; காவல்துறை அதிகாரியின் படம் அங்கே இருந்தது என்ற குற்றச்சாட்டுகள் வருவதைப் பத்திரிகைகளிலே பார்க்கிறோம். எனவே, காபரே நடனம் நடக்கின்ற இரவு விடுதிகளுக்கு காவல்துறை

** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



ஏன் அனுமதி வழங்குகிறது ? எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவலின்படி, அங்கேயிருந்து இந்தக் காவல்துறைக்கு ரெகுலராக மாமூல் வருகிறது. எனவேதான் இன்றைக்கு இப்படிப்பட்ட அனுமதி வழங்கப்படுகிறது என்று கேள்விப்படுகிறேன்.

இன்றைக்குக் காவல் துறையில் காவலர்கள் பற்றாக்குறையாக இருக்கிறார்கள். எனவே, போலீஸ் வேலைக்கு ஆள் எடுக்கப்பட்டது. அப்பொழுது தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் இராஜரத்தினம் ஸ்டேடியம் முதல் சித்ரா டாக்கீஸ் வரையில் கியூவில் நின்றார்கள். ஆனால் அங்கே நடந்த ஒரு பரிதாபத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

** ** **

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் ஒரு சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். திருவிடைமருதூர் காவல் நிலையம், திருநீலக்குடி காவல் நிலையம், திருப்பனந்தாள் காவல் நிலையம், பந்தநல்லூர் காவல் நிலையம் ஆகிய காவல் நிலையங்களில் பணிபுரிகின்ற காவலர்களுக்குக் குடியிருப்பதற்கு இடம் இல்லை. இதைப்பற்றி நானும் கடந்த ஏழாண்டுகளாக வலியுறுத்தி வருகிறேன். எனவே, அவர்களுக்குக் காவலர் இல்லங்கள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்பொழுது காவலர்களுக்கு கொடுக்கப்படுகின்ற ரேஷன் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அதை மாற்றி அவர்களுக்கு நல்ல ரேஷனாகக் கொடுங்கள் ; இல்லாவிட்டால் அதற்கான ஈட்டுத் தொகையை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காவல்துறையில் ஏராளமான பட்டதாரிகள் காவலர்களாகப் பணிபுரிகிறார்கள்........(மணியடிக்கப்பெற்றது).

திரு. கோவைத்தம்பி : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசின் சார்பாக இயங்கி வருகின்ற ஒரு துறை காவல் துறை. அது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும்.

* * * *

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

* * * *

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பத்திரிகையில் வருகின்ற செய்திகளை எல்லாம் ஆதாரமாக வைத்துக்கொண்டு பேசக்கூடாது. எனவே இப்போது நீங்கள் சொன்ன வாசகங்கள் உட்பட நீங்கள் ஏற்கனவே சொன்ன வாசகங்களும், திரு. கோவைத்தம்பி அவர்கள் சொன்ன வாசகங்களும் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகின்றன.

திரு. ஆர். தியாகராசன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த காவல் துறை மானியத்தின்மீது பேச அனுமதித்ததற்காக துணைச் சபாநாயகர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பல்வேறு விஷயங்களைப் பற்றி பல தரப்பு கட்சியினரும் அவர்களுடைய கருத்துக்களை இங்கே சொல்லி இருக்கிறார்கள். உங்களுடைய திட்டத்திலே உள்ள புள்ளி விவரங்கள் அத்தனையையும் பற்றி இங்கே பேசி இருக்கிறார்கள். ஆனால் சபாநாயகர் அவர்கள் மிகவும் குறைந்த நேரமே இங்கே பேசுவதற்கு அனுமதித்திருக்கிறார்கள். இந்த நிலையில் ஒருசிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழகத்தின் ஜனத்தொகை கிட்டத்தட்ட 5 கோடி என்ற அளவுக்கு வந்திருக்கின்றது. இப்படி இருக்கின்ற நிலைமையில் காவல் துறையினுடைய எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கின்றது. ஜனநாயகம் நிறைந்த நாடு இந்த நாடு. எனவே ஜனநாயகம் அதிகமாக இருந்தாலே பாதுகாப்பும் அதிகமாகத் தேவைதான். ஜனநாயகத்திலே யார் எதைப் பேசுவது, எதைச் சொல்வது என்றில்லை. சுதந்திரம் வந்து 33 ஆண்டுக் காலம் ஆகிவிட்டதன் காரணத்தால் ஜனநாயகத்தில் எதை வேண்டுமானாலும் செய்யலாம்; எப்படி வேண்டுமானாலும் பேசலாம்: யாரை வேண்டுமானாலும் பேசலாம் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. எனவே காவலர்கள் அதிகமாகத் தேவைப்படுகின்றது. எனவே அதிகப்படியான காவலர்களை போன வருஷம் எடுப்பதாக இருந்தது. பின்னர் அது ஒத்திப் போடப்பட்டுவிட்டது. இப்போதும் கூட காவலர்கள் தேர்வு நடந்திருக்கின்றது. ஆனால் இன்னும் அதற்கான ஆர்டர்ஸ் பிறப்பிக்கப்படவில்லை.



இப்போது தமிழகத்திலே உள்ள மொத்த காவலர்களின் எண்ணிக்கை 56,629 ஆகும். இந்த அளவில் காவலர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தால் எப்படி 5 கோடி ஜனங்களைப் பராமரிக்க முடியும். சாதாரணமாக ஒரு ஊரை எடுத்துக் கொண்டால் அங்கே ஆயிரம் பேருக்கு ஒரு கான்ஸ்டபிள் என்ற அளவிலாவது இருக்க வேண்டும். இப்போது அந்த அளவில் கூட இல்லை. இப்படிப்பட்ட நிலைமை காரணமாக அவர்கள் கடமையைச் செய்வது கடினமாக இருக்கும்.

பி.ஏ., எம்.ஏ., படித்துவிட்ட பல பட்டதாரிகள் வேலைகள் கிடைக்காததன் காரணத்தால் காவலர்களாக வந்து சேர்கிறார்கள். அவர்களுக்குப் போதிய வகையிலே ப்ரமோஷன் கொடுக்கப்படவில்லை. அதே நேரத்தில் பி.ஏ. படித்துவிட்டு நேரடியாக சப் இன்ஸ்பெக்டர் வேலைக்கும் சிலர் வருகிறார்கள். இப்படி வருகின்றவர்கள் மேலே இருக்கின்ற நிலைமையில் முதலிலேயே பட்டம படித்துவிட்டு காவலர்களாக வந்தவர்கள் கீழே ப்ரமோஷன் எதுவும் இல்லாமல் இருக்க வேண்டிய நிலைமை இருக்கின்றது. மேலும் பட்டம் பெற்ற சிலர் நேரடியாக பெரிய பதவிகளுக்கு வருகிறார்கள். அப்போது ஏற்கெனவே சப் இன்ஸ்பெக்டர்களாகப் பணியாற்றிக்கொண்டிருக்கின்ற பட்டதாரிகள் இவர்களுக்குக் கீழே வேலை செய்ய வேண்டிய நிலைமை இருக்கின்றது. ஆகவே பட்டதாரிகளுக்குக் கொடுக்கப்படவேண்டிய மரியாதை கொடுக்கப்பட வேண்டும்; அவர்களுக்கு உரிய உரிமைகளைத் தரவேண்டு என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே இன்றைய சூழ்நிலையிலே எந்தெந்த அளவிலே குற்றங்கள் நடக்கின்றன என்பதைப் பற்றி அனைவரும் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் அனைத்து குற்றங்களும் இன்றைக்கு அதிகப்படியாக ஆகி இருக்கின்றன என்பதை எல்லோரும் ஒத்துக்கொண்டிருக்கிறோம்; மறுக்கவில்லை. இப்போதுதான் அந்தக் குற்றங்கள் அதிகமாக ஆகிவிட்டனவா என்றால் இல்லை. கொஞ்சம், கொஞ்சமாக அதிகரித்திருக்கின்றது; அதிகரித்துக்கொண்டிருக்கின்றது. முதலிலே காங்கிரஸ்காரர்களின் காலத்திலேயும் குற்றங்கள் அதிகரித்திருக்கின்றன; பிறகு தி.மு.க. ஆட்சிக்காலத்திலும் குற்றங்கள் அதிகரித்திருக்கின்றன; அதன்பிறகு இப்போதும் குற்றங்கள் அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. இப்படி நாளுக்கு நாள் குற்றங்கள் அதிகரித்துக்கொண்டிருக்கும்போது அதற்குத் தகுந்த மாதிரி காவலர்கள் அதிகமாக ஆக்கப்படவில்லை ஐ. பி. எஸ். ஆபீஸர்கள் என்ற அளவிலே அதாவது தலைமை

நிலையிலே ஆபீஸர்கள் அதிகமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் கீழே இருக்கின்ற ஃபீல்ட் ஆஃபீஸர்கள் போதிய அளவுக்கு இருக்க வேண்டும். அப்படி இப்போது இல்லை. எனவே குற்றங்களைச் சரியாகக் கண்டுபிடிக்க முடியாது.

(முற்பகல் 11-40.)

மேலும் இப்போது காவலர்களுக்குச் சரியான வீட்டு வசதி இல்லை. இரவிலேயும், மற்ற நேரங்களிலும் பணியாற்றுகின்ற நிலையில் அவர்களுக்கு போதிய டி.ஏ., பேட்டா ஆகியவை கிடைக்கின்ற நிலைமை இல்லை. அவர்களுடைய வருமானத்தைப் பெருக்க வேண்டும். அப்படி பெருக்காத காரணத்தால் தான் எங்கே வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் வருமானத்தைத் தேடி தங்களுடைய குடும்பத்தைச் சமாளிக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் காரணத்தால் என்ன என்ன காரியங்கள் எல்லாமோ நடக்கின்றன. இருக்கின்ற அத்தனை போலீஸ் ஸ்டேஷனிலும் லஞ்சம் வாங்குவதில் தவறுவதில்லை

* * * *

* * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதை நீக்கும் படி உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு) அன்பார்லிமென்டரி என்பதற்காக அல்ல. சமுதாயத்தைப் பாதிக்கக்கூடிய எந்த வாசகம் சொன்னாலும் அது சில நேரங்களிலே நீக்கப்படுகிறது. சில நேரத்திலே ரொம்ப வெளிப்படையாக சொல்லக்கூடாது என்று நேற்று நீங்கள் விரும்பிய மாதிரி நானும் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) ஆதாரத்தோடு பேசவேண்டும். ஆதாரமில்லாமல் ஜெனரல் அலிகேஷன்ஸ் எதையும் சொல்லக் கூடாது. ஆகவே அவையெல்லாம் நீக்கப்படுகின்றன.

திரு. ஆர். தியாகராசன் : என்னுடைய நோக்கம் குறை சொல்ல வேண்டுமென்பது அல்ல. எல்லா அரசு காலத்திலும் இருந்தது தான். காங்கிரஸ் அரசிலும் இருந்தது என்றுதான் நான் சொன்னேன். சாதாரண கிராமத்திலே இருக்கக்கூடிய மக்களிடத்திலே போலீசார் நடந்துகொள்ளக்கூடிய விதங்களை முதலமைச்சருக்குத் தெரிவிக்க வேண்டுமென்றுதான் சொல்கிறேன். முதலமைச்சருக்குத் தெரிந்தால்தான் அதிகாரிகளைக் கூப்பிட்டு கண்டிக்க முடியும், இல்லையா ? அதற்காக சொன்னேனே தவிர, உங்கள் காலத்திலேதான் தப்பு நடந்தது, அதற்கு முன்னால்

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.



நடக்கவில்லை, காங்கிரஸ்காரன் காலத்தில் நடக்கவில்லை என்று சொல்லவில்லை. எல்லா காலத்திலும் நடக்கக்கூடிய பரம்பரை வியாதியாக இருக்கிறது. அந்த வியாதியை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய நோக்கம். அதனால் யாரைப் பற்றியும் குறை சொல்ல வேண்டுமென்று பேசவில்லை.

சாதாரணமாக கிராமத்திலே அடித்துக்கொண்டு போலீஸ் நிலையத்திற்குப் போகிறார்கள். இரண்டு பேரையும் கூப்பிட்டு கேஸ் போட வேண்டியது. இரண்டையும் ரிஜிஸ்தர் பண்ணி ஒருவனை போலீஸ் ஸ்டேஷன் உள்ளே வைத்துக்கொள்ள வேண்டியது. இன்னொருவனுக்கு சிம்பிள் காயம் என்று சொல்லி வீட்டுக்கு அனுப்ப வேண்டியது. திரும்பவும் ரிஜிஸ்தர் பண்ணியதை மாற்றுவது. அடுத்த நிமிஷம் இன்னொன்று மாற்றுவது. இதற்கெல்லாம் காரணம் என்ன தெரியுமா ? வறுமைதான். சாராயம் கொண்டு வந்து விட்டார்கள். ஆகவே அந்த வகையிலே அவர்களுக்கு ஒன்றும் வருவதில்லை. அரசாங்கத்திலே டி.ஏ. உயர்த்திக் கொடுத்து, வீட்டு வசதி கொடுத்து, அவர்கள் குழந்தைகளுக்குப் படிப்பு வசதி செய்து கொடுத்து, சௌகரியங்கள் எல்லாம் செய்து கொடுத்தால் இந்த மாதிரி எண்ணங்கள் அவர்களுக்கு உதயம் ஆகாது. அதற்காகச் சொன்னேனே தவிர, யாரைப்பற்றியும் குறை சொல்வதற்காக இல்லை. இப்பொழுது தான் நடக்கிறது என்று சொல்லவில்லை.

முதலமைச்சர் அவர்களிடம் எல்லா இலாக்காக்களும் இருக்கின்றன. அவர்களிடம் இப்பொழுது இந்தக் காவல் துறையும் வந்த பிறகு திறமையாக நடக்கிறது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். முதலமைச்சர் அவர்கள் திறமையாக அந்த நிர்வாகத்தை நடத்திக் கொண்டு வருகிறார்கள் கண்டிக்கிறார்கள், அதைப் பாராட்டுகிறேன். என்னைப் பொறுத்தவரையில் அதிலே ஒன்றும் ஆட்சேபணை கிடையாது. ஆனால், இருக்கக்கூடிய கிராமங்களிலே நடக்கிற விதங்களை இந்தச் சட்டமன்றத்திலே சொன்னால் தான் எல்லோருக்கும் தெரியும். சின்னகிராமத்திலே நடப்பது பெரிய ஐ.ஏ.எஸ். ஆபீசர்களுக்குத் தெரியாது. அல்லது, டைரக்டர் ஜெனரலுக்குத் தெரியாது, அவர்களால் புரிந்து கொள்ள முடியாது. அதனாலே அவர்கள் காதிற்கு வரவேண்டும். அவர்கள் பெரிய லெவலில் இருக்கிற ஆபிசர்கள். சின்ன லெவலில், கான்ஸ்டேபிளாக இருக்கிறவர்கள் நிலையை விளக்க வேண்டும் என்பதற்காகத் தான் சொன்னேன் ; யாரையும் குறை சொல்ல வேண்டுமென்று அந்த வார்த்தைகளை நான் சொல்லவில்லை.

இந்தச்சமயத்தில் விருத்தாசலம் பகுதியில் இருக்கிற ஒருசில விஷயங்களைச் சொல்ல வேண்டும். விருத்தாசலம் பெரிய ஜங்ஷன். எல்லாப் பகுதிகளுக்கு போய் வருகிற அளவிற்கு அங்கே

போக்குவரத்து இருக்கிறது. அந்தப் பகுதியில் பிக்-பாக்கெட்
அடிக்கிறவர்கள் அடித்துவிட்டு இரவிலே இரயில் ஏறுவார்கள்,
இறங்குவார்கள். ரெயில்வே டிபார்ட்மென்டில் சொன்னால்
இங்கே இருக்கிறவைகளை கவனிப்பதற்கே போதுமான அளவு
போலீஸ் இல்லை ; திருடுகிற இடத்திற்கு எப்படி அவர்களை
அனுப்புவது என்று கேட்கிறார்கள். நம்முடைய போலீசை
அதிகப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கி
றேன்.

அதேபோல கொலையை செய்துவிட்டு ரெயில் பாதையில்
போட்டு விட்டு போய் விடுகிறார்கள். பின்னால் ரெயில்
அறைத்துவிட்டது என்று முடிவு செய்வார்கள். அந்தப்
பிணத்தை நாமும் எடுக்க முடியாது. பொது மக்களும் எடுக்க
முடியாது. இதுபோன்று நியாயங்கள் அழிக்கப்படுகின்றன என்
பதைச் சொல்கிறேன். இதுபோன்ற செய்திகளை அரசு தெரிந்து
கொள்ள முடியாமல் இருக்கிறது. நம்முடைய போலீசை கேட்
டால் அது ரெயில்வே டிபார்ட்மென்ட் ; நாங்கள் விசாரிக்க
முடியாது என்று சொல்வார்கள். ரெயில்வேயில் ஏதோ விசா
ரணை செய்கிறோம் என்று செய்து பிணத்தை தூக்கி புதைத்து
விடுகிறார்கள். நடந்த கொலை என்ன காரணத்திற்காக நடந்
தது என்பதை கண்டுபிடிக்கப்படாமல் போய் விடுகிறது. அது
போல பல கொலைகள் நடந்து இருக்கின்றன.

அந்தப் பகுதியில் குப்புசாமி என்ற ஒரு பெரிய ஆள் சூதாட்டம்
நடத்திக் கொண்டிருக்கிறார். எந்த அரசு இருந்தாலும்,
பல ஆண்டுகலாக அவர் நடத்தி வருகிறார். அதுமட்டுமல்லாமல்
அவர் இன்னும் பல காரியங்களை நடத்திக் கொண்டிருக்கி
றார். அது எல்லோருக்கும் தெரியும் ; இங்கே இருக்கிற
போலீஸ் அதிகாரிகளுக்கும் தெரியும். அவர் ஒரு பெரிய
ஆள் ; அவரால் தான் அங்கே எல்லா விவகாரங்களும்
நடக்கின்றன. அவர் கையிலே அடியாட்கள், சமூக விரோதிகள்
100 பேர்களை வைத்திருக்கிறார். யாராவது கட்சிக்காரர்கள்
ஊர்வலம் போனால், கூட்டத்தில் கல்லெறிவது ; பொதுக் கூட்
டத்தில் கல்லெறிவது போன்று காரியங்களை செய்வார்கள். அந்த
ஆட்களை வைத்துக்கொண்டு அவர் எல்லா காரியங்களும்
செய்கிறார். பெண்களை கடத்திக் கொண்டு போய் விற்பது
என்றெல்லாம் செய்கிறார். இதுபோன்ற காரியங்களை எல்லாம்
நான் இங்கே சொல்ல வேண்டாமா ? இவையெல்லாம் போலீ
சிற்கு தெரியாதா ? நல்ல குடும்பத்தைச் சேர்ந்தப் பெண்களை
கடத்திக் கொண்டு போய் விற்று விடுகிறார்கள். விற்றவுடன்
அந்தப் பெண் அங்கே கற்பழிக்கப்படுகிறாள் ; பிறகு அவள்
எங்கேயும் போகமுடியாமல், வீட்டிற்கும் வரமுடியாமல்
தற்கொலை செய்து கொள்கிறாள். இதற்கு காரணம் அர





சாங்கமா ? யார் இதற்கு பொறுப்பு என்றால் போலீஸ் நிர்
வாகம் தான் பொறுப்பு. அவர்கள் எல்லாவற்றையும் ஞான
திருஷ்டியில் கண்டுபிடிக்க முடியாது. என்றாலும் ஓரளவிற்கு
தெரிந்து கொள்ள முடியும் இல்லையா ? அங்கே போய் நீ யார்
அம்மா ? என்று விசாரித்து அந்த விடுதியில் இருக்கிற நல்ல
பெண்களை விடுதலை செய்ய முடியும் இல்லையா ? ஆகவே
காரியங்கள் நியாயமாக நடப்பதற்கு போலீஸ் நிர்வாகம்
ஒழுங்காக நடக்க வேண்டும். இல்லையென்றால் எந்த ஒரு
அரசாங்கமும் நல்ல காரியங்களை செய்ய முடியாது. அவர்கள்
நிர்வாகத்தில் திறம்பட நடந்தால் மற்ற துறைகளில் நடக்கும்
தவறுகளை நாம் எளிதாக கண்டுபிடிக்கலாம். அந்தப் பொறுப்பு
அவர்களுக்கு இருக்கிறது. அவர்கள் தங்கள் மனச்சாட்சியை
தொட்டுப் பார்ப்பதில்லை. கான்ஸ்டேபிள்களை எடுத்துக்
கொண்டால் தீபாவளி அன்று நான்கைந்து கான்ஸ்டேபிள்கள்
7, 8 சாக்குப் பைகளை எடுத்துக்கொண்டு ஊர் முழுவதும் போய்
வெடிகளை வாங்கிக் கொண்டு வருகிறார்கள். அந்தமாதிரி
ஒவ்வொரு விழாவின் போதும் மாமூல் வாங்குகிறார்கள். அங்கே
கண்ணன் என்று ஒரு ஹெட் இருக்கிறார். அவரை கேட்டால்
என்னய்யா பண்ணச் சொல்கிறீர்கள் ? அது தான் எங்களுக்கு
வேலை ; போலீஸ் ஸ்டேஷனில் வேறு வேலை இல்லையென்று
சொல்கிறார். கரெக்ட்டாக போய் ஜவுளிக்கடையில் துணி
கிழிக்கிறார் ; என்னென்ன செய்யவேண்டுமோ அவ்வளவும் செய்
கிறார். கடைக்காரர்கள் எல்லாம் கொடுக்கிறார்கள். கொடுக்க
வில்லை என்றால் நோட்டை கிழித்து கடாசுகிறார். அங்கே
இருக்கிற அதிகாரிகளிடம் சொன்னால், நான் என்ன செய்வது,
எவ்வளவோ கூப்பிட்டு கண்டிக்கிறேன் ; வேறு இடத்திற்கு மாற்றி
னாலும் அப்படித்தானே செய்வார் என்று சொல்லுகிறார்கள்.

அதைப்போல அங்கே ஒரு ஆசிரியருக்கும் இன்னொருவருக்கும்
தகராறு. அவரை வீட்டிலேயே புகுந்து ஒருவன் அடித்து விட்டான்.
அடித்தவர் வசதியுள்ள பெரிய கள்ளக்கடத்தல்காரர். அவர்
பேரில் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் சூரிய காந்தி எண்ணெய் கடத்
தல் கேஸ் நடக்கிறது. ஆசிரியரும், ஆசிரியர் வீட்டு அம்மாவும்
வீட்டில் இல்லை ; ஆனால் அவர்கள் பேரில் ஆட்டோமாட்டிக்காக
போலீஸ் ஸ்டேஷனில் கேஸ் ரெஜிஸ்டர் ஆகிறது. இதுபோன்ற
காரியங்களை கண்டுபிடிப்பதற்குத் தான் புலனாய்வுத் துறை
இருக்கிறது. அவர்களால் இதை கண்டுபிடிக்க முடியவில்லையா?
புலனாய்வுத் துறையை ஒவ்வொரு தாலுக்காவிற்கும் போட்டால்
அங்கே போலீஸ் ஸ்டேஷனில் நடக்கிற விஷயங்கள், அரசியல்
வாதிகள், சமூகவிரோத சக்திகள் என்னென்ன செய்கிறார்கள்
என்பதையெல்லாம் கண்டுபிடித்து விட முடியும். யார் யாரோ

தவறு செய்கிறார்கள். அந்த விவரங்கள் எல்லாம் முதலமைச்சருக்கு கட்டாயமாக தெரிய வேண்டும். தெரிந்து கொள்ளக் கூடிய சக்தி அந்தப் புலனாய்வுத் துறைக்குத் தான் உண்டு. அதைப் பயன்படுத்தி, தியாகராசன் யார்? என்ன பண்ணுகிறார்? எங்கே லஞ்சம் வாங்குகிறார்? யார் யாருக்கு வேலை வாங்கிக் கொடுக்கிறேன் என்று பணம் வாங்குகிறார்? என்னென்ன செய்கிறார் என்று பூராவும் தெரிந்து கொள்வதற்கு, புலனாய்வுத் துறையைக் கையில் வைத்திருக்கிற முதலமைச்சர் அதன்மூலம் அத்தனை காரியங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

(முற்பகல் 11-50)

அதேபோல் ஒரு தாலுக்காவுக்கு ஒருவரைப் போட்டு அதைக் கண்காணித்தால் அதைக் கட்டுப்படுத்த முடியாதா? கட்டுப்படுத்த முடியும். அப்படி யாராவது சரியாக செய்யவில்லை என்று சொன்னால் ஒரு 10 பேரை சஸ்பெண்ட் செய்யுங்கள், ஒரு 10 பேர் மீது நடவடிக்கை எடுங்கள், சரியாகப் போய்விடும். பின்னால் அரசியல்வாதிகள் இப்படி செய்து விட்டார்களே என்று சொல்லலாம். ஆனால் கடமையைச் சரியாகச் செய்யவில்லை என்றால் இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கத்தான் வேண்டும். அரசியல்வாதிகளுக்குப் பயப்படக் கூடாது. தவறு செய்கிறவர்கள் மீது அரசு சரியான முறையில் நடவடிக்கை எடுத்தால் மக்கள் அதைப் புரிந்து கொள்வார்கள். அந்த மக்கள் புரிந்து கொண்டால் போதும். ஏனென்றால் இந்த அரசியல்வாதிகள் அந்த மக்களிடம் போய்தான் ஓட்டுக் கேட்கவேண்டும். ஆகவே, அரசைப் பொறுத்தவரையில் தவறு செய்கிறவர்கள் மீது சரியான முறையில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்ற நிலைமை, எண்ணம் இருக்கவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

விருத்தாசலம் போலீஸ் ஸ்டேஷன் அருகிலேயே சோமசுந்தரம் என்ற அட்வகேட் வீட்டில் பகல் 12 மணிக்குப் புகுந்து, அவருடைய மனைவியின் கழுத்தில் இருந்த செயின் எல்லாவற்றையும் கழற்றிக்கொண்டு போயிருக்கிறார்கள். அந்த அம்மையார் இவர்தான் வீட்டில் புகுந்து கொள்ளையடித்தார் என்று ஆளை அடையாளம் காட்டிய பின்னாலும், போலீசார் என்ன சொல்கிறார்கள் என்றால் அவன் இந்த மாதிரி பகலில் நுழைந்து வீட்டுக்குள் திருடுபவன் அல்ல, இரவில்தான் கொள்ளை அடிப்பான் என்று சொல்கிறார்கள். அதைப்போலவே, கருவேப்பிலம்குறிச்சி என்ற இடத்தில்



கோவிந்தராஜன் என்பவர் வீட்டில் புகுந்து கொள்ளை அடித்து இருக்கிறார்கள். பாண்டுரங்கன் வீட்டில் களவு நடந்து இருக்கிறது. இதைக் கண்டுபிடிக்கவேண்டும்.

இப்படிப்பட்ட களவுகளைக் கண்டுபிடிப்பதற்காக புலனாய்வுத் துறை ஒவ்வொரு ஊருக்கு ஒருவர் என்ற முறையில் போடவேண்டும். எஸ்.பி. சி.ஐ.டி. என்று எல்லா இடத்திலும் இருக்கின்றனர். அவர்கள் என்ன செய்கிறார்கள்? இதைப் பற்றி எஸ்.பி.க்கு தகவல் சொல்லவேண்டாமா? அங்கேயிருக்கும் போலீசோடு இந்த எஸ்.பி.சி.ஐ.டி.யும் சேர்ந்து கொண்டால், எப்படி நியாயம் கிடைக்கும்? பின்னர் யாரிடத்தில் போய் நாம் நியாயம் கேட்பது? முதலமைச்சருக்கு இவைகள் எல்லாம் தெரிய வேண்டும். இந்த எஸ்.பி.சி.ஐ.டி. சரியாக வேலை செய்யவில்லை என்று நாம் எங்காவது சொன்னால், வாய்யா, நான் உங்களை எங்கே எப்படி பார்த்துக்கொள்ள வேண்டுமோ, அங்கே பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்கிறார்கள். அதனால் ஒரு ஊரில் ஏதோ கலவரம் நடந்து விட்டது என்று சொன்னால், காங்கிரஸ்காரன் தியாகராஜன் எங்கோ ஒரு இடத்தில் கல் எறிந்தான் என்று சொன்னால், உடனே அந்த நபரைப் பிடித்து தண்டிப்பதற்கு பதிலாக, அந்தத் தெருவில் உள்ள பெண்டு, பிள்ளை எல்லோரையும் பிடித்துப் போட்டு விடுகிறார்கள். இப்படி நியாயத்திற்குப் புறம்பானவகையில் காரியங்களை செய்து வருகிறார்கள். இதையெல்லாம் சரி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள் எல்லா வகையிலும் எதையும் திறமையாகச் செய்தாலும், காவல் துறை ஒன்றை மட்டும் சரியாகச் செய்யாவிட்டால், அதைச் சீரமைப்புச் செய்யாவிட்டால் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு குலைந்து விடும். திருடு, களவு, கொலை அதிகமாகிவிடும். இதை இந்த அரசாங்கம் புரிந்து கொள்ளவேண்டும். இதை எப்படி சீரமைப்பு செய்வது என்பதற்காக ஒரு கமிட்டி போட்டு ஆராய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கொஞ்சம் டைம் கொடுங்கள். யாரையும் நான் துன்புறுத்தும் எண்ணத்தோடு பேசவில்லை. கிராமத்தில் இரண்டு பேர் அடித்துக் கொண்டார்கள் என்று சொன்னால், பெட்டிஷன் கொடுக்க வந்தால், அவனை ஒரு தாங்குதாங்கி உள்ளே தள்ளிவிடுவார்கள். எதற்காக தாங்குகிறார்கள் என்பது துணைத் தலைவருக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எனக்குத் தெரியும். நீங்கள் உங்கள் பேச்சை இத்தோடு முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த மன்றத்தின் முன்னாலே வைக்கப்பட்டிருக்கும் காவல் துறை மானியக் கோரிக்கைமீது நான் சார்ந்து இருக்கும் ஜனதா கட்சியின் சார்பிலே என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஒட்டு மொத்தமாக, தமிழகத்தின் காவல் துறை இந்தியாவிலேயே மிகப் பெயர் பெற்ற, காவல் துறை என்று இருந்த காவல் துறை இன்றைக்கு ஒரு 'டிமாரலைசுடு போர்ஸ்ஸாக' இருக்கிறது. தமிழகத்தின் காவல் துறையைப் பொறுத்தவரையில் The Polic has become a demoralaised force என்கிற அளவில் இன்றைக்கு மாறிக்கொண்டு இருக்கிறது.

அதனுடைய அடிப்படைக் காரணம் என்ன என்பதை நான் இங்கே எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேல் மட்டத்திலிருக்கிற அதிகாரிகள் முதல் கீழே இருக்கிற காவலர்கள் வரையில் இந்த நிலைமை பரவியிருக்கிறது. இதற்கு முழுமையானக் காரணம், முக்கியமான காரணம் என்னவென்றால் இந்த அரசாங்கம்தான். அதிலும் குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அணுகுகின்ற முறைதான் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இதற்கு ஒரு உதாரணத்தைக் கொடுக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

1981 ஆம் ஆண்டு சப் இன்ஸ்பெக்டர் வேலைக்கு தேர்வு நடைபெற்றது. அந்தத் தேர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது தமிழக முதலமைச்சர் அதை பாதியிலே நிறுத்தினார். என்ன காரணத்தைக் கொண்டு நிறுத்தினார்? இந்தத் தேர்வு சரியான முறையில் நடைபெறவில்லை. இந்தத் தேர்வு சரியான முறையில் நடைபெறவில்லை என்பதால் நான் இராணுவத்தை வைத்து, இந்தத் தேர்வை நடத்தப் போகிறேன் என்று சொன்னார். அப்படியானால், தேர்வை நடத்தியது யார்? தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய மிக உயர்ந்த காவல்துறை அதிகாரிகள். மிக உயர்ந்த நிலையில் இருக்கிற ஐ.பி.எஸ். அதிகாரிகள் தேர்வை நடத்தினார்கள். டி.ஐ.ஜி.-க்கள், எஸ்.பி.-க்கள் போன்ற உயர்ந்த நிலையிலுள்ள அதிகாரிகள் இந்தத் தேர்வை நடத்தினார்கள். இந்தத் தேர்வே முதலமைச்சருக்கு திருப்தி அளிக்கவில்லை. இதிலே சீர்கேடு நடக்கிறது என்று சொன்னார். அப்படியானால் இந்த அதிகாரிகளின் கீழ் இருந்து இயங்குகின்ற தமிழக காவல்துறைமீது





தமிழக மக்களுக்கு எப்படி நம்பிக்கை பிறக்கும்? முதலமைச்சருக்கே நம்பிக்கை இல்லை என்றால் இந்த நாட்டு மக்களுக்கு எப்படி நம்பிக்கைப் பிறக்கும்? இது ஒரு காரணம்.

இன்னொரு காரணம். ஏறத்தாழ 10,000 காவலர்களைத் தேர்வு செய்தார்கள். தேர்வு செய்து மூன்று ஆண்டுகள் கழிந்த பிறகு, தேர்வு செய்யப்பட்டவர்கள் என்று கருதப்பட்டவர்களுடைய சர்டிபிகேட்டுகளை எல்லாம் வாங்கி வைத்துக் கொண்டு, தேர்வு செய்யப்பட்டது சரியில்லை, நீங்கள் தேர்வு செய்யப்படவில்லை என்று சொல்லிவிடுகிறார்கள். தேர்வு செய்யப்பட்டவர்கள் பெரும்பாலும் காவல் துறையில் காவலர்களாக இருக்கக்கூடியவர்கள் பிள்ளைகள்தான். அப்படிப்பட்டவர்களை, ஒரு நாள் உங்கள் தேர்வு செல்லாது என்று சொல்லி, 3 ஆண்டுகள் கழித்து வெளியே தள்ளுகிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால் காவலர் குடும்பத்திற்கு 38 கிலோ அரிசி சகாய விலையில் கொடுக்கிறோம், 50 சதவீத சப்சிடி விலையில் தருகிறோம் என்று சொன்னார்கள். இப்போது கொடுக்கிறார்களா? ஒரு காவலர் குடும்பத்திற்கு 4 கிலோ 'பாம் ஆயில்' கொடுப்பதாகச் சொன்னார்கள். இப்போது ஒரு கிலோ கூட இரண்டு மாதத்திற்கு ஒரு தடவை கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட காரணங்களால் இந்த காவல் துறை இன்றைக்கு 'டிமாரலைஸ்ட்' ஆகிவிட்டது. அதற்குக் காரணம் தமிழக அரசும், காவல் துறையின் பொறுப்பை நிர்வகிக்கின்ற முதலமைச்சரும்தான் என்று எடுத்துச்சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல் துறையைப் பொறுத்தவரையில், இன்றைக்கு விசாரணைக் கைதிகளை அதிகமாக லாக்காப்பில் வைத்துக் கொண்டிருக்கின்ற மாநிலம் என்ற ஒரு பெயர் தமிழ்நாட்டுக்கு உண்டு. லாக்கப்பிலே விசாரணைக் கைதிகளின் மரணம் நடக்கிற விகிதாச்சாரம் அதிகமாக இருப்பது, அதிகமாக சாகின்றார்கள் என்ற ஒரு பெயர் தமிழ்நாட்டுக்கு உண்டு. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இன்றைக்கு காவல்துறை ஒட்டுமொத்தமாக 'டிமாரலைஸ்ட் போர்ஸாக' மாறிக் கொண்டு வந்திருக்கிறது. காவல் துறையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு மிக அதிகமான அதிகாரத்தை வைத்துக் கொண்டிருக்கிற ஒரு துறை. இப்படிப்பட்ட ஒரு துறையில் இருக்கக்கூடிய அதிகாரிகள்— மேல்மட்டத்திலிருந்து கீழே இருக்கக்கூடிய காவலர்கள் வரை இப்படிப்பட்டநிலைக்கு ஆளாவார்களானால் நாளைக்கு இந்த தமிழ்நாட்டில் காவல் துறையில் ஒரு 'ஓப்பன் ரிவோல்ட்' வந்துவிடும் பிரச்சனை இருக்கிறது. டிசிப்பிளின்ட் போர்ஸ் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இருந்த காவல்துறை இன்றைக்கு 'மோஸ்ட் இன்டிசிப்பிளின்ட்' என்று சொல்லக்கூடிய அளவுக்கு போய்க் கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

காவல் துறையினருடைய குறைகள் ஒருபக்கம் இப்படி இருந்தாலும் மறு பக்கத்தில் பார்த்தால் விசாரணைக் கைதிகள் லாக்கப்பில் சாகிறார்கள். பல்வேறு சம்பவங்களை அதற்கு எடுத்துக்காட்டலாம்.

அடுத்தபடியாக, இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். 1983 ஆம் ஆண்டில் ஆதாயத்திற்கான கொலை, பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 69. ஆனால் கண்டுபிடிக்கப்பட்டது 29 தான். பதிவு செய்யப்பட்ட வழக்குகளிலேயே 40 வழக்குகள் கண்டுபிடிக்கப்படவில்லை. பதிவு செய்யப்படாத வழக்குகள் எத்தனை என்பதற்கு கணக்கு இல்லை. அதைப்போன்று எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இரண்டு சந்தேகத்திற்கு இடமான மரணங்கள் சமீபத்தில் நடைபெற்றிருக்கின்றன. தாலுகா சப்ளை ஆபீசர் (வட்ட வழங்கல் அதிகாரி) அவர்களுடைய ஒரு மகன் கல்லூரி மாணவன், மர்மான முறையில் கொலை செய்யப்பட்டார் என்ற ஐயப்பாட்டுடன் அந்த மரணத்தைப்பற்றி காவல் துறையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அதற்காக மாணவர்கள் போராட்டம் நடத்தினார்கள். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் கோரிக்கை எழுப்பினார்கள். இன்னும் அது கண்டுபிடிக்கப்படவில்லை. அந்த வழக்கைப் பதிவு செய்தார்களா இல்லையா என்று கூட தெரியாது.

(நண்பகல் 12-00)

அதைப் போன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு போலீஸ்காரர் விபத்தில் இறந்துவிட்டார் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அந்த விபத்துக்குப் பின்னால் பல காரணங்கள் இருக்கின்றன. அந்த போலீஸ்காரரை கொலை செய்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். அதுவும் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் இன்றுஇவ்வளவு சிறப்பாக,பணியாற்றுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. என்னுடைய மாவட்டத்தில் இப்படி எத்தனையோ கொலைகள், எத்தனையோ குற்றங்கள் கண்டுபிடிக்கப்படாமல் இருக்கின்றன. கொலைகள், குற்றங்கள்





பெருகி வருவது ஒரு பக்கம். இவைகளில் காவல் துறையில இருக்கிறவர்கள் அஜாக்கிரதையாக செயல்படுவதால், இந்தத் துறையில், 'இம்மாரலைசேஷன் பேக்டர்' என்று இங்கே குற்றஞ்சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு சில நாட்களுக்கு முன்னால், அம்பத்தூர்ப் பகுதியில், ஒரு கம்பெனியில் பணிபுரிகின்ற ஒரு செக்யூரிட்டி ஆபிசரின் குழந்தையை தண்ணீரிலே அமுக்கிக் கொன்றதாகக் கூட ஒரு செய்தியைப் பத்திரிகையிலே பார்த்தேன். சென்னை மாநகர மக்கள் குடிக்கின்ற அந்தத் தண்ணீரிலே, அந்தத் தண்ணீர் வரும் குழாயிலே இந்தக் குழந்தையின் பிணம் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது.

இதற்கு முன்னால் கூட, இது போன்ற சூழ்நிலை ஏற் பட்டிருக்கிறது. ஒரு பெண்ணுடைய எலும்புக்கூடு மட்டும் தான் அந்தக் குடிநீர் வருகின்ற இடத்திலே கண்டுபிடிக்கப் பட்டதாகச் சட்டமன்றத்திலே கூட விவாதப்பொருளாக வந்ததை நினைவுகூற கடமைப்பட்டிருக்கிறேன். ஆனாலும் கூட, காவல்துறையைச் சேர்ந்தவர்கள், அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்து. இப்படி திறந்துவைத்திருக்கக் கூடிய சென்னை மாநகரத்து மக்கள் குடித்துக்கொண்டிருக்கக் கூடிய, தண்ணீரில் 2, 3 நாட்களாக பிணம் இருந்து, அதை சென்னை மாநகர மக்கள் மட்டும் குடித்தார்கள் என்பது மட்டுமல்ல, அதற்கு முன்னால், அழுகிய நிலையில் ஒரு பெண்ணினுடைய எலும்புக்கூட்டை எடுத்ததாக ஒரு வரலாறு உள்ளது. அந்தக் குழாயைக் கூட மூடுவதற்கு இந்தச் சர்க்காரால் முடிய வில்லை. இதுதான் இன்றைய நிலைமை. ஆனால் துரிதமாக வழக்குகளை முடிக்கிறார்களா என்று பார்த்தால், 1980 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் நடைபெற்ற சில காரணங் களுக்காக, என்னுடைய மாவட்டத்தில் ஒரு சிறு சம்பவத்தை வைத்து வழக்குகள் பதிவு செய்திருந்தார்கள், ஆனால் அதற்குப் பிறகு நீதிமன்றத்திற்குக் கொண்டு போய் 4 ஆண்டுகள் ஆயிற்று. காவல் துறையினுடைய அஜாக்கிரதையால் காவல் துறையினர் கொண்டுபோய்ச் சேர்க்க முடியாததன் காரணமாக அம்மாண்டிவளையில் 1980 ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தல் வழக்கு கூட இன்னும் முடிக்கப்படாமல் இருக்கிறது. இதே போல இன்னும் எத்தனையோ காரியங் களைச் சொல்லமுடியும்.

காவல் துறையைப் பற்றி சொல்லவேண்டுமென்றால், சப்-இன்ஸ்பெக்டர் தேர்வு நடக்கவில்லை. இப்போது யார் சப்-இன்ஸ்பெக்டர்? ஏட்டுகள் தான்—அவர்கள் அவுட்ஆப் சீனியரிட்டி முறையில் எடுக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த ஏட்டுக்கள்

அவர்கள் சப்-இன்ஸ்பெக்டர் இல்லை என்று முழுக்கத் தெரிந்தவர்கள். அவர்கள் சட்டம்—ஒழுங்கைக் கடைபிடிக்கக் கூடிய முறையில் இல்லாதவர்கள். அவர்களை சரியான முறையில் பிரமோஷன் கொடுத்து எடுக்கவில்லை. அவர்கள் தற்காலிக மாக இன்றைக்கு சப்-இன்ஸ்பெக்டர் பதவி வகித்துக்கொண்டு வருகிறார்கள். இப்படி நிரந்தரமாக்கப்படாமல், என்றைக்கு மேல் அதிகாரிகள் கருணையில்லாமல், சப்-இன்ஸ்பெக்டர் தொப்பி போய், ஏட்டுத்தொப்பி வந்துவிடுமோ என்ற பிரஷரில், இவர்கள் எப்படி ஒழுங்கைக்காப்பாற்றி குற்றங் ளைக் கண்டுபிடிக்க முடியும் என்பதை கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, காவலர்கள் போதாமை. 10,000 பேரைத் தேர்ந்தெடுத்து வைத்துக்கொண்டு, அவர்களுக்கு இல்லை என்று சொன்னது ஒரு பக்கம். இப்போது தேர்வுகள் நடை பெற்று விட்டன. தேர்வுகள் எல்லாம் முடிவுற்று, 4-ஆம் தேதியில் கூட பரிட்சை எழுதிவிட்டார்கள். முடிவுகள் இன்னும் அறிவிக்கப்படவில்லை. என்பது ஒரு பக்கம்

பல இடங்களில் காவல் நிலையங்களில் காவலர்களின் பற்றாக்குறை. காவலர்களின் பற்றாக்குறை அப்படி இருந்தாலும்கூட, ஒரு வழக்கு, ஒரு பிரச்சினை காரணமாக, அதிலும் குறிப்பாக என்னுடைய மாவட்டம் மலையோரப் பகுதி. அப்படிப்பட்ட என்னுடைய மாவட்டத்தில் இருக்கக் கூடிய பல இடங்களில் போய் ஒரு காரியத்தைச் சொன்னால் அவர்கள் உடனடியாக அதை விசாரிப்பதற்கான வாகன வசதி கிடையாது. சரி, உடனடியாக தொடர்பு கொள்வதற் கான டெலிபோன் வசதி கிடையாது. புதிதாக மித்திரவளை யிலே இன்றைக்கு ஒரு காவல் நிலையத்தை ஏற்படுத்தியிருக் கிறார்கள். அதற்கும் டெலிபோன் வசதி கிடையாது. இன் னொன்று, இந்த மாவட்டத்தில், பல இடங்களில், பல ஆண்டுக் காலமாக அவுட்-போஸ்டாக இருக்கக்கூடிய இடங்களை, போலீஸ் ஸ்டேசன்களாக மாற்றவேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டு வந்தாலும் கூட, அது நிறைவேற்றப்படவில்லை. உதாரணத்திற்கு, கண்ணுமாமுடியில் இருக்கக்கூடிய, ஆசாரி பள்ளத்திலே இருக்கக்கூடிய, கொத்திக்கோடு குமாரபுரத்திலே இருக்கக்கூடிய அந்த அவுட்-போஸ்ட்கள் உடனடியாக காவல் நிலையங்களாக மாற்றப்படவேண்டும். அதேபோல் இப்போது புதியதாக கருங்கல்லில் ஒரு காவல் நிலையம் தொடங்கப்பட்டு, இப்போது அங்கே போதிம யகாவலர்கள் கிடையாது. போதிய கான்ஸ்டபிள்கள் கிடையாது அங்கே போதிய காவலர்கள் இல்லாத தன் காரணமாக பதிவு செய்யப்பட்ட வழக்குகள் சரியான முறையில் கண்டுபிடிக்கப்படாத நிலைமையில் இருக்கின்றன. ஆகவே, அரசாங்கத்தினுடைய ஒட்டுமொத்தமான அணுகுமுறை ஒரு பக்கம், அரசாங்கத்தின் அணுகுமுறையாலே, காவலர்கள்





பாதிக்கப்பட்டது ஒரு பக்கம், இப்படி இருக்கிறது. இன் னொன்று, காவலர்களுடைய நிலைமை எப்படி இருக்கிறது என்று சொன்னால், சரியான முறையிலே இல்லாததினால், இருக்கின்ற வரையில் நாம் பயன்படுத்திக்கொள்வோம், பெற்றுக் கொள்வோம் என்ற அளவிலே தான், இன்றைக்கு கிராமங் களில் உள்ள காவல் நிலையங்கள் செயல்பட்டுக்கொண்டு வரு கின்றன. ஒருவன் ஒரு வழக்கைக் கொண்டு வந்தால், ஒரு புகார் கொண்டு வந்தால், அதில், வாதி, பிரதிவாதி, ஆகிய வர்களில் யார் அதிகமான அளவிற்குப்பணம் கொடுக்கமுடியுமோ யாருக்கு அதிகமான அளவிற்கு பணம் கொடுப்பதற்கான வசதிகள் இருக்கிறதோ, அவர்களுக்குத்தான் நீதி கிடைக்கிறதே, யல்லாமல், உண்மையிலேயே குற்றவாளி தண்டிக்கப்படுவ தில்லை. இது எங்கே போய் நிற்கும்? ஏற்கனவே காவல் நிலையத்தில் இருக்கும் காவலர்கள், காவல்துறை, ஒரு டிமாரலைஸ்டு போர்சாக வருகிறது என்பது மட்டுமல்ல. மக்கள் கூட காவல்துறையை எதிர்த்து புரட்சி செய்கின்ற அள விற்கு............

திரு. க. முத்துக்கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, மாண்பு மிகு உறுப்பினர் விஜயராகவன் அவர்கள் பேசுகின்றபோது, காவல்துறை அலுவலகங்களில் சென்று வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்று மக்கள் செல்லுகின்ற நேரத்தில், யார் கூடுதலாக பணம் கொடுத்தார்களோ. அவர்களுடைய வழக்கை மட்டும்தான் பதிவு செய்ததாகச் சொல்கிறார்கள். உறுப் பினர் அவர்கள் எந்த ஆதாரத்தோடு இந்தப் பேசுகிறார்கள்? எந்த வழக்கிற்கு யார் பணம் கொடுத்தார்கள்? என்பதை தயவுசெய்து குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா? என்பதை நான் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

திரு. பொ. விஜயராகவன்: மாற்றுத் தலைவர் அவர்களே. I can give umpteen numb.r of ca es. If you want I will give a l s, of it. ஆயிரக்கணக்கானவற்றைச் சொல்லமுடியும்,. ஒன்றல்ல. (குறுக்கீடு) இன்னும் சொல்லப்போனால், இந்த மன்றத்திற்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் * * * * * * * * * * * *(குறுக்கீடு). இதுபோன்று எத்தனையோ ஆதாரங்களை வேண்டுமானால் கூட கொடுக்க முடியும்.

திரு. க. முத்துக்கிருஷ்ணன்: மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் மீண்டும் ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுக்களைச் சொல்கிறார்கள் * * * ஆகவே அவர்கள் பேசியதை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றன.

திரு. என். சங்கரய்யா ஏற்கனவே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசுகையில் தோழர் உமாநாத் அவர்கள் இந்த விஷயத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதெல்லாம் ரிக்கார்டுகளிலே இருக்கிறது. ஏற்கனவே பேசி பதில் அளிக்கப்பட்ட விஷயந்தான் இது. (கூச்சல்-குழப்பம்)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 12-10)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏன் இவ்வளவு பேரும் எழுந்து நிற்கிறீர்கள்? உட்காருங்கள் இங்கே சாதாரணமாக அன்-பார்லியமெண்ட்டரி என்ற முறையில் வரும் வார்த்தைகள் மட்டுமல்ல; நம்முடைய விதிகளுக்கு முரணாகப் பேசப் பெறுபவைகளும் கூட நீக்கப்பெறுகின்றன. போதிய ஆதாரமின்றி சொல்லப்பெற்ற அந்த வார்த்தைகள் நீக்கப் பெற்றன. (கூச்சல், குழப்பம்).

திரு. சோ. அழகர்சாமி : ஒன்றுமே பேச வேண்டாம் என்றால் எதைப் பேசுவது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எதையுமே பேசக்கூடாது என்று சொல்லவில்லை. கையிலே ஆதாரம் இல்லாமல் குற்றச்சாட்டுகளைப் பேசக்கூடாது. ஆதாரம் இருந்தால், அனுமதி பெற்றுக் கொண்டு பேசலாம். (கூச்சல், குழப்பம்).

திரு. சோ. அழகர்சாமி : அவர் பெயரைச் சொல்லவில்லை, யாரைப் பற்றியும் குற்றச்சாட்டாகவும் சொல்லவில்லை....

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே பெயரைக் குறிப்பிடவில்லை என்று சொன்னார்கள். * * * என்று சொன்னால் அதிலிருந்து புரியாதா? * * *

அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : உமாநாத் அவர்கள் ஏற்கனவே இது பற்றி பேசியிருக்கிறார். அது ரிக்கார்ட்டிலே இருக்கிறது. அதைத்தான் இவரும் பேசியிருக்கிறார்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திரு. பொ. விஜயராகவன் : அப்படிச் சொல்வதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. ஆனால் இதுபோன்ற கருத்து நிலவுகிறது என்பதைத்தான் இந்த அவைக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கருத்து ஒன்றும் நிலவவில்லை.

திரு. பொ. விஜயராகவன் : துணைத் தலைவர் அவர்களே, ஆக, இது போன்ற சூழ்நிலைகள் இன்றைக்கு ஏற்பட்டுக் கொண்டிருப்பதற்கு நம்முடைய அரசினுடைய தவறான அணுகு முறைதான் காரணம். குறிப்பாக காவல்துறையினிடைய்ய நடைபெற்றுக் கொண்டிருக்கிற இத்தகைய மோசமான சூழ்நிலைகளுக்கு காரண கர்த்தாவாக இருப்பது நம்முடைய அரசினுடைய அணுகுமுறைதான் என்பதை எடுத்துச் சொல்லி, அந்த அணுகு முறையின் காரணமாகத்தான் இன்றைக்கு பல அவலமான காரியங்கள் தமிழ் நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. என்று சொல்ல விரும்புகிறேன்.

விசாரணைக் கைதிகளை அதிக நாட்களுக்கு லாக்கப்பிலே வைத்திருப்பது, சட்டத்திற்கு விரோதமாக அவர்களை அழைத்துச் சென்று காவலிலே வைத்திருப்பது; சார்ச் ஷீட் கூடப் போடாமல் விசாரணைக் கைதிகளை லாக்-அப் சிறையிலே வைத்திருப்பது; லாக்கப்பிலே இருப்பவர்கள் மரணம் அடைவது போன்ற இவைகளில் தமிழ் நாடு முதலிடம் வகிக்கின்ற சூழ்நிலை இருப்பது நமக்கெல்லாம் நல்ல பெயரைத் தராது. ஒரு காலத்தில் தமிழகத்தினுடைய காவல் துறை என்று சொன்னால், அகில இந்தியா முழுவதற்கும், இந்தியாவினுடைய எல்லாப் பகுதிகளும் பாராட்டக்கூடிய அளவிற்கு இருந்தது. அதைப்போன்ற நிலைமை வரவேண்டும் என்பதற்காகத்தான் எடுத்துச் சொன்னேனே. அல்லாமல் வேறு அல்ல. ஆகவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற இரண்டு சந்தேகத்திற்கு இடமான மரணங்களைப் பற்றி அரசாங்கம் விசாரணை செய்து, ஒரு அறிக்கையை இந்த மன்றத்தில் வைக்க வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பு அளித்தமைக்காக, நன்றி கூறி அமைகிறேன். நன்றி வணக்கம்.

திரு. கு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல்துறை மானியத்தின் மீது பேசுவதற்காக வாய்ப்பு அளித்தமைக்காக, நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். காவல் துறை இயங்குகின்ற விதத்தை மக்கள் நல்ல முறையிலே ஆதரித்தாலும், எதிர்க் கட்சியைச்

சேர்ந்தவர்கள் கடுமையாக விமர்சனம் செய்கின்ற ஒரு சூழ்நிலை ஜனநாயக நாட்டிலே அமைவது என்பது இயற்கை. அந்த முறையிலே ஏதாவது தவறு இருந்தால் எதிர்க் கட்சிக்காரர்கள் சுட்டிக் காட்டுவதைப் பற்றிக் கவலை இல்லை. ஆனால் உண்மையே இல்லாமல், ஆதாரமே இல்லாமல் குற்றச்சாட்டுகளை காவல் துறையினர் மீது சுமத்துகிறபோது தான் நமக்கு வருத்தம் ஏற்படுகிறது. ஆனாலும், காவல் துறை இன்னமும் நல்ல முறையிலே செயல்படுவதற்கு ஏற்ற கருத்துக்களை அவர்கள் சொன்னால், உண்மையிலேயே அந்தக் கருத்துக்களை வரவேற்போம்.

ஆனாலும் எதிர்க்கட்சிகளைப் பொறுத்த அளவிலே தமிழ் நாட்டிலே இந்த அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், பதவி பொறுப்பிற்கு வந்ததற்குப் பின்னால், எந்த அளவு ஒத்துழைப்போடு செயல்பட்டிருக்கிறார்கள் என்பதுதான் இங்கே கேள்விக்குறியாக இருக்கிறது. 1977க்குப் பின்னால் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் நடத்திய போராட்டங்கள் இங்கே எத்தனையோ உண்டு என்பதைத் தான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ் நாட்டில் எங்கே பார்த்தாலும் ஊர்வலங்கள், அதேபோல அடிக்கடி போராட்டங் கள். அது மட்டும் அல்ல, எல்லாத் துறைகளிலும் இந்த அரசை எதிர்த்து அவர்கள் ஊர்வலங்களை நடத்தச் செய்து, தூண்டி விட்டு இந்த அரசிற்கு எதிராக திட்டமிட்டு பல்வேறு விதமான போராட்டங்களை எல்லாம் நடத்தினார்கள். அந்தப் போராட் டங்களையெல்லாம் இந்த அரசு எப்படிச் சமாளித்தது ?1977க்கு முன்னால் ஆட்சியில் இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் எப்படி எதிர்க்கட்சியினரை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கு வோம் என்று சொன்னார்களோ, அப்படி இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கவில்லை என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இரும்புக்கரம் என்ற சொல்லே இந்த ஆட்சியிலே உள்ள காவல் துறைக்கு இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல எதிர்க்கட்சி சார்பிலே நடத்தப்படுகிற ஊர்வலங் கள் இன்னும் பல காரியங்களுக்கு தேவையான பாதுகாப்பை தான் இந்த ஆட்சி காவல் துறையின் மூலமாக கொடுத்து வந்திருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே குறிப்பிட்டுக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் எந்தச் சந்தர்ப்பத்தி லும் சரி, எப்படி சந்தர்ப்பம் கிடைக்கும் இந்த அரசுக்கு எந்த வகையிலே கெட்ட பெயர் ஏற்படுத்தலாம் என்றுதான் எதிர்க் கட்சிகள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.





மதுரையிலே மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கும் காவல் துறையினருக்கும் தகராறு ஏற்பட்டபோது **

திரு. என். [redacted] மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) **.

கமிஷன் விசாரணை வைக்கப்பட்டிருக்கிறது. **

என்று சொல்வது அதற்கு எப்படி பொருத்தமாக இருக்கும் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விசாரணைக் கமிஷன் முன்பு இருக்கிற பிரச்சினையைப் பற்றி பேசத் தேவை யில்லை. அது அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்பெறுகிறது.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிரச்சனைக்கு உள்ளாக நான் செல்ல வில்லை. இந்த அரசுக்கு எந்தப் பிரச்சனை ஏற்பட்டாலும்......

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : எல்லா சமயங்களிலும் இப்படிப்பட்ட பிரச்னைகள் வரும்போது, வழக்கு மன்றத்திலே இருக்கக்கூடிய, அல்லது விசாரணையில் இருக்கக் கூடிய ஒன்றைப் பற்றி சந்தேகப்படும்படியாகவோ, சூசகமாகவோ கூட வார்த்தைகளைப் பயன்படுத்தக்கூடாது என்று ஒரு முறையை நாம் வைத்திருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் வேறு பிரச்சினைக்குப் போகலாம் என்று நான் கருதுகிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிகவும் முக்கியமான பாயின்ட் ஆப் ஆர்டர், நம்முடைய கோட்டையிலே பறக்கிற தேசியக் கொடி பாதிக் கம்பத்திலே பறந்துக் கொண்டிருக்கிறதே என்ன காரணம் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : Guinea நாட்டு அதிபர் மறைந்துவிட்டார். இன்றைக்கு அடக்கம் செய்கிறார் கள். அதனால் அரைக்கம்பத்தில் பறக்கிறது.

(பிற்பகல் 12-20)

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இயங்குகின்ற காவல் துறை மிக சிறப்பாக செயல்படுகிறது. பலயிடங்களில் நடை பெறுகின்ற குற்றங்களை எல்லாம் தமிழக காவல்துறையினர்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

குறிப்பாக நாட்டையே, உலுக்குகின்ற அளவில் அதிர்ச்சி தரக் கூடிய பல சம்பவங்கள் வருகின்ற நேரத்தில் இத்தனை மணிக்குள் இல்லை என்றால் இத்தனை நாட்களுக்குள் என்று சொல்லு கின்ற அளவில் வெகு வேகமாக வழக்குகளை கண்டுபிடிக் கிறது என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட்டுச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்லத எடுத்துக் கொண்டால்கூட அங்கே குமரகோயில் என்ற கோயில் இருக்கிறது. அங்கே பணியில் இருந்த ஒரு காவலர் கொலை செய்யப்பட்டு யாருமே கண்டுபிடிக்க முடியாத அளவில் இருந்த ஒரு நேரத்தில், காவல்துறை மிக சாமர்த்தியமாக அந்த கொலைகாரனை கண்டு பிடித்து அவனுக்கு நீதி மன்றத்தின் மூலமாக ஆயுள் தண்டனை வாங்கிக்கொடுத்து இருக்கிறார்கள், என்று சொன்னால் தமிழக காவல்துறையை உள்ளபடியே நான் பாராட்டிச் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால் இந்த அளவுக்கு வெகு வேகமாக செயல்படுகின்ற தமிழக அரசின் காவல்துறையை குறை சொல்வது தான் உண்மையிலேயே வருந்தத்தக்கதாக இருக்கிறது. எதிர்க் கட்சிகள் அவர்கள் மேல் திணிக்கின்ற கருத்துக்கள் நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கிறது என்பதை நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அதே நேரத்தில் இந்தியாவில் மற்ற மாநிலங்களில் நடைபெறுகின்ற பல்வேறு சம்பவங்களை நினைக்கும்போது நான் அதை சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை. வெளி மாநிலங்களில் நடைபெறுகின்ற சம்பவங்களை நான்ஒன்று இரண்டு உதாரணமாக சுட்டிக்காட்டி தமிழக காவல்துறை எந்த அளவுக்கு சிறப்பாக செயல்படுகிறது என்பதை நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். பம்பாயில் நேற்று நடைபெற்ற சம்பவங்களை நாம் பத்திரிகையில் செய்திகளாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். தினமலர் பத்திரிகையில் மிக விளக்கமாக எழுதியிருக்கிறார்கள். அந்த பத்திரிகை நிரு பர்களுக்கு அங்கே பாதுகாப்பு இல்லை என்று சொல்லியிருக் கிறார்கள். சமூகத்திலே சமூகவிரோதிகள் செய்கின்ற குற்றங்களை மிக தைரியமாக எடுத்து எழுதிய பத்திரிகை ஆசிரியர் ஏ. எல். நாராயணன் என்பவரை அங்கே கொலை செய்திருக்கிறாகள். எங்கே பம்பாயில்?

அதேபோல் பஞ்சாபில் இந்தியன் எக்ஸ்பிரஸ் நிருபர் சந்தியசோ என்பவர் அங்கே குத்தப்பட்டு இருக்கிறார்கள். அதே போல் கர்நாடக மாநிலத்தில் தந்தி பத்திரிகையின் உதவி ஆசிரியர் சித்தாமேத் தக்கப்பட்டிருக்கிறார்கள்.

அது மட்டும் அல்ல பீகாரை எடுத்துக்கொண்டால் அங்குள்ள காவல் துறைக்கு போட்டியாக அங்கே பூமிசேனா இயக்கத்தினர் ஆயுத ஊர்வலம் வருகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. காவல் துறையினர் இருக்கின்ற எண்ணிக்கையை விட பீகாரில் அதைவிட



கூடுதலான எண்ணிக்கையில் தனி நபர்கள் வைத்து இருக்கின்ற பல்வேறு ஆயுத படைகள், தலைமை நிலையங்கள் அங்கே காவல் துறைக்கு சமமாக செயல்பட்டு, காவல்துறை மக்களுக்கு ஒரு நியாயமான நல்ல வழியில் கிடைக்காத முறையில் குழப்பமான சூழ்நிலைகள் நாட்டில் பல்வேறு மாநிலங்களில் நடைபெறுகிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இது போன்ற நிலைமைகள் பல்வேறு மாநிலங்களில் இருந்தாலும் அங்குள்ள காவல்துறை அதை சமாளிப்பதை விட இங்கே தமிழ் நாட்டில் உள்ள காவல்துறை எந்த அளவுக்கு தமிழ்நாட்டில் எந்தப் பிரச்சனையும் இல்லாத அளவுக்கு மக்கள் சுமுகமாக வாழ்கின்ற நல்ல சூழ்நிலை இந்தியாவில் தமிழகத்தில் மட்டும் தான் சிறப்பாகக் காவல் துறை செய்து வருகின்றது என் பதே இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன். 5 கோடி மக்கள் இருக்கின்ற தமிழ்நாட்டில் 56 ஆயிரம் காவல்துறையினர் இந்த மக்களுடைய சட்டம், ஒழுங்கை கவனிக்கின்றார்கள் என்று சொன்னால் எந்த அளவுக்கு திறமையாக இந்தக் காவல்துறை செயல்படுகிறது என்பதற்கு இதுவே உதாரணம் என்பதை இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக் கப்பெற்றது) காவலர்களைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் தான் இந்தியாவில் எந்த அரசும் கொடுக்காத சலுகைகளை எல்லாம் தமிழக அரசின் சார்பாக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் செய்து இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காவலர்களுக்கு மலிவு விலையில் அரிசி, பருப்பு போன்ற பொருட் களை எல்லாம் கொடுக்கின்ற ஒரே அரசு இந்தியாவில் இருக்கின்ற தமிழக அரசு என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல தமிழக காவல்துறையில் தான் ஏராளமான பேர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கின்ற வகையில் மிக அருமையான சீர்திருத்தங்களை தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் செய்து கொண்டு வந்தி ருக்கிறார்கள். கிராமங்களில் இருக்கின்ற போலீஸ் ஸ்டேஷன் களில் முன்பு ஒரே ஒரு எஸ். ஐ. தான் இருப்பார். அவர்தான் எல்லாப் பணிகளையும் செய்வார். ஆனால் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்புக்கு வந்த பிறகு அங்கே கிரைமுக்கு தனியாக ஒரு எஸ். ஐ. அதுபோல லா அண்டு ஆர்டருக்கு தனியாக ஒரு எஸ். ஐ. ஏற்படுத்திக் கொடுத்த பெருமை, மக்களுக்கு விரை வாக பணிகளை செய்வதற்கு ஏற்படுத்தித் தந்த பெருமை தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களையே சாரும் என்பதை இந்த நேரத்தில் நான் பணிவன்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பற்றி 2 கோரிக்கைகளை மட்டும் வைத்து முடிக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் குறிப்பாக கன்னியாகுமரிக்கு தனியாக ஒரு டி. எஸ். பி. அலுவலகம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதை இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். கன்னியாகுமரி சுற்றுலா மக்கள் ஏராளமாக வருகின்ற பகுதியாக இருப்பதால் அந்த கன்னியாகுமரிக்கு தனியாக ஒரு டி. எஸ். பி. அலுவலகம் ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது போல அங்கே தீ அணைப்பு வாகனங்கள் இரண்டு இருக்கின்றன. 2 வாகனங்கள் செயல்படாமல் இருக்கின்றன. ஆகவே, தேவை யான அளவுக்கு தீ அணைப்பு வாகனங்களை அங்கே கூடுதலாக செயல்பட அனுமதி தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது போல உட்கோட்ட நீதிமன்றம் தாலுக்கா அளவிலே செயல் படுகின்ற ஒரு நீதி மன்றம்......(மணியடிக்கப் பெற்றது).

*திரு. ஏ சாகுல் ஹமீது : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவரவர்களே, இன்றைக்குக் காவல் துறை மானியத்தின்மீது நான் சார்ந்திருக்கின்ற இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பாகப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுது காவல் துறையைப் பற்றியும், அதன் சிறப்பான பணிகளைப் பற்றியும் பல்வேறு விதமான கருத்துக்கள் எடுத்துக் கூறப்பட்டன. தமி ழகத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்குக் காவல்துறை சிறப் பாகவும், போற்றத்தக்க வகையிலேயும் நடைபெறுவதாக இங்கே ஆளுங்கட்சி தரப்பில் பேசப்பட்டது. அப்படித்தான் இந்தக் காவல்துறை நடைபெற வேண்டும் என்பது என் முதல் ஆசை. உள்ளத்து ஆசை.

ஆனால், இப்படிச் சிறப்பாக நடைபெறுகிறது என்று சொல்லு கின்ற நேரத்தில் காவல்துறை எந்த அளவிற்கு நடைமுறையில் செயல்படுகிறது என்பது குறித்துப் பல்வேறு சம்பவங்கள் இந்த அவையிலேயே எடுத்துச் சொல்லப்பட்டு பல்வேறு குற்றங்கள் சாட்டப்பட்டிருக்கிறது. காவல்துறையின் கொடுமைகளைப் பற்றியும், கெடுபிடிகளைப் பற்றியும், அராஜகத்தைப் பற்றியும் பல்வேறுவிதமான ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளில் இந்த அவையிலே நாங்கள் வைத்து இருக்கிறோம்.

இன்றைக்கு இங்கே உள்ள ஆளுங்கட்சி உறுப்பினர்கள் வேண்டுமானால் அதிகாரிகளுக்கு வக்காலத்து வாங்கிப் பேசலாம். ஆனால் நாட்டு மக்கள் அதை நம்புவதற்குத் தயாராக இல்லை. ஏனென்றால், காவல்துறையால் பாதிக்கப்பட்ட மக்கள் அதை





நினைவில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். காவல்துறை
நீதியாகச் செயல்பட வேண்டும். காவல்துறை நியாயமாகச்
செயல்பட வேண்டும் ; காவல்துறை பாரபட்சம் இல்லாத முறை
யிலே செயல்பட வேண்டும் என்பதுதான் எங்கள் ஆசை. காவல்
துறை நியாயமாக நடந்து கொள்ள வேண்டுமென்பதுதான்
எங்களின் பேரவா.

ஆனால், நாட்டிலே நடக்கின்ற நடைமுறைகளைப் பார்க்
கின்றபொழுது, காவல்துறை தொடுத்திருக்கின்ற வழக்குகளிலே
பெரும்பகுதி பொய் கேசுகளாகத்தான் போடப்பட்டிருக்கின்றன
என்பதற்கு ஆதாரமாக இன்றைக்கு எத்தனையோ பல்வேறு
சம்பவங்கள் அதிகாரிகளுக்குமனுக்களின் மூலமாகத் தெரிவிக்கப்
பட்டிருக்கின்றன. அப்படித் தெரிவிக்கப்பட்டிருந்தும், உரிய
நடவடிக்கை அவைகளின் மீது எடுக்கப்படாத காரணத்தினால்
தான் இன்றைக்குக் காவல்துறையின் பாரபட்ச நடவடிக்கை
களைப் பற்றிச் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

லாக்கப்பில் எத்தனையோ கொலைகள் நடந்திருக்கின்றன
எத்தனையோ வழிப்பறிகள் நடந்திருக்கின்றன ; காவல்துறை
யிலே ஒரு கேசைப் பிடித்தால், அதில் சம்பந்தப்பட்ட நபர்களை
லாக்கப்பில் அடைக்கின்றார்கள் என்றால் அவர்கள் திரும்பி
வருவார்களா என்ற சந்தேகம் இன்றைக்கு நாட்டு மக்களிடத்
திலே ஏற்பட்டிருக்கிறது. அப்படி என்றால், காவல்துறையின்
மீது இன்றைக்கு மக்கள் எந்த அளவிற்கு நம்பிக்கை இழந்திருக்கி
றார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். அதை
நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், காவல்துறையில் எத்தனையோ அதி
காரங்களை வைத்திருக்கிறார்கள். ஆனால் பழைய இரும்பு
வாக
பட்டறை வியாபாரிகள், வெல்டிங் ஒர்க் பட்டறைகள்
வைத்திருப்பவர்கள்,
னங்கள் பழுது பார்க்கும் பட்டறைகள்
டிங்கர் ஒர்க்ஷாப் வைத்திருப்பவர்கள் போன்ற இப்படிப்பட்ட
சிறு சிறு வியாபாரிகள் காவல் துறையினிடத்தில் லைசென்ஸ்
பெற வேண்டுமென்று மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
போக்குவரத்து இடையூறு, திருட்டுப் பொருள் வாங்குவதைத்
தடுக்கும் அதிகாரம் காவல்துறைக்கு ஏற்கெனவே உள்ளது.
இந்தக் கடைகளுக்கும் ஒரு லைசென்சைக் காவல்துறையிடம்
வாங்க வேண்டுமென்று கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் தேவை
யில்லாத ஒன்று. அதுமட்டும் அல்லாமல், அந்த பழைய இரும்புக்
கடைகள், வெல்டிங் ஒர்க்ஷாப், டிங்கர் ஒர்க்ஷாப்
பட்டறை
போன்ற பட்டறை இடங்களில் பணியாற்றுகின்ற வேலைக்காரர்
களின் போட்டோக்களைக்கூடக் கேட்கிறார்கள் என்று சொன்
னால் தொழிலாளர்கள் மீது நம்பிக்கை இல்லை என்பதைத்தான்
இது காட்டுகிறது. தொழிலாளர் போட்டோ பதிவேடு கடை
பிடிக்க வற்புறுத்துவதாவது ரவுடிகளாக சமூக விரோதிகளாக
இவர்களைக் கருதுவதாக இருக்கிறது.

[திரு. ஏ. சாகுல் ஹமீது] [1984 மார்ச் 30

அவர்கள் நடத்துகின்ற பட்டரைக்கு சிறுதொழில்கள் சம்பந்தமாக ஏற்கெனவே லைசென்சு பெற்றிருக்கிறார்கள். அவர்களிடம், அங்கு பணியாற்றுகின்றவர்களின் போட்டோக்களைக் கொடுக்க வேண்டுமென்று கட்டுப்படுத்துவது என்பதும் காவல் துறை லைசென்ஸ் வாங்க வேண்டுமென்பதும் இலஞ்ச ஊழல்களுக்குத்தான் வழி வகுக்கும். இதனால் அங்கே உள்ள வியாபாரிகள் போலீசுக்குப் பயந்துகொண்டு வாழ்கின்ற நிலைமை ஏற்பட்டு விடும். அப்படிப்பட்ட நிலைமைகளைத் தடுக்க வேண்டும் என்றுக் கேட்டுக் கொள்கிறேன். இந்த லைசென்ஸ் முறையையும் போட்டோபதிவேடு முறையையும் ரத்து செய்யக் கோருகிறேன்.

வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையில்எத்தனையோ முறை இந்த மன்றத்தில் சொல்லிச் சொல்லி அலுத்துவிட்டோம்., மைனாரிட்டி மக்களுக்கு வாய்ப்புக்கள் இல்லை என்று சொல்லிச் சொல்லி சலித்துவிட்டோம். நிச்சயமாக இந்த அரசின் மீது அது நடக்கும் என்ற நம்பிக்கையை சிறுபான்மை சமுதாயம் இழந்திருக்கிறோம். இன்றைக்குக் கூட்டாச்சி பொறுப்பிலே, முஸ்லீம் லீக் பொறுப்பு ஏற்கின்ற வரையில் மைனாரிட்டி மக்களுக்குரிய உரிமைகள்பாதுகாப்பு இருக்கும் என்றநம்பிக்கையை நாங்கள்இழந்து விட்டோம். இதைப்பற்றிச் சொல்லிச் சொல்லி அலுத்து, சலித்து விட்டோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறுபான்மையான முஸ்லீம் மக்கள் ஜமாத்துக்கள் வைத்து தங்கள் சமுதாயப் பணிகளைச் செய்துக் கொண்டு வருகிறார்கள். யாரோ ஓரிருவர் கம்ப்ளெயின்ட் கொடுத்தால், அந்த ஜமாத்தை சேர்ந்தவர்களைப் போலீசார் அழைத்து, பேசக்கூடாத வார்த்தைகளையெல்லாம் பேசி அவமானப்படுத்துகிறார்கள். அவர்கள் மீது குற்றம் இருந்தால் அதைப்பற்றி விசாரணை செய்வதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் குற்றமில்லாதவர்களை—ஜமாத்தையே அழைத்து அவமானப்படுத்துகின்ற நிலையை எண்ணி முஸ்லீம் மக்கள் பல்வேறு இடங்களில் வருத்தப்படுகின்ற நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் துறையைப் பற்றி மொத்தத்திலே எடுத்துக்சொண்டால், காவல்துறையினால் சட்டம் ஒழுங்குகள் வேறுவிதமாகப் துஷ்பிரயோகமாக பயன்படுத்தப்படுகின்றன. குண்டா ஆக்ட் என்பது இன்றைக்குத் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. அரசு எத்தனையோ கறுப்புச் சட்டங்களைப் போட்டு, அதனால் தொழிலாளர் வர்க்கத்தையும், விவசாயக் கூலிகளையும் படாத பாடு படுத்துகின்றது இந்தப் போலீஸ் துறை என்பதைக் கண் கூடாகப் பார்க்கின்றோம். அப்படிப்பட்ட நிலைமை இருக்கக் கூடாது.



1984 மார்ச் 30] [திரு. ஏ. சாகுல் ஹமீது]

காவல்துறை பணிகள் சிறப்பாக இருக்க வேண்டுமென்
பதுதான் எதிர்க்கட்சிகளாக இருக்கின்ற எங்களுடைய ஆசை
யும் விருப்பமும் ஆகும். ஆனால் இன்றைக்கு நாட்டு நடப்பு
அவ்வாறு இல்லை. காவல்துறையில் இலஞ்ச ஊழல் இருக்
கின்றது என்று நாங்கள் சொல்கிறோம்; அவ்வாறு இல்லை
என்று நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால் நாட்டு மக்கள், படித்த
மக்கள் அறிவார்கள். யார் மூலம், எப்படிக் கொடுத்திருக்
கிறார்கள் என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும். அந்த பகுதி
மக்களுக்கு தெரியும். அதன் விளைவை வருங்காலம் நிச்சய
மாக உணர்த்தும்.

(பிற்பகல் 12-30)

இன்றைக்கு காவல் துறையினால் அதிகமாகப் பாதிக்
கப்பட்ட சமுதாயம் அரிசன சமுதாயமும் முஸ்லீம் சமுதாயமும்
தான் இன்றைக்கும் தீண்டாமைச் சட்டம் இருக்கின்றது. அப்படி
தீண்டாமைச் சட்டம் இருந்தாலும் கூட அது சரியாக
அமல் நடத்தப்படாத நிலைமை இருக்கின்றது. அப்படிப்பட்ட
நிலைமை வளர்ந்திருக்கின்றது. எனவே சட்டம் புறக்கணிக்
கப்பட்டிருக்கின்றது. அமுல்படுத்த தவறி விட்டிருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதியிலே கூட கம்மாச்சேரி கிராமத்திலே
இரு சமுதாயத்தினருக்கிடையே கோஷ்டி சண்டை நடந்தது.
அப்படி சண்டை ஏற்பட்ட நிலைமையில் ஒரு சமுதாயத்தினர்
மீது மட்டும் கேஸ் புக் பண்ணி இருக்கிறார்கள். அதன் கார
ணமாக அந்த மக்கள் தினமும் கோர்ட்டுக்கு நடந்து கொண்
டிருக்கின்ற நிலைமையைப் பார்க்க முடிகின்றது. ஆகவே
காவல் துறை நல்ல முறையில் பாரபட்சமற்ற முறையில்
நடந்து கொள்ள வேண்டும். இன்றைக்கு இருக்கின்ற இந்த
ஆட்சியினை விரைவில் மாற்றக்கூடிய ஒரு துறையாக காவல்
துறைதான் இருக்கின்றது. நாளைக்கு வாக்குச் சாவடிக்கு
மக்கள் செல்கின்றபோது வாக்கு சீட்டை பெட்டியில் போடும்
போது அங்கே காக்கிச்சட்டை தான் கண்முன் வரும். அதன்
காரணமாக இந்த ஆட்சி மாறும் என்பதைத் கூறி என்னுடைய
வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி : பேரவைத் துணைத்தலைவர் அவர்
களே, தமிழக முதல்வர், எங்கள் இதய தெய்வம் டாக்டர்
புரட்சித்தலைவர். அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற காவல்
துறை, தீயணைப்புத்துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை
ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய சில
கருத்துக்களை ஆளும் கட்சி சார்பாக இணைத்துக்கொள்
கிறேன் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ஏ. சாகுல் ஹமீது] [1984 மார்ச் 30

காவல்துறையை நெருப்பு என்று பேரறிஞர் அண்ணா
அவர்கள் பொதுக்கூட்டங்களிலே குறிப்பிடுவார்கள். எனவே
நெருப்பைப் பயன்படுத்துவது போல காவல் துறையைப் பயன்
படுத்த வேண்டும் என்று சொல்வார்கள். அந்த நெருப்பிடம்
நாம் நெருங்கினால் அந்த நெருப்பு நம்மை அழித்துவிடும்;
நெருப்பை விட்டுவிட்டு வெகு தூரம் நாம் விலகிச் சென்று
விட்டால் குளிர் ஏற்படும். ஆகவே அந்த நெருப்பைப் பயன்
படுத்தி எப்படி குளிர் காய முடியுமோ அந்த அளவுக்கு குளிர்
காய்வதற்குரிய வகையிலேதான் காவல் துறையை பயன்படுத்த
வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்
கள். இந்தத் துறையின் மீது கருத்துக்களைச் சொல்லும்
போது மனச்சாட்சியைக் கொஞ்சம் கீழே கழற்றி வைத்து
விட்டு பொய் சாட்சி சொல்கின்ற அளவுக்கு ஒரு அரசியல் சூழ்
நிலையை ஏற்படுத்துவதற்கு நான் விரும்பவில்லை என்பதை
இங்கே பணிவோடு தெரிவித்துக் சொன்கிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன்பு கர்நாடகத்திலே இருந்த போலீஸ்
நன்றாக இருந்தது; இப்போது கர்நாடகத்தில் இருக்கின்ற
போலீஸ் மோசமாக இருக்கின்றது; 1971-லே சித்தார்த்த
சங்கர்ரே முதலமைச்சராக இருந்தபோது போலீஸ் துறை
கசந்தது; இப்போது அந்தப் போலீஸ் துறை இனிக்கின்றது;
இப்படி எல்லாம் மனச்சாட்சிக்குப் பயப்படாமல் தனிப்பட்ட
முறையில் பொய்சாட்சி சொல்கின்ற நிலைமை இல்லாமல்
மனச்சாட்சிக்குப் பயந்து சில கருத்துக்களைத் தெரிவிப்பது
நல்லது என்ற அடிப்படையில் என்னுடைய கருத்துக்களை
நான் இங்கே சொல்ல விழைகிறேன்.

எங்களைப் பற்றிப் பேசுகின்றபோது முஸ்லீம் லீக் கட்சி
யைச் சேர்ந்தவர்களும், மார்க்கிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சி
யைச் சேர்ந்தவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச்
சேர்ந்தவர்களும் ஏதோ காவல் துறை அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில்தான் புதிதாக
உலகத்திலேயே இல்லாத அளவில் சிருஷ்டிக்கப்பட்டதுபோல்
பேசிக் கொண்டிருக்கின்ற காட்சியைப்பார்க் கிறோம். இவர்
கள் எல்லாம ஏதோ மகாத்மா போலவும், அனைந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகம் ஏதோ பாவ ஆத்மா போலவும்
அப்படி பாவ ஆத்மாவின் ஆட்சி நடைபெறுவது போலவும்
ஒரு தோற்றத்தைத் தோற்றுவிக்கின்ற காட்சியை நாம்
இங்கே பார்க்கிறோம்.



1984 மார்ச் 30] [திரு. கோவைத்தம்பி]

ஜனநாயகத்திலே மனிதனுக்கு மிகப் பெரிய தோல்வி
ஏற்படுகின்றபோது அந்த மிகப் பெரிய தோல்வியை தனிமனி
தன் தாங்கிக் கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்படும்போது
அவனைச் சுற்றி இருக்கின்ற மக்கள் மத்தியில் ஒரு விரக்தி
ஏற்படுகின்றபோது அந்த விரக்தி காரணமாகக் கூட இந்த
நாட்டிலே சட்டம், அமைதி, ஒழுங்கு ஆகியவை கெடக்கூடிய
வாய்ப்பு உருவாகலாம் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்
கொள்கிறேன். ஆனால் காவல் துறை மிகவும் கம்பீரமாக
இருக்கின்றது, மிக மிகச் சிறப்பாக இருக்கின்றது, அதில்
குற்றமே இல்லை, எனவே குற்றம் சொல்வது யார் என்ற
கேள்வியை நான் கேட்க விரும்பவில்லை. அந்தக் கேள்வி
யைக் கேட்க விரும்பவில்லை என்று சொன்னாலும், இன்
றைக்கு இந்தியாவில் மற்ற இடங்களில் இருக்கின்ற காவல்
துறையை விட தமிழகக் காவல் துறை செவ்வனே உண்மை
யாகப் பாடுபடுகின்றது என்பதை நான் பணிவோடு தெரிவித்
துக்கொள்கிறேன்.

எனவே தனி மனிதனுடைய சுதந்திரமானாலும், சமுதாயத்
தினுடைய சுதந்திரமானாலும், கிராம சுதந்திரமானாலும்
தமிழ்நாட்டில் மிகவும் நிம்மதியான சூழ்நிலை இருக்கின்றது
என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.
நேற்று முன்தினம் பேசிய மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி
யைச் சேர்ந்தவர்கள் ஏதோ தொழிலாளர் போராட்டத்
திற்கும், தொழிலாளர் வர்க்க போராட்டத்திற்கும் விரோதத்
தனமாக ஒரு போலீஸ் துறையை அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பயன்படுத்தி மிகக்
கம்பீரமாக இருக்கின்றது என்பதுபோல் சொன்னார்கள்.
தொழிலாளியினுடைய குரல் வளையை நெறுக்கின்ற அள
வுக்குத் தமிழகத்தினுடைய அரசு இருக்கிறது, மாண்புமிகு
புரட்சித் தலைவருடைய அரசு ஒரு போலீஸ் முறையை
எழுப்பி, தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை மறைக்க
முயற்சிக்கிறது என்று சொன்னார்கள். இந்த முயற்சி வீண்
வேலை என்பதைத்தான் நான் இந்த நேரத்தில் பணிவன்
போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நடந்து முடிந்துபோன காலக்கட்டங்களில் என்று சொல்கி
றார்களே, பொய் வழக்குகள் என்று சொல்கிறார்களே,
ஆளுங்கட்சி உறுப்பினர்களே வழக்குமன்றத்தில் நிற்கிறார்
களே என்று சொன்னால், இந்தத் தடையம் கூட கடந்த
கால ஆட்சியில் இல்லை என்பதை நான் பணிவன்போடு
தெரிவித்துக் கொள்கிறேன். பொய் வழக்குகள் என்று
சொல்கின்ற இவர்கள் ஆண்ட கால கட்டங்களில் அந்த வழக்கு
களே இல்லாமல் சமாதியில் அனைத்திந்திய அண்ணா
தி.மு.கழகத் தொண்டர்களைத் தூக்கி கீழே போட்டுவிட்டு

[திரு. கோவைத்தம்பி] [1984 மார்ச் 30

ஆட்களே இல்லாமல் செய்த காட்சியை எல்லாம் தமிழகத்தில் நாம் பார்த்தோம். அந்த நிலைமையில் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. இல்லை என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜாதிக் கலவரம் உருவாகிறது என்று சொல்கிறார்கள். யார் அந்த ஜாதிக் கலவரத்தைத் தூண்டுவது? இன்று கூட, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த, தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் உயர்திரு இராமலிங்கம் அவர்கள் பேசினார்கள். என்று சொல்கிறார்கள். என்றால்

* * * * * * *

இதே சட்டமன்றத்திற்கு உள்ளே நின்று கொண்டு தமிழக மக்கள் மத்தியல் ஜாதிக் கலவரத்தைத் தூண்டுவதற்கு வாதாடுவதாகத்தான் அந்தப் பேச்சு இருக்கிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, அந்தப் பேச்சை. அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்றும் நான் பணிவோடு விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

* * * * * *

என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிருபிக்கத் தயாராக இருந்தால் இந்தச் சட்டமன்றம் மாண்புமிகு முதல் அமைச்சர் ஆளுங்கட்சியாக இருக்கின்ற நாங்கள், எந்தப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். மறைமுகமாக ஜாதிக் கலவரங்களைத் தூண்டுவது, ஆட்சி இழப்பில், விவரம் இல்லாத ஒரு சூழ்நிலையை நாட்டு மக்கள் மத்தியில் ஏற்படுத்தி விரக்தி அடைந்து போவது, அந்தக் கலவரங்களைத் தூண்டிவிட்டு போலீஸ் கலவரத்தை அடக்கவில்லை என்று சொல்வது எந்த விதத்தில் ஜனநாயகத்தில் நியாயம் என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். போலீஸ் காவல்நிலையங்களில், லாக் அப்பில் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆட்சியில் அதிகம் பேர்கள் சாகிறார்கள் என்று சொல்கிறார்கள். சாவதைப்பற்றி நாம் ஒன்றும் மிகவும் மகிழ்ச்சிகரமாக இல்லை. எந்த உயிர் போனாலும், அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆட்சியிலே இருந்தாலும், மனிதாபிமான உள்ள அத்தனைபேரும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசு மீது அந்தக் குற்றச்சாட்டைச் சொல்கின்ற மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியினர் நேற்றைய செவ்வாய்க்கிழமை என்ன நடந்தது என்பதைத்தாங்கள் சிந்தித்து பார்க்க வேண்டும். என்ன நடந்தது மேற்குவங்காளத்தில் என்று பார்க்கும்போது அனைத்திந்திய அண்ணா

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணையின்படி அகற்றப்பெற்றது.



1984 மார்ச் 30] [திரு. கோவைத்தம்பி]

தி.மு.க. அரசு பற்றி சொல்வது நியாயமான குற்றச்சாட்டா என்பதைத்தான் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். போன செவ்வாய்க்கிழமை வங்காளத்திலே, துறைமுகத்திலே ஒரு தகராறு நடக்கிறது. டெப்புட்டி கமிஷனர் மேத்தா தன்னுடைய செக்யூரிட்டி ஆபீசர்களோடு போன போது, அந்தத் தகராறில் கொல்லப்படுகிறார். அது சம்பந்தமாக மியான் என்பவரைக் கைது செய்து மாண்புமிகு ஜோதி பாசு அரசு மேற்கு வங்காளத்திலே விசாரிக்கிறது. 24 மணி நேரத்தில் அந்த மியான் என்பவர் இறந்து போகிறார். டாக்டர்கள் பிரேதப் பரிசோதனை நடத்துகிறார்கள், இரத்தக் காயங்கள் உடம்பிலே இருக்கின்றன என்று டாக்டர்கள் தீர்ப்பு சொல்கிறார்கள். ஆகவே, ஜோதி பாசு அரசு மோசமான அரசு என்று கூறுவதா ? இதை மார்சிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று பணிவோடு விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : துணைத் தலைவர் அவர்களே, அந்தச் சம்பவத்தைப் பற்றி முதலமைச்சர் அதிர்ச்சி தெரிவித்து இருக்கிறார். அதனுடைய போஸ்ட் மார்ட்டம் அறிக்கை வந்ததற்குப் பிறகு தான் ஜுடிஷியல் என்கொயரி பற்றி தீர்மானிக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார். ஆகவே, அவ்வாறு அப்படிப்பட்ட ஒரு சம்பவம நடந்ததற்கு முதலமைச்சர் உடனடியாக அதிர்ச்சி தெரிவித்து அது சம்பந்தமான நடவடிக்கையை எடுத்திருக்கிறார் என்பதை அந்த ஆட்சியினுடைய அணுகுமுறையைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

திரு. கோவைத்தம்பி : ஏதோ அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசு இந்தச் சம்பவங்களுக்கெல்லாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சி கொண்டாடுவது போலவும் மாண்புமிகு ஜோதி பாசு அரசு முதலமைச்சர் இதற்குச் சங்கடமும் அனுதாபமும் தெரிவிப்பது போலவும் மாண்புமிகு மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் கூறுவதற்கு கொஞ்சம் எங்களையும் சிந்தித்துப் பாருங்கள் என்றுதான் நான் பணிவோடு விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசைப் பொறுத்த அளவு என்றும் தொழிலாளர்கள் விரோத அரசு அல்ல ; தொழிலாளர்களுடைய உரிமைகளை காக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு நடக்கின்ற எந்தப் போராட்டத்தையும் நசுக்குகின்ற அரசு அல்ல. அதற்காகக் காவல் துறையை . . . . . . . . . . . .

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களில் தவறுகள் நடைபெறுகின்றன. ஆகவே, தமிழகத்திலும் தவறுகள் நடைபெறுகின்றன, எனவே, அது சரி என்பது தான் உங்கள் வாதமா ?

திரு. கோவைத்தம்பி : தவறுகள் நடைபெறுவது மற்ற மாநிலங்களில் நடைபெறுகிறது. அதனால் தான் தமிழகத்தில் நடைபெறுகிறது என்று நான் சொல்லவில்லை. ஆரம்பத்தில் நான் சொன்னேன், மனசாட்சியை கீழே இறக்கிவிட்டு பொய் சாட்சி சொல்கின்ற அளவுக்கு பேச்சுக்களைப் பேச வேண்டாம். தமிழ்நாட்டில் இருக்கிற காவல் துறை, ஏதோ ஒரு பத்திரிகை எழுதியதற்காக, ஒரு பிரதான எதிர்க்கட்சிக்கு அடுத்த வரிசையில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர் ** ** ** ** என்று சொல்கிறார்கள். இதே பேச்சு தமிழக சட்டமன்றத்தில் சொல்லப்படுமானால் ..................

திரு. என். சங்கரய்யா : ஏற்கனவே அதை நீக்கியாகி விட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த ஒரு வாசகத்தை மட்டும் நீக்குகிறேன். காலையிலே திரு. இராமலிங்கம்** * * * என்று பேசியதை நீக்க வேண்டுமென்று உறுப்பினர் கேட்டார்கள். அந்த வரியும் நீக்கப்படுகிறது.

திரு. செ. இராமலிங்கம் : நான் தவறாகச் சொல்லி இருந்தால் நீக்குங்கள். நான் ** ** ............. என்று சொல்லவில்லை. ஆனால் கடைநிலை ஊழியர்களுக்குக் கூட ........................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதையெல்லாம் நீக்கியாயிற்று.........

(பிற்பகல் 12-40).

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதை நீங்கள் நீக்குவதைப் பற்றி நான் ஒன்றும் மறுப்பு சொல்லவில்லை. மக்கள் மன்றத்திற்கு இது தெரியாவிட்டாலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்ற உறுப்பினர்கள், புதிய உறவை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறவர்கள், இந்தியாவின் ஜனநாயகத்திலே தமிழக அரசை எப்படி தவறாக அடையாளம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அகில உலகத்திற்கும் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று தான் அந்தப் புதிய உறவை ஏற்படுத்திக் கொண்டிருக்கிற நண்பர்களுக்கு பணிவோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்றைய சூழ்நிலையில் தமிழ் சமுதாயம், திராவிட சமுதாயம் என்று பிரிவினை உணர்வை ஏற்படுத்துவதைப் போல, அதிலே முஸ்லீம் உறவை தனியாக பிரித்துப் பார்ப்பதைப் போல அரசியலில் செல்வாக்கு அற்றவர்கள், தங்களை மீண்டும் மக்கள் தேர்ந்தெடுக்க மாட்டார்களா என்று விரக்தி அடைந்தவர்கள் வேகமாக நாட்டிலே சட்டத்தையும் ஒழுங்கையும் கெடுக்கிற விதத்தில் பேசி வருகிறார்கள் என்பதை காவல் துறை மானியக் கோரிக்கையில் இந்த மன்றத்தில் உங்கள் சார்பாக தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





இன்றைய சூழ்நிலையில் காவல் துறையில் மிக நவீனமான முறைகளை ஏற்படுத்த வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். தலைமை மருத்துவமனைகளில் ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒரு காவல் நிலையத்தை ஏற்படுத்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு பெரு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் தலைமை மருத்துவமனையில் காவல் நிலையம் இருந்தால் தான் அடிதடி தகராறு அல்லது மற்றைய தகராறுகள் ஏற்பட்டால் அந்தத் தகராறுகளுக்கு தீர்வு காணக் கூடிய சூழ்நிலை வேகமாக ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு இன்றைய தீயணைப்புத் துறையிலும் நவீன கருவிகளை மேலை நாடுகளைப் போல புகுத்தி தீயணைப்பு முறைகளில் முழு முயற்சி செய்து வெற்றிகரமாகப் பணிகளைச் செய்வதற்கு, முழு முயற்சி எடுத்துக் கொள்வதற்கு, ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகளில் தமிழக அரசு இந்தத் துறையில் ஈடுபட்டிருப்பதை நான் மனமார பாராட்டுகிறேன். அவற்றை மேலும் வேகமாகச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சியில் ஒரு தீயணைப்பு நிலையம் இருக்கிறது. ஆனால் ஆனைமலை என்ற பெரிய ஊர் அதற்குப் பக்கத்தில் இருக்கிறது. இடையில் ஒரு ரெயில்வே கேட் இருக்கிறதால் தீயணைப்பு முயற்சிகள் தடுக்கப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால் பெரிய பகுதியான அந்த ஆனைமலையில் பல நேரங்களில் தீ விபத்தால் பெருத்த சேதம் ஏற்படுகிறது. ஆகவே ஆனைமலையில் ஒரு தீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. க. பாரமலை : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1984–85 ஆம் ஆண்டுக்கான சாவல் துறை மானியத்தின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன். தமிழ்நாட்டில் காவல் துறை நாம் இன்றைக்கும் சொல்லித்

கொண்டு இருப்பதைப் போல திறமைக்குப் பெயர் பெற்ற காவல் துறை. இந்தியத் துணைக் கண்டத்திலேயே அதற்கு ஒரு சிறப்பான இடம் இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. குறிப்பாக சமீப காலங்களில் கூட தமிழகத்தில் களவு போன சிலைகளை அமெரிக்காவுக்கும், பிரிட்டனுக்கும் சென்று கூட கைப்பற்றிக் கொண்டு வருகிற அளவிற்கு அந்தத் துறை மிகத் திறமையாகச் செயல்படுகிறது என்று சொன்னால் அதற்கு நாம் பெருமைப்பட வேண்டும். அப்படிப்பட்ட வகையில் அந்தத் துறை பல்வேறு வகைகளில் முன்னணியில் இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

குறிப்பாக செய்தித் தொடர்பானாலும் அல்லது அறிவியல் சாதனங்களைப் பயன்படுத்தி குற்றங்களைப் பிறப்பிப்பது ஆனாலும் பல்வேறு துறைகளில் நவீனப்படுத்தும் முயற்சியில் இந்தத் துறை தொடர்ச்சியாக ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறது. இந்த அறிக்கையில் ஒரு இடத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது. காவல் துறை திறம்பட செயலாற்றி பொது மக்களுக்கும் காவல் துறைக்கும் இடையே சுமுகமான உறவு வைத்துக்கொள்ள வேண்டும். இது நூற்றுக்கு நூறு சரியானது. அப்படிப்பட்ட உறவுகள் சுமுகமான நிலை ஏற்பட வேண்டுமானால் காவல் துறை மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும். அப்படிப்பட்ட நம்பிக்கை வருவதற்கு காவல் துறையின் நடவடிக்கைகள் காரணமாக அமைய வேண்டும். குறிப்பாக தனிப்பட்டவர்களின் உரிமைக்கும், உடமைக்கும் பாதுகாப்பு காவல்துறை மூலம் கிடைக்கும் என்ற நம்பிக்கை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் நிச்சயமாக அந்த உறவு வளர முடியும் என்று நான் நம்புகிறேன்.

இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளி விவரங்களைப் பார்க்கிறபோது, 1982-83-ல் குற்ற எண்ணிக்கையைப் பார்த்தால் "தாராளமாகக் குற்றங்களைப் பதிவு செய்யவேண்டும்" என்ற அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ள குற்றங்களைப் பார்த்தால் அதிகமாக இருக்கிறது என்று அந்த எண்ணிக்கையில் இருந்து தெரிகிறது. குற்றங்களைத் தாராளமாகப் பதிவு செய்வது என்பது உண்மையிலேயே பொதுமக்களுக்கு ஒரு நம்பிக்கையை எற்படுத்தும். யார் புகார் கொடுத்தாலும், உடனே அந்தப் புகாரை பதிவு செய்யும் நிலைமை இருக்கிறது. இருந்தாலும் கூட இன்னும் பல இடங்களில் சரியாக அது கடைபிடிக்கப்படவில்லை. அதன் காரணமாக பெட்டிஷன் என்கொயரி என்ற நிலையிலே மேல் அதிகாரிகளுக்குத் தெரியாமல் விசாரிக்கப்படுமானால், கீழே பல தவறுகள் நடப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே, தாராளமாக வழக்குகளைப் பதிவு செய்வது என்ற





முறையில் யார் பெட்டிஷன் கொடுத்தாலும் அதைப் பதிவு செய்து, விசாரணைசெய்து தவறு இருந்தால் நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்வது என்கிற முறையில் காவல் துறை பின்பற்றுமானால் காவல் துறையின் மீது ஒரு நல்ல நம்பிக்கை பொது மக்கள் மத்தியில் ஏற்படும். ஆகவே குற்றங்களைப் பற்றிய குறிப்பு 1982 மற்றும் 1983 ஆகியவற்றை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, புகார் செய்யப்பட்டவை 1982-ல் 34,680 ஆகவும் 1983-ல் 40 ,039 ஆகவும் இருக்கிறது. ஆனால் கண்டுபிடிக்கப்பட்டவர்களைப் பொறுத்த அளவில் 1982-ல் 25,174 ஆகவும் 1983-ல் 26,209 ஆகவும் இருக்கிறது. குற்றக் கண்டுபிடிப்புகளின் விழுக்காடு 1982-ல் 72.5 ஆகவும் 1983-ல் 65.5 ஆகவும் இருக்கிறது. இப்படிக் குறைவாக இருப்பதற்கான காரணம் என்ன என்பதைப் பற்றி துறை சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தை எந்த அளவுக்கு இங்கே நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதற்கு ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

1976 ஆம் ஆண்டு மத்திய அரசு குடியுரிமை ப் பாதுகாப்புச் சட்டத்தை ஒவ்வொரு மாநிலத்திற்கும் அனுப்பி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். தமிழக அரசுக்கும் அது வந்தது. அதனுடைய அடிப்படையில் அதன் பிரிவு 15 உட்பிரிவு 6-ல் பல்வேறு நடவடிக்கைகளை மாநில அரசாங்கங்கள் எடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அதிலே சொல்லப்பட்டிருக்கிற அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதிலே அந்தத் துறை கொஞ்சம் மெத்தனமாக இருக்கிறது. உண்மையிலேயே நான் கவலையோடு தெரிவித்துக் கொள்கிறேன். அந்த உட்பிரிவில் தீண்டாமையினால் ஏற்படுகிற விளைவுகளைக் கண்டறிந்து அவைகளைக் களைவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசாங்கம் முனைப்பாகச் செயல்பட வேண்டுமென்று இருக்கிறது. அப்படிப்பட்ட நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமானால் நிச்சயமாக அந்தச் சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு எடுத்ததாகக் கருத முடியும்.

(பிற்பகல் 12-50)

அப்படி இந்த 'ட்ரவுட் ரோ ஏரியா'வைக் கண்டறிவதைப் போன்று 'அண்டச்சபிலிட்டி ப்ரோன் ஏரியா' வைக் க்ண்டறிந்து இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்காமல் தவறு நடக்காமல் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நடவடிக்கை எடுத்திருந்தால் இன்றைக்கு மதுரை மாவட்டத்தில் கருப்பம் பட்டி காட்டுராஜா போன்ற இளைஞர்கள் கொலை செய்யப்படுவதைத் தடுத்திருக்கலாம்.

]திரு. க. பாரமலை] [1984 மார்ச் 30

இன்றைக்கு கூட எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது.
அரிசன மாணவர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை பற்றி வந்
திருக்கிறது. அரிசன நல மானியத்தில் கூட இதுபற்றிச் சொன்
னோம். சிவகங்கையில் ஒரு கல்லூரி மாணவன். அவன் ஒரு
அரிசன மாணவன். மாணவர்கள் தேர்தலில் போட்டியிட்டான்.
தேர்தலில் போட்டியிட்டான் என்பதற்காக அவனை அடித்து,
இன்றைக்கு மருத்துவமனையில் சேர்க்கக்கூடிய அளவுக்கு நிலை
மை மோசமாகியிருக்கிறது. அப்படிப்பட்ட சம்பவம் இன்று
தான் நடக்கிறது என்று அல்ல, பல வருஷங்களாக அந்தக்
கல்லூரியில் நடந்துகொண்டிருக்கிறது. அப்படி இருக்கும்
போது முன்கூட்டியே இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடக்காமல்
இருக்க காவல் துறை ஏன் தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை?
இனிமேலாவது அந்த இடங்களைக் கண்டறிந்து, தயவுசெய்து
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாங்கள் தேர்தலில் போட்டியிடாமல் மற்றவர்களுக்கு ஓட்டு
போட்டாலும் எங்களை அடிக்கிறார்கள்; நாங்களே போட்டி
யிட்டாலும் எங்களை அடிக்கிறார்கள். கண்ட இடத்தில்
தாக்குகிறார்கள், துன்புறுத்துகிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட
தேர்தல் இல்லாமல் இருப்பதுதான் எங்களுக்கு நல்லது என்று
எனக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அரசாங்கம் இதை பரி
சீலனை செய்து, இப்படிப்பட்ட கல்லூரிகளில் தேர்தல் இல்லா
மல் செய்ய நடவடிக்கை எடுக்க முடியுமா என்பது பற்றி சிந்
திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, குடிமையியல் பாதுகாப்புச் சட்டம் சம்பந்தமாக
வழக்குகள் பதிவு செய்து நடவடிக்கை எடுப்பதற்கு என்று ஒவ்
வொரு மாவட்டத்திற்கும் இன்ஸ்பெக்டர்களை நியமித்திருக்கி
றோம்: ஜீப் வழங்கி யிருக்கிறோம்; போதுமான ஸ்டாஃப்
எல்லாம் கொடுத்திருக்கிறோம். ஆனாலும் இன்றைக்கு இருக்
கிற நிலைமை என்ன? இதுவரை வழக்குகள் போட்டார்கள் ;
எத்தனை வழக்குகளுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது; எத்த
தனை வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன; எத்தனை
வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டது என்பன போன்ற விவ
ரங்களை இந்த அறிக்கையில் கொடுத்திருந்தால் நன்றாக
இருந்திருக்கும். நாங்கள் எல்லாம் தெரிந்து கொள்ள வசதியாக
இருக்கும். ஆனால் இப்படிப்பட்ட விவரங்கள் ஒன்றும்
கொடுக்கப்படவில்லை.



1984 மார்ச் 30] (திரு. க. பாரமலை)

இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் நான் குறிப்பிட விரும்பு
கிறேன். மதுரை நகரிலே ஒரு முதல் வகுப்பு குற்றவியல் நீதி
மன்றம் இருக்கிறது. அதில் போடப்படுகிற வழக்குகளில் 98
சதவீதம் வழக்குகள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. எதற்
காக அப்படி தள்ளுபடி செய்யப்படுகிறது? புலன் விசாரணை
செய்கிற அதிகாரிகள் மீது தவறு இருக்கிறதா? அல்லது சாட்சி
கள் வரவில்லையா? என்ன காரணம்? ஏன் தள்ளுபடி செய்யப்
படுகிறது என்பதற்கு ஒரு ஆய்வு நடத்த வேண்டுமென்று கேட்
டுக் கொள்கிறேன்.

இந்த காவல் துறையைப் பொறுத்தவரையில் குறிப்பாக
ஒரு சம்பவத்தை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். ஒரு காவல்
நிலையத்தில் ஒரு இன்ஸ்பெக்டரால் துன்புறுத்தப்பட்ட ஒரு சப்
இன்ஸ்பெக்டர், அந்த இடத்தைவிட்டு வேறு எங்காவது போக
விரும்பினார். அவரை மாற்ற வேண்டு
வேண்டுமென்று உயர் அதிகாரியிடம் கேட்டபோது, அவர்
மென்று நான் அவருடைய பர்சனல் ஃபைல் எல்லாம் பார்த்து,
சொன்னார். அவருடைய குற்றமும் செய்யாதவராக இருந்தால்,
அவர் எந்தவிதமான உள்ளவராக இருந்தால், அவரை புலன்விசா
நன்னடத்தை
ரணைத் துறைக்கு எடுத்துக் கொள்கிறேன் என்று சொன்னார்.

நான் இதைச் சொல்வதற்குக் காரணம், இந்தத் துறைக்கு
வருகின்றவர்கள் தவறு செய்யாதவர்களாக திறமைமிக்க அதி
காரிகளாக இருக்க வேண்டும்; நாணயமான அதிகாரிகளாக
இருக்க வேண்டும். அவர்கள்தான் இந்தத் துறையிலே சிறப்
பாக பணியாற்ற முடியும். அப்படிப்பட்டவர்கள் உத்தியோக
உயர்வுக்கு சிறந்த தகுதி பெற்றவர்கள் என்று கருதப்பட
வேண்டும். அப்படியானால்தான் அவர்கள் திறமையாக,
நாணயமாகச் செயல்பட முடியும்.

அதோடு இந்த வழக்குகளை நடத்துகிறபோது அசாதாரண
சூழ்நிலை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
குறிப்பாக குடிமையியல் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு
களைப் போடும்போது தாழ்த்தப்பட்ட மக்கள் ஒருபுறமாகவும்,
தீண்டாமைக் குற்றம் புரிந்துவிட்டு, அவர்களுக்கு எதிராக
வழக்காடுகிறவர்கள் ஒருபுறமாகவும் இருக்கிறார்கள். இப்
படிப்பட்ட வழக்குகள் சம்பந்தமாக தவறு செய்த
குற்றவாளிகள், புலன் விசாரணை செய்கின்ற அதிகாரிகள்,

நீதிமன்றத்தில் வழக்காடுகின்ற வழக்கறிஞர்கள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட இனத்தவராக இருந்தால், அந்த வழக்கு தோல்வி யடைந்துவிட்டால், பொதுமக்களிடத்திலே அது சந்தேகத்தை ஏற்படுத்தும். ஆகவே, இப்படிப்பட்ட வழக்கிலே அரசாங்க வக்கீல்தான் வாதாட வேண்டுமென்ற நிலைமை இல்லாமல் தனிப் பட்ட வக்கீல்களை வைத்தும் கேஸ் நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கு ஒரு 'பானல்' போட்டு, வருகின்ற வழக்குகளில் யார், யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்கின்ற தன்மையைப் பார்த்து,' அந்த வழக்கின் நிலைமைக்கு ஏற்ப அந்தப் பானலில் இருக்கிற வழக்கறிஞர்களில் ஒருவரை தேர்ந் தெடுத்து, வழக்கை நடத்துவதற்கு அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டும்.

மேலும், இந்த அறிக்கையிலே ஒரு 'ரீசர்ச் அண்ட் அனலைஸ் ஸ்கீம் சாங்ஷன் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அரிசன நல மானியத் திலும் ஒரு 'எவாலுவேஷன் ஸ்கீம்' சொல்லப்பட்டிருந் தது. இந்த இரண்டும் ஒன்றுதானா என்பது தெரியவில்லை. இருந்தாலும் இந்த ரீசர்ச் அண்ட் அனலைஸ் ஸ்கீமை நல்ல முறையில் செயல்படுத்த வேண்டும். சென்ற ஆண்டு நிதி ஒதுக்கம் செய்திருந்தாலும் கூட நடைமுறைப்படுத்தாமல் இருந்தார்கள். அப்படியில்லாமல் இந்த ஆண்டு நல்ல முறையில் நடைமுறைப் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு சமூக கலவரங்கள் நடைபெறுகின்ற பகுதிகளில் இருக்கின்ற ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் டெலிபோன் வசதிகளைப் பொருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காவல் துறை ஆய்வாளர்களுக்கு இன்றைக்கு ஜீப்கள் கொடுக் கப்படவில்லை. ஒரு சம்பவத்தைப் பற்றிய தகவல் கிடைத்தால் கூட, அவர்கள் உடனடியாக அங்கு போய்ச் சேர்வதற்கு, தனி யார் வாகனங்களையோ லாரிகளையோ தேட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு ஜீப் வசதிகள் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 1981 ஆம் ஆண்டு ஒரு சமூக கலவரம் நடந்த இடத்தில், சில வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. சத்திரக்குடி என்ற இடத்தில் பல பேர் கள் மீது வழக்குகள் போடப்பட்டு, அதிலே நூற்றுக்கு அதிகமான ஹரிஜன மக்கள் எதிரிகளாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே பல்வேறு கிராமங்களில் வசிக்கின்ற ஏழைகள் இருக்கிறார்





கள், அந்த வழக்குகள் இன்றைக்கு நீதி மன்றத்தில் இருக்கின்றன. அவர்கள் வாய்தாவிற்காகக் கோட்டிற்குச் சென்று வருகிறார்கள். அன்றாடம் வேலை செய்யும் அந்த ஏழைகள் இப்படி 3, 4 வருடங் களாக நீதி மன்றத்திற்குச் செல்வது நியாயமாக இருக்காது. அப்படிப்பட்ட வழக்குகளை வாபஸ் பெறவேண்டும்.

என்னுடைய தொகுதியில் கட்டனூர் என்ற இடத்தில் ஒரு புறக் காவல் நிலையம் இருக்கிறது. அதை காவல்நிலையமாக உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சி மாவட்டம், முசிரியில் ஒரு ஃபையர் ஸ்டேஷன் இருக் கிறது. அங்கே வண்டிகள் கிடையாது, போதுமான கட்டிட வசதி களும் கிடையாது. எனவே அது குறித்து உடனடியாக விசாரித்து நடவடிக்கை எடுத்து, வண்டிகள் வாங்குவதற்கும், கட்டிடங்கள் கட்டுவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்று தாழ்த்தப்பட்ட மக்களைச் சார்ந்த அதிகாரிகளுக்கு பதவி உயர்வு கொடுத்து, உத்தரவிட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதற்காக என்னுடைய நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசைப் பொறுத்த வரையில் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்காக சமூக அந்தஸ்து பெறுவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்ததற்காக நான் மனப்பூர்வமாக பாராட்டுகிறேன். இன்றைக்கு ஒவ்வொரு நிலையி லும், இந்த உத்தியோக உயர்வு கொடுப்பதில் தாமதம் ஏற் படுகிறது. அதற்கு வேண்டுமானால், என்னால் தனியான விவ ரங்களைக் கொடுக்க முடியும். ஆகவே உத்தியோக உயர்வைப் பொறுத்தவரையில், தமிழகத்தில், அதிகமான அளவில் ஹரிஜன அதிகாரிகளுக்குக் கொடுக்க வேண்டும், இன்றைக்கு 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உத்தியோகம் நியமனங்கள் கொடுத் துக் கொண்டுவருகிறார்கள். இந்த 18 சதவீதம், 18 சதவீத ஜனத்தொகை இருந்த காலத்தில் கொடுக்கப்பட்டது. ஆனால் இப்போது, 1981 ஆம் ஆண்டு ஜனத்தொகைக் கணக்குகளைப் பார்த்தால், 19.45 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார் கள். எனவே இந்தச் சமுதாயத்திற்கு 20 சதவீத நியமனங்களை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, சொல்ல விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட மக் களுக்காக —இந்த அவையிலுள்ள பல்வேறு நிரந்தரக் கமிட்டிகள் இருப்பதைப் போல, Legislature Committe on Scheduled Castes and Scheduled Tribes இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. க. பாரமலை) [1984 மார்ச் 30

பாராளுமன்றத்தில் இருப்பதைப் போலவும், மற்ற சில மாநிலங்களில் இருப்பதைப் போலவும், தமிழ்நாட்டு சட்டசபை யிலும் Legislatur- Committe- on Sch:duled Cast s and Sch:duled Trib-s இருக்க வேண்டும். அது குறித்து தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, பேச வாய்ப் பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே பேசிய அங்கத்தினர்கள் எல்லாம் சொன்னார்கள். அதாவது, ஒவ்வோர் இடத்திலும் இந்தப் போலீஸ் நிலையங்கள் சீரோடும், சிறப்போடும் நடைபெற வேண்டுமென்றால், ஜனங்கள் அங்கங்கே கொடுக்கிறார்களே மஹஜர்கள் — அந்த மகஜர்கள் எல்லாம் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. அப்படி பதிவு செய்யப் பட்டவைகள் உண்மையிலேயே நியாயமாக உள்ளதா, சரியாக இருக்கிறதா என்று உணர்ந்து, கீழ உள்ள அதிகாரிகள் நடந்து கொள்வார்களேயானால், மக்கள் மத்தியிலே அவர்கள் மீது ஒரு நல்லெண்ணம் ஏற்படும்.

1947-ஆம் ஆண்டு டில்லியிலே ஒரு மிகப் பெரிய கலவரம் ஏற்பட்டது. அந்தச் சமயத்திலே அங்கே உள்ள போலீஸ் அதிகாரிகளால் அந்தக் கலகத்தை அடக்க முடியாமல், சென்னை யிலிருந்து தமிழகத்திலிருந்து போலிஸ் வரவழைக்கப்பட்டு, அந்தக் கலகம் அடக்கி ஆளப்பட்டது. தமிழகப் போலிஸ் ஒரு சிறப்புப் பெயரைப் பெற்றிருந்தார்கள். அப்படிப்பட்ட நிலைமை மீண் டும் வரவேண்டும் என்று எங்களைப் போல் உள்ளவர்கள் ஆசைப் படுகிறோம். அதைப்போல ஒரு நல்ல முறையில், சரிய முறையில் பணிபுரிகின்ற ஒரு நிமைலையை உருவாக்கவேண்டும்.

இதர மாநிலங்களைப் பற்றிச் சொன்னார்கள். அங்கே கல வரம் நடக்கிறது இங்கே கொலை நடக்கிறது. இங்கே கொள்ளை நடக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். அதை ஒப்பிட்டுப் பேசி, அங்கே நடக்கவில்லையா, இங்கே நடக்கவில்லையா என்று கேட்பது, நல்லதல்ல என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். எனவே நாம் நம்முடைய அரசைப் பொறுத்த

(பிற்பகல் 1-00)

வரையிலும், இந்தத் துறையைப் பொறுத்தவரையிலும், உண்மை யிலேயே நல்ல உயர்ந்த நிலைமையில் இருக்கக்கூடிய அதிகாரிகள் எல்லாம், நல்ல முறையில் பணியாற்றக்கூடியவர்கள் எல்லாம்



1984 மார்ச் 30] (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்)

இங்கே இருக்கிறார்கள். அப்படி இருக்கக்கூடிய சூழ்நிலையில் இந்த இலாக்காவை நல்ல முறையில் கண்காணித்து, சீரோடும் சிறப்போடும் நடத்த வேண்டும் என்பதுதான் என்னைப் போன்ற வர்களுடைய ஆசையும் எண்ணமும் என்பதை நான் இந்த நேரத் திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து முதன் முதலாக இந்தத் தீயணைப்புத் துறையை எடுத்துக் கொண்டால், இன்றைக்கு சென்னையைப் பொறுத்த வரையிலே 27 வண்டிகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். மதுரையைப் பொறுத்தவரையிலே 13 வண்டிகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். உண்மையிலே அத்தனையும் நல்ல முறையிலே இயங்குகிறதா என்று பார்ப்போமானால் நல்ல முறையில் இயங்க வில்லை. இந்தத் துறையில் 9 மாதங்களுக்கு உள்ளாக 5 பேர்கள் டைரக்டர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். யாரையாவது ஒருவரை, நிரந்தரமாக 3 ஆண்டுக்காலம் வரைக்கும் இங்கே இருக்க வேண்டும் என்ற முறையில் இருந்தால்தான், அதிகாரியாக வரக்கூடியவர்கள் திறமையாகப் பணியாற்றி, அங்கே என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பதைப் பற்றி கண்காணிக்க முடியும்.

இன்றைக்கு என்னுடைய தொகுதியில், உள்ள வத்தலகுண்டில் ஒரு தீ அணைப்பு நிலையம் ஆரம்பித்துவிட்டு இது வரைக்கும் அங்கே வண்டியில்லை. இது வரைக்கும் வண்டியில்லாத காரணத் தால், இங்கே ஏதாவது ஃபையர் ஆக்சிடென்ட் என்றால், உடனே பழைய மாதிரி பெரியகுளத்திற்குப் போன் போட்டு, அங்கே யிருந்து அந்த வண்டி வருவதற்குள்ளாக, குடிசைகள் எல்லாம் நாசமாகப் போகக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகையினாலே எங்கே எல்லாம், தீ அணைப்பு நிலையங்கள் இருக்கின்றதோ, அங்கே எல்லாம் கண்டிப்பாக நல்ல முறையில் பழுதில்லாத வண்டிகள் இருக்க வேண்டும் பம்புகள் இருக்க வேண்டும், அதற்கு மோட்டார்கள் பொருத்தப்பட்டு இருக்க வேண்டும், 2 ஆண்டுக்கு முன்பு நாம் பேப்பரிலே பார்த்தோம். நாமக் கல்லிலே தீ விபத்து ஏற்பட்டு, அந்த வண்டி கெட்டுப்போய் தண்ணீரை வெளியே செலுத்த முடியாமல், இருந்தபோது அங் குள்ள மக்கள் தீயணைப்பு படையினரை அடித்ததை நாம் பார்த்திருக்கிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இல்லாமல், நல்ல முறையில் இயங்கக்கூடிய வண்டிகளை நாம் வைத்தால், அது மிகவும் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அது மாத்திரம் அல்லாமல் மதுரையிலே இருக்கக்கூடிய ஒரு டெப்புட்டி டைரக்டருக்கு 10 ஜில்லா, அவர்கள் கையிலே இருக் கிறது, ஏற்கனவே மானியக் கோரிக்கை வந்தபோது, திருச்சி யிலே கோவையில், 2 டெப்புட்டி டைரக்டர்கள் இருக்கவேண்டும் என்று சென்ற ஆண்டு குறிப்பிலே இருந்தது. அதற்குப் பணமும்

(திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்) [1984 மார்ச் 30

ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் இதுவரைக்கும் அது அமல்படுத்தப்படவில்லை, எனவே இதையெல்லாம் பிரித்து பிரித்து—ஒரு டைரக்டர் திறமையானவராக இருந்தாலே போதும்—மேலே இருப்பவர்களை பிரித்து பிரித்து, 2 ஜில்லாவிற்கு, 3 ஜில்லாவிற்கு ஒருவர் என்று நிலைமையை ஏற்படுத்துவோமேயானால், நிச்சயமாக இந்தத்துறை நல்ல முறையில் இயங்குவதற்கு வழி ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்து இந்த இரண்டு துறைகளிலும் போலீஸ் துறையிலேயும், தீ அணைப்புத் துறையிலேயும் வேலை செய்வது என்பது ரிஸ்க்கான உத்தியோகம். அவர்களுக்கு எந்த நேரத்திலே என்ன வரும் என்று தெரியாது. அவர்கள் என்னென்ன கேட்கிறார்களோ, அத்தனை சலுகைகளையும் நாம் செய்து கொடுத்தாக வேண்டும். இன்றைக்கு சம்பள உயர்வாக இருந்தாலும் சரி, பஞ்சப்படி உயர்வாக இருந்தாலும் சரி, பதவி உயர்வாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு வீடு கட்டுவது, தங்களுடைய குடும்பத்தில் உள்ள பெண்கள் ஏதாவது ஒரு உபயோககரமான முறையில் ஒரு தொழிலைச் செய்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்தி, அப்படிச்செய்தால் தான் அவர்களுக்கு உபரியாக வருமானம் வரும். அதை வைத்து, அந்தக் குழந்தைகள் படிப்பதற்கு வேண்டிய வசதிகள் ஏற்படும். அந்த வகையில் எத்தனை வசதிகள் வேண்டுமானாலும் அவைகளை செய்து கொடுக்க வேண்டும். அப்படிச் செய்து கொடுத்தால்தான் அது நன்றாக இருக்கும்.

சென்றமுறை அரிசி கொடுப்பதாகச் சொன்னார்கள் ;கொடுத்தார்கள், பருப்பு கொடுப்பதாகச் சொன்னார்கள்; கொடுத்தார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், 1967 ஆம் ஆண்டு தேர்தலின்போது, உடனே 1 படி, படிப்படியாக 3 படி என்று சொன்னார்களே, அதைச் சொல்லிவிட்டு, மதுரையிலேயும், மெட்ராசிலேயும் ஒருபடி அரிசி போட்டுவிட்டு, பிறகு அதை நிறுத்தினார்களே, அந்த நிலைமையில் இருக்கக்கூடாது. நிரந்தரமாக அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். மகாத்மா காந்தி என்ன நினைத்தார்கள். ' நான் விரும்பும் சுதந்திர இந்தியாவில், ஒரு சாதாரண நல்ல, அழகிய மங்கை தன்னுடைய உடம்பெல்லாம் வைரத்தையும் வைடூரியத்தையும் போட்டுக்கொண்டு, இரவு 12 மணிக்கு, தன்னந்தனியாக ரோட்டிலே நடந்து செல்லவேண்டும் ; பயமின்றி நடந்து செல்லவேண்டும் ; அப்பேர்ப்பட்ட சுதந்திரத்தைத்தான் நான் விரும்புகிறேன் '' என்று காந்திஜி அவர்கள் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு என்ன நடக்கிறது ? இன்றைக்கு நாட்டிலே,



1984 மார்ச் 30] (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்)

போலீஸ் நிர்வாகம் நன்றாக இருக்கிறது என்று நாம் இங்கே சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால் என்ன நடக்கிறது ? யாராவது திருடினால், அந்தத் திருடனைப் பிடித்து, இந்தப் போலீஸ் அடிக்கக்கூடாது. யாராவது கொலை செய்தால், அந்தக் கொலைகாரனை இந்தப் போலீஸ் பிடித்து அடிக்கக்கூடாது. யாராவது கற்பழிப்பு சம்பவத்திலே ஈடுபட்டால், அவனைப் பிடித்து அடிக்கக்கூடாது, என்ற நிலைமை இந்த நாட்டிலே இருக்குமானால் நிச்சயமாக ஒரு கொலைக்கு 9 கொலைகள் நடக்கும், ஒரு திருட்டுக்கு ஓராயிரம் திருட்டுக்கள் நடக்கக்கூடிய நிலைமை ஏற்படும்.

நம்முடைய மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்கள் மிக அழகாகச் சொன்னார்கள். நான் முழு மனதோடு வரவேற்கிறேன். அன்றைக்கு வெள்ளைக்காரன் ஆட்சியிலே—நாங்கள் எல்லாம் கமிட்டியிலே சொல்லும்போது அந்தமான்தீவிலே பார்த்தோம். அதாவது கில்லட்டின் போல, வந்தேமாதரம் என்று சொல்லக்கூடியவனை, அவனுடைய உடம்பை அப்படியே பிடித்து, அவனைச் சவுக்கால் சவுக்கடி கொடுப்பார்கள். அந்த அடியினாலே, உடம்பை அவனால் ஆட்டக்கூட முடியாது, இப்படி அப்படி அசைக்க முடியாது. அந்த அளவிற்கு இன்றைகு யார் செய்தாலும் * * *

பத்து வயது குழந்தை கூட மானபங்கப் படுத்தப்படுகிறாள். அதேபோல தனியாக ஒரு இடத்திலே வீடு கட்டப்பட்டிருந்தால், அந்த வீட்டிலே இருக்கிறவர்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருந்தாலும் சரி, அல்லது ஐ.பி.எஸ். அதிகாரியாக இருந்தாலும் சரி, பகல் வேளைகளில் அந்த வீட்டு அம்மா மட்டும்தான் இருப்பார்கள். ஒரு திருடன் போய் கதவைத் தட்டுவான். அந்த அம்மா ஓடி வந்து கதவைத்திறப்பார்கள். கதவைத்திறந்தவுடன், அம்மா ஐயா பேப்பர் வாங்கிக் கொண்டு வரச் சொன்னார்கள், ஐயா ஆபிஸிலே இருக்கிறார்கள் என்று சொல்வான். பிறகு எனக்குக் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வந்து தாருங்கள் என்று சொல்வான் உடனே அந்த அம்மா உள்ளே போய் தண்ணீர் கொண்டு வருவதற்குள்ளாக இவன் உள்ளே புகுந்து கதவைத் தாள் போட்டு வாயிலே துணி அடைத்து மானபங்கப் படுத்திவிட்டு, அல்லது கொலை செய்துவிட்டு, அந்த இடத்திலேயிருந்து நகை நட்டுகளை பிடுங்கிக்கொண்டு போகிற நிலைமை இருக்கிறது என்றால் ; அந்த திருடனை அடிக்கக்கூடாது என்ற நிலையை நாம் வைத்திருப்போமேயானால், இதைவிடக் கொடுமையான செய்கைகள் இந்த நாட்டிலே ஏன் ஏற்படாது என்பதை, நான் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

---

*மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

அவனை பின்னால் போலீஸ் பிடித்துவிடுகிறது. போலீஸ் துறையினர் கொலை செய்தவர்களை, குற்றம் செய்தவர்களை, திருடுபவர்களை எல்லாம் பிடித்து விடுகின்றனர் என்றாலும் கூட, அவர்களைச் சற்று லேசு பாசாக விட்டு விடுகிற காரணத்தால் தான், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்காததன் காரணத்தால்தான், இன்றைக்கு கொலையும், கொள்ளையும் திருட்டும், கற்பழிப்பும் நாட்டிலே அதிகமாகி வருகின்றன என்பதை மிக வருத்தத்தோடும், மிக வேதனையோடும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

எனவே இந்த மாதிரி நிலைமை நீடிக்குமானால், முதலிலே போலீஸ் துறை பெருமையோடு இருந்ததே, இந்தியா முழுவதும் சிறப்பான முறையிலே பணியாற்றக் கூடிய போலீஸ் துறை என்று பெருமையான பெயர் பெற்றிருந்ததே, அந்த நிலைமையை நாம் மீண்டும் உருவாக்க முடியாது என்ற காரணத்தால், இவர்களுக்கு தண்டனை வழங்குவதில் நீங்கள் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

பஸ்ஸிலே பெண்கள் போகிறார்கள். 40, 50 பயணிகளும் போகிறார்கள். அதிலே ஒருவன் திடீர் என்று எழுந்து ஒரு பெண்ணிடத்திலே போய் துப்பாக்கியைக் காட்டி, அவள் போட்டிருக்கும் நகைகளை கொடு என்று கேட்கிறான். நகையைக் கொடுக்காவிட்டால் அவன் துப்பர்க்கியால் சுட்டுவிடுவான். அங்கே இருக்கக்கூடிய இதர பிரயாணிகளும் அதை தடுத்து நிறுத்த முயல்வது இல்லை. காரணம் அவன் துப்பாக்கி வைத்திருக்கிறான். அல்லது கத்தி வைத்திருக்கிறான். அதைத் தடுத்தால், நம்மீது துப்பாக்கி குண்டு விழுந்துவிடும், நம்மீது கத்தி வைத்து குத்தி விடுவான், ஆகையால் நமக்கு ஏன் என்று நினைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது.

இன்றைக்கு ரயிலிலே பிரயாணம் செய்யக்கூடிய பெண்களிடத்திலே — அவர்கள் அதிகமான நகை போட்டிருக்காவிட்டாலும் கூட, 2 பவுன், 3 பவுன் போட்டிருந்தாலும் கூட, திருடர்களுக்கு அது உறுத்துகிறது. உடனே அந்தப் பெண்ணை கத்தியைக் காட்டி பயமுறுத்தி நகைகளைக் கொடு என்று கேட்கிறான். அந்தப் பெண் கொடுக்க மறுத்தால் அவளைக் குத்திவிடுகிறான். ரயிலிலே இருப்பவர்கள் அப்படியே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பிறகு ரயிலிலே சங்கிலியைப் பிடித்து இழுத்து நிறுத்தி வெகு சாதாரணமாகச் சென்று கொண்டிருக்கிறான். இப்படிப்பட்ட நிலைமையை மாற்ற வேண்டும் என்றால் அவர்களை கசை அடி கொடுத்து, அவர்களுடைய எலும்பு எல்லாம் சிதறக்கூடிய





சூழ்நிலையை உருவாக்கக் கூடிய அளவுக்கு, அந்த போலீசுக்கு நாம் அதிகாரத்தை வழங்கினால் ஒழிய நாட்டிலே கொலையும், கொள்ளையும் நிறுத்தப்படமுடியாது என்ற கருத்தை நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்டவிரும்புகிறேன். எனவே அதைச் செய்தால்தான் நாம் நிச்சயமாக சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நிறுத்த முடியும் என்பதை அழுத்தம் திருத்தமாக சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்லாமல் இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில், எத்தனையோ பெண்கள் மானபங்கப்படுத்தப்படுகிற சூழ்நிலை அதிகமாக இருக்கிறது. யார் யார் பெண்களை கற்பழிக்கிறார்களோ அந்தக் கொடியவர்களை, வெறி நாய்களை அடிப்பது போன்று அடித்து, அவர்களை எல்லோர் முன்னாலேயும் தூக்கில் இட்டால்தான் சரியாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

தினசரி பத்திரிகையிலே பார்க்கிறோம். காலையிலே செய்தித்தாளைப் பார்த்தால், இங்கே கற்பழிப்பு, அங்கே கற்பழிப்பு இங்கே கொலை, அங்கே கொலை என்று செய்திகள் இருக்கிற நிலைமையைப் பார்க்கும்போது, ஒரு தாய் என்ற முறையிலே ஒரு பெண் என்ற முறையிலே கண்ணீர் விடுவதைத் தவிர வேறு வழியே இல்லாத நிலைமை இருக்கிறது என்பதைத்தான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு பல இடங்களில் பெண்களை லாக்கப்பிலே வைக்கிறார்கள். உண்மையிலேயே லாக்கப்பிலேயே பெண்களை வைக்கவே கூடாது. அப்படி வைப்பதன் காரணத்தாலேதான் பலவிதமான அபகீர்த்திகள் போலீஸ் இலாகாவிற்கே ஏற்படக்கூடிய அளவில் நிலைமைகள் நடக்கின்றன. கிச்சிப்பாளையத்திலே இது போன்ற ஒரு சம்பவத்தை விசாரிப்பதற்காக நம்முடைய அரசு ஒரு ஒன்மேன் கமிஷனை நியமித்தது. அந்த ஒன்மேன் கமிஷனிலே ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதியை நியமித்திருக்கிறார்கள். அந்த நீதிபதி விசாரணை செய்துவிட்டு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அது இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையிலே 'பாரா 49-ல் " இறுதியாக, தெய்வமணி சா. பொ. 2 வரிசை புகைப்படங்களில் கண்டுள்ளபடி சா.பொ. 3, புடவையை கழுத்தில் சுற்றி தூக்கிலிட்டு உயிரை மாய்த்துக் கொண்டாள் என்று சொல்வது, தெய்வமணிக்கு கிச்சிப்பாளையம் காவல் நிலையத்தில் காவலர்களால் ஏற்பட்ட மரணத்தை மறைக்க பொய்யாக நடத்தப்பட்டுள்ள நாடகம் என்றே கருதுகிறேன் " என்று அவர் சொல்லியிருக்கிறார்கள்.

ஆகவே இரவு நேரத்திலே பெண்களைக் கொண்டு போய் காவல் நிலையத்திலே வைத்திருப்பதன் காரணத்தாலேதான், அது சின்னப் பெண்ணாக இருந்தாலும் சரி, வயதானவராக இருந்தாலும் சரி, அல்லது நடுத்தரமாக இருந்தாலும் சரி, ஒரு பெரிய அபகீர்த்தி ஏற்படுகிறது என்று சொல்லி, அந்த அபகீர்த்திக்கு இந்த அரசு இலக்காகக் கூடாது என்பதற்காகத்தான் பெண்களை லாக்கப்பிலேயே வைக்கக்கூடாது என்று நான் இந்த நேரத்திலே எடுத்துக் காட்ட விரும்புகிறேன். ஆகவே பெண்களை எந்தக் காலத்திலும் லாக்கப்பிலே வைக்கக் கூடாது. அந்த முறை மாற்றப்படவேண்டும். அவர்கள் தவறு செய்தால் அவர்களை கண்டியுங்கள், தண்டனை கொடுங்கள். தண்டனை கொடுத்துவிட்டு வீட்டுக்கு அனுப்பிவிடுங்கள். அடுத்த நாள் விசாரணைக்கு வரச் சொன்னாலும் வருவார்கள் அவர்களை லாக்கப்பிலே வைக்கக்கூடாது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-10]

தீண்டாமை ஒழிப்பின்கீழ் பல கேஸ்கள்—மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போன்று போடப்பட்டிருக்கிறது— அவைகளிலே பல கேஸ்கள் தள்ளுபடியாகின்றன. சுதந்திரம் அடைந்திருக்கின்ற இந்தக் காலத்திலே, 37 ஆண்டுகள் ஆகிவிட்ட இந்தக் காலத்திலே ஜாதிக் கொடுமை இன்றைக்கும் கிராமங்களிலே இருக்கிறது என்றால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதற்கு ஏதாவது வழிவகை செய்யவேண்டும். இன்னும் சில இடங்களிலே தவறாக கேஸ் தொடுக்கப்படுகிறது, எங்களுக்கும் அது தெரிகிறது, நாங்களே சென்று தவறான கேஸ் என்று சொல்லியிருக்கிறோம். ஆனால் ஜாதிக் கொடுமை என்று கேஸ்கள் வந்தால் யாராவது ஜாதியைப் பற்றிப் பேசிவிட்டால் 500 ரூபாய் அபராதம் என்றும் 6 மாதம் ஜெயில் என்றும் இருக்கிறது. யாராவது ஜாதியைப்பற்றிப் பேசினால் 500 ரூபாய் கட்டவேண்டுமென்று பத்து கேஸ் தான் போட்டு விட்டால் தான் அடுத்தபடியாக ஜாதிப் பிரச்சினையே வராது. அதோடு 6 மாத ஜெயில் தண்டனையும் கொடுத்தால் தான் பிரச்சினைகள் தீர வழிவகுக்க முடியும்.





இப்போது 5 கோடி மக்கள் இருக்கிறார்கள் தமிழ்நாட்டிலே 58 ஆயிரத்து சொச்சம் போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள். ஏற்கெனவே 12 ஆயிரம் போலீஸ்களை வேலைக்கு எடுப்பதற்காக இன்டர்வ்யூ செய்து பல ஆயிரக்கணக்கான பேர்களை எடுப்பதாக இருந்தும் இதுவரைக்கும் அவர்கள் நியமிக்கப்படவில்லை. இப்போது மறுபடியும்சப் இன்ஸ்பெக்டர்களுக்கு செலக்ஷன் என்று செய்யப்பட்டது. அதுவும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இப்போது திரும்பவும் போலீஸ்காரர்களைத் தேர்வு செய்வதற்கான ஒரு சூழ்நிலை நடக்கிறது என்றால், — நாம் ஏதாவது தேர்வு செய்தோம் அந்தத் தேர்வை முடித்து அந்தப் பதவியை கொடுக்க வேண்டும்— அப்படிக் கொடுக்காமல் ஏதோ அழுகிற பிள்ளைக்கு வாழைப்பழத்தைக் காட்டுகிறமாதிரி, உனக்கு உத்தியோகம் வந்துவிடும் வந்துவிடும் என்று சொல்லி வளர்க்கக்கூடிய நிலைமை இருக்குமானால் அதுவும் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய நிர்வாகத்தின்கீழ் இருக்கின்ற துறையிலே இருக்குமானால் அது இந்த சமுதாயத்திற்கு நல்லதல்ல. தமிழகத்திற்கு நல்லதல்ல என்பதைக் கூறி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ரா. கிருஷ்ணன்: மாற்றுத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் பல கருத்துக்களை எடுத்துச்சொன்னார்கள். இதற்கிடையில் நானும் இந்த மானியக் கோரிக்கைகளின்மீது பேசவிரும்புகிறேன்.

முதலாவதாக தீயணைப்புத் துறையின் விளக்கக் குறிப்பிலே 3-வது பாராவிலே, சிறந்த நவீன தொழில் நுட்பம் வாய்ந்த புதிய ஊர்திகளையும் இதர தீயணைப்பு சாதனங்களையும் வாங்குவதன் மூலம் இம்மாநிலத்தின் தீயணைப்புத் துறையை நவீனப்படுத்துவதற்கு அரசு அதிகபட்ச முயற்சி எடுத்து வருகின்றது. இதற்காக இந்தியப் பொது ஈட்டுறுதி கழகத்திடமிருந்து ரூபாய் 1.41 கோடி கடனாகப் பெறப்பட்டது' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 6 கோடியே 48 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் மானியமாக கோரப்பட்டிருக்கிறது. இதற்கு மேலும் 1½ கோடி ரூபாய் வரைக்கும் கடனாக வேறு வாங்கப்படுகிறது. இப்படி இவ்வளவு அதிகமாக வாங்கப்படுகின்ற

[திரு. ரா. கிருஷ்ணன்] [1984 மார்ச் 30

நிதி எந்த அளவுக்கு உதாசீனமாக ஊதாரித்தனமாக பயன்படுத்தப்படுகிறது என்பதை என்னால் நிரூபிக்கமுடியும். இது முதலமைச்சர் அவர்களுடைய துறை. முதலமைச்சர் அவர்களுடைய துறை என்றால், மிகச் சிறப்பாக நிர்வகிக்கக்கூடிய ஒரு துறை என்று நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால் நிர்வாகத்திலே சீர்கேடு என்பது உச்சக்கட்டத்திற்கு போய்விட்டதை நான் நிரூபிக்கமுடியும்.

இங்கே ஊர்திகள் வாங்குவதற்கு கடன் வெளியிலிருந்து வாங்கப்படுகிறது. ஆனால் கிட்டத்தட்ட 34 ஊர்திகள் செயலற்று கிடக்கின்றன. 1979 இல் வாங்கிய ஊர்தி இன்னும் முழுமையாக செயல்படவில்லை ஏற்கெனவே அரசாங்கத்தால் அனுமதியளிக்கப்பட்ட சில தீயணைப்பு நிலையங்கள் செயல்படவில்லை. இங்கே 23 ஆம் பக்கத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அரசினரால் ஏற்கெனவே ஒப்பளிக்கப்பட்டு, இன்னும் திறக்கப்படாமல் இருக்கும் தீயணைப்பு நிலையங்கள் 17 என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதே நேரத்திலே 33 ஆம் பக்கத்திலே கடைசியிலே குறிப்பிடப்பட்டிருப்பது, அனுமதி வழங்கப்பட்டு தொடங்கப்படாமல் உள்ள தீயணைப்பு நிலையங்கள் 34 என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் எது உண்மை? நமக்கே புரியவில்லை. பதினேழா அல்லது முப்பத்து நாலா? நீங்கள் கொடுத்திருக்கக்கூடிய குறிப்பிலேயே வித்தியாசம் இருக்கிறதே ஏன்? நீங்கள் மானியக் கோரிக்கையிலே 6½ கோடி ரூபாய் கேட்கிறீர்கள். அது அளிக்கப்படுகிறபோது இந்த நிதியை நீங்கள் எதற்காகச் செலவு செய்கிறீர்கள், என்றே புரியவில்லை. 6½ கோடி ரூபாய் கேட்கிறீர்கள். மேற்கொண்டு கடனும் வாங்குகிறீர்கள். அது முழுமையாக முறையாக செலவு செய்யப்படுகிறதா? தீயணைப்பு நிலையங்கள் ஏராளமாகத் திறக்கப்படவேண்டுமென்று சொல்லி இந்த அரசு ஆணை பிறப்பிக்கிறது. அரசு ஆணை நிதி ஆதாரத்தை வைத்து பைனான்ஸ் டிபார்ட்மென்டினுடைய கன்கரன்ஸ் பெற்றபிறகுதான் அனுமதி வழங்கவேண்டுமென்று விதி இருக்கிறது என்று கருதுகிறேன். ஆனால் அப்படி அனுமதிக்கப்பட்ட இந்த 34 நிலையங்கள் திறக்கப்படவில்லையே, செயல்படவில்லையே, இதற்காக ஒதுக்கப்பட்ட பணம் எங்கே போகிறது. அதுதான் என்னுடைய கேள்வி.

அது மட்டுமல்ல, வாகனங்கள் வாங்குவதற்கு வெளியிலிருந்து கடன் வாங்குகிறோம். சென்னையில் இருக்கக்கூடிய எஸ்பிளனேட் பகுதியிலே உள்ள நிலையத்திலே 3 பிரிமியர் வேன்கள் சேஸிஸ்களோடு பல ஆண்டுகளாக நிற்கின்றன. அதேமாதிரி 1210 இ பென்ஸ் வண்டி சேஸிஸ் அங்கே நிறுத்தப்பட்டிருக்கின்றன, கடந்த 5 ஆண்டுகளாக சேஸிஸ் அப்படியே பாடி கட்டப்படாமல் பயனின்றி கண்டம் ஆகிறது. வண்ணாரப்பேட்டையிலே உள்ள



1984 மார்ச் 30] [திரு ரா. கிருஷ்ணன்]

நிலையத்திலே 1210 இ. வேன் சேஸிஸ் பிரிமியர் மஹேந்திரா ஆம்புலன்ஸ் நிறுத்தப்பட்டிருக்கிறது. தேனாம்பேட்டை நிலையத்திலே 1210 இ. பென்ஸ் 8 சேஸிஸ்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அதுவும் சூப்பர் என்ஜின்கள். அது மட்டுமல்லாமல் மயிலாப்பூர் நிலையத்தில் 1210 இ. 5 சேஸிஸ்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. பாடி கட்டப்படவில்லை, பயன்படுத்தப்படவில்லை. அப்படியென்றால் சேஸிஸ்கள் ஓசியாகக் கிடைக்கிறதா அரசாங்கத்திற்கு? ஓசியாகக் கிடைக்கிறது என்றாலும் நிறுத்தக்கூடாது, பயன்படுத்தவேண்டும் கண்டிப்பாக. அது மட்டுமல்ல, இன்றைக்கு டைரக்டர் ஆபீசிலேயே பாடி கட்டாத ஆம்புலன்ஸ்கள் நான்கு நிற்கின்றன. தீயணைப்பு வண்டிகள் 6 நிறுத்தப்பட்டிருக்கின்றன, பயன்படுத்தப்படவில்லை. என்ன அலங்கோலம்? நிர்வாகச் சீர்கேட்டிற்கு இதைவிட ஒரு உதாரணம் வேண்டுமா? இதற்கு நான் அரசாங்கத்திடமிருந்து பதிலை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. இரா. ஜெயராமன்) : மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் பேசும்பொழுது

* * *

அப்படி அந்தப் பகுதிகள் இருக்குமாயின் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : அடுத்து நான் குறிப்பிட விரும்புவது தீயணைப்புத் துறையைப் பொறுத்தவரையில் அதை ஒழுங்குபடுத்தியாகவேண்டும். ஏற்கெனவே தொழில் நுட்பம் பயின்றவர்கள் பலர் இருந்தும் கூட இன்றைக்கு முறையாகப் பதவிஉயர்வு இல்லை என்பது ஒரு பெரும் குறைபாடாக இருக்கிறது. ஒதுக்கப்படுகிற நிதியை முறையாக செலவு செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்து ஆயத் தீர்வை. ஆயத் தீர்வை என்றால் அது பொன் முட்டையிடும் வாத்து என்று அறிகிறோம். நிச்சயமாகச் சொல்லலாம் ஆயத்தீர்வையைப் பொறுத்தவரையில் கமிஷனர்கள் அடிக்கடி மாற்றப்படுகிறார்கள், ஏன் அமைச்சரே மாறுகிறார். இதற்கு என்ன காரணம் என்று நமக்கே தெரியவில்லை. அது மட்டுமல்ல, ஆயத் தீர்வை சம்பந்தமான குறிப்பின் 5-வது பக்கத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. பள்ளி, கல்லூரி,

* மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது

[திரு. ரா. கிருஷ்ணன்] [1984 மார்ச் 30

மாணவரில்லம், மருத்துவமனை வழிபாடு செய்யப்படும் அல்லது புனிதமான இடங்கள் ஆகியவை அமைந்த இடங்களிலிருந்து 150 மீட்டர் தொலைவிற்குள் இத்தகைய கடைகளை — அதாவது மதுக்கடைகளை — அமைக்க அனுமதிக்கலாகாது என்பது விதி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் ஆயத் தீர லையைப் பொறுத்த வரையில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்கள் எல்லாம் திரு. சித்தன் அவர்கள் கோயிலுக்குப் போகிற வழியில் கடை வைக்கப்பட்டிருக்கிறது என்பதைக் குறித்து வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள் — வெட்டு தீர்மானங்களிலே பல உறுப்பினர்கள் குறிப்பிடக் கூடிய அளவுக்கு நிலைமை இருக்குமானால் இந்த விதி என்னவானது? இந்த விதிக்கு ஏதாவது அர்த்தமுண்டா? இந்த விதியை முறியடிக் க்கூடிய முறையில் அமைப்புக்கள் இருக்கின்றனவே இதற்கு அடிப்படைக் காரணம் என்ன? இந்த விதியை மீறியும் புரகிபிட்டட் ஏரியாவிலே கடைகள் வைக்கக்கூடிய நிலைமை இருப்பதை-இந்த குறைபாடுகளை நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1981—82, 1982—83 ஆண்டுகளில் கிளைகள் வைப்பதற்கு — சாராயக் கடைகள் ஏலம் விட்டால் கிளைகள் வைப்பதற்கு —ஒரு ஏற்பாடு இருந்தது. ஆனால் இப்போது கிளைகள் கூடாது என்று சொல்லி அது அனுமதிக்கப்படவில்லை. ஆனால் பொதுவாக ஏலம் எடுக்கக்கூடிய ஒரு சாராயக் கடை மெயின் கிராமத்தில் இருக்கும். பலவேறு குக்கிராமங்களைப் பொறுத்தவரைக்கும், அங்கே சாராயக் கடைகள் இருக்காது. கள்ளச் சாராயத்தை ஒழித்தே விடுவோம் என்று சொல்கிறோம். ஆனால் நடைமுறை யில் பார்க்கிற போது ஒரு முக்கிய கிராமத்திலே ஒரு சாராயக் கடை இருக்கிறது. அதிலிருந்து குக்கிராமம், 2, 3 மைல் இருக்கிறது. 2 3, மைல் வந்து சாராயம் குடிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா? குக்கிராமங்களைப் பொறுத்த வரைக்கும் சாராயக் கடைக்காரர்கள் கிளைக்கடைகள் அன் ஆதரைஸ்டு ஆக வைத்துக் கொள்வது ஒன்று, அல்லது அவர்களே குக்கிராமங் களுக்கு ஏலம் விடக்கூடிய நிலைமைதான் இருக்கிறது உள் ஏலம் எடுக்கக்கூடியவர்கள் கள்ளச் சாராயத்தை விற்கக்கூடிய நிலை மையை நாடு பூராவும் பார்க்கிறோம் அதன் மூலமாக அரசாங்கத் திற்கு எவ்வளவு வருமானம் குறைகிறது? ஆகவே, இதைப் பரிசீலிக்க வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கையாகும்.

[பிற்பகல் 1-20]

நான் ஒரு கணக்கைச் சொல்ல விரும்புகிறேன். 20,000 ரூபாய்க்கு ஏலம் எடுத்தவர்கள் ஒரு நாளைக்கு 160 பாட்டில் கள் விற்க வேண்டும். அதுதான் 100 சதவீத விற்பனை யாகும். 160 பாட்டில்கள் வரையில் வாங்கினால், போலீஸ் துறையைப் பொறுத்தவரையில் அந்த ஏரியாவிலே என்ஃ போர்ஸ்மெண்ட் சரியாக இருக்கிறது என்று அர்த்தம்.



1984 மார்ச் 30] [திரு. ரா. கிருஷ்ணன்]

160 பாட்டில்கள் வாங்கவில்லையென்றால் என்ஃபோர்ஸ்மென்ட் சரியில்லை என்று மேலதிகாரிகள் சொல்லு வார்கள். இதுதான் நிலமை. ஆனால் இப்பொழுது என்ன நடக்கிறது என்றால், 160 பாட்டில்களுக்கு மேலேயே வாங்குகிறார்கள். ஏனென்றால், தேவை அதிகமாக இருக்கிறது சாராயம் குடிப்பவர்களைப் பொறுத்தவரையில், அது சரி யில்லை என்பதுதான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்து.

புகை பிடிப்பது தவறுதான், ஆனால் அது சட்டப்பூர்வ மாக்கப்பட்டிருக்கிறதே. அது உடம்புக்குக் கேடுதான். இருந் தாலும் இன்றைக்கு இலட்சக் கணக்கில், கோடிக் கணக்கில் முதலீடு செய்து சிகரெட் கம்பெனிகளும், பீடி கம்பெனிகளும் உற்பத்தி செய்கின்ற அந்த சிகரெட், பீடி போன்றவை சட்டப்பூர்வமாக ஆக்கப் படுகிறது. இன்றைக்குச் சாராயத் தைப் பொறுத்தவரையில்கூட அது கூடாது என்பதுதான் சரி. அதற்காக அரசுத்துறையிலிருந்து ஆக்கபூர்வமான விளம்பரங் களைச் செய்து குடிப்பழக்கத்தைக் குறைக்க வேண்டுமென்று சொல்ல வேண்டியது ஒரு பணி.

ஆனால் சாராயத்தைக் குடிக்கிறவர்களை அனுமதிக்கின்ற பொழுது, தாழ்ந்த நிலையில் இருப்பவர்கள்தான், தங்கள் கவலையை மறக்க விரும்பிக் குடிக்கிறார்கள். அது ஒரு பக்கம் இருந்தாலும், இன்றைக்கு இந்தச் சாராயத்தில் ஒரு சில நபர்கள் கொள்ளையடிக்கின்ற நிலமைகள் இருக்கின்றன.

எரிசாராயத்தின் விலை ஒரு லிட்டர் இரண்டு ரூபாய் என்று நினைக்கிறேன். அப்படி ஒரு லிட்டர் எரிசாராயத்தை இரண்டு ரூபாய்க்கு வாங்கி, அந்த ஒரு லிட்டர் எரிசாராயத் தை மூன்று மடங்காக ஆக்கி அதாவது அதிலே தண்ணீரைக் கலந்து மூன்று லிட்டர்களாக ஆக்கி அதை நான்கு பாட்டில் களில் அடைக்கிறார்கள். இப்படி நான்கு பாட்டில்களில் அடைக்கப்படும் சாராயத்தின் விலை சாதாரணமா ரூபாய் 90 காசுக்குக் கலவை ஆலையிலிருந்து கடைக்கு விற்கப்படுகிறது. அதாவது ஏலம் எடுத்த கடைக்குக் கொடுப்பது 7 ரூபாய் 90 காசுக்கு.

1984 மார்ச் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரமாகிவிட்டது. உறுப்பினரவர்கள் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும் மெய்மறந்து பேசிக்கொண்டு இருப்பதால் உறுப்பினரவர்களுக்கு நேரம் போனது தெரியவில்லை. சாராய விவகாரத்தைப் பற்றியும், பாட்டில்களைப் பற்றியும் பேசிக் கொண்டிருக்கிறார்கள், அதனால்தான் சொல்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ரூபாய்க்கு வாங்கப்பட்ட அந்த எரிசாராயம், தண்ணீரைக் கலப்பதன் மூலம் 31 ரூபாய் 60 காசுக்கு அதிகமான விலைக்கு விற்கும் அளவிற்கு இருக்கிறது சென்னையிலே விற்பனை செய்தால் 100 மில்லியை இரண்டு ரூபாய்க்கு விற்பதற்கு அரசாங்கம் அனுமதிக்கிறது. இதைச் சாதாரணமாக இரண்டரை ரூபாய்க்கு விற்கிறார்கள். ஏற்கனவே அதிக ஏலத்திற்கு எடுத்தவர்கள் இரண்டரை ரூபாய்க்கு விற்கிறார்கள் என்று நினைக்கக்கூடும். ஆனால் அப்படி அல்ல பிரச்னை. எனவே, இதை ஒழுங்குபடுத்தி, முறைப்படுத்த வேண்டியது மிகமிக அவசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இந்தப் பாட்டிலுக்குக்கூட இரண்டு ரூபாய் ரேட் போடுகிறார்கள் ஆனால் கலவை ஆலை அதைத் திரும்ப வாங்கும்போது 80 காசுக்குத்தான் வாங்குகிறார்கள். இப்படி ஒரு பாட்டிலுக்கு 1 ரூபாய் 20 காசு மிச்சமாகிறது. பேக்கேஜுக்கு 17 காசு. இப்படி ஒவ்வொரு பாட்டிலுக்கும் 1 ரூபாய் 37 காசு கலவை ஆலைகளுக்கு இலாபம் இருக்கிறது அப்படி அதிகமாக இலாபம் இருக்கின்ற நிலைமையில் அரசாங்கமே ஏன் இதை நாட்டுடமையாக்கக் கூடாது? இதை நாட்டுடமையாக்குவதில் என்ன தயக்கம் என்பதை மட்டும் அரசு அறிவிக்க வேண்டும்.

கலவை ஆலைகள் லைசென்ஸ் அடிப்படையில் விடப்படுகிறதா அல்லது டெண்டர் மூலமாக அல்லது வேறு எந்த அடிப்படையிலே என்பதைத் தெரிவிக்க வேண்டும். எரிசாராயத்தை ஒரு லிட்டர் என்ன விலைக்கு வாங்குகிறார்கள், எந்த



விடப்படுகிறது, கலவை ஆலை
விகிதத்தில் அதில் தண்ணீர் மாநில விற்பனைக் கழகத்திற்கு ஒரு
யிலிருந்து தமிழ்நாடு விற்கப்படுகிறது, சில்லரை விலை
பாட்டில் என்ன விலைக்கு ரூபாய் என்று இருப்பதை 2 ரூபாய்
100 மில்லி இரண்டு காசு என்று விற்கப்படுவதற்கு
30 காசு, 2 ரூபாய் 50 என்ன என்பதையும் அறிவிக்க
இந்த அரசின் நடவடிக்கை
வேண்டுகிறேன்.

மிக மிக்கியமான ஒரு
போலீஸ் துறையிலே இன்றைக்கு போலீஸ் சங்கம் வைப்பது
பிரச்சினை என்னவென்றால் ஒரு தீர்ப்பு கொடுக்கப்
பற்றி ஹைக்கோர்ட்டிலே. மாதங்களுக்குள்ளாக அந்தச் சங்கத்தை
பட்டிருக்கின்றது. மூன்று பதிலை டி. ஜி. பி. அரசின்
அங்கீகாரம் செய்வது பற்றிய தெரிவிக்கவேண்டும் என்று கூறப்
மூலமாக ஹைக்கோர்ட்டுக்கு மாதங்கள் முடிந்துவிட்டன
பட்டது ஆனால் மூன்று கொடுக்கப்பட்டதா என்பதை
இதுவரை ஏதாவது பதில்
தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

வாபஸ் வாங்குவது பற்றிச்
அடுத்து போலீஸ் கேஸ்களை தொழிலாளர்கள் சம்பந்
சொல்ல விரும்புகிறேன். விவசாயிகள், சில வழக்குகள்
தப்பட்ட பிரச்சினைகள் வருகின்றபோது வாபஸ் வாங்கி
போடப்பட்டன. பின்னர் அந்த வழக்குகளை அதாவது 302.
விடுகிறோம் என்று அரசு சொன்னது. கொலை செய்தல்,
307 ஆகிய கேஸ்களைத் தவிர அதாவது கேஸ்களைத் தவிர
கொலை செய்ய முயற்சித்தல் ஆகிய வாங்கப்படும் என்று
மற்ற கேஸ்கள் எல்லாம் வாபஸ் வாங்கப்படவில்லை.
அறிவிக்கப்பட்டது. ஆனால் வாபஸ்

விசைத்தறித் தொழிலாளர்கள் சங்கங்
சங்கரன்கோயிலிலே கேஸ் போடப்பட்டிருந்தது.
களைச் சேர்ந்தவர்கள் மீது மற்ற செக்‌ஷன்கள்.
அல்ல 302-ம் இல்லை, 307-ம் இல்லை. வாங்கப்படும் என்று
ஆனால் அந்த கேஸ்கள் வாபஸ் வாங்கப்படவில்லை என்பது
சொன்னதற்குப் பிறகும் வாபஸ் விசாரித்து தண்டனை
மட்டுமல்ல; சமீபத்திலே அந்த வழக்கை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே
வழங்கக்கூடிய நிலைமை எந்த அளவிற்கு செயல்படுகிறது
அரசாங்கத்தின் உத்திரவு தெரிந்துகொள்ள முடிகின்றது
என்பதை இவற்றின் மூலமாகத்

(மணியடிக்கப் பெற்றது.)

[1984 மார்ச் 30

### 7. அறிவிப்பு

பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவையின் கட்சித் தலைவர்களையும் அரசையும் கலந்து ஆலோசித்துப் பேரவையின் நிகழ்ச்சி குறித்த கீழ்க்கண்ட மாற்றத்தைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

காவல்துறை, தீயணைப்புப் பணிகள் மற்றும் மாநில ஆயத்தீர்வைத் துறை பற்றிய மானியக் கோரிக்கைகள் மீதும் அவற்றிற்கு முன்மொழியப் பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் மீதான விவாதமும் பதிலுரையும் மீண்டும் 9–4–1984 அன்று தொடரும். நாளையதினம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டபடி சிறைச்சாலைகள் மற்றும் நீதி நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் எடுத்துக் கொள்ளப்பெறும்.

ஏற்கனவே 9–4–1984 அன்று எடுத்துக் கொள்ளப் பெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த முத்திரைத்தாள்கள் நிர்வாகம், பத்திரப்பதிவு மற்றும் பால் வழங்கு திட்டங்கள் பற்றிய மானியக் கோரிக்கைகள் என்று எடுத்துக்கொள்ளப் பெறும் என்பது அலுவல் ஆய்வுக் குழுவைக் கலந்தாலோசித்துப் பின்னர் அறிவிக்கப்படும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 31–3–1984 காலை 9–00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.27 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

### 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

152. வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 29–11–1981 ஆம் நாளிட்ட II (1)-சி. டி. மற்றும் ஆர். ஈ.-583(ஏ) 81-ஆம் எண் அறிவிக்கையில். திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 28–12–1983 ஆம் நாளிட்ட 1,466 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு பொது விற்பனைவரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1-1959) 53 (5) பிரிவின் கீழ்பேரவை முன் வைக்கப் பெற்றது]·



1984 மார்ச் 30]

153. சேலம் நகர கிச்சிப்பாளையம் காவல் நிலையத்தில் உள்ள ''லாக்கப்'' அறையில் 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15-ஆம் நாளன்று தெய்வமணி என்ற குள்ளுண்டு இறந்த போனது பற்றி விசாரிக்க அமைக்கப்பட்ட திரு. ஏ. எம். நஞ்சப்பன் விசாரணை குழுவின் அறிக்கை.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

104. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1979–80 ஆம் ஆண்டிற்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தேழாவது அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்.)

105. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1978–79 மற்றும் 1979–80 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகள் (சிவில்) மீதான பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தெட்டாவது அறிக்கை.(தமிழ், ஆங்கிலம்.)

106. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 1971–72 முதல் 1975–76 வரையிலான ஆண்டுக் கணக்குகள் குறித்த பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தொன்பதாம் அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்.)

107. தமிழ்நாடு வேளாண்-தொழில்கள் கழகத்தின் செயல் முறை குறித்த பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பதாவது அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்.)

108. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கிராம ஊழியர்கள் (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகளை வகுப்பது குறித்து வருவாய்த் துறையின் 24–6–1983 ஆம் நாளிட்ட 1,131 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

சென்னை-600 008.
13250